Sri

Srimathē Rāmānujāya Namaha

Māṟan Malaraḍi Vāḻga

ĀCHĀRYA HRIDAYAM

WITH

THE TAMIḺAKKAM OF THE COMMENTARY

OF

MAṆAVĀḶA MĀMUNIGAḶ

PARTS 3 - 4

by

PAṆḌITA VIDVAN

B. R. PURUSHOTHAMA NAIDU

Reader in Tamil,

UNIVERSITY OF MADRAS.

MADRAS UNIVERSITY

1965

MADRAS UNIVERSITY TAMIL DEPARTMENT
PUBLICATION No. 25

General Editor:
Dr. M. VARADARAJAN, M.A., M.O.L., Ph.D.
Professor of Tamil,
UNIVERSITY OF MADRAS.

ĀCHĀRYA HRIDAYAM

WITH

THE TAMIḶĀKKAM OF THE COMMENTARY

OF

MAṆAVĀḶA MĀMUNIGAḶ

PARTS 3 - 4

© University of Madras, 1965.

RATHNAM PRESS, MADRAS, I.

Sri

Srimathē Rāmānujāya Namaha

Māṟan Malaraḍi Vāḻga

ACHARYA HRIDAYAM

WITH

THE TAMIḺĀKKAM OF THE COMMENTARY

OF

MAṆAVĀḶA MĀMUNIGAḶ

PARTS 3 - 4

by

PANDITA VIDVAN

B. R. PURUSHOTHAMA NAIDU

Reader in Tamil,

UNIVERSITY OF MADRAS.

MADRAS UNIVERSITY

1965

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

ஆசாரிய ஹ்ருதய மூலம்

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

வியாக்கியானத்தின் தமிழாக்கம்

பகுதி 3-4

சென்னைப் பல்கலைக் கழகம்
தமிழ்த்துணைப்பேராசிரியர்
பண்டித வித்வான்
B. R. புருஷோத்தம நாயடு
ஆக்கியது.

சென்னைப் பல்கலைக் கழகம்.

1965

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்த

ஆசாரிய ஹ்ருதயமும்

மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

வியாக்கியானத்தின்

தமிழாக்கமும்.

மூன்றும் பகுதி

150

[1] *சேர்ப்பாரைப் பக்ஷிகள் ஆக்கி, ஜ்ஞாந கர்மங்களைச் சிறகு என்று, குரு ஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்ய ஸ்தாநே பேசும்.*

என்பது, சூத்திரம்.

வியாக் :—இனி, பகவானிடத்தில் தூதாக விடுகிற பறவைகளுக்கு உள்ளுறைப்பொருள் யாது? என்னும் வினவிற்கு, இச் சூத்திரம் முதற்கொண்டு விடை அருளிச்செய்கிறார்.

அதாவது, சேர்ப்பாரைப் பக்ஷிகள் ஆக்கி - பகவானிடத்தில் சேர்க்கின்றவர்களைப் பறவைகளாக நினைத்து, ஞான கர்மங்களைச் சிறகு என்று - [2] "வீசும்சிறகால் பறத்தீர்" என்றும், [3] "அஞ்சிறைய

1. *ஆக்கி, என்று, ஸ்தாநே பேசும் என்க. என்று - என்று கொண்டு. ஸப்ரஹ்மசாரி - ஒருசாலை மாணாக்கர். ஸ்தாநே - இடத்தில்.*

2. *திருவிருத்தம்,* 54. 3. *திருவாய்.* 1. 4: 1.

மடநாராய்" என்றும் வருவனபோல்வனவற்றுலே [1] "பறவைகளின் இரண்டு சிறகுகளாலே பறவைகளுக்கு ஆகாயத்தில் எப்படிப் பறந்து செல்லுதல் உளதாகிறதோ அப்படியே ஞானம் கருமம் என்னும் இந்த இரண்டாலும் புருஷோத்தமனை இறைவன் அடையப்படுகிறுன்" என்கிறபடியே பகவானை விரைவில் அடைதற்கு உறுப்பான அவர்களுடைய ஞானத்தையும் ஒழுக்கத்தையும் சிறகுகளாகச் சொல்லி, குரு ஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்ய ஸ்தாநே பேசும் - [2] "நீயும் நின் அஞ்சிறைய சேவலுமாய் ஆஆ என்று எனக்கருளி" என்றும், [3] "இது சொல்லியருள் ஆழி வரிவண்டே" என்றும், [4] "வந்துமேயும் குருகினங்காள் கைகள் கூப்பிச்சொல்லீர்" என்றும், [5] "உடன்மேயும் மடஅன்னங்காள் - அடியேனுக்கும் போற்றுமினே" என்றும், [6] "நன்னலப் புள்ளினங்காள் வினையாட்டியேன் நான் இரந்தேன்" என்றும், [7] "என்முல்லைகள்மேல் தும்பிகாள் யாம் இதுவோ தக்கவாறு என்ன வேண்டும் கண்டீர்" என்றும், [8] "செங்காலமடநாராய் குடக்கூத்தற்கு என்தூதாய் நுமரோடே நும்கால்கள் என்தலைமேல் கெழுமீரோ" என்றும், [9] "கொக்கினங்காள் குருகினங்காள் தக்கிலமே கேளீர்கள்" என்றும் வருகின்ற இன்னோரன்ன திருப்பாசுரங்களாலே குருக்களுடையவும் ஒருசாலை மாணுக்கர்களுடையவும், [10] "இளங்கிளியே யான் வளர்த்த நீஅலையே" என்றும், [11] "நீஅலையே சிறுபூவாய்" என்றும், [12] "யான் வளர்த்த கிளிகாள்" என்றும், [13] "தீவினையேன் வளர்த்த சிறு பூவைகளே" என்றும் வருகின்ற இன்னோரன்ன திருப்பாசுரங்களாலே புத்திரர்களுடையவும் மாணுக்கர்களுடையவும் இடத்திலே சொல்லும் என்கை. (1)

---

1. *உபாப்யாமேவ பக்ஷாப்யாம் ஆகாசே பக்ஷிணுங்கதி:*
ததைவ ஜ்ஞாந கர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம:
என்பது, பிரமாணம்.

2. *திருவாய்.* 1. 4: 1. 3. *திருவாய்.* 1. 4: 6.

4. *திருவாய்.* 6. 1: 1. 5. *திருவாய்.* 6. 1: 5.

6. *திருவாய்.* 6. 8: 1. 7. *திருவாய்.* 6. 8: 4.

8. *திருவாய்.* 9. 7: 1. 9. *திருவாய்.* 9, 7: 3.

10. *திருவாய்.* 1. 4: 7. 11. *திருவாய்.* 1. 4: 8.

12. *திருவாய்.* 6. 8: 5. 13. *திருவாய்.* 6. 8: 6.

151

[1]விவேகமுகராய், நூலுரைத்து, அள்ளலில் ரதி இன்றி, அணங்கின் நடையைப் பின்சென்று, குடை நீழலிலே கவரி அசையச் சங்கமவை முரல வரிவண்டு இசைபாட மாநசபத்மாசனத்திலே யிருந்து, விதியினுல், இடரில், அந்தரமின்றி, இன்பம்பட, குடிச்சீர்மையிலேயாதல் பற்றற்ற பரமஹம்சராதல் ஆன நயாசலன், மெய்ந்நாவன், நாத யாமுநர் போல் வாரை அன்னம் என்னும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—தூதாக விடுகிற பலவகைப்பட்ட பறவைகளுக்கும் உள்ளுறை அருளிச்செய்வதற்குத் திருவுள்ளம்பற்றி, அவற்றுள் அன்னமாகச் சொல்லப்பட்டவர்கள் இன்னுர் இன்னுர்போன்றவர்கள் என்று அருளிச்செய்கிருர் இச்சூத்திரத்தால்.

அதாவது, விவேக முகராய்-[2] " அன்னம் நீரோடு கலந்த பாலில் நீரை நீக்கிப் பாலேமாத்திரம் பிரிப்பதுபோல் " என்கிறபடியே அன்னமானது நீரையும் பாலேயும் வெவ்வேருகப் பிரிப்பதுபோன்று, சாரத்தையும் அசாரத்தையும் பிரிப்பதில் முன்னேக்கமுள்ளவராய், நூல் உரைத்து - [3] " அன்னமதாய் இருந்து அங்கு அறநூல் உரைத்த " என்கிறபடியே அன்னத்தின் உருவமாய் இருந்து சாஸ்திரங்களேக் கொடுத்தாற்போலே, கேட்பார்களே நோக்கிச் சாஸ்திரங்களே உபதேசித்து, அள்ளலில் ரதி இன்றி - [4] " அன்னம் சேற்றுநீரில் ஒருபோதும் ஆசைவைப்பது இல்லே " என்கிறபடியே அன்னமானது சேற்றுநீரில்

---

1. விவேகமுகர் - பகுத்தறிவதில் நோக்குள்ளவர்கள். அள்ளல் - சேறு. ரதி - ஆசை. குடிச்சீர்மையிலேயாதலான நயாசலன் மெய்ந்நாவன் என்றும், பற்றற்ற பரமஹம்சராதலான நாத யாமுநர் என்றும் நிரல் நிறையாகக் கொள்க. நயாசலன் - செல்வநம்பி. மெய்ந்நாவன் - பெரியாழ்வார். நாதயாமுநர் - நாதமுனிகளும் ஸ்ரீ ஆளவந்தாரும். இவர்கள் இருவரும் துறவறத்தை மேற்கொண்டவர்கள்.

2. " ஹம்ஸோயதா க்ஷீரமிவாம்புமிஶ்ரம் "
என்பது, பிரமாணம்.

3. பெரியதிருமொழி, 11. 4: 8.

4. " நபத்நாதிரதிம்ஹம்ஸ: கதாசித்கர்த்தமாம்பஸி "
என்பது, பிரமாணம்.

பொருந்தாதவாறு போன்று, [1] "வன்சேற்றுஅள்ளல் பொய்ந்நிலத்து அழுந்தார்" என்கிறபடியே இவ்வுலக வாழ்க்கையாகிற சேற்றிலே பொருத்தமுடையரன்றிக்கே, அணங்கின் நடையைப் பின்சென்று - [2] "அன்னம் பெய்வளையார்தம் பின்சென்று" என்கிறபடியே அன்னமானது பெண்களின் நடை அழகினைக் கண்டு தானும் அப்படி நடப்பதற்காகப் பின்செல்லுமாறு போலே, [3] "அன்னநடைய அணங்கு" என்கிறபடியே அன்னத்தின் நடையையுடைய [4] பிராட்டியுடைய அநந்யார்ஹசேஷத்வம் முதலியவைகளும் புருஷகாரத்தன்மையும் ஆகிற நடையை மேற்கொண்டு,

குடைநிழலிலே கவரிஅசைய சங்கமவைமுரல வரிவண்டுஇசை பாட - [5] "அன்னமென்கமலத் தணிமலர்ப்பீடத்து அலைபுனல் இலைக் குடைநீழல்-வீற்றிருக்கும்" என்றும், [6] "செந்நெல் ஒண்கவரி அசைய வீற்றிருக்கும்" என்றும், [7] "சங்கமவை முரலச்செங்கமல மலரைஏறி" என்றும், [8] "வரிவண்டு இசைபாட அன்னம் பெடையோடுடன் நாடும்" என்றும் சொல்லுகிறபடியே மேலே எழுந்த தாமரையிலை குடையாகவும், காய்த்திருக்கின்ற செந்நெற்பயிர்களின் அசைவு கவரியாகவும், சங்குகளின் ஒலி வெற்றிமுழக்கமாகவும், வண்டுகளின் மிடற்றோசை பாட்டாகவும் பெற்று, மாநசபத்மாசனத்திலே இருந்து - [9] "மன்னுமுதுநீர் அரவிந்தமலர்மேல்" என்கிறபடியே மானசமடுவில் தோன்றிய தாமரையை ஆசனமாகக் கொண்டிருக்குமாறுபோலே, [10] "அக்கமலத்து இலைபோலும் திருமேனி அடிகள்" என்கிறபடியே தாமரைஇலை போன்று சாமளமான எம்பெருமானது திருமேனியைச் சம்சாரதுக்கத்தாலாய தாபம் வாராதபடி தங்களுக்கு ஒதுங்கநிழலாக வுடையராய், [11] "நான் இனியன்" என்னும்படி பரிபக்குவத்தையுடைய ஞானிகள் தொண்டுகளைச் செய்ய, [12] தூய்மைத் தனமையையுடைய

---

1. திருவிருத்தம், 100. 2. பெரியதிருமொழி, 6. 5: 5.
3. பெரியதிருமடல், 7.
4. 122-ஆம் சூத். குறிப்புரையைக் காண்க.
5. பெரியதிருமொழி, 9. 1: 5. 6. பெரியதிருமொழி, 9. 1: 5.
7. பெரியதிருமொழி, 7. 8: 2. 8. பெரியதிருமொழி, 7. 5: 9.
9. பெரியதிருமொழி.
10. இப்பொருள், 'குடைநீழலிலே' என்றதிலே நோக்கு. இது, திருவாய். 9. 7: 3.
11. இப்பொருள் 'கவரியசைய' என்றதிலே நோக்கு. "அஹம் அந்நம்" இது தைத்திரீயம்.
12. இப்பொருள் 'சங்கமவைமுரல' என்றதிலே நோக்கு.

வர் துதிக்க, [1] அசாரத்தை நீக்கிச் சாரத்தைமாத்திரம் எடுத்துரைக்கின்ற பெரியோர்கள் சாமகானம் செய்ய, [2] "ஆசாரியனுடையதிருவடித் தாமரைகளைத் தியானிக்கவேண்டும்" என்கிறபடியே ஆசாரியனுடைய திருவடிகள் இரண்டையும் எப்பொழுதும் மனத்திற்குள்ளே கொண்டிருக்கும் [3] சிஷ்யர்களுடைய, பிரமகுருவுக்கு இருப்பிடமான [4] "போதிற்கமல வன் நெஞ்சம்" என்கிற மனமாகிற தாமரையை வசிக்குமிடமாகவுடையராய்,

விதியினால் இடரில் அந்தரம் இன்றி இன்பம்பட- [5] "விதியினால் பெடை மணக்கும் மென்னடைய அன்னங்காள்" என்றும், [6] "இடரில் போகம் மூழ்கி இணைந்தாடும் மடவன்னங்காள்" என்றும், [7] "அந்தரம் ஒன்றும் இன்றி அலர்மேல் அசையும் அன்னங்காள்" என்றும், [24]"மிகஇன்பம் படமேவும் மென்னடைய அன்னங்காள்" என்றும் சொல்லுகிறபடியே [8] சாஸ்திரங்களிலே சொல்லி உள்ள முறையிலே, இவ்வுலக வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்கள் யாவும் தட்டாதபடியாகவும், ஒருவித தடங்கலும் வாராதபடியாகவும், மேன்மேலும் ஆனந்தம் பெருகும்படியாகவும், குடிச்சீர்மையிலேயாதல் - [9] குடிச்சீர்மையில் அன்னங்கள்" என்கிறபடியே மனைவி மக்களோடே

---

1. இப்பொருள், 'வரிவண்டிசைபாட' என்றதிலே நோக்கு.

2. இப்பொருள், 'மானஸபத்மாசனத்திலே இருந்து' என்றதிலே நோக்கு.

"குருபாதாம்புஜம் த்யாயேத்"

என்பது, பிரமாணம்.

3. சிஷ்யர்களுடைய மனம், பிரமகுருவுக்கு இருப்பிடமான மனம் என்று கூட்டுக.

4. பெரியாழ்வார் திருமொழி, 5. 2: 8.

5. திருவாய். 1. 4: 3.   6. திருவாய். 6. 1: 4.

7. திருவாய். 6. 8: 10.   8. திருவாய். 9. 7: 10.

8. இங்கு, 'விதியினால்' என்றும், 'இடரில்' என்றும், 'அந்தரம்' என்றும், 'மிகஇன்பம்' என்றும் தொடங்கி உவமைக்குக் கூறும் அடைமொழிகளால், முறையே சாஸ்திர முறைப்படி இல்லறத்தில் இருக்கும் தன்மையையும், சம்சாரசம்பந்தமான தாபம் ஒன்றும்தட்டாதபடி பகவானை அநுபவிக்கும் தன்மையையும், இடையூறு ஒன்றுமில்லாமல் இறைவனது திருவடித்தாமரைகளிலே பொருந்தியிருக்கும் தன்மையையும், சதாசாரியன் சந்நிதியில் சிறந்த அர்த்தவிசேடங்களைப் பெற்று ஆனந்திக்கும் தன்மையையும் உபமேயத்திற்கும் கொள்க. இதனையே 'சாஸ்திரங்களிலே' என்று தொடங்கிச் சுருக்கமாக அருளிச்செய்கிறார்.

9. திருவிருத்தம், 29. இதனால் குலப்பெருமை கூறியவாறு.

இருந்து பகவானை அநுபவித்துக் கொண்டிருக்கிற, நயாசலன் - [1] "நளிர்ந்த சீலன் நயாசலன்" என்று சொல்லப்பட்ட செல்வநம்பி, மெய்ந்நாவன் - [2] "மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன்" என்று சொல்லப்பட்ட பெரியாழ்வார்போல்வாரையும், பற்றற்ற பரமஹம்ஸராதல் ஆன - [3] "பற்றற்றுர்கள்" என்றும், [4] "சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டர் ஒன்றினர், அற்ற பற்றர்" என்றும் சொல்லுகிறபடியே இவ்வுலக வாழ்க்கையாலாய பற்று முற்றும் அற்றுத் துறவிகளாய் [5] பரமஹம்ஸர் என்ற சொல்லுக்கு இலக்கியமாக உள்ள, நாதயாமுனர் போல்வாரை - நாதமுனிகள் ஸ்ரீ ஆளவந்தார் போல்வாரையும், அன்னம் என்னும் - மேலே கூறிப்போந்த குணஒப்புமையை இட்டு அன்னம் என்று சொல்லும் என்கை. (2)

152

[6] என்பெறுதி என்ன பிரமியாது, உள்ளூத்துள் ஊறிய மதுவிரதமாய், தூமது வாய்கள் கொண்டு, குழல்வாய் வகுளத்தின் சாரம் கிரஹித்து, தேதென என்று ஆளம்வைத்து, சிறுகால் எல்லியம்போது குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் தலைக்கொள்ளப் பாடி, துன்னிட்டு நெருக்க நீக்கு என்று கடந்து புகும் தகைவறப்புக்கு, வண்டொத்த இருண்ட குழலிலே சங்கைஅற மருவி, அருளாத யாம் என்று ஓடி வந்து வாசமேஊதி, வண்டே கரியாய தெய்வ வண்டோடே சேர்விக்கும் சேமமுடை நாரதன், முனிவாஹநர், தம்பிரான்மார் போல்வாரை வண்டு தும்பி என்னும்.

என்பது, சூத்திரம்.

வியாக்:—வண்டு, தும்பி என்ற சொற்களுக்கு உள்ளுறை அருளிச்செய்கிறுர் இச்சூத்திரத்தால்.

---

1. *பெரியாழ்வார்திரு.* 4 4:8. 2. *பெரியாழ்வார்திரு.* 4.9:11.
3. *பெருமாள்திரு.* 1: 4. 4. *திருச்சந்தவிருத்.* 52.

5. *பரமஹம்சர் - சந்நியாசிகள் நால்வகையினரில் பரமஹம்சநிலையில் உள்ள துறவிகள். உலகநிலையில் ஈடுபடாது பகவத்தியானத்திலேயே இருப்பவர்கள்.*

6. *பிரமியாது, விரதமாய், கொண்டு, கிரஹித்து, ஆளம்வைத்து, பாடி, புக்கு, மருவி, ஊதி, சேர்விக்கும் நாரதன் முனிவாஹனர் தம்பிரான்மார் போல்வார் என எச்சங்களை முடிக்க. முனிவாஹனர் - திருப்பாணாழ்வார், தம்பிரான்மார் - அரையர்.*

அதாவது, என்பெறுதி என்ன பிரமியாது - [1] "கோல்தும்பீ ஏரார்மலர் எல்லாம் ஊதி நீ என் பெறுதி" என்று மீட்கவேண்டும்படி தகாத பொருள்களை இனியபொருள்கள் என்று மயங்காதே, உள்ளத்துள் ஊறிய மதுவிரதமாய் - [2] "உளம் கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேனை" என்கிறபடியே இறைவனாகிய தன்னுடைய அழகு சீலம் முதலியவைகளை நினைத்து உள்ளம் கனிந்திருக்கும் அடியார்களுடைய மனத்திலே 'ஊறியதேன்' என்கிற பகவானாகிற தேனை [3] விரும்பி, [4] "தேனையே உணவாகவுடைய வண்டு, தேன் நிறைந்த தாமரைமலர் இருந்துகொண்டிருக்க, அதனை விட்டு, அடைவதற்கே அரியதாய் அடைந்தாலும் நாவினை நனைப்பதற்கும் போராதே இருக்கிற தேனையுடைய முள்ளிப்பூவைக் கண்ணாலும் பாராததைப்போன்று, தேவரீருடைய தேனே மலரும் திருவடித்தாமரைகளினுடைய இனிமையில் மனம் அழுந்தின ஒருவன் மற்றொரு அற்ப இன்பத்தை விரும்பமாட்டான்" என்கிறபடியே மற்றொன்றனைப் புரிந்து பாராதே இத்தேனை உண்ணுதலையே விரதமாகவுடையராய், தூமது வாய்கள் கொண்டு - [5] "சூடிய தண் துளபம் உண்ட தூமது வாய்கள் கொண்டு" என்கிறபடியே பகவானாகிய இனிய பொருளை

---

1. *பெரியதிருமொழி, 8. 4: 5. "என்பெறுதி" என்று சொல்லி மீட்கவேண்டும்படி, தகாத பொருள்களிலே செல்வது உண்டு வண்டுகளும் தும்பிகளும். அப்படி மீட்கவேண்டும்படியான தன்மை இவர்களுக்குக் கிடையாது. இது ஒன்றுமே வண்டுகளுக்கும் இவர்களுக்கும் வேறுபாடு. மற்றைய விஷயங்களில் எல்லாம் ஒப்புமை கூறப்படுகிறது மேல்.*

2. *வண்டுகட்கு 'மதுவிரதம்' என்று ஒருபெயர். தேனைத்தவிர மற்றொன்றனையும் உணவாகக் கொள்ளாதது என்பது பொருள். அது போன்ற தன்மையர் அடியார்களும் என்கிறார் 'உளம் கனிந்திருக்கும்' என்று தொடங்கி. இது, பெரியதிருமொழி, 4. 3: 9.*

3. *'விரும்பி' என்னும் இவ்வெச்சத்தை, பின்னர் வருகின்ற 'மற்றொன்றனைப் புரிந்து பாராதே' என்றதனோடு முடிக்க.*

4. *தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே*
நிவேசிதாத்மா கதமந்யதிச்சதி
ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்ப்பரே
மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே.
என்பது, தோத்திரரத்நம், 27.

5. *"வண்டினங்காள்! தண்துளபம் உண்ட தூ மது வாய்கள்கொண்டு என்குழல்மேல் ஒளிமாமலர் ஊதீரோ" என்பதற்கு, நாட்கமழ் மகிழ்மாலை மார்பராகையாலே வகுளாபரணரான ஆழ்வாருடைய "வைகுந்தமன்னாள் குழல்வாய் விரைபோல் விண்டுகள்வாரும் மலருளவோ நும் வியலிடத்தே" என்று பரத்துவம் முதலிய நிலைகளில் இனிமையும் குறைந்தது என்னும்படியான திருக்குழலில் வைத்த மாமலரான வகுளமலரின் சாரத்தை நுகர்ந்து அவ்வழியாலே ஆழ்வாருடைய இனிமையை அநுபவிப்பவர் என்பது கருத்து.*

அநுபவிக்கும் அநுபவத்தாலே பரிசுத்தமாய் இனிதான வாயினைக் கொண்டு, குழல்வாய் வகுளத்தின் சாரம் கிரஹித்து - [1] "என்குழல் மேல் ஒளி மாமலர் ஊதீரோ" என்கிறபடியே [2] "நாட்கமழ் மகிழ்மாலை மார்ப" ராகையாலே வகுளமாலையைத் தரித்த ஆழ்வாருடைய [3] "வைகுந்தமன்னுள் குழல்வாய் விரைபோல், விண்டு கள் வாரும் மலர்உளவோ நும் வியலிடத்தே" என்கிறபடியே பரத்துவம் முதலான வற்றின் இனிமையும் அளவிற்குட்பட்டது என்னும்படியான திருக் குழலில் வைத்த ஒளிமாமலரான வகுளத்தின் சாரத்தை எடுத்து அவ் வழியாலே இத்தலையில் இனிமையை அநுபவித்து,

[4] தேதென என்று ஆளம் வைத்து - [5] "வரிவண்டு தேதென என்றிசைபாடும்", [6] "யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும்" என்கிறபடியே இப்படிப் பகவானுடையவும் பாகவதர்களுடையவும் இனிமைகளை அநுபவித்த செருக்குக்குப் போக்குவீடாக ஆளத்தி வைத்து, [7] சிறுகால் எல்லியம்போது குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் தலைக்கொள்ளப் பாடி - [8] "அறுகால் வரி வண்டுகள் ஆயிரநாமம் சொல்லிச் சிறுகாலைப் பாடும்" என்றும், [9] "எல்லியம்போது இரும் சிறைவண்டு எம்பெருமான் குணம்பாடி" என்றும், [10] "வண்டு குறிஞ்சி மருள் இசை பாடும்" என்றும், [11] "வண்டினங்கள் காமரங் கள் இசைபாடும்" என்றும், [12] "கந்தாரம் அம்தேன் இசைபாட" என்றும், வருகின்றவாறே காலங்கட்குத் தகுதியான பண்களை [13] "பண்கள் தலைகொள்ளப் பாடி" என்கிறபடியே தலைமைபெறும்படி பாடி,

---

1. திருவாய். 6. 8: 3: 2. திருவாய். 4. 10: 11.

3. திருவிருத்தம், 55.

4. இதனால் யாழினிசை வேதத்தியல்களை வாயாரப் பாடிக்கொண் டிருக்கும்படியைச் சொன்னவாறு.

5. பெரியதிருமொழி, 4. 1: 1. 6. பெரியாழ்வார் திரு. 4. 8: 6.

7. இதனால், "எம்மானை சொல்லிப்பாடி" என்றும், "பண்கள் தலைக் கொள்ளப் பாடி" என்றும், "வேதமுதல்வனைப்பாடி" என்றும் சொல்லுகிறபடியே அவர்கள் பாடிக்கொண்டிருத்தலைக் குறித்தபடி.

8. பெரியாழ்வார் திரு. 4.2:8. 9. பெரியாழ்வார் திரு. 4.8:8.

10. பெரியதிரு. 2. 1: 2. 11. பெருமாள் திரு. 8: 4.

12. பெரியதிரு. 3. 8: 1. 13. திருவாய். 3. 5: 2.

[1] "துன்னிட்டு நெருக்க - [2] "பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்திரனும், துன்னிட்டுப் புகல் அரிய வைகுந்த நீள்வாசல்" என்றும், [3] "சுந்தரர் நெருக்க" என்றும் சொல்லுகிறபடியே திருவாசல்களிலே சேவிக்கவந்தவர்கள் நிறைந்து தலைபுக ஒண்ணுதபடி நெருக்க, நீக்கு என்று - [4] "நேய நிலைக்கதவம் நீக்கு" என்கிறபடியே திருவாசல் காப்பானைத் திருக்கதவு திறக்கவேண்டும் என்று விரும்பிக் கேட்டு, புகும் தகைவு அறப் புக்கு - [5] "பொன்னியலும் மாடம் கவாடம் கடந்துபுக்கு" என்கிறபடியே கண்களையும் மனத்தையும் கவர்கின்ற திருவாசலில் அழகில் துவக்குண்ணுதே அதனைக் கடந்து, புகவேண்டுகையாகிற தகைவு அற, பாடுவாராக இருக்கின்ற அந்தரங்கத் தன்மையாலும் ஒன்றிலேயே நோக்குடைய மனத்தினையுடைமையாலும் போய்ப்புக்கு, வண்டு ஒத்து இருண்ட குழலிலே சங்கைஅற மருவி - [6] "வண்டு ஒத்து இருண்ட குழல்" என்கிறபடியே தனக்கு ஒத்த விஷயமுள்ள விடத்திலே சேர்ந்து, [7] "நீ மருவி அஞ்சாதே நின்று" என்கிறபடியே அச்சம் இல்லாமல் அவனுடைய அண்மையில் இருப்பவர்களாய்,

அருளாத யாம் என்று - [8] "அருளாத நீர் அருளி அவர்ஆவி துவராமுன்" என்றும், [9] "யாம்இதுவோ தக்கவாறு" என்றும் வருகின்றவாறே இத்தலையில் துன்பத்தை அவனுக்கு அறிவித்து, ஓடி வந்து - [10] "ஓடிவந்து என்குழல்மேல் ஒளிமாமலர் ஊதீரோ" என்கிறபடியே அவனோடே கூடி வர இராதே, முந்துறவே ஓடிவரவேண்டும் என்று விரும்பிவிட்டபடியே, இத்தலையில் துன்பத்துக்குத் தகுதியாக, அவன் வரவினை அறிவிக்க விரைந்து வந்து, தங்கள் வரவாலே இத்தலையில் பிறந்த செவ்வியை அநுபவித்து, வாசமே ஊதி - [11] "பூந்துளவின் வாசமே வண்டு கொண்டு வந்து ஊதுமாகில்" என்கிறபடியே

1. இதனால், வண்டுகள், மிக நெருக்கமாக உள்ள இடங்களிலும் தடை இன்றிச் செல்லும்; தன்னினமான பொருள்களோடே நட்புக்கொள்ளும்; இறைவன் சந்நிதியிலே அச்சம் சிறிதும் இன்றி நிற்கும். அவ்வாறே, இவர்களும் எந்த நிலையிலும் நேசநிலைக்கதவம் நீக்கு என்று சொல்லி, பொன்னியலும் மாடக்கவாடம் கடந்துபுக்கு, அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களோடே சேர்ந்து, அஞ்சவேண்டிய அபராதம் ஒன்றும் இல்லாதவர்களாகையாலே சங்கை இன்றியே, ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி நிற்பர்கள் என்பதனைத் தெரிவித்தபடி.

2. பெருமாள் திரு. 4: 3.
3. திருப்பள்ளிஎழுச்சி, 7.
4. திருப்பாவை, 16.
5. பெரியதிருமடல், 73.
6. பெரியாழ்வார் திரு. 2. 5: 7.
7. திருநெடுந்தாண்டகம், 26.
8. திருவாய். 1. 4: 6.
9. திருவாய். 6. 8: 4.
10. திருவாய். 6. 8: 3.
11. பெரியதிரு. 11. 1: 9.

அத்தலையில் தாங்கள் அநுபவித்த இனிமையை தங்கள் வரவாலே இத்தலைக்கு விளக்கிக்கொண்டு தரிக்கச்செய்து,

வண்டே கரியான தெய்வ வண்டோடே சேர்விக்கும் - [1] "கொங்குண் வண்டே கரியாக வந்தான்" என்கிறபடியே சாகைகளின் மேலே உள்ள சாரத்தைக் கிரகிக்குமவர்களாய் ஆறுபதநிஷ்டர்களாய் இரண்டு சிறகுகளோடு கூடியிருப்பதனாலே தடையின்றி எங்கும் செல்லக்கூடியவர்களை முன்னிட்டு அங்கீகரிக்குமவனாய் [2] "தூவியம்புள்ளுடை தெய்வவண்டு" என்கிறபடியே வேதாந்தங்களாலே அறியப்படுமவன் என்று தோற்றும்படி கருடவாகனனாய் சாரத்தையே எடுக்கின்ற சர்வேச்வரனோடே சேர்விக்கும், சேமமுடைநாரதன் - [3] "சேமமுடை நாரதன்" என்கிறபடியே பிரஹ்ம பாவனையாகிற சேமத்தையுடையனாய்ப் பகவானுடைய குணங்களை அநுபவித்தலால் உளதாய பேர் ஆனந்தத்தையுடையனாய் அந்த ஆனந்தத்தின் மிகுதியால் நடனம் ஆடிக்கொண்டேயும் பாக்களைப் பாடிக்கொண்டேயுமிருக்கும் ஸ்ரீநாரத மாமுனிவன், முனிவாகநர் - உலோகசாரங்கமஹாமுனிகளாலே தாங்கப்படுகையாலே முநிவாகநர் என்று கூறப்படுகின்ற திருப்பாணாழ்வார், தம்பிரான்மார் - திருவாய்மொழி இசையினையே தங்களுக்கு இனிய பொருளாகக் கொண்டிருக்கின்ற தம்பிரான்மார், (அரையர்). போல்வாரை - போன்றவர்களை, வண்டு தும்பி என்னும் - மேலே கூறிய குணங்களின் ஒப்புமையாலே வண்டு என்றும் தும்பி என்றும் சொல்லும்.

[4] தும்பி என்பது, வண்டு இனங்களில் ஒரு சாதிவிசேடம். ஆகையால் அன்றோ, [5] "வண்டினங்காள் தும்பிகாள்" என்று இரண்டனையும் பிரித்து ஓரிடத்திலே அருளிச்செய்தது. (3)

---

1. *"கொங்குண் வண்டே" என்ற திருப்பாசுரத்தில் வண்டே கரியாக இறைவன் வந்தான் என்று சொல்லப்படுகிறது. இதனால், சாரத்தையே தேர்ந்தெடுக்குமவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களை முன்னிட்டு இறைவன் இவ்வுயிர்களை அங்கீகரிக்கிறான் என்பது போதரும் பொருளாதலால் புருஷகாரத்தன்மை சொன்னபடி. 'கொங்குண்' என்பது பெரியதிருமொழி, 9. 3: 4. சாகைகள் - வேதசாகைகள். ஆறுபத நிஷ்டர் - துவயநிஷ்டர். துவயம் ஆறுபதங்களோடு கூடியது. ஆறு கால்களையுடையவை வண்டுகள். இரண்டுசிறகு - ஞான அநுட்டானங்கள்.*

2. *திருவாய். 9. 9: 4.* 3. *பெரியாழ்வார்திரு. 4. 9: 5.*

4. *"நண்டும் தும்பியும் நான்கறிவினவே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" என்பது, தொல். பொருள். மரபு. 31. 'இவற்றுக்குக் கிளை என்பன வண்டும் தேனீயும் குழவியும் போல்வன' என்பர் பேராசிரியர்.*

5. *திருவாய். 9. 7: 8.*

153

கண்வலைப்படாதே அகவலைப்பட்டு, வளர்த்தெடுப்பார் கையிருந்து, தயிர் நெய்யமர் பால்அமுது உண்டு, ஒருமிடறும், போற்றி ஒருவண்ணம் திருந்த நுவலாததுக்கு என்பிழைக்கும் நீ அலையே நல்வளம் துரப்பன் என்னுமவற்றுக்கு முகந்து, சொல்லெடுத்துச் சோர்ந்தவாறே கற்பியாவைத்த மாற்றம் கை கூப்பி வணங்கப் பாடி, ஆலியா அழையா, பராபிமானத்திலே ஒதுங்கின நம்பிக்கு அன்பர், தலைமீதடிப் பொடி, உடையவருடையார் போல்வாரைக் கிளி பூவை குயில் மயில் என்னும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—கிளி பூவை முதலானவற்றிற்கு உள்ளுறைப்பொருள் அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

அதாவது, [1] கண்வலைப்படாதே அகவலைப்பட்டு - [2] "மாதரார் கயற்கண் என்னும் வலையுள்பட்டு" என்கிறபடியே பெண்களுடைய கண்களாகிற வலையிலே அகப்பட்டுக் கேட்டினை அடையாமல், [3] "தாமரைத் தடம்கண் விழிகளின், அகவலைப் படுப்பான்" என்கிறபடியே தப்பாமல் அகப்படுத்திக்கொள்ளும் சர்வேச்வரனுடைய தாமரைபோன்ற திருக்கண்களின் நோக்கமாகிற வலைக்குள்ளே அகப்பட்டு, [4] வளர்த்து எடுப்பார் கை இருந்து - [5] "வளர்த்ததனுல் பயன் பெற்றேன்" என்றும், [6] "எடுத்த என்கோலக் கிளியை" என்றும், [7] "மங்கைமார் முன்பு என்கையிருந்து" என்றும் சொல்லுகிறபடியே சொருபத்தை வளர்ப்பவர்களாய்க் கொண்டாடி நோக்கிக்கொண்டு

---

1. *கிளி வலையில் அகப்படுமாறு போன்று, இவர்கள் இறைவனுடைய திருக்கண்நோக்கமாகிற வலையில் அகப்படுமவர்கள் என்பது தெரிவிக்கப்படுகின்றது இதனுல்.*

2. *திருமாலை*, 16.

3. *திருவாய்*. 6. 2: 9.

4. *கிளி தன்னை வளர்க்கின்றவர்களுடைய கையிலே இருப்பது போன்று, இவர்களும் தமக்கு ஞானவளமூட்டிவளர்க்கின்ற ஆசாரியர்களுடைய அதீனத்தில் இருப்பவர்கள் என்பதனை இதனுல் தெரிவித்தபடி.*

5. *திருநெடுந்தாண்டகம்*, 14,

6. *நாய்ச்சியார் திரு*. 5: 5.

7. *திருவாய்*. 6. 8: 2.

இட்டமாக வளர்த்தெடுத்துப் போருமவர்கள் கைவசமாய், [1] தயிர் நெய் அமர்பால் அமுது உண்டு - [2] "தயிர்ப்பழஞ் சோற்ருேடு பாலடிசிலும் தந்து" என்றும், [3] "நெய்யமர் இன்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ" என்றும், [4] "இன்னடிசிலொடு பாலமுதூட்டி" என்றும் சொல்லுகிறபடியே, அவர்கள் காலங்கட்குத் தகுதியாகவும் பக்குவங்கட்குத் தகுதியாகவும் [5] "ஞானிகள் உனக்கு ஆன்மவிஷயமான ஞானத்தை உபதேசம் செய்வார்கள்" என்கிறபடியே உபதேச மூலமாகத் தாரக போக்யங்களான பகவானுடைய குணங்கள் முதலானவற்றை அநுபவிப்பிக்க அநுபவித்து, ஒருமிடறுய் - [6] ஆசார்யர்களோடு ஒருமிடறுய்,

[7] போற்றி ஒருவண்ணம் திருந்த (என்னுமதற்கும்) - [8] "போற்றி யான் இரந்தேன் புன்னைமேலுறை பூங்குயில்காள்" என்றும், [9] "ஒருவண்ணம் சென்றுபுக்கு எனக்கு ஒன்று உரை ஒண்கிளியே" என்றும், [10] "திருந்தக் கண்டு எனக்கு ஒன்று உரையாய் ஒண்சிறு பூவாய்" என்றும் தலைவனோடு சேர்க்கவேண்டும் என்றுகூறி ஆதரித்த நிலையிலும், நுவலாததுக்கு என் பிழைக்கும் நீ அலையே நல்வளம் (என்னுமதற்கும்) - [11] "நோயெனது நுவல்" என்று விரைவில் சென்று என்

---

1. *மங்கைமார் உண்பிக்கக் கிளி உண்ணுமாறுபோன்று, இவர்களும் பகவத் விஷயத்தை ஆசாரியன் அநுபவிப்பிக்க அநுபவிப்பவர்கள் என்பதனை இதனுல் தெரிவித்தவாறு.*

2. *திருவாய்.* 9. 5: 8. 3. *திருவாய்.* 6. 8: 2.

4. *நாய்ச்சியார் திரு.* 5: 5.

5. *"உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்ஶிந:"* என்பது, ஸ்ரீகீதை, 4: 34.

6. *கிளி கற்பித்ததனையே சொல்லுமாறு போன்று, இவர்களும் முன்னோர் மொழிந்த முறைதப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனையே பேசுமவர்கள் என்பதனை இதனுல் தெரிவித்தபடி.*

7. *'போற்றி ஒரு வண்ணம் திருந்த நுவலாததுக்கு என்பிழைக்கும் நீயலையே நல்வளம் தூரப்பன் என்னுமவற்றுக்கும் உகந்து' என்னும் வாக்கியத்தால், ஆசாரியனுடைய நிக்கிரஹத்தோடு அநுக்கிரஹத்தோடு வாசியற எல்லாம் நமக்கு நன்மையே என்று கொண்டு உகந்திருக்குமவர்கள் என்பதனைத் தெரிவித்தபடி. போற்றி ஒரு வண்ணம் திருந்த என்னுமதுக்கும், நுவலாததுக்கு என் பிழைக்கும் நீயலையே நல்வளம் என்னுமதுக்கும், தூரப்பன் என்னுமதுக்கும் உகந்து என்று மூன்று வாக்கியங்களாக இதனைப் பிரித்துக்கொள்க.*

8. *திருவாய்.* 6. 1: 6. 9. *திருவாய்.* 6. 1: 7.

10. *திருவாய்.* 6. 1: 8. 11. *திருவாய்.* 1. 4: 8.

துன்பத்தை அவனுக்கு அறிவி என்னச்செய்தே செய்யாததற்கு [1] "என் பிழைக்கும் இளங்கிளியே யான் வளர்த்த நீயலையே", [2] "நீஅலையே சிறுபூவாய் நுவலாதேயிருந்தொழிந்தாய்" என்றும், அவன் நினைவினை ஊட்டுகின்ற பொருள்கள் துன்புறுத்துகிறவளவிலே அருகே இருந்து திருநாமத்தைச் சொன்னதைப் பொறுமல், [3] "சொல், பயிற்றிய நல்வளம் ஊட்டினீர் பண்புடையீரே" என்றும் இன்னுதான நிலையிலும், துரப்பன் என்னுமதற்கும் - [4] "இன்று நாராயணனை வரக்கூவாயேல் இங்குத்து நின்றும் துரப்பன்" என்று அநாதரவு செய்யும் நிலையிலும், உகந்து-மேலேகூறிய மூன்று நிலைகளிலும் கூறிய இன்சொற்களும் கடுஞ்சொற்களுமாகியவற்றுக்கு "தக்காருடைய வெறுப்பு விருப்புகள் ஆகிய இரண்டும் அவர்கள் ஆட்கொள்ளுதலின் வகையாம்" என்னும் நினைவாலே உகந்து,

[5] சொல்லெடுத்துச் சோர்ந்தவாறே கற்பியாவைத்த மாற்றம் கைகூப்பி வணங்கப் பாடி - சொல்லெடுத்துச் சோர்ந்தவாறே - [6] "சொல்லெடுத்துத் தன் கிளியைச் சொல்லே என்று துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றுளே" என்கிறபடியே திருப்பெயரைச் சொல்லத் தொடங்கி ஒருசொல் சொல்லும்போது பலக்குறைவாலே மலை எடுக்குமாறு போலேயாய் அதுவும் மாட்டாதே தன்நிலைஇழந்த சரீரத்தையுடையவளானவாறே, கற்பியாவைத்த மாற்றம் - [7] "கன்மின்கள் என்று உம்மை யான் கற்பியாவைத்த மாற்றம்" என்கிறபடியே முன்பே கற்பித்துவைத்த சொல்லான திருப்பெயரைச் சொல் என்ன, கைகூப்பி வணங்கப் பாடி - [8] "திருமாலைப் பாடக் கேட்டு வளர்த்ததனுல் பயன் பெற்றேன் வருக என்று மடக்கிளியைக் கை கூப்பி வணங்கினுளே" என்கிறபடியே கற்பித்தவர்கள் தாங்கள் செய்ந்நன்றி பாராட்டி வணங்கி ஒழுகும்படி பிரீதியினுலே தூண்டப் பட்டவர்களாய்ச் சொல்லி,

---

1. திருவாய். 1. 4: 7. 2. திருவாய். 1. 4: 8.
3. திருவாய். 9. 5: 8. 4. நாய்ச்சியார் திரு. 5: 10.

5. "சொல்லெடுத்துச் சோர்ந்தவாறே கற்பியா வைத்த மாற்றம் கைகூப்பி வணங்கப் பாடி" என்னும் இவ்வாக்கியத்தால் சீடர்கள், ஆசாரியர்களும் கைகூப்பி வணங்கும்படி பாடுமவர்கள் என்பதனைத் தெரிவித்தபடி.

6. திருநெடுந்தாண்டகம், 13. 7. திருவாய். 6. 8: 6.
8. திருநெடுந்தாண்டகம், 14.

[1] ஆலியா அழையா - [2] "ஆலியா அழையா அரங்கா என்று" என்கிறபடியே ஆனந்தத்தோடே திருப்பெயரைக் கொண்டு போது போக்குமவர்களாய், [3] பராபிமானத்திலே ஒதுங்கின - [4] "தேவுமற்று அறியேன்" என்கிறபடியே ஆசார்ய அபிமானமாதல் பாகவத அபிமானமாதல்ஆகிற பிறருடைய அபிமானத்திலே ஒதுங்கினவர்களான,

நம்பிக்கு அன்பர் - [5] "தென்குருகூர்நகர் நம்பிக்கு அன்பன்" என்கிறபடியே ஆசாரியரான ஆழ்வார் விஷயத்தில் அன்பே அறிகுறியாம்படியிருக்கும் ஸ்ரீ மதுரகவிகள், தலைமீது அடிப்பொடி - [6] "நாவலிட்டு உழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே" என்கிறபடியே திருப்பெயரை அண்டைகொண்ட பலத்தாலே யமன் முதலாயினார் தலைகளிலே அடியிடும்படி செருக்கினையுடையராய்ப் பாகவதர்களுக்குப் பாததூளிபோலே பரதந்திரராய் இதுவே அறிகுறியான தொண்டரடிப்பொடியாழ்வார், உடையவர் உடையார் - 'இராமாநுசனுடையார்' என்றே நிருபகமாம்படி உடையவர்க்குப் பரதந்திரர்களான **ஆழ்வான், ஆண்டான், எம்பார், அருளாளப்பெருமாள்எம்பெருமானார்** முதலாயினார்கள், போல்வாரை - போன்றவர்களை, கிளி பூவை குயில் மயில் என்னும் - குண ஒப்புமை காரணமாகக் கிளி என்றும், பூவை என்றும், குயில் என்றும், மயில் என்றும் சொல்லும் என்றபடி.

பூவை - நாகணவாய்ப்புள். மயிலைத் தூதுவிட்டமை இன்றிக்கே இருக்க, அதனையும் ஒருசேரச் சொன்னது, [7] "யான்வளர்த்த கிளிகாள்! பூவைகள்காள்! குயில்காள்! மயில்காள்!" என்று வேறோரிடத்திலே அருளிச்செய்கையாலே அதற்கும் இதுவே உள்ளுறைப்பொருள் என்று அறிவிக்கைக்காக. (4)

---

1. *மயில்கள் மேகத்தைக் கண்டவாறே தோகையை விரித்துக் கொண்டு ஆனந்தமாக விளையாடும்; அதுபோன்று இவர்களும் கார்முகில் போல் வண்ணன் கண்ணன் எம்மானைக் கண்டு கூத்தாடுமவர்கள் என்பதனைத் தெரிவித்தபடி.*

2. *பெருமாள்திரு.* 3: 2.

3. *குயில்களுக்கு, பரப்ருதம் என்று வடமொழியில் ஒரு பெயர் உண்டு. பிறரால் வளர்க்கப்படுவது என்று பொருள். அதுபோன்று, ஆசாரியர்கள் பாகவதர்கள் என்னும் இவர்களுடைய அபிமானத்திலே ஒதுங்கி, அவர்களால் வளர்க்கப்படுமவர்கள் இவர்கள் என்பதனைத் தெரிவித்தவாறு.*

4. *கண்ணிநுண் சிறுத்தாம்பு*, 2.

5. *கண்ணிநுண் சிறுத்தாம்பு*, 11.

6. *திருமாலை*, 1. 7. *திருவாய்.* 8, 2: 8,

154

ஆசறு தூவி என்னும் பாஹ்யாப்யந்தர சுத்தி யோடே, திரையுகளும் வியசந வியதை யற்று, தாய் வாயில் உண்ணும் பிள்ளைக்கு இரைதேடி, வைகல் உடன் மேய்ந்து, நுங்கால் பைங்கானம் என்று பிரஹ்மரதம்பண்ணிக்கொடுத்தவைகொண்டு, நல்ல பதத்தையும் வேண்டேன் என்னும் தனிப்பெரும் பித்தர், நம்முதலிகள் போல்வாரை நாரை கொக்கு குருகு என்னும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— நாரை கொக்கு குருகு என்பனவற்றிற்கு உள்ளுறைப்பொருள் அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

அதாவது, [1] ஆசு அறு தூவி என்னும் பாஹ்ய அப்யந்தர சுத்தியோடே - [2] "ஆசறு தூவி வெள்ளைக்குருகே" என்கிறபடியே பழிப்பு அற்ற சிறகினையுடைத்தாய் உள்ளும் புறம்பும் ஒக்கக் குற்றம் அற்றிருக்கின்ற குருகே! என்றதனால் சொல்லப்பட்ட [3] "எவன் செந்தாமரைக் கண்ணனை எம்பெருமானைத் தியானம் செய்கிறானோ அவன் உள்ளும் புறம்பும் தூயன்" என்கிறபடியே உள்ளும் புறம்பும் தூய்மையோடு கூடி, [4] திரை உகளும் வியசந வியதை அற்று - [5] "வாயும் திரையுகளும் கானல் மடநாராய்" என்கிறபடியே உணவாகிற மீன்களைக் கவரவேண்டும் என்னும் ஒரே எண்ணத்தாலே நாரையானது திரைகள் வந்து கிட்டி மேலே தாவிப்போகாநிற்கிற கானலிலே சலி

---

1. *குற்றமற்ற சிறகினையுடையதாய் உள்ளும் புறமும் வெண்மையாக இருக்கின்ற குருகே! என்றதனால் சொல்லப்பட்ட பொருள், தூய்மை வாய்ந்த மன மொழி மெய்களையுடையவர்கள் இவர்கள் என்பது. பாஹ்யாப்யந்தரம் - மெய்யும் மனமும்.*

2. *திருவாய். 6. 8: 8.*

3. *"ய:ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தரஶ்ஶுசி:" என்பது, பிரமாணம்.*

4. *'திரையுகளும்' என்று தொடங்கும் வாக்கியத்தால், இறைவன் பக்கல் மனத்தை ஊன்றவைத்து நிற்பதனால், இவ்வுலக வாழ்க்கையால் உண்டாகின்ற மூவகைத் துன்பங்கள் மேன்மேலும் வந்து தாக்கினாலும் அவற்றிற்கு வருந்தாதே இருக்குமவர்கள் என்பதனைத் தெரிவித்தவாறு.*

5. *திருவாய். 2. 1: 1.*

யாமல் இருக்குமாறு போலே, [1] "பகவானை மனத்திலுடையவர்கள் துக்கங்களாலே மூடப்பட்டவர்களாக இருந்தாலும் எப்படி வருந்த மாட்டார்களோ அப்படியே மலைகள் மழையின் தாரைகளாலே நன்றாக அடிபட்டும் சலிக்கின்றன இல்லை" என்கிறபடியே பகவானிடத்திலேயே வைத்த மனத்தினையுடைமையாலே இவ்வுலக வாழ்க்கையாகிற கடலின் தரங்கங்களான [2] மூவகைத் துன்பங்கள் மேலும் மேலும் வந்து மேலிடாநின்றாலும் அதற்கு இடையாதே,

[3] தாய் வாயில் உண்ணும் பிள்ளைக்கு இரைதேடி - [4] "தாய் வாயில், கொக்கின் பிள்ளை வெள்ளிற உண்ணும்" என்றும், [5] "பழனக் கழனியதனுள்போய்ப் புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும்" என்றும் சொல்லுகிறபடியே கொக்கானது தன் வாயாலே எடுத்துக்கொடுக்க வாழ்ந்திருக்கும் தன் பிள்ளைக்கு வாய்க்கு அடங்கும் இரைதேடி இடுமாறுபோலே, தங்கள் வாக்காலே கொடுக்கும் பகவத்விஷயத்தைப் பற்றி வாழ்ந்திருக்கும் குழைச்சரக்கான சிஷ்யர்களுக்கு அறிவு முதிர்ச்சிக்குத் தகுதியாகப் பொறுக்கக்கூடிய இறைவன் விஷயமான அர்த்தங்களைச் சாஸ்திரங்களிலே ஆராய்ந்து உதவிசெய்து,

வைகல் உடன்மேய்ந்து - [6] "வைகல் பூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்" என்றும், [7] "காதல் மென்படையோடு உடன்மேயும் கருநாராய்" [8] என்றும் சொல்லுகிறபடியே எல்லாக் காலங்களிலும் இன்பம் நுகரும் இடங்களுக்குத் தாங்களே சென்று தங்களைப் பிரியில்

---

1. கிரயோவர்ஷ தாராபிர் ஹந்யமாநா ந விவ்யது:
அபிபூயமாநா வ்யஸனை: யதாதோக்ஷஜசேதஸ:
என்பது, ஸ்ரீபாகவதம், 10. 20: 15.

2. மூவகைத் துன்பங்கள் - தன்னால் வருவனவும், பிறஉயிர்களால் வருவனவும், தெய்வத்தால் வருவனவும் ஆம்.

3. ஆசாரியர்கள், தங்கள் வாக்கால் உபகரிக்கும் பகவத்விஷயத்தை நம்பி வாழ்ந்திருக்கும் சிஷ்யர்களுக்கு, அவர்களுடைய அறிவிற்குத் தகுதியாகப் பொருந்தக்கூடிய அர்த்த விசேடங்களைச் சாஸ்திரங்களிலே ஆராய்ந்து உதவும் தன்மையைத் தெரிவித்தவாறு இவ்வாக்கியத்தால்.

4. பெரிய திருமொழி, 9. 6: 1. 5. பெரியதிரு. 5. 1: 2.

6. திருவாய். 6. 1: 1. 7. திருவாய். 6. 1: 2.

மேலே காட்டப்பட்ட இரண்டு திருப்பாசுரங்களின் கருத்து, பேடைகளுடனே இனிய நீர் நிலங்களில் தங்கியிருக்கும் நாரைகள் என்பது. இதனால் கூறப்படும் மேம்பொருளை வியாக்கியானத்தில் காண்க.

தரியாத அன்புடைய சிஷ்யர்களுடனேகூடப் பகவானுடைய குணங்களை அநுபவம்பண்ணி, நுங்கால் பைங்கானம் என்று பிரஹ்மரதம் பண்ணிக் கொடுத்தவை கொண்டு - [1]"நுங்கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நுமரோடே" என்றும், [2]"பைங்கானம் ஈதெல்லாம் உனதேயாகப் பழனமீன் கவர்ந்து உண்ணத் தருவன்" என்றும் சொல்லுகிறபடியே தங்கள்பக்கல் உபகாரம் கொண்டு வாழ்கின்ற சிஷ்யர்கள் செய்ந்நன்றியறிவாலே தலைமேல் தாங்குதலாகிற பிரஹ்மரதம்பண்ணி, [3]"தன் சரீரத்தையும் பொருளையும் உயிரையும் ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும்" என்கிற முறையிலே அன்போடு கொடுத்தவற்றை அங்கீகரித்து,

நல்ல பதத்தையும் வேண்டேன் என்னும் தனிப்பெரும்பித்தர் - [4]நல்ல பதத்தால் மனைவாழ்வர்" என்கிறபடியே பாகவதகைங்கர்யத்துக்கு உறுப்பான இல்லறத்தையும், இவ்வுலக வாழ்க்கையின் துன்பத்தாலுண்டாகும் அச்சத்தாலே [5]"இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்று வெறுக்குமவர்களாயுள்ள [6]"அங்கையாழி அரங்கன்அடிஇணை, தங்கு சிந்தைத் தனிப்பெரும்பித்த"ரான ஸ்ரீ குலசேகரப்பெருமாள், நம்முதலிகள் போல்வாரை - ஆசார்யபதத்தில் நின்றவர்களான நம்முதலிகள் போல்வாரை, நாரை கொக்கு குருகு என்னும் - குண ஒப்புமையாலே நாரை என்றும் கொக்கு என்றும் குருகு என்றும் சொல்லும் என்கை.

[7]"நன்னீலமகன்றில்காள்" என்று மகன்றிலையும் தூதுவிட்டிருக்கச் செய்தே அதற்கு உள்ளுறைப்பொருள் அருளிச்செய்யாதொழிந்தது, அதற்கு இப்படிப் பரக்கச்சொல்லத்தக்கதில்லாமையாலும்,

---

1. திருவாய். 9. 7: 1. 2. திருநெடுந்தாண்டகம், 27.

தமரோடு கூடின நாரையின் கால்களைத் தம் தலைமேலே வைக்கும்படி சொல்லுகிற இதனால், தங்களிடத்தில் அர்த்த விசேடங்களைக் கேட்டு வாழ்ந்து போந்த சிஷ்யர்கள் செய்ந்நன்றியறிவினால் சிரசாவகிக்கையாகிற பிரஹ்மரதம் பண்ணிக்கொடுத்தல் கூறப்படுகிறது. "செங்காலமடநாராய்" என்ற திருப்பாசுரத்தால், சிஷ்யர்கள் பக்தியோடு கொடுக்கும் பொருள்களை ஆசாரியர்கள் வாங்கிக்கொள்வார்கள் என்பது கூறப்படுகிறது.

3. "ஶரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத்" என்பது, பிரமாணம்.

4. திருவாய். 8. 10: 11. 5. பெருமாள்திரு. 4: 5.

6. பெருமாள் திரு. 3: 9.

7. திருவாய்மொழி, 1. 4: 4.

இந்த நியாயத்திலே அதுபோன்ற குணமுடையவற்றையும் சொல்லிக் கொள்ளுமித்தனையன்றோ என்னுமதனைப் பற்றவும், மகன்றில் என்பது, அன்றில் இனத்தில் ஓர் உட்பிரிவுடையதொரு பறவை விசேஷடம். ஆக, இப்படித் தூதுவிடுகிற கட்டத்திலே வருகின்ற பலவகைப் பறவை விசேடங்களுக்கு உள்ளுறை அருளிச்செய்தாராயிற்று. (5)

155

பூண்டநாள் சீர்க்கடலை உட்கொண்டு, திருமேனி தன்னிறமொத்து, உயிரளிப்பான் தீர்த்தகரராய் எங்கும் திரிந்து, ஜ்ஞாநஹ்ரதத்தைப் பூரித்து, தீங்கின்றிவாழ நிதிசொரிந்து, கொடுத்தது நினையாதே லஜ்ஜித்து, வெளுத்து ஒளித்து, கண்டு உகந்து பரசம்ருத்தியே பேறான அன்புகூரும் அடியவர், உறையில் இடாதவர், புயற்கைஅருள்மாரி, குணம்திகழ் கொண்டல் போல்வாரை மேகம் என்னும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—இனி, மேல் இத் தூது கட்டத்தில் சொல்லப்படுகிற மேகத்திற்கு உள்ளுறை அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

அதாவது, பூண்டநாள் சீர்க்கடலை உட்கொண்டு - மழைபெய்ய வேண்டிய காலங்களிலே கடலிலே புக்கு அதில் நீரைப் பருகிக் கொண்டிருக்கும் மேகம்போலே, [1] "நீண்ட தோள் மால் கிடந்த நீள் கடல் நீராடுவான், பூண்டநாள் எல்லாம்புகும்" என்றும், [2] "திருமால்-சீர்க்கடலை உட்பொதிந்த சிந்தனையேன்" என்றும், சொல்லுகிற படியே விடிந்த நாள் எல்லாம் அவன் கண்வளர்ந்தருளுகிற கடலிலே புகுந்து, திருமகள் கணவனான அவனுடைய கல்யாண குணக்கடலை [3] "மனஉள்கொண்டு" என்கிறபடியே உள்ளே அடக்கிக்கொண்டு, திருமேனி நல்நிறம் ஒத்து - [4] "திருமால் திருமேனி ஒக்கும்" என்றும், [5] "கண்ணன்பால் நல்நிறம் கொள்கார்" என்றும் சொல்லுகிறபடியே மேகமானது அவன் திருமேனியோடு ஒத்த நிறத்தையுடைத்தா யிருக்குமாறு போலே, உள்ளே தியானிக்கப்படுகின்ற முகில்வண்ண னுடைய நிழலீட்டாலே அவனோடு ஒத்த நிறத்தையுடையவர்களாய்,

1. மூன்றாந் திருவந். 69. 2. பெரிய திருவந். 69.
3. 4. திருவிருத்தம், 32.
5. பெரிய திருவந். 85.

உயிர் அளிப்பான் தீர்த்தகரராய் எங்கும் திரிந்து - [1] "உயிர் அளிப்பான், மாகங்கள் எல்லாம் திரிந்து" என்கிறபடியே மேகமானது மழைமூலமாக உயிர்களைப் பாதுகாப்பதற்காக விரிந்திருக்கின்ற ஆகாசப் பரப்பு எங்கும் சஞ்சரிக்குமாறுபோலே, பிறப்பு இறப்புகளிலே உழலுகின்ற ஆன்மாக்களைப் பாதுகாப்பதற்காக [2] "தீர்த்தகரர் ஆமின் திரிந்து" என்றும், [3] "தீதில் நன்னெறி காட்டி எங்கும் திரிந்து" என்றும் சொல்லுகிறபடியே உலகத்தைத் தூய்மை செய்யுமவர்களாய் உய்யும் வழியைக் காட்டுமவர்களாய் எவ்விடத்தும் திரிந்துகொண்டு, ஞான [4]ஹ்ரதத்தைப் பூரித்து-மேகம் மழையாலே தடாகத்தை நிறைக்குமாறுபோலே, [5] "ஞானமாகிற மடுவினையுடையதும் தியானமாகிற நீரையுடையதும் ஆசை துவேஷம் என்னும் அழுக்கைப் போக்குவதும் ஆன மனத்தில்உளவாகிய தீர்த்தத்தில் எவன் நீராடுகிருனே அவன் உயர்ந்த கதியை அடைகிருன்" என்று மனத்திலுள்ள தீர்த்தத்தைச் சிறப்பித்துக் கூறுவதில் சொன்ன ஞானமாகிற மடுவைத் தாங்கள் பெய்கிற பகவானுடைய குணங்களாகிற தண்ணீரால் நிறைத்து, தீங்கு இன்றி வாழ நிதி சொரிந்து - [6] "தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து" என்றும், "வாழ உலகினில் பெய்திடாய்" என்றும், [7] "மா முத்து நிதி சொரியும்" என்றும் சொல்லுகிறபடியே கேடு சிறிதும் இன்றிக்கே அனைவரும் வாழும்படி பகவானுடைய குணங்களாகிற மணிகளைப் பொழிந்து,

கொடுத்தது நினையாதே லஜ்ஜித்து - வள்ளற்றன்மையின் மிகுதியினாலே கொடுத்ததனை நினையாதே 'இன்னமும் கொடுக்கப்பெற்றிலோம், நாம் செய்தது போருமோ!' என்று வெட்கி, வெளுத்து ஒளித்து - மேகமானது மழை பெய்யாதபோது வெளுத்துப் போய்க் கண்களுக்குப் புலப்படாமல் இருப்பதுபோலே, அர்த்தவிசேடங்களை

---

1. திருவிருத்தம், 32.
2. இரண்டாந் திருவந். 14.
3. பெருமாள் திரு. 2: 6.
4. ஹ்ரதம் - மடு.
5. ஜ்ஞாநஹ்ரதே த்யாநஜலே ராகத்வேஷ மலாபஹே
யஸ்நாதி மாநஸே தீர்த்தே ஸயாதிபரமாங்கதிம்.

என்பது, பிரமாணம்.

6. திருப்பாவை, 3.
7. நாய்ச்சியார் திரு. 8: 2.

உபதேசிக்கப் பெருதபோது உடம்புவெளுத்து மறைந்து [1] வெளியே முகம் காட்டாதவர்களாய், கண்டு உகந்து பரஸம்ருத்தியே பேருன - மேகமானது தனக்கு என்று காரியம் செய்யாது பிறர் நலத்தைக் கண்டு உகப்பதற்கே செய்வதுபோன்று, கொடுக்குமிடத்து சிஷ்யர்களுடைய நிறைவினைக் கண்டுமகிழ்ந்து அந்த நிறைவினையே தங்களுக்குப் பயனாகக்கொண்டு இருக்குமவர்களான, அன்புகூரும் அடியவர் - [2] "ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்புகூரும் அடியவர்க"ளான முதலாழ்வார்கள், உறையில் இடாதவர் - [3] உருவின வாள் உறையில் இடாதே முதல் நடு இறுதிகளிலே மற்றைத் தேவர்களின் பிற்பாட்டினைக் கூறுதல் முன்னாக எம்பெருமானுடைய முதன்மையை எடுத்துக் கூறும் திருமழிசைப்பிரான், புயல் கை அருள்மாரி - [4] "காரார் புயல்கை கலிகன்றி" என்றும், [5] "அருளமாரி" என்றும் வள்ளற்றன்மையில் மேகத்தைப் போன்றவராய் அருளைப்பெய்யும் திருமங்கையாழ்வார், குணம் திகழ் கொண்டல் - [6] "குணம் திகழ் கொண்டல் இராமாநுசன்" என்று குணங்கள் ஒளிவீசுகின்ற மேகமாகச் சொல்லப்பெற்ற எம்பெருமானார், போல்வாரை - போன்றவர்களை, மேகம் என்னும் - குணங்களின் ஒப்புமையைக் கொண்டு மேகம் என்று சொல்லும் என்கை.

பேற்றுக்கு அடி இவர்கள் ஆகையாலே, பேற்றில் பதற்றம் தோன்றப் பலகாலும் தூதுவிடுவர். (6)

---

1. 'வெளியே முகங்காட்டாதவர்களாய்' என்றதனால், ஆசாரியர்கள் உபதேச காலங்களில் சீரிய சிங்காதனத்திருந்து சேவை சாதிப்பர்கள்; மற்றைக் காலங்களில் சுவாநுபவபரர்களாய் ஏகாந்த சீலர்களாய் இருப்பர்கள் என்பதனைத் தெரிவித்தபடி.

2. பெரியதிருமொழி, 2. 10: 4.

3. 'உறையிலிடாதவர்' என்றது, திருமழிசைப்பிரானை. யாங்ஙனமெனின்? உலகில் உருவின வாளை உறையில் இடாதவர்கள் தாங்கள் கைக்கொண்ட, பகைவர்களைக் கோறலாகிற செயலைச் செய்தபடியே இருப்பது போன்று, திருமழிசைப்பிரானும் மற்றைத் தெய்வங்களினுடைய தாழ்வினையும் எம்பெருமானுடைய முதன்மையினையும் தம்முடைய திவ்வியப் பிரபந்தங்களில் ஆதியோடு அந்தமாக மிக்க ஊற்றத்தோடு அருளிச்செய்து போந்தவர் ஆதலாலே நம்முதலிகள் இவரை 'உறையிலிடாதவர்' என வழங்கினர் என்க.

4. பெரியதிருமொழி, 3. 2: 10. 5: பெரிய திரு. 3. 4; 10.

6. இராமாநுசநூற்றந். 60,

156

[1] தம்பிழையும் சிறந்தசெல்வமும் படைத்த பரப்பும் தமரோட்டைவாசமும் மறப்பித்த க்ஷமாதீக்ஷா சாரஸ்ய ஸௌந்தர்யங்களை உணர்த்தும் வியூஹ விபவ பரத்வதுவய அர்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—இனி, இப்படி இவர் தூதுவிடும்படி [2] முகம் காட்டாமைக்குக் காரணத்தையும், தூதுவிடுகைக்குப் பற்றுசையும், அதற்கு விஷயத்தையும் தூதுநாலுக்கும் வகைஇட்டு அருளிச்செய்கிறார் இச் சூத்திரத்தால்.

அதாவது, தம்பிழை மறப்பித்த க்ஷமையை உணர்த்தும் வியூகம் தூது நான்கனுள் முதல் தூதுக்கு விஷயம் - [3] "அஞ்சிறைய மடநாராய்" என்ற திருவாய்மொழியில் [4] "என்பிழையே நினைந்தருளி" என்றதனால் தன் மேன்மையாலே இத்தலையில் தண்மைபாராதே வந்து

---

1. இச்சூத்திரத்தை, தம்பிழையை மறப்பித்த க்ஷமையை உணர்த்தும் வியூகம் தூது (நான்கனுள் முதல் தூதுக்கு) விஷயம் என்றும், சிறந்த செல்வத்தை மறப்பித்த தீக்ஷையை உணர்த்தும் விபவம் தூது (நான்கனுள் இரண்டாவது தூதுக்கு) விஷயம் என்றும், படைத்த பரப்பை மறப்பித்த சாரஸ்யத்தை உணர்த்தும் பரத்துவ துவயம் தூது (நான்கனுள் மூன்றாவது தூதுக்கு) விஷயம் என்றும், தமரோட்டைவாசத்தை மறப்பித்த ஸௌந்தர்யத்தை உணர்த்தும் அர்ச்சை தூது (நான்கனுள் நான்காவது தூதுக்கு) விஷயம் என்றும் நிரல் நிறையாகக் கொள்க. 'மறப்பித்த' 'உணர்த்தும்' என்ற சொற்களை முன்னே உள்ள சொற்களோடு தனித்தனியே கூட்டுக. 'தூது நாலுக்கும்' என்றது, தூது விடுகின்ற "அஞ்சிறையமடநாராய்", "வைகல் பூங்கழிவாய்", "பொன்னுலகு ஆளீரோ", "எம்கானல் அகம் கழிவாய்" என்னும் தலைப்புகளையுடைய நான்கு திருப்பதிகங்களை.

2. முகம் காட்டாமைக்குக் காரணம், தம்பிழை, சிறந்த செல்வம், படைத்த பரப்பு, தமரோட்டைவாசம். 'தூது விடுகைக்குப் பற்றுசு' என்றது. க்ஷமா தீக்ஷா ஸாரஸ்ய ஸௌந்தர்யங்களை. 'அதற்கு விஷயம்' என்றது, வியூக விபவ பரத்துவ துவய அர்ச்சைகளை. 'பரத்துவதுவயம்' என்றது, பரமபதத்திலிருக்கும் நிலையினையும், கரந்தசில்லிடம் தொறும் இடம்திகழ் பொருள்தொறும் கரந்து எங்கும் பரந்துறையும் நிலையினையும். இவ்விரண்டும் முதன்மைக்கு அறிகுறிகள் ஆதலின் 'பரத்துவதுவயம்' என்கிறார். துவயம் - இரண்டு.

3. திருவாய். 1. 4: 1.   4. திருவாய். 1. 4; 7.

கலந்தான்; அங்ஙனம் கலந்து நம் குற்றங்களை நினைந்து பிரிந்து நம் குற்றங்களையே பார்த்துத் தன் பொறுமையை மறக்கையாலே இத் தலையை நினையாதிருந்தானத்தனை; அவனுடைய பொறுமையை அவனுக்கு அறிவிக்க அவன்வரும் என்று அறுதியிட்டு, "என் பிழைத் தாள் திருவடியின் தகவினுக்கு" என்று அவனுடைய பொறுமை பற்றுசாக, [1]"கடலாழி நீர்தோற்றி அதனுள்ளே கண்வளரும் அடலாழி அம்மானைக் கண்டக்கால் இது சொல்லியருள்" என்று படைப் பின்பொருட்டுப் பெருவெள்ளத்திலே கண்வளர்ந்தருளினவனுக்குப் படைப்புக்குப் பயன் [2]"எம்பெருமானைப் பூசித்துவணங்கும்பொருட்டுக் கை கால் முதலிய உறுப்புக்களுடன் கூடின ஆச்சரியமான இச் சரீரமானது ஆதிகாலத்தில் உண்டாக்கப்பட்டது" என்கிறபடியே திருவடிகளிலே அடிமைகொள்ளுகைஅன்றோ என்று இதனைச் சொல்லவேண்டும் என்று வியூகத்திலே தூதுவிடுகையாலே தம்பிழை மறப்பித்த பொறுமையை உணர்த்திவிட்ட வியூகம் முதல்தூதுக்கு விஷயம்.

சிறந்த செல்வம் மறப்பித்த தீக்ஷையை உணர்த்தும் விபவம் இரண்டாம் தூதுக்கு விஷயம் - [3]"வைகல்பூங்கழிவாய்" என்ற திருவாய்மொழியில் [4]"சிறந்த செல்வம் மல்கு திருவண்வண்டூர் உறையும்" என்கிறபடியே துன்புறுகிறவர்களைப் பாதுகாத்து வாராநிற்கச் செய்தே, திருவண்வண்டூரின் செல்வத்தைக் கண்டு கால்தாழ்ந்து, 'துன்புறுகிறவர்களைப் பாதுகாப்பது' என்னும் தன் விரதத்தை மறக்கையாலே நம்மை நினையாதிருந்தானத்தனை; துன்புறுகிறவர்களைப் பாதுகாப்பது ஒருதலையாகுல் மற்றொன்றில் கால்தாழுமவன் அல்லாமையாலே அதனை அறிவிக்கவரும் என்று, [5]"புணர்த்த பூந்தண் துழாய்முடி நம்பெருமானைக் கண்டு" என்கிறபடியே 'துன்புறுகின்றவர்களைப் பாதுகாப்பது' என்னும் அவன் விரதத்தையே பற்றுசாகக் கொண்டு [6]"மாறில் போர்அரக்கன் மதிள் நீறு எழச் செற்று உகந்த ஏறுசேவகனுர்க்கு என்னையும் உளள் என்மின்களே" என்று பிராட்டி காரணமாக இராவணனுக்கு இருப்பிடமான இலங்கையில் அரணைத் துகள் ஆக்கின துணைவேண்டாச் செருவென்றியனை சக்கரவர்த்தித்

1. திருவாய். 1. 4: 10.

2. "விசித்ரா தேஹ ஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும்" என்பது, ஸ்ரீவிஷ்ணுதர்மம்.

3. திருவாய். 6. 1: 1.
4. திருவாய். 6. 1: 3.

5. திருவாய். 6. 1: 5.
6. திருவாய். 6. 1: 10.

திருமகனுக்குக் காப்பாற்றத் தகும் பொருள்களிலே நானும் ஒருத்தி உண்டு என்று சொல்லுங்கோள் என்று விபவத்திலே தூதுவிடுகை யாலே, சிறந்தசெல்வம் மறப்பித்த விரதத்தை உணர்த்திவிட்ட விப வம் இரண்டாம் தூதுக்கு விஷயம்.

படைத்த படைப்பு மறப்பித்த சாரஸ்யத்தை உணர்த்தும் பரத்வ துவயம் மூன்றும்தூதுக்கு விஷயம் - [1] "பொன்னுலகாளீரோ" என்ற திருவாய்மொழியில "முன்உலகங்கள் எல்லாம் படைத்த முகில்வண் ணன் கண்ணன் என்னலம் கொண்டபிரான் தனக்கு" என்கிறபடியே படைக்கப்பட்ட உலகத்தைக் காப்பாற்றுகின்ற பராக்காலே அடியார் களோடு தனக்கு உண்டான ஒத்தஇன்பத்தை மறந்து, அதுகொண்டு தம்மை நினையாதிருந்தானத்தனை; [2] "தன்மன்னு நீள்கழல்மேல் தண் துழாய் நமக்குஅன்றி நல்கான்" என்கிறபடியே அடியார்களோடு ஒத்தஇன்பத்தையுடையனுதலாலே அதனை அறிவிக்க வரும் என்று ஒத்தஇன்பம் பற்றுசாக [3] "வானவர்கோனைக் கண்டு யாம் இதுவோ தக்கவாறு என்னவேண்டும்" என்று பரத்துவத்திலும், [4] "எங்குச் சென்றுகிலும் கண்டு இதுவோ தக்கவாறு என்மின்" என்று கண் களால் காணமுடியாமையாலே பரத்துவத்திற்கு ஒத்ததான அந்தர் யாமித்வத்திலும் தூதுவிடுகையாலே படைத்த பரப்பு மறப்பித்த ஒத்த சுவைத்தன்மையை உணர்த்திவிட்ட பரத்வதுவயம் மூன்றும்தூதுக்கு விஷயம்.

தமரோட்டை வாசம் மறப்பித்த சௌந்தர்யத்தை உணர்த்தும் அர்ச்சை நாலாம் தூதுக்கு விஷயம் - [5] "எம்கானல்அகம் கழிவாய்" என்ற திருவாய்மொழியிலே [6] "தமரோடு அங்குறைவார்க்கு" என் கிறபடியே தம்மைஉகந்த பாகவதர்களுடைய சேர்த்தியில் இனிமை யாலே, பிரிந்தார்க்கு உயிர்கொண்டிருக்க ஒண்ணுதபடியான தன் அழகினை மறந்து, அதுகொண்டு பிரித்திட்டு வைத்துப்போய் நம்மை நினையாதிருந்தானத்தனை; இவ்வடிவழகினைப் பிரிந்தார் தரிப்பரோ என்று அவ்வழகினை அறிவித்துவிட்டால் வாராதிரார் என்று, [7] "செக் கமலத்தலர்போலும் கண் கை கால் செங்கனிவாய், அக்கமலத்து இலை போலும் திருமேனி அடிகளுக்குத் தக்கிலமே கேளீர்கள்?" என்றும்,

1. திருவாய். 6. 8: 1.
2. திருவாய். 6. 8: 6.
3. திருவாய். 6. 8: 4.
4. திருவாய். 6. 8. 5.
5. திருவாய். 9. 7: 1:
6. திருவாய். 9. 7; 2.
7. திருவாய். 9. 7: 3.

[1] "பூந்துழாய் முடியார்க்கு" என்று தொடங்கி "தாம் தம்மைக் கொண்டு அகல்தல் தகவுஅன்று" என்று அழகே பற்றுசாகத் "திருமூழிக்களத்தார்க்கு" என்று அர்ச்சாவதாரத்திலே தூதுவிடு கையாலே தமருடைய வாசம் மறப்பித்த அழகினை உணர்த்திவிட்ட அர்ச்சை நாலாம் தூதுக்கு விஷயம். (7)

157

[2] பகல் ஓலக்கம் இருந்து, கறுப்புடுத்துச் சோதித்து, காரியம் மந்திரித்து, வேட்டைஆடி, ஆராமங்களிலே விளையாடும் ராஜநீதி, ஆதும் சோராமல் செங்கோல் நடாவுகிற பார்அளந்த என்னும் மூன்று முடிக்கு உரிய இளவரசுக்கு, விண்மீது என்கிற ஐந்திலும் காணலாம்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—இப்படிப் பல இடங்களிலும் தூதுவிட்டால் அடையத் தக்க பொருள் ஒன்றே என்னும் தன்மை குலையாதோ? என்னும் வினவிற்கு விடையாகப் பரத்துவம் முதலிய ஐந்து நிலைகளில் இடத்தின் வேற்றுமையே ஒழியப் பொருளில் வேற்றுமை இல்லை என்னுமதனை எடுத்துக்காட்டோடு கூறுகிறார் இச்சூத்திரத்தால்.

---

1. திருவாய். 9. 7: 9.

2. இச்சூத்திரத்துள்ள 'ராஜநீதி' என்னும் தொடர்மொழியை, பகலோலக்கமிருக்கும் ராஜநீதி, கறுப்புடுத்துச் சோதிக்கும் ராஜநீதி, காரியம் மந்திரிக்கும் ராஜநீதி, வேட்டையாடும் ராஜநீதி என்று முன்னுள்ளனவற்றோடும் தனித்தனியே கூட்டுக. ராஜநீதி - முறை; பிரகாரம். 'விண்மீது என்கிற ஐந்திலும்' என்றது, "விண்மீதிருப்பாய்" என்ற திருப்பாசுரத்தில் கூறப்பட்ட பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்ற ஐந்து நிலைகளிலும் என்றபடி. 'காணலாம்' என்றது, மேலே கூறியுள்ள ஐந்து தன்மைகளையும் ஐந்து நிலைகளிலே காணலாம் என்றபடி. அரசுவீற்றிருத்தல், நகரசோதனை செய்தல், மந்திரிகளோடு மந்திராலோசனை செய்தல், வேட்டையாடுதல், பூம்பொழிலில் இன்ப நுகர்தல் இவை வேறு வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வேடத்தோடு அரசன் செய்யினும், இங்ஙனம் செய்கின்றவன் அரசன் ஒருவனேயாயவாறு போன்று, இங்கும், இறைவன் ஐவகை நிலைகளிலே இருந்துகொண்டு ஐவகைத் தொழில்களைச் செய்யினும், செய்கின்றவன் இறைவன் ஒருவனே யாதலின் அங்ஙனம் தூது விடுவதனால் குற்றம் இன்று என அறிவித்தவாறு.

அதாவது, பகல் ஓலக்கம் இருந்து - எல்லாராலும் சேவிக்கப் படுகிறவனுய்க்கொண்டு தன்வீறு தோற்றப் பகல்ஓலக்கம் இருக்கையும், கறுப்புடுத்துச் சோதித்து - இராச்சியத்தில் உள்ளாருடைய குணங்களையும் குற்றங்களையும் அறிகைக்காக இரவிலே பிறர் அறியாதபடி மாறுவேடம்பூண்டு நகரசோதனம் செய்கையும், காரியம் மந்திரித்து - இராச்சியத்தில் நல்லோரை நலம்புரிந்து காத்தற்காகச் செய்யும் காரியத்தை ஆராய்தலும், வேட்டைஆடி - பின்பு துஷ்ட மிருகங்களைக் கொல்லுவதற்காக வேட்டை ஆடுகையும், ஆராமங்களிலே விளையாடும் - அந்தக் களைப்பு நீங்கப் பூந்தோட்டங்களிலே தன் பட்டத்துத்தேவி முதலாயினுர்களோடு விளையாடுகையும் ஆகிற, ராஜநீதி - அரசர்களுக்கு உரிய முறையை,

[1]ஆதும்சோராமல் செங்கோல்நடாவுகிற-[2]"பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும், அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான், செங்கோலுடைய திருவரங்கச் செல்வனுர்" என்றும், [3] "அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும், இருளார் வினை கெடச் செங்கோல் நடாவுதிர்" என்றும் சொல்லுகிறபடியே உபய விபூதியிலும் ஒருசிறிதிடமும் குறையாதபடி தன்னுடைய திவ்விய ஆணையை நடத்துமவனுய், பார்அளந்த என்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு -[4] "பார்அளந்த பேரரசே! எம்விசும்பு அரசே! எம்மை நீத்து வஞ்சித்த ஓர் அரசே!" என்று சொல்லப்பட்ட எளிமை, முதன்மை, காதல் என்னும் இவற்றுலே வந்த மூன்று முடிக்குஉரியவான் இளவரசான சர்வேச்வரனுக்கு,

விண்மீது என்கிற ஐந்திலும் காணலாம் - [5] "விண்மீது இருப்பாய்" என்று, [6] "நினைவிற்கு எட்டாத சொரூபத்தையுடைய, உலகங்

---

1. இவ்வாக்கியத்தால் இறைவன் சக்கரவர்த்தி என்று நிரூபிக்கப் படுகின்றது.

2. நாய்ச்சியார் திரு. 11: 3. 3. திருவிருத்தம், 33.

4. திருவிருத்தம், 80. 'பார் அளந்த பேரரசே' என்றதனுல் சௌலப்யத்தையும், 'விசும்பரசே' என்றதனுல் பரத்துவத்தையும், 'வஞ்சித்த ஓர் அரசே' என்றதனுல் காதலையும் குறித்தபடி.

5. விண்மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்! கடற்சேர்ப்பாய்!
மண்மீதுழல்வாய்! இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்!
எண்மீதியன்ற புறவண்டத்தாய்! எனதாவி
உண்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ.

என்பது, திருவாய். 6. 9: 5.

6. வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி:
ஆஸ்தேவிஷ்ணு: அசிந்த்யாத்மா பக்தைர்பாகவதைஸ்ஸஹ.

என்பது, பிரமாணம்.

கட்கு எல்லாம் தலைவரான விஷ்ணுவானவர் நித்தியமுக்தர்களோடும் பிராட்டியோடும்கூட வைகுண்டம்என்கிற மேலான உலகத்திலே எழுந்தருளியிருக்கிறார்" என்று சொல்லுகிறபடியே [1] "பகல்கண்டேன்" என்கிற ஒருபகலான பரமபதத்திலே [2] "ஒண்டொடியாள் திருமகளும்" தானுமாய் நித்தியரும் முக்தரும் சேவிக்க [3] ஓலக்கம் இருக்கையும், [4] "இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்" என்று, [5] "எந்தப் பரம் பொருளை இந்த உயிர் அறியவில்லையோ" என்று சொல்லுகிறபடியே தான்பரந்து உறைகின்ற பொருள்களுக்குத் தெரியாதபடி அந்தர்யாமியாய் [6] உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் அறிகையும், [7] "கடல்சேர்ப்பாய்" என்று, பாற்கடல் யோகநித்திரை செய்து ஆன்மாக்களைக் காப்பாற்றும் வழியைச் சிந்திக்கையும், பின்னர் [8] "மண்மீது உழல்வாய்" என்று பாதுகாப்பதற்காக வந்து அவதரித்து [9] "களிறும் புள்ளும் உடன்மடிய வேட்டையாடி வருவான்" என்கிறபடியே அடியார்களுக்கு விரோதிகளான துஷ்டர்களைக்கொல்லுதலாகிற வேட்டையாடுகையும், [10] "மலைமேல் நிற்பாய்" என்று, விரோதிகளைக்கொன்ற களைப்புநீங்க எல்லையில்லாத இனிமையையுடையனவான [11] "ஆராமம் சூழ்ந்த கோயில் திருமலை முதலான திவ்யதேசங்களிலே இன்பம் தலைப்பட வசிக்கையும் ஆகிற இவை ஐந்திலும் காணலாம் என்கை.

இதனால் பரத்துவம் முதலான நிலைகளில் இடவேற்றுமை ஒழியப் பொருள்வேற்றுமை இல்லாமை காட்டப்பட்டது. (8)

---

1. *இரண்டாந் திருவந்.* 81. 2. *திருவாய்.* 4. 9: 10.

3. *'ஓலக்கமிருக்கையும்' என்னுமிதனால் பரமபதத்தில் அரசிருத்தலைக் கூறியபடி.*

4. *'இவற்றுள்' என்றது முதல் 'அறிகையும்' என்றது முடிய, கறுப்புடுத்து நகரசோதனை செய்தலைக் கூறியபடி. இது அந்தர்யாமித்வம்.*

5. *" யம்ஆத்மாநவேத "*
என்பது, உபநிடதம்.

6. *திருமாலை,* 34.

7. *'கடல் சேர்ப்பாய்' என்றது முதல் 'சிந்திக்கையும்' என்றது முடிய, மந்திராலோசனை செய்தலைக் கூறியபடி. இது வியூகம்.*

8. *'மண்மீதுழல்வாய்' என்றது முதல் வேட்டையாடுகையும்' என்றது முடிய, வேட்டையாடுதலைக் கூறியபடி. இது விபவம்-அவதாரம்.*

9. *நாய்ச்சியார் திருமொழி,* 14: 9.

10. *'மலைமேல் நிற்பாய்' என்றது முதல் 'வசிக்கையும்' என்றது முடிய, பூம்பொழில்களில் இன்பநுகர்தல். இது, அர்ச்சாவதாரம்.*

11. *சிறியதிருமடல்,* 71.

158

[1] தமர்உகந்த அடியோமுக்கே என்னும் பின்னானார் வணங்கும் இடத்திலே எல்லாம் பூர்ணம்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—ஆனால், ஐந்துநிலைகளிலும் ஒத்திருக்கை அன்றிக்கே அர்ச்சாவதாரத்திலே இவர் மண்டியிருப்பான் என்? என்னும் வினாவிற்கு விடையாக, அர்ச்சாவதாரத்தின் குணநிறைவினை அருளிச் செய்கிறார் இச்சூத்திரத்தால்.

அதாவது, தமர்உகந்த - [2] "தமர்உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே, தமர்உகந்தது எப்பேர் மற்றப்பேர்" என்கிறபடியே அடியார்கள் விரும்பிய பொருள்களையே தனக்குத் திருமேனியாகவும், அவர்கள் உகந்த திருப்பெயர்களே தனக்குத் திருப்பெயராகவும் கொண்டிருக்கும் என்றும், அடியோமுக்கே என்னும் - [3] "அடியேமுக்கே எம்பெருமான் அல்லீரோ நீர் இந்தளூரீரே" என்று தேசத்தாலும் காலத்தாலும் உறுப்புக்களாலும் சேய்மையனவாதலின், பரத்துவம் முதலான நான்கு நிலைகளில் அணுகுவதற்கு ஆள் அன்றிக்கே வேறு கதி இல்லாதவர்களாக இருக்கின்ற எங்களுக்கு ருசி பிறந்த போதே நினைத்தவகைகள் எல்லாம் அநுபவிப்பிக்கைக்காக அன்றோ திருவிந்தளூரிலே வந்து நிற்கிறது என்றும் சொல்லப்பட்ட, பின்னானார் வணங்குமிடத்திலே - [4] "பின்னானார் வணங்கும்சோதி திருமூழிக்களத்தானாய்" என்கிறபடியே அவதாரங்களுக்குப் பிற்பாடர் ஆனவர்களுக்கு அநுபவிக்கத்தகுந்த அர்ச்சாவதாரத்திலே, எல்லாம் பூர்ணம் - [5] "காக்கும்பொருளான இறைவன்மாட்டு எல்லாம்கூடி நிறைந்துளது" என்கையாலே பரத்துவம் முதலான நிலைகளில் அநுபவிக்கத் தக்கனவான குணங்கள் எல்லாம் நிறைந்திருக்கும் என்கை.

ஆக, இப்படி அடியார்களுக்கு வசப்பட்டிருக்கின்ற சொரூபத்தையும் இருத்தல் முதலிய நிலைகளையுமுடையதாய் "அடியோமுக்கே"

---

1. 'தமருகந்த' என்பதும், 'அடியோமுக்கே' என்பதும், 'பின்னானார் வணங்கும்' என்பதும் ஒவ்வொரு பாசுரப்பகுதிகள். இம்மூன்று பகுதிகளும் அர்ச்சாவதாரத்தைக் குறிப்பன.

2. முதல் திருவந். 44. 3. பெரிய திருமொழி, 4. 9: 5.

4. திருநெடுந்தாண்டகம், 10.

5. "ஸர்வம் பூர்ணம் ஸஹோம்"

என்பது, உபநிடதம்.

என்னும்படி கறைவிழுந்த இடமான அர்ச்சாவதாரத்திலே [1] முற்பட்ட நிலைகளில் உள்ள குணங்களையும் காணலாம் ஆகையாலே [2] "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை தேவபிரான் அறியும்" என்னும்படி மண்டியிருப்பர் என்று கருத்து. (9)

159

[3] வன் பெரு வானகம் முதல்உய்ய இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி, வடிவுடை கடலிடம் கட்கிலீ என்னுமவற்றில், இவள் திறத்து என்கொலோ என்பிக்கிற வியூக சௌகார்த்தப் பிரதானம்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—இப்படி அர்ச்சாவதாரத்திலே எல்லாக் குணங்களும் நிறைந்திருக்குமாகில், எல்லாத் திருப்பதிகளிலும் எல்லாக் குணங்களும் ஒருசேரப் பிரகாசிக்குமோ என்னும் வினாவிற்கு விடையாக, பரத்துவம் முதலிய நிலைகளில் ஒவ்வொரு நிலைக்கே உரியதாயும், ஐவகை நிலைகட்கும் பொதுவாயும் இருக்கும் குணங்களில், ஒவ்வொரு குணம் ஒவ்வொரு திருப்பதியில் முதன்மையாக விளங்கும்படியை [4] இவ்வாழ்வார் மங்களாசாசனம் செய்த திருப்பதிகள்தோறும் காட்டுகிருர் மேல்: அவற்றுள், முதன் முதலிலே, பரத்துவம் முதலான ஐவகை நிலைகளில் ஒவ்வொரு நிலைக்கே உரியதான ஒவ்வொரு குணம் முதன்மையாகப் பிரகாசிக்கிற திருப்பதிகளை அருளிச்செய்யத்

---

1. 'முற்பட்ட நிலைகள்' என்றது, பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம் என்னுமவற்றை.

2. திருவாய். 7. 10: 10.

3. இச்சூத்திரத்தை, திருவாளன் திருப்பதி, வியூக ஸௌகார்த்தப் பிரதானம் என முடிக்க. 'வன்பெருவானகம் முதல் உய்ய இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற' என்பது, திருப்பதிக்கு அடைமொழி. திருப்பதி - திருவரங்கம் பெரிய கோயில். வியூகம் - திருப்பாற்கடலில் அறிதுயில்கொள்ளும் நிலை. ஸௌகார்த்தம் - எப்பொழுதும் உயிர்களின் நன்மையையே சிந்தித்துக்கொண்டிருத்தல். திருவரங்கம் பெரிய கோயிலில் வியூகத்தின் குணமான ஸௌகார்த்தம் முதன்மைபெற்று விளங்கும் என்கிருர் இச்சூத்திரத்தால்.

4. திருவாய்மொழியில் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருப்பதிகள் முப்பது.

திருவுள்ளம்பற்றி, எல்லாத் திவ்வியதேசங்களிலும் முதன்மை பெற்ற தான திருவரங்கம் பெரியகோயிலிலே பிரகாசிக்கிற குணத்தை அருளிச்செய்கிருர் இச்சூத்திரத்தால்.

அதாவது, வன்பெருவானகம் முதல் உய்ய - [1] "வன்பெரு வான கம்உய்ய அமரர்உய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசர்உய்ய" என்கிறபடியே முதலிலே [2]பிரமலோகத்தில் எழுந்தருளிப் பின்பு பூலோகத்திலே எழுந்தருளின கட்டளையிலே, நைமித்திக பிரளயத் துக்கு இளையாத பிரமலோகம் முதலாக இவ்வருகு உண்டான மேல் உலகங்களும் அங்குள்ள பிரமன் முதலான தேவர்களும், பூமியும் இங் குள்ள மனிதர்களும் உய்யும்படியாக, இனிதாகத் திருக்கண்கள் வளர் கின்ற திருவாளன் திருப்பதி - [3] "திருவாளன் இனிதாகத் திருக் கண்கள் வளர்கின்ற திருவரங்கம்" என்றும், [4] "திருவாளன் திருப் பதி" என்றும் சொல்லுகிறபடியே திருவுள்ளம் உகந்து திருக்கண் வளர்ந்தருளுகின்ற திருவாளனுடைய திருப்பதியான கோயிலானது,

[5] வடிவுடை கடலிடம் கட்கிலீ என்னுமவற்றில் - "வடிவுடை வானோர் தலைவனே என்னும்" என்றும், "கடலிடம்கொண்ட கடல்

---

1. பெருமாள் திருமொழி, 1: 10.

2. திருவரங்கத்து இறைவன், முதலில் பிரமலோகத்தில் பிரம னுடைய திருவாராதனத்திலிருந்து, பின்னர் திருவயோத்யையைக்கு எழுந்தருளி, அங்குச் சூரியவம்சத்து அரசர்களால் ஆராதனம் செய்யப் பட்டுவந்து, பின், ஸ்ரீராமபிரான் விபீஷணுழ்வானுக்கு அளிக்க, அவன் இலங்கைக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகும் வழியில், திருவரங் கத்திலேயே தங்கிவிட்டார் என்னும் சரிதவரலாற்றினை இங்கு நினைத்தல் தகும்.

பிணியரங்க வினையகலப் பெருங்காலம் தவம்பேணி,
மணியரங்க நெடுமுடியாய்! மலரயனை வழிபட்டுப்
பணியரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடரை யாம்காண
அணியரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்.
(கம்பரா. குலமுறைகிளத்துப் படலம்.)

"கொடியாடு மணிமாட அயோத்தி மூதூர்
குடிதுறந்து திருவரங்கம் கோயில்கொண்ட
நெடியோனே" *(திருவரங்கக் கலம்பகம்)*

என்னும் திருப்பாசுரங்கள் இங்குக் குறிக்கொள்ளத் தகும்.

3. பெரியாழ்வார் திருமொழி, 4. 9: 10.

4. பெரியாழ்வார் திருமொழி, 4. 8: 10.

5. திருவரங்கம் திருப்பதி விஷயமான "கங்குலும் பகலும்" என்ற திருப்பதிகத்தில், வடிவுடைவானோர் தலைவனே" என்கையாலே பரத்துவ அநுபவமும், "கடலிடம்கொண்ட கடல்வண்ணா" என்கையாலே

வண்ண" என்றும், "கட்கிலீ உன்னைக்காணுமாறு அருளாய்" என்றும், [1] "காகுத்தா" என்றும் சொல்லும்படி தோன்றும் பரத்துவம் முதலான ஐவகைநிலைகளில் வைத்துக்கொண்டு, இவள் திறத்து என்கொலோ என்பிக்கிற - "இவள் திறத்து என்சிந்தித்தாய்" என்றும், "என்கொலோ முடிகின்றது இவட்கே" என்றும் இவள் இடையாட்டத்தில் தேவரீர் சிந்தித்தது என்? இவள் காரியம் என்னய் முடியக்கடவது? என்று சொல்லும்படிபண்ணுகிற, வியூக சௌகார்த்தம் பிரதாநம் - [2] பாற்கடல் யோகநித்திரை சிந்தைசெய்யும் வியூகத்தின் குணமான சௌகார்த்தத்தை முதன்மையாக உடைத்தாயிருக்கும் என்கை.

திருவரங்கம்பெரியகோயிலிலே, வியூகநிலையிலே உள்ள சௌகார்த்த குணம் முதன்மையாகப் பிரகாசிக்கும் என்றபடி. (10)

160

[3] மண்ணோர் விண்ணோர் வைப்பில், போகின்ற ஏழுலகுக்குஉயிர் பாசம்வைத்த நிகர்இல் வாத்சல்யம் உஜ்வலம்.

என்பது, சூத்திரம்.

வியூக அநுபவமும், "கட்கிலீ உன்னைக் காணுமாறு அருளாய்" என்கையாலே அந்தர்யாம்ய அநுபவமும், "காகுத்தா கண்ணனே" என்கையாலே அவதார அநுபவமும் பெறப்படுகின்றன. இங்ஙனம் ஐவகை நிலைகளையும் அநுபவித்தாலும், வியூக அநுபவமே மிக்குத் தோன்றுகின்றது என்கிறார். அதற்குக் காரணம், அங்கு யோக நித்திரை சிந்தை செய்தல் போன்று, இங்கும் யோக நித்திரை சிந்தை செய்தலேயாம். இதனையே அருளிச் செய்கிறார் 'வடிவுடை' என்று தொடங்கி.

1. *வியாக்கியானத்தில், 'காகுத்தா' என்று வருவதனாலே, மூல பாடமும் 'வடிவுடை கடலிடம் கட்கிலீ காகுத்தா என்னுமவற்றில்' என்று இருந்திருக்கும் என்று தோன்றுகிறது.*

2. திருவாய். 2. 6: 5.

3. *வைப்பில் வாத்சல்யம் உஜ்வலம் என முடிக்க. வைப்பு - திருமலை. வாத்சல்யம் - அன்று ஈன்ற கன்றின் உடம்பிலுள்ள வழுவை ஆதரித்து உண்ணும் பசுவைப்போன்று, அடியார்களுடைய தோஷங்களை இனியனவாகக்கொள்ளும் குணம். உஜ்வலம்-மிக்குப் பொலிதல். 'போகின்ற ஏழுலகுக்குயிர்' என்றது, எல்லார்க்கும் உயிராக இருக்கின்ற அந்தர்யாமியைத் தெரிவித்தபடி. அந்த அந்தர்யாமியின் குணம் வாத்சல்யம். 'பாசம் வைத்த, நிகரில்' என்பவை, இந்த வாத்சல்யத்தை விளக்கவந்த சொற்கள்.*

வியாக்:—கோயிலுக்குப் பின் சொல்லப்படுவதான திருமலையில் விளங்குகிற குணத்தை அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

அதாவது, மண்ணோர் விண்ணோர் வைப்பில் - [1] "கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" என்றும், [2] "தண்ணருவிவேங் கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" என்றும் இருவகை யான உலகங்களில் உள்ளார்க்கும் சேமித்துவைத்த நிதிபோலே அடையத்தக்க பேறாக இருக்கின்ற திருமலையிலே, போகின்ற - [3] "போகின்ற காலங்கள் போயகாலங்கள் போகுகாலங்கள் தாய்தந்தை உயிர் ஆகின்றாய்" என்றும், ஏழுலகுக்கு உயிர் - [4] "கண்ணாய் ஏழுல குக்கு உயிராய எங்கார்வண்ணனை" என்றும், சொல்லுகிறபடியே எல் லாக் காலங்களிலும் எல்லா உயிர்களுக்கும் எல்லாவித உறவுமாய்க் கொண்டு எல்லார்க்கும் உயிராக இருக்கின்ற அந்தர்யாமியினுடைய குணமாக இருப்பதாய், பாசம்வைத்த நிகரில் வாத்சல்யம் - [5] "என் கண் பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதி" [6] "நிகரில் புகழாய்" என்கிற படியே மிகவும் தண்ணியனாய் இருக்கின்ற என்பக்கலிலே அன்பினை வைத்தான் என்றும், ஒப்பிலாப்புகழை உடையவனே என்றும் சொல் லப்பட்ட வாத்சல்யம், உஜ்வலம் - "பரஞ்சுடர்ச்சோதி" என்று வடி விலே தொடைகொள்ளலாம்படி பிரகாசமாய் இருக்கும் என்கை.

[7] "பாசம் வைத்த-நிகரில் வாத்சல்யம்" என்கையாலே "ஒழிவில் காலமெல்லாம்" என்ற திருவாய்மொழியினையும், "உலகம் உண்ட பெருவாயா" என்ற திருவாய்மொழியையும் சேர்த்துப் பிடித்து அரு ளிச்செய்தமை தோற்றுகிறது.

கோயிலுக்குப் பின்னர், திருமலையைச் சொல்லுகை தேட்ட மாகில், திருவேங்கடமலை அழகர்மலை என்னும் இரண்டு மலைகளும் ஒவ்வாதோ? தெற்குத் திருமலையான அழகர்மலை விஷயமான "கிளர்

---

1. *திருவாய்.* 1. 8: 3.
2. *நான்முகன்திருவந்.* 45.
3. *திருவாய்.* 2. 6: 10.
4. *பெரியதிருமொழி,* 1. 9: 10.
5. *திருவாய்.* 3. 3: 4.
6. *திருவாய்.* 6. 10: 10.

ஈண்டு, 'நிகரில் புகழ்' என்பது வாத்சல்ய குணத்தைக் குறிக் கின்றது.

7. *'பாசம் வைத்த' என்ற பாசுரப்பகுதி, "ஒழிவில் காலமெல் லாம்" என்ற திருப்பதிகத்திலும், 'நிகரில் புகழாய்' என்ற பகுதி "உலகமுண்ட பெருவாயா" என்ற திருப்பதிகத்திலும் இருப்பதனால் இங்ஙனம் அருளிச்செய்கிறார்.*

ஒளி இளமை" என்ற திருவாய்மொழி இரண்டாம்பத்தில் இருந்து கொண்டிருக்க, மூன்றும்பத்திலே உள்ள "ஒழிவில் காலமெல்லாம்" என்ற திருவாய்மொழியிற் சொன்ன திருவேங்கடத்தை முன்னர் அருளிச்செய்வானென்? என்னில், பரத்துவம் முதலான நிலைகள் ஒவ்வொன்றிற்கே உரியதான குணங்கள் விளங்கிக்கொண்டிருக்கின்ற திவ்யதேசங்களை அருளிச்செய்கிற இடம் ஆகையாலே, அழகர் மலையில் பிரகாசிக்கின்ற குணம் இதற்குச் சேர்த்தி இல்லாமை கொண்டு, "கிளரொளி இளமை" என்ற திருவாய்மொழியை [1]"செஞ்சொற்கவிகாள்" என்ற திருவாய்மொழியோடு சேர்த்து அருளிச்செய்வதாக விட்டுவைத்து, திருவேங்கடத்தை முதலாக அருளிச்செய்கிறுரித்தனே. (11)

161

[2]உபயப் பிரதாந பிரணவமான உறைகோயிலில்
எத்தேவும் என்னும் பரேசத்வம் பொலியும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— "ஒழிவில் காலம்" என்ற திருவாய்மொழிக்குப் பின்பு திவ்விய தேசம் சம்பந்தமான திருவாய்மொழி "ஒன்றும் தேவும்" என்னும் திருவாய்மொழியாகையாலே அத்திருவாய்மொழியில் பேசப்படுகிற [3]திருநகரியில் பிரகாசிக்கின்ற குணத்தை அருளிச்செய்கிறுர் இச்சூத்திரத்தால்.

அதாவது, உபயப் பிரதாந பிரணவமான- [4]"ஓம் என்று சொல்லி, ஆத்மாவினைத் தியானம் செய்யக் கடவன்" என்று சொல்லுகிற

---

1. *'செஞ்சொற்கவிகாள்' என்ற திருப்பதிகம், திருமாலிருஞ்சோலைமலையைப் பற்றியது.*

2. *'உபயப்பிரதாந பிரணவம்' என்றது ஜீவாத்மாவும் பரமாத்மாவுமான இருவருடைய முதன்மையையும் பேசுகிற பிரணவம் என்றபடி. இதன் விரிவை வியாக்கியானத்திற் காண்க. 'பிரணவமான உறைகோயில்' என்றது, நம்மாழ்வாருடையவும் பொலிந்து நின்ற பிரானுடையவும் முதன்மை தோற்ற நின்ற கோயில் என்றபடி. இதனுல் ஆழ்வார் திருநகரியைக் குறித்தபடி. "திருக்குருகூரதனுள் பரன்", "திருக்குருகூரதனுள் ஈசன்" என்னும் இரண்டு திருப்பாசுரப் பகுதிகளையும் திருவுள்ளம் பற்றிப் 'பரேசத்வம்' என்கிருர். பர ஈசத்வம் - பரேசத்வம். இறைமைத்தன்மை என்பது பொருள். 'பொலிந்து நின்ற பிரான்' என்ற அவ்விறைவனது திருநாமத்திற்குச் சேரப் 'பொலியும்' என்கிருர்.*

3. *திருநகரி - திருக்குருகூர்.*

4. *"ஓம் இதி ஆத்மாநம் யுஞ்ஜீத" என்பது பிரமாணம்.*

படியே சொல்லாற்றலின் முதன்மையால் உயிரைக் காட்டுகின்ற சொல்லாயும், [1] "ஓம் என்பது பகவானாகிய விஷ்ணு" என்று சொல்லு கிறபடியே பொருள் ஆற்றலின் முதன்மையால் இறைவனைக் காட்டு கின்ற சொல்லாயும் இருந்துகொண்டு, சீவாத்மா பரமாத்மா என்னும் இருவருடைய முதன்மையையும் காட்டுகின்ற ஓம் என்னும் பிரணவம் போலே, ஆழ்வாருடையவும் பொலிந்து நின்ற பிரானுடையவுமான ஆணை இரு புரிந்து நடக்கையாலே இருவருடைய முதன்மையும் தோற்றும்படி இருப்பதாய், உறைகோயில் - [2] "அவன்மேவி உறை கோயில்" என்கிறபடியே இவ் வுலகமக்கள் இழவினை நினைந்து பரம பதத்தில் உள்வெதுப்போடே இருக்குமாறுபோல் அன்றிக்கே அவர் களுக்கு அணித்தாக வந்து நிற்கப் பெறுகையாலே உள்வெதுப்பு நீங்கி வசிக்கின்ற தலமான திருநகரியில், எத்தேவும் என்னும் - [3] "எத்தே வும் எவ்வுலகங்களும் மற்றும் தன்பால், மறுவில் மூர்த்தியோடு ஒத்து இத்தனையும் நின்றவண்ணம் நிற்கவே, திருக்குருகூரதனுள், மாண் உருவாகிய நீள்குடக்கூத்தன்" என்கிறபடியே தன்னையொழிந்த எல்லாப் பொருள்களும் தனக்கே உரியதான விக்கிரகத்தைப் போன்று தனக்குப் பிரகாரமாம்படி இருக்கிற இறைமைத் தன்மை யோடுகூடத் திருக்குருகூரிலே எளியனாய் வந்துநின்றான் என்று சொல்லப்பட்ட, பராசத்வம் - [4] "திருக்குருகூர் அதனுள், பரன்" என் றும், [5] "திருக்குருகூர் அதனுள், ஈசன்" என்றும் வருகின்றவாறே எளியனான நிலையிலே பிரகாசிக்கின்ற பரத்துவலக்ஷணமான ஈச்வரத் தன்மை, பொலியும் - [6] "பொலிந்துநின்ற பிரான்" என்கையாலே விளங்காநிற்கும் என்கை. (12)

162

[7] வைஷ்ணவ வாமநத்தில் நிறைந்த நீலமேனி யின் ருசி ஜநக விபவ லாவண்யம் பூர்ணம்.

என்பது, சூத்திரம்.

---

1. *"ஓங்காரோ பகவாந் விஷ்ணு:"* *என்பது, பிரமாணம்.*
2. *திருவாய்.* 4. 10: 2.
3. *திருவாய்.* 4. 10: 10.
4. *திருவாய்.* 4. 10: 3.
5. *திருவாய்.* 4. 10: 4.
6. *திருவாய்.* 4. 10: 5.
7. *வைஷ்ணவ வாமநம் - திருக்குறுங்குடி. ருசி ஜனக விபவ லாவண்யம் - ருசியை உண்டாக்குகின்ற இராமகிருஷ்ணாதி அவதாரங் களின் அழகு.*

வியாக் :— இதற்குப்பின்பு திவ்விய தேச சம்பந்தமான திருவாய் மொழி "எங்ஙனேயோ" என்பதாகையாலே அத்திருவாய்மொழியிற் கூறிய திருக்குறுங்குடியில் பிரகாசிக்கின்ற குணத்தை அருளிச் செய்கிறார் இச்சூத்திரத்தால்.

வைஷ்ணவ வாமநத்தில் - திருக்குறுங்குடியில் என்னுமல் 'வைஷ்ணவ வாமநத்தில்' என்றது, கருத்துடையடை. அதாவது, வாமன அவதாரத்தில் தன்னுடைமை பெறுகைக்கு இரப்பாளனானாற் போலே, இரப்பாளனாய் நின்று [1] ஸ்ரீ பாஷ்யகாரர் பக்கலிலே வேதாந் தார்த்தம் கேட்டுச் சிஷ்யனாய் 'நாமும் நம் இராமாநுசனையுடையோம்' என்கையாலே ஸ்ரீ வைஷ்ணவ நம்பி என்று திருப்பெயராய், வாமன அவதார அம்சமாகப் புராணத்தாலே கூறப்பட்டவராயிருக்கிற [2] நம்பியுடைய திருப்பதி என்பது அறிவித்தபடி. அன்றிக்கே, [3] "அறியக் கற்று வல்லார் வைட்ணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே" என்று இத் திவ்யதேச விஷயமான திருவாய்மொழியைக் கற்றவர்கள் வைஷ்ணவர் ஆவர் என்கையாலே, வைஷ்ணவர்களுடையதாய் வாமநக்ஷேத்திரமாய் இருக்கிற தேசம் ஆகையாலே என்னவுமாம். வாமந அவதாரத்தை ஈண்டுக் கூறியதற்குப் பயன், 'விபவ லாவண்யம் பூர்ணம்' என்றதற்கு உறுப்பாக விபவத்தின் சம்பந்தத்தை உணர்த்துகையும், [4] 'குறியவன்குடி - குறுங்குடி' என்னும் பொருளைத் தெரிவிக்கையுமாம்.

ஆக, இப்படியிருந்துள்ள திருக்குறுங்குடியுள், நிறைந்த நீல மேனியின் - [5] "நிறைந்த சோதிவெள்ளம் சூழ்ந்த நீண்டபொன்மேனியொடும், நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான்" என்றும், [6] "நீல மேனியும் நான்கு தோளும் என்நெஞ்சம் நிறைந்தனவே" என்றும் சொல்லுகிறபடியே இவர்திருவுள்ளத்திலே வேறு ஒன்றற்கு இடம் இல்லாதபடி பிரகாசிக்கின்ற காளமேகம் போன்ற நிறம் அமைந்த விக்கிரகத்தினுடைய, ருசி ஜநகம் - [7] "செல்கின்றது என்நெஞ்சம்" என்னும்படி மேன்மேலும் அநுபவ ருசியை விளைக்குமதாய், விபவ

---

1. *இங்குக் கூறிய வரலாற்றினை, குருபரம்பரையில் எம்பெருமானார் வைபவத்தில் காண்க.*

2. *'நம்பி' என்றது, அர்ச்சகரத்தில் எழுந்தருளியிருக்கிற இறைவன் திருப்பெயர்.*

3. *திருவாய்.* 5. 5: 11.

4. *குறியவனான வாமன பகவானுடைய குடி - குறுங்குடி என்றபடி.*

5. *திருவாய்.* 5. 5: 7. 6. *திருவாய்.* 5. 5: 6.

7. *திருவாய்.* 5. 5; 1,

லாவண்யம் - [1] "உருவத்தையுடையவன் அழகுள்ளவன் ஒளியையுடையவன்" என்றும், [2] "ஸ்ரீ ராமபிரானுடைய உருவத்தின் அமைப்பையும் அழகையும் மிருதுத்தன்மையையும் பார்த்தார்கள்" என்றும் அவதாரத்தில் பிரகாசிக்குமதாகச் சொன்ன சமுதாய சோபையான அழகு, பூர்ணம் - [3] "நிறைந்த சோதிவெள்ளம் சூழ்ந்த" என்கையாலே நிறைந்திருக்கும் என்கை. (13)

163

[4] *ருசி விவசர்க்குப் பாதமே சரண் ஆக்கும்*
ஔதார்யம், வானமாமலையிலே கொழுந்துவிடும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—இப்படிப் பரத்துவம் முதலிய நிலைகளுக்கே உரியனவான ஒரோகுணங்கள் முதன்மைபெற்று விளங்குகின்ற திவ்விய தேசங்களை அருளிச்செய்தபின்னர் மற்றும் உண்டான குணங்களில் ஒரொன்று முதன்மைபெற்றுப் பிரகாசிக்கின்ற திவ்வியதேசங்களைச் சிரீவரமங்கை முதலாகத் திருப்பேர் என்னும் திவ்வியதேசம் எல்லையாகத் திருவாய்மொழி அடைவிலே அருளிச்செய்கிறார் மேல் :

அதாவது, ருசி விவசர்க்கு - மேலேகூறிய லாவண்யத்தாலே (அழகு) ஒருவராலும் தடுக்க ஒண்ணாதபடி பிறந்த ருசியாலே பரவசராய் வேறுகதி இல்லாதவர்களுக்கு, பாதமே சரண் ஆக்கும் - [5] "ஆறு

---

1. *"ரூபவாந் ஸுபக: ஸ்ரீமாந்"*
என்பது, ஸ்ரீராமா.அ. 34: 30.

2. *ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் ஸுவேஷதாம்*
தத்ருஶு: விஸ்மிதாகாரா ராமஸ்ய வநவாஸிந:
என்பது: ஸ்ரீராமா. ஆரண். 1: 13.

3. *திருவாய்.* 5. 5: 7. *"நிறைந்த சோதி" என்றதனைத் திருவுள்ளம்பற்றிப் 'பூர்ணம்' என்கிறார் என்றபடி.*

4. *ருசிவிவசர் - மேற்கூறிய அழகின் ருசியினாலே பரவசப்பட்டவர்கள். அதாவது, தன்வசம் இழந்தவர்கள் என்றபடி. ஔதார்யம் - வள்ளல் தன்மை. திருவாய்மொழியில் வருகின்ற "கருளப்புட்கொடி சக்கரப்படை வானநாட! எம் கார்முகில் வண்ண!" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'ஔதார்யம்' என்கிறார். "என்னெஞ்சிடம் கொண்ட வானவர் கொழுந்தே!" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றிக் 'கொழுந்து விடும்' என்கிறார்.*

5. *திருவாய்.* 5. 7: 10.

எனக்கு நின்பாதமே சரணுகத் தந்தொழிந்தாய்'' என்னும்படி திரு வடிகளையே உபாயமாகக் கொடுக்கும், ஔதார்யம் - [1] ''கார்முகில் வண்ணன்'' என்னும் ஔதார்யகுணம், வானமாமலையிலே கொழுந்து விடும் - [2] ''சிரீவரமங்கலத்தவர் கைதொழ உறை, வானமாமலை'' என்கிறபடியே சிரீவரமங்கையில் எழுந்தருளியிருக்கின்ற வானமா மலைபக்கலிலே, [3] ''வந்தருளி என்நெஞ்சு இடம் கொண்ட வானவர் கொழுந்தே'' என்கிறபடியே தானேவந்து இடம் கொண்டு தன்னைக் கொடுக்கும்படி கொழுந்துவிட்டு வளரும் என்கை. (14)

164

[4] *களைகண் அற்றுரை உருக்கும் மாதுர்யம், குடமூக்கிலே பிரவஹிக்கும்.*

என்பது, சூத்திரம்.

வியாக் :—களைகண் அற்றுரை - [5] ''களைவாய்துன்பம்; களையா தொழிவாய்; களைகண் மற்றிலேன்.'' என்கிறபடியே காப்பாற்றத் தக்க தெய்வம் வேறொன்றையுடையோம் அல்லோம் என்னும் திடமான எண்ணமுடையவர்களை, உருக்கும் மாதுர்யம் - [6] ''நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே'' என்கிறபடியே உருக் குலையச்செய் கின்ற ஆராவமுதான இனிமை, குடமூக்கிலே பிரவஹிக்கும் - [7] ''குடமூக்கு'' என்ற கும்பகோணத்திலே மேன்மேலும் ஆராமல் உண்ணும் படி பெருகாநிற்கும் என்கை. (15)

---

1. *திருவாய்.* 5. 7. 3. 2. *திருவாய்.* 5. 7: 6.

சிரீவரமங்கல நகர் என்று அத்திவ்யதேசத்திற்குப் பெயர். வானமாமலை என்பது, அங்கு எழுந்தருளியிருக்கின்ற இறைவன் திருப்பெயர்.

3. *திருவாய்.* 5. 7: 7.

4. *''குடமூக்குக் கோயிலாக்கொண்டு''* (இரண்டாந் திருவந். 97) *என்ற பூதத்தாழ்வார் திருப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றிக் 'குடமூக்கு' என்கிறார். குடமூக்கு - கும்பகோணம். 'ஆராவமுதன்' என்பது அப் பெருமான் திருப்பெயராதலின் 'மாதுரியம்' என்கிறார். மாதுரியம் - இனிமை. ஆராவமுது ஆகையாலே 'பிரவஹிக்கும்' என்கிறார். பிர வஹித்தல் - பெருக்கு எடுத்தல்.*

5. *திருவாய்.* 5. 8: 8. 6. *திருவாய்.* 5. 8: 1.

7. இரண்டாந் திருவந். 97.

165

[1] மெலிவிலும் சேமம் கொள்விக்கும் கிருபை,
தென்னகரிலே நித்யம்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—மெலிவிலும் - மேலேகூறிய எல்லையில்லாத இனிமையையுடைய ஆராவமுதை விரைவிலே கிட்டி அநுபவிக்கப் பெருமையாலே [2] "வைகலும் வினையேன் மெலிய" என்கிறபடியே நாள்தோறும் மெலியுமளவிலும், சேமம் கொள்விக்கும் - [3] "அடிமேல், சேமம்கொள் தென்குருகூர்ச் சடகோபன்" என்கிறபடியே காப்பாற்றுமவன் அவனே என்று துணிவுகொண்டிருக்கும்படி செய்யும், கிருபை - [4] "பெருமானது தொல்லருளே" என்னும் அருளானது, தென்னகரிலே நித்யம் - [5] "திருவல்லவாழ், சேமம்கொள் தென்னகரி"லே நித்தியமாக இருக்கும்.

தொன்மை பழமை ஆகையாலே, 'தொல்' என்பது ஈண்டு என்றும் உள்ள தன்மையைக் காட்டுகிறது. (16)

166

[6] வியவஸாயஜ்ஞர் ரக்ஷணஸ்தைர்யம், பம்போத்தர தேசஸ்தம்.

என்பது, சூத்திரம்.

---

1. "திருவல்லவாழ் சேமம்கொள்தென்னகர்மேல்" என்ற திருப்பாசுரத்தை அடியொற்றித் 'தென்னகர்' என்கிறார். தென்னகர் - திருவல்லவாழ் என்னும் திவ்யதேசம். "சுழலில்மலி சக்கரப்பெருமானது தொல்லருளே" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'நித்யம்' என்கிறார். தொல் - பழமை. அதாவது என்றும் உள்ள தன்மை. சேமம்-காவல்.

2. திருவாய். 5. 9: 1.
3. திருவாய். 5. 9: 11.
4. திருவாய். 5. 9: 9.
5. திருவாய். 5. 9: 11.

6. வியவஸாயஜ்ஞர் ரக்ஷணஸ்தைர்யம் - வியவசாயஜ்ஞர்களைக் காப்பாற்றுவதில் உறுதி. வியவஸாயஜ்ஞர் - இறைவனுடைய அவருடைய எண்ணத்தை உள்ளபடி அறிந்திருப்பவர்கள். ஸ்தைர்யம் - அடியார்களை எக்காலத்தும் கைவிடமாட்டாத உறுதி. "புணர்த்த பூந்தண் துழாய்முடி நம்பெருமானைக் கண்டு" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம் பற்றி 'ரக்ஷணஸ்தைர்யம்' என்கிறார். அடியார்களைக் காப்பாற்றும் பொருட்டே தனிமாலை இட்டிருப்பவன் என்பது அத்திருப்பாசுரப் பகுதிக்குப் பொருள். பம்போத்தரம் - பம்பை என்னும் நதிக்கு வடகரையில் உள்ளது, திருவண்வண்டூர் என்னும் திவ்யதேசம். தேசஸ்தம் - நகரிலே நிலைபெற்று நிற்கும்.

வியாக்:— வியவசாயஜ்ஞர் ரக்ஷணம் - [1]"ஸ்ரீராமபிரானுடைய வும் இலக்குமணனுடையவும் எண்ணங்களின் உறுதியை அறிந்த பிராட்டியானவள், மழைக்காலத்தில் கங்கையைப் போன்று, அதிக மாகக் கலங்கவில்லை" என்று சொல்லப்பட்ட பிராட்டியைப்போலே [2]"ஏறுசேவகனுர்க்கு என்னையும் உளள் என்மின்களே" என்கிற படியே துன்புறுகின்றவர்களைக் காப்பாற்றுவதில் தன்னுடைய உறுதி யான எண்ணத்தை உண்மையாக அறிந்திருக்குமவர்களைக் காப் பாற்றுவதில், ஸ்தைர்யம் - [3]"வெறுப்பு இல்லாதவனுய் என்னை வந்து அடைந்த இவனை விடமாட்டேன்" என்றும், [4]"காப்பாற்றுதல் எனக்கு விரதம்" என்றும் சொல்லப்படுகின்றவாறே வேண்டியவர் களாலும் அசைக்கஒண்ணுதபடியிருக்கும் அவனுடைய ஸ்தைரிய குணம், பம்ப உத்தர தேசஸ்தம் - [5]"தேறு நீர்ப்பம்பை வடபாலைத் திருவண்வண்டூர்" என்கிறபடியே பம்பையாகிற ஆற்றுக்கு வட கரையான திருவண்வண்டூரிலே நிலைபெற்று நிற்கும் என்கை. (17)

167

[6]விளம்ப விரோதம் அழிக்கும் விருத்த கடநா சாமர்த்தியம், நன்னகரிலே விஸ்தீர்ணம்.

என்பது, சூத்திரம்.

---

1. *ராமஸ்ய வ்யவஸாயஜ்ஞா லக்ஷ்மணஸ்யச தீமத:*
நாத்யர்த்தம் க்ஷுப்யதே தேவீ கங்கேவ ஜலதாகமே.
என்பது, ஸ்ரீராமா. சுந். 16: 4.

2. *திருவாய்.* 6. 1: 10.

3. *"மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதம்சந"*
என்பது, ஸ்ரீராமா. யுத். 18: 3.

4. *"ஏதத் வ்ரதம் மம"*
என்பது, ஸ்ரீராமா. யுத். 18: 33.

5. *திருவாய்.* 6. 1: 10.

6. *விளம்ப விரோதம் - விளம்பம் காரணமாக வந்த விரோதத்தை. விளம்பம் - காலதாமதம். அழிக்கும் சாமர்த்தியம் எனக் கூட்டுக. சாமர்த் தியம் - ஆற்றல். 'விருத்தகடநா' என்பது சாமர்த்தியத்திற்கு அடை மொழி. விருத்தம் - மாறுபட்டவைகள். கடநா - சேர்த்தல். அதாவது, சேராதனவற்றைச் சேர்க்கும் ஆற்றல் என்றபடி. 'நன்னகர்' என்றது, திருவிண்ணகரத்தைக் குறித்தபடி. "பல்வகையும் பரந்த" என்ற திருப் பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'விஸ்தீர்ணம்' என்கிருர். விஸ்தீர் ணம் - பரப்பு. இறைவன் திருவிண்ணகரிலே தன்னுடைய அகடிதகடநா சாமர்த்தியத்தைக் காட்டியே ஆழ்வார் நாயகியின் பிரணய ரோஷத்தைத் தவிர்த்தனனுதலால் அந்தப் பிரணயரோஷத்தை நீக்கிய விருத்தகடநா சாமர்த்தியம் திருவிண்ணகரிலே விளங்கும் என்கிருர். அகடிதகடநா சாமர்த்தியம் - சேராதனவற்றையும் சேர்த்துவைக்கும் ஆற்றல்.*

வியாக் :— விளம்ப விரோதம் - முறையிலே பெறுவோம் என்று நினையாமல் படுகிற பதற்றத்துக்குத் தகுதியாகக் கடுகவந்து முகம் காட்டாமல் காலம் தாழ்த்து வருகையாலே [1] "போகு நம்பீ" என்றும், [2] "கழகம் ஏறேல் நம்பீ" என்றும் கூறும்படி பிரணய கோபத்தால் பிறந்த விரோதத்தை, அழிக்கும் விருத்த கடநா சாமர்த்தியம் - [3] "அழித்தாய் உன் திருவடியால்" என்று அழித்துப் போகட்ட மாறுபாடுகளைச் சேர்க்கவல்ல ஆற்றல், நன்னகரிலே விஸ்தீர்ணம் - [4] "நல்குரவும் செல்வும்" என்று தொடங்கித் தன்னில்தான் சேராதவற்றைச் சேர்த்துக்கொண்டு நிற்கிற மாறுபாட்டோடு கூடிய உலகின் சேர்க்கையைப் பிரகாசிப்பித்த [5] "திருவிண்ணகர் நன்னகரே" என்கிறபடியே நன்னகரான திருவிண்ணகரிலே [6] "பல்வகையும் பரந்த" என்கிறபடியே பரந்திருக்கும் என்கை. (18)

168

[7] கடித கடக விகடநாபாந்தவம், அவ்வூரிலே துவி குணம்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— கடித கடக - [8] "பிரான் இருந்தமை காட்டினீர்" என்கிறபடியே சேர்க்கின்றவர்களாலே தன்பக்கல் சேர்க்கப்பட்டவர்களுக்கும் அங்ஙனம் சேர்க்கின்றவர்களுக்கும், விகடநாபாந்தவம் - [9] "இவளை நீர் இனி அன்னைமீர் உமக்கு ஆசை இல்லை விடுமினோ" என்னும்படி பொருந்தாமையைச் செய்கின்றதான, [10] "தேவபிரானையே, தந்தை தாய் என்று அடைந்த" என்னும்படியான அவனுடைய உற

1. *திருவாய்.* 6. 2: 1.
2. *திருவாய்.* 6. 2: 6.
3. *திருவாய்.* 6. 2: 9.
4. *திருவாய்.* 6. 3: 1.
5. *திருவாய்.* 6. 3: 2.
6. *திருவாய்.* 6. 3: 1.

7. *கடிதர் - சேர்க்கப்படுகிறவர்கள். கடகர் - சேர்ப்பவர்கள். விகடநாபாந்தவம் - பொருந்தாமையைச் செய்கின்ற உறவுமுறை. விகடனை - பொருந்தாமை. அவ்வூர் - தொலைவில்லிமங்கலம். "அவ்வூர்த்திருநாமம் கேட்பது சிந்தையே" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'அவ்வூர்' என்கிறார். இறைவன் இங்கு, தேவபிரானும் அரவிந்தலோசனனுமாக நின்று இருந்து உறையும் காரணம்பற்றி இந்தத் திவ்வியதேசம் 'இரட்டைத் திருப்பதி' என்று வழங்கப்பெறுதலால், அதற்குத்தக 'துவி குணம்' என்கிறார்.*

8. *திருவாய்.* 6. 5: 5.
9. *திருவாய்.* 6. 5: 1.
10. *திருவாய்.* 6. 5: 11.

வுத் தன்மை, அவ்வூரிலே துவிகுணம் - [1] "அவ்வூர்த் திருநாமம் கேட்பது சிந்தையே" என்று [2] தோழியானவள், திருத்தொலைவில்லிமங்கலம் என்று தான் சொல்லும்போது தலைவி சொன்னாற்போல் இனிதாய் இராமையாலே 'அவ்வூர்' என்று சொன்ன தேசத்திலே தேவபிரானும் அரவிந்தலோசனனுமாய் நின்று இருந்து உறையும் இரட்டைத் திருப்பதியாகையாலே இரட்டித்திருக்கும் என்கை. விகடநா பாந்தவம் என்றது, பொருந்தாமையைச் செய்கின்ற உறவு என்றபடி. (19)

169

[3] கைம்முதல் இழந்தார் உண்ணும் நிதியின் ஆபத்சகத்வம், புகும் ஊரிலே சம்ருத்தம்.

என்பது, சூத்திரம்.

---

1. திருவாய், 6, 5: 10.

நாம் பந்துக்களாக நினைத்திருக்கும் அனைவரும் போலி பந்துக்கள் என்பதும், இறைவன் ஒருவனே உண்மையான பந்து என்பதும் நூற் கொள்கை. இவ்விஷயம் தொலைவில்லிமங்கலத்தைப்பற்றிய திருப்பதிகத்தில் "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் தேவபிரானையே, தந்தை தாய் என்று அடைந்த வண் குருகூர்ச் சடகோபன்" என்ற திருப்பாசுரத்தால் மெய்ப்பிக்கப்பட்டது. ஆதலால், இத்திவ்யதேசத்தில் இறைவனுடைய பாந்தவகுணம் விளங்குகின்றது என்கிறார். இங்குக் 'கடிதர்' என்றது, ஆழ்வாரை. 'கடகர்' என்றது, தோழிமாரை. இவர்களுக்குள் பரஸ்பரம் பொருந்தாமையை விளைத்திட்டது அந்தப்பகவானுடைய உறவு. "தொலைவில்லிமங்கலம் தொழும், இவளை நீர் இனி அன்னைமீர்! உமக்கு ஆசையில்லை விடுமினோ" என்பதுபோன்ற திருப்பாசுரப் பகுதிகளால் தெளிவு.

2. *பட்டர் "அழகிய மணவாளப்பெருமாள்" என்றும், சோமாசியாண்டான் "எம்பெருமானார்" என்றும், அனந்தாழ்வான் "திருவேங்கடமுடையான்" என்றும், ஆழ்வார்நாயகி "தொலைவில்லிமங்கலம்" என்றும் சொல்லும்போது உண்டாகும் இனிமை, இவன் சொல்லும்போது உண்டாகாமையாலே 'அவ்வூர்' என்கிறான் என்பது கருத்து.*

3. *திருக்கோளூர் இறைவனுக்கு வைத்தமாநிதிப்பெருமாள் என்பது திருப்பெயராதலாலும், நிதி ஆபத்திற்கு உதவுமதாகையாலும், மேல் திருப்பதிகத்தால் கைம்முதல் இழந்தமை கூறி, 'உண்ணும் சோறும்' என்ற இத்திருப்பதிகம் தொடங்குவதனாலும் இத்திவ்ய தேசத்தில் ஆபத்சகத்வம் என்ற குணம் விளங்கும் என்கிறார். கைம்முதல் இல்லாதவர்கள் எடுத்து உண்ணும் தகையதாக இருப்பது நிதி ஆகையால், இந்த வைத்தமாநிதியும், மேல் திருப்பதிகத்தில் "எலக்குழலி இழந்தது சங்கே" என்ற*

வியாக்:— கைம்முதல் இழந்தார் - [1] "ஏலக்குழலி இழந்தது சங்கே" என்று தொடங்கி [2] "கற்புடையாட்டி இழந்தது கட்டே" என்று அடையத்தக்க தலைவனை அடையாத காரணத்தால் உண்டான துன்பத்தால் வந்த பரவசப்பட்டிருத்தலாலே போலிப்பேறுகளும் போலி வழிகளும் எல்லாம் தன்னடையே விட்டுக் கழிகையாலே கைம்முதல் அற்றவர்கள், உண்ணும் - [3] "உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்கிறபடியே தாரக போஷக போக்கியங்கள் எல்லாம் தானேயாக உண்ணும், நிதியின் - [4] "வைத்த மாநிதியாம் மதுசூதனை" என்கிறபடியே ஆபத்துக் காலத்தில் உதவுவதற்காக ஈட்டி வைத்த மகாநிதி போலே இருக்கிறவனுடைய, ஆபத்சகத்வம் - ஆபத்துக்குதவுதலாகிற பெருங்குணம், புகும் ஊரிலே - [5] "திண்ணம் என் இளமான் புகுமூர் திருக்கோளூரே" என்று பேற்றிலே ருசி பிறந்தார்க்குச் சென்று சேரத்தக்கதாக இருக்கும் திருக்கோளூரிலே, சம்ருத்தம் - [6] "செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே" என்கிறபடியே காப்பாற்றத்தகும் பொருள்களைக் காப்பாற்றுதலே தனக்கு எல்லை இல்லாத செல்வமாக நினைத்து வந்து கிடக்கையாலே நிறைந்திருக்கும் என்கை. (20)

170

[7] சென்று சேர்வார்க்கு உசாத்துணை அறுக்கும் சௌந்தர்யம், மாநகரிலே கோஷிக்கும்.

என்பது, சூத்திரம்.

தொடங்கி, "கற்புடையாட்டி இழந்தது கட்டே" என்ற முடிக்கையாலே போலி உபாய உபேயங்கள் எல்லாம் தன்னடையே விட்டுக் கழிந்தமை பெறப்படும். இத்திருப்பதிகத்தில் தொடங்கும் முதற்றிருப்பாசுரம் 'உண்ணுஞ் சோறு' என்பதாகையாலே 'உண்ணும் நிதி' என்கிறார். "திண்ணம் என் இளமான் புகுமூர் திருக்கோளூரே" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றிப் 'புகுமூர்' என்கிறார். "செல்வமல்கியவன் கிடந்த கோளூர்" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'சம்ருத்தம்' என்கிறார். சம்ருத்தம் - நிறைவு.

1. திருவாய். 6. 6: 1.
2. திருவாய். 6, 6: 10.
3. திருவாய். 6. 7: 1.
4. திருவாய். 6. 7: 11.
5. திருவாய். 6. 7: 1.
6. திருவாய். 6. 7: 4.
7. இத்திவ்ய தேசத்தின் திருப்பதிகத்தில் "செங்கனிவாயின் திறத்ததாயும் செஞ்சுடர் நீண்முடி தாழ்ந்ததாயும், சங்கொடு சக்கரம் கண்டுகந்தும் தாமரைக் கண்களுக்கு அற்றுத்தீர்ந்தும்" என்று வருகின்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி, இத்திவ்ய தேசத்தில் சௌந்தர்ய குணம் விளங்கும் என்கிறார். "தென்திருப்பேரெயில்மாநகரே" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுளம்பற்றி 'மாநகர்' என்கிறார். "எங்கும் எழுந்த நல்வேதத்தொலி நின்றோங்கும்" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றிக் 'கோஷிக்கும்' என்கிறார். கோஷிக்கும் - ஒலிக்கும்.

வியாக்:— சென்று சேர்வார்க்கு - [1]"தென்திருப்பேரெயில் சேர்வன் சென்றே" என்கிறபடியே முறையிலே அடைதல் பொருத அன்பின் மிகுதியாலே தோழிமார் முதலியவர்களுடைய வார்த்தைகளைக் கேளாமல் சென்று சேர்வது என்னும்படியானவர்களுக்கு, உசாத்துணை அறுக்கும் - [2]"என்னெஞ்சினூரும் அங்கே ஒழிந்தார் உழந்து இனி யாரைக் கொண்டு என் உசாகோ" என்னும்படி உசாத்துணையான நெஞ்சினைக் கவரும்படியான, சௌந்தர்யம் - [3]"செங்கனிவாயின் திறத்ததாயும் செஞ்சுடர் நீள்முடித் தாழ்ந்ததாயும், சங்கொடு சக்கரம் கண்டு உகந்தும் தாமரைக் கண்களுக்கு அற்றுத் தீர்ந்தும்" என்பது போன்றவைகளால் சொல்லப்பட்டவனுடைய அழகானது, மாநகரிலே கோஷிக்கும் - [4]"தென்திருப்பேரெயில் மாநகரே" என்கிறபடியே மாநகரமான தென்திருப்பேரெயிலிலே [5]"எழுந்த நல் வேதத்து ஒலி நின்று ஓங்கு" என்கிறபடியே எம்பெருமானை அநுபவித்த மிக்க மகிழ்ச்சியினாலே அங்குள்ளார் பாடுகிற சாமவேத ஒலியிலே தெரியும் என்றபடி. (21)

171

[6]பிரவண சித்தம் பரத்வவிமுகம் ஆக்கும் ஆநந்த விருத்தி, நீணகரிலே.

என்பது, சூத்திரம்.

வியாக்:— பிரவண சித்தம் - [7]"தீவினை உள்ளத்தின் சார்வல்லவாகித் தெளிவிசும்பு ஏறலுற்றால், திருவாறன்விளையதனை மேவி வலம்

---

1. *திருவாய்.* 7. 3: 8.
2. *திருவாய்.* 7. 3: 4.
3. *திருவாய்.* 7. 3: 3.
4. *திருவாய்.* 7. 3: 9.
5. *திருவாய்.* 7. 3: 4.

6. *நீணகர் - திருவாறன்விளை. "நீணகரமதுவே மலர்ச்சோலைகள் சூழ் திருவாறன்விளை" என்னும் திருப்பாசுரப்பகுதியை நோக்கி அதனை 'நீணகர்' என்கிறார். இங்கு விளக்கும் குணம் 'ஆனந்த வளர்ச்சி'. "இன்பம் பயக்க எழில் மலர்மாதரும் தானும் இவ்வேழுலகை, இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்தான்கின்ற எங்கள் பிரான்" என்ற திருப்பாசுரப் பகுதியினைத் திருவுள்ளம்பற்றி 'ஆநந்த விருத்தி' என்கிறார். விருத்தி - வளர்ச்சி. 'பிரவண சித்தம் பரத்வ விமுகம் ஆக்கும்' என்பது, ஆனந்த விருத்திக்கு அடைமொழி. பிரவணம் - அன்பு. விமுகம் ஆக்குதல் - வேறுபடுத்துதல்; விரும்பாதபடி செய்தல். "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை தேவபிரான் அறியும்" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'விமுகமாக்கும்' என்கிறார். மற்றொன்று - பரத்துவம்.*

7. *திருவாய்.* 7. 10: 9.

செய்து கைதொழக் கூடுங்கொல் என்னும் என் சிந்தனை" என்கிற படியே, தீவினை முதலானவைகள் தனக்குத்தானே விளங்கத்தக்க உயிரிலே பற்று அறப் போய்த் தெளிவினை விளைப்பதான பரமபதத்தை அடைதல் வந்து பொருந்தினாலும் என் நெஞ்சானது திருவாறன் விளையாகிற அந்த நகரினைக் கிட்டி நலம் பயக்கும் தொண்டுகளைச் செய்து கையாலே தொழுதற்கு முடியுமோ என்று நிற்கும் என்று தன் பக்கல் அன்பினர்களுடைய மனத்தினை, பரத்வவிமுகம் ஆக்கும் - [1] "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை தேவபிரான் அறியும்" என்கிறபடியே பரமபதத்தின் பெயர் சொல்லுகையும் பொறாதபடி பரத்துவத்தில் விருப்பு இன்மையை உண்டாக்கும், ஆநந்த விருத்தி - [2] "இன்பம் பயக்க எழில் மலர்மாதரும் தானும் இவ்வேழுலகை, இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து" என்கிற ஆனந்த வளர்ச்சி, நீள்நகரிலே - [3] "திருவாறன் விளை என்னும் நீள்நகரமதுவே" என்கிறபடியே நீள்நகரான திருவாறன்விளையிலே தெளிவாம் என்கை. (22)

172

[4] *சாதரரைப் பரிசழிக்கும் சேஷ்டிதாச்சர்யம், குளத்தே கொடிவிடும்.*

என்பது, சூத்திரம்.

வியாக்:— சாதரரை - [5] "ஆழிவலவனை ஆதரித்து, கூடச் சென்றேன்" என்கிறபடியே தன்பக்கல் ஆதரத்தோடே கூடியிருப்

---

1. *திருவாய்.* 7. 10: 10. 2. *திருவாய்.* 7. 10: 1.

3. *திருவாய்.* 7. 10: 6.

4. *திருக்குளந்தை என்னும் திவ்விய தேசத்தில் சேஷ்டிதாச்சரியம் என்னும் குணம் விளங்கும் என்கிறார். "வைகல் பல்வளையார் முன் பரிசழிந்தேன், மாடக்கொடிமதிள் தென்குளந்தை வண்குடபால் நின்ற மாயக்கூத்தன், ஆடல் பறவை உயர்த்த வெல்போர் ஆழிவலவனை ஆதரித்தே" என்ற திருப்பாசுரப் பகுதியில் 'பரிசழிந்தேன்' என்கையாலே பெண்களுக்குரிய நாணம் முதலியவற்றை அழிக்கும் மாயக்கூத்தன் என்கிற சேஷ்டிதாச்சரியம் இத்திருப்பதியில் விளங்கும் என்கிறார். 'மாயக்கூத்தன்' என்னும் திருப்பெயரை நோக்கி 'சேஷ்டிதாச்சரியம்' என்கிறார். சேஷ்டிதம் - செயல். சேஷ்டிதாச்சரியம் இத்தகையது என்பதனை விளக்கவந்த அடைமொழி, 'சாதரரைப் பரிசழிக்கும்' என்பது. சாதரர் - அன்பினையுடையவர்கள். குளந்தை என்ற திருப்பெயர் இப்பொழுது 'பெருங்குளம்' என வழங்குகிறது. "மாடக்கொடிமதிள்" என்ற திருப்பாசுரப் பகுதியை நோக்கிக் 'கொடிவிடும்' என்கிறார். கொடிவிடும் - மிக்குத் தோன்றும். கொடி என்பதற்கு நீட்சி என்பது பொருள்.*

5. *திருவாய்.* 8. 2: 4.

பாரை, பரிசு அழிக்கும் - [1] "பல்வளையார் முன் பரிசு அழிந்தேன்" என்கிறபடியே பெண்மைக்கு உறுப்பான நாணத்தை அழிக்கும், சேஷ்டித ஆச்சர்யம் - [2] "மாயக்கூத்தன்" என்கிற செயல்களின் ஆச்சரியம், குளத்தே கொடிவிடும் - [3] "மாடக்கொடி மதிள் தென் குளந்தை" என்கிற திருக்குளந்தையிலே இதற்கு என்னக் கட்டின மாடக்கொடி மூலமாகப் பிரகாசிக்கும் என்கை. (23)

173

[4] சிரம மனம் சூழும் ஸௌகுமார்ய பிரகாசம், ஆய்ச்சேரியிலே.

என்பது, சூத்திரம்.

வியாக்:— சிரமம் - [5] "பணியா அமரர் பணிவும் பண்பும்" என்கிற திருப்பாசுரத்தின்படியே மிக்க பேரன்பினையுடையவர்களான நித்திய சூரிகள் உபசரிக்கப் பரமபதத்திலே இருக்குமவன், மிக்க மிருதுத் தன்மையையுடைய திருமேனியோடே இவ்வுலக மக்களுடைய துக்கத்தைப் போக்குகைக்காகத் தன் வாசி அறியாத இந்த உலகத்திலே வந்து அவதரித்து, [6] "அடியார் அல்லல் தவிர்ப்பது இப்படிதான் நீண்டு தாவுவது ஆகையால் வந்த சிரமத்தை, மனம் - நினைத்த மனமானது, சூழும் - [7] "என் மனம் சூழ வருவாரே" என்கிறபடியே வியாகுலத்தை அடைந்து மயங்கும்படியாய், சௌகுமார்ய பிரகாசம் - [8] "ஆழியும் சங்கும் சுமப்பார்தாம்" என்கிறபடியே [9] பூ ஏந்தினாற்போலே இருக்

---

1. *திருவாய்.* 8. 2: 4. 2. *திருவாய்.* 8. 2: 4.
3. *திருவாய்.* 8. 2: 4.

4. *திருவண்பரிசாரத்தில் சௌகுமார்யம் என்னும் குணம் விளங்கும் என்கிறார். சௌகுமார்யம் - மிருதுத்தன்மை. இந்தச் சௌகுமார்யத்திற்கு அடைமொழி, 'சிரமமனம் சூழும்' என்பது. இறைவனுடைய சிரமத்தை நினைத்த ஆழ்வாருடைய மனமானது சுழலும்படியாக - மயங்கும்படியாக என்பது பொருள். "கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்னே நீ துயில்மேவி மகிழ்ந்ததுதான், அடியார் அல்லல் தவிர்த்த அசைவோ? அன்றேல் இப்படிதான் நீண்டு தாவிய அசைவோ பணியாயே" என்ற திருப்பாசுரத்தில் 'என்ன சிரமமோ' என்ற வினவுகையாலே ஆழ்வாருடைய மனம் இறைவனுடைய சிரமத்தை நினைத்து வருந்துதல் காண்க. ஆய்ச்சேரி - ஆழ்வாருடைய திருத்தாயார் திருவவதரித்த திருவண்பரிசாரம். ஆய் - தாய்.*

5. *திருவாய்.* 8. 3: 6. 6. *திருவாய்.* 8. 3: 5.
7. *திருவாய்.* 8. 3: 6. 8. *திருவாய்.* 8. 3: 3.

9. *'பூ ஏந்தினாற் போலே' என்ற தொடக்கும் வாக்கியத்திலே அவன் சௌகுமார்யத் தன்மை விளங்குதல் காண்க.*

கும் திருவாழி திருச்சங்கை ஏந்துகிறதும் மலை சுமந்தாற்போலே வன் பாரமாகத் தோற்றும்படி இருக்கிற அவன் சௌகுமார்யப் பிரகாசம், ஆய்ச்சேரியிலே - [1] உடையநங்கையார் பிறந்த அகமாகையாலே ஆழ்வார்க்கு ஆய்ச்சேரியாக இருப்பதான, [2] "உருவார் சக்கரம் சங்கு சுமந்து இங்கு உம்மோடு, ஒருபாடு உழல்வான் ஓர் அடியானும் உளன் என்று, வண்பரிசாரத்து இருந்த என், திருவாழ்மார்பற்கு என்திறம் சொல்லார்" என்ற திருவண்பரிசாரத்திலே காணப்படும் என்கை. (24)

174

[3] மஹாமதிகள் அச்சம் கெட்டு அமரும் சௌர் யாதிகள், சிற்றுற்றிலே கொழிக்கும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— மஹாமதிகள் - [4] "ஸ்ரீ கண்ணபிரானுடைய படுக்கையை மஹாபுத்திமானான ஸ்ரீவிதுரர் நன்றாகத் தடவிப்பார்த்தார்" என்கிறபடியே அவனுடைய மென்மையை நினைக்கும் நினைவாலே அவனுக்கு எங்கே என்ன தீங்கு வருகிறதோ என்று அஞ்சவேண்டாத இடத்திலும் அஞ்சும் மஹாமதிகள், அச்சம் கெட்டு - [5] "எங்கள் செல்சார்வு" என்று தங்களுக்கு அச்சம் இல்லாத இடமான புக

---

1. *உடைய நங்கையார் - ஆழ்வாருடைய திருத்தாயார்.*

2. *திருவாய் 8. 3: 7.*

3. *திருச்சிற்றாறு என்னும் திவ்விய தேசத்தில் சூரம் வீரம் முதலிய குணங்கள் விளங்கும் என்கிறார் இச்சூத்திரத்தில். மஹாமதிகள் அச்சம் கெட்டு அமர்தற்குக் காரணமான சௌர்யாதிகள் என்க. சௌர்யம் - சூரனது தன்மை. மஹாமதிகள் என்றது, ஸ்ரீவிதுராழ்வான் போல்வாரை. இவரது தன்மையை வியாக்கியானத்தில் காண்க. இத்திவ்ய தேசத்தைப் பற்றிய திருப்பதிகத்தின் முதல் திருப்பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி 'சௌர்யாதிகள்' என்கிறார்.*

4. *"ஸம்ஸ்ப்ருஶந்நாஸநம் ஶௌரே: விதுரஸ்ஸ மஹாமதி:" என்பது, பாரதம் உத்யோகபர்.*

5. *திருவாய். 8. 4: 1.*

"அங்கமரர் பேண அவர் நடுவே வாழ்திருமாற்கு, இங்கோர் பரிவரிலை என்றஞ்ச" என்ற திருப்பாசுரத்தால் மங்களாசாசனபரரான ஆழ்வார்க்கு அச்சமுண்டானமையும், "வாராமல் அச்சமினி மால்தன் வலியினையும் சீரார் பரிவருடன் சேர்த்தியையும் - பாருமென, தானுகந்த மாறன்" என்ற திருப்பாசுரத்தால் அந்த அச்சம் கெட்டமையையும் நோக்கல் தகும். திருவாய்மொழி நூற்றந். 73, 74.

லாக நினைத்து அச்சம் கெட்டு,அமரும்[1]-"திருச்சிற்ருற்றங்கரையானை, முக்கணம்மானை நான்முகனை அமர்ந்தேன்" என்கிறபடியே பிரமன் சிவன் என்னும் இவர்களுடைய இருப்பு, நிலை முதலியவைகள் தன் அதீனமாம்படி இவர்களைச் சரீரமாகவுடைய பெருமையையுடையனாய் வைத்து எளியனாய் வந்து நிற்கிறவனை 'அவனுக்கு என் வருகிறதோ' என்று அடைந்த மறுகுதல் தீர்ந்து கிட்டி அநுபவிக்கப்பெற்றேன் என்று *மகிழ்ச்சியினராம்படியான*, *சௌர்யாதிகள்* - [2]"வார்கடா அருவி யானை" என்ற திருப்பாசுரத்தால் சொல்லப்பட்ட குவலயா பீடம் சாணூரன் முஷ்டிகன் கம்சன் முதலாயினாரைக் கொன்று வெளிப் படுத்திய சூரத்தனம் முதலானவைகள், சிற்ருற்றிலே கொழிக்கும் - திருச்செங்குன்றூரில் திருச்சிற்ருறு என்கிற திவ்விய தேசத்திலே, [3] ஆற்றுக்குள்ளில் மணிமுத்து முதலானவைகள் கரையிலே கொழித் துத் தோற்றுமாறுபோலே பிரகாசிக்கும் என்கை.

சூத்திரத்தில் 'சௌர்யாதிகள்' என்றவிடத்திலே உள்ள 'ஆதி' என்பதனால் வீரியம் பராக்கிரமம் என்னுமவற்றைச் சொல்லுகிறது. 'ஆறு' என்னும் சொல்லிற்கு ஏற்பக் 'கொழிக்கும்' என்கிருர். (25)

175

[4]*ஸாத்ய ஹ்ருதிஸ்தனாயும் ஸாதநம் ஒருக்கடுக்கும் க்ருதஜ்ஞதா கந்தம், தாயப்பதியிலே.*

என்பது, சூத்திரம்.

---

1. *திருவாய்.* 8. 4. 10. 2. *திருவாய்.* 8. 4: 1.

3. *'திருச்சிற்ருற்றிலே கொழிக்கும்' என்ற பதச்சேர்த்திக்கு, பத சாரம் அருளிச்செய்கிருர் 'ஆற்றுக்குள்ளில்' என்று தொடங்கி.*

4. *திருக்கடித்தானம் என்னும் திவ்யதேசத்தில் க்ருதஜ்ஞத்துவம் என்னும் குணம் விளங்கும் என்கிருர். தாயப்பதி என்றது, திருக்கடித் தானத்தை. "திருக்கடித்தான நகரும் தனதாயப்பதியே" என்ற திருப் பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றித் 'தாயப்பதி' என்கிருர். க்ருதஜ் ஞதா கந்தம் - செய்ந்நன்றியறிதலாகிற வாசனை. அந்தச் செய்ந்நன்றி யறிதலை விளக்குகிருர் 'ஸாத்ய ஹ்ருதிஸ்தனாயும ஸாதநம் ஒருக்கடுக்கும்' என்று. சாத்ய ஹ்ருதிஸ்தனாயும் - ஆழ்வாருடைய மனத்தில் வசித்தலா கிற பலம் கிடைத்திருக்கச்செய்தேயும். ஸாத்யம் - பலம். சாதநம் - ஆழ்வாருடைய மனத்தில் வசிப்பதற்குச் சாதநமாக இருந்த திவ்வியதேசம். ஒருக்கடுத்தல் - மனத்தில் வசிப்பதைப் போலவே திவ்விய தேசத்திலும் ஆசை கொண்டு வசித்தல். ஒருங்க அடுத்தல் - ஒருக்கடுத்தல்.*

" 'திருமாலிருஞ் சோலைமலையே' என்கிறபடியே உகந்தருளின நிலங் கள் எல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய சரீரைகதேசத் திலே பண்ணும். அங்குத்தை வாசம் சாதநம்; இங்குத்தை வாசம் சாத்யம்,

வியாக் :— சாத்ய ஹ்ருதிஸ்தனுயும் - பலம் கைப்பட்டால் அப் பலத்தைப் பெறுதற்குரிய வழியிலே இழிவார் இன்றிக்கே இருக்க, [1] "திருக்கடித்தானமும் என்னுடைச் சிந்தையும், ஒருக்கடுத்துள்ளே உறையும் பிரான்" என்கிறபடியே ஆழ்வார் திருவுள்ளத்தில் வசித்த லாகிற பலம் கிடைத்திருக்கச்செய்தேயும், சாதநம் ஒருக்கடுக்கும் கிருதஜ்ஞுதாகந்தம் - ஆழ்வார் திருவுள்ளத்தில் வாசத்தைப் பெற்றது, அத்திவ்வியதேசத்தின் வாசத்தால் அன்றோ என்று சாதனமான திருக்கடித்தானத்தையும் அடுத்துப்பிடித்து வசிக்கும்படியான செய்ந் நன்றி அறிதலாகிற வாசனை, தாயப்பதியிலே - [2] "திருக்கடித்தான நகரும் தன தாயப்பதியே" என்கிறபடியே தனக்குத் தாயமாக அடை யத்தக்கதான இடமாக நினைத்திருக்கும் திருக்கடித்தானத்திலே என்கை. (26)

176

[3] அவகாஹித்தாரை அநந்யார்ஹம் ஆக்கும் நாயக லக்ஷணம், வளம்புகழும் ஊரிலே குட்டமிடும்.

என்பது, சூத்திரம்.

'கல்லும் கனைகடலும்' என்கிறபடியே இது சித்தித்தால் அவற்றில் ஆதரம் மட்டமாய் இருக்கும். 'இளைகோயில் கைவிடேல்' என்று இவன் பிரார்த் திக்க வேண்டும்படியாய் இருக்கும்" (ஸ்ரீவசநபூஷணம்) என்பது சாஸ்தி ரார்த்தமாதலின், ஆழ்வார் திருவுள்ளத்தில் வசித்தலாகிற பலத்தைப் பெறுதற்காகவே திருக்கடித்தானத்தில் எழுந்தருளியிருத்தலாகிற சாத னத்தை மேற்கொண்டான் இறைவன். ஆழ்வார் திருவுள்ளத்தில் எழுந் தருளியிருத்தலாகிற பலத்தைப் பெற்றான்; ஆனால் திருக்கடித்தானத்தில் எழுந்தருளியிருத்தலில் விருப்பம் குறைந்திலன்; "திருக்கடித்தானமும் என்னுடைச் சிந்தையும், ஒருக்கடுத்துள்ளே உறையும் பிரான் கண்டீர்" என்கிறார் ஆழ்வார். சாத்யத்தைப் பெற்றபின்பும் சாதன வஸ்துவில் விருப்பம் வைப்பது மிகச்சிறந்த செய்ந்நன்றியறிதல் அன்றோ என்பது இதன் கருத்து. ஆகவே, இத்திவ்விய தேசத்தில் இறைவனுடைய கிரு தஜ்ஞதை என்ற குணம் விளங்கும் என்கிறார்.

கடித்தானம் என்பதற்கு, மணத்தையுடைய இடம் என்பது பொருள் ஆதலின், அதற்குச்சேர, சூத்திரத்தில் 'கிருதஜ்ஞுதா கந்தம்' என்கிறார்.

1. திருவாய். 8. 6: 2. 2. திருவாய். 8. 6: 8.

3. திருப்புலியூர் என்னும் திவ்விய தேசத்திலே தலைவனுக்கு உரிய இலக்கணங்கள் விளங்கும் என்கிறார். 'வளம்புகழும் ஊர்' என்றது, திருப் புலியூரை. "திருப்புலியூர் வளம்புகழும் இவள்" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம் பற்றித் திருப்புலியூரை 'வளம்புகழும் ஊர்' என் கிறார். 'அவகாஹித்தாரை அநந்யார்ஹம் ஆக்கும்' என்றது, நாயக லக்ஷணத்திற்கு அடைமொழி. அவகாஹித்தல் - மூழ்குதல். அநந்யார்ஹ மாக்குதல் - பிறர்க்கு ஆகாமல் அவன் ஒருவனுக்கே உரித்தாக்குதல். குட்டமிடும் - நிறைந்திருக்கும்.

வியாக் :— அவகாஹித்தாரை - [1] "அப்பன் திருவருள் மூழ்கி னள்" என்கிறபடியே தன் திருவருளில் மூழ்குகிறவர்களை, அநந்யார் ஹம் ஆக்கும் - [2] "அருமாயன் பேர் அன்றிப் பேச்சிலள்" என்றும், [3] "திருப்புலியூர்ப் புகழ் அன்றி மற்று, பரவாள் இவள் நின்று இராப் பகல்" என்றும், [4] "திருப்புலியூர், நின்ற மாயப்பிரான் திருவருளாம் இவள் நேர்பட்டது" என்றும் கூறும்படி மற்றொருவர்க்கு அன்றித் தனக்கே உரியதாக்குமதாய, நாயக லக்ஷணம் - [5] "கருமாணிக்க மலை மேல் மணித்தடம் தாமரைக்காடுகள் போல்" என்றும், [6] "துன்னு சூழ் சுடர் ஞாயிறும் அன்றியும் பல் சுடர்களும்போல்" என்பனபோன்ற வைகளால் சொன்ன அவயவசோபை ஆபரணசோபை முதலான தலைவனுக்கு உரிய இலக்கணம், வளம்புகழும் ஊரிலே - [7] "திருப்புலி யூர் வளம், புகழும்" என்று இவர் கொண்டாடும்படியான செல்வத்தை யுடைய திருப்புலியூரிலே, குட்டமிடும் - நிறைந்திருக்கும் என்கை.

'குட்டம் இடும்' என்றது, குட்டநாடு என்னுமதனை நினைத்து. அருள் மூழ்கினாரை என்னாதே 'அவகாஹித்தாரை' என்கிறார், கலந்த வர்களை 'தனக்கே உரியவர் ஆக்கும்படி இருக்கவேண்டும் தலைவன் இலக்கணம்' என்று உத்தம நாயகனுடைய இலக்கணத்தைப் பொது வாகக் கூறி, அந்த இலக்கணம் ஈச்வரனுக்குத் திருப்புலியூரிலே நிறைந்து விளங்கும் என்று அருளிச்செய்கிறவர் ஆகையாலே. (27)

177

[8] போக்ய பாகத்வரை, தெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் பிரகடம்.

என்பது, சூத்திரம்.

---

1. *திருவாய்.* 8. 9: 5.
2. *திருவாய்.* 8. 9: 1.
3. *திருவாய்.* 8. 9: 9.
4. *திருவாய்.* 8. 9: 10.
5. *திருவாய்.* 8. 9: 1.
6. *திருவாய்.* 8. 9: 2.
7. *திருவாய்.* 8. 9: 3.

8. *மிக்க பசியையுடையான் ஒருவன் சோறு வேவுதற்கு முன்னே பதற்றத்தினால் அதன் அருகே வந்து நிற்பது இருப்பது கிடப்பதாமாறு போன்று, தனக்கு இனியரான ஆழ்வார்க்குப் பரமபக்தியாகிற பாகம் பிறக்குமளவும், அதனை அநுபவிக்க இருக்கின்ற இறைவனுக்கு உண்டான பதற்றம் திருப்புளிங்குடியிலும் வரகுணமங்கையிலும் ஸ்ரீவைகுண்டத்தி லும் விளங்கும் என்கிறார் இச்சூத்திரத்தால். போக்யம் - இனிய பொருள். த்வரை - பதற்றம். தெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் - "தெளிந்த*

வியாக் — போக்ய பாகத்வரை - பசி மிக்கவன் சோறு சமைப்பதற்கு முன்னே பதற்றத்தாலே சமைக்கும் இடத்திற்கு அணித்தாக வந்து கிடப்பது இருப்பது நிற்பது ஆமாறுபோலே, இனியவரான ஆழ்வார்க்குப் பரம பக்தியாகிற பாகம் பிறக்குமளவும் சர்வேச்வரனுக்கு உண்டான பதற்றம், தெளிந்த சந்தைக்கு - [1] "தெளிந்த என் சிந்தையகம் கழியாதே" என்கிற திருப்பாசுரத்திற்கு, முன்னில் மூன்றிலும் - முன்னே சொன்ன "புளிங்குடிக் கிடந்து, வரகுணமங்கையிருந்து, வைகுந்தத்துள் நின்று" என்கிறபடியே கிடப்பது இருப்பது நிற்பது ஆன திருப்புளிங்குடி, திருவரகுணமங்கை, திருவைகுந்தம் என்னும் திவ்விய தேசங்கள் மூன்றிலும், பிரகடம் - தெரியும் என்கை. (28)

178

[2] போகத்தில் தட்டுமாறும் சீலம், காட்கரையிலே கரை அழிக்கும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— போகத்தில் தட்டுமாறும் சீலம் - இப்படி இனியவரான ஆழ்வாருடனே கலந்து பரிமாறுமிடத்தில் [3] "ஆட்கொள்வான் ஒத்து என் உயிர் உண்ட மாயன்" என்றும், [4] "ஆருயிர் பட்டது எனது உயிர் பட்டது" என்றும் பேசும்படி அத்தலை இத்தலையாய்ச் சேஷ சேஷி பாவம் மாறுடிப் பரிமாறும் சீல குணம், காட்கரையிலே - [5] "திருக்காட்கரை, மருவிய மாயன் மாயம் நினைதொறே" என்று ஈடுபட்டவராய்ப் பேசின திருக்காட்கரையிலே, கரை அழிக்கும் - கரை அழியப் பெருகும் என்கை. காட்கரை என்ற திவ்விய தேசத்தின் பெயருக்கு ஏற்பக் 'கரை அழிக்கும்' என்கிருர். (29)

என் சிந்தையகங்கழியாதே" என்ற திருப்பாசுரப் பகுதிக்கு முன் உள்ள அடியில் கூறப்படும் திவ்யதேசங்கள் மூன்றிலும். ப்ரகடம் - தெரியும். இறைவன், ஆழ்வாரை மிக மிக இனிய பொருளாகக் கொண்டுள்ளான் என்பது "என்னில் முன்னம் பாரித்துத் தான் என்னை முற்றப்பருகினன்" (9. 6: 10.) முதலிய திருப்பாசுரப் பகுதிகளால் விளங்கும்.

1. *திருவாய்.* 9. 2: 4.

2. *திருக்காட்கரை என்னும் திவ்யதேசத்திலே சீலம் என்னும் குணம் விளங்கும் என்கிருர். தட்டுமாறுதல் - முறைமாறுதல். சீலமாவது, பெரியவன் தாழ்ந்தவர்களோடே புரையறக் கலக்கும் தன்மை. "வாரிக் கொண்டு" என்ற திருப்பாசுரத்தை நோக்கிக் 'கரையழிக்கும்' என்கிருர்.*

3. *திருவாய்.* 9. 6: 7. 4. *திருவாய்.* 9. 6: 9.

5. *திருவாய்.* 9. 6: 1.

179

[1] மஹாத்மாக்கள் விரஹம் சஹியாத மார்த்தவம், வளத்தின்களத்தே கூடுபூரிக்கும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— மஹாத்மாக்கள் - [2] "தமரோடு அங்கு உறைவார்க்கு" என்கிறபடி தம் பந்து ஜனங்களோடே அங்கே நித்திய வாசம் செய்கிறவர்க்கு என்னும்படி. [3] "ஒருமுறை உன்னுடைய திவ்வியமங்கள விக்கிரகத்தைக் காணவேண்டும் என்னும் ஆசையாலே, மிக மேலானதான பிரமன் முதலான உலகங்களின் இன்பத்தையும் மோக்ஷத்தையும் துரும்பாக நினைக்கின்ற மஹாத்மாக்களான பாகவதர்களால் நான் கடாக்ஷிக்கப்பட்டவனும்படி, சர்வசக்தியையுடைய நீ என்னைக் கடாக்ஷிக்கவேண்டும்; எந்தப் பாகவதர்களுடைய பிரிவு உனக்கும் கணப்பொழுதும் பொறுக்கமுடியாததாக இருக்கும்" என்கிறபடியே தம்முடைய விக்கிரகத்தை ஒருகால் காணவேண்டும் என்னும் ஆசையால், உயர்ந்தனவான பிரமன் முதலான தேவர்களின் உலக இன்பங்களையும் மோக்ஷத்தையும் துரும்பாக நினைக்கும் மஹாத்மாக்களுடைய, விரஹம் சகியாத மார்த்தவம் - பிரிவினைப் பொறுமல் இருக்கையாகிற சௌகுமார்யகுணம், வளத்தின் களத்தே - [4] 'மூழிக்களத்து வளத்தினை" என்கிறபடியே அடியார்களுக்குச் செல்வமாக இருக்கும் தன்மையனானவனுடைய திருமூழிக்களத்திலே, கூடுபூரிக்

1. திருமூழிக்களம் என்கிற திவ்வியதேசத்தில் சௌகுமார்ய குணம் விளங்கும் என்கிறார். இங்குக் கூறிய சௌகுமார்யம் திவ்யாத்ம சொரூபத்தைப் பற்றியது. மேலே கூறியது திவ்யமங்கள விக்கிரஹத்தைப் பற்றியது. "தமரோடு அங்குறைவார்க்கு" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம் பற்றி இவ்வசனம் அருளிச் செய்கிறார். "வானவர்தம் முன்னவனை மூழிக்களத்து வளத்தினை" (பெரிய திருமடல்) என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம் பற்றி 'வளத்தின்' என்கிறார். வளம் - அடியார்கட்குச் செல்வமாக உள்ளவன். வளம் - செல்வம். களம் - திருமூழிக்களம். வளத்தினுடைய களம் என்க. கூடுபூரிக்கும்-நிறைந்திருக்கும்.

2. திருவாய். 9. 7: 2.

3. ஸக்ருத் த்வதாகார விலோகநாஸயா
த்ருணீக்ருதா நுத்தம புக்திமுக்திபி:
மஹாத்மபிர்மாமவலோக்யதாம்நய
க்ஷணேபி தேயத் விரஹோதி துஸ்ஸஹ:

என்பது, தோத்திர ரத்நம், 55.

4. பெரிய திருமடல், 129. இங்கு, 'விளக்கினை' என்ற பாடபேதமும் காண்கிறது.

கும் - கூடுகட்டி நிற்கும் என்கை. 'களம்' என்ற பெயருக்கு ஏற்பக் 'கூடுபூரிக்கும்' என்கிறார். (30)

180

[1] *பிரிந்த துன்பக்கடல் கடத்தும் விஷ்ணுபோத ஆந்ருசம்ஸ்யம், நாவாயிலே நிழல் எழும்.*

என்பது, சூத்திரம்.

வியாக் :—பிரிந்த துன்பக்கடல் - [2] "அன்புடையாரைப் பிரிவுறு நோய்" என்றும், [3] "துன்பக்கடல்புக்கு" என்றும் சொல்லுகிறபடியே [4] "எமராலும் பழிப்புண்டு, அணிமூழிக்களத்துறையும் தம்மால் இழிப் புண்டு இங்குளன்" என்றும், [5] "தாம் தம்மைக் கொண்டு அகல்தல் தகவு அன்று என்று உரையீரே" என்றும், [6] "மிகமேனி மெலிவெய்தி மேகலையும் ஈடுஅழிந்து என், அகமேனி ஒழியாமே திருமூழிக்களத் தார்க்கு, தகவு அன்று என்று உரையீர்" என்றும் இப்படி மேன் மேலும் ஆள்விடவேண்டும்படி தன்னைப் பிரிகையால் வந்த துன்பக் கடலை, கடத்தும் விஷ்ணுபோதம் - [7] "விஷ்ணுவாகிற ஓடத்தைத்

---

1. *திருநாவாய் என்னும் திவ்யதேசத்தில் இறைவனுடைய பேரருள் விளக்கும் என்கிறார். "நாவாய் உறைகின்ற நாரண நம்பீ! ஆ ஆ அடியான் இவன் என்று அருளாயே" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றிப் 'பேரருள் விளக்கும்' என்கிறார். கடல் கடப்பதற்கு உறுப்பாக இருக்கும் கப்பல்போன்று, பிரிந்த துன்பக்கடல் கடப்பதற்கு இத்தலத்து இறைவனும் நாவாயாக இருக்கின்றான் என்றபடி. பிரிவுத்துன்பம் மேல் திருவாய்மொழியிலே கூறப்பட்டது. நாவாய் போன்ற இறைவன் அங்கு எழுந்தருளியிருத்தலால் அத்தலமும் நாவாய் எனப்பட்டது. நாவாய் - கப்பல். "துன்பக்கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்" என்ற திருப்பாசுரத்தில் இறைவன் துன்பக்கடல் கடத்தும் தோணியாகவே அருளிச்செய்யப்பட்டுள்ளான். விஷ்ணுபோதம்- விஷ்ணுவாகிற ஓடம். ஆந்ருசம்ஸ்யம் - அடியார்களுக்குச் செய்யும் அருள்.*

2. *'பிரிந்த துன்பம்' என்றது, மேல் திருவாய்மொழியில் கூறப் பட்ட பிரிவுத்துன்பம் என்பதனை விளக்குகிறார் 'அன்புடையாரை' என்று தொடங்கி. இது, நாய்ச்சியார் திருமொழி, 5: 4.*

3. நாய்ச்சியார் திரு. 5: 4. 4. திருவாய். 9. 7: 2.

5. திருவாய். 9. 7: 9. 6. திருவாய். 9. 7: 10.

7. *"விஷ்ணுபோதம் விராகாக்யத் திஞ்சிதஸ்தி பராயணம்" என்பது, விஷ்ணுதர்மம்.*

தவிர வேறு ஒருசாதனம் இல்லை" என்கிறபடியே நடத்துகின்ற விஷ்ணுபோதமான அவ்வெம்பெருமானுடைய, ஆந்ருசம்ஸ்யம் - [1] "ஆஆ அடியான் இவன்என்று அருளாய்" என்று விரும்பும்படியாக இருக்கும் அடியார்கள் விஷயத்தில் செய்கிற திருவருள், நாவாயிலே நிழல்எழும் - [2] "நாவாய் உறைகின்ற" என்று அவன் நித்தியவாசம் செய்கின்ற திருநாவாயிலே, உள்ளே நிற்கின்ற இறைவனது தன்மை இதுவோ என்று அறியலாம்படி அவ்வூரின் பெயராலே நிழல் எழும் என்கை.

நாவாய்போலே இருக்கின்ற அவ்விறைவன் நித்தியவாசம் செய்யும் தேசமாகையாலே நாவாய் என்று ஊருக்குப் பெயராயிற்று. விஷ்ணு ஓடமாயிருக்குந் தன்மை இதனால் பிரகாசித்தால் அதற்கு உறுப்பான அருள் தன்னடையே போதருமன்றோ. [3] "கருணையாலும் அடியார்கள் விஷயத்தில் செய்யும் அருளாலும்" என்று வேறுபடுத்திச் சொல்லி, [4] "பெண்காப்பாற்றப்படவில்லையே என்ற கருணையாலும் நம்மை அடைந்தவர்களைக் காப்பாற்றவில்லையே என்ற ஆந்ருசம்ஸ்யத்தாலும் ஸ்ரீராமபிரான் வருந்தினார்" என்கையாலே ஆந்ருசம்ஸ்யமாவது - அடியார்கள் விஷயமான அருள். (31)

181

[5] *சரண்யமுகுந்தத்வம், உத்பலாவதகத்திலே பிரசித்தம்.*

என்பது, சூத்திரம்.

---

1. திருவாய். 9. 8: 7. 2. திருவாய். 9. 8: 7.

3. அருள்வேறு, ஆந்ருசம்ஸ்யம் வேறு என்பதனைப் பிரமாணங்கொண்டு விளக்குகிறார் 'கருணையாலும்' என்று தொடங்கி.
"காருண்யேந ஆந்ருஸம்ஸ்யேந"
என்பது, ஸ்ரீராமா. சுந். 15: 49.

4. "ஸ்திரீ ப்ரணஷ்டேதி காருண்யாதாச்ரிதேத்யாந்ருஸம்ஸ்யதா" என்பது, ஸ்ரீராமா. சுந். 15: 50.

5. திருக்கண்ணபுரம் என்னும் திவ்யதேசத்தில் மோக்ஷத்தைக் கொடுக்கும் முதன்மைக்குணம் விளக்கும் என்கிறார். சரண்யன் - இறைவன். "சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம்" என்றதனை நோக்கிச் 'சரண்யன்' என்கிறார். "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'முகுந்தத்வம்' என்கிறார். முகுந்தத்வம் - மோக்ஷத்தைக் கொடுக்கும் தன்மை. உத்பலாவதகம் - முமுக்ஷுக்களைக் காப்பாற்றும் இடம்; திருக்கண்ணபுரம். உத்பல அவத் அகம் என்று பிரித்துக்கொள்க. அவத் - காப்பாற்றுதல். இத்தன்மை புராணத்திலும் விளக்கப்பட்டிருத்தலால் 'பிரசித்தம்' என்கிறார்.

வியாக் :— சரண்ய முகுந்தத்வம் - [1] "சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம், மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்று மேலே சொன்ன விசேடத்தாலே எல்லார்க்கும் புகலாகப் பற்றுவதற்குத் தக்கவனாயிருக்குமவனுடைய மோக்ஷத்தைக் கொடுக்கும் தன்மை, உத்பலாவதகத்திலே பிரசித்தம் - [2] "உத்பலாவதகம் என்ற திவ்விய விமானத்திலே தாமரைக்கண்ணனும் எப்போதும் சர்வாங்க சுந்தரனுமான சௌரிராஜனைச் சேவிக்கிறேன்" என்கிறபடியே திருக்கண்ணபுரத்தில் உத்பலாவதகம் என்னும் பெயரையுடைத்தான திவ்விய விமானத்தில் நிற்கிற நிலையிலே எல்லாரும் அறியலாம்படி பிரசித்தம் என்கை.

முகுந்தத்வமாவது, மோக்ஷபூமியைக் கொடுக்கும் முதன்மை. "வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்னும் திருப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றியாயிற்று இவர் இப்படி அருளிச்செய்தது. பலம் என்றது மாம்சம். உத்பலர் என்றது மாம்சம் நீங்கினவர். அதாவது, மாம்ச சரீரத்தையுடையராய் அன்றிக்கே சரீரத்தை உலர்த்துகையாலே நீங்கிய மாம்சத்தையுடையராய்க் கொண்டு சரீரத்தில் விருப்பின்றியிருக்கும் முமுக்ஷுக்களைக் குறிக்கின்றது. [3] "அவர்களை அதாவது - மாம்சம் இல்லாத சரீரத்தையுடைய முமுக்ஷுக்களைக் காப்பாற்றுகின்ற என்னுடைய இருப்பிடத்தை உத்பலாவதகம் என்று சொல்லுகிறார்கள்" என்கிறபடியே முமுக்ஷுக்களைக் காப்பாற்றுகிறவன் எழுந்தருளியிருக்கையாலே அங்குத்தை திவ்யவிமானத்துக்கு உத்பலாவதகம் என்று பெயராகையாலே மோக்ஷத்தைக் கொடுக்கும் தன்மை அந்தத்தலத்திலே பிரசித்தம் என்கிறார் என்றபடி. (32)

182

[4] *மார்க்கபந்து சைத்யம், மோஹநத்தே மடுவிடும்.*

என்பது, சூத்திரம்.

---

1. *திருவாய். 9. 10: 5.*

2. *உத்பலாவதகே திவ்யே விமாநே புஷ்கரேக்ஷணம்*
ஸௌரிராஜம் அஹம்வந்தே ஸதா ஸர்வாங்க ஸுந்தரம்.

என்பது, புராணம்.

3. *"தேஷாம்மமாவதோ வாஸ முத்பலாவதகம்விது:"*

என்பது, பிரமாணம்.

4. *திருமோகூர் என்னும் திவ்ய தேசத்தில் இறைவனுடைய தன்மை என்ற குணம் விளக்கும் என்கிறார் இச்சூத்திரத்தால். "காளமேகத்தை அன்றி மற்றொன்றிலம் கதி", "ஆத்தன் தாமரைஅடி அன்றி*

வியாக் :—மார்க்கபந்து - மேலே கூறியபடி மோக்ஷத்தைக் கொடுக்குமவனை தன்னுடைய திருவருளாலே மோக்ஷத்தை அடைவார்க்குக்[1] "காளமேகத்தை அன்றி மற்றொன்றுஇலம் கதி" என்றும், [2] "ஆத்தன்தாமரை அடிஅன்றி மற்றிலம் அரணே" என்றும் வருகின்றவாறே நம்பத்தகுந்தவனாய்க் கூடக் கொண்டுபோம் வழித்துணையானவனுடைய, சைத்யம் - [3] "சுரிகுழல் கமலக்கண் கனிவாய்க் காளமேகம்" என்றும், [4] "அவன்அடி நிழல்தடம்" என்றும், [5] "மரதக மணித்தடம்" என்றும் சொல்லும்படியிருந்துள்ள, பிறப்பு இறப்புக்களில் உழன்று திரிவதால் உளவாய எல்லாத்தாபங்களையும் போக்கும்படியான குளிர்ச்சி, மோஹனத்தே - அமுதத்தைக் கொடுக்கும் சமயத்தில் அசுரர்களை மயங்கச்செய்த இடம் ஆகையாலே மோஹந க்ஷேத்திரமான திருமோகூரிலே, மடுவிடும் - நிறைந்து நிலைபெற்றிருக்கும் என்கை.

"மரதகமணித்தடம்" என்ற திருப்பாசுரப் பகுதியை நோக்கி "மடு விடும்" என்கிறார். (33)

183

[6] ஸைன்ய புத்ர சிஷ்ய ஸாத்ய சித்த பூசுர அர்ச்சனத்துக்கு, முக நாபி பாதங்களைத் துவாரத்ரயத்தாலே காட்டும் சாம்யம், அநந்தசயனத்திலே வியக்தம்.

என்பது, சூத்திரம்.

மற்றிலம் அரண்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி 'மார்க்கபந்து' என்கிறார். மார்க்கபந்து - வழித்துணைவன். "சுரிகுழல் கமலக்கண் கனிவாய்க் காளமேகம்" என்றும், "அவனடி நிழல் தடம்" என்றும், "மரதக மணித்தடம்" என்றும் வருகின்ற திருப்பாசுரப் பகுதிகளைத் திருவுள்ளம்பற்றிச் 'சைத்யம்' என்கிறார். சைத்யம் - குளிர்ச்சி. தேவர்களுக்கு அமுதம் அளித்த சமயத்தில் அசுரர்களை மயங்கச்செய்த செயலோடே இறைவன் சேவை சாதிக்கும் இடமாதலால் இத்தலத்தை 'மோஹனம்' என்கிறார். "தயரதன் பெற்ற மரதகமணித்தடம்" என்னும் திருப்பாசுரப் பகுதிக்குச்சேர 'மடுவிடும்' என்கிறார்.

1. திருவாய். 10. 1: 1.
2. திருவாய். 10. 1 6.
3. திருவாய். 10. 1: 1.
4. திருவாய். 10. 1: 2.
5. திருவாய். 10. 1: 8.

6. *திருவனந்தபுரத்தில் சாம்யம் என்ற குணம் விளங்கும் என்கிறார் இச்சூத்திரத்தால். சாம்யம் - வேறுபாடு கருதாது ஒரே தன்மையாகப் பார்க்கும் குணம்.*

வியாக் :—சசைன்ய சாத்ய - [1] "அமரர்கோன் அர்ச்சிக்கின்று அங்ககப்பணி செய்வர் விண்ணோர்" என்கிற சேனையோடு கூடின சேனை முதலியாராகிற [2] "அநாதிகாலமாக இருந்துவரும் நித்தியர்கள் என்று சொல்லப்படும் சூரிகள் எவ்விடத்தில் இருக்கிறார்களோ" என்கிறபடியே நித்தியசூரிகளில் தலைவரான சேனை முதலியாராகிற சாத்தியருடையவும், புத்ர சித்த - [3] "அமரராய்த் திரிகின்றார்கட்கு ஆதி" என்கையாலே புத்திரர்களான பிரமன் முதலியோர் ஆகிற

இச்சூத்திரத்தை, சசைன்ய சாத்ய அர்ச்சனத்துக்கு முகத்தையும், சபுத்ர சித்த அர்ச்சனத்துக்கு நாபியையும், சசிஷ்ய பூசுர அர்ச்சனத்துக்குப் பாதங்களையும் துவாரத்திரயத்தாலே காட்டும் சாம்யம் என்று நிரல் நிறையே கொள்க. 'ஸ சைன்ய' என்பதிலே உள்ள 'ஸ' என்னும் எழுத்தினைப் பிரித்து 'புத்ர, சிஷ்ய' என்ற சொற்களோடும் கூட்டுக. 'ஸ' என்பதற்குக் கூடிய என்பது பொருள்.

இத்திவ்யதேசத்தில் திருமுகம், திருநாபி, திருவடி என்னும் இவற்றை மூன்று திருவாசல்களாலே சேவிக்கவேண்டுமாதலின் 'முகநாபி பாதங்களைத் துவாரத்திரயத்தாலே காட்டும்' என்கிறார். துவாரத்திரயம்- மூன்று திருவாசல்கள். இத்திவ்யதேசத்தைப்பற்றிய திருப்பதிகத்தில் "அனந்தபுரத்து, அமரர்கோன் அர்ச்சிக்கின்று அங்கு அகப்பணி செய்வர் விண்ணோர்" என வருகின்ற திருப்பாசுரப் பகுதியை நோக்கி, 'சசைன்ய சாத்ய அர்ச்சனத்துக்கு முகத்தைக் காட்டும் அனந்தசயனம்' என்கிறார். சாத்யர் - சேனை முதலியார். இவர் சேனை முதலியாராதலின் இறைவனுடைய திருமுகம் நோக்கிப் பேசும் தகுதியை நோக்கி இவர்க்குத் திருமுகவாசல் கூறப்படுகின்றது. "அமரராய்த் திரிகின்றார்கட்கு ஆதிசேர் அனந்தபுரம்" என்ற திருப்பாசுரப்பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'ச புத்ர அர்ச்சனத்துக்கு நாபியைக் காட்டும் அனந்தசயனம்' என்கிறார். புத்ரன் - பிரமன். இவன் திருவுந்தித் தாமரையில் அவதரித்தவனாதலின் இவனுக்குத் திருநாபிவாசல் கூறப்படுகின்றது. "படமுடையரவிற் பள்ளிபயின்றவன் பாதம் காண, நடமினோ நமர்கள் உள்ளீர்" என்ற திருப்பாசுரப்பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'ச சிஷ்யபூசுர அர்ச்சனத்துக்குப் பாதம் காட்டும்' என்று கூறப்படுகிறது. சிஷ்யர் - ஆழ்வாருடைய சிஷ்யர்கள். சிஷ்யராகிற பூசுரர் என்க. பூசுரர் - நிலத்தேவர். இவர்கள் பாதம் காண நடப்பவர்கள் ஆதலின் இவர்கட்குப் பாதவாசல் கூறப்படுகின்றது. வியக்தம் - தெளிவு.

1. திருவாய். 10. 2: 6.
2. "யத்ர பூர்வே ஸாத்யா:" என்பது புருஷ சூக்தம்.
3. திருவாய். 10. 2: 6.

சித்தர்களுடையவும், சிஷ்ய பூசுர - [1] "படமுடையரவில் பள்ளி பயின்றவன் பாதம் காண, நடமினோ நமர்கள்உள்ளீர்" என்கிறபடியே இவ்வாழ்வாருடைய உபதேசம் கேட்ட சிஷ்யர்களான அந்தணர்களுடையவும்ஆன இவர்களுடைய, அர்ச்சனத்துக்கு - அருச்சனைக்கு, முகம் நாபி பாதங்களைத் துவாரத் திரயத்தாலே காட்டும் - திருமுகமும் திருநாபியும் திருவடிகளும் ஆகிற இவற்றைத் திருவாசல்கள் மூன்றாலும் காட்டுகின்ற, சாம்யம் - நித்தியசூரிகள் என்றும், இவ்வுலக மக்கள் என்றும் வேறுபாடுபாராத ஒத்திருக்கும் குணம், அனந்தசயனத்திலே வியக்தம் - திருவனந்தபுரத்திலே திருக்கண்வளர்கின்ற வகையிலே தெளிவாக இருக்கும் என்கை. *(34)*

184

[2] மோக்ஷதானத்தில் பிரணத பாரதந்த்ர்யம்,
வளம்மிக்க நதியிலே கரைபுரளும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—மோக்ஷதானத்தில் பிரணதபாரதந்த்ர்யம் - [3] "அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதிவகையே" என்றும், [4] "விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதிவகையே" என்றும் சொல்லுகிறபடியே மேல் திருவாய்மொழியில் கூறியவாறே எள்கல் இராகம் இலாத இறைவன் அடியார்கட்கு மோக்ஷத்தைக் கொடுக்குமளவில் அவர்கள் விதித்தபடி செய்வானாய் நிற்கிற அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் தன்மை, வளம் மிக்க நதியிலே - [5] "வளம் மிக்க வாட்டாற்றான்" என்கிறபடியே பாதுகாக்கப்படும் பொருள்கள் குறைவில்லாத தேசம் ஆகையாலே அவனுக்கு வளம்மிக்கு இருக்

1. *திருவாய். 10. 2: 8.*

2. *திருவாட்டாறு என்னும் திவ்யதேசத்தில், அடியார்கட்கு அந்தமில் பேரின்பவீடு அருளும்போது, அவர்கட்கு வசப்பட்டுக் கொடுக்கும் பாரதந்திரிய குணம் விளக்கும் என்கிறார் இச்சூத்திரத்தால்.*

"அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதிவகையே" என்றும், "விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதிவகையே" என்றும் வருகின்ற திருப்பாசுரப் பகுதிகளைத் திருவுள்ளம்பற்றி 'மோக்ஷதானத்தில் பிரணத பாரதந்த்ர்யம்' என்கிறார். மோக்ஷதானத்தில் - மோக்ஷத்தைக் கொடுப்பதில். பிரணதர் - அடியார்கள். வளமிக்க நதி - திருவாட்டாறு. வாட்டாறு என்ற திருப்பெயருக்குப் பொருந்த 'கரை புரளும்' என்கிறார்.

3. *திருவாய். 10. 6: 1.*
4. *திருவாய். 10. 6: 3.*
5. *திருவாய். 10. 6: 3.*

கிற திருவாட்டாற்றிலே, கரைபுரளும்-எல்லைகடந்து வெள்ளமிடும் என்கை.

வாட்டாறு என்ற பெயருக்கு ஏற்பக் 'கரைபுரளும்' என்கிறார். (35)

185

[1] தியாஜ்ய தேஹ வியாமோஹம், மருள்கள் கடியும் மயல்மிகு பொழிலிலே தழைக்கும்.

என்பது, சூத்திரம்.

வியாக்:—தியாஜ்ய தேஹ வியாமோஹம் - முமுக்ஷுக்களுக்கு விடத்தக்கதான சரீரத்தில், பிறவிமுடிவுறும் சரீரமாகையாலே, மனைவியினுடைய எச்சிலைவிரும்பும் அரசகுமாரனைப்போலே, [2] "வஞ்சக்கள்வனாய் நெஞ்சும் உயிரும் உள்கலந்து" என்றும், [3] "மாய ஆக்கை இதனுட்புகுந்து" என்றும் சொல்லுகிறபடியே இச்சரீரத்தின் இழிவினைப் பாராமல் உள்புகுந்தவனாய், [4] "திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே என்தலையே" என்ற திருப்பாசுரத்தின்படியே உகந்தருளின திவ்யதேசங்கள் எல்லாவற்றிலும் செய்யும் விருப்பத்தை இச்சரீரத்தில் ஒருகூற்றிலே செய்து, [5] "மங்கவொட்டு உன்மாமாயை" என்கிறபடியே அவனைக் கால்கட்டி விடுவிக்கவேண்டும்படி அவனுக்கு உண்டான மாபெருங்காதல், மருள்கள்கடியும் - [6] "மருள்கள்கடியும் மணிமலை திருமாலிருஞ்சோலைமலையே" என்கிறபடியே எல்லாருடைய அறிவின்மையை அடியோடு போக்குமதாய், மயல்மிகு - [7] "மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலை" என்கிறபடியே இனிமையின் மிகுதியாலே அநுபவிக்கின்றவர்களைப் பிச்சுஏற்றவற்றான, பொழிலிலே - சோலையையுடைய தெற்குத் திருமலையிலே, தழைக்கும் - நிறைந்து செல்லும் என்கை. பொழில் என்ற சொல்லுக்கு ஏற்பத் 'தழைக்கும்' என்கிறார். (36)

---

1. *திருமாலிருஞ்சோலைமலை என்னும் திவ்யதேசத்தில் வியாமோகம் என்ற குணம் விளக்கும் என்கிறார். வியாமோகம் - கழிபெருங்காதல். "செஞ்சொற் கவிகாள்", "திருமாலிருஞ்சோலைமலையே", "மங்கவொட்டு" என்று தொடக்கும் திருப்பாசுரங்களைத் திருவுள்ளம்பற்றி 'தியாஜ்ய தேஹ வியாமோகம்' என்கிறார். தியாஜ்யம் - விடத்தக்கது. மருள்கள் கடியும் மயல்மிகு பொழில் - திருமாலிரும் சோலைமலை.*

2. *திருவாய்.* 10. 7: 1.
3. *திருவாய்.* 10. 7: 3.
4. *திருவாய்.* 10. 7: 8.
5. *திருவாய்.* 10. 7: 10.
6. *திருவாய்.* 10. 7: 7.
7. *திருவாய்.* 2. 10: 3.

186

[1]அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வம், பெருநகரிலே பேர் பெற்றது.

என்பது, சூத்திரம்.

வியாக் :—அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வம் - [2]"திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்னத் திருமால்வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்" என்கிறபடியே தன்னுடைய அங்கீகாரத்துக்கு உறுப்பான புண்ணியம் சிறிதும் இல்லாதாரையும் மடிமாங்காய் இடுமாறுபோலே 'என்னூரைச் சொன்னாய்' என்பதுபோன்றனவான தன்நினைவின்றியே வரும்புண்ணியங்களை ஏற்றியும் அங்கீகரிப்பதற்கு இடம் பார்க்குமவனுடைய ஸ்வாமித்வம், பெருநகரிலே பேர் பெற்றது - [3]"பெருவரை மதிள்கள்சூழ்ந்த பெருநகர் அரவணைமேல்" என்கிறபடியே திருக்கண்வளர்ந்தருளுகிற திருப்பேர்நகரிலே பிரசித்தமாயிற்று என்கை.

ஆக, திருப்பதிகள்தோறும் ஒரோகுணம் முதன்மையாகப் பிரகாசிக்கும் என்னுமதனை இவர் மங்களாசாசனம் செய்த திவ்விய தேசங்கள் எல்லாவற்றிலும் காட்டினாராயிற்று. **(37)**

187

[4]இவற்றில் பிராவண்யம் இவள்பரமே என்ன உண்டாய், ஷோடசகலாபூர்ணமான சந்த்ரமண்டலம்போலே, பதினாறு திருநக்ஷத்திரம் நிரம்பினவாறே, தேவபோக்யமான அதில் அம்ருதம்போல் அன்றிக்கே, என்னுத் தமிழர் இசைகாரர் முதற்பத்தர் வானவர் என்னம்மான் பார் பரவு என்னும்படி சேச்வர விபூதி போக்யமான பாலோடு அமுதன்ன மென்மொழி முகஞ்செய்தது.

என்பது, சூத்திரம்.

---

1. திருப்பேர்நகர் என்னும் திவ்யதேசத்தில் ஸ்வாமித்வம் என்னும் குணம் விளங்கும் என்கிறார். "திருமாலிருஞ்சோலைமலை என்றேன்என்ன, திருமால் வந்து என்நெஞ்சு நிறையப் புகுந்தான்" என்ற திருப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி 'அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வம்' என்கிறார். இவ்வழியாலேயாகிலும் அங்கீகரிக்கப் பார்ப்பது தன்னுடைமையை விடமாட்டாமையாலே யாகையால் 'ஸ்வாமித்வம்' என்கிறார். அவகாசம் - சமயம். ஸ்வாமித்வம் - ஸ்வம்மையுடையவனும் தன்மை. ஸ்வம் - சொத்து, உடைமை.

2. திருவாய். 10. 8: 1. 3. பெரியதிருமொழி, 5. 9: 3.

4. ஷோடசகலா - பதினாறுகலைகள். சேச்வரவிபூதி - ஈச்வரனோடு கூடிய உலகம். முகம் செய்தது - அவதரித்தது

வியாக் :—[1] "இத் திவ்வியதேசங்களில் இவர்க்கு ஊற்றம் உண்டாயது எப்போது? இவர் பிரபந்தம் அருளிச்செய்யத் தொடங்கியது எந்த வயதிலே? இப் பிரபந்தத்திற்கு அதிகாரி நியமம் உண்டோ? இப் பிரபந்தத்தின் இனிமைதான் இருக்கும்படி எங்ஙனே? என்ன, அவற்றிற்கு விடை அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

இவற்றில் பிராவண்யம் - இவ் வர்ச்சாவதார திவ்விய தேசங்களில் அன்பு, இவள்பரமே என்ன உண்டாய் - [2] "முலையோ முழு முற்றும் போந்தில, பெருமான்மலையோ திருவேங்கடம் என்று கற்கின்ற வாசகம் - இவள்பரமே" என்னும்படி பருவம் நிரம்புவதற்கு முன்னே உண்டாய், ஷோடச கலாபூர்ணமான சந்த்ரமண்டலம் போலே - பதினாறு கலைகளும் நிறைந்த சந்திரமண்டலம்போலே, பதினாறு திருநக்ஷத்திரம் நிரம்பினவாறே - பதினாறு வயது நிறைந்தவாறே, தேவ போக்யமான அதில் அம்ருதம்போல் அன்றிக்கே - [3] "கிருஷ்ணபக்ஷத்தில் அமுதமயமான சந்திரன் தேவர்களால் அடிக்கடி உண்ணப்படுகிறான்" என்கிறபடியே தேவர்களுக்கு இனிய உணவாகையாலே அதிகாரி நியமமுடைத்தான அந்தச் சந்திரமண்டலத்தில் அமுதம்போல் அல்லாமல், என்னு - [4] "என்நாவில் இன்கவி"

---

1. "இவற்றில் பிராவண்யம் இவள்பரமே என்ன உண்டாய்" என்பது முடிய, இத்திவ்யதேசங்களில் இவர்க்கு ஊற்றம் உண்டாயது எப்போது என்பதற்கு விடை. "ஷோடச கலா பூர்ணமான சந்திர மண்டலம் போலே பதினாறு திருநக்ஷத்திரம் நிரம்பினவாறே" என்பது முடிய, இவர் பிரபந்தம் அருளிச்செய்யத் தொடங்கியது எந்த வயதிலே என்பதற்கு விடை. "தேவபோக்யமான அதில் அம்ருதம்போல் அன்றிக்கே என்னுத் தமிழர் இசைகாரர் முதல்பத்தர் வானவர் என்னம்மான் பார் பரவு என்னும்படி சேச்வரவிபூதி" என்பது முடிய, இப்பிரபந்தத்திற்கு அதிகாரி நியமம் உண்டோ என்பதற்கு விடை. "பாலோடு அமுதன்ன மென்மொழி" என்பது முடிய, இப்பிரபந்தத்தின் இனிமைதான் இருக்கும்படி எங்ஙனே என்பதற்கு விடை.

2. திருவிருத்தம், 60.

3. "க்ருஷ்ணபக்ஷே அமரை: ஶஶ்வத்பீயதே வைலக்ஷதாமய:" என்பது, ஸ்ரீவிஷ்ணு புரா. 2. 11: 22.

"பொருந்த வானுறை நான்கலை நாடொறும் புணர்வோன்
அருந்த வானவர்க் காரமுது அன்புடன் அளிப்போன்"

என்பது, வில்லிபாரதம் ஆதிபர். குருகுலச் சர்க்கம்.

4. திருவாய். 3. 9: 1.

இத்திருப்பாசுரத்தால், இத்திருவாய்மொழி, இதனை அருளிச்செய்த ஆழ்வார்தமக்கே இனியதாக இருப்பது என்பதனை அறிகின்றோம்.

என்றும், தமிழர் இசைகாரர் -[1] "பாலேய்தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்" என்றும், முதல்பத்தர் -[2] "தூமுதல் பத்தர்க்குத் தான் தன்னைச் சொன்ன" என்றும், வானவர் -[3] "கேட்டுஆரார் வானவர்கள் செவிக்கு இனிய செஞ்சொல்லே" என்றும், என்னம்மான் -[4] "தென்னா என்னும் என்னம்மான் திருமாலிருஞ்சோலையானே" என்றும், பார்பரவு -[5] "பார்பரவு இன்கவிபாடும் பரமரே" என்றும், என்னும்படி-என்று சொல்லுகிறபடியே தான் பிறர் என்னும் வேறுபாடு, நித்தியசூரிகள் இவ்வுலகமக்கள் என்னும் வேறுபாடு, எல்லாப் பொருள்களையும் நியமிக்கின்ற இறைவன் நியமிக்கப்படும் பொருளான இவ்வுலகம் என்னும் வேறுபாடு நீங்க, சேச்வர விபூதி போக்யமான - சர்வேச்வரனோடே-கூட இரண்டுவகைப்பட்ட உலகங்களும் அநுபவிப்பதற்குத் தகுதியாக, பாலோடு அமுதன்ன மென்மொழி -[6] "பாலோடு அமுதுஅன்ன ஆயிரம்", [7] "அமுதமென்மொழி" என்கிறபடியே [8] பொருளும் சொல்லும் கலந்த சுவையாலே பாலும் அமுதும் கலந்தாற்போலேயாய், இனிமையின் மிகுதியாலும் தன்னை உண்பாரை என்றும் உள்ளவராகச் செய்யும் தன்மையாலும் அமுதத்தை ஒத்ததாய், அதனினின்றும் வேறுபட்டதான மென்மையையுடைத்தான சொற்கள், முகம் செய்தது-இவர் திருவாயினின்றும் தோன்றியது என்கை. (38)

---

1. *திருவாய்.* 1. 5: 11. 2. *திருவாய்.* 7. 9: 3.

இமக்குக் காட்டப்பட்ட இவ்விரு திருப்பாசுரங்களும் இத்திருவாய்மொழி, தன்னைக் கற்குமவர்களுக்கு இனியதாக இருப்பது என்பதற்கு மேற்கோள்.

3. *திருவாய்.* 10. 6: 11.

இத்திருப்பாசுரம், நித்தியர்கட்கும் முக்தர்கட்கும் இனியதாக இருப்பது இத்திருவாய்மொழி என்பதற்கு மேற்கோள்.

4. *திருவாய்.* 10. 7: 5.

இத்திருப்பாசுரத்தால் சர்வேச்வரனுக்கும் இனியதாக இருப்பது இத்திருவாய்மொழி என்பதனை அறிகிறோம்.

5. *திருவாய்.* 7. 9: 5.

இத்திருப்பாசுரத்தால் பார் முழுதும் அநுபவிப்பதற்குத் தகுதியானது இத்திருவாய்மொழி என்பதனை நாம் அறிகிறோம்.

6. *திருவாய்.* 8. 6: 11. 7. *திருவாய்.* 6. 5: 2.

8. *நற்குணக் கடலும் தன்னிகரில்லாத் தலைவனுமான இறைவன் பொருளாகவும், மிகச்சிறந்த இவர் அருளிச்செயல் சொற்களாகவும் அமைந்த அமைப்பினாலே என்றபடி.*

188

> [1] *நீர்பால் நெய் அமுதாய் நிரம்பின ஏரி நெளிக்குமாபோலே, பரபக்தியாதிமய ஜ்ஞாநாம்ருத அப்தி நிமிகிற வாய்கரை மிடைந்து, மொழிபட்டு அவாவில் அந்தாதி என்று பேர்பெற்றது.*

என்பது, சூத்திரம்.

வியாக் :—இவர்பக்கல் இப்பிரபந்தம் அவதரிக்கத் தொடங்கின காலத்தை அருளிச்செய்தார் மேல். இப்பிரபந்தம் அவதரிக்கிற அளவில் 'இப்படி நாம் அவனைக் கவிபாடவேண்டும்' என்று நினைத்திருந்து பாடினரோ என்னும் வினவிற்கு விடையாக, இப்பிரபந்தம் அவதரித்த முறையை அருளிச்செய்கிருர் இச்சூத்திரத்தால்.

நீர் பால் நெய் அமுதாய் நிரம்பின ஏரி - நீர்பாலாய் பால்நெய்யாய் நெய்அம்ருதமாய் அதனாலே நிரம்பினது ஓர்ஏரி, நெளிக்குமாபோலே - பொருமல் நெளிந்து உடையுமாறு போலே, பரபக்திஆதிமய ஜ்ஞாந அம்ருத அப்தி - [2] "மயர்வற மதிநலம் அருளினன்" என்கிற இடத்தில் கர்மத்தாலும் ஞானத்தாலும் உண்டாகின்ற பக்தியின் கட்டத்திலே பகவானுடைய திருவருளாய், அது காரணமாகப் பரபக்தி தொடங்கிப் பிறக்கையாலே ஞானம் முதலிலே பரபக்திரூபமாய், பரபக்தியானது பரஞானமாய், பரஞானமானது பரமபக்தியாய்,

---

1. *திருவாய்மொழி அவதரித்த முறையை இச்சூத்திரத்தால் அருளிச்செய்கிருர். நீர் பாலாய், பால் நெய்யாய், நெய் அமுதமாய், அதனாலே நிரம்பின ஓர்ஏரிக்கு ஆழ்வாரை உவமிக்கிருர் இச்சூத்திரத்தில். "மயர்வற மதிநலம் அருளினன்" என்ற இடத்தில் கர்மத்தாலும் ஞானத்தாலும் உண்டாகின்ற பக்தியின் நிலையிலே இறைவனுடைய திருவருள் நிற்க, அது காரணமாகப் பரபக்தி தொடங்கிப் பிறக்கையாலே, ஞானம் முதலிலே பரபக்தி ரூபமாய், பரபக்தியானது பரஞானமாய், பரஞானமானது பரமபக்தியாய் முதிர்ந்தபடியை நோக்குங்கால், நீர் பால் நெய் அமுதாய் நிரம்பின ஓர் ஏரியாக ஆழ்வாரைக் கொள்ளத்தட்டில்லை. நீரின் நிலையிலே ஞானம், பாலின் நிலையிலே பரபக்தி, நெய்யின் நிலையிலே பரஞானம், அமுதின் நிலையிலே பரமபக்தி. இவற்றின் தன்மைகளை இந்நூலில் 230, 231, 232-ஆம் சூத்திரங்களில் காண்க.*

"நியும் வாயொடு கண்கள் நீர்மல்க நெக்கொசிந்து கரையுமே" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'பரபக்தியாதி மய ஞாநாம்ருத அப்தி வாய்கரை' என்று அருளிச்செய்கிருர். ஞானஅம்ருத அப்தி - ஞான அமுதக் கடல். "மொழிபட்டோடும் கவிஅமுதம்" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'மொழிபட்டு அவாவில் அந்தாதி என்று பேர் பெற்றது' என்கிருர். அங்ஙனம் உள்ளே தேங்கியிருந்த அமுதவெள்ளமே திருவாய்மொழி ரூபமான பேர்யாறு பெருகிவந்தது என்றபடி.

2. திருவாய். 1. 1: 1.

[1] "இறைவனிடத்துள்ள பக்தி என்ன, உண்மையான ஞானம் என்ன, இவைகளாகிற அமிருதக்கடலின் வெள்ளம்போலே மங்களமான திருவாக்குகளால்" என்கிறபடியே அந்தப் பரபக்தி முதலியவை களால் நிறைந்த ஞானமாகிற அமுதக்கடலானது, நிமிகிற வாய்கரை - தாம் தரித்திருக்கும்பொருட்டு வெள்ளமிடவேண்டு மென்ற விருப்பம் பிறந்து [2] "நிமியும் வாயொடு கண்கள் நீர்மல்க" என்கிறபடியே நெளிகிற வாய்கரையாலே, மிடைந்து - [3] "மிடைந்த சொல் தொடை" என்கிறபடியே சொற்கள் தாம் 'நாம் இங்குத்தைக் குத் தொண்டு செய்தோமாக வேண்டும்' என்று 'என்னைக்கொள்க, என்னைக்கொள்க' என்று மேல்விழுகையாலே நெருங்கிக்கொண்டு, மொழிபட்டு - [4] "மொழிபட்டு ஓடும் கவியமுதம்" என்கிறபடியே சொற்கள் உருவகமாகப் பெருக்கு எடுத்து, இப்படிப் பரபக்தி முதலிய மூன்று நிலைமையை அடைந்த பக்தியினுல் தூண்டப்பெற்று அவ தரிக்கையாலே, அவாவில் அந்தாதி என்று பேர்பெற்றது - [5] "அவா வில் அந்தாதிகளால் இவை ஆயிரமும்" என்கிறபடியே பக்தி பலாத் காரத்தால் பிறந்த அந்தாதியான ஆயிரம் என்று பேராயிற்று என்கை.

ஆக, இவர் இப்பிரபந்தம் அருளிச்செய்கைக்கு அடியான அன்பு பிறந்த காலத்தையும், அருளிச்செய்யத் தொடங்கின காலத்தையும், இது எல்லார்க்கும் பொது என்பதனையும், இதனுடைய இனிமையினை யும், அவதரித்த முறையினையும் சொல்லிற்றாயிற்று. (39)

189

[6]மனம்செய் எல்லையில் ஞானஇன்பத்தை நின்மல மாக வைத்தவர், ஞானப்பிரானை ஞானத்து வைம் மின் என்ற இது, தத்வவிவேக நித்யத்வ அநித்யத்வ நியந்த்ருத்வ ஸௌலப்ய ஸாம்ய அகங்கார இந்த்ரிய தோஷ பல மந:பிராதாந்ய கரணநியமந ஸுக்ருதி பேத தேவாஸுரவிபாக விபூதியோக விச்வரூப தர்சந ஸாங்கபக்தி பிரபத்தி துவைவித்யாதிகளாலே அன்று ஓதிய கீதா ஸமம் என்னும்.

என்பது, சூத்திரம்.

---

1. *"அச்யுத பக்தி தத்வஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹ ஸுபைர் வசோபி:"*

என்பது, தோத்திர ரத்நம், 3.

2. *திருவாய்.* 6. 5: 2.
3. *திருவாய்.* 1. 7: 11.
4. *திருவாய்.* 8. 10: 5.
5. *திருவாய்.* 10. 10: 11.
6. *இச்சூத்திரத்தை, வைம்மின் என்ற இது, கீதா சமம் என்னும்*

வியாக் :—இனி மேல் இப்பிரபந்தத்தில் சொல்லப்படுகின்ற அர்த்த விசேடங்களை எல்லாம் விரிவாக அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அவற்றில் முதலிலே, பகவத் தத்துவத்தை உள்ளங்கை நெல்லிக்கனியாக நேரே அறிந்த ஆழ்வார், இவ்வுலகமக்கள் உய்வுபெறும் பொருட்டு உபதேசித்த இப்பிரபந்தம், சொல்லப்படுகிற பொருள்களின் ஒப்புமையாலே பகவானால் சொல்லப்பட்ட கீதையாகிய உபநிடதத்திற்கு ஒப்பாகச் சொல்லப்படும் என்கிறார் இச்சூத்திரத்தால்.

[1] மனம் செய் எல்லையில் ஞான இன்பத்தை நின்மலமாக வைத்தவர் - *மனம்செய்* - [2] "*எல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே மனம்செய் ஞானத்து உன்பெருமை*" என்று சொல்லுகிறபடியே எல்லாப் பொருள்கட்கும் காரணனாய், எல்லையில் - [3] "*எல்லையில் ஞானத்தன் ஞானமஃதே கொண்டு எல்லாக் கருமங்களும் செய்*" என்கிறபடியே எல்லை இல்லாத நினைவின் உருவமான ஞானத்தையுடையனாய், ஞான இன்பத்தை - [4] "*சூழ்ந்ததனில் பெரிய சுடர் ஞான இன்பமேயோ*" என்கிறபடியே மூலப்பகுதியும் புருடனும் ஆகிற தத்துவங்கள் இரண்டும் தனக்குள்ளே ஆம்படி பரந்து, தான் அளவிட்டு அறியமுடியாததாய் ஒளிமயமாய் ஞான ஆனந்த லக்ஷணமாய் இருக்கிற சொரூபத்தையுடையனான சர்வேச்வரனை, *நின்மலமாக வைத்தவர்* - [5] "*எனது ஆவியுள்ளே நிறைந்த ஞானமூர்த்தியாயை நின்மலமாக வைத்து*" என்கிறபடியே நிறைந்த ஞானசொருபனை உன்னை என் நெஞ்சிற்குள்ளே மிகத் தெளிவாக அநுபவித்த என்னும்படி நேரே அறிந்த ஆழ்வார்.

என்று முடிக்க. 'தத்வவிவேகம்' என்று தொடங்கி நடுவில் கூறப்படுமவை எல்லாம், சமம் என்பதற்குக் கூறப்படும் காரணங்கள்.

1. *பிறர்க்கு உபதேசம் செய்வதற்கு வேண்டிய தகுதிகள் நிறைந்தவர் ஆழ்வார் என்பதனை இவ்வாக்கியத்தால் தெரிவிக்கிறார். ஞானனந்தமயனை இறைவனைத் தமது திருவுள்ளத்தால் மிகத் தெளிவாக அநுபவித்து நேரே அறிந்தவர் ஆழ்வார் என்பதனைத் தெரிவித்தபடி. இதனால் அருச்சுனனுக்கு உபதேசித்த ஸ்ரீ கண்ணபிரானை ஒத்தவர் ஆழ்வார் என்பதனைத் தெரிவித்தவாறு.*

நின்மலம் - குற்றம் இல்லாமை; மிகத் தெளிவாக என்றபடி.

2. *திருவாய்.* 1. 5: 2.　　3. *திருவாய்.* 3. 10: 8.

4. *திருவாய்.* 10. 10: 10.　　5. *திருவாய்.* 4. 7: 7.

[1] ஞானப்பிரானை ஞானத்து வைம்மின் என்ற இது - ஞானப் பிரானை - [2] "இருங்கற்பகஞ்சேர், வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும், எறிதிரை வையமுற்றும் ஏனத்து உருவாய் இடந்த, ஞானப்பிரானை அல்லால் இல்லை நான் கண்ட நல்லது" என்கிறபடியே பிரளயவெள்ளத்திலே மூழ்கின பூமியை மஹாவராகமாய் மேலே கொண்டுவந்து நிறுத்திய ஞானசக்திகளையும், உடைமை உடையனும்தன்மை ஆகிற சம்பந்தத்தையுமுடையனாய், வராக சரம சுலோகங்கள் இரண்டன் உபதேசமுகத்தாலே சரமோபாயத்தை வெளியிடுகையாலே ஞான உபகாரகனுமாய் இருக்கிறவனை ஒழிய, எல்லார்க்கும் உய்வுபெறுதற்குக் காரணமாய் இருப்பது ஒன்று இல்லை; இது நான் அறுதியிட்ட மிக மிக உயர்ந்த பொருள் என்று முதல் பிரபந்தமான திருவிருத்தத்தில் அருளிச்செய்த விஷயத்தை உபாயமாகப் பற்றச் சொல்லுகிற அளவில், ஞானத்து வைம்மின் என்ற இது - [3] "திருக்குருகூரதனை, உளங்கொள் ஞானத்து வைம்மின் உம்மை உய்யக்கொண்டு போகுறிலே" என்கிறபடியே உய்வுபெற வேண்டியிருந்தீர்கோளாகில் அவன் நித்தியவாசம் செய்கிற தேசத்தை உங்கள் மனத்தின் ஞானத்துக்கு விஷயமாக்குங்கோள் என்று இவ்வுலக மக்களைக் குறித்து உபதேசித்த இப்பிரபந்தம்,

[4]. தத்வ விவேகம் - தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டு வந்து அவதரித்தருளின ஸ்ரீ கிருஷ்ணன் [5] "தகுதியில்லாத இடத்தில் உண்டான பந்து சிநேகம் கருணை ஆகியவற்றாலும் தன் தர்மத்தில் அதர்மபுத்தியாலும் கலங்கித் தன்னைச் சரணம் அடைந்த அருச்சுனனுக்காக ஸ்ரீ கீதா சாஸ்திரம் செய்யப்பட்டது" என்கிறபடியே இடம் அல்லாத இடத்தில் உண்டான பந்துக்கள்பக்கல் வைத்த சிநேகம் கருணை ஆகியவற்றாலும் தன்னுடைய க்ஷத்திரிய தர்மத்தில்

---

1. 'ஞானப்பிரானை' என்று தொடங்கும் இவ்வாக்கியத்தால், தாம் அறுதியிட்ட மிகச் சிறந்த ஞான இன்பத்தையே உய்வுபெறுவதில் விருப்பமுள்ள பிறர்க்கும் உபதேசிக்கிறார். இதற்காகவே திருவாய்மொழி அவதரித்தது என்பது தெரிவிக்கப்படுகிறது.

2. திருவிருத்தம், 99.   3. திருவாய். 4. 10: 9.

4. சீவான்மாக்களுக்கும் பரமான்மாவுக்கும் உள்ள பேதம், உயிர்களுக்குள்ளே ஒன்றற்கொன்று உள்ள பேதம், சரீரத்தைக் காட்டிலும் உயிர்களுக்குள்ள பேதம் என்னும் இம்மூன்றனுடைய பகுத்தறிவு ஞானத்தையே சண்டுத் 'தத்துவ விவேகம்' என்ற தொடர்மொழியால் குறிக்கிறார்.

5. அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்மதியாகுலம்
பார்த்தம் ப்ரபந்ந முத்திஸ்ய ஶாஸ்த்ராவதரணம் க்ருதம்.
என்பது, ஸ்ரீ கீதார்த்தசங்கிரஹம், 5.

அதர்மபுத்தியாலும் கலங்கி, [1] "போர் புரியமாட்டேன்" என்கிறபடியே போரைச் செய்யாதவனுய், [2] "எனக்கு எது நல்லது என்று தங்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ அதனைச் சொல்லவேண்டும்; நான் தங்களுக்குச் சிஷ்யன்; சரணம் அடைந்த என்னை நியமிக்கவேண்டும்" என்ற அருச்சுனனைத் தெளிவித்துப் போரினைச் செய்யுமவனுக்குதல் காரணமாக, [3] "அறிவினல் குறைஇல்லா அகல்ஞாலத்தவர் அறிய நெறியெல்லாம் எடுத்து உரைத்த நிறைஞானத்து ஒருமூர்த்தி" என்கிறபடியே உலகத்தார் தீதில் நன்னெறி எய்தத் தக்க சாஸ்திர மாம்படி எல்லாப்பொருளும் விரித்த ஸ்ரீ கீதையில் முதலிலே சரீரத்தையே ஆத்மாவாக நினைத்ததனுல் உண்டான பந்து சினேகத்தையும் கொல்லுதற்கு அஞ்சின அச்சத்தையும் மாற்றுகைக்காகத் தத்துவ ஞானத்தை உபதேசிக்கத் தொடங்கின அளவிலே [4] "நான் முன் சென்ற காலத்தில் இல்லை என்கிறது இல்லை, இருந்தேன்; நீயும் இல்லை என்கிறது இல்லை, இருந்தாய்; இங்கு வந்திருக்கிற அரசர்களும் இல்லை என்கிறது இல்லை, இருந்தார்கள்; நானும் நீயும் அரசர்களும் ஆகிற எல்லோரும் இனி வரும் காலத்தில் இல்லையாவோம் என்பது இல்லை, இருப்போம்" என்கிறபடியே சர்வேச்வரனுன தன்னைப்போன்று எல்லா ஆன்மாக்களும் நித்தியமாக உள்ளவர்கள் என்று அருளிச்செய்கிற வழியாலே சீவான்மாவுக்கும் பரமான்மாவுக்கும் வேறுபாடு, சீவான்மாக்களுக்குள் ஒன்றற்கொன்று வேறுபாடு

---

1. *"ந யோத்ஸ்யாமி" என்பது ஸ்ரீ கீதை*, 2: 6.

2. *யச்ச்ரேயஸ்ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே*
சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்.

என்பது ஸ்ரீ கீதை, 2: 7.

3. *திருவாய்*: 4. 8: 6.

4. *ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா:*
ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்.

என்பது, ஸ்ரீகீதை, 2: 12.

இச்சுலோகத்தில் 'நான், நீ, இவர்கள்' என்று பிரித்து அருளிச் செய்வதனுல், ஜீவான்மாவும் பரமான்மாவும் வேறுபட்டவைகள் என்றும் ஜீவபரபேதமும், ஆன்மாக்களுக்குள் ஒன்றற்கு ஒன்று வேறுபட்டிருக்கின்ற பேதமும் அறிகின்றோம்.

ஆகிய இவற்றை அருளிச்செய்து, [1]"ஒரு சரீரத்தில் இருக்கிற ஆன்மாவிற்கு அந்தச் சரீரத்தில் வருகிற இளமையும் யௌவனமும் முதுமையும் பற்றி எப்படி வருத்தமில்லையோ அப்படியே வேறு சரீரத்தை அடைகிறதும் வருத்தமில்லை; அந்த விஷயத்தில் தைரியமுள்ளவன் மயக்கத்தை அடையமாட்டான்" என்பது போன்றவைகளாலே சரீரம்வேறு, ஆன்மாவேறு என்பதனையும் சொல்லுகையாலே தத்துவ விவேகம் ஸ்ரீ கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றது. அது போன்று, இவ்வாழ்வாரும் [2]"அடியேன் உள்ளான் உடல் உள்ளான்" என்ற திருப்பாசுரத்தில், 'அடியேன், உள்ளான்' என்ற சொற்களால் சீவான்மா வேறு, பரமான்மா வேறு என்பதனையும், அச்சொற்களின் பொருள் ஆற்றலால் அச்சீவான்மாக்களும் ஒன்றற்கொன்று வேறுபட்டவை என்பதனையும், [3]"சென்று சென்று பரம்பரமாய்" என்ற திருப்பாசுரத்தில் ஆன்மாவானது சரீரம் முதலியவற்றினின்றும் வேறுபட்டது என்பதனையும் சொல்லுகையால் தத்துவ விவேகத்தையும்,

நித்யத்வ அநித்யத்வம் - ஸ்ரீகீதையில், [4]"நித்தியனும் அழிவில்லாதவனும் அறிகின்றவனும் இருக்கின்ற ஆன்மாவினுடைய இந்தச் சரீரங்கள் அழியக்கூடியவைகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன; ஆகையால் பரத குலத்தில் பிறந்தவனே! போரினைச் செய்வாய்" என்றும், [5]"இவ்வான்மா ஒருகால் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை; இவ்வான்மா கல்பாதியில் தோன்றி மீண்டும் கற்பத்தின் முடிவில் இல்லாமல் போகிறான் என்பது இல்லை; இவ்வான்மா பிறப்பில்லாதவன்; என்றுமுள்ளவன்; ஒரு நிலையாயிருப்பவன்; முன்பும் இருக்கிறவன்; ஆதலால் சரீரம் கொல்லப்பட்டாலும் ஆன்மா கொல்

---

1. *தேஹிநோஸ்மிந் யதாதேஹே கௌமாரம் யௌவனம்ஜரா*
   ததா தேஹாந்தர ப்ராப்தி: தீர: தத்ர நமுஹ்யதி.

என்பது, ஸ்ரீ*கீதை*, 2: 13.

இந்தச் சுலோகத்தில் 'தேஹிந, தேஹே' என்ற பதங்களால் சரீரம் வேறு, ஆன்மா வேறு என்று நாம் அறிகின்றோம்.

2. *திருவாய்.* 8. 8: 2: 3. *திருவாய்.* 8. 8: 5.

4. *அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா: சரீரிண:*
   அநாசிநோப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வபாரத.

என்பது, ஸ்ரீ*கீதை*, 2: 18.

5. *நஜாயதே ம்ரியதேவா கதாசித் நாயம் பூத்வாபவிதாவாநபூய:*
   அஜோநித்ய: சாச்வதோயம் புராணோ நஹந்யதே ஹந்யமாநே
என்பது, ஸ்ரீ*கீதை*, 2: 20.

[சரீரே.

லப்படமாட்டான்" என்றும், [1] "மனிதன் எப்படிக் கிழிந்துபோன உடைகளை விட்டு நீக்கி வேறான புதிய உடைகளை எடுத்துக்கொள்ளுகிறானோ அப்படியே ஆன்மாவும் பழையதான சரீரத்தை விட்டுவிட்டுப் புதியதாயும் வேறாயும் இருக்கிற சரீரத்தை அடைகிறது" என்றும் ஆன்மா நித்தியமாக இருப்பது என்றும் சரீரம் அழிந்துபோவது என்றும் கூறியிருப்பது போன்று, இவ்வாழ்வாரும் [2] "மின்னின் நிலையில மன்னுயிர் ஆக்கைகள்" என்றும், [3] "உள்ளதும் இல்லதும்" என்றும் உயிர் உடல்களின் நிலையுதலையும் நிலையாமையையும் கூறியிருத்தலானும்,

[4] நியந்த்ருத்வம் - [5] "பூமி தண்ணீர் தீ காற்று ஆகாயம் மனம் புத்தி அகங்காரம் என்று எட்டு வகையாக வேறுபட்டிருக்கின்ற இந்த மூலப்பகுதி என்னுடையது என்று அறிவாயாக; தோள்வலி பொருந்திய அருச்சுனா! இம்மாயை தாழ்ந்தது; இதைக்காட்டிலும் வேறானதும் எதனால் இந்த உலகம் தரிக்கப்படுகிறதோ அப்படிப்பட்டதுமான என்னுடைய ஆன்ம சொரூபமான சரீரம் இதனிலும் சிறப்புடையது என்று அறிந்துகொள்" என்கிறபடியே உயிர்ப்பொருள் உயரல்பொருள்கட்கெல்லாம் ஆன்மாவாய் [6] "எல்லாப் பொருள்களினுடைய உள்ளத்தில் நான் இருக்கிறேன்; என்னிடத்திலிருந்தே நினைவும் அறிவும்

---

1. வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி ததா சரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ.

என்பது, ஸ்ரீகீதை, 2: 22.

2. திருவாய். 1. 2: 2. 3. திருவாய். 1. 2: 8.

4. நியந்த்ருத்வம்—எல்லாப் பொருள்களையும் ஏவுகின்ற—கட்டளையிடுகின்ற—நியமிக்கின்ற தன்மை.

5. பூமிராபோநலோ வாயு: கம்மனோ புத்திரேவச
அஹங்கார இதீயம்மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா.
அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்திமேபராம்
ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத்.

என்பன, ஸ்ரீகீதை, 7: 4, 5.

6. "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதி: ஜ்ஞாநமபோஹநஞ்ச"

என்பது, ஸ்ரீகீதை, 15: 15.

அறிவின்மையும் உண்டாகின்றன" என்றும், [1] "தன்னால் உண்டாக்கப்பட்டதாயும் மூலப்பகுதி என்ற பெயருடையதாயும் இருக்கிற இந்தச் சரீரத்தில் இருக்கிற எல்லா உயிர்களையும் மாயையாலே கர்மங்கட்குத் தகுதியான காரியங்களைச் செய்வித்துக்கொண்டு சர்வேச்வரன் எல்லா உயிர்களுடைய மனங்களில் இருக்கிறான்" என்றும் சொல்லுகிறபடியே எல்லா உயிர்களுடைய மனங்களிலும் தங்கியிருப்பவனாய் நின்று, தொழில் செய்தல் செய்யாமைகளாகிற எல்லாக் காரியங்களையும் செய்வித்தலாகிற இறைவனுடைய நியந்த்ருத்வத்தைச் சொல்லியிருத்தல்போன்று, இவ்வாழ்வாரும் [2] "உடல்மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்து" என்றும், [3] "கரந்த சில் இடம் தொறும் இடம்திகழ் பொருள்தொறும் கரந்து எங்கும் பரந்துளன் இவை உண்ட கரனே" என்றும் உயிர்ப்பொருள் உயிரல்பொருள்கட்கெல்லாம் தான் உயிராய், [4] "நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர், நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்" என்கிறபடியே பொருள்களின் தொழில் செய்தல் செய்யாமைகளாகிற அனைத்தும் தனக்கு உரியதாம்படி இருக்கிற அவனுடைய நியந்த்ருத்வத்தைச் சொல்லுகையாலும்,

சௌலப்யம் - ஸ்ரீகீதையில் [5] "எப்போதும் என்னிடம் இருக்க வேண்டும் என்று ஆசை கொண்டிருக்கிற அந்த ஞானிக்கு நான் எளிமையாய் அடையத்தக்கவன்" என்றும், [6] "நல்லோரை நலம் புரிந்து காத்தற்கும் தீயோரைப் பொன்றுநெறி போக்கற்கும் எல்லாம் முந்தை அறத்தை நிலைநிறுத்துவதற்கும் யுகம்தோறும் இசைந்து நான் பிறப்பன்" என்றும் பக்திமான்கள் நிமித்தமாகவும் அவதாரம் காரணமாகவும் அவனுடைய சௌலப்யம் சொன்னது போன்று, இவ்வாழ்

---

1. *ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுந திஷ்ட்டதி*
   ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா.

என்பது, ஸ்ரீகீதை, 18: 61.

2. *திருவாய்*. 1. 1: 7. 3. *திருவாய்*. 1. 1: 10.

4. *திருவாய்*. 1. 1: 6.

5. "*தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந:*"

என்பது, ஸ்ரீகீதை, 8: 14.

6. *பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய சதுஷ்க்ருதாம்*
   தர்மஸம்ஸ்த்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே.

என்பது, ஸ்ரீகீதை, 4: 8.

வாரும் [1] "பத்துடையடியவர்க்கு எளியவன்" என்றும், [2] "பலபிறப் பாய்-எளிவரும் இயல்வினன்" என்றும் சிறிது ஆசையுடையாரைப் பற்றவும் அவதாரம் காரணமாகவும் உண்டான அவனுடைய சௌ லப்யத்தைக் கூறுகையாலும்,

[3] சாம்யம் - ஸ்ரீகீதையில் [4] "நான் எல்லா உயிர்களிடத்திலும் சமனாய் இருக்கிறேன், எனக்குப் பகைவனும் இல்லை, நட்டோனும் இல்லை, பக்தியோடு யாவர் என்னை வணங்குகிறார்களோ அவர்கள் என்னிடத்தில் இருக்கிறார்கள், நானும் அவர்களிடத்தில் இருக் கிறேன்" என்று அவனை வணங்கும் முறையில் அவன் எல்லார்க்கும் சமனாக இருத்தல் கூறப்பட்டுள்ளது போன்று, இவ்வாழ்வாரும் [5] "பற்றிலன் ஈசனும், முற்றவும் நின்றனன்" என்று அவனை அடை யும் முறையில் அவன் சமனாக உள்ள தன்மையைக் கூறுகையாலும்,

அகங்கார தோஷம் - ஸ்ரீகீதையில் [6] "மூலப்பகுதியினுடைய மூன்று குணங்களால் பலவகையாகச் செய்யப்படுகின்ற காரியங்களை அறிவில்லாத இந்தச் சீவன் அகங்காரத்தால் 'நான் செய்கிறேன்' என்று நினைக்கிறான்" என்று அகங்காரத்தின் குற்றத்தைக் கூறி யுள்ளது போன்று, இவ்வாழ்வாரும் [7] "நீர் நுமது என்றிவை, வேர் முதல் மாய்த்து" என்று பிறப்பிற்குக் காரணம் அதுவேயாகச் சொல் லுகையாலே அகங்காரத்தினுடைய குற்றத்தைக் கூறியிருத்தலாலும்,

---

1. *திருவாய்.* 1. 3: 1. 2. *திருவாய்.* 1. 3: 2.

3. *சாம்யம்—எல்லார்க்கும் ஒத்திருத்தல்.*

4. *"ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ப்ரிய:"* *என்பது, ஸ்ரீகீதை,* 9: 29.

5. *திருவாய்.* 1. 2: 6.

"போற்றா ருயிரினும் போற்றுந ருயிரினும்
மாற்றே மாற்றல் இலையே, நினக்கு
மாற்றோரும் இலர் கேளிரு மிலர்எனும்
வேற்றுமை இன்றது போற்றுநர்ப் பெறினே"
என்பது, பரிபாடல். 4, 51 - 54.

6. *"அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே"* *என்பது, ஸ்ரீகீதை,* 3: 27.

7. *திருவாய்.* 1. 2: 3.

இந்த்ரிய பலம் - [1]" இந்திரியங்களை வெல்ல வேண்டும் என்று முயற்சி செய்கின்ற ஒரு மனிதனுடைய மனத்தினை, கலங்கச் செய்கின்ற இந்திரியங்கள் வலியனவாய் இழுத்துக்கொண்டு போகின்றன" என்று இந்திரியங்களினுடைய வலிமையைச் சொன்னது போன்று, இவ்வாழ்வாரும் [2]" விண்ணுளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் செறும் ஐம்புலன்" என்று இந்திரியங்களினுடைய வலிமையைச் சொல்லுகையாலும், மந: ப்ராதாந்யம் - [3]" காற்றினைப் போன்று அந்த மனத்தை அடக்குதலும் செய்யமுடியாத காரியம் என்று நான் நினைக்கிறேன்" என்றும், [4]" அருச்சுனா! மனத்தினை அடக்குதல் மிக மிக அரிது, சஞ்சலம் உள்ளது என்பதில் ஐயம் இல்லை, அப்படியிருப்பினும் பயிற்சியாலும் வைராக்கியத்தாலும் அடக்கப்படுகிறது" என்றும் மற்றை இந்திரியங்களைக் காட்டிலும் மனத்தினுடைய முதன்மையினைக் கூறியது போன்று, இவ்வாழ்வாரும் [5]" மனத்தை வலித்து" என்று மனத்தினை அடக்குதலின் அருமை சொல்லுமுகத்தால் மனத்தின் முதன்மையைச் சொல்லுதலாலும்,

கரண நியமனம் - ஸ்ரீகீதையில் [6]" அத்தகைய எல்லா இந்திரியங்களையும் அடக்கி என்னுடைய திருமேனியில் மனத்தினை நிறுத்தி நிதானமாக என்னையே நினைத்துக்கொண்டிருக்கக்கடவன், எவனுக்கு இந்திரியங்கள் தன்வசத்தில் இருக்கின்றனவோ அவனுக்குப் புத்தியானது ஒரே நிலையில் நிலைத்திருக்கிறது" என்றும், [7]" ஞானத்திற்கு வழியான எல்லா இந்திரியங்களையும் விஷயங்களில் போகாமல்

---

1. யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஸ்சித:
இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம்மந:
என்பது, ஸ்ரீகீதை, 2: 60.
2. திருவாய். 7. 1. 6.
3. சஞ்சலம்ஹிமந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்
தஸ்யாஹம் நிக்ரஹம்மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்.
என்பது, ஸ்ரீகீதை, 6: 34.
4. அஸம்சயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம்
அப்யாஸேந து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே.
என்பது, ஸ்ரீகீதை, 6: 35.
5. திருவாய். 5. 1: 4.
6. தாநிஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீதமத்பர:
வஸேஹியஸ்யேந்த்ரியாணிதஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.
என்பது, ஸ்ரீகீதை, 2: 61.
7. " ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோஹ்ருதி நிருத்ய ச"
என்பது, ஸ்ரீகீதை, 8: 12.

அடக்கி மனத்தினை இதயத்தில் நிறுத்தியும்'' என்றும் கரணங்களை அடக்குதல் சொன்னதுபோன்று, இவ்வாழ்வாரும் [1] "உள்ளம் உரை செயல், உள்ள இம்மூன்றையும், உள்ளிக்கெடுத்து'' என்று கரணங்களை அடக்குதலைப் பற்றி அருளிச்செய்கையாலும்,

[2] சுக்ருதி பேதம் - [3] ஸ்ரீகீதையில் "ஏ அருச்சுனா! தன்னினின்றும் நீங்கிய செல்வத்தை மீண்டு விரும்புகிறவனும், கைவல்யத்தை விரும்புகிறவனும், வறியனாக இருந்து செல்வத்தை விரும்புகிறவனும், பகவானை அடைய விருப்பமுள்ளவனும் ஆன நால்வகைப்பட்ட நல்வினையையுடைய மக்கள் என்னை வணங்குகிறார்கள்'' என்று நல்வினையையுடைய மக்கள் வேறுபாட்டினைச் சொன்னது போன்று, இவ்வாழ்வாரும் [4] "பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்'' என்கையாலே நீங்கிய செல்வத்தை விரும்புகிற ஆர்த்தனும், [5] "இறுகல் இறப்பென்னும்'' என்கையாலே கைவல்யத்தை விரும்புகிற ஜிஜ்ஞாசுவும், [6] "குணங்கொள் நிறைபுகழ் மன்னர்'' என்கையாலே புதிய செல்வத்தை விரும்புகிற அர்த்தார்த்தியும், [7] "திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித்து உய்ம்மின்'' என்கையாலே பகவானை விரும்புகிற ஞானியும் ஆன நால்வகைப்பட்ட நல்வினையாளர்களைச் சொல்லுகையாலும்,

தேவாசுர விபாகம் - ஸ்ரீகீதையில் [8] "இவ்வுலகத்தில் தெய்வம் என்றும் ஆசுரம் என்றும் கர்மங்களைச் செய்யும் மக்களுடைய பிறப்பு இரண்டு வகை'' என்றும், [9] "தெய்வப் பிறப்பாகிற செல்வமானது இப்பொழுது இருக்கும் பிறப்பினைப் போக்கி, என்னிடம் வருவதற்கு, படிப்படியாக உதவுகிறது; அசுர செல்வமானது கீழான கதியை

---

1. *திருவாய். 1. 2: 8.*
2. *சுக்ருதி—புண்ணியத்தைச் செய்த மக்கள்.*
3. *சதுர்விதா பஜந்தே மாம்ஜநா: ஸுக்ருதிநோர்ஜுந*
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீசபரதர்ஷப
என்பது, ஸ்ரீகீதை, 7: 16.
ஜிஜ்ஞாசு - பகவானை அறியவேண்டும் என்னும் விருப்பமுள்ளவன்.
4. *திருவாய். 4. 1: 1.* 5. *திருவாய். 4. 1: 10.*
6. *திருவாய். 4. 1: 8.* 7. *திருவாய். 4. 1. 1.*
8. *"த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுரஏவச"*
என்பது, ஸ்ரீகீதை, 16: 6.
9. *"தைவீஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீமதா"*
என்பது, ஸ்ரீகீதை, 16: 4.

அடையும்படி செய்யும் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது'' என்றும் தேவர்கள் அசுரர்கள் என்னும் வேறுபாட்டினைச் சொல்லியிருப்பது போன்று, இவ்வாழ்வாரும் [1] ''அரக்கர் அசுரர் பிறந்தீர் உள்ளீரேல்'' என்றும், [2] ''நண்ணு அசுரர் - நல்ல அமரர்'' என்றும் தேவ அசுர வேறுபாட்டினைச் சொல்லியிருக்கையாலும்,

[3] விபூதி யோகம் - ஸ்ரீகீதையில் [4] ''குருகுலத்திற் பிறந்தவனே! என்னுடைய நல்லவையும் தீயவையுமான செல்வங்களைச் சொல்லு கிறேன்; அந்தோ! என்னுடைய செல்வத்தின் முடிவிற்கு எல்லை இல்லை'' என்றும், [5] ''பன்னிரண்டு சூரியர்களுள் விஷ்ணு என்ற சூரியன் நான், இருளைப் போக்குகிற பொருள்களுள் கிரணங்களை யுடைய சூரியன் நான்'' என்றும் வருகின்ற இன்னோரன்னவை களால் விபூதியோகத்தைச் சொன்னது போன்று, இவ்வாழ்வாரும் [6] ''புகழும் நல்லொருவன் என்கோ'' என்ற திருவாய்மொழியிலும் [7] ''நல்குரவும் செல்வும்'' என்ற திருவாய்மொழியிலும் [8] ''மாயா வாமனனே'' என்ற திருவாய்மொழியிலும் அவனுடைய விபூதி யோகத்தைச் சொல்லுகையாலும்,

விச்வரூப தர்சனம் - ஸ்ரீகீதையில் [9] ''ஓ தேவனே! உலகமே உருவ மான உன்னுடைய சரீரத்தில் எல்லாவிதமான தேவர்களையும் அப் படியே பிராணி விசேடங்களின் கூட்டங்களையும் பிரமனையும் பிரமனு டைய அதீனத்தில் இருக்கிற சிவனையும் தெய்வலோகத்திலுள்ள எல்லா இருடிகளையும் பாம்புகளையும் பார்க்கிறேன்'' என்பது போன்ற

---

1. திருவாய். 5. 2: 5. 2. திருவாய். 10. 7: 5.
3. விபூதி - ஐச்வரியம்; செல்வம்.
4. ஹந்ததே கதயிஷ்யாமி விபூதீராத்மந: ஸுபா
ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோவிஸ்தரஸ்யமே.
என்பது, ஸ்ரீகீதை, 10: 19.
5. ''ஆதித்யாநாமஹம் விஷ்ணு: ஜ்யோதிஷாம் ரவிரம்சுமாந்''
என்பது, ஸ்ரீகீதை, 10: 21.
6. திருவாய். 3. 4: 1. 7. திருவாய். 6. 3: 1.
8. திருவாய். 7. 8: 1.
9. பச்யாமி தேவாம்ஸ்தவ தேவதேஹே ஸர்வாம் ஸ்ததாபூத விசேஷஸங்காந்
ப்ரஹ்மாணம் ஈசம் கமலாஸநஸ்த்தம் ருஷீம்ச்ச ஸர்வாந் உரகாம்ச்ச திவ்யாந்,
என்பது, ஸ்ரீகீதை, 11, 15.

வைகளாலே விச்வரூப தரிசனத்தைச் சொல்லியிருப்பதுபோன்று, இவ்வாழ்வாரும் [1] "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய், சீரார் சுடர்கள் இரண்டாய்ச் சிவனாய் அயனானாய்" என்று விச்வரூப தரிசனத்தைச் சொல்லுகையாலும்,

[2] சாங்கபக்தி - [3] ஸ்ரீகீதையில் "என்னிடத்தில் மனத்தினை வைத்தவனாயும் என்னிடத்தில் பக்தியையுடையவனாயும் என்னை ஆராதிக்கிறவனாயும் என்னை நமஸ்காரம் செய்கிறவனாயும் என்னைச் சரணம் அடைந்தவனாயும் இவ்விதமான மனத்தையுடையவனாய் என்னையே அடைவாய்" என்று அங்கத்தோடு கூடிய பக்தியைச் சொன்னது போன்று, இவ்வாழ்வாரும் [4] "வணக்குடைத் தவநெறி வழி நின்று புறநெறி களைகட்டு, உணக்குமின் பசை அற" என்றும், [5] "மேவித் தொழுது உய்ம்மின் நீர்கள் வேதப் புனித இருக்கை, நாவிற் கொண்டு அச்சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே" என்றும், [6] "மாலை நண்ணி - காலை மாலை கமல மலர் இட்டு—தொழுது எழுமினோ" என்றும் அங்கத்தோடு கூடிய பக்தியைச் சொல்லுகையாலும்,

[7] பிரபத்திதுவைவித்யம் - ஸ்ரீகீதையில் [8] "எந்தக் காரணத்தால் என்னுடைய இந்த மாயையானது, படைத்தல் முதலிய காரியங்களை விளையாட்டாகச் செய்கிற என்னால் செய்யப்பட்டதோ (அதனால்) தாண்ட முடியாதது; என்னையே எவர்கள் சரணம் அடைகிறார்களோ

---

1. திருவாய் 6: 9: 1.

2. சாங்கபக்தி - அங்கங்களுடன் கூடின பக்தி.

3. மந்மநாபவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு
மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:
என்பது, ஸ்ரீகீதை, 9: 34.

4. திருவாய். 1. 3: 5. 5. திருவாய். 5. 2: 9.

6. திருவாய். 9. 10: 1.

7. 'பிரபத்தி த்வைவித்யம்' என்றது, அங்கப் பிரபத்தி என்றும், ஸ்வதந்திரப் பிரபத்தி என்றும் பிரபத்தி இரண்டு வகைப்படும். அதனைத் தெரிவித்தபடி. பக்திக்கு அங்கமாகச் செய்யப்படும் பிரபத்தி அங்கப் பிரபத்தியாகும். அங்கம் அன்றிக்கே, ஸ்வதந்திரமாகவே செய்யப்படும் பிரபத்தி ஸ்வதந்திரப் பிரபத்தியாகும்.

8. தைவீஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாமேவயே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே.
என்பது, ஸ்ரீகீதை, 7: 14.

அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்" என்றும், [1] "எல்லா வுலகங்களையும் ஏவுகின்றவனும் அடியார்கள் பக்கல் வைத்த அன்பினால் உனக்குச் சாரதியாயும் முன்னே நின்று உன்னை ஏவுகின்றவனும் இருக்கிற அவனையே எல்லாவகையாலும் சரணமாக அடைவாய்" என்றும் பக்திக்கு அங்கமாகச் செய்யப்படும் பிரபத்தியாகிய அங்கப் பிரபத்தியும் [2] "எல்லாத் தர்மங்களையும் விட்டு என்னையே சரணமாக அடைவாய்" என்பது போன்றவைகளால் ஸ்வதந்திர பிரபத்தியும் ஆன இரண்டு வகைப்பட்ட பிரபத்திகள் சொல்லப்பட்டது போன்று, இவ்வாழ்வாரும் [3] "அவனுடை உணர்வு கொண்டு உணர்ந்து" என்று அவன் அருளிச்செய்த பிரபத்தி ரூபமான ஞானத்தைத் துணையாகக் கொண்டு அதனை அறிந்து என்கையாலே பக்திக்கு அங்கமாகச் செய்யப்படும் பிரபத்தியும், [4] "மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம்" என்ற திருப்பாசுரத்தாலும் [5] "சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கெல்லாம்" என்ற திருப்பாசுரத்தாலும் ஸ்வதந்திர பிரபத்தியும் ஆன இருவகையான பிரபத்தியை உபதேசிக்கையாலும், அன்று ஓதிய கீதா சமம் என்னும் - தம்மில் சொல்லப்பட்ட இந்த விதமான பொருள்களின் ஒற்றுமையைக் கொண்டு [6] "*மாயன் அன்று, ஓதிய வாக்கு*" என்கிற ஸ்ரீகீதையோடு ஒக்கச் சொல்லப் படும் என்கை.

'துவைவித்யாதி' என்ற இடத்திலே உள்ள 'ஆதி' என்ற சொல்லாலே, மேலே கூறப்படாத [7] "அருச்சுனா! என்னுடைய அவதாரமும் அவதாரங்களில் செய்யப்படும் செயல்களும் தெய்வத்தன்மை வாய்ந்தவை என்று எவன் ஒருவன் இந்த விதமாக உண்மையாக அறிகிறானோ அவன் இப்பொழுது இருக்கும் சரீரத்தை விட்டால் மீண்டும் வேறு பிறவியை அடைகிறான் இல்லை; என்னையே அடைகிறான்"

---

1. "*தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத*" என்பது, ஸ்ரீகீதை, 18: 62.

2. *ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம்வ்ரஜ*
அஹம் த்வா சர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:
என்பது, ஸ்ரீகீதை. 18: 66.

3. திருவாய். 1. 3: 5.
4. திருவாய். 9. 1: 7.
5. திருவாய். 9. 10: 5.
6. நான்முகன் திருவந். 71.

7. *ஜந்மகர்மசமே திவ்யம் ஏவம்யோவேத்தி தத்வத:*
த்யக்த்வாதேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதிஸோர்ஜுந.
என்பது, ஸ்ரீகீதை. 4: 9.

என்றும், [1] "எல்லாருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய இலையோ மலரோ பழமோ தண்ணீரோ என்னும் இவற்றை எவன் பக்தியுடன் எனக்குக் கொடுக்கிறானோ, தூய்மையான மனத்தையுடைய அவனால் பக்தியுடன் உபகாரமாகக் கொடுக்கப்பட்ட அவற்றை நான் உண்ணு கிறேன்" என்றும் ஸ்ரீகீதையில் சொல்லியிருப்பதுபோன்று, இவ்வாழ் வாரும் [2] "இவை பத்தும் வல்லார், அமரரோடு உயர்விற் சென்று அறுவர் தம் பிறவி அஞ் சிறையே" என்றும் [3] "பிரிவகையின்றி நன்னீர் தூஉய்ப் புரிவதுவும் புகைபூவே" என்றும் அவனுடைய அவதார ரஹஸ்ய வைபவத்தையும் எளிதில் ஆராதிக்கத்தகும் அவன் தன்மையையும் அருளிச்செய்திருத்தலையும் கொள்க. மற்றும், சரீரத்தையே ஆன்மாவாக நினைத்திருக்கும் மக்களை முறையிலே பேற்றினை அடைதற்குரிய சாதனங்களின் எல்லையிலே மூட்டுகையையும், சாத்ய உபாயங்களிலே பரந்து சித்தோபாயத்தை மறைத்து உபதேசிக்குமிடத்தில் வைபவம் தோற்ற வெளியிடுகையையும் கொள்க. (40)

190

[4]அது தத்வ உபதேசம்; இது தத்வதர்சி வசநம்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— ஸ்ரீகீதையோடு திருவாய்மொழிக்கு உண்டான ஒப்புமையை அருளிச்செய்தார் மேற் சூத்திரத்தால். இனி, பல காரணங்களால் ஸ்ரீகீதையைக் காட்டிலும் திருவாய்மொழிக்கு உண்டான ஏற்றத்தை அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி முதலில் நம்மாழ்வாரின் பெருமையால் வந்த இதன் ஏற்றத்தை அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

அது - ஸ்ரீகீதையாகிய பிரபந்தமானது, தத்வ உபதேசம் - [5] "பல முகங்களான காரணங்களால் உண்மையான பரம்பொருளை அறிய விரும்பின மஹரிஷிகளுக்கு, பெரிய யோகியும் பாபங்களைப் போக்கு

---

1. *பத்ரம் புஷ்பம் பலம்தோயம் யோமே பக்த்யாப்ரயச்சதி*
   ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந:

என்பது, ஸ்ரீகீதை, 9: 26.

2. *திருவாய்.* 1. 3: 11. 3. *திருவாய்.* 1. 6: 1.

4. *அது - அந்த பகவத்கீதை. தத்வஉபதேசம் - தத்துவத்தாலே செய்யப்பட்ட உபதேசம். தத்வம் - கண்ணபிரான். இது - திருவாய்மொழி. தத்வதர்சி - தத்துவத்தை அறிந்தவர்; நம்மாழ்வார்.*

5. *தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ்ஸர்வதோ முகை:*
   தத்வமேகோ மஹாயோகீ ஹரி: நாராயண: பர:

என்பது, பாரதம் சாந்திபர். 347: 83.

பவருமான நாராயணன் ஒருவனே பரம்பொருள் என்று ஏற்பட்டது" என்கிறபடியே உண்மைப் பொருளான இறைவன் தானே உபதேசித்தது; இது - இத்திருவாய்மொழி, தத்வ தர்சி வசநம் - [1]"ஆன்ம விஷயமான ஞானத்தை நமஸ்காரத்தாலும் கேள்வியாலும் தொண்டினாலும் ஞானிகளிடமிருந்து அறிந்துகொள்; பரம்பொருளைப் பார்க்கின்றவர்களான ஞானிகள் உனக்கு ஆன்ம விஷயமான ஞானத்தை உபதேசம் செய்வார்கள்" என்கிறபடியே ஞான உபதேசத்திற்கு நம்பத்தக்கவர்களில் தலைவராக அவன்தான் அருளிச்செய்த ஞானிகளில் தலைவரான ஆழ்வார் வசநம் என்கை.

இதனால் என் சொல்லியவாறோ எனின், [2]"எல்லா உலகங்கட்கும் காரணம் நானே, எல்லா உலகங்கள் லயப்படுவதும் என்னிடத்திலேயே, சேஷியும் நான்தான், ஆதலால், நானே பரம்பொருள், என்னைக் காட்டிலும் வேறான பரம்பொருள் ஒன்றும் இல்லை" என்றும், [3]"என்னையே சரணமாகப் பற்று" என்றும், இப்படித் தன்னுடைய வைபவத்தைத் தானே அருளிச்செய்கையாலே தன் பெருமையைத் தானே அருளிச்செய்வதுபோலே இருக்கையாலே அது சிற்றறிவினர்கட்கு ஆதரிக்கத் தக்கதாக இராது. சுத்த சத்வஞானத்தையுடைய இவர் [4]"மண்ணும் விண்ணும் எல்லாம் உடன் உண்ட நம் கண்ணன் கண்; அல்லது இல்லையோர் கண்ணே" என்றும், [5]"கறுத்த மனம் ஒன்றும் வேண்டா; கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை" என்றும், [6]"கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரண், திண்ணமாநும் உடைமை உண்டேல் அவன் அடி சேர்த்து உய்ம்மினோ" என்றும் இப்படி நடு நிலையிலே நின்று அவனுடைய வைபவத்தை உபதேசிக்கையாலே, இது சிற்றறிவினர்கட்கும் ஆதரிக்கத் தக்கதாக இருக்கும் என்பது இங்கு இதற்குக் கூறப்படும் சிறப்பாம். (41)

---

1. *தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா*
   உபதேக்ஷ்யந்தி தேஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்வதர்சிந:
என்பது, ஸ்ரீகீதை, 4: 34.

2. *அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா*
   மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தனஞ்சய.
என்பது, ஸ்ரீகீதை, 7: 6.

3. "*மாமேகம் சரணம் வ்ரஜ*"
என்பது, ஸ்ரீகீதை, 18: 66.

4. திருவாய். 2. 2: 1. 5. திருவாய். 5. 2: 7.

6. திருவாய். 9. 1: 10.

191

[1] அது, ஐவரை வெல்வித்துப் பதிற்றைந் திரட்டி படச் சொன்னது; இது, நாடாகத் தோற்றும் என்று ஐயைந்து முடிப்பான் சொன்னது.

என்பது, சூத்திரம்.

வியாக் :— [2] "திருவாய்மொழி அவதரித்த காரணம் அடியாக வந்த ஏற்றத்தைச் சொல்லுகிறுர் இச்சூத்திரத்தால்.

அது - அந்த ஸ்ரீகீதையானது, ஐவரை வெல்வித்து - [3] "அன்று ஐவரை வெல்வித்த" என்கிறபடியே [4] "பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியுடன் கூடி ஸ்ரீ கிருஷ்ணனை வணங்கினுர்கள்" என்கிற படியே இராச்சியத்தில் விருப்புள்ளவர்களாய்ச் சரணம்புக்கு நின்ற பாண்டவர்கள் ஐவரையும் [5] "கிருஷ்ணு வெற்றியை நான் விரும்ப வில்லை" என்ற அருச்சுனனை [6] "உன் வார்த்தையின்படி செய்கி றேன்" என்னச்செய்து, போரிலே மூட்டி வெற்றியுடையவர்கள் ஆக்கி, பதிற்றைந்துஇரட்டி படச் சொன்னது [7] "பதிற்றைந்திரட் டிப் படை வேந்தர் பட" என்கிறபடியே அந்த ஐவர்களுக்குப் பகை வர்களான துரியோதநாதிகள் நூற்றுவரையும் முடிக்கைக்காகச் சொன்னது.

---

1. *ஐவரை - பாண்டவர்களை. பதிற்றைந்து இரட்டி - நூறு. இங்குத் துரியோதனுதியர்கள் நூற்றுவரைக் குறித்தது. ஐயைந்து - இரு பத்தைந்து. இங்கு இத்தொகை, இருபத்து நான்கு தத்துவங்களாலாய சரீரத்தையும், இருபத்தைந்தாம் தத்துவமாகிய ஆன்மாவினையும் குறிக் கின்றது. இவற்றில் உள்ள ஆசையை அறுப்பதற்காகத் திருவாய்மொழி அவதரித்தது என்றபடி.*

2. *ஸ்ரீகீதையும் திருவாய்மொழியும் மோக்ஷ சாஸ்திரங்களே யாகிலும் அவதரித்த முறையால் ஸ்ரீகீதையைக் காட்டிலும் திருவாய் மொழிக்கு ஏற்றம் உண்டு என்றபடி. அது பதிற்றைந்து இரட்டியைப் படுப்பதன் காரணமாக அவதரித்தது. இது ஐயைந்தினை முடிப்பதற்காக அவதரித்தது.*

3. *திருவாய்.* 4. 6: 1.

4. *"திரௌபத்யாஸ் ஸஹிதாஸ் ஸர்வேநமஸ்சக்ரு: ஜநார்த்தநம்" என்பது, பாரதம் ஆரண்யபர்.* 192: 56.

5. *"நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண" என்பது, ஸ்ரீகீதை,* 1: 32.

6. *"கரிஷ்யே வசநம் தவ" என்பது, ஸ்ரீகீதை,* 18: 73.

7. *பெரிய திருமொழி,* 2. 4: 4

இது - இத்திருவாய்மொழி அவதரித்தபடி எங்ஙனே என்னில், நாடாகத் தோற்றேம் என்று - [1] "தோற்றேம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு" என்கிறபடியே வகுத்த சேஷிபக்கலிலே எல்லாரும் கொள்ளை கொள்ளப்பட்ட மனத்தினையுடையராய்ப் போம்படியாக, ஐயைந்து முடிப்பான் சொன்னது - [2] "முடிப்பான் சொன்ன ஆயிரத்து" என்கிறபடியே அதற்கு விரோதியாயிருந்துள்ள [3] "பொங்கு ஐம்புலனும் பொறியைந்தும்" என்ற திருப்பாசுரத்தில் சொன்ன இருபத்துநான்கு தத்துவங்களோடு கூடின சரீரத்திலும் ஞானனந்தலக்ஷணமாய்க்கொண்டு தன்னுடைய இனிமையாலே தன்பக்கலிலே கால் தாழப்பண்ணும் ஆன்மாவிலும் உண்டான பற்றினை முடிப்பதாகச் சொன்னது என்கை.

இதனுல், ஸ்ரீ கீதை மோக்ஷ சாஸ்திரமேயாகிலும் அவதரிக்கிற போது வேறென்றற்காக அவதரித்த குற்றம் உண்டு அந்த ஸ்ரீ கீதைக்கு; மோக்ஷத்தின் பொருட்டே அவதரித்த ஏற்றம் உண்டு இத் திருவாய்மொழிக்கு என்றதாயிற்று. (42)

192

[4] *அங்கு 'நம்பி சரண்' என்று தொடங்கி, முடிவில் 'அப்ரியம்' என்றது; இங்குப் 'பரமே' என்று இழிந்து 'பொலிக' என்று உகந்தது.*

என்பது, சூத்திரம்.

வியாக் :- அங்கு - அந்த ஸ்ரீ கீதையில், நம்பி சரண் என்று தொடங்கி [5] "நாந்தகம் ஏந்திய நம்பி சரண் என்று, தாழ்ந்த தனஞ்சயற்காகி" என்கிறபடியே [6] "நான் தேவரீருக்குச் சிஷ்யன், தேவரீரைச் சரணம் அடைந்த என்னை நியமிக்க வேண்டும்" என்ற அருச்சுனனுடைய வேண்டுகோளைக் கேட்டுப் பிரீதியோடே ஆரம்

1. *திருவாய்*. 2. 1: 7.

2. *திருவாய்*. 8. 7: 11. 3. *திருவாய்*. 10. 7: 10.

4. *ஸ்ரீகீதை, மகிழ்ச்சியிலே தொடங்குகிறது, வருத்தத்திலே முடிகிறது. இவ்வருத்தத்தையே 'அப்ரியம் என்றது' என்கிறார். அப்ரியம் - விருப்பம் இல்லாமை. திருவாய்மொழி "ஏபாவம்பரமே" என்று கஷ்டத்திலே தொடங்கி "உகந்துபணிசெய்து" என்று மகிழ்ச்சியிலே முடிகிறது. இங்ஙனம் முடிகின்ற வகையாலும் இதற்கு ஏற்றமுண்டு என்கிறார் இச்சூத்திரத்தால்.*

5. *பெரியாழ்வார் திரு*. 1. 9: 4.

6. *"சிஷ்யஸ்தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்" என்பது, ஸ்ரீகீதை*, 2: 7.

பித்து, முடிவில் அப்ரியம் என்றது - [1] " அருச்சுனா ! நிச்சயம் சிரத்தையில்லாதவனாயிருக்கிறாய், கெட்டபுத்தியையுடையவனாயும் இருக்கிறாய், எக்காரணத்தால் அறிவின்மையால் அறியவில்லையோ அது எனக்குப் பெரிதும் விருப்பம் இல்லாதது ஆகும் " என்கிறபடியே அவன் பக்கல் நினைவின்மை காண்கையாலே வெறுப்போடே தலைக்கட்டிற்று. இங்கு - இத்திருவாய்மொழியில், பரமே என்று இழிந்து - விருப்பம் இல்லாதாரைப் பார்த்துப் பேரருளாலே உபதேசிக்கையாலே உபதேசத்தின் ஆரம்பத்திலே [2] " ஏ பாவம் ! பரமே ! ஏழுலகும், ஈ பாவம்செய்து அருளால் அளிப்பார் ஆர் " என்று வெறுப்போடே ஆரம்பித்து, பொலிக என்று உகந்தது - அந்த உபதேசத்தைக் கேட்டு உலக முழுதும் திருந்துகையாலே இப்படித் திருந்தினவர்களைக் கண்டு [3] " பொலிக பொலிக " என்று மங்களாசாசனம் செய்து [4] " உகந்து பணி செய்து " என்னும்படி பிரீதியோடே தலைக்கட்டிற்று என்கை.

இதனால், அருச்சுனன் போரைச் செய்யத் தொடங்கினான் என்னுமளவே ஒழியச் சித்தோபாயம் வரையிலும் உபதேசத்தின் பலம் வாய்க்கப்பெறாமையாலே உபதேசம் பயன் பெறவில்லை அங்கு; உபதேசம் பயன் பெற்றதும் திருவாய்மொழியிலே என்றபடி (43)

193

[5] அதில் சித்த தர்ம விதி; இதில் விதி அநுஷ்டானங்கள்.

என்பது, சூத்திரம்.

வியாக்:- ஸ்ரீ கீதையினும், திருவாய்மொழியில் சொல்லப்பட்ட பொருளின் கௌரவத்தால் வந்த ஏற்றம் சொல்லுகிறது இச்சூத்திரத்தால்.

---

1. *நாகமச்ரத்ததாநோஸி தர்மேதாச்சாஸி பாண்டவ*
   அபுத்த்யாயுக்த ஜாநீஷே தந்மே ஸுமஹதப்ரியம்.

என்பது, அநுகீதை.

2. *திருவாய்.* 2. 2: 2. 3. *திருவாய்.* 5. 2: 1.

4. *திருவாய்.* 10. 8: 10.

5. *சித்த தர்மம் - கண்ணபிரான்*

அதில் - அந்த ஸ்ரீ கீதையில், சித்த தர்ம விதி - [1] " என்னையே சரணமாகப் பற்று" என்று, இறைவனைப் பற்றுக என்ற விதி மாத்திரமே உள்ளது; இதில் - இத்திருவாய்மொழியில், விதி அநுஷ்டானங்கள் - [2] " திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ" என்று விதியும், [3] " புகல்ஒன்றில்லாஅடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்று அநுஷ்டானமும் என்னும் இரண்டும் காணலாம் என்கை.

இதனால், விதி மாத்திரத்தைச் சொல்லுகின்ற ஸ்ரீ கீதையைக் காட்டிலும், விதி அநுஷ்டானம் என்னும் இரண்டையும் சொல்லுகிற இத்திருவாய்மொழிக்கு ஏற்றம் உண்டு என்றதாயிற்று. (44)

194

'பகவன், ஞான விதி, பணி வகை' என்று இவர் அங்கீகாரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்.

என்பது, சூத்திரம்.

வியாக் :- இனி அந்த ஸ்ரீ கீதைக்கு ஏற்றமும் இவர் அங்கீகாரத்தாலே என்னுமதனை அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

பகவன் - [4] " அந்தமில் ஆதியம்பகவன், வணக்குடைத் தவநெறி வழிநின்று" என்றும், ஞான விதி - [5] " ஞான விதி பிழையாமே" என்றும், பணி வகை - [6] " பண்டே பரமன் பணித்த பணிவகையே, கண்டேன் கமலமலர்ப் பாதம்" என்றும், என்று இவர் அங்கீகாரத்தாலே - என்று பரம வைதிகரான இவர் ஸ்ரீ கீதையைப் பிரமாணமாகக் கொள்ளுகையாலே ஆயிற்று, அதுக்கு உத்கர்ஷம் - அந்த ஸ்ரீ கீதைக்கு ஏற்றம் உண்டாயிற்று என்கை.

புத்த முனியாய் நின்று சொன்ன பௌத்தசாஸ்திரமும் கபில முனியாய் நின்று சொன்ன சாங்கிய சாஸ்திரமும் அவனே அருளிச் செய்ததாயிருக்கச்செய்தே. வைதிகர்களால் ஏற்றுக்கொள்ளப்படாமையாலன்றோ அவை இரண்டும் பிரமாண நூல்களாகத் திகழ

---

1. *" மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்பது, ஸ்ரீகீதை*, 18: 66.
2. *திருவாய்.* 4. 1: 1.
3. *திருவாய்.* 6. 10: 10.
4. *திருவாய்.* 1. 3: 5.
5. *திருவாய்.* 5. 2: 9.
6. *திருவாய்.* 10. 4. 9.

வில்லை. [1] "இப்படிப் பிறரை மயங்கச்செய்கின்ற, தேவரீராலேயே செய்யப்பட்ட வேதங்கட்குப் புறம்பான மதங்களைப் புல்லுக்குச் சமமாக நினைக்கிறேன்" என்கிறபடியே பகவானாலே சொல்லப்பட்டதேயாகிலும் வேதங்கட்கு முரண்பட்டவற்றை வைதிகர்கள் அங்கீகரியார்களே. வேதங்கட்கு முரண் இல்லாதது என்னும் தன்மை விளங்குவது வைதிகர்களுடைய அங்கீகாரத்தாலே அன்றோ. ஆகையால், ஸ்ரீ கீதைக்கு ஏற்றம் இவர் அங்கீகாரத்தாலே என்னக் குறை இல்லை.

இதனால், ஸ்ரீ கீதைக்கு ஏற்றம் இவர் அங்கீகாரத்தைக்கொண்டு சொல்லவேண்டும்; இவர் திருவாக்கில் பிறந்த இதற்கு அதுவும் வேண்டா என்று இவ்வழியாலும் ஓர் ஏற்றம் சொல்லிற்றாயிற்று. ஆக, ஸ்ரீ கீதையிலும் இத்திருவாய்மொழிக்கு உண்டான ஏற்றத்திற்குரிய காரணங்கள் எல்லாம் சொல்லிற்றாயிற்று. (45)

195

[2]வேத வேத்ய வைதிக உபதேசம் ஆவித்யர் அளவிலே; அஜ்ஞர் ஜ்ஞாநிகள் ஜ்ஞாநவிசேஷயுக்தர் ஸர்வஜ்ஞன் என்னுமல் இவர் திருத்துவர்.

என்பது, சூத்திரம்.

வியாக்:- இப்படி, ஈச்வரனுடைய உபதேசத்தைக் காட்டிலும் இவர் உபதேசத்திற்கு ஏற்றம் சொன்ன சமயத்திலே, பிரமாணங்களால் அறியத்தக்க இறைவனோடே பிரமாண பிரமாதாக்களையும் கூட்டி, 'அவர்கள் எல்லாருடைய உபதேசங்களும் ஒரு சிலர் பொருட்டு; இவர் உபதேசம் எல்லார் பொருட்டும்' என்று இவ்வழியாலே உபதேசிக்கின்றவரான ஆழ்வார்க்கு ஒரு பெருமை அருளிச் செய்கிறார் இச்சூத்திரத்தால்.

---

1. *"இதிமோஹந வர்த்மனா த்வயாபி*
க்ரதிதம் பாஹ்யமதம் த்ருணாய மந்யே"

என்பது, ஸ்ரீரங்கராஜஸ்தவம்.

2. *உபதேச முகத்தாலும் ஆழ்வார்க்கு ஏற்றம் உண்டு என்கிறார் இச்சூத்திரத்தால். பிரமாணம் - வேதம். பிரமாதா - பிரமாணங்களை அறிந்தவர்; மகரிஷிகள். வேதஉபதேசம், வேத்யஉபதேசம், வைதிக உபதேசம் என்ற உபதேசம் என்றும் சொல்லை முன்புள்ளவற்றோடும் கூட்டுக. வேத்யன் - வேதங்களாலே அறியப்படுமவன்; எம்பெருமான். ஆவித்யர் - அறிவில்லாதவர்களான இவ்வுலக மக்கள்.*

அதாவது, வேத உபதேசம் - நலத்தையே சொல்லுமவை யான வேதங்களுடைய உபதேசமும், வேத்ய உபதேசம் - [1] "வேதங்களால் அறியப்படும் பரம்புருடன்" என்கிறபடியே வேதங்களாலேயே அறியப்படுமவனான சர்வேச்வரனுடைய உபதேசமும், வைதிக உபதேசம் - [2] "எந்த அந்தணர்கள் வேதத்தின் பூர்வபாகத்தை அறிந்தவர்களோ, எவர்கள் வேதாந்தம் அறிந்தவர்களோ" என்கிற படியே வேதத்தில் பூர்வபாக உத்தரபாகங்களின் பொருள்களை அறிந்தவர்களாய் வைதிகர் என்று பேர் பெற்றவர்களாயிருக்கும் மகரிஷிகளுடைய உபதேசமும், ஆவித்யர் அளவிலே - [3] "தத்வம் ஹிதம் புருஷார்த்தம் என்னுமவற்றின் ஞானம் இல்லாமையாகிற அறியாமையோடு கூடிய இவ்வுலக மனிதன் ஆவித்யன் என்று சொல்லப்படுகிறான்" என்கிறபடியே தத்வம் ஹிதம் புருஷார்த்தம் என்பனவற்றின் ஞானம் இன்மையாலே இறைவனுடைய தன்மையை அறியாதவர்களான சம்சாரிகள் அளவிலேயாம்.

இவர் - ஆழ்வார், அஜ்ஞர் - தத்வ ஹித புருஷார்த்தங்களில் அறிவில்லாத சம்சாரிகளோடு, ஜ்ஞாநிகள் - பகவானே உபாயம் என்று கடைப்பிடித்திருக்கும் ஞானிகளோடு, ஜ்ஞாந விசேஷ யுக்தர் - பகவானுடைய சொரூப ரூப குண விபூதிகளை நேரே அறிந்து பேற்றிலே நோக்குள்ளவர்களாய்ப் பகவானுடைய அநுபவமே போது போக்காகக் கொண்டிருக்கும் விசேடமான ஞானத்தையுடையவர்களோடு, சர்வஜ்ஞன் என்னுமல் - [4] "உனக்குக் காணப்படாத பொருள் ஒன்றுமில்லை" என்றும், [5] "யாவன் ஒரு பொழுதில் எல்லாவற்றையும் அறிகிறான்" என்றும் சொல்லுகிறபடியே முற்றறிவினனான சர்வேச்வரனோடு வாசி அற எல்லார்க்கும் வேண்டும் கூறுகளை உபதேசித்து, திருத்துவர் - திருத்துவர் என்கை. (46)

---

1. "வேதவேத்யே பரே பும்ஸி"
என்பது, ஸ்காந்தம்.

2. "யேசவேதவிதோ விப்ராயேசாத்யாத்மவிதோஜநா:"
என்பது, பிரமாணம்.

3. "ஆவித்ய: ப்ராக்ருத: ப்ரோக்த:"
என்பது, பிரமாணம்.

4. "நைவகிஞ்சித் பரோக்ஷம்தே"
என்பது, பிரமாணம்.

5. "யோவேத்தியுகபத்ஸர்வம்"
என்பது, பிரமாணம்.

196

[1] அறியாதார்க்கு உய்யப்புகுமாறும், இக்கரை ஏறினார்க்கு இன்பவெள்ளமும், நிலை அறியாதார்க்கு ஆழங்காலும், கரை ஏற்றுமவனுக்கு நாலாறும் அறிவிக்கவேணும்.

என்பது, சூத்திரம்.

வியாக்:- இப்படி இவர் எல்லார்க்கும் அறிவின்மையைப் போக்குதல் செய்யவேண்டுமோ? என்னும் வினாவிற்கு விடையாக, மேலே கூறிய நால்வர்க்கும் இவர் அறிவிக்கவேண்டும் அர்த்த விசேடங்கள் இன்னவை எனக் காட்டுகிறார் இச்சூத்திரத்தால்.

அறியாதார்க்கு - [2] "செங்கண் நெடியானைச் சிந்தித்து, அறியாதார் என்றும் அறியாதார்" என்கிறபடியே முதலிலே பகவானைப் பற்றிய ஞானம் இல்லாத இவ் வுலகமக்கட்கு, உய்யப் புகுமாறும் - [3] "அஃதே உய்யப் புகுமாறு" என்று [4] "திருநாரணன் தாள்" என்கிற அதுவே உய்வுபெறுவதற்கு உபாயம் என்று, பிறவிப் பெருங்கடலைத் தாண்டுதற்கு உபாயம் அறிவிக்கவேண்டும். இக் கரை ஏறினார்க்கு - [5] "அக் கரை என்னும் அனத்தக் கடலுள் அழுந்தி உன் பேரருளால், இக் கரை ஏறி இளைத்திருந்தேனை" என்கிறபடியே பிறவிப் பெருங் கடலில் அழுந்துகிறவர்களுக்கு, பகவான் ஒருவனே உபாயம் என்ற ஞானம் பிறந்தால் இங்கே இருக்கச்செய்தே அக் கரை இக் கரை என்னும்படி இவ்வுலகவாழ்வு தூரமாய்ப் பரமபதம் அண்மையாம்படி இருகையாலே, பகவான் ஒருவனே உபாயம் என்னுமதிலே துணிவுடையராய்த் தன் முயற்சி நீங்கியிருக்கிறவர்களுக்கு அந்தத் துணிவு குலைந்து பதறும்படி, இன்பவெள்ளமும் - [6] "முகில்வண்ண வானத்து இமையவர் சூழ இருப்பர் பேரின்ப வெள்ளத்தே" என்று பேற்றின் ஒப்புயர்வற்ற சிறப்பினை அறிவிக்கவேண்டும்.

நிலை அறியாதார்க்கு - ஆற்றிலே இழிந்து போகாநிற்கச்செய்தே நிலைக்கும்இடமும் நிலையாதஇடமும் அறியாதாரைப் போன்று, பேற்றினைப் பெற்றவர்களாய் அநுபவியாநிற்கச்செய்தே அதில் நிலை கொள்ளலாமிடமும் ஆழங்கால்படுத்துமிடமும் அறியாதவர்களுக்கு,

---

1. *'அறிவிக்க வேணும்' என்னும் சொல்லை மேலே உள்ள வாக்கியங்களோடு தனித்தனியே கூட்டுக.*

2. *பெரியதிருமொழி*, 11, 7: 8.
3. *திருவாய்*. 4. 1. 11.
4. *திருவாய்*. 4. 1: 1.
5. *பெரியாழ்வார்திரு*. 5. 3. 7.
6. *திருவாய்*. 7. 2: 11.

ஆழங்காலும் - [1] "செஞ்சொற்கவிகாள் உயிர் காத்து ஆட்செய்ம்மின்" என்று சீல குணமாகிற ஆழங்காலை அறிவிக்க வேண்டும். கரை ஏற்றுமவனுக்கு - [2] "வித்வான்கள், கொடியதும் எல்லை இல்லாத துக்கத்திற்கு நிலைக்களமானதுமான பிறவிப் பெருங்கடலை, தேவரீரையே சரணம் அடைந்து தாண்டுகிறார்கள்" என்கிறபடியே பிறவிப் பெருங்கடலைக் கடத்தி அக்கரைப்படுத்தும் இறைவனுக்கு, நாலாறும் - [3] "பொங்கைம்புலனும் பொறிஐந்தும்" என்ற திருப்பாசுரத்தாலே இருபத்துநான்கு தத்துவங்களின் தன்மையையும், அறிவிக்கவேணும் - அறிவிக்கவேண்டும் என்கை.

ஆக, அறிவு கேடரை உபாயத்திலே மூட்டுவர்; உபாயத்திலே ஊன்றினவர்களைப் பேற்றிலே ஊன்றச்செய்வர்; பேற்றிலே ஊன்றினவர்களுக்கு ஆழங்கால் அறிவிப்பர்; பேற்றினைக் கொடுக்கும் சர்வேச்வரனுக்கு விடத்தக்கனவற்றை அறிவிப்பர் என்றதாயிற்று. (47)

197

[4] அவன் முனிந்தார்க்குத் தாம் கண்டது; தம்மை முனிவார்க்குத் தம் கண்; காணாதது காண்பார்க்குக் கண்மாறுமிடம்; ராகாந்தகனுக்கு மாயா தோஷம்; இவர் காட்டுமவை.

என்பது, சூத்திரம்.

வியாக்:- இவர்களுக்கு இவ்வர்த்தங்களை உபதேசிப்பதற்கு உறுப்பான காரணங்களோடே இவற்றை இன்னம் ஒரு வகையில் விளக்கமாக அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

அவன் முனிந்தார்க்கு-[5] "தள்ளுகிறேன்", "பொறுக்கமாட்டேன்" என்கிற அவன் முனிவிற்கு இலக்காய் அறிவில்லாதவர்களான இவ்

1. திருவாய். 10. 7: 1.
2. ஸம்ஸார ஸாகரம் கோரமனந்தக்லேசபாஜநம்
   த்வாமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண:

என்பது, பிரமாணம்.

3. திருவாய். 10. 7: 10.
4. 'இவர் காட்டுமவை' என்னுமதனை மேலே உள்ள வாக்கியங்களோடு தனித்தனியே கூட்டிக்கொள்க. அவன் முனிந்தார்க்கு இவர் காட்டுமது தாம் கண்டது என்றும், தம்மை முனிவார்க்கு இவர் காட்டுமது தம் கண் என்றும், காணாதது காண்பார்க்கு இவர்காட்டுமது கண் மாறுமிடம் என்றும், ராகாந்தகனுக்கு இவர்காட்டுமது மாயாதோஷம் என்றும்.
5. "க்ஷிபாமி", "நக்ஷமாமி" என்பன, பிரமாணங்கள்.

வுலக மக்களுக்கு, தாம் கண்டது - [1] “ ஞானப்பிரானை யல்லால் இல்லை நான் கண்ட நல்லது ” என்று, கீழ் நிலையில் உள்ளவர்களை உயர்நிலைக்குக் கொண்டு வரும் ஆற்றலையுடையனாய் ஞானத்தை உபதேசித்தவனானவனை ஒழிய, எல்லார்க்கும் உய்வு பெறும் உபாயம் இல்லை என்று தாம் அறுதியிட்ட சிறந்த பொருளை இவர் காட்டுவர். தம்மை முனிவார்க்கு - [2] “ எங்ஙனேயோ அன்னைமீர்காள் என்னை முனிவது நீர் ” என்னும்படி உபாய நிலையில் துணிவுள்ளவர்களாய் நின்று,தம் முயற்சியால் அடையவிரும்புவதில் அச்சமுள்ளவர்களாய்ப் பேற்றினுடைய சிறப்பினை அறியாதவர்களாய் இத்துணை கழி பெருங் காதல் ஆகாது என்று நலம் சொல்லுமவர்களுக்கு, தம் கண் - [3] “ என் நெஞ்சினால் நோக்கிக் காணீர் ” என்று பேற்றினுடைய சிறப்பிலே மூழ்கியிருக்கின்றவளான என் நெஞ்சினால் பார்க்கமாட்டீர்களோ என்று தம்முடைய உட்கண்ணான ஞானத்தைக் காட்டுவர்.

காணாதது காண்பார்க்கு - [4] “ செஞ்சொற்கவிகாள், உயிர்காத்து ஆட்செய்ம்மின் ” என்கிறபடியே, கவிகளாய்க் கூர்க்கக் காணுமவர்களாகையாலே புறம்பே ஒருவர் காணாததும் காணவல்லவர்களுக்கு, கண்மாறுமிடம் - அவன் சீல குணத்திலே கண்வையாதேகொள்ளுங்கோள் என்று கண்மாறுமிடம் காட்டுவர். [5] ராகாந்தகனுக்கு - ஆழ்வாராகிய தம்பக்கல் வைத்த ஆசையாலே முன்னடிதோற்றமை யாலே விடத்தக்கதான இச்சரீரத்தின் குற்றம் காணமாட்டாத இறைவனுக்கு, மாயா தோஷம் - [6] “ மங்க ஒட்டு உன் மாமாயை ” என்கிறபடியே இச்சரீரத்தின் குற்றங்களை இவர் காட்டுவர். (48)

---

1. *திருவிருத்தம்*, 99. 2. *திருவாய்*. 5. 5: 1.
3. *திருவாய்*. 5. 5: 2. 4. *திருவாய்*. 10. 7: 1.
5. *ராகாந்தகன் - ஆசையாலே கண்மூடப்பட்டவன்; இறைவன்.*
6. *திருவாய்*. 10. 7: 10.

தாய்மார்கள் சர்வேச்வரனுடைய ஒப்புயர்வற்ற சிறப்பினை அறியாமல் தம்மை முனியப் புகுந்தபடியால் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டிய தாயிற்று. செஞ்சொற் கவிகள் இறைவனுடைய சீல குணத்தை அறியாமல் பகவத் விஷயத்தில் இழியப் புகுந்தார்களாதலின் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டியதாயிற்று. இறைவன் முற்றறிவினனாயினும் இவருடைய சரீரத்தின் குற்றத்தைக் காணமாட்டாமையாலே அவனுக்கும் உபதேசிக்க வேண்டியதாயிற்று.

198

[1] ஸாதந ஸாத்யஸ்த மத்யஸ்தரை விட்டு, அவற்றில் கலங்கும் ஜீவ ஈஸ்வரர்க்கு, வீடுமின், நினைமின்; பிடித்தேன், விடுவேனே; வைத்தெழ ஊது; வாடி நிற்க, கன்மமன்று, ஆன்பின், கைகழியேல்; உழிதராய், என்சொற்கொள் என்று, இவர் பலகாலும் ஹித அஹிதங்கள் சொல்லுவர்.

என்பது, சூத்திரம்.

வியாக்:-ஆனல், அறிவில்லாதவர்களான இவ்வுலகமக்கட்கு உபதேசிப்பது போன்று, ஏனை மூவர்க்கும் பலகாலும் உபதேசிப்பரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர் இச்சூத்திரத்தால்.

சாதந சாத்யஸ்த மத்யஸ்தரை விட்டு - சாதனமான உபாயம் கைப்பட்டவர்களுக்கும் சாத்யமானபேறு கைப்பட்டவர்களுக்கும் அறிவிக்கவேண்டுவது சிறிதாகையாலே, மேலே கூறப்பட்ட நால்வரில், உபாயத்தில் ஊன்றியிருப்பவர்களாகவும் பேற்றில்ஊன்றியிருப்பவர்களாகவும் நடுவிலே சொன்ன ஞானிகளும் விசேடமான ஞானத்தையுடையவர்களும் ஆகிற அவர்கள் இருவரையும் விட்டு, அவற்றில் கலங்கும் சீவர்கட்கு - இறைவனை அடைவதற்குரிய வழி இன்னது என்றும், அவ்வழியால் அடைதற்குரிய பயன் இன்னது என்றும் வினவயப்பட்டு அறியாதே கலங்கி நிற்கிற இவ்வுலகமக்கட்கு,

---

1. *சாதந சாத்யஸ்தர்களாகிய மத்யஸ்தரை விட்டு, அவற்றில் கலங்கும் ஜீவ ஈச்வரர்க்கு இவர் பலகாலும் ஹித அஹிதங்கள் சொல்லுவர் என முடிக்க. 'வீடுமின்' என்றது முதல் 'என்சொற்கொள்' என்பது முடிய, அவர்கட்கு இவர் கூறும் நலத்தையும் தீங்கையும் விவரிக்கின்றது. சாதந சாத்யஸ்தர்களாகிய மத்யஸ்தர் என்க. மத்யஸ்தர் என்றது, மேற்சூத்திரத்தில் கூறிய நால்வரில் நடுவிலே கூறப்பட்ட இருவரை. அவர்கள் - சாதநபரரும், சாத்யபரரும். சாதநபரர் என்றது, மேற்கூறிய தாய்மார்களை. இவர்கள், உபாய அத்யவசாய நிலையிலே நின்று தம் முயற்சியில் அஞ்சினவர்களாய்ப் பேற்றினுடைய சிறப்பினை அறியாதவர்களாய் இத்துணை மிக்க காதல் தகாது என்று நலம் சொல்லுகின்றவர்களாகையாலே அவர்களை சாதநஸ்தர் என்கிருர். சாத்யபரர் என்றது, "உயிர் காத்து ஆட்செய்மின்" என்று உபதேசிக்கப்படுகிற செஞ்சொற்கவிகளை. இவர்கள், பேற்றினுடைய சிறப்பினை நன்கறிந்து அதன் அநுபவத்தில் இழிந்தவர்களாகையாலே அவர்களை சாத்யஸ்தர் என்கிருர். 'அவற்றில்' என்ற சுட்டு, மேலே கூறிய சாதனத்தையும் சாத்யத்தையும் குறிக்கின்றது. 'வீடுமின், நினைமின்' என்ற இரண்டும் சீவர்களைக் குறித்த உபதேசம்.*

[1] வீடுமின் நினைமின் என்று இவர் பலகாலும் ஹித அஹிதங்கள் சொல்லுவர் - முதற்பத்தில் " வீடுமின்முற்றவும் " என்று தொடங்கி, பத்தாம்பத்தில் " கண்ணன் கழலிணை " என்னும் திருவாய்மொழியில் "சுனை நன்மலர் இட்டு, நினைமின் நெடியானே "என்பது முடிய, விடத் தக்கவை இன்னவை பற்றத்தக்கவை இன்னவை என்று பலபடி யாலும் உபதேசிப்பர்.

அவற்றில் கலங்கும் ஈச்வரனுக்கு - அன்பின்வசப்பட்டவனாய் உபாயம் இன்னது என்றும் பேறு இன்னது என்றும் அறியாதே கலங் கும் சர்வேச்வரனுக்கு, [2] பிடித்தேன், விடுவேனோ - ' தாழ்ந்தவர் என்று தம்மை நினைக்கும் நினைவாலே இவர் நம்மை விடில் செய்வது என் ?' என்று ஐயம்கொண்டு அலமருகிறஅளவிலே [3] " உன்னை நான் பிடித் தேன்கொள் சிக்கெனவே " என்றும், [4] " உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ " என்றும் சொல்லுகிறபடியே ' வருந்தாதே ' என்பது; வைத்து எழ ஊது - [5] " தோகைமாமயிலார்கள் செவி யோசை வைத் தெழ ஆகள் போகவிட்டுக் குழல் ஊது" என்று வழியினையும் வழியால் அடையும் பயனையும் அறிவிப்பது: வாடி நிற்க - [6] " மழறு தேன் மொழியார்கள் நின்னருள் சூடுவார் மனம் வாடி நிற்க, எம் குழறு பூவையொடும் கிளியோடும் குழகேல் " என்றும், கன்மம் அன்று- [7] " கன்மம் அன்று எங்கள் கையில் பாவை பறிப்பது " என்றும், ஆன்பின், கை கழியேல்-[8] " ஆன்பின் போகேல் " என்றும், [9] " என் கை கழியேல் " என்றும் செய்யத்தகாத காரியங்களைச் செய்யாதே என்பது; உழிதராய், என்சொற்கொள் - [10] " நீ உகக்கும் நல்லவ

---

1. *இவ்வுலக மக்கட்கு உபதேசிக்கிற இடங்கள் திருவாய்மொழியில் பிரசித்தமானவையே. ஒவ்வொரு பத்திலும் ஒவ்வொரு திருப்பதிகம் பரோபதேசமாக அமைந்திருக்கின்றது. முதலும் முடிவும் மாத்திரமே இங்குக் காட்டப்படுகிறது. 'வீடுமின்' என்பது, முதற்பத்தில் இரண்டா வது திருப்பதிகம். 'நினைமின்' என்பது, பத்தாம் பத்தில் ஐந்தாம் திருப் பதிகத்தில் பத்தாவது திருப்பாசுரம்.*

2. *'பிடித்தேன், விடுவேனோ' என்ற இவ்விரண்டு திருப்பாசுரப் பகுதிகளும், 'ஆழ்வார் நம்மைவிட்டு நீங்கின் செய்வது என் ?' என்று கலங்கி நின்ற ஈச்வரனுடைய கலக்கத்தை நீக்குவதற்குக் கூறியவை.*

3. *திருவாய்.* 2. 6: 1.
4. *திருவாய்.* 2. 6. 10.
5. *திருவாய்.* 6. 2: 2.
6. *திருவாய்.* 6. 2: 5.
7. *திருவாய்.* 6. 2: 8.
8. *திருவாய்.* 10. 3: 8.
9. *திருவாய்.* 10. 3: 8.
10. *திருவாய்.* 10. 3: 8.

ரொடும் உழிதராய்" என்றும், [1] "அவத்தங்கள் விளையும் என் சொற்கொள்" என்றும் செய்யத் தகுவனவற்றைச் செய் என்பதாய், என்று இவர் பலகாலும் ஹித அஹிதங்கள் சொல்லுவர் - என்று இவர் பலகாலும் நன்மை தீமைகளைச் சொல்லுவர். ஆக, இப்படிப் பலவிடங்களிலும் உபதேசிக்கையாலே முன்பு கூறின நால்வரில் முதலிலும் ஈற்றிலும் சொல்லப்பட்டவர்களான உலகமக்கட்கும் முற்றறிவினனான சர்வேச்வரனுக்கும் பலகாலும் நன்மை தீமைகளைச் சொல்லுவர் என்றபடி.

'சாதந சாத்யங்களில் கலங்கும் ஈச்வரனுக்கு' என்று தொடங்கி, 'பிடித்தேன், விடுவேனோ, வாடிநிற்க' என்பன போன்றவைகளை எல்லாம் அருளிச்செய்வான் என்? என்னில், [2] உபாயத்தில் ஊன்றினவர்களையும் உபேயத்தில் ஊன்றிநிற்பவர்களையும் சொன்னதற்கு எதிர்த்தட்டாக, உபாயத்தில் கலக்கமும் உபேயத்தில் கலக்கமும் ஆன்மாக்களுக்கும் ஈச்வரனுக்கும் ஒரோ வழிகளால் உண்டு என்று காட்டுவதற்காகச் சொன்னதுஇத்தனைஒழிய, மேல் சொல்லுகிற நலன்கள் தீங்குகள் எல்லாம் உபாய விஷயமாகவும் உபேய விஷயமாகவுமே இருக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாமையாலே விரோதம் இல்லை. அன்றியும், மக்களை நோக்கி உபதேசிக்கிற உபதேசங்களிலும் ஐம்பொருள்களையும் உபதேசிக்கையால் அந்த உபாய உபேயங்கள் என்ற இரண்டுமே என்கிற நிர்ப்பந்தம் இல்லையே அன்றோ.

அங்ஙன் அன்றிக்கே, மக்கள் விஷயமான உபதேசங்களிலும் "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழி பக்திரூபமான உபாயத்தை உபதேசித்ததாகையாலும், "கண்ணன் கழலிணை" என்ற திருவாய்மொழி பக்திமான்களுடைய செயல்கள் இருக்கும்படி உபதேசித்ததாகையாலும், நடுவே உள்ள உபதேசங்களை ஆராய்ந்தாலும், பக்தி ரூப உபாய உபதேசமும், பிரபத்தி ரூப உபாய உபதேசமும், பகவானை அநுபவிக்கின்ற கைங்கர்ய ரூப பலத்தின் உபதேசமும் மிகுதியாய், அடையத்தக்க பரம்பொருளின் சொரூபத்தையும் அடைகின்ற இவ்வான்மாவின் சொரூபத்தையும் அடைதற்குத் தடை

1. திருவாய். 10. 3: 10.

2. உபாய உபேயங்களில் கலக்கம் சம்சாரிகளுக்கு இருக்கலாம்; முற்றறிவினனான சர்வேச்வரனுக்கு அது இருக்கக் காரணம் இல்லையே? அங்ஙனமிருக்க, 'அவற்றில் கலங்கும் ஜீவ ஈச்வரர்க்கு' என்று அருளிச்செய்தது என்? என்னும் வினாவிற்கு இரண்டு விதமாக விடை அருளிச்செய்கிறார் 'உபாயத்தில்' என்று தொடங்கியும், 'அங்ஙன் அன்றிக்கே' என்று தொடங்கியும்.

களாக உள்ள விரோதிசொரூபத்தையும் சொன்னதிருவாய்மொழிகள் இந்த உபாய உபேயங்களில் ஊன்ற வைக்கைக்குக் காரணமாகை யாலே இவற்றிற்கு உறுப்புக்களாய் முடிகையாலும், உபாய உபேயங் களில் கலக்கம் தீர்க்கையே உபதேசத்துக்கு முக்கிய பயன் என்று ஒருங்கவிட்டு, சர்வேச்வரன் விஷயமான உபதேசமும், உபாய உபேயங் களில் கலக்கம் தீர்க்கையை நினைத்தேஎன்று கொள்ளவேண்டுமாகில்,

"பிடித்தேன்", "விடுவேனே" என்கிற இரண்டும், தனக்குப் பேருக இருக்கிற இவ்வாழ்வாரோடே வந்து கலந்து பெருப்பேறு பெற்றுனுயிராநிற்கச்செய்தே, 'இவர் தம்மைச் சீலமில்லாச் சிறியன் என்று நினைத்து அகலில் செய்வது ஏன்?' என்று ஐயம் கொண்டு அலமாக்கிறபடியை நீக்குவதற்காகச் சொன்னவையாகையாலே, பேறு விஷயமான கலக்கத்தைத் தெளிவிப்பதற்காகச் சொன்னவை ஆகலாம். பேற்றில் கலக்கமாவது, பேறு இன்னதுஎன்று அறியாமல் கலங்குகையாலும், பேற்றைப்பற்றிய கலக்கம் என்கிற மாத்திரத் தைக் கொண்டு இதற்கு இப்படிப் பொருள் கூறினுல் விரோதம் இல்லை.

"வைத்தெழ ஊது" என்கிற இது, தனக்குப் பிரியமானவர் களைப் பிரிந்து கண்ணுஞ்சுழலை இட்டு ஒன்றை ஒன்ருக நினைத்துத் தங்கள் குழலைக் கொண்டாடினுகைக் கருதி, நாங்கள் அவர்கள் அல்லோம் காண், அவர்கள் பக்கலிலே போ என்கிற நினைவாலே "தோகை மா மயிலார்கள் செவி ஓசை வைத்தெழ" என்று பயனையும், "ஆகள் போகவிட்டுக் குழல் ஊது" என்று அதற்கு வழியையும் அவனுக்கு அறிவிக்கிறதாகையாலே உபாயத்திலும் உபேயத்திலும் கலங்கினவனுக்குச் சொல்லுகிறது என்பது தெளிவாம்.

"வாடிநிற்க" என்கிற இது, "மழறு தேன் மொழியார்கள்" என்று தொடங்கி உனக்குப் பிரியமானவர்கள் உன்னைப் பிரிந்து உருவிக்கிடக்க, உன்னுடைய வெறுப்புக்கு இடமான எங்கள் பூவை கிளிகளோடே கலந்து பேசாதேகொள் என்கிறதாகையாலே பேற்றில் கலக்கம் கண்டு சொன்னதாம்.

"கன்மம் அன்று" என்கிற இது, தங்களோடே இட்டிடு கொண்டு தங்கள் எண்ணத்தைக் குலைத்துத் தங்களை வசீகரிப்ப தற்கு வழியாக நினைத்துத் தங்களுக்கு விருப்பம் இல்லாதது என்று அறியாமல் கையில் பாவையைப் பறிக்கிற அவனைக் குறித்து 'உனக்கு இது காரியம் அன்று' என்கிறதாகையாலே உபாயத்தில் கலக்கம் கண்டு சொன்னதாகலாம்.

" ஆன்பின் போகேல், கைகழியேல் " என்கிற இவை, பசு மேய்க்கப்போன இடத்தே தனக்கு என்ன தீங்கு வருகிறதோ என்றும், பிரிவாற்றுமலும் இத்தலை படுகிற துன்பம் அறிந்தால் பிரியாதே இத்தலையோடே கூடியிருக்கை புருஷார்த்தமாகவிருக்க, சாதிக்குஉரிய தர்மம் என்கிற மாத்திரத்தைக்கொண்டு பசுமேய்க்கப் போக ஒருப்படுகிறவனைக் கண்டு " ஆழும் என் ஆருயிர் ; ஆன்பின் போகேல் " என்றும், " கலவியும் நலியும் ; என் கைகழியேல் " என்றும் சொல்லுகிறவையாகையாலே பேற்றில் கலங்கினவனுக்குச் சொன்னவையாகலாம்.

" உழிதரு " என்கிற இது, " வசிசெய் உன் தாமரைக்கண்ணும் வாயும் கைகளும் பீதகவுடையும் காட்டி " என்று வசீகரிப்பதற்குரிய கருவிகளையும், " உகக்கும் நல்லவரொடும் உழிதரு " என்று தன்னுல் காதலிக்கப்பட்டவர்களோடு கலத்தலாகிற பயனையும், அவற்றை அறியாமல் நிற்கிறவனுக்கு அறிவித்ததாக அன்ருே இருக்கிறது.

"என்சொற்கொள்" என்கிறஇது, பசு மேய்க்கப் போகவேண்டா என்று விலக்குகிறது நமக்கு ஒரு தீங்குவராமைக்காக என்று அறியாமல், அன்பு உடையவளான தன் வார்த்தையை அநாதரிக்கின்றவனைக் குறித்து " அவத்தங்கள் விளையும் என்சொற்கொள் " என்றதாகையாலே இதுவும் பேற்றில் கலங்குகிறவனுக்குச் சொன்னதாகலாம்.

ஆனபின்பு 'இவற்றில் கலங்கும் ஈச்வரனுக்குப் பலகாலும் ஹித அஹிதங்கள் சொல்லுவர் ' என்றதற்குத் தகுதியாக, இத் திருப்பாசுரங்களுக்கெல்லாம் இப்படிப் பொருள் சொன்னுலும் குறைஇல்லை. (49)

199

[1] கதிர் ஞானமூர்த்திக்கு உணர்த்துவது பிரேமத்தாலே; தமம் மூடுவார்க்கு வேட்கை எழுவிப்பது ஞானத்தாலே.

என்பது, சூத்திரம்.

வியாக்:- இப்படி இவர்கள் இருவர்க்கும் பலகாலும் உபதேசிப்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர் இச்சூத்திரத்தால்.

1. *கதிர்ஞானமூர்த்தி - எம்பெருமான்; இறைவன். பிரேமம் - அன்பு; பக்தி. தமம் - இருள்; அறிவின்மை.*

கதிர்ஞானமூர்த்திக்கு - [1] "பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாததோர், கணக்கில் கீர்த்தி வெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினுய்" என்கிறபடியே அழிகுகும் காலத்தில் அறிவுடைப்பொருள் அறிவில்பொருள்கள் அனைத்தையும் ஒரு சேரக் கலந்து, படைப்புக் காலத்தில் ஒருவர் செய்த நல்வினை தீவினைகள் மற்ருெருவர் பக்கல் கலவாதபடி, பிரித்தவிடத்திலும் தன் சொரு பத்துக்கு ஒரு விகாரம் இன்றிக்கே ஒப்பற்றதாய், அளவிடமுடியாத தான கீர்த்தியாகிற கடலையுடைத்தாயிருக்கின்ற ஒளிருபமான ஞானத்தைவடிவாகவுடையஞகையாலே முற்றறிவினஞயிருக்கிற சர்வேச்வரனுக்கு, உணர்த்துவது - [2] "உனக்கு ஒன்று உணர்த்துவன்" என்று உபதேசிப்பது, பிரேமத்தாலே - அவனிடத்துள்ள பக்தியினுலே.

தமம் மூடுவார்க்கு - [3] "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெரும் செல்வம் நெருப்பாக, கொள்ளென்று தமம் மூடும்" என்கிறபடியே செல்வம் அழிவிற்குக் காரணமாகக் காணுநிற்கச்செய்தே பின்னை யும் அதனை ஏற்கும்படி அறிவின்மையினுல் மூடப்படுகிற இவ்வுலக மக்களுக்கு, வேட்கை எழுவிப்பது - [4] "நின்கண் வேட்கை எழுவிப் பன்" என்கிறபடியே தம் உபதேசத்தாலே பகவானிடத்தில் பக்தியை உண்டாக்குவது, ஞானத்தாலே - அவன் சம்பந்தம் காரணமாக அவர்களை விடமாட்டாதே திருத்தி, தம்மைப்போன்று பகவானை அநுபவிக்கின்றவர்கள் ஆக்கவேண்டும் என்கிற ஞானத்தாலே என்கை. (50)

200

[5] '*உயிர் மாய்தல், ஆழும் என்னுருயிர்*' *என்னும்*
பர துக்கம் சஹியாமை, இரண்டிலும் உண்டு.

என்பது, சூத்திரம்.

வியாக் :- ஞானம் பிரேமம் என்னும் இரண்டனையும் காரணமா கச் சொல்லுவான் என்? பரதுக்கம்பொறுமை அன்ரே பரோபதே சத்துக்கு முக்கியமான காரணம்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிருர் இச்சூத்திரத்தால்.

---

1. *திருவாய்.* 6. 2: 8. 2. *திருவாய்.* 6. 2: 5.
3. *திருவாய்.* 4. 9: 4. 4. *திருவிருத்தம்,* 36.

5. *இதனை, உயிர்மாய்தல் என்னும் பரதுக்கம் சஹியாமை ஞானத் திலும் உண்டு. ஆழும் என் ஆர்உயிர் என்னும் பரதுக்கம் சஹியாமை பிரேமத்திலும் உண்டு என்று விரித்துக்கொள்க. பரதுக்கம் என்பதற்கு, பரம்பொருள் சம்பந்தமான துக்கம் என்றும், பிறருடைய துக்கம் என்றும் இருபொருள். 'இரண்டிலும்' என்றது, மேற்சூத்திரத்தில் கூறிய பிரே மத்தையும் ஞானத்தையும்.*

உயிர்மாய்தல் என்னும் பரதுக்கம் சஹியாமை - [1] "கொண்டாட்டும் குலம் புனேவும் தமர் உற்ருர் விழுநிதியும், வண்டார் பூங்குழலாளும் மனே ஒழிய உயிர் மாய்தல், கண்டு ஆற்றேன்" என்று இவ்வுலக மக்கள் பாரிக்கிற பாரிப்பும் முடிந்துபோகிறபடியும் கண்டு ஆற்றமாட்டுகிறிலேன் என்கையாலே பிறருடைய துக்கம்பொருமையும், ஆழும் என் ஆர்உயிர் என்னும் பரதுக்கம் சஹியாமை - [2] "அசுரர்கள் தலைப்பெய்யில் எவன்கொல் என்று ஆழும் என் ஆருயிர்" என்று அசுரர்கள் உன்னே வந்து கிட்டிஞல் அங்கு என்ஞய் விளேயுமோ என்று என் ஆன்மாவானது தரைப்படாநின்றது என்கையாலே பரஞன சர்வேச்வரனுடைய துக்கம் பொருமையும், இரண்டிலும் உண்டு- உலக மக்களுக்கும் சர்வேச்வரனுக்கும் உபதேசிப்பதற்குக் காரணமாக மேற் சூத்திரத்துச் சொன்ன ஞானம் பிரேமம் என்னும் இரண்டிலும் உண்டு என்கை.

இதனுல் ஞானம், பிரேமம் என்னும் இரண்டும், பரதுக்கம் பொருமையை ஒழிந்து இராது என்றதாயிற்று. (51)

201

'என்னது உன்னது ஆவி'யிலே 'அறிவார் ஆத்மா' என்று அவன் மதம் தோன்றும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :- இப்படி அன்பு மாத்திரத்தால் அன்றிக்கே, சர்வேச்வரன் நினைவாலே, அவனுக்கு ஆழ்வாராகிற தாம், ஆன்மாவாகையாலும் அவனுக்கு ஒரு தீங்கு வரப் பொறுக்கமாட்டார் என்னுமதனைக் காட்டுகிருர் இச்சூத்திரத்தால்.

என்னது உன்னது ஆவியிலே - [3] "என்னது உன்னது ஆவியும்" என்று, உன்னுடைய திவ்யாத்ம சொரூபம் நான் இட்ட வழக்கு என்றவிடத்திலே, அறிவார் ஆத்மா என்று - [4] "அறிவார் உயிராஞய்" என்று அறிவாரை உயிராகவுடையவன் என்னும்படி,

---

1. திருவாய். 4. 9: 3. 2. திருவாய். 10. 3: 8.
3. திருவாய். 4. 3: 8. 4. திருவாய். 6. 9: 8.

"அறிவார் உயிராஞய்" என்பதற்கு, அறிவாரை உயிராகவுடையவன் என்று பொருள் கோடலே சிறப்பு. மேல் வருகின்ற ஸ்ரீஸுக்தி சலோகத்தைக் காண்க.

அவன் மதம் தோன்றும் - [1] "ஞானியானவன் என்னுடைய ஆன்மா என்பது என்னுடைய மதம்" என்று ஞானியானவன் என்னுடைய உயிர் என்பதே என் மதம் என்று அருளிச்செய்தபடியே இவரை அவன் தனக்கு ஆன்மாவாக நினைத்திருக்கிற தன்மை தோன்றும் என்றபடி. ஆகையால் அவனுக்கு ஒரு துன்பம் வர இவர் பொறுக்க மாட்டார் என்பது கருத்து. (52)

202

இருத்தும், எண்தானுய், பொய் கலவாது, அன்பு செய்து, பற்றிலனுய், க்ஷுத் த்ருட்பீடித நிர்த்த நரைப்போலே கண்டு கொண்டு உண்டு பருகி, பரிஜ நாதிகளோடே தன்னைத் தந்து, என்செய்வன் என்றே இருந்து, அகில பரத்தையும் சமர்ப்பிக்க, அது சுமந்து, அல்லு நன்பகலும் போகு என்றுலும் அகல்வானும் அல்லனுய், போகேல் என்றுல் உகப்பையும் தவிர்ந்து, விதி வகையே நடத்துமவனே உபதேச சத்பாத்ரம்.

என்பது, சூத்திரம்.

வியாக்:- ஆக, மக்களுக்கும் சர்வேச்வரனுக்கும் பலகாலும் நலம் தீங்குகளைச் சொல்லுகைக்குக் காரணங்களைக் காட்டினுராய் நின்றுர் மேல். இப்படி இவர் உபதேசிப்பரானுலும் சிஷ்யனுடைய இலக்கணமாகிற தகுதி இல்லாத சர்வேச்வரன் உபதேசத்திற்கு முக்கிய பாத்திரம் அன்றே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர் இச்சூத்திரத்தால்.

அதாவது, உத்தம சிஷ்யனுனவன், தன் ஆசாரியனை அவனுக்கு விருப்பமான இடத்திலே வைத்து, அவன் விருப்பின்படி

---

1. *"ஜ்ஞாநீ து ஆத்மைவமேமதம்"*
என்பது, ஸ்ரீகீதை, 7: 18.

"உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும்" என்னும் இத் திருப்பாசுரத்திற்கு ஸ்ரீ ஆளவந்தார் பொருள் அருளிச்செய்யக் கேட்டிருந்த முதலிகளில் சிலர் 'இவ்வாத்மாவின் சொரூபம் பரமாத்மா இட்ட வழக்கு என்பது கூடும்; பரமாத்மாவின் சொரூபம் ஜீவாத்மா இட்ட வழக்கு என்பது என்?' என்று கேட்க, 'இவன் தன்னை அவனுக்கு ஆக்குவன்' என்ற அன்று கர்மம் தடைசெய்யவும் கூடும்; சர்வேச்வரன் தன்னை இவன் இட்ட வழக்கு ஆக்கும் அன்று தடை செய்பவர் இலர்; ஆனபின்பு அதுவே நிலைநிற்பது. மேலும், 'இவன் சொரூபம் அவன் இட்ட வழக்கு ஆகக்கூடுமோ? என்று இதிலே காணும் சந்தேகிக்கவேண்டுவது' என்று அருளிச்செய்தார் ஸ்ரீ ஆளவந்தார்.

நடந்து, அவனுடைய திருமேனியிலே புரை அற்ற விருப்பமுடைய வனாய், எல்லாச் சிநேகத்தையும் அவன் பக்கலிலே செலுத்தி, வேறான விஷயங்களிலே பற்று அற்று, மிடியன் செல்வத்தைப் பெற்றாற் போலவும் பசியன்சோற்றைப் பெற்றாற்போலவும் நீர் வேட்கையுடையவன் தண்ணீரைப் பெற்றாற்போலவும் மிக்க காதலோடே அவனை அநுபவித்து, [1] "தன் சரீரத்தையும் பொருளையும் உயிரையும் நல்ல ஆசாரியர்களுக்குக் கொடுக்கவேண்டும்" என்கிறபடியே தன்னுடைய உயிரையும் தனது பொருள்களையும் ஆசாரியனுக்குக் கொடுத்து, எல்லாம் செய்தாலும், [2] "நிறைந்த பூமியைக் கொடுத்தாலும் ஆசாரியன் செய்த உபகாரத்துக்கு ஈடாகமாட்டாது" என்கிறபடியே ஆசாரியன் செய்த மிகப்பெரிய உபகாரத்துக்கு ஒப்பு அல்லாமையாலே குறைவாளனாய், ஆசாரியன் தன்னுடைய குடும்ப பாரமெல்லாம் தன் மேலே பொகட்டிருக்கத் தான் அப் பாரத்தை எல்லாம் சுமந்து, பகல் இரவு எந்நேரத்திலும் அவனைப் பிரியாமல், அவன் சீற்றம் கொண்டு போ என்றாலும் போகாதவனாய், அவனுக்கு விருப்பம் இல்லையானால் தான் உகந்தவற்றையும் விட்டு, ஆசாரியன் விதித்தபடியே நடத்துமவன் ஆவன்.

எம்பெருமானும், இருத்தும் - [3] "இருத்தும் வியந்து என்னைத் தன் பொன்னடிக் கீழ்" என்கிறபடியே இவர்க்கு விருப்பமான இடத்தே இவரை இருத்தி, எண்தானாய் - [4] "என்எண் தான் ஆனான்" என்கிறபடியே இவர் நினைவிலே ஒழுகுவானாய், பொய் கலவாது - [5] "பொய் கலவாது என் மெய் கலந்தானே" என்கிற படியே இவர் திருமேனியிலே செய்த விருப்பத்திலே புரை இன்றிக்கே, அன்பு செய்து - [6] "அந்தாமத்து அன்புசெய்து" என்கிறபடியே பரமபதத்தில் செய்யும் விருப்பத்தை இவர் பக்கலிலே செய்து, பற்றிலனாய் - [7] "பற்றிலன் ஈசனும் முற்றவும் நின்றனன்" என்கிறபடியே இவர் பக்கல் வைத்த அன்பினாலே பரமபதத்திலுள்ளார் பக்கல் அன்

1. *"சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத்"* *என்பது, விஹகேச்வரஸம்ஹிதை.*

2. *"க்ருத்ஸ்நாம்வாப்ருதிவீம் தத்யாத் நதத்துல்யம் கதஞ்சந"* *என்பது, பிரமாணம்.*

3. *திருவாய்.* 8. 7: 1.
4. *திருவாய்.* 1. 8: 7.
5. *திருவாய்.* 1. 8: 5.
6. *திருவாய்.* 2. 5: 1.
7. *திருவாய்.* 1. 2: 6.

யையும் விட்டு, [1] க்ஷுத்பீடிதனைப்போலே த்ருட்பீடிதனைப்போலே நிர்த்தநனைப்போலே உண்டு பருகிக்கண்டுகொண்டு - [2] "நாளும் நாள் வந்து என்னை முற்றவும் தான் உண்டான்" என்கிறபடியே பசித்தவன் சோறு கண்டாற்போலவும், [3] "தான் என்னை முற்றப் பருகினான்" என்கிற படியே நீர்வேட்கைகொண்டவன் தண்ணீரைக் கண்டாற்போலவும், [4] "இருந்தான் கண்டு கொண்டு" என்கிறபடியே வறியன் நிதியினைக்கண்டாற்போலவும் கழிபெருங்காதலோடே இவரை அநுபவித்து.

பரிஜநாதிகளோடே தன்னைத் தந்து - [5] "வரதனே! பரிஜனங்களும் சாமரம் முதலியவைகளும் திருஆபரணங்களும் திவ்வியாயுதங்களும் தேவரீருடைய ஞானம் சக்தி முதலிய குணங்களும் ஸ்ரீ வைகுண்டமும் மற்றய அண்டங்களும் தேவரீருடைய திருமேனியும் அப்படியே தேவரீரும் ஆகிய எல்லாப்பொருள்களும் அடியார்களுக்காகவே இருக்கின்றன" என்றும், [6] "எனக்கே தன்னைத் தந்த கற்பகம்" என்றும் சொல்லுகிறபடியே தன்னுடைய செல்வத்தையும் தன்னையும் இவர்க்குக் கொடுத்து, என் செய்வன் என்றே இருந்து- [7] "உன் அடியார்க்கு என் செய்வன் என்றே இருத்தி" என்கிற படியே இவர்க்கு எல்லாம் செய்தாலும் தான் இழவாளனாய், அகில பரத்தையும் சமர்ப்பிக்க - ஆன்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்கள் ஆகிய எல்லாப் பாரத்தையும் 'நம:' என்ற சொல்லின் மூலம் இவர் சமர்ப்பிக்க, [8] "வேங்கடத்து உறைவார்க்கு நம என்னலாம் கடமை

1. *'க்ஷுத் த்ருட்பீடித நிர்த்தாரைப்போலே கண்டுகொண்டு உண்டு பருகி' என்னும் இவ்வாக்கியத்தை க்ஷுத்பீடிதனைப் போலே உண்டு, த்ருட்பீடிதனைப் போலே பருகி, நிர்த்தாரைப் போலே கண்டுகொண்டு என மயக்கநிரல்நிறையாகக் கூட்டுக. க்ஷுத்பீடிதன் - பசியுள்ளவன். த்ருட்பீடிதன் - நீர்வேட்கை யுள்ளவன். நிர்த்தனன் - வறியவன்.*

2. *திருவாய்.* 9. 6: 8. 3. *திருவாய்.* 9. 6: 10.

4. *திருவாய்.* 8. 7: 2.

5. *பரிஜநபரிபர்ஹா பூஷணாந்யாயுதாநி*
ப்ரவரகுணகணாச்ச ஜ்ஞாந சக்த்யாதயஸ்தே
பரமபதமதாண்டாந்யாத்ம தேஹஸ்ததாத்மா
வரத ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த.

என்பது, வரதராஜஸ்தவம், 63.

6. *திருவாய்.* 2. 7: 11. 7. *பெரியதிருவந்.* 53.

8. *திருவாய்.* 3. 3: 6.

அது சுமந்தார்கட்கே" என்னும்படி, [1] "நம என்னும் சொல்லை மிகப் பெரியதாக நினைத்திருக்கும் கருத்தாலே உமக்குச் சொல்லுகிறோம்" என்கிறபடியே 'நம' என்னும் சொல் தனக்குப் பாரமாகத் தோற்று கையாலே அவ்வழியாலே அந்த எல்லாப்பாரத்தையும் சுமந்து,

அல்லு நன்பகலும் போகு என்றாலும் அகல்வானும் அல்லனாய் - [2] "அல்லும் நன்பகலும் இடைவீடின்றி நல்கி, என்னை விடான்" என்று இவர் பக்கல் வைத்த சிநேகத்தாலே பகல் இரவு என்னும் வேறுபாடு இல்லாமல் இவரை விடமாட்டாதே, [3] "போகு நம்பீ" என்று சீறிப் போகச் சொன்னாலும் [4] "அகல்வானு அல்லன் இனி" என்கிறபடியே அகலாதானாய், போகேல் என்றால் - [5] "ஆன்பின் போகேல்" என்று இவர் விலக்கினால், உகப்பையும் தவிர்ந்து - [6] "திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி" என்கிறபடியே தனக்கு உகப்பான காரியத்தையும் தவிர்ந்து, விதி வகையே நடத்துமவனே - [7] "அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதி வகையே" என்று இவர் விதித்தபடியே நடத்துகிற சர்வேச்வரனே, உபதேச சத்பாத்ரம் - உபதேசத்துக்குச் சிறந்த உண்மையான பாத்திரம் என்கை. (53)

203

[8] நண்ணாதார் மெய்யில் ஊன் ஆசை நிர்வேதத்தோடே ஆஸ்திக்ய அமாநித்வாதிகள் விஞ்சின பிரணிபாத அபிவாதந பரிப்ரச்ந சேவாபரர்க்கு, உளம்கொள் பேசுமளவன்று என்னும் அர்த்தத்தை, வம்மின் விரோதம் ஈனச்சொல் எவ்வுயிர்க்கும் அறிய என்று அடைவுகெட அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறது, ஞாலத்தார் பந்தபுத்தியும் அநர்த்தம் கண்டு ஆற்றாமையும் மிக்க கிருபையுமிறே.

என்பது, சூத்திரம்.

---

1. "பூயிஷ்டாம்" என்பது, யஜுர்வேதம்.
2. திருவாய். 1. 10: 8.
3. திருவாய். 6. 2: 2.
4. திருவாய். 2. 6: 7.
5. திருவாய். 10 3: 8.
6. திருவாய். 10. 3: 10.
7. திருவாய். 10 6: 1.
8. நிர்வேதம் - வெறுப்பு. ஆஸ்திக்யம் - சாஸ்திரங்களில் நம்பிக்கை புண்மை. அமாநித்வம் - மேன்மக்களை உபேக்ஷை செய்யாமல் இருப்பது. பிரணிபாதம் - சாஷ்டாங்கமாக வணங்குதல். அபிவாதநம் - ஆசீர்வாதத்தைக் கோருதல். பரிப்ரச்நம் - கேட்டல். சேவாபரர் - அடிமைத்தொழில் செய்கின்றவர்கள். அதபஸ்கர் - தவம்இல்லாதவர். பந்தம் - இறைவனுக்கும் உயிர்களுக்குமுள்ள உறவு.

வியாக்:- ஆனால், இங்ஙன் அன்றிக்கே, அறிவில்லாதவர்களான இவ் வுலகமக்களுக்கு உபதேசிக்கும்போது, இவ்வுலக வாழ்வில் விரக்தராய் ஆன்மகுணங்களையுடையராய் அணுகி வந்து ஆதரத்தோடு விரும்புகிறவர்களுக்கு உபதேசிக்கத் தக்க சீரிய பொருளை, பகவானிடத்தில் பக்தியில்லாதவர்களாய் வேறு பயன்களை விரும்புகின்றவர்களாய் விரும்பி அருகிலும் வாராதவர்களுக்கு வலியப் பிடித்து உபதேசிப்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் இச்சூத்திரத்தால்.

நண்ணுதார் மெய்யில் ஊன் ஆசை நிர்வேதத்தோடே - [1]"நண்ணுதார் முறுவலிப்ப" என்ற திருவாய்மொழியிலும் [2]"மெய்யில் வாழ்க்கையை", [3]"ஊனேறு செல்வத்துடற்பிறவி" என்ற திருமொழிகளிலும், [4]"ஆசைவாய்ச் சென்ற சிந்தையராகி" என்ற திருமொழியிலும் சொல்லுகிறபடியே பகவானிடத்தில் பக்தி இல்லாத உலக வாழ்விலும், தோல் இரத்தம் இறைச்சி முதலிய தாதுக்களால் ஆக்கப்பட்ட சரீரத்திலும், நல்வினை தீவினைகள் காரணமாக வந்த சரீர சம்பந்தமான பொருள்களிலும் உண்டான குற்றங்களைக் கண்ட காட்சியாலே, [5]"செய்யும் செயல்களால் ஈட்டப்படும் பலன்களை ஆராய்ந்த பிராமணன், செய்யும் செயல்களால் பரம்பொருள் அடையப்படுகிறான் இல்லை என்று வெறுப்பை அடைவான்" என்கிறபடியே பிறந்த வெறுப்போடே,

ஆஸ்திக்ய அமாநித்வ ஆதிகள் விஞ்சின - [6]"சாஸ்திரங்களில் நம்பிக்கைஉள்ளவனும் தர்மங்களைச் செய்யவேண்டும் என்ற தன்மையுடையவனும் ஒழுக்கமுடையவனும் விஷ்ணு பக்தியுடையவனும் தூய தன்மையுடையவனும் காம்பீர்யத்தையுடையவனும் சாதுர்யத்தையுடையவனும் தைரியமுடையவனும் ஆன ஒருவன் சிஷ்யன் என்று

---

1. *திருவாய். 4. 9: 1.* 2. *பெருமாள் திரு. 3: 1.*
3. *பெருமாள் திரு. 4: 1.* 4. *பெரியாழ்வார் திரு. 4. 5: 1.*
5. *"பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராம்ஹணோ*
நிர்வேத மாயாந் நாஸ்தி அக்ருத: க்ருதேந"
என்பது முண்டகோபநிட. 2: 11.
6. *ஆஸ்திகோ தர்மசீலச்ச சீலவாந் வைஷ்ணவச்சுசி:*
கம்பீர: சதுரோதீர: சிஷ்ய இத்யபிதீயதே.
என்பது, பிரமாணம்.

சொல்லப்படுகிறான்" என்றும், [1] "உயர்ந்தவர்களை அலக்ஷியம் செய்யாமலிருப்பது, கர்மாநுஷ்டானங்களைப் பெருமைக்காகச் செய்யாமலிருப்பது, முக்கரணங்களாலும் பிறர்க்குத் துன்பம் செய்யாமலிருப்பது, பொறுமையோடிருப்பது, எல்லாரிடத்திலும் சமமாக இருப்பது, ஆசாரியனை வணங்குவது, சாஸ்திரங்களில் சொல்லியபடி பரிசுத்தமாக இருப்பது, சாஸ்திரங்களில் சொல்லியவைகளில் உறுதியுடன் இருப்பது, ஆன்மாவிலியே மனத்தினை வைப்பது" என்றும் சொல்லப்படுகின்றபடியே ஆஸ்திக்யம் முதலானவைகளும் அமாநித்வம் முதலானவைகளும் ஆகிற சிஷ்யனுடைய இலக்கணமான ஆத்மகுணங்களில் மேம்பட்டவர்களாய், பிரணிபாத அபிவாதந பரிப்பிரச்ந சேவாபரர்க்கு - [2] "கைகூப்பி வணங்கியும் அபிவாதநம் செய்தும்" என்றும், [3] "ஆத்ம விஷயமான ஞானத்தை நமஸ்காரத்தாலும் கேட்பதாலும் தொண்டு செய்வதனாலும் ஞானிகளிடமிருந்து அறிந்துகொள்" என்றும் சொல்லுகிறபடியே செருக்கு அற்றவர்களாய்க் கொண்டு நமஸ்கரித்தல் அபிவாதநம்சொல்லுதல் கேட்டல் தொண்டு செய்தல் ஆகிற இவற்றிலே ஊன்றினவர்களாய்ப் பல காலம் தன்னைச் சார்ந்தவர்களுக்கு,

உளம்கொள் பேசும் அளவன்று என்னும் அர்த்தத்தை - [4] "உளம் கொள் ஞானத்து வைம்மின் உம்மை உய்யக்கொண்டு போகுறிலே" என்றும், [5] "பேசும் அளவன்று இது வம்மின் நமர்! பிறர் கேட்பதன் முன்" என்றும் இப்படி ஆறு காதுகள் இல்லாமல் ஒருவர் கேட்க உபதேசிக்கவேண்டும் அர்த்த விசேடத்தை,

வம்மின் - [6] "வம்மின்புலவீர்" என்று வலிய அழைத்து, விரோதம் - [7] "சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ" என்று நான் சொல்லுகிற இது உங்களுக்கு விரோதமாய்த் தோற்றியிருந்ததாகிலும் நான்சொல்லுவன் இதனைக் கேளுங்கோள்

---

1. அமாநித்வமதம்பித்வமஹிம்சா க்ஷாந்திரார்ஜவம்
ஆசார்யோபாஸநம் சௌசம் ஸ்தைர்யமாத்ம விநிக்ரஹ:
என்பது, ஸ்ரீகீதை, 13: 7.

2. "ப்ரணிபத்யாபிவாத்யச"
என்பது, ஸ்ரீவிஷ்ணுபு. 1. 1: 1.

3. "தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேநஸேவயா"
என்பது, ஸ்ரீகீதை, 4: 34.

4. திருவாய். 4. 10: 9.
5. பெரியதிருமொழி, 2. 4: 9.
6. திருவாய். 3. 9: 6.
7. திருவாய். 3. 9: 1.

என்று விரும்பி, ஈனச்சொல்—[1] "ஈனச்சொல் ஆயினும் ஆக" என்கையாலே "ஆகிலுமாக" என்று பொகடு பொருளாகவும், எவ்வுயிர்க்கும் அறிய என்று - [2] "மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத்து எவ்வுயிர்க்கும்" என்றும், [3] "திண்ணம் நாம் அறியச் சொன்னோம்" என்றும் எல்லார்க்கும் பிரசித்தமாம்படியாகவும், அடைவுகெட - இப்படி முறை கேடாக, அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறது - [4] "இந்தக்கீதையின் தத்துவப்பொருள் தவம் இல்லாதவனுக்கு ஒருபோதும் உன்னால் சொல்லத்தக்கது அன்று, பக்தியில்லாதவனுக்கும் சொல்லத்தக்கது அன்று, தவம் பக்தி என்னும் இவை இருந்தாலும் ஆசாரியனுக்குப் பணிவிடை செய்யாதவனுக்குச் சொல்லத்தக்கது அன்று, என்னை நிந்திப்பவனுக்கும் சொல்லத்தக்கது அன்று" என்று ஸ்ரீ கீதையில் சொல்லப்பட்டபடியே உள்ள அதிகாரிகள் அல்லாதவர்கட்கு உபதேசிககிறது,

ஞாலத்தார் பந்த புத்தியும் - [5] "ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமானே" என்கிறபடியே பரமபதத்தில் உள்ளாரைப் போன்று இவ்வுலகில் உள்ளவர்கட்கும் அவனோடு சம்பந்தம் ஒத்திருக்க, இவர்கள் இழந்து கிடக்க ஒண்ணாது என்கிற சம்பந்த ஞானமும், அநர்த்தம் கண்டு ஆற்றாமையும் - [6] "கண்டு ஆற்றேன் உலகியற்கை கடல் வண்ணா" என்கிறபடியே இவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் படும் கேட்டினைக் கண்டு பொறுக்கமாட்டாத தன்மையும், மிக்க கிருபையுமிறே - அதுமாத்திரமன்றிக்கே, [7] "அருள் கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே" என்கிறபடியே [8] "தள்ளுகிறேன்", "பொறுக்கமாட்டேன்" என்று ஈச்வரன் கைவிட்டவர்களையும் திருத்தி அல்லது நிற்கமாட்டாத கரைபுரண்ட பேரருளும் அன்றோ என்கை.

---

1. *திருவிருத்தம்*, 99.
2. *திருவாய்.* 9. 1: 7.
3. *திருவாய்.* 10. 2: 5.
4. *இதம்தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந*
   நசாஶுஶ்ரூஷவேவாச்யம் நசமாம் யோப்யஸூயதி,

என்பது, ஸ்ரீகீதை, 18: 67.

5. *திருவாய்.* 4. 5: 8.   6. *திருவாய்.* 4. 9: 3.
7. *கண்ணிநுண் சிறுத்தாம்பு*, 8.
8. "*க்ஷிபாமி*" "*நக்ஷமாமி*"

என்பன, பிரமாணங்கள்.

ஞாலத்தார் பந்தபுத்தியும் கேட்டினைக்கண்டு பொறுக்கமாட்டாமையும் என்னும் இரண்டும், இவர்தாம் அருளிச்செய்த திருவாய்மொழியால் நமக்குப் போதருகையாலும், மிக்க கிருபை, இவர் சிஷ்யரான ஸ்ரீ மதுரகவிகள் திருவார்த்தையால் நமக்குப் போதருகையாலும் ஆயிற்று,[1] இப்படிப் பிரசித்திதோற்ற அருளிச்செய்தது. (54)

204

[2] *தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவர் அடிபணிந்தவர்க்குமே இவை உள்ளது.*

என்பது, சூத்திரம்.

வியாக் :—மற்றும் இப்படி உபதேசித்தவர்கள் பிறரும் உளரோ ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

தாய்க்கும் - உலக மாதாவாகிய தன்பக்கலிலே தீய சிந்தையைச் செய்து நிற்கின்ற மாபாவியாகிய இராவணனைக் குறித்துப் [3] " புருஷ சிரேஷ்டரான இந்த ஸ்ரீராமபிரான், இராச்சியத்தை இச்சிக்கிறவனும் கொடிய கொலையை விரும்பாதவனும் இருக்கிற உன்னால் சிநேகம் செய்துகொள்ளப்படுதற்குத் தகுந்தவர் " என்றும், [4] " ஸ்ரீராமபிரான் நியாயம் அறிந்தவர், சரணம் புகுந்தவர்களிடத்தில் அன்புடையவர், எல்லாராலும் அறியப்பட்டவர், ஆகையால், உய்ந்து போவதற்கு விரும்புவாயேயாகில் உனக்கு அவரோடு சிநேகம் உண்டாகட்டும் " என்றும் வருவன போல்வனவற்றால் நலத்தை உபதேசித்த [5] " இந்த இலக்ஷ்மியானவள் எப்போதும் இருப்பவள், உலகங்கட்கு எல்லாம் தாய், ஒருபோதும் விஷ்ணுவை விட்டுப் பிரியாதவள் " என்கிறபடியே எல்லா உலகங்கட்கும் தாயான பிராட்டிக்கும்,

---

1. " மிக்க கிருபையுமிறே " என்பதிலுள்ள 'இறே' என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இப்படிப் பிரசித்திதோற்ற அருளிச் செய்தது' என்கிறார்.

2. தாய் - சீதாபிராட்டி. மகன் - பிரகலாதன். தம்பி - விபீஷணன். இவர் - ஆழ்வார். அடிபணிந்தவர் - இராமானுசர்.

3. மித்ரமௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா
வதம்சாநிச்சதா கோரம் த்வயாஸௌபுருஷர்ஷப:

என்பது, ஸ்ரீராமா. சுந். 21: 19.

4. விதித: ஸஹிதர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல:
தேநமைத்ரீபவது தே யதிஜீவிது மிச்சஸி.

என்பது, ஸ்ரீராமா. சுந். 21: 20.

5. " நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஸ்ரீ: அநபாயிநீ "
என்பது, ஸ்ரீவிஷ்ணுபு. 1. 8: 17.

மகனுக்கும் - திருப்பெயர் சொன்னதுவே காரணமாகச் சீறி மிகக் கொடிய தண்டங்களைச் செய்யும்படி, பகவானிடத்தில் மீளாத பகையைக் கொண்டவனும் மாபாவியர்கட்கெல்லாம் முதல்வனுமான இரணியனைக் குறித்து, [1] "தந்தையே! எல்லா உயிர்களையும் சரீரமாக உடையவனும் உலகநாதனும் பரமாத்மாவுமான கோவிந்தன் உலக உருவமாக இருக்க, பகைவன் நட்டோன் என்கிற கதை எங்கிருந்து உண்டாகும்" என்றும், [2] "பூமியில் இருக்கிறான், எங்கும் இருக்கிறான்" என்றும் வருவன போல்வனவற்றால் நலத்தை உபதேசித்தும், இறைவனிடத்தில் விருப்பம் இல்லாத அசுர புத்திரர்களைக் குறித்து, [3] "அசுரர்களே! சாரம் இல்லாத இவ்வுலக வாழ்வில் உள்ள, சுழல் போன்று வருகின்ற தேவ மனித திரியக்குப்பிறவிகளில் மகிழ்ச்சியை அடையாதீர்கள், உறுதியாகச் சொல்லுகிறேன், எங்கும் ஒரே தன்மையாய் இருப்பதை அடையுங்கள், ஒரே தன்மையாக இருப்பதானது இறைவனுக்குப் பிரீதியை உண்டுபண்ணும்" என்றும் வருவன போல்வனவற்றால் நலத்தை உபதேசித்தும் போந்த [4] "மீள அவன் மகனை" என்கிற இரணியன் மகனை ஸ்ரீ பிரஹ்லாதனுக்கும்,

தம்பிக்கும் - [5] "மலைச்சிகரம் போன்ற அளவுள்ளவைகளும் தெத்துப் பற்களை ஆயுதங்களாக உடையவைகளும் நகங்களை ஆயுதங்களாக உடையவைகளும் ஆன குரங்குகள் இலங்கையை வந்து அடைவதற்குள் சீதாபிராட்டி ஸ்ரீராமபிரானிடத்தில் கொடுக்கப்பட

---

1. "ஸர்வபூதாத்மகேதாத ஜகந்நாதே ஜகந்மயே."
என்பது, ஸ்ரீவிஷ்ணுபு 1. 19. 37.

2. "உர்வ்யாமஸ்தி"
என்பது, பிரமாணம்.

3. அபார ஸம்ஸார விவர்த்தஸேஷு-மாயாததோஷம் ப்ரஸபம் ப்ரவீமி
ஸர்வத்ரதைத்யாஸ்ஸமதாமுபேத்ய ஸமத்வமாராதநம் அச்யுதஸ்ய.
என்பது, ஸ்ரீவிஷ்ணுபு 1. 17: 89.

4. பெரியாழ்வார்திரு. 1. 6: 2.

5. யாவந்நலங்கா ஸமபித்ரவந்தி வலீமுகா: பர்வதகூடமாத்ரா:
தம்ஷ்ட்ராயுதாஸ்சைவ நகாயுதாச்சப்ரதீயதாம் தாசரதாயமைதிலீ.
என்பது, ஸ்ரீராமா. யுத். 14: 3.

வேண்டும்'' என்றும், [1]"ஸ்ரீராமபிரானால் விடப்பட்டனவும் வச்சிரத்துக்குச் சமமானவைகளும் காற்றினை ஒத்த வேகத்தையுடையனவுமான அம்புகள் உயர்ந்த அரக்கர்களுடைய தலைகளை அறுப்பதற்கு முன்பு சீதாபிராட்டி ஸ்ரீராமபிரானிடத்தில் கொடுக்கப்படவேண்டும்'' என்றும் இப்படித் தனக்கு நலம் சொன்னது பொறுமல் [2]"அரக்கர் குலத்துக்குக் கெடுதியைச் செய்கிற உன்னைப் பழிக்கவேண்டும்'' என்று தள்ளிய கொடியனான இராவணனைக் குறித்து, [3]"அரசனே! எப்போதும் பிரியத்தைச் சொல்லும் புருடர்கள் எளிதில் கிடைப்பார்கள்; பிரியம் இல்லாத நன்மையைச் சொல்லுபவனும் கேட்பவனும் கிடைப்பது அரிது'' என்றும், [4]"அருள் இன்றி எல்லா உயிர்களையும் கவர்கின்ற யமனுடைய பாசத்தால் கட்டுண்டவனும் நாசமடைகிறவனுமான உன்னைப் பற்றி, எரிகிற வீட்டினைப் போன்று வெறுக்க மாட்டேன்'' என்றும் தொடங்கி நலத்தை உபதேசித்த [5]"அவன் தம்பிக்கே'' என்கிற இராவணனுக்குத் தம்பியான ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கும்,

இவர்க்கும் - பகவானிடத்தில் பக்தி இல்லாதவர்களாய் வேறு ஒன்றிலே நோக்கு உள்ளவர்களாய்த் திரிகிற இவ்வுலகமக்களை விடமாட்டாமல் [6]"வீடுமின் முற்றவும்'' என்று தொடங்கிப் பல இடங்களிலும் பல படியாலும் உபதேசித்த இவ்வாழ்வார்தமக்கும், இவர் அடிபணிந்தவர்க்குமே - ஓராண்வழியாக முன்னோர் உபதேசித்துப் போந்த முறையைக் குலைத்துப் பலரையும் உபதேசிக்கும்படி செய்தும், பல கால் நடந்து துவண்டு கேட்ட உயர்ந்த உண்மைப் பொருளை

---

1. *யாவர் நக்ருஹ்ணந்தி சிராம்ஸிபாணாராமேரிதா*
ராக்ஷஸ புங்கவாநாம்
வஜ்ரோபமா வாயு ஸமாந வேகா: ப்ரதீயதாம்
தாசரதாயமைதிலீ.

என்பது, ஸ்ரீராமா. யுத். 14: 4.

2. *"த்வாம்து திக் குலபாம்ஸநம்"*

என்பது, ஸ்ரீராமா. யுத். 16: 15.

3. *ஸுலபா: புருஷாராஜந் ஸததம் ப்ரியவாதிந:*
அப்ரியஸ்யது பத்யஸ்ய வக்தா ச்ரோதாச துர்லப:

என்பது, ஸ்ரீராமா. யுத்: 16: 20.

4. *பத்தம் காலஸ்ய பாசேந ஸர்வபூதாபஹாரிணா*
நசச்யந்த முபேக்ஷேயம் ப்ரதீப்தம் சரணம் யதா.

என்பது, ஸ்ரீராமா. யுத். 16: 21.

5. *திருவாய்* 7. 6: 9.

6. *திருவாய்.* 1. 2: 1.

ஓலக்கமாக வைத்து உபதேசித்தும், [1] "உனக்குத் தொடர்ந்து வருகிற பல பிறவிகள் பயன் அற்றுப் போயின; அவற்றுள் இது ஒரு பிறவி என்று நினைத்து இறைவனைச் சரணம் அடைவாய்" என்று ருசி இல்லாதவர்களையும் நம்பிக்கை இல்லாதவர்களையும் நிர்ப்பந்தித்துச் சரமோபாய நிலையினராக்கியும், இப்படி அதிகாரம் பாராமல் அவர்களுடைய தீய நிலையைப் பார்த்து உபதேசித்தருளும் தன்மையராய், [2] "பாமன்னு மாறன் அடிபணிந்து உய்ந்தவன்" என்று பேசப்படுகிற எம்பெருமானார்க்குமே, இவை உள்ளது - இத்தன்மைகள் உள்ளவைகள் என்கை.

'இவை' என்றது, மேற்சூத்திரத்தில் கூறிப்போந்த 'சம்பந்த ஞானம், அநர்த்தம் கண்டு ஆற்றாமை, மிக்க கிருபை' என்னும் மூன்றனையும் சுட்டுகிறது. (55)

205

[3] கியாதி லாப பூஜாபேக்ஷை அற, மலர் நாடி ஆட் செய்ய, உய்யக்கொண்டு ஆரைக்கொண்டு வாளும் வில்லும் கொண்டு என்கிற இழவுகள் தீரப்பெற்றது.

என்பது, சூத்திரம்.

வியாக்:—இப்படிப் பகவானிடத்தில் பக்தி இல்லாத இவ்வுலக மக்களைக் குறித்து இவ்வாழ்வார் உபதேசித்த உபதேசம் பயன் பெற்றதோ? என்ன, [4] அதற்கு விடை அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

---

1. *வ்ருதைவ பவதோயாதா பூயஸீ ஜந்மஸந்ததி:*
தஸ்யாமந்யதமம் ஜந்ம ஸஞ்சிந்த்ய சரணம் வ்ரஜ.

என்பது, சாண்டில்யஸ்மிருதி.

2. *இராமாநுச நூற்றந்தாதி,* 1.

3. *இச்சூத்திரத்தை, கியாதி அபேக்ஷை அற்று, பூஜா அபேக்ஷை அற்று, லாப அபேக்ஷை அற்று, மலர்நாடி ஆட்செய்ய, உய்யக்கொண்டு என்கிற இழவும், ஆரைக்கொண்டு என்கிற இழவும், வாளும் வில்லும் கொண்டு என்கிற இழவும் தீரப்பெற்றது என்று சொற்களைப் பிரித்துக் கூட்டி எச்சங்களை முடித்துக்கொள்க.*

4. *ஆழ்வார்க்கு, கியாதி லாபம் பூஜை என்னும் இவற்றில் விருப்பம் சிறிதும் இல்லாமையாலும், இவ்வுலக மக்கள் உய்யவேண்டும், நமக்கு உசாத்துணை கிடைக்கவேண்டும், எம்பெருமானுக்குக் காப்பிடுவார் நிரம்ப வேண்டும் என்னும் விருப்பமே நிறைந்திருந்தமையாலும் இவருடைய உபதேசம் பலித்தது என்கிறார் இச்சூத்திரத்தால்.*

கியாதி அபேக்ஷை அற - [1] "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று தண்மைக்கு எல்லையாகத் தம்மை நினைத்திருக்கையாலே கீர்த்தியில் விருப்பம் இன்றி, லாப அபேக்ஷை அற - [2] "கொள்ளென்று கிளர்ந்து எழுந்த பெரும் செல்வம் நெருப்பாக" என்று செல்வத்தை நெருப்பிற்குச் சமமாகக் காண்கையாலே இலாபத்தில் ஆசைஅற்று, பூஜாஅபேக்ஷை அற - [3] "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்" என்று பாகவதர்களுடைய அடிமை என்னும் எல்லையிலே நிற்கிறவர்களுக்குத் தம்மை அடிமையாக நினைத்தும், [4] "ஓதவல்ல பிராக்கள் நம்மை ஆளுடையார்கள் பண்டே" என்று இத்திருவாய்மொழியினைக் கற்கின்றவர்களைத் தமக்குத் தலைவர்களாக நினைத்தும் போருகையாலே பூஜையில் விருப்பம் அற்று, மலர் நாடி ஆள் செய்ய - [5] "நறிய நன்மலர் நாடி" என்கிறபடியே அடிமையாகிற பரிமளத்தோடு கூடியதாய்ச் சிறந்ததான ஆத்ம புஷ்பங்களைத் தேடி, [6] "ஆட்செய்து ஆழிப்பிரானைச் சேர்ந்தவன்" என்று ஆட்செய்கையாகிற உபதேசத்தைச் செய்கையால் உலக முழுதும் திருந்துகையாலே,

உய்யக் கொண்டு என்கிற இழவும் - [7] "உளம் கொள் ஞானத்து வைம்மின் உம்மை உய்யக் கொண்டு போகுறிலே" என்கிறபடியே இவ்வுலக மக்கள் உய்வின் காரணமாக உண்டான இழவும், ஆரைக் கொண்டு என்கிற இழவும் - [8] "உழந்து இனி யாரைக் கொண்டு என் உசாகோ" என்கிறபடியே தமக்கு உசாத்துணை இல்லாமையால் வந்த இழவும், வாளும் வில்லும் கொண்டு என்கிற இழவும் - [9] "வாளும் வில்லும் கொண்டு பின்செல்வார் மற்றில்லை" என்கிற படியே அவனுடைய மிருதுத்தன்மை அறிந்து அன்பு செலுத்துவதற்கு ஒருவரும் இல்லை என்கிற இழவும், தீரப்பெற்றது - தீர்ந்தது என்கை.

என்றது, எல்லாரும் உய்வு பெற்றுத் தமக்கு உசாத் துணையாய் அவனுக்கு வாழ்த்தும் கூறுகையாலே மூன்று இழவுகளும் தீரப் பெற்றன என்றபடி.

---

1. திருவாய். 3. 3: 4.
2. திருவாய். 4. 9: 4.
3. திருவாய். 8. 9: 11.
4. திருவாய். 9. 1: 11.
5. திருவாய். 5. 5: 11.
6. திருவாய். 4. 10: 11.
7. திருவாய். 4. 10: 9.
8. திருவாய். 7. 3: 4.
9. திருவாய். 8. 3: 3.

"மலர்நாடி" என்கிற இதற்கு "நறிய நன்மலர்நாடி" என்ற திருப்பாசுரப் பகுதியைச் சொல்லும்போது எல்லா வியாக்கியானங்களிலும் "பரிமளத்தையுடைத்தாய்ச் சிலாக்கியமான புஷ்பங்கள் போலே ஆராய்ந்து சொன்ன ஆயிரம்" என்று திருவாய்மொழிக்கு விசேடணமாகச் சொல்லியிருக்கையாலே, இவர்க்கு நினைவு ஆத்ம புஷ்பங்களைத் தேடி என்கிற இது என்று கொள்ளவேண்டும். அன்றிக்கே, "மலர் நாடி" என்ற இத்தொடர்மொழியை [1] "நாடாத மலர் நாடி" என்ற திருப்பாசுரப் பகுதியை நினைத்து அருளிச்செய்தார் என்று கொள்ளில் ஒரு விரோதமும் இல்லை. "வாடாத மலரடிக் கீழ் வைக்கவே வகுக்கின்று" என்று கைங்கரிய விஷயமும் உண்டாகையாலே "ஆட்செய்ய" என்ற அதனோடும் சேரும். (56)

206

[2] பிரஹ்மநிஷ்டரும் சம்வத்சரவாசிகளுமாகில்
'ஏபாவம், பயன்அன்றாகிலும்' சேராது.

என்பது, சூத்திரம்.

வியாக்:—இப்படி உபதேசம் பலித்ததாகில், [3] "கர்மங்களைச் செய்வதனால் ஈட்டப்படும் பலன்கள் சிறியவை நிலைநில்லாதவை என்று அறிந்து, இறைவன், கர்மங்களைச் செய்வதனால் பெறத்தக்கவன் அல்லன் என்று அறிந்த பிராமணன் வெறுப்புக்கொண்டு" என்கிறபடியே, கர்மங்களின் பலன்களான இவ்வுலக இன்பங்களின் சிறுமை நிலைநில்லாமை முதலிய குற்றங்களையும், நித்தியனான பரமாத்மாவானவன், கர்மங்களைச்செய்வதனால் அடையமுடியாதவன் என்பதனையும் நினைத்தலால் உண்டான வெறுப்போடே ஐம்பொறிகளையும் மனத்தினையும் அடக்குதல் முதலிய ஆத்ம குணங்களையுடையவனாய், கையுறை கொண்டவனாய்க்கொண்டு வேதங்களைக் கற்ற மறையோன், பிரஹ்ம நிஷ்டனான ஆசாரியனை வழிபட, அவ்

---

1. *திருவாய். 1. 4: 9.*

2. *இச்சூத்திரத்தை, உபதேசிக்கும் ஆழ்வார் பிரஹ்ம நிஷ்டராகில் 'ஏபாவம்' சேராது என்றும், உபதேசம் கேட்கும் மக்கள் சம்வத்சரவாசிகளாகில் 'பயன் அன்றாகிலும்' சேராது என்றும், இடையே சில சொற்கள் பெய்தும், 'சேராது' என்னும் சொல்லை முன்னர்க் கூட்டியும் பொருள் முடிவு காண்க.*

3. *இப்பொருள் அமைந்த உபநிடதவாக்கியத்தை மேலே பக். 481. காண்க.*

வாசாரியனும் [1]"ஒரு வருடம் குருகுலவாசம் செய்யாதவனுக்குச் சொல்லக்கூடாது" என்கிறபடியே, ஓர் யாண்டு பரீட்சை செய்து பின்னை உபதேசிக்கக்கடவன் என்று சொல்லுகிற நூன்முறையிலே இவ்வுலகமக்கள் வழிபட்டு வந்து கேட்க, இவர் உபதேசித்தார் என்று கொண்டால் என்னை ? என்னும் வினவிற்கு விடை அருளிச் செய்கிறார் இச்சூத்திரத்தால்.

பிரஹ்ம நிஷ்டர் ஆகில் - உபதேசிக்கின்றவரான இவர் முறையாக வந்து சேர்ந்தவனுக்கொழிய மற்றையோருக்கு உபதேசியோம் என்றிருக்கும் பிரஹ்மநிஷ்டராகில், ஏ பாவம் சேராது - அப்படி வந்து வழிபாடு செய்கின்றவர்களுக்குப் பிரீதியோடே உபதேசித்தல் தவிர, அதிகாரிகள் அல்லாதவர்கட்கு உபதேசிக்கப்புக்கு [2]"ஏ பாவம் பரமே" என்கிறபடியே 'ஓ பாவம்! எனக்கு இது பரம் ஆவதே!' என்று உபதேசத்தின் தொடக்கத்திலே வெறுத்துச் சொன்ன திருப் பாசுரம் சேராது.

சம்வத்சரவாசிகள் ஆகில் - இவர் பக்கல் உபதேசம் கேட்டவர்கள் ஓர் யாண்டு குருகுல வாசம் செய்தவர்களாகில், கையுறை தந்து வழிபாடு செய்தன்றோ நாம் பெற்றோம் என்றிருக்கை ஒழிய, பயன் அன்றாகிலும் சேராது - இவருடைய பிரதம சிஷ்யரான ஸ்ரீமதுரகவிகள் [3]"பயன் அன்றாகிலும் பாங்கலராகிலும், செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்" என்கிறபடியே பயன் இல்லாதவர்களாகிலும் குணக்கேடர் ஆகிலும் தம்முடைய செயலாலே எல்லாம் நன்றாம்படி திருத்திக் கொள்வார் இவர் என்று நன்றியறிதலாலே உகந்து சொன்ன திருப்பாசுரமும் சேராது.

இப்படி ஆசாரியரான ஆழ்வாருடைய திருப்பாசுரமும், சிஷ்யரான ஸ்ரீமதுரகவிகள் திருப்பாசுரமும் ஆகையாலே முன் கூறிய 'ஞாலத்தார் பந்த புத்தியும், அனர்த்தம் கண்டு ஆற்றாமையும், மிக்க கிருபையும்' ஆகிற காரணங்களாலே பக்தி இல்லாதவர்களைக் குறித்து உபதேசிக்க, உபதேசத்தின் தூய்மையாலே எல்லாரும் திருந்த இவருடைய குறைகளும் தீர்ந்தன என்றே கொள்ள வேண்டும் என்றதாயிற்று. (57)

---

1. "நாஸம்வத்ஸர வாஸிநே ப்ரப்ரூயாத்" என்பது, பிரமாணம்.
2. திருவாய். 2. 2: 2.
3. கண்ணிநுண் சிறுத்தாம்பு, 10.

207

[1] *'மெய்ந்நின்று, மங்கஒட்டு' க்கு நடுவு, அநுபவ கர்ப்ப உபதேசம்.*

என்பது, சூத்திரம்.

வியாக்:— இனி, இவர் இப்படிப் பரோபதேசம் செய்கின்ற வராம்போது பகவானை அநுபவிக்கும் அநுபவத்துக்கு இடையீடு வாராதோ? என்னும் வினவிற்கு விடை அருளிச்செய்கிருர் இச் சூத்திரத்தால்.

மெய்ந்நின்று மங்க ஒட்டுக்கு நடுவு - [2] "மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பம்" என்றது முதல் [3] "மங்க ஒட்டு உன் மா மாயை" என்பது முடிவாக நடுவில் அடங்கி உள்ள நான்கு பிரபந்தங்களும், அநுபவ கர்ப்ப உபதேசம் - அநுபவம் உள்ளே செல்லாநிற்கச்செய்தே உண்டான பரோபதேசம் என்கை.

இவர்க்கு அநுபவ கர்ப்பமான உபதேசமும், உபதேச கர்ப்பமான அநுபவமுமாய்ச் செல்லும் என்றே அன்ரே நம் முதலிகள் அருளிச் செய்வது. ஆதலால், இவருடைய அநுபவத்திற்கு இடையீடு ஒருபொழுதும் இல்லையே அன்ரே.

ஆக, இப்படி இவருடைய பரோபதேச விஷயங்களும், உபதேசத் திற்குக் காரணங்களும், உபதேசம் பயன்பெற்றதும், அந்த உபதேசம் தான் அநுபவத்தை விட்டு இராது என்னுமிடமும் சொல்லிற்ருயிற்று. (58)

208

[4] *இவற்றுக்கு, மந்த்ர விதி அநுசந்தாந ரஹஸ்யங் களோடே சேர்த்தி.*

என்பது, சூத்திரம்.

வியாக்:— இப்படி இவ்வாழ்வாருடைய அநுபவ உபதேச ரூப மான நான்கு பிரபந்தங்களும், மூன்று மந்திரங்களினுடைய பொருள்

---

1. *அநுபவ கர்ப்ப உபதேசம் - அநுபவம் மனத்திலே நடந்து கொண்டிருக்கும் போதே செய்யும் உபதேசம். கர்ப்பம் - உட்கொண்டது.*

2. *திருவிருத்தம்*, 1. 3. *திருவாய்*. 10. 7: 10.

4. *மந்திர ரஹஸ்யம், விதி ரஹஸ்யம், அநுசந்தாநரஹஸ்யம் என்று கூட்டுக. மந்திர ரஹஸ்யம் - திருமந்திரம். விதிரஹஸ்யம் - சரமச் சுலோகம். அநுசந்தான ரஹஸ்யம் - த்வயம்.*

களைச் சொல்லுகின்றனவாக இருக்கும்படியைத் தெளிவுபடுத்துவதற்குத் திருவுள்ளம்பற்றி 'இவற்றுக்கு' என்று தொடங்குகிறார் இச்சூத்திரத்தால்.

இவற்றுக்கு - "மெய்ந்நின்று, மங்க ஒட்டுக்கு நடுவு" என்று மேலே சொல்லப்பட்ட [1]இப்பிரபந்தங்கள் நான்கற்கும், மந்திர ரஹஸ்யத்தோடு - எல்லாச் சாஸ்திரங்களுக்கும் தாத்பர்யமான ஐம்பொருள்களையும் ஐயம் திரிபு அறச் சொல்லுகின்றனவான [2]"வேதங்கள் முதலியன எல்லாம் திருவட்டாக்ஷரத்தினுள் இருக்கின்றன" என்னும்படி எல்லாச் சாத்திரங்களின் சுருக்கமான திருமந்திரமும், விதி ரஹஸ்யத்தோடு - இறைவனை உபாயமாகப் பற்றுவதனை அங்கத்தோடு விதிக்கிற சரமச்சுலோகமும், அநுசந்தாந ரஹஸ்யத்தோடே - இறைவனைப் பற்றும் முறையையும் பேறான கைங்கர்யப் பிரார்த்தனையையும் முறையாகத் தெளிவுபடுத்திக்கொண்டிராநின்ற, போதுபோக்கிற்கும் போகத்திற்குமாக, சாரத்தை அறிந்த பெரியோர்களாலே எப்பொழுதும் அநுசந்தானம் செய்யப்படும் துவயமும் ஆகிற இந்த இரஹசியங்கள் மூன்றனோடே, சேர்த்தி - சேர்த்தி என்கை. (59)

209

[3]அளிப்பான் அடியேன் அடைக்கலம் சூடிய பொய் யாதானும் அழுந்தார் என்று ஸ்வரூப விரோதி நிவ்ருத்திகளையும், தாமரை உந்திப் பெரு மா மாயன் ஆளாகவே வாழிய என்று பிராப்ய பலன்களையும், நெறிகாட்டி மனத்துக்கொண்டு கண்ணனால் அடித்துக் கண்டிலமால் யாதாகில் என்று உபாயத்தையும் சொன்னவை மந்த்ர ச்லோகங்களோடே சேரும்.

என்பது, சூத்திரம்.

---

1. 'இப்பிரபந்தங்கள்'-திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன.

2. "ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம்"
என்பது, ஸ்ரீபாஞ்சராத்திரம்.

3. இச்சூத்திரத்தில், 'ஸ்வரூப விரோதி நிவ்ருத்திகளையும்' என்பது முடிய உள்ளவை, திருமந்திரத்தின் முதல் இரண்டு பதங்களின் பொருள். இப்பொருள் கூறப்பட்டிருப்பது திருவிருத்தம் என்னும் பிரபந்தத்தில். அதற்குமேல் 'பிராப்ய பலன்களையும்' என்பது முடிய உள்ளவை, திருமந்திரத்தில் 'நாராயணாய' பதத்தின் பொருள். இப்பொருள் கூறப்பட்டிருப்பது திருவாசிரியம் என்னும் பிரபந்தத்தில். அதற்குமேல் 'உபா

வியாக்:— அவற்றுள் எந்தப் பிரபந்தத்தில் எந்த இரஹஸ்யத்தின் பொருள் சொல்லப்பட்டிருக்கின்றது? என்னும் வினவிற்கு விடை அருளிச்செய்கிறார் இரண்டு சூத்திரங்களால்.

அதாவது, அளிப்பான் - [1]"உயிர் அளிப்பான் எங்கின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்றதனுல், பிரணவத்தில் முதல் எழுத்தான அகாரத்தில் 'அவ-ரக்ஷணே' என்ற தாதுவின் பொருளான இறைவனுடைய காக்குந்தன்மையைக் கூறினாராவர். அடியேன் - "மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே" என்றதனுல், அவனுல் பாதுகாக்கப்படும் பொருளாய், அகாரத்தில் ஏறிக் கழிந்த 'ஆய' என்னும் நான்காம்வேற்றுமையாலும் பிரணவத்தில் இரண்டாம் எழுத்தான உகாரத்தாலும் சொல்லுகிறபடியே வேறொருவர்க்கும் ஆகாது அவனுக்கே அடிமையாய், சரீரத்தின் வேறுபட்டதாய், ஞான ஆனந்த வடிவாகவுள்ள, மூன்றும் எழுத்தான 'மகார'த்தால் சொல்லப்படுகிற ஆத்மசொரூபத்தைச் சொல்லினுராவர். அடைக்கலம் - பிரணவத்தில் அகாரத்தின்மேல் ஏறிக் கழிந்த நான்காம் வேற்றுமையானது வியாகரண சாஸ்திரத்தின்படி கொடைப்பொருளில் வந்ததாய், [2]"மஹானும் பிரஹ்மனுமாகிய தேவரீரை அடைவதற்கு ஓம் என்ற பிரணவத்தால் ஆன்மாவைச் சமர்ப்பிக்கக்கடவன்" என்கிறபடியே பிரணவத்திற்கு ஆன்மாவைக் கொடுத்தல் என்பதும் பொருளாகையாலே விரோதி பயத்தாலே கலங்கின நிலையில் [3]"அடியேன் அடி ஆவி அடைக்கலம்" என்று அந்த ஆன்ம சமர்ப்பணத்தையும் அருளிச்செய்தாராவர். சூடிய - பிரணவத்தில் சொல்லப்பட்ட பகவான் ஒருவனுக்கே அடிமை என்னுமது, அவன் அடியார்களுக்கு அடிமை என்னுமளவும் செல்லும் என்று 'நம:' என்றதன் பொருளாற்றலால் கூறப்படுகிற அவன் அடியார்களுக்கு அடிமை என்னுமதனை [4]"திருமால் திருப்பேர் வல்லார் அடிக்கண்ணி சூடிய மாறன்" என்றதனுல் தெரிவித்தவராவர்.

யத்தையும் சொன்னவை' என்பது முடிய உள்ளவை, சரமச் சுலோகத்தின் பொருள். இப்பொருள் கூறப்பட்டிருப்பது பெரியதிருவந்தாதி என்னும் பிரபந்தத்தில். 'மந்திரச் சுலோகங்கள்' என்றது, திருமந்திரத்தையும், சரமச் சுலோகத்தையும். மந்திரம் - திருமந்திரம். சுலோகம் - சரமச்சுலோகம்.

1. திருவிருத்தம். 1.

2. "ப்ரஹ்மணே த்வாமஹஸ ஓம் இத்யாத்மாநம்யுஞ்ஜீத" என்பது தைத்திரீயஉபநி.

3. திருவிருத்தம், 85. 4. திருவிருத்தம், 100.

பொய் யாதானும் - [1] "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்", [2] "யாதானும் ஓர் ஆக்கையில் புக்கு அங்கு ஆப்புண்டும் ஆப்பவிழ்ந்தும்" என்ற திருப்பாசுரங்களால், "நம:" பதத்தில் ஆறும் வேற்றுமையை இறுதியிலேயுடைய மகாரத்தால் சொல்லப்பட்ட அகங்கார மமகாரங்களாகிற, ஆத்மா வல்லாத தேகத்தில் ஆத்மவுணர்ச்சி முதலாகிய அறியாமையையும் அவற்றின் காரியமாய் வருகின்ற தீயனசெய்தல் முதலானவைகளையும் அவற்றின் காரியமாக வருகின்ற தேவ மனித முதலிய பிறப்புக்களாலாய சரீர சம்பந்தத்தையும் கூறினாராவர். அழுந்தார் - [3] "அழுந்தார் பிறப்பாம், பொல்லா அருவினை மாய வன் சேற்று அள்ளல் பொய்ந்நிலத்தே" என்ற திருப்பாசுரத்தால், அவற்றின் மறுதலையைக் காட்டும் சொல்லான 'ந' என்பதனுல் சொல்லப்பட்ட அவித்யை முதலாக இவ்வுலக வாழ்க்கையாகிற சேறு ஈருக உள்ள விரோதிகள் நீங்குதலைச் சொன்னாராவர்.

என்று ஸ்வரூப விரோதி நிவ்ருத்திகளை - ஆக, சர்வ ரக்ஷகனை சர்வேச்வரனுக்கு அவன் ஒருவனுக்கே உரிய அடிமையாய் ஞான ஆனந்த வடிவமாய் அவனுடைய அடியார்களுக்கு அடிமை என்னுமளவாய் இருக்கும் ஆன்ம சொரூபத்தையும், பிறப்பு இறப்புகட்குக் காரணமாக இருக்கின்ற அறியாமை முதலாய விரோதி நீக்கத்தையும் சொல்லுகிற திருவிருத்தம், திருமந்திரத்தில் "ஓம் நம:" என்னும் முதல் இரண்டு பதங்களின் பொருள்களோடு சேர்ந்திருக்கும் என்கை.

தாமரை உந்திப் பெரு மா மாயன் - [4] "தாமரை உந்தித் தனிப் பெரு நாயக" என்று தொடங்கி [5] "எம் பெரு மா மாயன்" என்று முடிக்கையாலே திருமந்திரத்தில் 'நாராயண' பதத்தால் சொல்லப் படுகிற நித்திய விபூதியாகிற பரமபதம் என்ன, லீலாவிபூதியாகிற இவ்வுலகங்கள் என்ன, ஆகிய இவ்விருவகைப்பட்ட உலகங்களோடு கூடின, நம்மால் அடையப்படும் பரம்பொருளையும், ஆளாகவே வாழிய என்று - [6] "தனி மாத் தெய்வத்து அடியவர்க்கு இனி நாம் ஆளாகவே, இசையுங் கொல்" என்றும், [7] "ஊழிதோறு ஊழி ஓவாது வாழிய என்று, யாம் தொழ இசையும் கொல்" என்றும் அந்த 'நாராயண' பதத்தில் நான்காம் வேற்றுமையின் பொருளான

---

1. திருவிருத்தம், 1. 2. திருவிருத்தம், 95.
3. திருவிருத்தம், 100. 4. திருவாசிரியம், 1.
5. திருவாசிரியம், 7. 6. திருவாசிரியம், 3.
7. திருவாசிரியம், 4.

கைங்கரியமாகிற பயனையும் சொல்லுகையாலே, பரம்பொருள், பரம் பொருளுக்குச் செய்யப்படும் கைங்கரியம் என்னும் இரண்டனையும் சொல்லுகிற திருவாசிரியம், பகுதியாலும் உருபிடைச் சொல்லாலும் அவ்விரண்டனையும் சொல்லுகின்ற மூன்றும்பதமான 'நாராயண' பதத்தின் பொருளோடு சேர்ந்திருக்கையாலே திருமந்திரத்தில் மூன்றும் பதமான 'நாராயண' பதத்தோடு சேர்ந்திருக்கும் என்கை.

ஆக, திருவிருத்தம், திருவாசிரியம் என்ற இரண்டு பிரபந்தங்களும், திருமந்திரத்தின் பொருளைச் சொல்லுவனவாக இருக்கும் என்றபடி.

நெறிகாட்டி - இனி, [1] "நெறிகாட்டி நீக்குதியோ" என்றதனால் வேறு உபாயங்களைக் காட்டி என்னை அகற்றப் பார்க்கிறாயோ என்பதனாலே, சரமச்சுலோகத்தில் [2] "எல்லாத் தர்மங்களையும் முற்றவும் விட்டு" என்கிற இறைவனையொழிந்த உபாயங்களை நீக்குதலைச் சொன்னாராவர். மனத்துக்கொண்டு - [3] "வெம் கோட்டேறு ஏழ் உடனே, கொன்றானையே மனத்துக்கொண்டு" என்றதனால், சரமச் சுலோகத்தில் [4] "என்னையே சரணமாகப் பற்று" என்கிற மனத்தால் பற்றுதலாகின்ற சரணடைதலைத் தெரிவித்தாராவர். கண்ணனால் அடித்து - [5] "சீரார், மனத்தலைவன் துன்பத்தை மாற்றினேன் வானோர், இனத்தலைவன் கண்ணனால் யான்" என்றும், [6] "எம்மிறையார் தந்த - அருள் என்னும் தண்டால் அடித்து - வல்வினையைக் கானும் மலையும் புகக் கடிவான்" என்றும் வரும் திருப்பாசுரங்களால், சரமச் சுலோகத்தில் [7] "நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்து விடுவிக்கிறேன்" என்று உபாயமாக இருக்கிற கண்ணபிரான் எல்லாப்பாவங்களினின்றும் விடுவித்தலைத் தெரிவித்தாராவர். கண்டிலமால் - [8] "வானோ மறிகடலோ" என்று தொடங்கி "வன்

---

1. *பெரிய திருவந்.* 6.
2. *"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்பது, ஸ்ரீகீதை*, 18: 66.
3. *பெரிய திருவந்.* 48.
4. *"மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்பது, ஸ்ரீகீதை*, 18 : 66.
5. *பெரிய திருவந்.* 25.
6. *பெரிய திருவந்.* 26.
7. *"அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்பது, ஸ்ரீகீதை*, 18: 66.
8. *பெரிய திருவந்.* 54.

துயரை மருங்கு கண்டிலமால்'' என்று பாவங்களானவை போன விடம் தெரியாதபடி தன்னடையே விட்டுப் போயின என்கையாலே, 'நானும் வேண்டா, நீயும் வேண்டா, அவை தன்னடையே விட்டுப் போம்' என்கிற 'இஷ்யாமி' என்றதன் [1] ணிச்சின் பொருளைக் கூறி ஞராவர். யாதாகில் என்று - [2] "அடர்பொன் முடியானை'' என்று தொடங்கி "யாதாகில் யாதே இனி'' என்று, இனி, கர்மம் இருந்து என்? நசித்து என்? யாதானல் நமக்கு என் வரும்? என்றதனுல், [3] "துக்கப்படாதே'' என்ற பதத்தாலே போதருகின்ற பாரம் அற்றி ருத்தலைச் சொல்லுகையாலே, உபாயத்தைச் சொன்னது சுலோகத் தோடே சேரும் - உபாயத்தைச் சொல்லுகிற பெரியதிருவந்தாதி, சரமச்சுலோகத்தோடே சேரும் என்கை. (60)

210

[4] *துவயார்த்தம் தீர்க்க சரணுகதி என்றது, சார சங்க்ர ஹத்திலே.*

என்பது, சூத்திரம்.

வியாக்:—நான்காம் பிரபந்தமான திருவாய்மொழியில் துவ யத்தின் பொருள் சொல்லப்படுகிறது என்பதனை விரிவாகச் சொல்ல வேண்டுகையாலும், அது விஷயமாகத் தம்முடைய திருத்தமையனுர் ஆன பிள்ளை ஒரு பிரபந்தம் முன்பே அருளிச்செய்திருப்பதாலும் அதனைக் காட்டிவிடக் கடவோம் என்று திருவுள்ளம்பற்றி அதனை அருளிச்செய்கிருர் இச்சூத்திரத்தால்.

துவயார்த்தம் தீர்க்கசரணுகதி என்றது - திருமகள் கேள்வனுக இருத்தல் முதலாக, கைங்கரிய விரோதி நீங்குதல் முடிவாகத் துவயத் தில் சொல்லப்படுகிற பத்து அர்த்தங்களையும் திருவாய்மொழியில் பத்துப் பத்துக்களாலும் சொல்லப்படுகையாலே, துவயத்தின் பொரு ளாய்க்கொண்டு தீர்க்கசரணுகதியாய் இருக்கும் என்று சொல்லப் பட்டது, சாரசங்க்ரஹத்திலே - பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த சாரசங்கிரகமாகிற பிரபந்தத்திலே என்கை.

---

1. *இதற்கு விளக்கத்தினை மேலே காண்க. பக். 261.*
2. *பெரிய திருவந். 70.*
3. *"மாஶுச:" என்பது, ஸ்ரீகீதை, 18: 66.*
4. *'தீர்க்க சரணுகதி' என்றது, திருவாய்மொழியினை. என்றது - என்று அறுதியிட்டு உரைத்திருப்பது. 'சாரசங்க்ரஹம்' என்பது, இவர் திருத்தமையனுரான பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்த பதினெட்டு ரஹஸ்யங்களுள் ஒன்று.*

அந்தப் பிரபந்தமாவதுதான் யாது? என்னில், எல்லா உலகங்கட்கும் நலத்தையே கூறுகின்ற வேதங்களிலும் அந்த வேதங்கட்கு விரிவுரைகளாக வெளிப்போந்த ஸ்மிருதி இதிகாசம் புராணம் முதலான எல்லாச் சாத்திரங்களிலும் பிரசித்தமாய், சர்வேச்வரனுக்கு எல்லாச் செல்வமுமாய், நம் ஆசாரியர்களுக்கு ஆபத்தனமாய் இருந்துள்ள இரண்டு அர்த்த விசேடங்களைச் சொல்லுகையாலே 'துவயம்' என்று திருப்பெயரை உடைத்தாய் இருந்துள்ள இரண்டு வாக்கியங்களும் பத்து அர்த்தங்களைச் சொல்லுகின்றன. அவை: திருமகள்கேள்வனாக இருத்தல், நாராயணனாக இருத்தல், நாராயணனுடைய எல்லா உலகங்கட்கும் புகலிடமான இரண்டு திருவடித்தாமரைகள், அத்திருவடிகளே உபாயமாக இருத்தல், அத்திருவடிகளைப்பற்றிய ஆன்மாவிலுள்ள வேண்டுதலை உள்ளடக்கியுள்ள துணிவு, திருமகள் அவளுடைய நாயகன் இவர்களுடைய சகல ஆத்மாக்களுக்கும் கைங்கர்யத்தைக் கொடுப்பதற்குரிய நித்ய சம்பந்தம், கைங்கர்யத்துக்கு எதிர்த்தலையான சர்வேச்வரனுடைய எல்லை இல்லாத இனிமை, எல்லாப்பொருள்கட்கும் தலைவனாக இருத்தல், நித்தியகைங்கர்யம், கைங்கர்யத்திற்குத் தடைகளாக உள்ள அனைத்தும் நீங்குதல் ஆகிற அர்த்த விசேடங்கள்.

இத்தகைய அர்த்த விசேடங்களைத் தெளிவாக்குகின்ற மந்திர விசேடமான துவயத்தினுடைய விவரணமாய் ஒருவரால் செய்யப்பட்டதாய் இருந்துள்ள உபநிடதமான திருவாய்மொழியில் பத்துப் பத்துக்களாலும் இப் பத்து அர்த்த விசேடங்களையும் நம்பூர்வாசாரியர்கள் அடைவே சேர்த்துச் சொல்லிப்போருவர்கள். அவற்றுள்,

முதற்பத்தால், [1]"மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறல் அடிகள்" என்றும், [2]"மலராள் மைந்தன்" என்றும், [3]"திருமகளார் தனிக்கேள்வன்" என்றும், [4]"திருவின் மணாளன்" என்றும், [5]"பூமகளார் தனிக்கேள்வன்" என்றும், [6]"மைந்தனை மலராள் மணவாளனை" என்றும் திருமகள் கேள்வனாதல் சொல்லப்பட்டது.

இரண்டாம் பத்தால், [7]"எம்பெருமான் நாரணற்கு" என்றும், [8]"எம்பிரான் எம்மான் நாராயணனாலே" என்றும், [9]"நாரணன்

1. *திருவாய்.* 1. 3: 1
2. *திருவாய்.* 1. 5: 9.
3. *திருவாய்.* 1. 6: 9.
4. *திருவாய்.* 1. 9: 1.
5. *திருவாய்.* 1 .9: 3.
6. *திருவாய்.* 1. 10: 4
7. *திருவாய்.* 2. 1: 7.
8. *திருவாய்.* 2. 7: 1.
9. *திருவாய்.* 2. 7: 2.

முழுவேழுலகுக்கும் நாதன்" என்றும் நாராயணனாக இருத்தல் சொல்லப்பட்டது.

மூன்றும் பத்தால், [1] "நாண் மலராம் அடித்தாமரை" என்றும், [2] "அங்கதிர் அடியன்" என்றும், [3] அவன் பாதபங்கயம்" என்றும், [4] "அன்று தேர் கடவிய பெருமான் கனைகழல்" என்றும், [5] "மூவுலகும் தொழுது ஏத்தும் சீர் அடியான்" என்றும் நாராயணனுடைய எல்லா உலகங்கட்கும் புகலிடமான திருவடித் தாமரைகள் இரண்டும் சொல்லப்பட்டன.

நான்காம் பத்தால், [6] "இலங்கை நகர் அம்புஎரி உய்த்தவர்" என்றும், [7] "வல்வினை தீர்க்கும் கண்ணனை" என்றும், [8] "தொல் வினை தீர" என்றும், [9] "வெய்ய நோய்கள் முழுதும் வியன் ஞாலத்து வீயவே" என்றும், [10] "மேவி நின்று தொழுவார் வினைபோக" என்றும், [11] "பிறந்தும் செத்தும் நின்று இடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்" என்றும், [12] "நோயே மூப்பிறப் பிறப்புப் பிணியே என்றிவை ஒழிய" என்றும், [13] "வேட்கை எல்லாம் விடுத்து - கூட்டரிய திருவடிக்கண் கூட்டினை" என்றும், [14] "அஃதே உய்யப்புகுமாறு" என்றும், [15] "உய்வு உபாயம் மற்று இன்மை தேறி" என்றும் விருப்பு இல்லாதனவற்றை நீக்கி விருப்பு உள்ளனவற்றைப் பெறுதல் செய்தலாகிற தன்மையையுடைய உபாயத் தன்மை சொல்லப்பட்டது.

ஐந்தாம் பத்தால், [16] "தமியேனுக்கு அருளாய்" என்றும், [17] "ஆறு எனக்கு நின்பாதமே சரணாக" என்றும், [18] "உன்னால் அல்லால்" என்றும், [19] "கழல்கள் அவையே சரணாகக் கொண்ட" என்றும், [20] "நம்பெருமான் அடிமேல் சேமம்கொள் தென் குருகூர்ச் சட

---

1. *திருவாய்*. 3. 3: 9.
2. *திருவாய்*. 3. 4: 3.
3. *திருவாய்*. 3. 6: 4.
4. *திருவாய்*. 3. 6: 10.
5. *திருவாய்*. 3. 8: 1.
6. *திருவாய்*. 4. 2: 8.
7. *திருவாய்*. 4. 4: 11.
8. *திருவாய்*. 4. 4: 11.
9. *திருவாய்*. 4. 5: 2.
10. *திருவாய்*. 4. 5: 4.
11. *திருவாய்*. 4. 7: 7.
12. *திருவாய்*. 4. 9: 7.
13. *திருவாய்*. 4. 9: 9.
14. *திருவாய்*. 4. 1: 11.
15. *திருவாய்*. 4. 3: 11.
16. *திருவாய்*. 5. 7: 2.
17. *திருவாய்* 5. 7: 10.
18. *திருவாய்*. 5. 8: 3.
19. *திருவாய்*. 5. 8: 11.
20. *திருவாய்*. 5. 9: 11.

கோபன் " என்றும், [1] "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்று நாடொறும், ஏக சிந்தையனாய்" என்றும், உபாயத்தைப்பற்றிய சேதனன்மாட்டுள்ள வேண்டுதலையுட்கொண்ட துணிவு சொல்லப்பட்டது.

ஆறாம் பத்தால், [2] "திருமாமகளிரும் தாம் மலிந்திருந்து" என்றும், [3] "அடிமை செய்வார் திருமாலுக்கே" என்றும், [4] "ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்" என்றும், [5] "என் திருமார்வற்கு" என்றும், [6] "கோலத் திருமாமகளோடு உன்னை" என்றும் கைங்கர்யத்தைத் தந்தருளுவதற்கு உறுப்பான திருமகள் அவளுடைய நாயகன் இவர்களுடைய நித்திய சம்பந்தம் கூறப்பட்டது.

ஏழாம் பத்தால், [7] "கன்னலே அமுதே" என்றும், [8] "கொடியேன் பருகு இன்னமுதே" என்றும், [9] "அலைகடல் கடைந்த ஆர் அமுதே" என்றும், [10] "திருமாலின் சீர் இறப்பு எதிர்காலம் பருகிலும் ஆர்வனே" என்றும், [11] "இவ்வேழுலகை இன்பம் பயக்க" என்றும் கைங்கர்யத்துக்கு எதிர்த்தலையான சர்வேச்வரனுடைய எல்லை இல்லாத இனிமை கூறப்பட்டது.

எட்டாம் பத்தால், [12] "அடியேன் பெரிய அம்மானே" என்றும், [13] "விண்ணவர் கோன்நங்கள் கோனை" என்றும், [14] "அமர்ந்த நாதனை" என்றும், [15] "மூவுலகாளி" என்றும், [16] "நேர்பட்டநிறை மூவுலகுக்கும் நாயகன்" என்றும் எல்லாப் பொருள்கட்கும் தலைவனாதல் சொல்லப்பட்டது.

ஒன்பதாம் பத்தால், [17] "பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்கொண்டு நின்கோயில் சீய்த்து" என்றும், [18] "நின்தீர்த்த அடிமைக்குற்றேவல்" என்றும், [19] "தொடர்ந்து குற்றேவல் செய்து" என்றும், [20] "கொடுவினையேனும் பிடிக்க" என்

1. *திருவாய்.* 5. 10: 11.
2. *திருவாய்.* 6. 5: 8.
3. *திருவாய்.* 6. 5: 11.
4. *திருவாய்.* 6. 7: 8.
5. *திருவாய்.* 6. 8: 10.
6. *திருவாய்.* 6. 9: 3.
7. *திருவாய்.* 7. 1: 2.
8. *திருவாய்.* 7. 1: 7.
9. *திருவாய்.* 7. 2: 5.
10. *திருவாய்.* 7. 9: 9.
11. *திருவாய்.* 7. 10. 1.
12. *திருவாய்.* 8. 1: 3.
13. *திருவாய்.* 8. 2: 2.
14. *திருவாய்.* 8. 4: 10.
15. *திருவாய்.* 8. 9. 5.
16. *திருவாய்.* 8. 9: 11.
17. *திருவாய்.* 9. 2: 1.
18. *திருவாய்.* 9. 2: 2.
19. *திருவாய்.* 9. 2: 3.
20. *திருவாய்.* 9. 2: 10.

றும், [1] "உறுவது இது என்று உனக்கு ஆட்பட்டு" என்றும், [2] "ஆட்கொள்வான் ஒத்து" என்றும், [3] "நானும் மீளா அடிமைப் பணி செய்யப் புகுந்தேன்" என்றும் நித்தியமாய் உளதான தொண்டு சொல்லப்பட்டது.

பத்தாம் பத்தால், [4] "துயர் கெடும் கடிது" என்றும், [5] "கெடும் இடராய" என்றும், [6] "எழுமையும் ஏதம் சாரா" என்றும், [7] "தீரும் நோய்வினைகள் எல்லாம்" என்றும், [8] "இப் பிறப்பு அறுக்கும்" என்றும், [9] "உன்தன் திருவுள்ளம் இடர் கெடும்தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும் எம்பெண்மை ஆற்றேம்" என்றும், [10] "பிணி ஒன்றும் சாரா பிறவி கெடுத்து ஆளும்" என்றும், [11] "பிறவித் துயர் கடிந்தோம்" என்றும், [12] "விண்டே ஒழிந்த வினை ஆயின எல்லாம்" என்றும், [13] "அமரா வினைகளே" என்றும், [14] "கடுநரகம் புகல் ஒழித்த" என்றும், [15] "பிறவி கெடுத்தேன்" என்றும், [16] "தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்" என்றும், [17] "அந்திதொழும் சொல்லு" என்றும், [18] "அவா அற்று வீடு பெற்ற" என்றும் கைங்கர்யத்துக்குத் தடைகளாக உள்ளவை அனைத்தும் அடியோடு ஒழிந்தமை சொல்லப்பட்டது.

இப்படித் திருமகள் கேள்வனாக இருத்தல் முதலாக, கைங்கர்யத்துக்குத் தடைகளாக உள்ளவை அனைத்தும் அடியோடு ஒழிந்தமை ஈறாக இருந்துள்ள கொள்ளத்தக்க அர்த்தவிசேடங்களைச் சொல்லக் கூடியதாக இருக்கின்ற இரண்டு வாக்கியங்களாகிய துவயமும், திருவாய்மொழியும், பகவானுடைய திருவடிகளை விரும்பினவர்களாய் வேறு உபாயங்களை நோக்காதவர்களாய் இருக்கும் அதிகாரிகளுக்கு, போது போக்குவதற்கு உறுப்பாயும் போகத்திற்குக் காரண

1. திருவாய். 9. 4: 4.
2. திருவாய். 9. 6: 7.
3. திருவாய். 9. 8: 4.
4. திருவாய். 10. 1: 8.
5. திருவாய். 10. 2: 1.
6. திருவாய். 10. 2: 2.
7. திருவாய். 10. 2: 3.
8. திருவாய். 10. 2: 5.
9. திருவாய். 10. 3: 9.
10. திருவாய். 10. 4: 7.
11. திருவாய். 10. 4: 3.
12. திருவாய். 10. 4: 9.
13. திருவாய். 10. 5. 9.
14. திருவாய். 10. 6: 11.
15. திருவாய். 10. 8: 3.
16. திருவாய். 10. 8: 5.
17. திருவாய். 10. 8: 7.
18. திருவாய். 10. 10: 11.

மாயும் ஈச்வரனுடைய பிரீதிக்கு உறுப்பாயும் இச்சரீரம் உள்ளவரையிலும் அநுசந்திக்கத்தக்கனவாயும் உள்ளவை என்றபடி.

இப்படித் திருவாய்மொழி, துவயத்தின் பொருளைக் கூறுகின்றது என்பதனைத் தெளிவாக ஆசார்யர்கள் அருளிச்செய்து வைக்கையாலே, தம்முடைய இந்தப் பிரபந்தத்தில் சொல்லவேண்டிய விஷயத்தைப் பிள்ளையினுடைய பிரபந்தத்திலே காட்டினாராயிற்று. (51)

211

[1] மூன்றில் சுருக்கிய ஐந்தையும் உயர் திண் அணை ஒன்று, பயில் ஏறு கண் கரு, வீடு சொன்னால் ஒரு கொண்ட, நோற்ற நாலும், எம்மா ஒழிவில் நெடு வேய் என்கிற இருபதிலே விசதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும், அருளினன் வீடுபெற்ற என்கையாலே ஐந்திலும் இரண்டையும், தொழுது களித்தேன் சொல்லுப்பெற்றேன் பணிசெய் என்கிற முக்தலக்ஷண விருத்தியாலே இரண்டில் ஒன்றையும் இதுக்குப் பிரமேயம் என்னும்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— ஆக, இப்படித் துவயத்தின் பொருளைச் சொல்லுகின்ற தீர்க்கசரணாகதியாய் இருக்கிற திருவாய்மொழிக்கு, மற்றும் உள்ள ஆசாரியர்கள் அருளிச்செய்யும் அர்த்த விசேடங்களையும் அருளிச்செய்கிறார் இச் சூத்திரத்தால்.

---

1. மூன்றில் சுருக்கிய ஐந்தையும் உயர், திண், அணை, ஒன்று, பயில், ஏறு, கண், கரு, வீடு, சொன்னால், ஒரு, கொண்ட, நோற்றநாலும், எம்மா, ஒழிவில், நெடு, வேய் என்கிற இருபதிலே விசதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும் இதுக்குப் பிரமேயம் என்னும் என்றும், அருளினன், வீடுபெற்ற என்கையாலே இரண்டையும் இதுக்குப் பிரமேயம் என்னும் என்றும், தொழுது, களித்தேன், சொல்லுப் பெற்றேன், பணிசெய் என்கிற முக்தலக்ஷண விருத்தியாலே இரண்டில் ஒன்றை இதுக்குப் பிரமேயம் என்னும் என்றும் என்று சூத்திரத்தைப் பிரித்துக் கொள்க. 'மூன்றில்' என்றது, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்னும் பிரபந்தங்களை. 'ஐந்தையும்' என்றது, பரசொரூபம், ஆன்மசொரூபம், உபாய சொரூபம், விரோதி சொரூபம், புருஷார்த்த சொரூபம் என்னுமிவற்றை. 'இரண்டையும்' என்றது, உபாயத்தையும் உபேயத்தையும். 'ஒன்றையும்' என்றது, உபேயத்தை. விசதமாக்குதல் - தெளிவாக்குதல். பிரமேயம் - சொல்லப்பட்ட பொருள்.

மூன்றில் சுருக்கிய ஐந்தையும் - திருமந்திரத்திலும் சரமச் சுலோகத்திலும் சுருங்கச் சொல்லப்பட்ட அர்த்த விசேடங்களைத் துவயம் என்னும் மந்திரத்திலே விவரிக்குமாறு போலே, முன்னே அருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி என்னும் மூன்று பிரபந்தங்களிலும் சுருக்கமாக அருளிச்செய்யப் பட்ட பரஸ்வரூபம் (இறைநிலை) ஆன்மஸ்வரூபம் (உயிர்நிலை) உபாய ஸ்வரூபம் (நெறியியல்) விரோதிஸ்வரூபம் (தடையியல்) புருஷார்த் தஸ்வரூபம் (வீட்டின் இயல்) என்னும் ஐம்பொருள்களையும், உயர் திண் அணை ஒன்று - வேதச்சாயையாலே, உடன்பாட்டால் சுவாநுபவமுகத்தால் பரத்துவத்திலே பரத்துவத்தை (முதன்மை) அருளிச்செய்த [1] "உயர்வற உயர்நல முடையவன்" என்ற திரு வாய்மொழியும், இதிகாச புராணங்களின் கூற்றாலே உடன்பாட்டா லும் எதிர்மறை முகத்தாலும் பரோபதேசமுகத்தாலே அவதாரத்திலே பரத்துவத்தை அருளிச்செய்த [2] "திண்ணன் வீடு" என்ற திருவாய் மொழியும், மோக்ஷத்தைக் கொடுக்கும் தன்மையைக் கூறுகையாலே பரத்துவத்தை அருளிச்செய்த [3] "அணைவது அரவணை" என்ற திருவாய்மொழியும், அர்ச்சாவதாரத்திலே (கோயில்களிலே இருக்கும் விக்கிரகநிலை) பரத்துவத்தை அருளிச்செய்த [4] "ஒன்றும் தேவும்" என்ற திருவாய்மொழியும் ஆகிற நான்கு திருவாய்மொழிகளாலும் பரஸ்வரூபமும்,

பயில் ஏறு கண் கரு - பகவானுக்கு அடிமைப்பட்டிருக்கும் அடிமையைக் காட்டிலும் அவனுடைய அடியார்களுக்கு அடிமைப் பட்டிருக்கும் அடிமையே ஆன்மாவிற்கு உரியது என்பதனைக் கூறிய [5] "பயிலும் சுடர்ஒளி" என்ற திருவாய்மொழியும், அடிமைக்குப் புறம்பாக உள்ளவையான ஆன்மா, ஆன்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்கள் எல்லாம் விடத்தக்கவை என்கிற எதிர்மறை முகத் தாலே அடிமையே ஆன்மாவிற்குச் சொரூபம் என்பதனைக் கூறிய [6] "ஏறாளும் இறையோனும்" என்ற திருவாய்மொழியும், பகவானுக்கு இந்த ஆன்மா சரீரமாக இருப்பதனாலே அடிமையாய் சரீரத்தைக் காட்டிலும் வேறாய் ஞானஆனந்த லக்ஷணமாய் இருக்கும் என்னு மதனைக் கூறிய [7] "கண்கள் சிவந்து" என்ற திருவாய்மொழியும், வேறொரு பொருளுக்கு அடிமை என்று கூறுதலும் மிகையாம்படி யான இவ்வான்மாவினுடைய அவன் ஒருவனுக்கே உரிமையாம்

1. திருவாய். 1. 1: 1.
2. திருவாய். 2. 2: 1.
3. திருவாய. 2. 8: 1.
4. திருவாய். 4. 10. 1.
5. திருவாய். 3. 7: 1.
6. திருவாய். 4. 8: 1.
7. திருவாய். 8. 8: 1.

தன்மையைக் கூறிய [1]"கருமாணிக்க மலை மேல்" என்ற திருவாய்மொழியும் ஆகிற நான்கு திருவாய்மொழிகளாலும் **ஆன்ம சொரூபமும்,**

வீடு சொன்னல் ஒரு கொண்ட - பகவானுக்கு வேறுபட்ட பொருள்களைப் பற்றுகைக்கு உறுப்பான அகங்கார மமகாரங்கள் விடத்தக்கவை என்பதனைக் கூறிய [2] "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழியும், அடிமை செய்யத்தகாதவர்களுக்கு அடிமை செய்தல் விடுதற்குரியது என்பதனைக் கூறிய [3] "சொன்னல் விரோதம்" என்ற திருவாய்மொழியும், ஐச்வர்யமும் கைவல்யமும் விடத்தக்கன என்பதனைக் கூறிய [4] "ஒரு நாயகமாய்" என்ற திருவாய்மொழியும், சரீரசம்பந்தம் காரணமாக வருகின்ற உறவு முறையினர் விரும்பத்தக்கவர் அல்லர் என்பதனைக் கூறிய [5] "கொண்ட பெண்டிர்" என்ற திருவாய்மொழியும் ஆகிற நான்கு திருவாய்மொழிகளாலும் **விரோதி சொரூபமும்,**

நோற்ற நாலும் - [6] "நோற்ற நோன்பிலேன்" என்று கைம்முதல் இல்லாமை முன்னுக "ஆறு எனக்கு நின்பாதமே சரணுகத் தந்தொழிந்தாய்" என்று கூறிய "நோற்ற நோன்பிலேன்" என்ற திருவாய்மொழியும், "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்று வேறு கதி இல்லாமை முன்னுக "கழல்கள் அவையே சரணுகக் கொண்ட" என்று கூறிய [7] "ஆரா அமுதே" என்ற திருவாய்மொழியும், "வைகலும் வினையேன் மெலிய" என்று பக்தியின் வசப்பட்டமை முன்னுக "நம் பெருமான் அடிமேல் சேமம் கொள் தென்குருகூர்ச் சடகோபன்" என்று கூறிய [8] "மானேய் நோக்கு மட நல்லீர்" என்ற திருவாய்மொழியும், "எனது ஆவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற இச் சிறந்த வான் சுடரே" என்று தரித்து நின்று அவன் குணங்களை நினைக்க முடியாதவாறு உருக்குலைந்தமை செல்லாநிற்க "நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்று நாடொறும் ஏக சிந்தையனாய்" என்று கூறிய [9] "பிறந்தவாறும்" என்ற திருவாய்மொழியும் ஆகிற நான்கு திருவாய்மொழிகளாலும் **உபாய சொரூபமும்,**

---

1. *திருவாய்.* 8. 9: 1.
2. *திருவாய்.* 1. 2: 1.
3. *திருவாய்.* 3. 9: 1.
4. *திருவாய்.* 4. 1: 1.
5. *திருவாய்.* 9. 1: 1.
6. *திருவாய்.* 5. 7: 1.
7. *திருவாய்.* 5. 8: 1.
8. *திருவாய்.* 5. 9: 1.
9. *திருவாய்.* 5. 10. 1.

எம்மா ஒழிவில் நெடு வேய் - "தனக்கேயாக" என்று கைங்கர்யத்தில் என் பொருட்டாகச் செய்தலாலாய இன்பம் வேண்டா என்று விரும்பிய [1] "எம் மா வீட்டுத்திறமும் செப்பம்" என்ற திருவாய்மொழியும், ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி எல்லா அடிமைகளையும் செய்யவேண்டும் என்று பாரித்த [2] "ஒழிவில் காலம் எல்லாம்" என்ற திருவாய்மொழியும், அந்தக் கைங்கர்யம் தான் பாகவதர்களுக்குச் செய்யும் தொண்டின் அளவாக முடிய வேண்டும் என்று எண்ணிய [3] "நெடுமாற்கு அடிமை" என்ற திருவாய்மொழியும், அது தன்னிலும் "உன்தன் திருவுள்ளம் இடர் கெடும் தோறும்" என்று அவனுடைய மனநிறைவே பேருக இருக்கும் படியைச் சொன்ன [4] "வேய்மருதோளிணை" என்ற திருவாய்மொழியும் ஆகிற நான்கு திருவாய்மொழிகளாலும் பல சொரூபத்தையும், ஆக, ஐம் பொருள்களையும்,

இருபதிலே விசதமாக்கி - இருபது திருவாய்மொழிகளாலும் மிகத் தெளிவாக அருளிச்செய்து, எண்பதிலே பரப்புகையாலே - மற்றை எண்பது திருவாய்மொழிகளாலும் அவ் வைம்பொருள் தன்னையே விரித்துப் பேசுகையாலே, ஐந்தையும் இதுக்குப் பிரமேயம் என்னும் - அவ்வைந்து பொருள்களும் இத்திருவாய்மொழியில் சொல்லப்பட்ட பொருள்கள் என்று கூறுவர்கள்.

அருளினன் வீடுபெற்ற என்கையாலே, ஐந்திலும் இரண்டை இதுக்குப் பிரமேயம் என்னும் - "மயர்வற மதி நலம் அருளினன்" என்று தொடங்கி "அவாவற்று வீடுபெற்ற" என்று முடிக்கையாலே அவ் வைந்து பொருள்களிலும் வைத்துக்கொண்டு, பிரதானமான உபாய உபேயங்கள் (நெறியும், பலமும்) இரண்டும் இதில் சொல்லப் பட்ட பொருள்கள் என்றும் கூறுவர்கள்.

தொழுது, களித்தேன், சொல்லுப்பெற்றேன் என்கிற முக்த லக்ஷணத்தால் - [5] "தொழுது எழு என் மனனே" என்றும், [6] "விருப்பேபெற்று அமுதம் உண்டுகளித்தேன்" என்றும், [7] "மேலைத் தொண்டு உகளித்து, அந்திதொழும் சொல்லுப்பெற்றேன்" என்றும் சொல்லப்படு

---

1. திருவாய். 2. 9: 1.
2. திருவாய். 3. 3: 1.
3. திருவாய். 8. 10. 1.
4. திருவாய். 10. 3. 1.
5. திருவாய். 1. 1: 1.
6. திருவாய். 10. 8: 6.
7. திருவாய். 10. 8: 7.

கிற[1] " எப்பொழுதும் கையைக் கூப்பிக்கொண்டே இருத்தல், மகிழ்ச்சி யாயிருத்தல், நம: என்று சொல்லிக்கொண்டே இருத்தல் ஆகிற முக் தர்களுடைய இலக்ஷணத்தாலும், பணிசெய் என்கிற விருத்தியால் - [2] " துதித்தலையே தன்மையாகக் கொண்டவர்கள் " என்கிற அவர் களைப்போலே [3] " சொல் பணிசெய் ஆயிரம் " என்று சொல்லப்படு கிற திருவாய்மொழி பாடுதலாகிற வாக்கினால் செய்யும் தொண்டா லும், இரண்டில் ஒன்றை இதுக்குப் பிரமேயம் என்னும் - அவ்விரண் டிலும் வைத்துக்கொண்டு உபேயம் (பலம்) ஒன்றையுமே இத் திரு வாய்மொழியிற் சொல்லப்பட்ட பொருள் என்றும் சொல்லுவர்கள்.

'இருபதிலே விசதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தை யும் இதுக்குப் பிரமேயம் என்னும்' என்ற இது, " இப்பிரபந்தங்களில் சூக்திகள், பிராப்யனான எம்பெருமானுடைய ஸ்வரூப பிரதிபாதக பரமாயிருக்கும் சில ; பிராப்தாவான பிரத்யக்ஆத்ம ஸ்வரூப பரமா யிருக்கும் சில ; பிராப்தி உபாயத்தைச் சொல்லும் சில; பலத்தைச் சொல்லும் சில ; பிராப்தி விரோதியைச் சொல்லும் சில ; அவசிஷ்ட மானவை இவற்றுக்கு உபபாதகங்களாயிருக்கும் " என்று [4] ஈட்டில் யோஜித்தமுறை.

'உபாய உபேயங்கள் இரண்டையும் இதுக்குப் பிரமேயம் என்னும்' என்ற இது, அவை இரண்டும் பிரதானமாகச் சொல்லப் பட்ட பொருள் ; இந்த உபாய உபேயங்களுக்கு அதிகாரி இன்னான் என்கைக்காக ஆன்மாவின் சொரூபம் சொல்லப்படுகிறது : உபாய மாக இருப்பவனும் பலத்துக்கு விஷயமாக இருப்பவனும் இன்னான் என்கைக்காகப் பரம்பொருளின் சொரூபம் சொல்லப்படுகிறது ; பல த்திற்கு இடையூறாய் உபாயத்தினால் விலக்கக் கூடியது இன்னது என்கைக்காக விரோதி சொரூபம் சொல்லப்படுகிறது என்பதனைத் திருவுள்ளம்பற்றி.

'உபேயம் ஒன்றும் இதுக்குப் பிரமேயம்' என்ற இது, " இவற் றில் உத்தேசியம் பலம் ; தத் அர்த்தமாக மற்றுள்ள நால் அர்த்தமும் சொல்லுகிறது " என்று ஈட்டில் சொன்னபடியே கைங்கரியமே

1. *"பத்தாஞ்சலி புடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந:" என்பது, பிரமாணம்.*

2. *"விபச்யவ:" என்பது, பிரமாணம்.*

3. *திருவாய்.* 1. 10: 11.

4. *ஈடு என்றது, திருவாய்மொழியின் வியாக்கியானங்கள் ஐந்தனுள் ஒன்றான முப்பத்தாறாயிரப்படியினை.*

முக்கியம். மற்றை நான்கனையும் சொன்னது கைங்கரியத்தை ஏற்றுக் கொள்ளுகின்றவனையும், கைங்கரியத்தைச் செய்கின்றவனையும், அதற்குத் தடையாக இருப்பனவற்றையும், அத் தடையை நீக்குகின்ற வழியையும், அறிவிக்கைக்காக ஆகையாலே அப்பலத்திற்கு உறுப்பாகச் சொன்னது இத்தனை என்று திருவுள்ளம்பற்றி. (52)

212

[1] ரஹஸ்யத்துக்கு ஓரெழுத்தும் அதுக்கு ஓர் உருவும் போலேயானவற்றிலே, இமையோர் அதிபதி, அடியேன் மனனே, பொய் மயர்வு, பிறந்து அருளினன், விண்ணப்பம் தொழுது எழு என்ற பஞ்சகத்தோடே, அவித்யாதி ஸ்வரூபஸ்வபாவ, ஆத்மேச்வர பந்த, ரக்ஷண க்ரம, குண விக்ரஹ விபூதியோக, ததீயாபிமாந, உபதேச விஷய, அந்யாபதேச ஹேத்வாதிகளும் ஸங்க்ருஹீதம்.

என்பது, சூத்திரம்.

வியாக்:—இனி, முதல் பிரபந்தமான திருவிருத்தத்தின் சுருக்கமான அதன் முதல் திருப்பாசுரத்திலும், ஈற்றுப் பிரபந்தமான திருவாய்மொழியின் சுருக்கமான அதன் முதல் திருப்பாசுரத்திலும் சொல்லப்பட்ட அர்த்த விசேடங்களை விளக்கமாக அருளிச்செய்கிறார் இச் சூத்திரத்தால்.

ரஹஸ்யத்துக்கு ஓர் எழுத்துப் போலே - [2] "ஓர் எழுத்து ஓர் உருவானவனே" என்னும்படி திருமந்திரமாகிற இரஹஸ்யத்துக்குச்

---

1. *'ரஹஸ்யத்துக்கு ஓர் எழுத்தும் அதுக்கு ஓர் உருவும் போலே ஆனவற்றிலே' என்றது, திருவெட்டெழுத்தாகிய திருமந்திரத்திற்குச் சுருக்கமாகப் பிரணவம் அமைந்தாற் போன்றும், அந்தப் பிரணவத்திற்குச் சுருக்கமாக அகரம் அமைந்தாற் போன்றும், திருவிருத்தம் நூறு திருப்பாசுரங்கட்கும் சுருக்கமாக அமைந்த 'பொய்ந்நின்ற ஞானமும்' என்ற முதல் திருப்பாசுரத்திலும், திருவாய்மொழி ஆயிரம் திருப்பாசுரங்கட்கும் சுருக்கமாக அமைந்த 'உயர்வறவுயர்நலம்' என்ற முதல் திருப்பாசுரத்திலும் என்றபடி. ரஹஸ்யம் - திருமந்திரம். ஓரெழுத்து - பிரணவம். அதுக்கு - அந்தப் பிரணவத்திற்கு. ஓர்உரு - ஓர் உறுப்பாக அமைந்த அகரம். போலேயானவற்றிலே - போலே இருந்துள்ள 'பொய்ந்நின்ற', 'உயர்வற' என்ற இரண்டு திருப்பாசுரங்களிலே.*

2. *பெரியதிருமொழி*, 6. 1: 5.

சுருக்கமாய் [1] "ஓம் என்னும் இது ஓர் எழுத்து" என்று சொல்லுகிற படியே ஓரெழுத்தாக இருக்கிற பிரணவம் போலேயும், அதுக்கு ஓர் உரு போலே - [2] "எல்லா ஒலிகட்கும் அந்தப் பிரணவத்திற்கும் மூலமாக இருக்கின்ற அகரம்போலேயும்" என்கிறபடியே அந்தப் பிரணவத்திற்குச் சுருக்கமாக இருக்கின்ற அகாரம்போலேயும், ஆனவற்றிலே - திருவிருத்தத்திற்குச் சுருக்கமான அதன் முதல் திருப்பாசுரத்திலும், திருவாய்மொழிக்குச் சுருக்கமான அதன் முதல் திருப்பாசுரத்திலும்,

[3] இமையோர் அதிபதி - திருவிருத்தத்தில் "இமையோர் தலைவா" என்றும், திருவாய்மொழியில் "அயர்வறும் அமரர்கள் அதிபதி" என்றும் நித்தியசூரிகளாலே சேவிக்கப்படுமதாய் எல்லாப்பொருள்கட்கும் அறப்பெரியதாய் இருக்கும் பரம்பொருளின் சொரூபத்தையும், [4] அடியேன் மனனே - திருவிருத்தத்தில் "அடியேன்" என்றும், திருவாய்மொழியில் "என்மனனே" என்றும் அடிமையாய்ப் பரிசுத்தமான அந்தக்கரணத்தையுடையதாய் இருக்கும் ஆன்ம சொருபத்தையும், [5] பொய் மயர்வு - திருவிருத்தத்தில் "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாஒழுக்கும் அழுக்கு உடம்பும்" என்றும், திருவாய்மொழியில் "மயர்வு" என்றும் அறிவின்மை முதலான விரோதி சொரூபத்தையும், [6] பிறந்து அருளினன் - திருவிருத்தத்தில் "உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்றும், திருவாய்மொழியில் "மயர்வற மதிநலம் அருளினன்" என்றும் உலகத்தைக்

---

1. *"ஓமித்யேகாக்ஷரம்"*
என்பது, பிரமாணம்.

2. *"தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய"*
என்பது, பிரமாணம்.

3. *'இமையோர் அதிபதி' இதனால் பரஸ்வரூபம் - இறைநிலை உணர்த்தப்படுகின்றது. "இமையோர் தலைவா" என்பது திருவிருத்தம். "அமரர்கள் அதிபதி" என்பது திருவாய்மொழி. இரண்டனையும் சேர்த்து 'இமையோர் அதிபதி' என்கிறார்.*

4. *"அடியேன் மனனே" என்னுமிதனால் ஆன்மசொரூபம் உணர்த்தப்படுகிறது. 'அடியேன்' என்றது திருவிருத்தம்; 'மனனே' என்றது திருவாய்மொழி.*

5. *"பொய்மயர்வு" என்னுமிதனால் விரோதி சொரூபம் (தடைநிலை) உணர்த்தப்படுகிறது. 'பொய்' என்றது திருவிருத்தம்; 'மயர்வு' என்றது திருவாய்மொழி.*

6. *"பிறந்து அருளினன்" என்னுமிதனால் உபாயசொரூபம் உணர்த்தப்படுகிறது. 'பிறந்து' என்றது, திருவிருத்தம்; 'அருளினன்' என்றது, திருவாய்மொழி.*

காக்கும் பொருட்டுப் பல அவதாரங்களைச் செய்த சர்வேச்வரனுடைய திருவருளே உபாயம் என்று உபாய சொரூபத்தையும், [1] விண்ணப்பம் தொழுது எழு - திருவிருத்தத்தில் "செய்யும் விண்ணப்பம்" என்றும், திருவாய்மொழியில் "தொழுது எழு" என்றும் இறைவன் விஷயத்தில் முக்கரணங்களாலும் செய்யும் கைங்கரியமே மேலான புருஷார்த்தம் என்று பலத்தின் சொரூபத்தையும், என்ற பஞ்சகத்தோடே - ஆகக் கொண்டு சுருக்கிச் சொன்ன ஐம்பொருளோடே,

[2] அவித்யாதி ஸ்வரூபம் ஸ்வபாவம் - "பொய்ந்நின்ற ஞானம்" என்பனபோன்றவைகளாலே அறிவின்மை முதலானவற்றைச் சொல்லுகிற அளவில், தோன்றுதல் அழிதல் முதலியவற்றையுடைத்தாகையாலே இல்லது என்னும் சொற்குப் பொருளான சரீரத்தில் ஆன்மபுத்தியும், சரீரமே ஆன்மா என்று எண்ணும் எண்ணம் அடியாக உலகவாழ்விலே உளதான தீவினைகளைச் செய்தலும், அத்தீவினைகள் அடியாக வரக்கூடியதான தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையும் வேண்டா நாற்றமிகும் உடலின் சம்பந்தமும் என்ற இவற்றினுடைய சொரூபங்களும், விபரீத ஞானத்திற்குக் காரணமாயிருத்தல், இவ்வுலக வாழ்விற்குக் காரணமாயிருத்தல், சொரூபத்தை மறைத்தல், மேலே மேலே வரக்கூடியனவற்றிற்கு முன்னையது முன்னையது காரணமாகவிருத்தல், "இனி யாம் உறாமை" என்கையாலே அவற்றினுடைய அநாதியாக இருக்கும் தன்மை, ஓர் காரணம் பற்றிவருதல், "மயர் வற மதி நலம் அருளினன்" என்கையாலே நன் ஞானத்தினால் அவை விலக்கக் கூடியனவாக இருத்தல் முதலான தன்மைகளும்,

ஆத்ம ஈச்வர பந்தம் - திருவிருத்தத்தில் "இமையோர் தலைவா - அடியேன்" என்றும், திருவாய்மொழியில் "அதிபதி - அடி தொழுது" என்றும் கூறுகையாலே ஆன்மாவிற்கும் ஈச்வரனுக்கும் உண்டான சேஷ சேஷி பாவ சம்பந்தமும்,

---

1. *"விண்ணப்பம் தொழுது எழு" என்னுமிதனால் புருஷார்த்த சொரூபம் (பலம்) உணர்த்தப்படுகிறது. ஆக, 'ரஹஸ்யத்துக்கு' என்றது முதல் 'பஞ்சகத்தோடே' என்றது முடிய, முதல் திருப்பாசுரங்களில் ஐம்பொருள்களையும் உணர்த்தியிருக்கும் முறையைத் தெரிவித்தார். பஞ்சகம் - ஐம்பொருள். 'விண்ணப்பம்' என்றது திருவிருத்தம்; 'தொழுது எழு' என்றது திருவாய்மொழி.*

2. *இனி, 'அவித்யாதி சொரூபம்' முதலானவற்றை உணர்த்தியிருக்குமாற்றையும் தெரிவிக்கிறார் 'அவித்யாதி' என்று தொடங்கி.*

ரக்ஷணக்ரமம் - திருவிருத்தத்தில் "உயிர் அளிப்பான்எங்கின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்றும், திருவாய்மொழியில் "மயர் வற மதி நலம் அருளினன்" என்றும் சொல்லுகையாலே, பல அவதாரங்களைச் செய்து பாதுகாக்கும் படியும், பிறப் பிறப்புகட்குக் காரணமான அறிவின்மையைப் போக்கி உய்வதற்குக் காரணமான ஞான பக்திகளைத் தன் பேரருளாலே தந்த படியும் ஆன இறைவனுடைய பாதுகாக்கும் முறையும்,

குண விக்ரஹ [1]விபூதியோகம் - "உயர் வற உயர் நலம்" "துயர் அறு சுடர் அடி" என்கையாலே குணங்களும் திருமேனியும், "இமையோர் தலைவா" என்றும், "அயர்வறும் அமரர்கள் அதிபதி" என்றும் சொல்லுகையாலே உலகங்களையுடையனுயிருத்தலும், [2] ததீய அபிமானம் - "இமையோர்" என்றும், "அயர் வறும் அமரர்கள்" என்றும் அந்த நித்தியசூரிகளை முன்னிடுகையாலே அடியார்கள் அபிமானமும்,

உபதேச விஷயம்-"நின்று கேட்டருளாய்" என்றும், "தொழுது எழு என் மனனே" என்றும் சொல்லுகையாலே மனம் போலே தனக்கு அடங்கியுள்ள ஈச்வரனும் அப்படி அடங்கியிருப்பவர்களும் உபதேசத்திற்கு விஷயம் என்னுமதுவும்,

அந்யாபதேச ஹேது ஆதிகளும் - "நலம் அருளினன்" என்று பக்தியைத் தந்தான் என்கையாலே, தாயார் கூற்ருகவும் தோழி கூற்ருகவும் தலைவி கூற்ருகவும் இங்ஙனம் அந்யாபதேச முறையில் திருப்பாசுரங்கள் அவதரிப்பதற்குக் காரணமான பக்தி முதலானவைகளும், சங்க்ருஹீதம் - சுருக்கமாகச் சொல்லப்பட்டன என்கை.

'ஹேது ஆதிகளும்' என்ற இடத்தில் 'ஆதி' என்பதனுலே வேதாந்தங்களின் சுருக்க தாத்பர்யங்களான பொருள்கள் பலவும் இவற்றிலே சுருக்கமாகச் சொல்லப்பட்டன என்னுமிடம் காட்டப் பட்டது. (53)

213

[3]'அடிதொழுது எழு' என்ற இதிலே, வஸ்துநிர்த்தேச நமஸ்கார ஆசீஸ்ஸுக்களும் உண்டு.

என்பது, சூத்திரம்.

---

1. இக்குன்ள 'யோகம்' என்ற சொல்லை, குணம் விக்கிரஹம் என்பனவற்ருேடும் கூட்டுக. யோகம் - கூடியிருத்தல்.

2. ததியர் - அடியார்கள்.

3. இச்சூத்திரத்தை முறை நிரல் நிறையே கொள்க. 'அடி' என்ற இதிலே வஸ்து நிர்த்தேசமும், 'தொழுது' என்ற இதிலே நமஸ்காரமும், 'எழு' என்ற இதிலே ஆசிசம் உண்டு என்று கூட்டுக. ஆசீ: - வாழ்த்து.

வியாக் :— நூல் இடையூறு இன்றி இனிது முடிதற்காகவும் விரிவு அடைதற்காகவும் நூலின் தொடக்கத்தில் சொல்லப்படும் வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகிற மங்களங்கள் செய்தல், இப்பிரபந்தத்தில் உண்டோ ? என்னும் வினவிற்கு விடை அருளிச்செய்கிறார் இச் சூத்திரத்தால்.

அடி என்ற இதிலே வஸ்துநிர்த்தேசம் - "துயர்அறு சுடர் அடி" என்கையாலே வருபொருள்உரைத்தலும், தொழுது என்ற இதிலே நமஸ்காரம் - "தொழுது" என்கையாலே வணக்கமும், எழு என்ற இதிலே ஆசீஸ் - "எழு" என்கையாலே வாழ்த்தும், உண்டு-உண்டு என்றபடி.

நாம் இப்படி ஒரு பிரபந்தம் செய்யவேண்டும் என்று கருதி யிருந்து இவர் இந்நூலைச் செய்தது அல்லாமையாலே, நிரம்பின ஏரி நெளிக்குமாறு போலே, நிமிகிற வாய்கரைமிடைந்து புறப்பட்ட சொற்கள், இவர் திருப்பாசுரங்களாலே உலகத்தைத் திருத்தக் கோலுகிற சர்வேச்வரன் நினைவாலே எல்லா இலக்கணங்களும் நிரம் பினதாய்த் தலைக்கட்டின பிரபந்தமாகையாலே, வாழ்த்து வணக்கம் வருபொருள்உரைத்தல் ஆகிற இம் மங்களங்களும் கோல்விழுக் காட்டாலே பலித்தன ஆதலின் 'அடி தொழுது எழு என்ற இதிலே இவையும் சொல்லப்பட்டன' என்றது 'உண்டு' என்கின்றனர். (54)

214

[1] சாதுசனம் நண்ணு, மயர்வற மாசறுக்கும்
தெருள்கொள்ளப் பத்தராவர், அடிமை அற உரிய,
நோய்கள் அறுக்கும் உடைந்து, ஏற்றரும் வானின்,
தாளின்கீழ் அடிக்கீழ், இன்பக்கதிபயக்கும், ஊடுபுக்கு
மூவுலகும் உருகாநிற்பர் என்னும் சாம்யத்தாலே
வாச்யன் பத்தின தோற்றம்போலே, தோற்றங்கள்
ஆயிரத்தின் பத்துப்பத்தான இதின் ஆவிர்ப்பாவம்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—இனி மேல் இப்பிரபந்தம் பத்துப் பத்தாக அவதரித்த தன்பயனைத் திருஷ்டாந்தத்தோடு அருளிச்செய்கிறார் இச் சூத்திரத் தால்.

---

1. *நல்லார்களைத்தம்மை நலம்புரிந்து காத்தல், பொல்லாரைப் பொன்று நெறி போக்கல் முதலிய காரியங்களைச் செய்வதற்காக இறைவன் பத்து அவதாரங்களை எடுத்தது போன்று; இத்திருவாய்மொழியும் பத்துப் பத் தாக அவதரித்தது என்கிறார் இச்சூத்திரத்தால்,*

சாதுசனம் - [1] "சாதுசனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப் பதற்கு" என்றும், [2] "நல்லார்கள் தம்மை நலம் புரிந்து காத்தற்கும் பொல்லாரைப் பொன்றி நெறி போக்கற்கும் இந்த யுகம்தோறும் இசைந்து நான் பிறப்பன்" என்றும் வருகின்றவாறே, நல்லோர்களைப் பாதுகாத்தற்கும் தீயோர்களை அழிப்பதற்குமாக அவன் அவதரித்தாற் போலே, இத் திருவாய்மொழியும், நண்ணு - [3] "நண்ணு அசுரர் நலிவெய்த நல்ல அமரர் பொலிவெய்த" என்கிறபடியே, பகவா னிடத்தில் பக்தி இல்லாத எதிரிகளான அசுரத் தன்மை வாய்ந்தவர் கள் மண்ணுண்ணவும் பகவானிடத்தில் பக்திஉள்ளவர்களான தெய்வத் தன்மை வாய்ந்தவர்கள் வாழவும் அவதரித்தலாலும்,

மயர்வற - [4] "மயர்வற மதிநலம் அருளினன்" என்கிற படியே அவன் அறிவின்மையைப் போக்கி ஞானத்தையும் பக்தியை யும் கொடுக்குமாறுபோலே, இத் திருவாய்மொழியும், மாசறுக்கும் தெருள்கொள்ள பத்தர் ஆவர் - [5] "ஒலி புகழ் ஆயிரத்து இப்பத்து உள்ளத்தை மாசறுக்குமே" என்கிறபடியே, மனத்திற்குக் குற்றமான அறிவின்மையைப் போக்கி, [6] "தெருள்கொள்ளச் சொன்ன ஓரா யிரம்" என்றும், [7] "தூய ஆயிரத்து இப்பத்தால் பத்தர் ஆவர்" என்றும் சொல்லுகிறபடியே ஞானத்தையும் பக்தியையும் கொடுத்த லாலும்,

அடிமைஅற - [8] "அடிமை அறக்கொண்டாய்" என்கிறபடியே அவன் வேறுஒருவர்க்குஅன்றித் தனக்கேஉரியஅடியவனாக அங்கீ கரிக்குமாறு போலே, இத் திருவாய்மொழியும், உரிய - [9] "உரிய தொண்டர்ஆக்கும் உலகம் உண்டாற்கே" என்கிறபடியே, வேறு ஒருவருக்கு அன்றி அவனுக்கே உரிய அடியவர் ஆக்குதலாலும்,

நோய்கள் அறுக்கும் - [10] "அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே" என்கிறபடியே, அவன் பிறப்பிறப்பாகிற நோய்க்கு மருந்து

---

1. *திருவாய்.* 3. 5: 5.
2. *பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்*
   தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

என்பது ஸ்ரீ கீதை, 4: 8.

3. *திருவாய்.* 10. 7: 5.
4. *திருவாய்.* 1. 1: 1.
5. *திருவாய்.* 5. 2: 11.
6. *திருவாய்.* 2. 10: 11.
7. *திருவாய்.* 6. 4: 11.
8. *திருவாய்.* 4. 9: 6.
9. *திருவாய்.* 6. 9: 11.
10. *திருவாய்.* 9. 3: 3.

ஆனாற்போலே, இத் திருவாய்மொழியும், உடைந்து - [1] "உடைந்து நோய்களை ஓடுவிக்குமே" என்கிறபடியே இவ் உலக வாழ்வால் உளவாய எல்லாப் பாவங்களும் உருமாய்ந்து போம்படி செய்கையாலும்,

ஏற்றரும் - [2] "ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் நமக்கு" என்கிறபடியே தங்கள் முயற்சியால் அடைய முடியாத பரமபதத்தை அவன் கொடுக்குமாறுபோலே, இத் திருவாய்மொழியும், வானின் - [3] "வானின்மீது ஏற்றி அருள் செய்து" என்கிறபடியே பரமபதம் அடைதலைச் செய்வித்தலாலும்,

தாளின்கீழ் - [4] "தன் தாளின்கீழ்ச்சேர்த்து அவன் செய்யும் சேமத்தை" என்கிறபடியே அவன் தன் பாதத்திற்கு அணைபோன்று திருவடிகளின் கீழே சேர்த்துக்கொள்ளுமாறு போன்று, இத் திருவாய்மொழியும், அடிக்கீழ் - [5] "ஆயிரத்துள் இப்பத்தால் அருளி அடிக்கீழ் இருத்தும்" என்கிறபடியே அவன் திருவடிகளின் கீழே சேர்த்து வைத்தலாலும்,

இன்பக்கதி - [6] "இன்பக்கதிசெய்யும் தெளிவுற்ற கண்ணனை" என்கிறபடியே தன்னைச் சேர்ந்தார்க்குத் தன்னுடைய அநுபவமாகிற எல்லை இல்லாத ஆனந்தத்தோடு கூடிய பேற்றினை அவன் கொடுக்குமாறுபோலே, இத் திருவாய்மொழியும், இன்பம் பயக்கும் - [7] "எங்ஙனே சொல்லிலும் இன்பம் பயக்குமே" என்கிறபடியே தன்னைக் கற்கும் மக்களுக்குப் பகவானுடைய அநுபவமான ஆனந்தத்தை உண்டாக்குதலாலும்,

ஊடுபுக்கு - [8] "ஊடுபுக்கு எனது ஆவியை உருக்கி உண்டிடுகின்ற நின் தன்னை" என்கிறபடியே அவன் தன்னை அநுபவிக்க இழிந்தாரை நீர்ப்பண்டம் ஆம்படி உருக்குமாறுபோலே, இத் திருவாய்மொழியும், மூஉலகும் உருகாநிற்பர் - [9] "ஒன்பதோடு ஒன்றுக்கும் மூவுலகும் உருகுமே" என்றும், [10] "ஊற்றின்கண் நுண்மணல்போல் உருகாநிற்பர் நீராய்" என்றும் சொல்லுகிறபடியே தன்னை அநுபவிக்க இழிந்தாரை நீர்ப்பண்டம் ஆக்குதலாலும்,

---

1. *திருவாய்.* 1. 7: 11.
2. *திருவாய்.* 7. 6: 10.
3. *திருவாய்.* 8. 4: 11.
4. *திருவாய்.* 7. 5: 10.
5. *திருவாய்.* 8. 8: 11.
6. *திருவாய்.* 7. 5: 11.
7. *திருவாய்.* 7. 9: 11.
8. *திருவாய்.* 5. 10: 10.
9. *திருவாய்.* 9. 5: 11.
10. *திருவாய்.* 6. 8: 11.

என்னும் சாம்யத்தாலே - என்று சொல்லப்படுகிற இத்தகைய ஒப்புமையாலே, [1]வாச்யன் பத்தின்ய தோற்றம் போலே - இத் திருவாய்மொழியில் சொல்லப்பட்ட பொருளான சர்வேச்வரனுடைய [2] "பத்தினய தோற்றம்" என்கிற பத்து அவதாரம் போலே, தோற்றங்கள் ஆயிரத்தின் பத்துப் பத்தான இதின் ஆவிர்ப்பாவம் - [3] "தோற்றங்கள் ஆயிரம்" என்கிற இதனுடைய பத்துப் பத்தான தோற்றம் என்கை.

இதனுல், இதன் பொருளான ஈச்வரனேடு பல படியாலும் ஒப்புமை உடைத்தாகையாலே அவன்தான் உலகத்தைக் காக்கும் நிமித்தம் பத்து அவதாரமாக அவதரித்தாற்போலே, இத் திருவாய்மொழியும் உலகத்தைக் காக்கும் நிமித்தமாகப் பத்துப் பத்தாக அவதரித்தது என்றபடி. (55)

215

[4] 'ஐந்தினேடு, ஒன்பதோடு, ஒருபத்து' என்னுமவை போலே, 'நூறே சொன்ன, பத்து நூறு, ஓராயிரம்' என்றதும் ஸாபிப்ராயம்.

என்பது, சூத்திரம்.

வியாக்:— இனி, இப்பத்துக்களையும் இப்பத்துக்களின் தொகுதியான இப்பிரபந்தத்தையும் ஆழ்வார் சிறப்பித்துப் பேசின திருப்பாசுரங்களில அவருடைய திருவுள்ளக்கருத்தினை, திருஷ்டாந்தத்தோடு அருளிச்செய்கிருர் இச் சூத்திரத்தால்.

ஐந்தினேடு என்னுமது போலே - முன்னில் ஐந்து திருப்பாசுரங்களுக்கு ஒருகருத்தும் பின்னில் ஐந்து திருப்பாசுரங்களுக்கு ஒரு கருத்து மாகையாலே [5] "ஐந்தினேடு ஐந்தும் வல்லார்" என்னுமது போலேயும், ஒன்பதோடு என்னுமது போலே - ஒன்பது திருப்பாசுரங்களுக்கு ஒருகருத்தும் ஒருதிருப்பாசுரத்துக்கு ஒருகருத்து மாகையாலே [6] "ஒன்பதோடு ஒன்றுக்கும்" என்னுமதுபோலேயும்,

---

1. *வாச்யன் - சொல்லப்பட்ட பொருள்; இறைவனுகிய ஸ்ரீமந் நாராயணன்.*

2. *திருச்சந்தவிருத்தம்,* 79. 3. *திருவாய்.* 6. 8: 11.

4. *ஐந்தினேடு என்னுமதுபோலே, ஒன்பதோடு என்னுமதுபோலே, ஒருபத்து என்னுமதுபோலே என்றும், நூறே சொன்ன என்றதும், பத்து நூறு என்றதும், ஓராயிரம் என்றதும் என்று 'என்னுமதுபோலே, என்றதும்' என்னும் இரண்டு சொற்களையும் மூன்றும் கூட்டுக. சாபிப்ராயம் - ஒருகருத்தை உட்கொண்டது.*

5. *திருவாய்.* 10. 2: 11. 6. *திருவாய்.* 9. 5: 11.

ஒருபத்து என்னுமதுபோலே - பத்துத் திருப்பாசுரங்களுக்கும் சேர ஒரு கருத்து ஆகையாலே [1] "பாடல் ஓராயிரத்துள் இவையும் ஒரு பத்து" என்னுமதுபோலேயும், நூறே சொன்ன என்றதும் - [2] "நூறே சொன்ன ஓராயிரம்" என்று கிழி கிழியாகக் கொடுப்பாரைப்போலே நூறு நூருகச் சொன்ன ஆயிரம் என்றும், பத்து நூறு என்றதும் - [3] "பத்து நூற்றுள் இப்பத்து" என்று பத்துநூறு என்றும் இப்படிப் பத்துக்களைப் பிரித்துச் சொன்னதும், ஓராயிரம் என்றதும் - [4] "தெரியச் சொன்ன ஓராயிரம்", [5] "மிக்க ஓராயிரம்", [6] "அவாவில் அந்தாதிகளால் இவை ஆயிரமும்" என்று ஆயிரத்தையும் சேரச்சொன்னதும், சாபிப்பிராயம் - பத்துக்கள்தோறும் வெவ்வேறுகருத்தாயும் ஆயிரத்துக்கும்சேர ஒருகருத்தாயும் இருக்கும்படியை நினைத்து ஆகையாலே கருத்துடை மொழிகளாகும் என்கை. (56)

216

[7] பாட்டுக்குக் கிரியையும் பத்துக்குக் கருத்தும் போலே, நூற்றுக்கு உபதேசப்பத்து.

என்பது, சூத்திரம்.

வியாக் :— இனி, பத்துக்கள்தோறும் அறிவுரையான ஒவ்வொரு திருப்பதிகம் முக்கியமானதாய், அவ்வப் பத்துக்களுக்கு அவ்வத் திருப்பதிகத்திலே நோக்காக இருக்கும் படியைத் திருஷ்டாந்தத்தோடு அருளிச்செய்கிறார் இச் சூத்திரத்தால்.

---

1. திருவாய். 3. 4: 11.
2. திருவாய். 9. 4: 11.
3. திருவாய். 6. 7: 11.
4. திருவாய். 6. 9: 11.
5. திருவாய். 7. 6: 11.
6. திருவாய். 10. 10: 11.

"நூறே சொன்ன" "பத்து நூறு" என்று கூறியதன் கருத்தைப் பின்வருகின்ற 219 முதல் 228 முடிய உள்ள சூத்திரங்களில் காண்க. "தெரியச்சொன்ன ஓராயிரம்" "மிக்க ஓராயிரம்" என்றதன் கருத்தை 234-ஆம் சூத்திரத்தால் உணர்க. "ஐந்திணுடு" ஒன்பதோடு" "ஒரு பத்து" என்று கூறியதன் கருத்தை அருளிச்செய்திலர்; ஆசாரியர் மூலமாக அறிந்து கோடல் வேண்டும் என்பது பேராசிரியர் திருவுள்ளம்.

7. ஒவ்வொரு பத்திலும் உபதேசம் செய்கின்ற திருப்பதிகம் ஒன்று உண்டு. அந்தத் திருப்பதிகமே, அந்த நூறு திருப்பாசுரங்களிலே முதன்மையையுடையது என்கிறார் இச்சூத்திரத்தால். அதனைத் திருஷ்டாந்த மூலம் விளக்குகிறார் 'பாட்டுக்குக் கிரியை போன்றும் பத்துக்குக் கருத்துப் போன்றும்' என்று. கிரியை - வினைமுற்று. 'பத்து' என்றது, பத்துத் திருப்பாசுரங்களையுடைய திருப்பதிகத்தை.

பாட்டுக்குக் கிரியை போலே - ஒரு பாட்டு ஆனால் பயனிலையோடே முடியவேண்டுகையாலே பாட்டுக்கள்தோறும் பயனிலையைக் காட்டும்சொல் முக்கியமாக இருக்குமாறுபோலேயும், பத்துக்குக் கருத்து போலே - [1] ஒவ்வொரு திருப்பதிகத்திற்குப் பரத்துவம், வழிபாட்டினைப் பெறுமவனுதல், எளியனுதல், குற்றங்களைப்பொறுக்கும் பொறையுடையனுதல் என்பனபோன்று தனிததனியே கருத்துக்கள் ஆகையாலே, பத்துத் திருப்பாசுரங்களுக்குக் கருத்தான நிதானம் சொல்லும் திருப்பாசுரம் முக்கியமாக இருக்குமாறுபோலேயும், நூற்றுக்கு உபதேசப் பத்து - [2] நூறு திருப்பாசுரங்களுக்குப் பரோபதேசத்தைச்செய்யும் பத்துத்திருப்பாசுரங்கள் முககியமாகஇருக்கும்என்கை.

இதனுல், பாட்டுக்களுக்குப் பயனிலையிலும், பத்துத்திருப்பாசுரங்களுக்கு நிதானம் சொல்லும் திருப்பாசுரத்திலும் கருத்தாக இருக்குமாறுபோன்று, நூறு திருப்பாசுரங்களுக்கும் பரோபதேசத்தைச் செய்யும் பத்துத்திருப்பாசுரங்களிலே கருத்தாக இருக்கும் என்றதாயிற்று. [3] "பிணங்கி அமரர்பிதற்றும், குணங்கெழு கொள்கையினுனே" என்கிறபடியே பேரளவுடையரான நித்தியசூரிகள் தாங்கள் தாங்கள் அநுபவிக்கின்ற குணங்களின் ஏற்றத்தாழ்வுகளைச் சொல்லிச் சரச விவாத கோலாகலம் பண்ணும்படி இருக்கிற அவனுடைய முதன்மை எளிமை முதலியவற்ருேடு கூடிய குணவிசேடங்களைத் தனித்துத் தம்மால் அநுபவித்துத் தலைக்கட்ட ஒண்ணுமையாலே [4] "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவது என்று கொலோ" என்கிறபடியே கூட்டரான சுவையுணர்வாரைத் தேடின அளவில், கிடையாதபடி அவர்கள் சேய்ஞராக, அண்ணியரான இவ்வுலக மக்களுடைய தாழ்ந்த குணங்களைப்

---

1. 'உயர்வறவுயர்நலம்' என்ற தொடக்கும் திருப்பதிகம் பரத்துவத்திலே நோக்கு. இதனைத் தெரிவிப்பது முதல் திருப்பாசுரம். இரண்டாம் திருப்பதிகம், வழிபாடுபெறுமவனுதலிலே நோக்கு. இதனைத் தெரிவிப்பது பத்தாம்திருப்பாசுரம். மூன்றும் திருப்பதிகம் எளிமையில் நோக்கு. இதனைத் தெரிவிப்பது, முதல் திருப்பாசுரம். நான்காம் திருப்பதிகம் பொறையுடைமையில் நோக்கு. இதனைத் தெரிவிப்பது ஏழாம் திருப்பாசுரம்.

2. ஒவ்வொரு பத்திலும் பரோபதேசம் செய்யும் திருப்பதிகங்கள் கீழே காட்டப்படுகின்றன:

முதற்பத்தில் - வீடுமின் முற்றவும். இரண்டாம்பத்தில் - கிளரொளியிளமை. மூன்றும்பத்தில் - சொன்னுல் விரோதம். நான்காம் பத்தில் - ஒன்றும் தேவும். ஐந்தாம்பத்தில் - பொலிக பொலிக. ஆரும் பத்தில் - நல்குரவும் செல்வும். ஏழாம்பத்தில் - இன்பம் பயக்க. எட்டாம்பத்தில் - எல்லியும் காலையும். ஒன்பதாம்பத்தில் - மாலை நண்ணி. பத்தாம்பத்தில் - கண்ணன் கழலிணை.

3. திருவாய். 1. 6: 4. 4. திருவாய், 2. 3: 10.

பாராமல், பகவானுடைய குணங்களிலே மூட்டித் திருத்திக் கூட்டிக் கொள்கை தேட்டமாய் உபதேசத்திலே ஒருப்படுகையாலே, அதிலே நோக்காக வேண்டுமாகையால் ‘ நூற்றுக்கு உபதேசப் பத்து ’ முக்கியம் என்கிறார். (57)

217

[1] *பகவத் பக்த பரங்கள், ஆச்ரயணவிதி சேஷங்கள்.*
என்பது, சூத்திரம்.

வியாக் :— இத்திருவாய்மொழியில் பகவானுடைய பக்தர்களைப் பற்றி வருகின்ற திருப்பாசுரங்களுக்குக் கருத்து யாது? என்னும் வினாவிற்கு விடை அருளிச்செய்கிறார் இச் சூத்திரத்தால்.

பகவத் பக்தபரங்கள் - “பயிலுஞ்சுடரொளி” முதலான, பாகவதர்களைப்பற்றிக்கூறுகிற திருவாய்மொழிகள், [2] “ சுவர்க்கத்தை விரும்புகிறவன் ஜ்யோதிஷ்டோமம் என்ற யாகத்தால் யாகத்தைச் செய்யக் கடவன் ” என்கிற விதிக்குப் பிரயாஜம் முதலிய யாகங்களைப் பற்றிக் கூறும் விதிகள் உறுப்புக்களாய் அவற்றினுடைய செய்கையோடே அது பலத்தின் அளவாய்த் தலைக்கட்டுமாறுபோலே, ஆச்ரயணவிதி சேஷங்கள் - [3] “ திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ” என்றும், [4] “நலம் அந்தம் இல்லதோர் நாடு புகுவீர், பலமுந்து சீரில் படிமின் ஓவாதே ” என்றும் விதிக்கப்படுகின்றபடியே, பகவானை அடைதல், பாகவதர்களை அடைதலை விட்டு நீங்கித் தலைக்கட்டாமையாலே, பகவானை அடையும்படி விதிக்கும் விதிக்கு, பாகவதர்களை வணங்கும் வணக்கங்கள் உறுப்புக்கள் என்கை.

---

1. *இச்சூத்திரத்தை, ஆச்ரயண விதிக்கு, பகவத் பக்த பரங்கள் சேஷங்கள் என்று கூட்டுக. பகவத் பக்த பரங்கள் – பகவானுடைய அடியார்களைப்பற்றிக் கூறுகின்ற திருப்பாசுரங்கள். சேஷங்கள் - உறுப்புக்கள்.*

2. *“ ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத ” என்பது, ஆப. ஸ்ரௌ. 8: 2.*

“ ஜ்யோதிஷ்டோமம் என்ற யாகத்திற்கு விதி கூறப்படுகின்ற வேதத்தில் பிரயாஜம் முதலிய சிறு யாகங்களுக்கும் விதிகள் கூறப்பட்டிருக்கின்றன ; பிரயாஜம் முதலிய யாகங்களில் அநுஷ்டானம் இல்லையாகில், ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களைச் செய்வதில் பயன் இல்லை ; ஆதலால், பிரயாஜம் முதலிய யாகங்களின் விதிகள் ஜ்யோதிஷ்டோம விதிக்கு அங்கமாகக் கொள்ளப்படுகிறது. அது போன்று, பாகவதர்களை வணங்கும் வணக்கத்தை, பகவானை வணங்கும் வணக்கத்திற்கு அங்கமாக்கிக்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

3. *திருவாய்.* 4. 1: 1. 4. *திருவாய்.* 2. 8: 4.

அன்றிக்கே, [1] பரோபதேசத்தைச் செய்கிற இத்திருவாய்மொழியில் பகவானுடைய குணங்களையும் அடியார்களுடைய குணங்களையும் கூறுதற்குப் பயன் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் இச் சூத்திரத்தால் என்னவுமாம். அதாவது, பகவானுடைய குணங்களைப்பற்றியும் அவனுடைய அடியார்களான உயிர்களுடைய குணங்களைப்பற்றியும் சொல்லுகிற திருவாய்மொழிகள், அடையப்படுகிற இறைவனைப்பற்றியும் அடையும் உயிர்களைப்பற்றியும் சொல்லுமவை ஆகையாலே, அடையும்படி விதிக்கிற விதிக்கு, உறுப்புக்களாமத்தனை என்னுதல். (58)

218

[2] பரத்வ காரணத்வ வியாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ சரண்யத்வ சக்தத்வ சத்யகாமத்வ ஆபத்சகத்வ ஆர்த்திஹரத்வ விசிஷ்டன், மயர்வை அறுக்க, தத்வவேதந மறப்பு அற்று, ஜ்ஞப்தி பல முக்தி தலை சேர நிஷ்கர்ஷித்து, மோக்ஷ பல விருத்தி செய்ய அர்த்தித்து, புருஷார்த்த பல அந்யருசி ஒழிந்து, விரக்தி பல ராகம் கழியமிக்கு, பிரேமபல உபாயத்தே புகுந்து, சாதநபல உபகாரக் கைம்மாறு இன்றி, கிருதஜ்ஞதாபல பிரதிகிருதமானத்தை உணர்ந்து, ஆத்மதர்சந பல பிராப்தி மரணாவதியாகப் பெற்று, காலாஸத்தி பல கதிக்குத் துணைகூட்டின தம்பேற்றை, பிறர் அறியப் பத்துத்தோறும் வெளியிடுகிறார்.

என்பது, சூத்திரம்.

---

1. இரண்டாவதாகக் கூறுகின்ற பொருளுக்கு, சூத்திரப் பொருளை ஆற்றொழுக்காகக் கொள்க.

2. ஒவ்வொரு பத்திலும், இறைவனுக்குள்ள குணங்களில் இந்த இந்தக் குணம் சொல்லப்படுகிறது என்பதும், அந்த அந்தக் குணத்தோடு கூடின இறைவன் ஒவ்வொரு பத்திலும் ஆழ்வார்க்கு உண்டாக்கின பேறு இன்னது என்பதும் இச் சூத்திரத்தில் சுருக்கமாகத் தெரிவிக்கப்படுகின்றன.

முதற் பத்தில் பரத்வம், இரண்டாம் பத்தில் காரணத்வம், மூன்றும் பத்தில் வியாபகத்வம், நான்காம் பத்தில் நியந்திருத்வம், ஐந்தாம் பத்தில் காருணிகத்வம், ஆறும் பத்தில் சரண்யத்வம், ஏழாம் பத்தில் சக்தத்வம், எட்டாம் பத்தில் சத்யகாமத்வம், ஒன்பதாம் பத்தில் ஆபத்சகத்வம், பத்தாம் பத்தில் ஆர்த்திஹரத்வம் என்றும் குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றின் விளக்கத்தை மேலே வருகின்ற பத்துச் சூத்திரங்களில் காண்க. விசிஷ்டன் - கூடினவன்.

வியாக் :— இப்படிப் பத்துத்தோறும் உள்ள அர்த்தங்களைப் பரோபதேசத்துக்கு உறுப்பாக ஒருங்கவிட்டு, விரிவாக மேல் அருளிச் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, பரத்துவம் முதலான குணங்களோடு கூடின சர்வேச்வரன் தமக்குப் பிறப்பித்த நிலை வேறுபாடுகளைப் பத்துத்தோறும் வெளியிடுகிறார் என்று சுருக்கமாக வாக்கியார்த்தம் அருளிச்செய்கிறார் இச் சூத்திரத்தால்.

பரத்வம் - எல்லாப் பொருள்கட்கும் மேலானவனாதல், காரணத்வம் - அந்த முதன்மைக்கு விளக்கமாம்படி எல்லாப் பொருள்கட்கும் காரணனாதல், வியாபகத்வம் - உலகத்தில் காரிய காரணங்களைப் போலன்றிக்கே முதற்காரணமும் தானே ஆகையாலே காரியமாக மாறின எல்லாப் பொருள்கள்உள்ளும் பரந்து தங்குகிறவனாதல், நியந்த்ருத்வம் - அங்ஙனம் பரந்திருக்கும் அப்பரப்புத்தான் ஆகாசத்தின் பரப்புப்போலன்றிக்கே உயிருக்குள் உயிராக இருக்கும் தன்மை காரணமாக ஆகையாலே எல்லாப்பொருள்களையும் நியமிக்கின்றவனாதல், காருணிகத்வம் - அந்தப் பரத்துவம் முதலான குணங்களைக் கண்டு வெருவவேண்டாதபடி பேரருளாளனாதல், சரண்யத்வம் - இப்படிப் பேரருளாளனாகையாலே எல்லாப்பொருள்களுக்கும் புகலிடனாதல், சக்தத்வம் - எல்லாப்பொருள்கட்கும் புகலிடமானவன் விருப்பு இல்லாதனவற்றை நீக்கி விருப்புள்ளனவற்றைக் கொடுத்தலுக்கு ஈடாம்படி அளவிலாத சக்தியையுடையனாதல், சத்யகாமத்வம் - அந்தச்சகதியாலே என்றும் உள்ளவர்களாக ஆக்கப் படுகின்ற தேவியர், நித்தியசூரிகள், இவர்கள் முதலான பரிசனங்கள் முதலியனவுடையனாகையாலே சத்தியகாமனாதல், ஆபத்சகத்வம்- என்றும் உள்ள அந்தப் பேரின்பத்தில் கருத்து ஊன்றினவனாய் இருந்துவிடாமல் பிரளயம் முதலான ஆபத்துக்களிலே உபகாரத்தைச் செய்து இவ்வுலகத்தைக் காப்பாற்றுகையாலே ஆபத்திலே துணை செய்யுமவனாதல், ஆர்த்தி ஹரத்வம் - இபபடி ஆபத்திலே துணை செய்யுமவனாகையாலே இவ்வுலகவாழ்வாகிற தாபத்தாலே துன்பப் பட்ட அடியவர்களுக்குப் பிறவித் துன்பத்தை நீக்குமவனாதல், விசிஷ்டன் - இப்படிப் பத்துப் பத்துக்களாலும் சொல்லப்படுகிற பத்துக் குணங்களோடும் கூடியிருக்கின்ற சர்வேச்வரன், மயர்வை அறுக்க - " மயர் வற மதி நலம் அருளினன் " என்கிறபடியே பக்தியின் உருவத்தை அடைந்த ஞானத்தைக் கொடுத்தல் மூலமாக அறிவின்மையை வாசனையோடு போக்க,

[1] தத்வவேதந மறப்புஅற்று - அதனால் அவன்விஷய ஞான

1. இனி, தாம் பெற்ற பேற்றினை ஒவ்வொரு பத்திலும் வெளியிடு

மாகிற உண்மை அறிவில் " மறப்பனோ இனியான் என்மணியை " என்கிறபடியே மறப்பு அற்று, [2] ஜ்ஞப்திபலமுக்தி தலைசேர நிஷ்கரிஷித்து - அந்தஞானத்தின் பலமான மோக்ஷத்தை "நின் செம்மாபாதபற்புத்தலை சேர்த்து " என்கிறபடியே சொரூபத்திற்குச்சேர்ந்ததாக அறுதியிட்டு, [3] மோக்ஷ பல விருத்தி செய்ய அர்த்தித்து - அந்த மோக்ஷத்தின் பலமான கைங்கர்யத்தை "வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் " என்கிறபடியே விரும்பி, [4] புருஷார்த்தபல அந்ய ருசி ஒழிந்து - அந்தக் கைங்கர்யத்துக்குப் பலம் மற்றைப்பொருள்களிலே உள்ள ருசி நீங்குதலாகையாலே அந்தக் கைங்கர்யத்தின் பலமாக " ஐங்கருவிகண்ட இன்பம் - சிற்றின்பம் ஒழிந்தேன்" என்கிறபடியே மற்றைய பேறுகளில் ருசியைத் தவிர்ந்து, [5] விரக்திபல ராகம் கழியமிக்கு - அந்த இதர

கிறபடியைத் தெரிவிக்கிறார் 'தத்வவேதந' என்று தொடங்கி. தத்வ வேதநம் - உண்மை அறிவு.

தத்துவ ஞானத்தில் மறப்பு இல்லாமையாகிற பேறு தாம் பெற்ற படியை முதற்பத்தில் வெளியிடுகிறார். "மறப்பனோ இனியான் என்மணியையே " (திருவாய். 1. 10: 10.) என்றதிலே நோக்கு.

2. இதனால், இரண்டாம் பத்தில் ஆழ்வார் பெற்றபேறு தெரிவிக்கப் படுகிறது. அதாவது, தம் சொரூபத்திற்குத் தகுதியாக மோக்ஷத்தை அறுதியிடுதலாகிற பேறு இதனால் தெரிவிக்கப்படுகிறது என்றபடி. இது, "எம்மா வீட்டுத் திறமும் செப்பம்" (திருவாய். 2. 9: 1.) என்ற திருப்பாசுரத்திலே நோக்கு. மோக்ஷம் என்பது தத்துவ ஞானத்தால் அடைய வேண்டுவதொன்றாகையாலும் மேல் பத்தில் தத்துவஞானம் பெற்றமை கூறப்பட்டமையாலும் 'ஜ்ஞப்திபலமுக்தி' என்கிறார். ஜ்ஞப்திபலமுக்தி - ஞானத்தின் பலனான மோக்ஷம். நிஷ்கரிஷித்து - அறுதி யிட்டு.

3. இதனால் மூன்றும் பத்தில் தாம் பெற்ற பேறு தெரிவிக்கப்படுகிறது. இரண்டாம் பத்தில் அறுதியிட்ட மோக்ஷத்திற்குப் பலன் கைங்கர்யம் செய்தலாகையாலே அந்தக் கைங்கர்யத்தைப் பிரார்த்தித்தலாகிற பேறு மூன்றும் பத்தில் தெரிவிக்கப் பெறுகிறது என்றபடி. இது, "ஒழிவில் காலமெல்லாம்" (திருவாய். 3. 3: 1.) என்ற திருப்பாசுரத்திலே நோக்கு. மோக்ஷ பல விருத்தி - மோக்ஷத்தின் பலனான கைங்கரியம். அர்த்தித்து - விரும்பி.

4. இதனால் நான்காம் பத்தில் தாம் பெற்ற பேறு தெரிவிக்கப் படுகிறது. அந்தக் கைங்கர்யத்திற்குப் பலன், உலக வாழ்க்கையிலே உள்ள மற்றைப் பொருள்களில் ருசி நீங்குதலாகையாலே, அங்ஙனம் நீங்கிய தன்மை கூறப்படுகிறது என்றபடி. இது, (திருவாய். 4. 9: 10.) ஆம் திருப்பாசுரத்திலே நோக்கு.

5. இதனால் ஐந்தாம் பத்தில் பேசப்படும் பேறு தெரிவிக்கப்படுகிறது. மேலே கூறப்பட்ட உலக வாழ்வில் விரக்திக்குப் பலன், பகவானிடத்தில் பக்தி மிகுதல் ஆதலால் அங்ஙனம் காதல் மிகுதலாகிற பேறு இதனால் தெரிவிக்கப்படுகிறது. இது, "கழிய மிக்கதோர் காதலன் இவன் " (திருவாய். 5. 5: 10.) என்ற திருப்பாசுரத்திலே நோக்கு. விரக்தி பல ராகம் - விரக்திக்குப் பலனான (பகவானிடத்தில்) ஆசை.

விஷய விரக்திக்குப் பலமான பகவானிடத்தில் பக்தியானது "கழிய மிக்கதோர் காதல்" என்னும்படி மிக்கு, [1]பிரேமபல உபாயத்தே புகுந்து - அந்த எல்லை இல்லாத பக்தியின் பலமான, கால தாமதத்தைப் பொறுக்காமையால் வந்த பதற்றத்தாலே "அலர்மேல் மங்கை உறை மார்பா! உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்" என்று உபாயத்தைப்பற்றி,

[2] சாதநபல உபகாரக் கைம்மாறுஇன்றி - அந்த உபாயத்தின்பலமான உபகாரத்துக்குப் பிரதி உபகாரமாக "உதவிக்கைம்மாறு என்னுயிர்" என்கிறபடியே ஆன்மாவினைக் கொடுக்கத் தேடி, அந்த ஆன்மவஸ்து அவனுடையது என்று அறிகையாலே, "அதுவும் மற்று ஆங்கவன் தன்னது - எதுவும் ஒன்று இல்லை செய்வது இங்கும் அங்கே" என்கிறபடியே பிரதியுபகாரம் காணுமல் தடுமாறி, [3]கிருதஜ்ஞதாபல பிரதி கிருதமானத்தை உணர்ந்து - அந்தச்செய்ந்நன்றி

---

1. இதனுல் ஆரும் பத்தில் பேசப்படும் பேறு தெரிவிக்கப்படுகிறது. மேல் பத்தினுல் கூறப்பட்ட எல்லை இல்லாத பக்திக்குப் பலன், உபாயமாக இருக்கும் இறைவனைப் பற்றுதலே யாதலால், அங்ஙனம் பற்றுதலாகிற பேறு இதனுல் தெரிவிக்கப்படுகிறது. இது, "அகலகில்லேன் இறையும்" (திருவாய். 6. 10: 10.) என்ற திருப்பாசுரத்திலே நோக்கு. பிரேம பல உபாயம் - அந்தக் காதலுக்குப் பயன் உபாயமாக இருக்கின்ற இறைவனைப் பற்றுதல்.

2. இதனுல் ஏழாம் பத்தில் கூறப்படும் பேறு பேசப் படுகிறது. மேல்பத்தில் கூறப்பட்ட சரணுகதியில் உபாயமாக இருக்கின்ற இறைவனுலே கிடைத்த பலனுன உபகாரத்திற்குக் கைம்மாருக ஆன்மாவினைக் கொடுக்கத் தேடி, அவ்வான்மாவும் அவனுடையதே என்று அறிகையாலே, கைம்மாறு காணுமல் தடுமாறுதலாகிற பேறு பெற்றமையைத் தெரிவிக்கிருர் என்றபடி. இது, "உதவிக்கைம்மாறு" (திருவாய். 7. 9: 10.) என்ற திருப்பாசுரத்திலே நோக்கு. சாதந பல உபகாரம் - இறைவனுல் கிடைத்த பலனுன உபகாரம். சாதநம் - இறைவன்.

3. இதனுல் எட்டாம் பத்தில் பேசப் படுகின்ற பேறு தெரிவிக்கப்படுகிறது. மேல் பத்தில் பேசின செய்ந்நன்றி யறிதலுக்குப் பலமான பிரதியுபகாரமாக, பக்தியினுலே கலங்கிக் கொடுத்த ஆன்மாவின் தன்மையை உணர்தலாகிற பேறு பெற்றமையைத் தெரிவிக்கிருர் என்றபடி. இது, "தான்கனே எனக்கே" (திருவாய். 8. 1: 10.) "யானும் தானுய் ஒழிந்தானே" (8. 8: 4.) என்ற திருப்பாசுரங்களை நோக்கியது. கிருதஜ்ஞதா பல - செய்ந்நன்றி யறிதலுக்குப் பயனுன. பிரதி கிருதமானம் - பிரதியுபகாரமாகக் கொடுக்கப்பட்ட ஆன்மாவின் தன்மையை.

அறிதலுக்குப் பலமான பிரதியுபகாரமாக "தோள்களை ஆரத் தழுவி என்னுயிரை அறவிலைசெய்தனன்" என்கிறபடியே பிரீதியாலே கலங்கிக் கொடுத்த ஆன்மாவினை "நின்ற ஒன்றை உணர்ந்தேன்" என்கிறபடியே சரீரம் முதலானவற்றினின்றும் வேறுபட்டதாய் அவனுக்குச் சரீரமாக இருக்கையாலே சேஷமாய்க்கொண்டு வேறொருவர்க்கும் உரித்தன்றி அவனுக்கே உரியதாக இருக்கும் என்று அறிந்து, [1] ஆத்ம தர்சந பல பிராப்தி மரண அவதியாகப் பெற்று - அங்ஙனம் ஆன்மாவின் தன்மையைக் கண்டதன்பலமான பகவானை அடைதலை, "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்கிறபடியே சரீரத்தின் முடிவிலே பண்ணித்தருகிறோம் என்று அவன் நாள்இட்டுக் கொடுக்கப்பெற்று; [3] காலஆசத்தி பல கதிக்குத் துணைகூட்டின தம்பேற்றை - இங்ஙனம் அவனை அடையும் காலம் அணித்தானதற்குப் பலம் அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரம பதத்து ஏறப்போவதாகையாலே, அவ் வர்ச்சிராதிகதிக்குக் "காளமேகத்தைஅன்றி மற்றொன்றிலம் கதி" என்றும், "ஆத்தன்தாமரை அடியன்றி மற்றிலம் அரணே" என்றும் பரம ஆப்தனானவன் தன்னையே துணையாகக்கூட்டினதம்முடையபேற்றினை, பிறர் அறியப்பத்துத் தோறும் வெளியிடுகிறார் - பிறர் அறிந்து வாழும்படி முதல்பத்தே தொடங்கிப் பத்துப்பத்துக்களாலும் விளக்கமுற அருளிச்செய்கிறார் என்றபடி.

---

1. *இதனால் ஒன்பதாம் பத்தில் பேசப் படுகின்ற பேறு தெரிவிக்கப்படுகிறது. மேல் பத்தில் பேசின ஆன்ம சொரூப ஞானத்திற்குப் பயன், பகவானை அடைதலேயாகையாலே, அதனை இச் சரீரத்தின் முடிவிலே செய்கிறோம் என்று அவன் நாளிட்டுக் கொடுக்கப் பெறுதலாகிற பேற்றைப் பெற்றமை தெரிவிக்கப்படுகிறது. இது, "சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம்"* (திருவாய். 9. 10: 5.) *என்ற திருப்பாசுரத்தை நோக்கியது.*

2. *மேல் பத்தில் நாள் இடப்பெற்ற எல்லை நாள் அணித்தானதற்குப் பலன், அர்ச்சிராதி மார்க்கத்தாலே போவதாகையாலே அந்த அர்ச்சிராதி மார்க்கத்திற்குப் பரம ஆப்தனான அவ் விறைவனையே துணையாகக் கொண்டமை பேசப் படுகிறது பத்தாம் பத்தால், இது, "தாளதாமரை", "கூத்தன் கோவலன்"* (திருவாய். 10. 1: 1, 6.) *என்ற திருப்பாசுரங்களை நோக்கியது.*

இதனால், பரத்துவம் முதலான குணங்களோடு கூடின ஈச்வரன் தமக்குச் செய்து கொடுத்த பேறுகளைப் பலரும் அறிந்து வாழவேண்டும் என்று பத்துப்பத்துக்களாலும் தெளிவுபடுத்துகிறார் என்று பத்துப்பத்துக்களுக்கும் வாக்கியார்த்தம் சொல்லப்பட்டதாயிற்று.

(59)

ஆசாரிய ஹ்ருதய வியாக்கியானம்

மூன்றும் பகுதி முற்றிற்று.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவடிகளே அரண்.

பெரிய சீயர் திருவடிகளே பேறு.

நான்காம் பகுதி

219

[1] பரபரனாய் நின்ற வளவேழ் வைப்பாம் அவையுள் உம்பர் வானவர் அதிபதி, மயர் வற மன்னி மனம் வைக்கத் திருத்தி, மறக்கும் என்று நல்கி விடாதே மன்ன, அயர்ப்பிலன் அறுத்தேன் என்சொல்லி மறப்பனோ என்னும்படி தத்வஜ்ஞரானவர், சுடரடி எம்பிரானை விடாது கண்டாய் நீயும் நானும் என்கிற ஸஹ்ருதய அநுபவம் சம்சாரிகளுக்கும் ஆம்படி, வீடுமின் என்று தியாஜ்ய உபாதேய தோஷ குண பரித்யாக சமர்ப்பண கிரமத்தை சாலம்பந மந்திர மாக உபதேசித்து, எளிதாக அவதரித்துப் பிழைகளைச் சகித்துப் புரைஅறக்கலந்து அல்பசந்துஷ்டனாய் அம்ருதமே ஒளஷதமாக்கி நீர்புரையத் தன்னை நியமித்துப் போகத்தைச் சாத்மிப்பித்து, பக்தி கணைகளுக்கு ஒக்கவருமவனுடைய சேவைக்கு எளிமையும் இனிமையும் உண்டு; தொழுதால் அரும்பயனாய தரும்; உத்யோகத்தே வினைகளும் மாளும்; அவன் உரைத்த மார்க்கத்தே நின்று, இருபசை மலமற உணர்வுகொண்டு நலம்செய்வது என்று, தாம் மயர்வற மதிநலம் அருளி பஜநத்திலே சேர்க்கிறார் முதற்பத்தில்.

என்பது, சூத்திரம்.

வியாக்:—இதில் முதல் பத்தாலே, எல்லாப்பொருள்கட்கும் உயர்ந்தவனாய், பரபரனான சர்வேச்வரன், ஒருகாரணத்தையும் பற்றா

---

1. மேற்சூத்திரத்தில் சுருக்கமாகப் பேசிய விஷயங்களை இச்சூத்திர முதலாக விரித்து அருளிச்செய்கிறார். இச்சூத்திரத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கோடல்வேண்டும். முதற்பகுதியில், இப்பத்தில் ஆழ்வார் முக்கியமாக எடுத்துப்பேசின இறைவன் குணம் இன்னது என்பது பேசப் படுகிறது. இரண்டாம் பகுதியில் அவ்விறைவன் ஆழ்வார்க்குச் செய்த உபகாரம் இன்னது என்பது பேசப்படுகிறது. மூன்றும் பகுதியில் ஆழ்வார் தம்முடைய அநுபவத்தளவிலே நில்லாமல் இவ்வுலக மக்களுக்கும் உபதேசித்து அவர்களையும் திருத்தித் தமக்குத் துணைவர்களாகக் கூட்டிக்கொள்ள விரும்பி உபதேசித்தவை இன்ன இன்ன விஷயங்கள் என்று பேசப்படுகின்றன.

மல் செய்கின்ற தன்னுடைய பேரருளாலே ஆழ்வார்க்கு அகஇருளைப் போக்கிப் பக்தியாக வடிவத்தை எடுத்த ஞானத்தைக்கொடுத்து, இன்னமும் இவர் நம்மை மறந்துவிடக்கூடும் என்று எண்ணி, அங்ஙனம் மறவாமைக்காக, இடைவிடாதே இவர்தம்முடைய திருவுள்ளத்திலே வசிக்கத்தொடங்கினன். அதனாலே இவர், ஐயம் திரிபு மறதி இல்லாத தத்துவஞானத்தையுடையராகி, அவனுடைய திருக்கல்யாண குணங்களைத் தம்முடைய திருவுள்ளத்தோடே அநுபவித்தார்.

அங்ஙனம் அநுபவித்தவர், அவ்விஷயம் தனிஇருந்து அநுபவிக்க ஒண்ணாமையாலே, இவ்வுலகமக்களையும் கூட்டிக்கொண்டு திரள்திரள்ஆக இருந்து அநுபவிக்க விரும்பினராகையாலே, அவர்களை நோக்கி விடத்தக்கதான இவ்வுலகவாழ்வின் குற்றத்தையும் அதனை விடுதற்குரிய வழிகளையும் பற்றத்தக்க பகவானுடைய குணங்களையும் அவனை வணங்கவேண்டிய வகையினையும் வணங்குவதற்குப் பற்றுக்கோடான மந்திரத்தையும் உபதேசித்து, வணங்கத்தக்கவனான அவனுடைய எளிமை என்ன, குற்றங்களைப் பொறுக்கும் பொறுமை என்ன, தாழ்ந்தவர்களோடும் கலந்து பரிமாறும் சீல குணம் என்ன, எளிதாக ஆராதிக்கப்படும் தன்மை என்ன, அவனைப் பற்றும்பற்று இனியதாக இருக்கும் தன்மை என்ன, பலவகைப்பட்ட இவ் வுலகமக்களோடும் செவ்வியனாய்ப் பரிமாறும் ஆர்ஜவகுணம் என்ன,தன் இன்பத்தைப் பொறுக்கப் பொறுக்க அடைவே கொடுத்தருளும் தன்மை என்ன, பரமபக்திக்கும் ஒன்று இரண்டு என்பன போன்று எண்ணுகின்ற எண்களுக்கும் ஒக்க முகம் காட்டுதலாகிற ஒப்பு என்ன, ஆகிற இந்தக்குணங்களை ஒவ்வொரு திருவாய்மொழியிலும் கூறிக்கொண்டு, அவ்வழியாலே ஆராதனத்தின் எளிமை இனிமைகளையும், வணங்கவே எல்லாப்பலன்களும் கைகூடும் என்பதனையும், வணங்குதற்குத் தொடங்கியமாத்திரத்தில் வணங்குதற்குத் தடைகளாக இருக்கும் அனைத்தும் அழிந்துபோம் என்னுமதனையும் அறிவித்து,

ஆனபின்பு, ஸ்ரீகீதையில் அவன் அருளிச்செய்த பக்திநெறியிலே நின்று, மற்றைத்தேவர்கள் பரம்பொருள் என்னும் எண்ணம் இன்மையோடு அவன் விஷயமான ஞானத்தைக்கொண்டு, அவன் பக்கலிலே வேறொரு பயனையும் கருதாத பக்தியைப் பண்ணுங்கோள் என்று, அவன் தமக்கு மயர்வற மதிநலம் அருளினற்போலே, இவரும் இவர்களுக்கு அகவிருளை நீக்கி ஞானபக்திகளை உபதேசத்தாலே உண்டாக்கி வணங்கும்செயலிலே மூட்டுகிறார்.

[1]பரபரன் ஆய்நின்ற வளவேழ் வைப்பாம் அவையுள் உம்பர் வானவர் அதிபதி - முதற்பத்தில், சர்வேச்வரனுடைய பரத்துவம் - முதன்மை கூறப்படுகிறது என்பதனை இங்குத் தெரிவிக்கிருர். அதாவது, [2]"வரன் முதலாய் அவைமுழுது உண்ட பரபரன்" என்றும், [3]"ஆய் நின்ற பரன்" என்றும், [4]"வளவேழ்உலகின் முதலாய வானோர் இறை" என்றும், [5]"வைப்பாம் மருந்தாம் நலத்தால் உயர்ந்து உயர்ந்து அப்பாலவன்" என்றும், [6]"அவையுள்தனிமுதல்" என்றும், [7]"உம்பர்வானவர்ஆதி அம்சோதி" என்றும், [8]"அயர்வறும் அமரர்கள் அதிபதி" என்றும் வருகின்ற திருப்பாசுரங்களிற் சொல்லப்படுகின்றபடியே, [9]எல்லா உலகங்களையும் படைத்தல் காத்தல் அழித்தல் என்ற முத்தொழில்களையும் செய்யும் கருத்தாவாதலானும், உபய விபூதிகளையுமுடையனுதலானும், உபய விபூதிகட்கும் தலைவனுதலானும், பேறும் நெறியுமாய் இருத்தலானும், எல்லைஇல்லாத ஆனந்தத்தையுடையனுதலானும், இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்கள் எல்லாவற்றையும் சரீரமாகவுடையனுதலாலே எல்லாச்சொற்களுக்கும் பொருளாய் இருக்கும் தன்மையனுதலாலும், நித்தியசூரிகட்கு நிர்வாஹகனுதலானும், என்றும் குறைவின்றியே நிறைந்துள்ள ஞானத்தையுடைய நித்தியசூரிகள் எப்பொழுதும் அநுபவித்துக் கொண்டிருந்தாலும் எல்லைகாண ஒண்ணுத பெருமையையுடையனுதலானும் உயர்வற உயர்ந்த சர்வேச்வரன்,

மயர்வுஅறமன்னி மனம்வைக்கத் திருத்தி மறக்கும் என்று நல்கி விடாதே மன்ன - இதனுல், அத்தகைய இறைவன் ஆழ்வார்க்கு அருள்புரிந்த வகை கூறப்படுகிறது. அதாவது, மயர் வற மன்னி -

---

1. *'பரபரன் ஆய்நின்ற வளவேழ் வைப்பாம் அவையுள் உம்பர் வானவர் அதிபதி' என்பது முடிய, முதற்பத்தில் கூறப்பட்ட இறைவனுடைய திருக்குணம் இன்னது என்பதனை அருளிச்செய்கிருர். இதில் பேசப்பட்ட திருக்குணம் இறைவனுடைய பரத்துவம். அதனைக் காட்டும் திருப்பாசுரப் பகுதிகளை ஒருசேர எடுத்து அருளிச்செய்கிருர் 'பரபரன்' என்று தொடங்கி.*

2. *திருவாய்.* 1. 1: 8.
3. *திருவாய்.* 1. 1: 11.
4. *திருவாய்.* 1. 5: 1.
5. *திருவாய்.* 1. 7: 2.
6. *திருவாய்.* 1. 9: 1.
7. *திருவாய்.* 1. 10: 9.
8. *திருவாய்.* 1. 1: 1.

9. *மேலே எடுத்துக்காட்டிய திருப்பாசுரப் பகுதிகளுக்கு முறையே பொருள் அருளிச்செய்கிருர் 'எல்லா உலகங்களையும்' என்று தொடங்கி.*

[1]"மயர்வற மதி நலம் அருளினன்" என்றும், [2]"மயர் வற என் மனத்தே மன்னினுன்" என்றும் சொல்லப்படுகின்றபடியே தன்னுடைய பேரருள்மாத்திரத்தாலே [3]பொருளைப் பற்றிய அறிவு பிறவாமை, பொருளின்தன்மைபற்றிய அறிவின்மை, ஒன்றனை மற்ருென்றாக அறிகின்ற அறியாமை ஆகிற அகஇருளை இவர்க்கு அடியோடே போக்கிப் பக்தியாக வடிவு எடுத்த ஞானத்தைக் கொடுத்து, இவர் திருவுள்ளத்திலே புகுந்து, மனம் வைக்கத் திருத்தி-[4]"சார்ந்த இருவல்வினைகளும்சரித்து மாயப்பற்று அறுத்துத் தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி" என்கிறபடியே பிரிக்க ஒண்ணுதபடி இவரோடே பொருந்திக் கிடக்கிற வலியனவான நல்வினை தீவினைகளையும் புறப்பொருள்களிலே உள்ள ருசி வாசனைகளையும் போக்கி, தாழ்ந்தவர் என்று நினைத்து இவர் அகன்ற அளவிலும் தன்சீலகுணத்தைக் காட்டி இவரை மீட்டு, அல்லேன் என்று அகலாதே தனக்கே தீர்ந்து தன்பக்கலிலே மனத்தை வைக்கும்படி, தரிசுகிடந்த நிலத்தைச் செய்காலாகத் திருத்துவாரைப்போலே திருத்தி, மறக்கும் என்று நல்கி விடாதே மன்ன - [5]"மறக்கும் என்று செந்தாமரைக் கண்ணொடும்" என்றும், [6]"நல்கி என்னை விடான் நம்பி நம்பியே" என்றும், [7]"மறப்பற என்னுள்ளே மன்னினுன்" என்றும் வருகின்ற திருப்பாசுரங்களின்படியே, இன்னமும் இவர் நம்மை மறக்கக்கூடும் என்று எண்ணி, எல்லை இல்லாத சிநேகத்தைச்செய்து, இவரை விடாதே, அழகிய திருக்கண்களாலே குளிர நோக்கிக்கொண்டு ஒருநாளும் மறக்க ஒண்ணுதபடி இவர் திருவுள்ளத்திலே நிலையியற்பொருளைப்போன்று இருக்க,

அயர்ப்பிலன் அறுத்தேன் என்சொல்லி மறப்பனே என்னும்படி தத்துவஜ்ஞரானவர் - இறைவன் திருவருள்புரிந்தபின்னர் ஆழ்வார்க்கு உண்டான நிலை சொல்லப்படுகிறது இதனுல். அதாவது,

---

1. *திருவாய்.* 1. 1: 1.   2. *திருவாய்.* 1. 7: 4.

3. *பொருளைப் பற்றிய அறிவு பிறவாமையாவது, தேகமே ஆன்மா என்றிருத்தல். பொருளின் தன்மைபற்றிய அறிவின்மையாவது, இவ்வான்மாவை மற்றைத் தெய்வங்கட்கும் அடிமை என்றிருத்தல். ஒன்றனை மற்ருென்றாக அறிகின்ற அறியாமையாவது, ஸ்வதந்திரமாகவும் போக்கியமாகவும் நினைத்திருக்கும் கேவலனுடைய அறிவு.*

4. *திருவாய்.* 1. 5: 10.   5. *திருவாய்.* 1. 10: 10.

6. *திருவாய்.* 1. 10: 8.   7. *திருவாய்.* 1. 10: 10.

அயர்ப்பிலன் - [1] "பெருநிலம்கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலன்" என்றும், அறுத்தேன் - [2] "தூய அமுதைப் பருகிப் பருகி என், மாயப் பிறவி மயர்வு அறுத்தேன்" என்றும், என்சொல்லிமறப்பனோ - [3] "எம்பிரானை என்சொல்லி மறப்பனோ" என்றும் வருகின்ற திருப்பாசுரங்களின்படியே, நல்லோர் தீயோர் என்று நினையாதே பூமிப்பரப்பை அளந்த மிகஇனியனவான திருவடிகளை ஒருகாலும் மறவேன், எல்லை இல்லாத இனியன் ஆனவனை எப்பொழுதும் அநுபவித்து ஆச்சர்யமான பிறவி காரணமாக வரும் அகஇருள் போகப் பெற்றேன், எனக்கு உபகாரகனானவனை எதனைச்சொல்லிமறப்பது என்னும்படி ஐயம் திரிபு மறதி கலவாத தத்துவஞானத்தையுடையவரான ஆழ்வார்,

சுடர்அடி எம்பிரானை விடாது கண்டாய் நீயும் நானும் என்கிற [4] ஸஹ்ருதய அநுபவம் சம்சாரிகளுக்கும் ஆம்படி - அத்தகைய ஆழ்வார் தம் திருவுள்ளத்தோடு அநுபவித்த அநுபவம், இவ்உலகமக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று நினைத்தார் என்பது கூறப்படுகிறது இதனால். அதாவது, சுடரடி - [5] "சுடர்அடி தொழுதுஎழு என் மனனே" என்றும், எம்பிரானை - [6] "எம்பிரானைத் தொழாய் மடநெஞ்சமே" என்றும், விடாது - [7] "நெஞ்சமே! நல்லைநல்லை - மலராள்மணவாளனைத் துஞ்சும்போதும் விடாது தொடர்கண்டாய்" என்றும், கண்டாய் - [8] "கண்டாயே நெஞ்சே! கருமங்கள் வாய்க்கின்று" என்றும், நீயும் நானும் - [9] "நீயும் நானும் இந்நேர்நிற்கில் மற்றோர், நோயும் சார் கொடான் நெஞ்சமே சொன்னேன்" என்றும் வருகின்ற திருப்பாசுரங்களின்படியே எல்லை இல்லாத ஒளிஉருவமான அவன் திருவடிகளிலே என்றும் கைங்கரியத்தைச் செய்து உய்வுபெறப் பாராய் என் நெஞ்சே! எனக்கு அடங்கிய மனமே! நமக்கு உபகாரகனானவனைத் தொழப்பாராய்; நெஞ்சே! நீ செய்தபடி மிகநன்று, நான் நீசனேன் என்று சொல்லி அகலும்போதும் திருமகள் கேள்வனை விடாதே காண்; நெஞ்சே! ஒரு காரணமும் இன்றியே

---

1. திருவாய். 1. 3: 10.
2. திருவாய். 1. 7: 3.
3. திருவாய். 1. 10: 9.
4. ஸஹ்ருதயம் - மனத்தோடு கூடியது.
5. திருவாய். 1. 1: 1.
6. திருவாய். 1. 10: 3.
7. திருவாய். 1. 10: 4.
8. திருவாய். 1. 10. 5.
9. திருவாய். 1. 10: 6.

இயல்பாகவே செய்யும் அவனுடைய அங்கீகாரம் இருந்தபடி கண்டாயே; தொழச்சொல்லலாம்படி இருக்கிற நீயும் தொழச்சொல்லுகிற நானும் "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று நினைத்து அகலாமல் இப்படியே நிற்கப்பெறில், பல காலமாக ஈட்டப்பெற்ற நல்வினை தீவினைகள், இவ்வுலகவாழ்வில் ஈடுபாடு, வேறுபயன்களில் முயற்சி, வேறு உபாயங்களில் பற்று முதலான குற்றங்கள் ஒன்றனையும் சேரவிட்டுக்கொடான்; நெஞ்சே! உனக்கு மிக மேலான இந்த அர்த்த விசேடத்தைச் சொன்னேன் என்று இப்படித் திருவுள்ளத்தைக் குறித்து உபதேசித்து, திருவுள்ளமும் தாமும் கூடி அநுபவித்த பகவானுடைய அநுபவம் தனியே அநுபவிக்க ஒண்ணாமையாலும் [1] "இனியபொருளை ஒருவன் தனியே இருந்து உண்ணலாகாது" என்கிறபடியே தனியே அநுபவிக்கவல்லர் அல்லாமையாலும் அவனோடு உள்ள தொடர்பு அனைவருக்கும் பொதுவாகையாலும் பிறருடைய கேட்டினைக் காணப்பொறாத பேரருளாலும் இவ்அநுபவம் இவ்உலக மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று எண்ணினர்.

[2] வீடுமின் என்று தியாஜ்ய உபாதேய தோஷ குண பரித்யாக ஸமர்ப்பணக்கிரமத்தை ஸாலம்பந மந்த்ரமாக உபதேசித்து - அங்ஙனம் எண்ணின ஆழ்வார், உலகமக்களுக்கு உபதேசித்த முறையை விரிவாக அருளிச்செய்கிறார் 'வீடுமின்' என்று தொடங்கி, அதாவது, வீடுமின் என்று தியாஜ்யத்தையும் - [3] "வீடுமின்முற்றவும்" என்ற திருவாய்மொழியாலே "வீடுமின்முற்றவும்" என்று விடத்தக்கனவற்றின் தன்மையையும், தோஷம் - "மின்னின்நிலையில மன்னுயிர் ஆக்கைகள்" என்று அவற்றினுடைய சிறுமை நிலையின்மை முதலிய குற்றங்களையும், பரித்யாகம் - "நீர் நுமது என்றிவை வேர்முதல் மாய்த்து" என்று அவற்றை விடுகின்ற முறையினை

---

1. "ஏக:ஸ்வாது ந புஞ்ஜீத"
என்பது, பிரமாணம்.

2. 'வீடுமின்' என்று தொடங்கும் வாக்கியத்தை, வீடுமின் என்று தியாஜ்யத்தையும் அவற்றின் தோஷத்தையும் அவற்றின் பரித்யாகத்தையும் உபதேசித்து என்றும், 'வீடுடையான்' என்று உபாதேயத்தையும் அதன் குணத்தையும் அதனிடத்தில் சமர்ப்பணக்கிரமத்தையும் ஸாலம்பந மந்த்ரமாக உபதேசித்து என்றும் பிரித்துக்கூட்டுக. 'வீடுமின்' என்றது "வீடுமின் முற்றவும்" என்ற திருப்பதிகத்திலே என்றபடி. தியாஜ்யம் - விடத்தக்கவை. உபாதேயம் - பற்றத்தக்கது. சாலம்பநம் - பற்றுக்கோடு.

3. திருவாய். 1. 2: 1.

யும், உபாதேயம் - "வீடுடையானிடை" என்று பற்றத்தக்க பகவானுடைய சொரூபத்தையும், குணம் - "எல்லையில் அந்நலம்" என்று அந்தப் பகவானுடைய குணத்தையும், சமர்ப்பணகிரமம் - "வீடு செய்ம்மின்" என்றும், "இறைசேர்மின்" என்றும், "இறை பற்று" என்றும், "திண் கழல் சேர்" என்றும் அந்தப் பகவானிடத்தில் ஆன்மாவைச் சேர்க்கும் முறையினையும், சாலம்பந மந்திரமாக - "வண்புகழ்நாரணன்" என்று சேர்க்கும்தன்மைவடிவான வணக்கத்துக்குப் பற்றுக்கோடான திருமந்திரத்தோடே, உபதேசித்து - உபதேசித்து,

இனி, "பத்துடைஅடியவர்" என்னும் திருப்பதிகம்முதல் மேலே உள்ள எட்டுத் திருப்பதிகங்களிலும் சொல்லப்பட்ட பொருள்களைச் சுருக்கி அருளிச்செய்கிறார் 'எளிதாக அவதரித்து' என்றுதொடங்கி.

எளிதாக அவதரித்து - வந்து அடையும் அடியார்கள், "கண்களால் காணமுடியாதவன்" என்று இருயாதபடி [1] "பலபிறப்பாய் எளிவரும் இயல்வினன்" என்கிறபடியே இராமன், கிருஷ்ணன் முதலிய அவதாரமுகத்தாலே அவர்களுக்கு எளியனாய், (இது மூன்றும் திருப்பதிகம்.) பிழைகளைசசகித்து - பற்றுகின்ற காலத்தில் எளியனாய்க் குற்றம் கண்டவாறே கைவிடாமல் [2] "என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்றுகூறும்படி குற்றங்களைப்பொறுக்குமவனாய், (இது நான்காம் திருப்பதிகம்.) புரைஅறக்கலந்து - குற்றம் கண்டு தான் இகழாத அளவன்றிக்கே, "நீசனேன் நிறைவொன்றும் இலேன்" எனறு தங்கள் தாழ்வினை நினைத்துத் தாங்களே அகலுவாரையும் [3] "திசைகள் எல்லாம் திருவடியால் தாயோன் தான் ஓர் உருவனே" என்கிறபடியே தன் குணத்தைக் காட்டி அணுகச்செய்து அவர்களோடே புரை அறக்கலக்கும் சீலவானாய், (இது ஐந்தாம் திருப்பதிகம்.)

அல்பசந்துஷ்டனாய் - அடியார்களோடு ஒருநீராகக் கலக்குமேயானாலும், அவன் உகக்கும்படி பச்சை இடப்போகாமையாலே அவனை அடைதல் அரிது என்னாதபடி, இவன் இட்டது கொண்டு மனம் நிறைவுபெற்றவனாகாதபடி, எல்லாம் நிறைந்தவனாகையாலே

---

1. திருவாய். 1. 3: 2. இதனால் சௌலப்யகுணம் தெரிவித்தபடி.
2. திருவாய். 1. 4: 7. இதனால் பொறைபுடைமை தெரிவித்தபடி.
3. திருவாய். 1. 5: 3. இதனால் சீலகுணம் தெரிவித்தபடி.

[1] "புரிவதுவும் புகை பூவே" என்கிறபடியே இவன்பக்கல் பெற்றது கொண்டு மகிழ்கின்ற எளியமுறையில் ஆராதிக்கப்படுகின்றவனாய், (இது ஆறாம் திருப்பதிகம்.) அம்ருதமே ஔஷதமாக்கி - அருமை இல்லையாகிலும் உள்ளது தேவையாக இருக்குமோ என்னுதபடி, அமுதையே ஔடதம் ஆக்குமாறு போலே, [2] "தூய அமுதைப்பருகிப்பருகி என், மாயப்பிறவி மயர்வறுத்தேனே" என்கிறபடியே எல்லை இல்லாத இனியனான தன்னைப் பற்றும் பற்றாகையாலே, மிகவும் இனியனாயிருக்கிற தன்னையே பிறப்பாகிய நோய்க்கு மருந்தாக்கி, (இது ஏழாந்திருப்பதிகம்.)

நீர்புரையத் தன்னை நியமித்து - இனியனாயிருக்குமாகிலும், அவன் நினைவறிந்து செயல் புரிதல் அரிது என்னுதபடி, இவர்களைத் தன் நினைவிலே செயல் புரிவித்துக்கொள்ளப் பாராமல், [3] "நீர்புரை வண்ணன்" என்கிறபடியே மேட்டிலே நீரை விரகாலே ஏற்றுமாறுபோலே இவர்கள் செவ்வைக்கேடும் செவ்வையாம்படி தன்னைச் செவ்வியனாக நியமித்து, (இது எட்டாந் திருப்பதிகம்.) போகத்தைச் சாத்மிப்பித்து - இப்படியானாலும் குளப்படியிலே கடலை மடுத்தாற்போலே பொறுக்க ஒண்ணாதவாறு செயல்புரியுமோ என்னுதபடி, [4] "என்னுடைச் சூழலுளான்" என்று தொடங்கி [5] "உச்சியுளானே" என்னும்படி பொறுக்கப் பொறுக்கத் தன்னை அனுபவிப்பித்து, (இது ஒன்பதாம் திருப்பதிகம்.) பக்தி கணனைகளுக்கு ஒக்க வருமவனுடைய - இப்படி அனுபவிக்கைக்குத் தகுதியாக முகம் காட்டுமளவில் இவனுடைய பக்திக்குத் தகுதியாகவோ செய்வது என்னுதபடி [6] "கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில், எண்ணிலும் வரும்" என்கிறபடியே பரமபக்திக்கும் பரிகணனைக்கும் ஒக்கவந்து முகம் காட்டுமவனுடைய. [7] பரிகணனைக்கு முகம் காட்டுதலாவது, ஒன்று இரண்டு என்று தொடங்கி எண்ணிக்கொண்டே சென்று இருபத்தைந்து இருபத்

---

1. *திருவாய்.* 1. 6: 1. 2. *திருவாய்.* 1. 7: 3.
3. *திருவாய்.* 1. 8: 11. *இதனால் ஆர்ஜவகுணம் தெரிவித்தபடி.*
4. *திருவாய்.* 1. 9: 1. 5. *திருவாய்.* 1. 9: 10.
6. *திருவாய்.* 1. 10: 2.

7. *"பொய்கைம் புலனும்"* (*திருவாய்.* 10. 7: 10.) *என்ற திருப்பாசுரப்படியே இருபத்துநான்கு தத்துவங்களுக்கு மேல் இருபத்தைந்தாவது தத்துவம் சீவாத்மா; இருபத்தாறாவது தத்துவம் பரமாத்மா என்பது நூற்கொள்கையாதலால், ஒருவன் இதனை அறியாமல் யாதோ ஒரு காரியப்பாடாக ஒன்று முதலாக எண்ணிக்கொடு போந்து, இருபத்தாறு அளவிலே வந்தால் அந்த எண் தன்னைக் குறித்ததாகக்கொண்டு இறைவன் வந்து தோன்றுவன் என்பதனை இங்குத் தெரிவித்தபடி. பரிகணனை - எண்ணுதல்.*

தாறு என்று எண்ணும்போது, இருபத்தாருவது தத்துவமான தன்னைக் குறித்ததாகக் கொண்டு 'இருபத்தாறு' நானே என்று வந்து முகம் காட்டுவன் என்பதாம். (இது பத்தாம் திருப்பதிகம்.)

சேவைக்கு - ஆக, இப்படித் திருவாய்மொழிதோறும் வெளியிடப்பட்ட தன்மைகளையுடைய எம்பெருமானை வணங்கும் வணக்கத்துக்கு, எளிமையும் இனிமையும் உண்டு - எளிதாய் இனிமையற்றிருத்தல், இனியதாய் அருமையாயிருத்தல் அன்றிக்கே, மேலேகூறிய குணவிசேடங்களையுடையவனை வணங்கும் வணக்கமாகையாலே எளியதுமாய் இனியதுமாய் இருக்கும்; [1] "பத்துடை அடியவர்க்கு எளியவன்" என்றும், [2] "அமுதிலும் ஆற்ற இனியன்" என்றும் சொல்லப்படுகின்ற அவன்தன்னைப்போலே ஆயிற்று அவனை வணங்கும் வணக்கமும். இத்தகைய வணக்கத்தால் கிடைக்கும் பலம் இருக்கும்படி என்? என்னில், தொழுதால் அரும் பயனாய தரும் - [3] "அவனைத் தொழுதால் வழிநின்ற வல்வினைமாள்வித்து, அழிவின்றி ஆக்கம் தரும்" என்றும், [4] "தருமவரும்பயனாய" என்றும் சொல்லப்படுகின்றவாறே அவனை வணங்கினால் பேற்றிற்குத் தடைகளாக உள்ளனவற்றையும் அடியோடு போக்கி, அழிவில்லாத பெறுதற்கு அரிய பயன்களையும் தரும். நன்று; வணங்கினால் அன்றோ தருவது! வணங்குதற்குத் தடைகளும் பலப்பல உண்டே? எனின், உத்யோகத்தே வினைகளும் மாளும் - [5] "நாளும் நின்று அடும் நம பழமை அம் கொடுவினை உடனே மாளும்" என்கிறபடியே நாள்தோறும் நின்று இவ் ஆன்மாவினை முடிக்கிற அநாதியாய் மிகக் கொடியனவான தீவினைகள் வணங்கத் தொடங்கின அளவிலே அழியும்.

நன்று; வணங்கும் வழி யாது? எனின், [6] அவன் உரைத்த மார்க்கத்தே நின்று - [7] "பிணக்கற அறுவகைச் சமயமும்" என்று தொடங்கி "அம்பகவன் வணக்குடைத் தவ நெறி வழி நின்று" என்கிறபடியே வைதிக சமயத்துக்கும் வேதத்திற்குப் புறம்பான ஆறு சமயங்களுக்கும் தன்னில்தான் உண்டான பிணக்கு அறும்படி வேத நெறியை உள்ளவாறே நிரூபணம் பண்ணி அருளிச்செய்த எல்லைஇல்லாத வாத்சல்ய குணத்தையுடையனாய், ஞானம் முதலான ஆறு குணங்களும் நிறைந்தவனான கிருஷ்ணன் திருத்தேர்த்தட்டிலே அருச்சுனன்

---

1. *திருவாய்.* 1. 3: 1.
2. *திருவாய்.* 1. 6: 6.
3. *திருவாய்.* 1. 6: 8.
4. *திருவாய்.* 1. 6: 9.
5. *திருவாய்.* 1. 3: 8.
6. *'அவன் உரைத்த பக்திமார்க்கத்தே நின்று' என்றும் பாடபேதமுண்டு.*
7. *திருவாய்.* 1. 3: 5.

காரணமாக ஸ்ரீகீதை மூலமாக [1] "என்னிடத்திலேயே வைக்கப் பட்ட பக்தியினாலேயே உண்மையாக அறிதற்கும் பார்ப்பதற்கும் என்னை அடைவதற்கும் தகுந்தவனாக இருக்கிறேன்" என்றும், [2] "என்னிடத்தில் மனத்தை வைத்தவனாயும் என்னிடத்தில் பக்தியை யுடையவனாயும் என்னையே ஆராதிக்கிறவனாயும் ஆகக்கடவாய்; என்னை நமஸ்காரம் செய், என்னைச் சரணமடைந்தவனாய், இவ்வித மான மனத்தை அடைந்தால் என்னையே அடைவாய்" என்றும் அருளிச்செய்த நெறியிலே நின்று,

இருபசைமலம்அற - [3] "நும் இருபசை அறுத்து" என்றும், [4] "மனனக மலமறக் கழுவி" என்றும் சொல்லுகின்றவாறே மற்றைத் தேவர்கள்பக்கல் உங்களுக்கு உண்டான பற்றினை அறுத்து, 'பற்றத் தக்கவர்கள் இவனோ அவர்களோ' என்கிற ஐயத்தையும் மனத்தி னின்றும் வாசனையோடு போக்கி, உணர்வு கொண்டு - [5] "அவ னுடை உணர்வுகொண்டு உணர்ந்து" என்கிறபடியே அவன் விஷயமான ஞானத்தைக்கொண்டு, நலம் செய்வதுஎன்று - [6] "நன்று என நலம் செய்வது அவனிடை" என்கிறபடியே வேறொரு பயனைக் கருதாத பக்தியைச் செய்யுங்கோள் என்று, தாம் மயர்வற மதிநலம் அருளி பஜனத்திலே சேர்க்கிறார் முதற்பத்தில் - அதாவது, சர்வேச் வரன் தமக்கு மயர்வறமதிநலம் அருளினாற்போலே, இவ்வுலக மக் களுக்குத் தம்முடைய பேரருளாலே [7] தத்துவம் ஹிதம் புருஷார்த்தம் என்னும் இவ்விஷயத்தில் உண்டான அறியாமையைப்போக்கி ஞான பக்திகளை உபதேசித்துப் பகவானை வணங்கும் வணக்கத்திலே மூட்டு கிறார் முதற்பத்தால் என்கை, (1)

---

1. பக்த்யாத்வநந்யயா ஶக்ய: அஹமேவம்விதோர்ஜுன
ஜ்ஞாதும்த்ருஷ்டும்ச தத்வேந ப்ரவேஷ்டும்ச பரம்தப.
என்பது, ஸ்ரீகீதை, 11: 54.

2. மந்மநாபவ மத்பக்த: மத்யாஜீமாம்நமஸ்குரு
மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:
என்பது, ஸ்ரீகீதை, 9: 34.

3. திருவாய். 1. 3. 7.
4. திருவாய். 1. 3: 8.
5. திருவாய். 1. 3: 5.
6. திருவாய். 1. 3: 7.

7. தத்வம் - இறைவனுடைய உண்மை நிலை. ஹிதம் - உய்யும் உபா யம். புருஷார்த்தம் - உயிர்கள் அடையும் பேறு.

220

சோராத மூவா வேர்முதலாய் உலகம்படைத்தவன் என்கிற சித்அசித் த்ரய த்ரிவித காரணமானவன், அறியாதன அறிவிக்க, உள்ளம்தேறி, தூமனம் மருளில் என்னும் ஞானபலமான ஒளிக்கொண்ட மோக்ஷம் தேடி வாட, உலராமல் ஆவிசேர்ந்து சிக்கெனப் புகுந்து, சம்பந்திகளும் சேர்தல் மாறினர் என்ன வாழ்வித்து, உபகரிக்கிற நீந்தும் கெடலில் எம் மா வீட்டை உபய அநுகுணமாக்கினவர், ஆச்ரயணீயனுக்குப் பூர்வ(ம்)உக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிற சகலபல பிரதத்வ காரணத்வ சேஷசாயித்வ ஸ்ரிய:பதித்வ சௌலப்யாதிகளைத் 'திண்ணன், அணைவது' என்று வெளியிட்டு, 'கள்வா, தீர்த்தன்' என்று வசந பிரத்யக்ஷங்களும் காட்டி, 'புலன் ஐந்து' என்று சம்ஸார மோக்ஷ சாதநதுக்கு ஆநந்தரசம் முன்னுக விதிக்கிற அந்தர்கதகுண உபாசநத்தை, மதித்துப் பெருக்கி மூழ்கி அழுந்திக் கீழ்மை வலம் சூதும் செய்து இளமை கெடாமல் செய்யும் க்ஷேத்ரவாச சங்கீர்த்தந அஞ்சலி பிரதக்ஷிண கதி சிந்தநாதி அங்க யுக்தமாக்குகிறுர் இரண்டாம்பத்தில்.

என்பது, சூத்திரம்.

வியாக் :-இரண்டாம் பத்தால், எல்லாப் பொருள்கட்கும் காரணனை சர்வேச்வரன் மேல் சென்ற பத்திலே இவர்க்கு அறியாதனவற்றை அறிவித்தருள, அவனாலே கொடுக்கப்பட்ட ஞானத்தை அடைந்த இவ் ஆழ்வார், அந்த ஞானத்திற்குப் பலமான மோக்ஷத்தை அப்போதே பெறவேண்டும் என்று ஆசைப்பட்டுப் பெருமையாலே துக்கத்தை அடைந்தவரானுர். இவருடைய அந்தத் துக்கமெல்லாம் தீரும்படி அவன் வந்து இவரோடு கலந்து அதனுல் பிரீதன் ஆனுன். அந்தப் பிரீதி இவர் ஒருவர் அளவில் நில்லாமல் இவரோடு முறை முறை தொடர்ந்து வருகின்ற சம்பந்தமுடையாரளவும் வெள்ளமிட்டது. அந்தப் பிரீதியாலே தன்னின் மிக்கதின்றி உயர்ந்த பேருன மோக்ஷத்தை இவர்க்கு அவன் கொடுக்கப்புகுந்தான். ஆழ்வார் அந்த மோக்ஷத்தை அவனுடைய சேஷியாம் தன்மைக்கும் தம்முடைய சேஷமாம் தன்மைக்கும் தகுதியாம்படி அறுதியிட்டார். அதன் பின்னர் எல்லாராலும் பணியத் தக்கவனை அவ்விறைவனுக்கு மேல்பத்தில் கூறிய பரத்துவத்தை நிலைபெறுத்துவனவான அறிகுறியாம் தன்மைகளை வெளியிட்டு, அவற்றிற்குப் பொருத்தமான வசனத்தையும்

காட்சியையும் காட்டி, பற்றுகின்ற அடியார்கட்கு ருசி பிறப்பதற்காக விடத்தக்கதான இவ் உலகவாழ்வின் துக்கமும், அடையத்தக்கதான மோக்ஷத்தினுடைய ஆநந்தமும், இவ் உலகவாழ்வினை நீக்குதல் முன்னாக மோக்ஷத்தினை அடைதற்கு உறுப்பான உபாயத்தினுடைய சுவையையும் முன்னிட்டுக்கொண்டு, குணங்களோடு கூடிய பிரஹ்மத்தை வழிபடும் வழிபாட்டினை விதித்து, அதற்கு உறுப்பாகத் தீய ஒழுக்கங்களை நீக்குதலோடு திவ்விய தேசவாசம் முதலானவற்றையும் செய்தல் வேண்டும் என்று அருளிச்செய்கிறார் என்கிறார்.

[1]சோராத மூவா வேர் முதலாய் உலகம் படைத்தவன் என்கிற - [2]"சோராத எப்பொருட்கும் ஆதியாம் சோதி" என்றும், [3]"மூவாத் தனிமுதலாய்" என்றும், [4]"எப்பொருட்கும் வேர்முதலாய் வித்தாய்" என்றும், [5]"பொருள் என்று இவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல்" என்றும் வருகின்ற திருப்பாசுரங்களில் சொல்லப்படுகின்ற, [6]சித்து அசித்து திரய திரிவித காரணமானவன்-சித்துத் திரயதிரிவிதகாரணமானவன் - பத்தர் முத்தர் நித்தியர் என்னும் மூவகையான சேதநர்கட்கும் மூன்று வகைப்பட்ட காரணமும் தானேயானவன்; அசித்துத் திரய திரிவித காரணமானவன் - பிராகிருதம் அப்ராகிருதம் காலம் என்னும் மூவகையான அசேதனங்கட்கும் மூன்றுவகைப்பட்ட காரணமும் தானேயான சர்வேச்வரன். மூவகைப்பட்ட காரணங்களாவன : முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என்பன. லீலா விபூதியில் (இவ்வுலகம்) சூக்கும சித்து அசித்துக்களோடு கூடியிருக்கும் தன்மையாலே முதற் காரணமாயும், ஞானம் சக்தி முதலிய குணங்களோடு கூடியிருக்கும் தன்மையாலே துணைக்காரணமாயும், சங்கல்பத்தோடு கூடியிருக்கும் தன்மையாலே நிமித்த காரணமாயும்; நித்திய விபூதியில் (பரமபதத்தில்) அப்ராகிருத சேதன அசேதனங்

1. *இச்சூத்திரத்தையும் மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கோடல் வேண்டும். இப்பத்தில் ஆழ்வார் அருளிச்செய்த முக்கியமான குணம், காரணனாக இருக்கும் தன்மை. அதாவது, இறைவனுடைய காரணத்வம். அதற்குரிய திருப்பாசுரப் பகுதிகளை அருளிச்செய்கிறார் 'சோராத' என்று தொடங்கி.*

2. *திருவாய்.* 2. 1: 11. 3. *திருவாய்.* 2. 8: 5.

4. *திருவாய்.* 2. 8: 10. 5. *திருவாய்.* 2. 10: 11.

6. *இவ்வாக்கியத்தை, சித்துத் திரய திரிவிதகாரணமானவன், அசித்துத் திரய திரிவிதகாரணமானவன் என்று பிரித்துக் கூட்டுக. சித்துத்திரயம் - நித்தியர் முத்தர் பத்தர் என்னும் மூன்று வகைப்பட்ட உயிர்கள். திரயம் - மூன்று. அசித்துத்திரயம் - பிராகிருதம் அப்ராகிருதம் காலம் என்னும் மூன்று வகைப்பட்ட அறிவில் பொருள்கள். திரிவிதகாரணம் - முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என்பன.*

களோடு கூடியிருக்கும் தன்மையாலே முதற்காரணமாயும், விநியோகம் கொள்ளுகைக்குத் தகுதியான ஞானம் சக்தி முதலிய குணங்களோடு கூடியிருக்கும் தன்மையாலே துணைக்காரணமாயும், இச்சையோடு கூடியிருக்கும் தன்மையாலே நிமித்தகாரணமாயும் இருக்கிறன் எம்பெருமான் என்க. ஆக, பத்த முக்த நித்யர்களான மூவகை ஆன்மாக்களும், பிராகிருதம் அப்ராகிருதம் காலம் என்கிற மூவகை அறிவில்பொருள்களும் ஆன உபய விபூதிகட்கும் மூன்று வகையான காரணங்களும் தானேயாய் இருக்கின்ற சர்வேச்வரன் என்றபடி.

[1] அறியாதன அறிவிக்க - [2] "அறியாதன அறிவித்த அத்தா" என்கிறபடியே இவர் அறியாதனவான தத்துவ ஹித புருஷார்த்தங்களை மிகத் தெளிவாக இவர்க்கு அறிவிக்க, [3] உள்ளம் தேறி - [4] "அடியை அடைந்து உள்ளம் தேறி" என்கிறபடியே அதனாலே இவரும் அவனைக் கிட்டி நெஞ்சில் தெளிவையுடையவராய்,

[5] தூமனம் மருளில் என்னும் ஞானபலமான ஒளிக்கொண்ட மோக்ஷம் தேடி வாட - தூமனம் மருளில் - [6] "தூமனத்தனனாய்" என்றும், [7] "மருளில் வண்குருகூர் வண் சடகோபன்" என்றும் சொல்லுகிறபடியே மோக்ஷம் ஒன்றனுக்கே காரணமாக இருக்கும் தன்மையாலே தூய்மைபொருந்திய மனத்தினையுடையராய் அவனுடைய கல்யாண குணவிஷயமான அறியாமை சிறிதும் இல்லாதபடி, ஞானபலமான ஒளிக்கொண்ட மோக்ஷம் தேடி வாட - மேல் பத்தில் பிறந்த தம்முடைய ஞானத்துக்குப் பலம் மோக்ஷமாகையாலே, [8] "களிப்பும் கவர்வும் அற்றுப் பிறப்புப் பிணி மூப்பு இறப்பு அற்று, ஒளிக்கொண்ட சோதியமாய் - அடியார்கள் குழாங்களை உடன்கூடுவது என்று கொலோ" என்கிறபடியே இவ்வுலக விஷய

---

1. *இத்தகைய இறைவன் ஆழ்வார்க்குச் செய்த உதவியை அருளிச் செய்கிறார் 'அறியாதன அறிவிக்க' என்று.*

2. *திருவாய்.* 2. 3: 2.

3. *அங்ஙனம் அறிவித்ததனால் ஆழ்வார் அடைந்த பயனைத் தெரிவிக்கிறார் 'உள்ளம்தேறி' என்று.*

4. *திருவாய்.* 2. 6: 8:

5. *உள்ளம் தேறியபின் ஆழ்வார் அடைந்த நிலையைத் தெரிவிக்கிறார் 'தூமனம்' என்று தொடங்கி.*

6. *திருவாய்.* 2. 7: 8. 7. *திருவாய்* 2. 10: 11.

8. *திருவாய்.* 2. 3: 10.

லாபாலாபங்களால் வரும் செருக்கும் கிலேசமும் [1] அறுவகைப்பட்ட விகாரங்களும் போய், சுத்த சத்வமுள்ளதாகையாலே எல்லையில் ஒளி வடிவமான விக்கிரஹத்தையுடையோமாய், நித்தியசூரிகள் திரளிலே கூடப்பெறுவது எப்போதோ என்று, அந்த மோக்ஷத்தைப் பெறுகை யில் ஆசையாலே தேடி, அப்போதே கிடையாமையாலே [2] "வாடி வாடும்" என்கிறபடியே கொடியை இழந்த தளிர்போலே வாட,

[3] உலராமல் ஆவி சேர்ந்து - [4] "உள்ளுள் ஆவி உலர்ந்து உலர்ந்து" என்கிற தாபம் ஆறும்படி [5] "அந்தாமத்து அன்புசெய்து என் ஆவி சேர் அம்மானுக்கு" என்கிறபடியே பரமபதத்தில் செய்யும் அன்பினை இவர் பக்கலிலே செய்து, கமர்பிளந்த தரையிலே நீர்பாய்ச்சு வாரைப்போலே இவரோடே எல்லை இல்லாத கலவியைச்செய்து, சிக் கெனப்புகுந்து - [6] "சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே உலகு கள் ஒக்கவே விழுங்கி-சிக்கெனப் புகுந்தான்" என்கிறபடியே மிகச் சிறியதொரு பொருளும் தன்பக்கல் நின்றும் பிறிகதிர்ப்பட்டு நோவு படாதபடி தன் நினைவின் ஆயிரத்தில் ஒரு கூற்றிலே உலகங்கள் அனைத்தையும் ஒருக்காலே வைத்து, இனிப் பேராதபடி இவர் மனத் திலே புகுந்து,

சம்பந்திகளும் சேர்தல் மாறினர் என்ன வாழ்வித்து - [7] "எமர் கீழ் மேல் எழுபிறப்பும், விடியா வெந்நரகத்து என்றும் சேர்தல் மாறி னர்" என்கிறபடியே இவருடைய சம்பந்த சம்பந்திகளையும் இவ்வுல கத்திலிருந்து முக்தராம்படி செய்து, அதனாலே [8] "எமர் ஏழெழு பிறப்பும் கேசவன் தமர் மாசதிர் இதுபெற்று நம்முடை வாழ்வு வாய்க் கின்றவா" என்கிறபடியே என்னோடு பரம்பரையாகச் சம்பந்த முடையாரும் என்னுடைய சம்பந்தமே காரணமாகப் பகவானுக்கு

---

1. *அறுவகைப்பட்ட விகாரங்கள்: உண்டாதல், பிறத்தல், வளர்தல், பெருத்தல், குறைதல், நசித்தல் என்பன.*

2. *திருவாய்.* 2. 4: 1.

3. *அங்ஙனம் வாடிய வாட்டத்தைத் தீர்த்து, ஆழ்வார் விரும்பிய மோக்ஷத்தை இறைவன் கொடுக்கப்புகுந்தபடியை அருளிச்செய்கிறார் 'உலராமல்' என்று தொடங்கி.*

4. *திருவாய்.* 2. 4: 7.

5. *திருவாய்.* 2. 5: 1.

6. *திருவாய்.* 2. 6: 2.

7. *திருவாய்.* 2. 6: 7.

8. *திருவாய்.* 2. 7: 1.

அடியாரானார்கள்; ஒரு காரணமும் இன்றியே செய்கின்ற பகவானுடைய கிருபையாகிற பெரும்சதிரைப் பெற்று ஸ்ரீவைஷ்ணவச் செல்வமானது ஊற்றுமாறாமல் பெருகுகிறபடியே! என்று இவர் தாமே ஆச்சர்யப்படும்படி இவரை வாழ்வித்து, [1] உபகரிக்கிற - இப்படித் தம்முடைய சம்பந்தி பரம்பரை அளவும் வெள்ளம் இடுகிற அவனுடைய பிரீதியாலே தமக்கு அவன் கொடுக்கத் தேடுகிற, நீந்தும் கெடலில் எம் மா வீட்டை - நீந்தும் - "நீந்தும் துயரில்லா வீடு" என்கிறபடியே துக்கம் என்பது சிறிதும் இல்லாததாய், கெடலில் - "கெடலில் வீடு" என்கிறபடியே அழிவு என்பது சிறிதும் இல்லாததாய், எம்மாவீட்டை-"எம் மா வீடு" என்கிறபடியே எல்லா வகையாலும் உயர்ந்ததான மோக்ஷத்தை,

[2] உபய அநுகுணம் ஆக்கினவர் - எனக்கு என்று தரில், அங்ஙனம் தருகின்ற மோக்ஷம் அகங்காரத்தை உட்கொண்டதாகையாலே செல்வம் முதலியவற்றைப்போன்று சொரூபத்திற்கு விரோதம் ஆகையாலே அதனுடைய பேச்சும் என்னால் பொறுக்கமுடியாதது; ஆனபின்பு, எனக்கு மோக்ஷம் தரப் பார்த்ததாகில் [3] "நின்செம்மா பாதபற்புத் தலைசேர்த்து ஒல்லை, அம்மா அடியேன் வேண்டுவ தீதே" என்கிறபடியே சேஷியான உன்னுடைய, உட்புறம் சிவந்து மேற்புறம் கரியனவாய் மேலாக பூசிக்கத் தக்கனவாய் இனிமை சிறந்தனவான திருவடிகளை அடியவனான என்னுடைய தலையிலே கொக்குவாயும் படுகண்ணியும்போலே விரைவிலே சேர்க்கவேண்டும்; சேஷியான உன்னிடத்தில் அடியவனான நான் விரும்பிப் பெறுவது இதுவே

---

1. 'உபகரிக்கிற' என்னும் எச்சத்தை, மேலே வருகின்ற 'வீட்டை' என்ற சொல்லோடு முடிக்க. இடையிலே உள்ள 'நீந்தும்' முதலிய சொற்கள் மூன்றும் வீட்டிற்கு அடைமொழிகள். 'நீந்தும்' என்பது "நீந்தும் துயரில்லா வீடு" (திருவாய். 2. 8: 2.) என்ற திருப்பாசுரப் பகுதியையும், 'கெடலில்' என்பது, "கெடலில் வீடு செய்யும்" (திருவாய். 2. 9: 11.) என்ற திருப்பாசுரப் பகுதியையும், 'எம்மா' என்பது "எம் மா வீட்டுத் திறமும்" (திருவாய். 2. 9: 1.) என்ற திருப்பாசுரப் பகுதியையும் குறிக்கின்றன.

2. அவன் கொடுக்கப்புகுந்த மோக்ஷத்தை ஆழ்வார் அறுதியிட்டபடியை அருளிச்செய்கிறார் 'உபய அநுகுணமாக்கினவர்' என்று. அதாவது, சேஷியான இறைவனுடைய சொரூபத்திற்கும் அடியவரான தம்முடைய சொரூபத்திற்கும் தகுதியாக அம் மோக்ஷம் இருக்க வேண்டும் என்று அறுதியிடுகிறார் என்றபடி. உபயம் - இரண்டு. அநுகுணம் - தகுதி.

3. திருவாய். 2. 9: 1.

என்றும், [1]"தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே" என்றும் இருவருடைய தன்மைகளுக்கும் தகுதியாக அறுதியிட்ட ஆழ்வார்,

[2]"ஆச்ரயணீயனுக்கு பூர்வ உக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிற - எல்லாராலும் தொழத்தக்கவனான எம்பெருமானுடைய, முதற்பத்தில் சொல்லப்பட்ட முதன்மையை நிலைபெறுத்துவனவான, [3]சகல பல பிரதத்வ காரணத்வ சேஷசாயித்வ ஸ்ரிய:பதித்வ சௌலப்ய ஆதிகளைத் திண்ணன் அணைவது என்று வெளியிட்டு - சகல பல பிரதத்துவம் - "வீடுமுதல் முழுதுமாய்" என்பதனால் மோக்ஷம் முதலான எல்லாப் பேறுகளையும் கொடுப்பவன் என்கையாலே எல்லாப் பலன்களையும் கொடுக்கின்றவனாதலையும், காரணத்வம் - "மிகும் தேவும் எப்பொருளும் படைக்கத் தகும்", "கருத்தில் தேவும் எல்லாப் பொருளும் வருத்தித்த", "தன்னுந்தியுள்ளே வாய்த்த திசைமுகன் இந்திரன் வானவர் ஆக்கினான்" என்பனவற்றால் காரணனாதலையும் [4]"திண்ணன்வீடு முதல் முழுதுமாய்" என்ற திருவாய்மொழியில் வெளியிட்டு, சேஷசாயித்வம் - "அணைவது அரவணைமேல்" என்பதனால் ஆதிசேஷசயனனாதலையும், ஸ்ரிய: பதித்வம் - 'பூம்பாவைஆகம் புணர்வது" என்பதனால் திருமகள்கேள்வனாதலையும், சௌலப்யம் - "இணைவனாம் எப் பொருட்கும்" என்பதனால் அவதாரத்தின் எளிமையையும், 'ஆதி' என்ற சொல்லால் "வீடு முதலாம்" என்று மோக்ஷம் கொடுக்கின்றவனாதலையும், "நலமந்தம் இல்லதோர் நாடு புகுவீர் - பல முந்து சீரில்படிமின் ஓவாதே" என்ப

---

1. திருவாய். 2. 9: 4.

இத்திருப்பாசுரங்களுக்கு வடக்குத்திருவீதிப் பிள்ளை எழுதிய ஈட்டின் வியாக்கியானத்தைப் படித்து இன்புறல் தகும்.

2. *இங்ஙனம் மோக்ஷத்தை அறுதியிட்ட ஆழ்வார், உலக மக்களுடைய நல்வாழ்விற்காக உபதேசித்தவற்றை அருளிச்செய்கிறார் 'ஆச்ரயணீயனுக்கு' என்று தொடங்கி. பூர்வம் - முன். உக்தம் - கூறிய. அதாவது முதல்பத்தில் அருளிச்செய்த பரத்துவத்தை என்றபடி.*

3. *சகலபல பிரதத்வ காரணத்வங்களை, 'திண்ணன்' என்ற திருப்பதிகத்திலே வெளியிட்டு, சேஷசாயித்வ ச்ரிய:பதித்வ சௌலப்ய ஆதிகளை 'அணைவது' என்ற திருபதிகத்தாலே வெளியிட்டு என்று வாக்கியத்தைப் பிரித்துக்கொள்க. அன்றிக்கே, மேலேகூறப்பட்ட ஐந்தனையும் 'திண்ணன்', 'அணைவது' என்ற இரண்டு திருப்பதிகங்களிலும் அருளிச்செய்து என்று கோடலுமாம். மேலே காட்டியன எல்லாம் பரத்துவத்தை விளக்குவன. சகலபலபிரதத்வம் - எல்லாப்பலன்களையும் கொடுத்தல். சேஷசாயித்வம் - ஆதிசேடன்மேல் படுத்திருத்தல். ச்ரிய:பதித்வம் - திருமகள் கேள்வனாக இருத்தல்.*

4. திருவாய். 2. 2: 1.

தனுல் முமுக்ஷுக்களால் உபாசிக்கப்படுகின்றவனுதலேயும் [1] "அணே வது அரவணேமேல்" என்ற திருவாய்மொழியில் வெளியிட்டு, இவ் வுரை, இதன் பட்டோலேயான நூலில் இவர் அருளிச்செய்ததற்குச் சேர்வது.

[2] அன்றிக்கே, "வீடுமுதல் முழுதுமாய்" என்றதனுல் எல்லாப் பலன்களேயும் கொடுக்கின்றவனுதலேயும், "தேவும் எல்லாப் பொருளும் கருத்தில் வருத்தித்த மாயப்பிரான்", "ஆக்கினுன் தெய்வ உலகுகள்" என்பனவற்ருல் எல்லாப்பொருள்கட்கும் காரணனுதலேயும், "ஆழியம்பள்ளியாரே" என்பதனுல் இலக்கணேயாலே ஆதிசேஷசயனனுதலேயும், "பூமகள்தன்னே வேறின்றி விண்தொழத் தன்னுள்வைத்து" என்பதனுல் திருமகள் கேள்வனுதலேயும், "கண்ணன்கண்", "கோபாலகோளரியேறு" என்பனவற்ருல் அவதாரத்தால் எளியனுதலேயும், "ஆதி" என்ற சொல்லால் "தகும் கோலத் தாமரைக்கண்ணன்" என்பதனுல் புண்டரீகாக்ஷனுதலேயும், "பள்ளி யாலிலே ஏழுலகும்கொள்ளும் வள்ளல்வல்வயிற்றுப்பெருமான்" என் பதனுல் அகடிதகடநாசாமர்த்தியனுதலேயும் "திண்ணன் வீடு முதல்" என்ற திருவாய்மொழியிலும்; [3] "அணேவது அரவணே மேல்" என்பதனுல் ஆதிசேஷசயனனுதலேயும், "பூம்பாவைஆகம் புணர்வது" என்பதனுல் திருமகள்கேள்வனுதலேயும், "இருவர் அவர் முதலும் தானே" என்பதனுல் காரணனுதலேயும், "இணேவனும் எப்பொருட்கும்" என்பதனுல் அவதாரத்தால் எளியனுதலேயும், "வீடுமுதலாம்" என்பதனுல் எல்லாப் பலன்களேயும் கொடுக்க வல்லனுதலேயும், 'ஆதி' என்ற சொல்லால் "பிறவிக்கடல் நீந்துவார்க்குப் புணேவன்" என்பதனுல் மோக்ஷத்திற்கு உபாயமாக இருத்தலேயும், "ஆனே இடர் கடிந்த" என்பதனுல் ஆபத்திற்குத் துணேவனுதலேயும், "மூவுலகும் காவலோன்" என்பதனுல் எல்லாப்

1. திருவாய். 2. 8: 1.

2. சகல பல பிரதத்வம் காரணத்வம் என்னும் இரண்டையும் 'திண்ணன்' என்ற திருப்பதிகத்திலும், ஏனேய மூன்றையும் 'அணேவது' என்ற திருப்பதிகத்திலும் அருளிச்செய்தார் என்று இதுகாறும் கூறி, இனி அந்த ஐந்தனேயும் மேற்கூறிய இரண்டு திருப்பதிகங்களிலும் தனித் தனியே அருளிச்செய்கிருர் என்பதனேக் காட்டுகிருர் 'அன்றிக்கே' என்று தொடங்கி. 'திண்ணன் வீடு' என்ற திருப்பதிகத்தில் அந்த ஐந்தனேயும் அருளிச்செய்திருப்பதனேக் காட்டுகிருர் 'வீடுமுதல் முழுதுமாய்' என்றது முதல் 'திண்ணன்வீடு முதல் என்ற திருவாய்மொழியிலும்' என்றது முடிய.

3. இனி, 'அணேவது அரவணேமேல்' என்ற திருப்பதிகத்தில் இந்த ஐந்தனேயும் அருளிச்செய்திருப்பதனேக் காட்டுகிருர் 'அணேவது அரவணேமேல்' என்றது முதல் 'திருவாய்மொழியிலும் வெளியிட்டு' என்றது முடிய.

பொருள்களையும் காப்பவனாதலையும் "அணைவது அரவணைமேல்" என்ற திருவாய்மொழியிலும் வெளியிட்டு என்று கோடலுமாம்.

[1] இப்பொருளில் "ஆழி யம் பள்ளியாரே" என்பதற்கு ஆதி சேஷசயனன் என்னும் பொருளை இலக்கணையினால் கொள்ளவேண்டுகையும், "வீடு முதலாம்" என்று மோக்ஷத்திற்குக் காரணமாம் என்பதனை இடத்திற்குச் சேராதபடி மோக்ஷம் முதலான பேறுகளைக் கொடுப்பவன் என்று சொல்லுகையும், 'சகல பல பிரதத்வம்' என்று தொடங்கி இவர் எண்ணின அடைவிற்குச் சேர "திண்ணன் வீடு" "அணைவது அரவணை" என்ற இரண்டு திருவாய்மொழிகளிலும் சொல்லப்போகாமையும் ஆகிற நயமின்மைகளும் உண்டு.

[2] கள்வா தீர்த்தன் என்று வசந பிரத்யக்ஷங்களும் காட்டி - கள்வா என்று வசநம் காட்டி - [3] "கள்வா" என்கிற திருப்பாசுரத்திலே, 'அவதரித்து உன்னுடைய முதன்மை தெரியாதபடி நின்றாயேயாகிலும் எங்களுக்குக் காரணனான சேஷி நீயே' என்று தேவர்களில் தலைவர்களான பிரமன் சிவன் முதலானவர்கள், தங்களுக்குக் காட்சி கொடுப்பதற்குப் பெரிய திருவடியை மேற்கொண்டு புறப்பட்டால் அவனுடைய திருவடிகளிலே விழுந்து கூப்பிடாநிற்பர்கள் என்று, 'அவனே பரம்பொருள்' என்னும் இவ்வர்த்தத்திற்கு' மற்றைத் தேவர்களுடைய வார்த்தையைக்காட்டி, தீர்த்தன் என்று பிரத்யக்ஷம் காட்டி - [4] "தீர்த்தன் உலகளந்த" என்ற திருப்பாசுரத்திலே, பாசுபதாஸ்திரம் ஒன்றனைப் பெறுவதற்காக மலர் முதலியவற்றைக் கொண்டு சிவனை ஆராதிக்கப் புகுகிற அருச்சுனனைப் பார்த்து 'அம்மலர்களை நம் காலிலே பொகடு' என்று கிருஷ்ணன் அருளிச் செய்ய, அவனும தூயோனாக இருக்கின்றவனுடைய திருஉலகு அளந்தருளின திருவடிகளிலே அம் மலர்களைப் பணிமாற, [5] "வெற்றி வீரனான அருச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருவடித்தாமரைகளில் அணிந்த அழகிய அம்மலரை சிவன் முடியின் நடுவில் கண்டான்;

---

1. இரண்டாவதாக அருளிச்செய்த இந்த யோஜனையில் உள்ள சில குறைகளைக் காட்டுகிறார் 'இப்பொருளில்' என்று தொடங்கி.

2. இவ்வாக்கியத்தை, கள்வா என்று வசநம் காட்டி, தீர்த்தன் என்று பிரத்யக்ஷம் காட்டி என்று கூட்டுக.

3. திருவாய். 2. 2: 10. 4. திருவாய். 2. 8: 6.

5. பார்த்தோ விஜேதா மதுசூதகஸ்ய பாதாரவிந்தார்ப்பித
சித்ரபுஷ்பம்
ததர்ச கங்காதர மௌலிமத்யே பஹுவீர: க்ருதநிச்சிதார்த்த:
என்பது, பிரமாணம்.

வீரனாகிய அருச்சுனன், நிச்சயிக்கப்பட்ட அர்த்தத்தையுடையவனானான்" என்கிறபடியே தான் திருவடிகளில் அணிந்த மலர்களோடு ஒத்த வேறுமலர்களை அல்லாமல் அம்மலர்களையே, பாடே பக்கே அன்றிக்கே சிவன் தலைமேலே, பெரியோர்களுடைய வார்த்தைகளால் அன்றிக்கே தானே நேரில் கண்டு [1] "பெரிய மனத்தையுடைய அந்த அருச்சனன்" என்கிறபடியே மிகப்பெரிய ஞானத்தையுடையனான அவன் நிர்ணயித்த பரத்துவம் சிற்றறிவினர்களாலே இன்று ஆராயும் படி இருந்ததோ என்று காட்சி அளவையும் காட்டி,

[2] புலன்ஐந்து என்று சம்சார மோக்ஷ சாதந துக்க ஆனந்த ரசம் முன்னாக விதிக்கிற - "புலன் ஐந்து" என்னும் திருப்பாசுரத்திலே அவனைத் தொழுவதற்கு இழிகின்றவர்களுக்கு விடத்தக்கனவற்றிலே வெறுப்பும், பேற்றிலே பேரவாவும், சாதனத்தில் ருசியும் உண்டாகும்படி "புலன்ஐந்து மேயும் பொறி ஐந்தும் நீங்கி - என்று, அளவிற்கு உட்பட்ட பொருள்களைப் பற்றுதற்குக் கருவிகளான இந்திரியங்களுக்கு வசப்பட்டவராதல் தவிர்ந்து என்கையாலே, சிறியவை நிலையற்றவை முதலான குற்றங்களால் மூடப்பட்டனவான ஐம்புல இன்பங்களை அநுபவித்திருக்கும் இவ்வுலக வாழ்வின் துக்கமும், "நலம் அந்தம் இல்லது ஓர் நாடு புகுவீர்" என்று, நன்மைக்கு முடிவில்லாத திருநாட்டிலே புகுவீர் என்கையாலே, மோக்ஷத்தினுடைய ஆனந்தமும், "பலமுந்து சீரில் படிமின்" என்று, [3] "செய்வதற்குச் சுகமாக இருக்கும்" என்கிறபடியே நினைக்கப்படுகின்ற விஷயத்தின் இனிமையாலே பேற்றின் நிலையைப்போலே உபாய நிலையிலும் இனிதாய் இருக்கையாலே [4] பலம் முற்பட்டிருக்கின்ற கல்

---

1. *"ஸது பார்த்தோ மஹா மந:"*
என்பது, ஸ்ரீகீதாபாஷ்யம்.

இறைவனுடைய பரத்துவத்தை அருச்சுனன் நேரே கண்டானாதலின் 'காட்சியளவையும் காட்டி' என்கிறார்.

2 *இவ்வாக்கியத்தை, புலன் ஐந்து என்று சம்சார துக்க, மோக்ஷ ஆனந்த, சாதந ரசம் முன்னாக விதிக்கிற என்று மாற்றிக் கூட்டுக. 'புலனைந்து' என்னும் திருப்பாசுரத்தில் 'புலனைந்து மேயும் பொறியைந்து' என்கையாலே சம்சார துக்கத்தையும், 'நலமந்தமில்லதோர் நாடு' என்கையாலே மோக்ஷ ஆனந்தத்தையும், 'பலமுந்து சீரில் படிமின் ஒவாதே' என்கையாலே சாதன ரசத்தையும் தெரிவித்திருத்தல் காண்க. இத்திருப்பாசுரம், திருவாய். 2. 8: 4.*

3. *"ஸுஸுகம் கர்த்தும்"*
என்பது, ஸ்ரீகீதை, 9: 2.

4. *சிலகாரியங்கள் முதலிலே மிக வருத்தமாய் முடிவிலே இன்பமயமாக இருக்கும்; பகவானுடைய நற்குணங்களை அநுபவிக்கும் அநுபவ*

யாண குணங்களிலே ஆசையுடையீர் ஆகுங்கோள் என்கையாலே, உபாயத்தினுடைய இனிமை முன்னாக இவ்வுலக வாழ்வினை நீக்கிக் கொண்டு மோக்ஷத்தை அடையவேண்டியிருப்பார், அசுரக் கூட்டத்தைத் தடுமாறி முடிந்துபோம்படி செற்றவனாகையாலே பிரபலமான விரோதிகளை வருத்தமின்றிப் போக்கவல்லவனுடைய குணங்களிலே காதலுடையீராகுங்கோள் என்று விதிக்கிற, அந்தர்குண உபாசனத்தை - [1] " அந்தப் பரம்பொருளிடத்தில் எந்தக் குணம் உள்ளிருக்கின்றதோ அது உபாசிக்கத் தக்கதாம் " என்கிறபடியே பரப்பிரஹ்ம சொரூபத்திற்குள் இருக்கும் [2] அபஹதபாப்மத்வம் முதலான குணங்களை வழிபடும் வழிபாட்டினை,

பரம்பொருளை வழிபடுவதற்கு, சாஸ்திரங்களில் விலக்கியனவற்றை நீக்க வேண்டுதலின் அவற்றை நீக்கிக்கொண்டு, திவ்விய தேசங்களில் வசித்தல் முதலானவை அங்கங்கள் ஆகையாலே அவற்றோடு கூட்டி உபதேசிக்கிறார் மேல் :

[3] மதித்துப் பெருக்கி மூழ்கி அழுந்திக் கீழ்மை வலம் சூதும் செய்து இளமை கெடாமல் - *இவ் விரண்டாம்பத்தில் பரோபதேசத்தைச் செய்யும் திருவாய்மொழி* " கிளர் ஒளி இளமை கெடுவதன் முன்னம் " என்ற திருப்பதிகம் ஆகையாலே அதில் உபதேசித்த விஷயங்களை விளக்குகிறார் இவ்வாக்கியத்தால். மதித்து - " சதிரிளமடவார் தாழ்ச்சியை மதித்து ", பெருக்கி - " திறமுடை வலத்தால் தீவினைபெருக்கி ", மூழ்கி - " வல்வினைமூழ்கி ", அழுந்தி - " நரகுஅழுந்தி ", கீழ்மை - " கீழ்மை செய்து ", வலம் - " வலம் கழித்து ", சூதும் செய்து - " சூதென்று களவும் சூதும் செய்து ", இளமைகெடாமல் - " கிளர்ஒளி இளமை கெடுவதன் முன்னம் "

மானது அங்ஙனமன்றிக்கே ஆனந்தமயமாகவே இருப்பதாலே ஆரம்ப நிலையிலிருந்தே பலனாகவே இருக்குமாதலின் 'பலம் முற்பட்டிருக்கின்ற' என்கிறார்.

1. *" தஸ்மிந் யதந்தஸ்ததுபாஸிதவ்யம் " என்பது, தைத்திரீயஉப.*

2. *அபஹதபாப்மத்வம் - பாபங்கள் இல்லாத தன்மை.*

3. *மதித்து, பெருக்கி, மூழ்கி, அழுந்தி, கீழ்மை செய்து, வலம் கழித்து, சூதும் செய்து என வரும் எச்சங்களை, 'இளமை கெடாமல்' என்பதிலுள்ள கெடாமல் என்னும் எச்சத்தோடு முடிக்க. கெடாமல் - கெடுக்காமல். மேலே காட்டப்பட்டவையும் கீழே காட்டப்படுமவையும் "கிளரொளி இளமை "என்ற திருப்பதிகத்திலே உள்ள திருப்பாசுரப் பகுதிகள்.*

என்று, வணங்குதற்கு விரோதியான இவ்வுலக வாழ்வில் காதலைச் செய்து, அதனாலே பாவங்களைக் கூடுபூரித்து, அவற்றிலே மறு நனைய முழ்கித் தறைப்பட்டுத் தண்மையைச் செய்து பலத்தைப் பாழ்போக்கிக் கள்ளனாய் வஞ்சகனாய் இளமையைப் பாழே போக்காதே, செய்யும் க்ஷேத்ரவாச சங்கீர்த்தந அஞ்சலி பிரதக்ஷிண கதி சிந்தநா ஆதி அங்கயுக்தம் ஆக்குகிறார் இரண்டாம் பத்தால் - [1]"இளமையிலே தருமத்தைச் செய்யவேண்டும்" என்றும், [2]"ஆகையால் அறிவுபொருந்திய மனத்தையுடையவன் எப்பொழுதும் இளமையிலேயே சீர்த்திக்காக முயற்சி செய்யக்கடவன்" என்றும் சொல்லுகிறபடியே இளமையிலே செய்யத்தக்கனவான "மாலிருஞ்சோலை சார்வது சதிரே" என்றும், "போதவிழ்மலையே புகுவது பொருளே" என்றும் சொல்லுகிற திவ்வியதேச வாசம், "பதியது ஏத்தி" என்கிற துதி, "தொழக்கருதுவதே" என்கிற தொழுகை, "வலம் செய்து நாளும் மருவுதல் வழக்கே" என்கிற வலம் வருதல், "நெறிபட அதுவே நினைவது நலமே" என்கிற நெறியை நினைத்தல் ஆகிற இவை முதலான வழிபாட்டின் அங்கங்களோடே சேர்க்கிறார் இரண்டாம் பத்தில். (2)

221

[3]முழுதுமாய் எங்கணும் ஒழிவற அருவாகி நின்று தோய்விலன் ஆம் சர்வ வியாபகன், தீர்ந்த அடியார்களைத் தாளிணைக்கீழ்க் கொள்ளும் தன்படிக்கும், நீ தந்த மாமாயப் புணர்வினைப் பிறப்பழுந்தி அல

---

1. "பால்ய ஏவ சரேத் தர்மம்"
என்பது, பிரமாணம்.

2. "தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ச்ரேயஸே ஸதா" என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 1. 17: 75.

ஆக, இரண்டாம்பத்தால் இறைவனுடைய காரணத்வத்தை வெளியிட்டமை, அந்த இறைவனாலே ஆழ்வார் தாம் அறியாதன அறிவிக்கப் பெற்று உள்ளம் தேறினமை, ஞானத்தின் பலமான மோக்ஷத்தைத் தேடி வாடினமை, அந்த வாட்டம் தீர இறைவன் விசேஷாநுக்கிரஹம் செய்து மோக்ஷத்தையும் கொடுப்பதாக இருந்தமை, அந்த மோக்ஷத்தின் தன்மையை ஆழ்வார் அறுதியிட்டுப் பேசினமை, இவ்வுலக மக்களுக்கு உபதேசிக்க ஒருப்பட்டுச் சகுணபிரஹ்ம வழிபாட்டினை அங்கத்தோடு விதித்தமை ஆகிற இவையெல்லாம் தெரிவித்தபடி.

3. இச்சூத்திரத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கோடல் வேண்டும். முதற்பகுதியில் இம்மூன்றாம்பத்தில் பேசப்படுகின்ற இறைவனுடைய குணம் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டாவது பகுதியில் இறைவன் ஆழ்வார்க்குச் செய்த அருளும், அதனால் ஆழ்வார் அடைந்த

மருகின்றேன் வேரற அரிந்து எந்நாள் எங்கு வந்து தலைப்பெய்வன் என்று கழித்துப் புகும் தம் காதலுக்கும் சத்ருசமாக, கண்டுகொள் என்னும் ஊனமில் மோக்ஷ பலமான முடிச்சோதியில் அநுபவத்தாலே நித்யவஸ்து நீடுபெற்று, அவச்சேதம் அற்ற அடிமை செய்யவேண்டும்படி சர்வாத்மபாவத்தைப் புகழ்ந்து, சொல்லிப் பாடி ஏத்திப் பிதற்றி எழுந்தும் பறந்தும் துள்ளிக் குனித்துத் தடுகுட்டக் கும்பிடு நட்டமிட்டுச் சிரிக்கக் குழைந்து நையும் பிரீதி உகள, தம் அடியார் என்ன உடன்கூடும் சாத்யம் வளர, பைகொள் பாம்புபோலே இந்த்ரிய விருத்தி நியமம் அற, பாட வந்த கவி அன்றிக்கே படைத்தான் சுலோகக்கிருத்தாய், குறை முட்டுப் பிரிவு இடர் துயர் துன்பம் அல்லல் துக்கம் தளர்வு கேடுகள் இன்றி அம்ருதாநந்த மக்நரானவர், 'செய்ய தாமரைக் கண்ணன், அமரர் குலமுதல்' என்று அஞ்சாதபடி, எளிவரும் இணைவனும் என்றவை பரத்வமாம்படி 'அவனுகும்' சௌலப்ய காஷ்டையைக் காட்டி, வழியைத் தருமவன் நிற்க, இழியக் கருதுவது என்னுவது, வேண்டிற்றெல்லாம் தரும், தன்னுகவே கொள்ளும், கவி சொல்ல வம்மின் என்று, முக்த ஐச்வர்யத்தை முன்னிட்டு, ச்வவிருத்தியை மாற்றி ஸ்வவிருத்தியிலே மூட்டுகிருர் மூன்றும்பத்தில்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— [1] "எல்லாப் பொருள்களையும் படைத்து அவற்றிற்குள்ளே அநுப்பிரவேசித்தான்" என்கிறபடியே காரியவடிவமான உயிர்ப்பொருள் உயிரல்பொருள்கள் அடையப் பரந்து உறைந்து அவற்றினுடைய குற்றங்கள் தன்னைத் தீண்டப்பெருதவனுயிருக்கையினுலே, எல்லாப் பொருள்களிலும் பரந்து உறைபவனுன சர்வேச்வரன், மேற்பத்தில், எம்பெருமானும் ஆழ்வாரும் என்னும் இவ் இருவ

தன்மையும் தெரிவிக்கப்படுகின்றது. மூன்றும் பகுதியில் அத்தன்மையை அடைந்த ஆழ்வார் மக்களுக்குச் செய்த பரோபதேசம் உணர்த்தப்படுகிறது. 'ஸர்வவியாபகன்' என்பது முடிய முதற்பகுதி. அதற்குமேல் 'அம்ருதாநந்த மக்நரானவர்' என்பது முடிய இரண்டாம் பகுதி. அதற்குமேல் உள்ளனவெல்லாம் மூன்றும் பகுதி.

1. *"தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத்"* *என்பது, தைத்திரீயோபநிட.*

ருடைய சொரூபத்திற்குத் தகுதியாக, ஆழ்வாராகிய தாம் அறுதியிட்டமோக்ஷத்துக்குப் பலனுன தன்னுடைய திவ்வியமங்கள விக்கிரக அநுபவத்தை இவர் பெற்றவராம்படி செய்த அளவில், இவரும் அநுபவித்துத் தரித்து, அவ்வநுபவத்தால் உண்டான உவப்பின் மிகுதியாலே எல்லாவிதமான கைங்கரியங்களையும் செய்யவேண்டும்படியான ஆவல் மிக்கவராய், அந்த ஆவலுக்குத் தகுதியாக, அப்பெருமான் காட்டிக்கொடுத்த அவனுடைய எப்பொருள்கட்கும் உயிராயிருக்குந் தன்மையினைப் பேசி, அதனலே வந்த உவப்பின் உகளிப்பையுடையராய், அந்தப்பிரீதி அவன் அளவும் அடங்கி நில்லாது, பாகவதர்களுக்கு அடிமை என்னும் எல்லை நிலமளவும்சென்று, அந்தப் பாகவதர்களுக்கு நிருபகம்ஆன பகவானுடைய வேறுபட்ட சிறப்பினைச் சொல்லுமுகத்தால், ஒரு கரணத்தின் செயலை மற்ருெரு கரணம் ஆசைப்படும்படி, அறிவுடையார் தன்மையை அடைந்த உறுப்புக்களின் கூட்டமும் தாமும் தனித்தனி அநுபவிக்கவேண்டும் பெருவிடாயை உடையராய், இறைவனை அன்றி மற்றைய எவரையும் துதித்தற்குத் தகுதியற்றனவான உறுப்புக்களையுடையராய், அவ்வளவின்றி இறைவனைத் துதிபபதற்குத் தக்க கரணங்களையுடையருமாய், இறைவனை அநுபவிப்பதற்குத் தமக்கு ஒருவகை இடையூறு முதலானவையும் இன்றி எல்லை இல்லாத ஆனந்தத்தையுடைய ஆழ்வார்,

'தாமரைக் கண்ணனுய் நித்தியசூரிகளால் சேவிக்கப்படுகின்றவனை நம்மால் தொழப்போமோ' என்று இவ்வுலக மக்கள் அஞ்சிக் கைவாங்காமல் மேல்விழுந்து வணங்கும்படி, மேல் இரண்டு பத்துக்களாலும் உபதேசித்த அவதாரத்தின் எளிமையும் பரத்துவத்தின் நிலையிலே உள்ளது என்னும்படி உள்ள அர்ச்சாவதாரத்தின் எளிமையை அவர்களுக்கு உபதேசித்து, அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமபதத்தை அடைவிக்குமவனுன எம்பெருமானை ஒழிய, மற்றையோரைத் துதிப்பதிலே தாழஇழிதல் பயன் அற்றது; ஆனபின்பு, நீங்கள் எல்லாப் பலன்களையும் கொடுக்கின்றவனுமாய்த் தன்னையே ஒக்க அருள்செய்பவனுமான அவ்விறைவன் விஷயத்திலே வாசிகமான அடிமையைச் செய்யுங்கோள் என்று பிறரைக் கவிபாடுதல் ஆகிற இழிதொழில்களை நீக்குவித்து, தம்முடைய செயலான வாசிக கைங்கர்யத்திலே மூட்டுகிருர் என்கிருர்.

[1] முழுதுமாய் எஙகணும் ஒழிவற அருவாகிநின்று தோய்விலனும் சர்வவியாபகன் - முழுதுமாய் - [2] "முழுதுமாய் முழுதியன்ருய்" என்

1. இறைவனுடைய 'சர்வவியாபகத்வம்' என்ற குணம் மூன்ரும் பத்தில் சொல்லப்படுகிறது என்கிருர் 'முழுதுமாய்' என்று தொடங்கும் முதல் வாக்கியத்தால். 2. திருவாய். 3: 1: 8.

றும், எங்கணும் - [1] "ஏழ்ச்சிக் கேடு இன்றி எங்கணும் நிறைந்த எந்தாய்" என்றும், ஒழிவற - [2] "எஞ்ஞான்றும் எங்கும்ஒழிவற நிறைந்து நின்ற" என்றும், அருவாகி நின்று - [3] "அளவுடையைம்புலன்கள் அறியாவகையால் அருவாகி நிற்கும்" என்றும் சொல்லுகிறபடியே, தேசத்தாலும் காலத்தாலும் பொருள்களாலும் அளவிட்டு அறியமுடியாதபடி, காரியமான அறிவுடைப்பொருள் அறிவில்பொருள்கள் எல்லாவற்றிலும் பரந்து, தோய்விலனும் சர்வவியாபகன் - [4] "யாவையும் எவரும் தானுய் அவர் அவர் சமயம்தோறும், தோய்விலன் உணர்வின் மூர்த்தி" என்றும், [5] "இவனின் வேறுன இறைவன் கர்மங்களின் பலனை அனுபவியாமல் மிக அதிகமாகப் பிரகாசிக்கிறுன்" என்றும் சொல்லுகிறபடியே, அவற்றின் குற்றங்கள் தன்னைத் தீண்டப் பெருதவனுயிருக்கையாலே எங்கும் பரந்திருக்கிற சர்வேச்வரன்,

[6] *தீர்ந்த அடியார்களைத் தாள் இணைக்கீழ்க் கொள்ளும் தன்படிக்கும்* - [7] "தீர்ந்த அடியவர்தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல" என்கிறபடியே, அடையும் பேறும் அடைவிக்கும் வழியும் எம்பெருமானே என்று திடமான உறுதிகொண்டவர்களான அடியவர்களை, [8] "சன்ம சன்மாந்தரம் காத்து அடியார்களைக் கொண்டுபோய்த் தன்மை பெறுத்தித் தன் தாளிணைக்கீழ்க் கொள்ளும் அப்பனை" என்கிறபடியே, தொடர்ந்து வருகிற பிறவிகளிலே புகாதபடி பாதுகாத்து, எடுத்துள்ள இந்தச் சரீரத்தின் முடிவிலே அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமபதத்திலே கொண்டு சென்று, தன் உருவத்தைப் பெறுகின்ற தன்மையைச் செய்துகொடுத்து, திருவடிகளுக்கு அணையைப்போலுமதாகத் தன் திருவடிகளின்கீழே இட்டுக்கொள்ளும் சேஷியான அவனுடைய வள்ளல் தன்மைக்கும்,

---

1. *திருவாய்.* 3. 2: 4.

2. *திருவாய்.* 3. 2: 7. 3. *திருவாய்.* 3. 10: 10.

4. *திருவாய்.* 3. 4: 10.

5. *"அநச்நந்அந்யோ அபிசாகசீதி" என்பது, கடோபநிட.*

6. *இறைவன் ஆழ்வார்க்குக் காட்டிக் கொடுத்த மோக்ஷத்தின் தன்மை எத்தன்மைத்தென்னில், தீர்ந்த அடியார்களைத் தன் தாளிணைக் கீழ்க்கொள்ளும் தன் படிக்குத் தக்கதாகவும், ஆழ்வாருடைய காதலுக்குத் தக்கதாகவும் காட்டிக் கொடுத்தான் என்கிறுர் 'தீர்ந்த' என்று தொடங்கி.*

7. *திருவாய்.* 3. 5: 11.

8. *திருவாய்.* 3. 7: 7.

நீதந்த மாமாயப் புணர்வினைப் பிறப்புஅழுந்தி அலமருகின்றேன் வேர்அற அரிந்து எந்நாள் எங்குவந்து தலைப்பெய்வன் என்று கழித்துப் புகும் தம்காதலுக்கும் - நீதந்த - [1] "அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழிஉழல்வேன்" என்கிறபடியே படைப்புக் காலத்திலே உன்னைப் பெறுகைக்கு உறுப்பாக நீதந்த சரீரத்தைக் கொண்டு உன்னைப்பெறுதற்குப் பாராமல் நான் அதன் வழியே சென்று கேட்டினைச் சூழ்த்துக் கொண்டு, மா மாய - [2] "பல்மாமாயப்பல்பிறவியில் படிகின்ற யான்" என்கிறபடியே முக்குணங்களின் வேறுபாட்டாலே பலவகைப்பட்டுத் தாண்ட முடியாததான மூலப்பகுதியின் காரியமான தெய்வவுடல் முதலான சரீரங்களிலே மூழ்கி, புணர்வினை - [3] "பொல்லா ஆக்கையின் புணர்வினை அறுக்கலறு" என்கிறபடியே இழிந்த இந்தச் சரீரத்திற்குக் காரணமாய் ஒன்றோடு ஒன்று பிணைந்திருக்கிற, பிறப்பு அழுந்தி - [4] "வினையியல் பிறப்பு அழுந்தி" என்கிறபடியே கர்மங்கள் காரணமாக மீண்டும் பாவங்களிலே கொண்டுபோய் மூட்டக் கடவதான தொடர்ந்து வருகிற பிறவிகளிலே அழுந்தி, அலமருகின்றேன் - [5] "கொடுவினைத் தூற்றுள் நின்று பாவியேன் பலகாலம் வழிதிகைத்து அலமருகின்றேன்" என்கிறபடியே என்னால் அடிஅறுக்கவும் அடிகாணவும் ஒண்ணாதே புகுரவழி தெரியுமதொழியப் புறப்பட வழிதெரியாத தீவினைகளாகிற மிடைந்த தூற்றிலே அகப்பட்டு நின்று உன்னை அடைதற்கு ஈடான வழி காணாமல் கூப்பிட்டு அலமாவாநின்றேன், வேர்அற அரிந்து - [6] "வினைகளை வேர்அறப் பாய்ந்து" என்றும், [7] "தொன்மா வல்வினைத் தொடர்களை முதல் அரிந்து" என்றும் சொல்லுகிறபடியே அநாதியாய் அளவிட்டு அறியமுடியாததாய்த் தம் முயற்சியால் நீக்கஒண்ணாதபடி மிக்க பிரபலமான பாவங்களினுடைய தொடர்களை மறுகிளை வாராமல் வேர் அற்றுப்போம்படி ஊசிவேரோடே அறுத்துப் பொகட்டு, எந்நாள் எங்குவந்து தலைப்பெய்வன் என்று - [8] "எந்நாள் யான் உன்னை இனிவந்து கூடுவன்" என்றும், [9] "எங்கு வந்து அணுகிற்பன்" என்றும், [10] "எங்கு இனித் தலைப்பெய்வன்" என்றும் சொல்லுகிறபடியே நான் உன்னைக் கிட்டுவது ஒருநாள் அறுதியிட்டுத் தரவேண்டும், நான் உன்னை எங்கே வந்து கிட்டக்கடவேன், இனி கிட்டுகை என்று ஒருபொருள்

---

1. திருவாய். 3. 2: 1.
2. திருவாய். 3. 2: 2.
3. திருவாய். 3. 2: 3.
4. திருவாய். 3. 2: 7.
5. திருவாய். 3. 2: 9.
6. திருவாய். 3, 2: 1.
7. திருவாய். 3. 2: 2.
8. திருவாய். 3. 2: 1.
9. திருவாய். 3. 2: 5.
10. திருவாய். 3. 2: 9.

உண்டோ என்று சரீர சம்பந்தத்திற்கு நொந்து, அதில் உண்டான வெறுப்போடே, கழித்துப் புகும் தம் காதலுக்கும் - [1] "காயம் கழித்து அவன் தாளிணைக்கீழ்ப் புகும் காதலன்" என்கிறபடியே பகவானுடைய குணங்களை அநுபவித்துக்கொண்டே காலத்தைக் கழித்துச் சரீரத்தை விட்டு அவன் திருவடிகளின் கீழே புகவேண்டும் என்னும் படியான அடியவரான தம்முடைய காதலுக்கும்,

சத்ருசமாக - இப்படியான இருவர் படிக்கும் தகுதியாக,

நீ கண்டுகொள் என்னும் ஊனமில் மோக்ஷ பலமான முடிச் சோதியில் அநுபவத்தாலே - நீ கண்டுகொள் என்னும் - [2] "வானவர் நாட்டையும், நீ கண்டுகொள் என்று வீடும் தரும் நின்று நின்றே" என்கிறபடியே ஈச்வரன் காட்டிக்கொடுக்கிற, ஊனம்இல் மோக்ஷபலமான - [3] "ஊனம்இல் மோக்கம் என்கோ" என்கிறபடியே அவனுக்குச் சரீரமான ஆத்மஅநுபவமாத்திரத்தில் அன்றிக்கே, உயிராய் நின்ற அவன் அளவும் செல்ல அநுபவிக்கையாலே குறைவு இல்லாத தாய்ச் சொருபத்துக்குத் தகுதியாக மேலே கூறிய பத்தில் அறுதி இட்ட பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திற்குப் பலம் பகவானை அனுபவிக்கும் அநுபவமும் கைங்கர்யமுமே ஆதலால், முடிச்சோதியில் அநுபவத்தாலே - [4] "முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ" என்ற திருவாய்மொழியில் அவன் வடிவழகையும் ஆபரணச் சேர்த்தியையும் அநுபவித்து,

[5] நித்யவஸ்து நீடுபெற்று - அவற்றை அளவிற்குட்படுத்தி அநுபவிக்க முடியாமையாலே இது தம்முடைய கரணங்களின் குறைவு காரணமாக வந்தது என்று நினைத்து இவர் வருத்தமுற்றிருக்க, ஈச்வரன், 'ஆழ்வீர்! நீர் ஏன் வருந்துகின்றீர்? நம்மைப் பூரணமாக அனுபவிக்கமுடியாமைக்குக் காரணம் கரணங்களின் குறைவு என்று நீர் நினைக்கின்றீர்; அங்ஙனம் நினைக்கவேண்டா; நம்முடைய அழகு முதலியன அளவிடமுடியாதனவாகையாலே பரிபூரண அநுபவம் செய்யமுடியவில்லையே என்ற தளர்ச்சி, நித்திய

1. திருவாய். 3. 9: 8.
2. திருவாய். 3. 9: 9. 3. திருவாய். 3. 4: 7.
4. திருவாய். 3. 1: 1.
5. *நித்யவஸ்து - ஆன்மா. நீடுபெற்று - தரிக்கப்பெற்று. ஆன்மா சரீரத்திலே தரித்து நின்று என்பது பொருள். இது, மூன்றும் பத்தின் இரண்டாம் திருப்பதிகத்திற் சொல்லப்பட்ட பொருள். அதாவது, இரண்டாம் திருப்பதிகத்தின் கருத்துப்பொருள் என்றபடி.*

முக்தர்களுக்கும் உண்டு காணும்' என்று அறிவித்து ஆழ்வாருடைய வருத்தத்தை மாற்ற, அதனால் ஒருவாறு மகிழ்வுற்ற ஆழ்வார், அவ்வநுபவத்தாலே "நிலைபெற்று என்நெஞ்சம் பெற்றது நீடுயிரே" என்கிறபடியே நித்தியமான ஆன்மா தரிக்கப்பெற்று,

[1] அவச்சேதம் அற்ற அடிமை செய்யவேண்டும்படி-உயிர் தரித்திருத்தலுக்குரிய காரியமும் பலிக்கவேண்டுகையாலே "ஒழிவில் காலம் எல்லாம் உடனாய்மன்னி, வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்" என்கிறபடியே இன்ன காலத்திலே என்றும், இன்ன இடத்திலே என்றும், இன்ன நிலையிலே என்றும், இன்ன கைங்கர்யம்தான் என்றும் வரையறுத்துக்கொள்ளாதபடி எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லா நிலைகளிலும் எல்லாவிதமான கைங்கர்யங்களையும் செய்யவேண்டும்படியான பேராவலாலே,

[2] சர்வாத்ம பாவத்தைப் புகழ்ந்து - "ஒழிவில் காலம்" என்ற திருப்பதிகத்தில் எல்லாவிதமான அடிமைகளையும் செய்யவேண்டும் என்று விரும்பிய தம்முடைய பாரிப்புக்கு ஈடாக, தம்மை அடிமை கொள்ளும்படி கோலி, அவன் காட்டிக்கொடுத்த சர்வாத்ம பாவத்தைப் "புகழும் நல் ஒருவன் என்கோ" என்ற திருவாய்மொழியிலே ஐம்பெரும்பூதங்கள், அப்பூதங்களின் சேர்க்கையாலாய பொருள்கள், ஒளிபொருந்திய மாணிக்கங்கள் முதலானவை, இனிய சுவையுள்ள பொருள்கள், இசைநூல் முதலான நூல்கள், மோக்ஷம் முதலான பேறுகள், உலகத்திற்கு முதல்வரான பிரமன் சிவன் முதலானவர்கள், இவற்றுக்கெல்லாம் காரணமான மூலப்பகுதியும் புருஷனும், ஆகிற இவற்றை எல்லாம் ஆளப்படும் செல்வமாக உடையனாய், இவற்றிலே அந்தராத்மாவாகப் பரந்துறைந்து இவற்றின் குற்றங்கள் தன்னைத் தீண்டாதபடியனாய் இருக்கிறபடியைப் பேசி, அவ்வநுபவத்தாலே பிரீதராய்,

[3] சொல்லி பாடி ஏத்தி பிதற்றி எழுந்தும் பறந்தும் துள்ளி குனித்து தடுகுட்டம் கும்பிடு நட்டமிட்டு சிரிக்க குழைந்துனையும் பிரீதி உகள - சொல்லி - "எம்மானைச் சொல்லிப் பாடி" என்றும்,

---

1. இவ்வாக்கியம், "ஒழிவில் காலமெல்லாம்" என்ற மூன்றும் திருப்பதிகத்தில் சொல்லப்பட்ட பொருள். அவச்சேதம் - பிரிவு.

2. இவ்வாக்கியம், நான்காம் திருப்பதிகத்தில் சொல்லப்பட்ட பொருள். சர்வாத்ம பாவம் - கரந்த சில்லிடம்தோறும் இடம்திகழ் பொருள்தோறும் கரந்து எங்கும் பரந்து உறையும் தன்மை.

3. இவ்வாக்கியத்தால் "மொய்ம்மாம் பூம்பொழில்" என்ற ஐந்தாம் திருப்பதிகத்தில் சொல்லப்பட்ட பொருளைத் தெரிவிக்கிறார்.

பாடி - "பண்கள் தலைக்கொள்ளப் பாடி" என்றும், ஏத்தி - "முனிவின்றி ஏத்தி" என்றும், பிதற்றி - "பேர்பல சொல்லிப் பிதற்றி" என்றும், எழுந்தும் பறந்தும் துள்ளி - "எழுந்தும் பறந்தும் துள்ளாதார்" என்றும், குனித்து - "ஏத்திக் குனிப்பார்" என்றும், தடுகுட்டம் - "தடுகுட்டமாய்ப் பறவாதார்" என்றும், கும்பிடுநட்டமிட்டு - "கும்பிடு நட்டமிட்டாடிக் கோகுகட்டுண்டுழலாதார்" என்றும், சிரிக்க - "உலோகர் சிரிக்க நின்றாடி ஆர்வம் பெருகிக் குனிப்பார்" என்றும், குழைந்து நையும் பிரீதி உகள - "நெஞ்சம் குழைந்து நையாதே ஊன் மல்கி மோடு பருப்பார்" என்றும் சொல்லுகிறபடியே வாக்கு மனம் காயம் என்னும் இவற்றின் செயல்களாலே களிக்கும் படி "புகழும் நல் ஒருவன்" என்ற திருவாய்மொழியில் உண்டான அந்தப் பிரீதி தலைமண்டையிட்டுச் செல்ல,

[1] தம் அடியார் என்ன உடன் கூடும் சாத்யம் வளர - இப்படி உண்டான பிரீதி அவன் அளவில் நில்லாமல் "தம்மடியார் அடியார் தமக்கு, அடியார் அடியார் தம்மடியார் அடியோங்களே" என்கிற படியே அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தலின் எல்லையிலே நிற்கிறவர்கள் நாம் பற்றத்தகுவார் என்னும்படி "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவது என்று கொலோ" என்று மேல் இரண்டாம் பத்தில் வேண்டிக்கொண்ட பேறு அவர்களோடே கூடி அவனை அநுபவிக்கும் அளவன்றிக்கே அவன் அடியாருடைய அடிமையின் எல்லை அளவும் செல்ல வளர,

[2] பைகொள் பாம்புபோலே இந்திரிய விருத்தி நியமம் அற - "பைகொள் பாம்பு ஏறி உறை பரனே" என்கிறபடியே அனைவருக்கும் பெரியனும் அவனுடைய தன்மைக்குப் பிரகாசகமான படுக்கையா

---

1. *இவ்வாக்கியம் "பயிலும் சுடரொளி" என்ற ஏழாம் திருப்பதிகத்தில் சொல்லப்படும் பொருளைத் தெரிவிக்கிறது. இங்கு ஐந்தாம் திருப்பதிகத்திற்கு அடுத்ததான "செய்ய தாமரைக் கண்ணனும்" என்ற ஆறும் திருப்பதிகத்தில் கூறிய பொருள் இன்னது என்று கூறவேண்டியிருக்க, அதனை விடுத்து, ஏழாம் திருப்பதிகத்தின் பொருளை அருளிச்செய்கிறார். காரணம் என்? எனின், "செய்ய தாமரைக் கண்ணன்" என்ற திருப்பதிகம் பரோபதேசம் செய்யும் திருப்பதிகம் ஆகலாலே, பரோபதேசம் செய்யும் திருப்பதிகமான "சொன்னால் விரோதம்" என்ற திருப்பதிகத்தோடு இதனையும் சேர்த்துப் பின்னர் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி ஈண்டு அருளிச்செய்திலர்.*

2. *'பைகொள்' என்று தொடங்கும் இவ்வாக்கியம், "முடியானே" என்று தொடங்கும் எட்டாம் திருப்பதிகத்தின் பொருளைத் தெரிவிக்கின்றது.*

யிருக்கும் திருவனந்தாழ்வான், [1]"கண்களைக்காதுகளாகவுடையவன்" என்கிறபடியே ஓர் உறுப்பினாலே வேறோர் உறுப்பின் செயலையும் கொள்ளுமாறுபோலே, "நெஞ்சமே நீள்நகராக இருந்த என் தஞ்சனே" என்றும், "வாசகமே ஏத்த அருள்செய்யும் வானவர்தம் நாயகனே" என்றும், "கைகளால் ஆரத் தொழுது தொழுது உன்னை" என்றும், "கண்களால் காண வருங்கொல்" என்றும் வருகின்ற இன்னோரன்ன திருப்பாசுரங்களாலே வாக்கின் செயலை மனமும், கையின் செயலை வாக்கும், கண்களின் செயலைக் கைகளும், காதுகளின் செயலைக் கண்களும் ஆசைப்படும்படி ஆகையாலே இந்திரியங்களின் செயல்கள் நியமம் இன்றிக்கே அவனை அநுபவிக்கவேண்டும்படியான பெருவிடாயை யுடையராய்,

[2]பாட வந்த கவி அன்றிக்கே படைத்தான் சுலோகக்கிருத்தாய் "வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேன் அல்லேன்" என்கிறபடியே மற்றையோரைப் பாடற்குத் தகுதிஅற்ற உறுப்பினையுடையவராய், "ஒன்றிஒன்றி உலகம் படைத்தான் கவி ஆயினேற்கு" என்கிறபடியே உலகத்தைப் படைத்தல் மூலமாக, தாம் உய்வுபெறுதற்கு உரிய செயலைச் செய்த சர்வேச்வரன் விஷயத்திலே [3]"நான் கவி பாடுகிறவன், நான் கவிபாடுகிறவன்" என்கிற உபநிடத வாக்கியத்தின்படியே கவிபாடுமவராய்,

[4]குறை முட்டுப் பரிவு இடர் துயர் துன்பம் அல்லல் துக்கம் தளர்வு கேடுகள் இனறி அம்ருதாநந்தமக்நரானவர் - பரமபதத்திலே சென்று அநுபவிக்கப்பெற்றிலேன் என்கிற குறை இல்லை, இவ்வநுபவத்திற்கு எனக்கு ஒரு முட்டு இல்லை, அவன் விஷயத்திலேயான பின்பு என் மனத்தில் துக்கம் சிறிதும் இல்லை, வகுத்த சேஷி என்று பற்றுகையாலே எனக்கு ஒருதுக்கமும் இல்லை, ருசிமுன்னாகப் பரமபதத்திற்குச் செல்ல இருக்கிற எனக்கு வைதிக புத்திரர்களைப்போலே மீளில் செய்வது என் என்கிற துக்கம் இல்லை, இங்கே அவன்

---

1. *"சக்ஷுச்ச்ரவா:"* *என்பது, பிரமாணம்.*

2. *'பாட வந்த' என்று தொடங்கும் இவ்வாக்கியம், "சொன்னால் விரோதம்" என்று தொடங்கும் ஒன்பதாம் திருப்பதிகத்தின் பொருளைத் தெரிவிக்கின்றது.*

3. *"அஹம் ச்லோக க்ருத் அஹம் ச்லோக க்ருத்"* *என்பது, உபநிடதம். சுலோககிருத் - செய்யுளைச் செய்தவர்.*

4. *இந்த வாக்கியம், "சன்மம்பலபல" என்னும் பத்தாம் திருப்பதிகத்தின் பொருளைத் தெரிவிக்கிறது. இவ்வாக்கியத்திலே உள்ள 'இன்றி' என்னும் சொல்லை, 'குறை' முதலிய சொற்களோடும் கூட்டிக்கொள்க.*

குணங்களை நெருங்க அநுபவித்த எனக்குப் பூர்ணாநுபவம் செய்யக் கூடிய தேசத்தில் போகப் பெற்றிலேன் என்கிற துக்கம் இல்லை, இது அவன் லீலா விபூதி என்று அறிந்த எனக்கு இனி இந்த உலகத்தில் சேர்ந்திருத்தலாகிற துக்கம் இல்லை, தன் நினைவினாலே படைத்தல் முதலிய காரியங்களைச் செய்யவல்ல ஆச்சரியமான ஆற்றலையுடைய வனானவனைப்பற்றின எனக்கு ஒரு துக்கம் இல்லை, அகடிதகடனா சமர்த்தனானவனைப்பற்றின எனக்கு ஒரு தளர்த்தி இல்லை, அவன் மாட்டு அன்பு இல்லாத நிலையில் எங்கும் பரந்திருக்கும்தன்மையாலும், பக்தியுள்ள நிலையில் அவதாரத்தாலும் காப்பாற்றுமவனைப் பற்றின எனக்கு ஒரு கேடுஇல்லை என்று இப்படி "சன்மம் பல பல செய்து" என்ற திருவாய்மொழியில் பத்துத் திருப்பாசுரங்களாலும் [1] அடைவே தாமே பேசும்படி எல்லாத் துக்கங்களும் நீங்கினவராய், மீண்டு வருதல் இல்லாதவர்களான முக்தர்கள், பகவானுடைய அநுபவத் தாலே ஆனந்திக்குமாறு போலே அவ்வானந்தமாகிற கடலில் மூழ்கின ஆழ்வார்,

[2] செய்ய தாமரைக் கண்ணன், அமரர்குலமுதல் என்று அஞ் சாதபடி - "செய்ய தாமரைக் கண்ணனாய்" என்று தொடங்கி "எஞ்சல் இல் அமரர்குலமுதல் மூவர் தம்முள்ளும் ஆதியை, அஞ்சி நீர் உலகத்துள்ளீர்கள்" என்கிறபடியே தாமரைக்கண்ணனாதல் முதலிய பரத்துவத்திற்குரிய அங்கங்களையுடைய அவன், எப்பொழு தும் ஞானத்தில் குறைதல் இல்லாதவர்களான நித்தியசூரிகள் திரளுக்கு முதல்வன் அன்றோ! இவ்வுலக வாழ்விலே உழல்கின்ற வர்களான நம்மால் அவனைப் பற்றப்போமோ! என்று அஞ்சாதபடி,

---

1. 'அடைவே தாமே பேசும்படி' என்றது, "சன்மம் பலபல" என்கிற திருப்பதிகத்திலே முறையே "குறைவிலனே" "முட்டிலனே" "பரிவிலனே" "இடரிலனே" "துயரிலனே" "துன்பமிலனே" "அல்லலிலனே" "துக்கமிலனே" "தளர்விலனே" "கேடிலனே" என்று பத்துத் திருப்பாசுரங்களிலும் அருளிச்செய்திருத்தலைத் திருவுள் ளம்பற்றி.

2. "செய்யதாமரைக் கண்ணனாய்" என்ற திருப்பதிகமும், "சொன் னால் விரோதம்" என்ற திருப்பதிகமும் உபதேசத்தைச் செய்யும் திருப் பதிகங்களாகையாலே அவ்விரண்டையும் சேர்த்து, அவற்றில் சொல்லப் பட்ட பொருள்களை அருளிச்செய்கிறார் 'செய்ய' என்று தொடங்கி.

புண்டரீகாக்ஷத்வம் முதலிய பரத்வ லக்ஷணங்களை யுடையவன் ஞானக்குறைவில்லாதவர்களான நித்தியசூரிகளின் திரளுக்கு நிர்வாஹகன் அன்றோ! சம்சாரிகளான நம்மால் அவனை அடையப்பேமோ! என்று அஞ்சவேண்டா என்று சொல்லி, அர்ச்சாவதாரத்தின் எளிமையை உபதே சித்தபடியாலே 'செய்யதாமரைக்கண்ணன் அமரர் குலமுதல் என்று அஞ்சாதபடி' எனப்பட்டது.

[1]எளிவரும் இணைவனும் என்றவை பரத்வமாம்படி - "பத்துடை அடியவர்க்கு" என்ற திருவாய்மொழியில் "எளிவரும் இயல்வினன்" என்றும், "அணைவது அரவணைமேல்" என்ற திருவாய்மொழியில் "இணைவனும் எப்பொருட்கும்" என்றும் தாம் வெளியிட்ட அவதாரத்தின் எளிமை, அர்ச்சாவதாரத்தை நோக்க, அது பரத்துவத்துக்குச் சமமாகுமே ஒழிய எளிமை அன்று என்னலாம்படியாக, அவனுக்கும் [2]சௌலப்ய காஷ்டையைக் காட்டி - "நெஞ்சினால் நினைப்பான் எவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே" என்கிறபடியே மனத்தினாலே யாதொன்றனைத் திருமேனியாகக் கோலினீர்கோள், அளவிடமுடியாத பெருமையனான சர்வேச்வரன் அதனையே தனக்கு அசாதாரண விக்கிரஹமாக விரும்பும் என்று, [3]"எவர்கள் எவ்விதமாய் என்னை வணங்குகிறார்களோ, நான் அவர்களை அவ்விதமாகவே அடைகிறேன்" என்றும், [4]"ஆராதிக்கத் தகுந்தவராய் எல்லாக் குற்றங்களையும் பொறுக்குமவராய்த் தனது நிலைகள் எல்லாம் அர்ச்சகன் இட்ட வழக்காம்படி இருப்பவராய்" என்றும் சொல்லப்படுகிற அர்ச்சாவதாரமாகிற எளிமையின் எல்லை நிலத்தைக் காட்டி,

[5]வழியைத் தருமவன் நிற்க இழியக் கருதுவது என்னுவது - "ஒழிவு ஒன்று இல்லாத" என்று தொடங்கி "இழியக் கருதி ஓர்

---

1. எம்பெருமானுடைய எளிமை, முதற்பத்தில் 'பத்துடையடியவர்க்கு' என்ற திருவாய்மொழியில் "எளிவருமியல்வினன்" என்ற திருப்பாசுரப்பகுதியாலும், இரண்டாம் பத்தில் 'அணைவதரவணைமேல்' என்ற திருவாய்மொழியில் "இணைவனும் எப்பொருட்கும்" என்ற திருப்பாசுரப் பகுதியாலும் அருளிச்செய்யப்பட்டிருந்தாலும் 'செய்ய தாமரைக் கண்ணன்' என்ற திருவாய்மொழியில் அருளிச்செய்யப்படும் அர்ச்சாவதார எளிமை மிகச்சிறியதாதலால், அந்தத் திருவாய்மொழிகளில் அருளிச்செய்யப்பட்ட அவதாரசௌலப்யம் இந்த அர்ச்சாவதாரத்தின் எளிமையை நோக்கப் பரத்துவத்திற்குச் சமானமாதலால் 'எளிவரும் இணைவனும் என்றவை பரத்வமாம்படி' என்கிறார்.

2. 'சௌலப்ய காஷ்டை' என்பது, அர்ச்சாவதாரத்தை. காஷ்டை - எல்லைநிலம்.

3. "யேயதாமாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவபஜாம்யஹம்" என்பது, ஸ்ரீகீதை, 4: 11.

4. அர்ச்ச்யஸ்ஸர்வஸஹிஷ்ணு: அர்ச்சக பராதீந அகிலாத்மஸ்திதி: என்பது, ஸ்ரீரங்கராஜஸ்தவம், 74.

5. "சொன்னால் விரோதம்" என்ற திருப்பதிகத்தினால் உபதேசித்த விஷயத்தைத் தெரிவிக்கிறார் 'வழியைத் தரும்' என்று தொடங்கி.

மானிடம் பாடல் என்னுவதே" என்கிறபடியே உயிர் உள்ளவரையிலும் பகவானுடைய அநுபவத்தோடே வாழ்கின்ற அவ்வநுபவம் தான் ஒரு சிருங்கை என்னும்படியான அர்ச்சிராதி நெறியையும் தருகிறவன், தன்னை ஒரு சொல் சொல்லுவார் யாரோ என்று காலத்தை எதிர் நோக்கினவனுய் நிற்க, அவனை விட்டுப் புறம்பே கவி பாடுகைக்கு விஷயம் தேடிப்போய் ஒரு சொல்லுக்குப் பாத்தம் போராத சிறு மானிடரைக் கவிபாடி முன்பு நின்ற நிலையைக் காட்டிலும் தாழ இழிய நினைக்கிற இதனுல் என்ன பயன் உண்டு? அதனுல் சொரூபம் பெற்றிலீர்கோள்! நீங்கள் விரும்பிய பயனும் பெற்றிலீர்கோள்; வேண்டிற்று எல்லாம் தரும் - [1]"எல்லாப் பலன்களையும் கொடுப்பவர் விஷ்ணு" என்கிறபடியே விரும்பியவை அனைத்தையும் தரும்; தன்னுகவே கொள்ளும் - [2]"பூர்ணமான ஒப்புமையை அடைகிருன்" என்கிறபடியே தம்மையே ஒக்க அருள் செய்வர்; கவி சொல்ல வம்மின் என்று - இதற்கு நீங்கள் செய்ய வேண்டுவது ஒன்றும் இல்லை, பிறரைத் துதி செய்து உங்கள் உறுப்புக்களைப் பாழேபோக்காதே வாய்படைத்த பயன் பெறும்படி எம் பெருமானைக் கவி சொல்ல வாருங்கோள் என்று,

முக்த ஐச்வர்யத்தை முன்னிட்டு - "வழியைத் தரும் நங்கள் வானவர் ஈசன் நிற்க" என்றும், "தன்னுகவே கொண்டு சன்மம் செய்யாமையும் கொள்ளுமே" என்றும் சொல்லுகையாலே எம்பெருமானைக் கவிபாடினுல் கிடைக்கக்கூடியவை: பகவானை அநுபவிக்கை, அவனேடு பூர்ணமான ஒப்புமையை அடைதல் முதலானவைகள் என்று முக்த ஐச்வர்யமான பேற்றை முன்னிட்டு, ச்வவிருத்தியை மாற்றி ஸ்வவிருத்தியிலே மூட்டுகிருர் - இப்படித் தம்முடைய உபதேசத்தாலே [3]"பிறரிடம் சேவை செய்வது இழிந்த செயலாகச் சொல்லப்பட்டது, ஆதலால் அதனை விட்டுவிடவேண்டும்" என்று தாழ்ந்த தன்மையாலே இழிதொழிலாகச் சொல்லப்பட்ட தகுதி

---

1. "ஸகலபல ப்ரதோஹி விஷ்ணு:"
என்பது, விஷ்ணுதர்மம், 43: 47.

2. "பரமம் ஸாம்யம் உபைதி"
என்பது, முண்டகோபநிடதம்.

3. "ஸேவா ச்வவ்ருத்தி ராக்யாதா"
என்பது, மநுஸ்மிருதி,

யில்லாத விஷயத்தில் பணியை மாற்றி, [1] "நிழல்போன்று அவனை விடாது தொடர்க" என்றும், [2] "வாசுதேவனுகிற மரத்தின் நிழலானது ஏன் அடையப்படவில்லை" என்றும் வருகிறவாறே எம்பெருமானைச் சேவிக்கக்கடவன் என்றும், என்ன காரணத்தைப் பற்ற எம்பெருமான் சேவிக்கப்படாதொழிகிறுன் என்றும் விதிக்கும்படி வகுத்த இவ்விறைவன் விஷயத்திலே "புகழும் நல் ஒருவன்" என்கிற திருவாய்மொழியிற் கூறுகிறபடியே தம்முடைய வாசிகமாக அடிமை செய்கையாகிற செயலிலே மூட்டுகிறுர் மூன்றும் பத்திலே என்கை. (3)

222

[3] ஈசனை ஈசன் ஈசன்பால் என்ன, ஏர்கொள் வானத்தும் ஆயே என்கிற வியாப்தி நிறம்பெறத் தனிக்கோல் செலுத்தும் சர்வநியந்தா, ஒழிவில் காலத்துக்குச் சேர, பூர்வ போகங்களை ஓதும் மால் எய்தின சாபலத்துக்குச் சேரச் சமகாலமாக்கி, போதால்

---

1. "சாயாவா ஸத்வமநுகச்சேத்"
என்பது, மூலசம்ஹிதை.

2. "வா ஸிமர்த்தம் ந ஸேவ்யதே"
என்பது, விஹகேச்வரஸம்ஹிதை, 24: 14.

ஆக, மூன்றும் பத்தில், எம்பெருமானுடைய சர்வ வியாபகத்வம் வெளியிட்டமை, எம்பெருமானுடைய ஔதார்யத்திற்கும் ஆழ்வாருடைய ஆசைக்கும் பொருத்தமாக மோக்ஷத்தைக் காட்டிக் கொடுத்தமை, அம்மோக்ஷத்திற்குப் பலமான பகவதநுபவ கைங்கர்யங்களை ஆழ்வார் ஒருவாறு பெற்றமை, அதனுல் பெற்ற உவப்பு உள்ளடங்காமல் களிப்பு தலைமண்டையிட்டுச் சென்றமை, இப்படி உண்டான பிரீதி எம்பெருமான் அளவோடு நில்லாமல் அவன் அடியார்கள் அளவும் செல்ல வளர்ந்தமை, மீண்டும் பகவானுடைய அநுபவத்திலே பெருவிடாயையுடையரானமை, எம்பெருமானையே துதித்து அளவுகடந்த ஆனந்தம் பெற்றமை, பரோபதேசம் செய்து முடித்தமை ஆகிய இவையெல்லாம் பேசப்பட்டன என்பதாம்.

3. இச்சூத்திரத்தையும் மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கோடல் வேண்டும். 'ஈசனை' என்றது முதல் 'சர்வநியந்தா' என்றது முடிய முதல் பிரிவு. இப்பிரிவில் இறைவனுடைய நியந்திருத்வம் என்ற குணம் பேசப்படுகின்றது. அதற்குமேல் 'உடையரானவர்' என்பது முடிய இரண்டாம் பிரிவு; இப்பிரிவில் இறைவன் ஆழ்வார்க்குச் செய்த திருவருளும் அதனுல் ஆழ்வார் அடைந்த தன்மையும் பேசப்படுகிறது. அதற்கு மேல் உள்ளனவெல்லாம் மூன்றும் பிரிவு; அத்தன்மையரான ஆழ்வார் மக்களுக்குச் செய்யும் உபதேசம் பேசப்படுகின்றது இப்பிரிவில்.

வணங்காமை தீர்த்த பிரணயித்வத்திலே காதல் மையல் ஏறிய பித்தாய், தேச தூரத்துக்குக் கூவியும் கொள்ளாய் என்றது தீர, கண்ட சதிரையும் ஒரு நிலமாகக் காட்ட, வீவில் இன்பம் கூட்டினே என்று முக்த போக மாநச பிராப்தி பலமான தேவ தாந்தர ஆத்ம ஆத்மீய லோகயாத்ர ஐச்வர்ய அக்ஷரங்களில் வைராக்கியம், உன்னித்து உயிர் உடம்பினல் கொடுஉலகம் வேட்கை எல்லாம் ஒழிந்தேன் என்ன உடையரானவர், ஒரு நாயகம் என்று ராஜ்ய ஸ்வர்க்க ஆத்மா அநுபவ அல்ப அஸ்திரத்வ சாவதிகத்வாதிகளையும், ஆடு கள் இறைச்சி கருஞ் செஞ்சோறு ஆகிற நிந்தியங்களாலே இளந்தெய்வத்துக்கு இழைத்து ஆடும் நிஹீநதையையும், பேச நின்ற தேவதா அஜ்ஞாந அசக்தி சாபேக்ஷத்வாதிகளையும், இலிங்கத்து விளம்பும் பாஹ்ய குத்ருஷ்டி மத தமோ நிஷ்டதையையும் சொல்லி, ஓடிக் கண்டீர்; கண்டும் தெளியகில்லீர்; அறிந்தோடுமின்; ஆட் செய்வதே உறுவதாவது என்று விரக்தி பூர்வகமாக ஆச்ரயணத்தை ருசிப்பிக்கிருர் நாலாம் பத்தில்.

என்பது, சூத்திரம்.

வியாக்:— மேலே போந்த மூன்ரும்பத்தில் கூறிய எங்கும் பரந்துறையும் குணம், ஆகாசத்தின் பரப்புப்போல் அன்றிக்கே நிறம் பெறும்படி, [1]“ஆத்மாக்கள் அனைத்தினுடைய உள்ளும் பிரவேசித்து அவற்றை நியமனம் செய்கிருன்” என்றும், [2]“சீவான்மாவிற்குள் இருந்துகொண்டு நியமிக்கின்ருன்” என்றும், [3]“எல்லா உலகங்களையும் நியமிக்கின்றவன் விஷ்ணுவே” என்றும், [4]“சராசரங்களோடு கூடின இவ்வுலகங்களை எல்லாம் ஒருவனுன விஷ்ணுவே நியமனம் செய்கின்றவன்” என்றும் வருவனபோல்வனவற்றில்

---

1. *“அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம்”* **என்பது, ஆரணம்,** 3: 20.

2. *“ய ஆத்மாநமந்தரோ யமயதி”* **என்பது, பிரு. உப.**

3. *“சாஸ்தா விஷ்ணு: அசேஷஸ்ய ஜகத:”* **என்பது, ஸ்ரீவிஷ்ணுபு.** 1. 17: 20.

4. *“சாஸ்தா சராசரஸ்யைக:”* **என்பது, பிரமாணம்.**

சொல்லுகிறபடியே, தன்னினின்றும் வேறுபட்ட எல்லாப் பொருள்களினுடைய தொழில்செய்தல் மீளுதல் அனைத்தும் தன் வசமாம்படி நியமித்துக்கொண்டு போருகையாலே எல்லாப்பொருள்களையும் நியமிக்கின்றவனான இறைவன், "ஒழிவில் காலமெல்லாம்" என்ற திருவாய்மொழியில் கூறிய கைங்கரியஆசையைப் போலே, வேறு தேசங்களிலும் வேறு காலங்களிலும் கைகழிந்துபோன அவதாரங்களின் பெருஞ்செயல்களை அந்த அந்தத் தேச காலங்களிற்போலவே அநுபவிக்கவேண்டும் என்று கழிபெருங்காதல் கொள்ள, அங்ஙனம் காதல் கொண்ட இவர்க்குக் கால வேறுபாட்டிற்குரிய ஏதுவைக் கழித்து, சமகாலமாக்கி இவரை அநுபவிப்பித்து, இவருடைய குறைபாட்டினைத் தீர்த்து, இவருடைய முக்கரணங்களின் செயல்களையும் இனியனவாகக் கொள்ள,

இவரும், அங்ஙனம் இனியனவாகக் கொண்ட அவனுடைய கழிபெருங்காதல் குணத்திலே தோற்று, காதலனைப் பிரிந்த ஒரு காதலியின் நிலையை அடைந்து, பிரிவு நிலையில் எம்பெருமானை ஒத்திருக்கும் பொருள்களையும் அவனோடு சம்பந்தமுள்ள பொருள்களையும் அவனாகக் கருதும்படி பித்துஏறி, பரமபதத்தில் அநுபவத்தையும் ஆசைப்பட்டுக் கூப்பிட, அவ்விழவு தீரும்படி,[1] "உலகங்கட்கு எல்லாம் தலைவரான விஷ்ணுவானவர் பிராட்டியோடு கூட எல்லா உலகங்கட்கும் மேலே இருக்கின்ற பரமபதத்தில் எழுந்தருளியிருக்கின்றார்" என்கிறபடியே பரமபதத்தில் பெரிய பிராட்டியாரும் தானுமே அநுபவிக்கும் பொருள்களாக இருக்கிற இருப்பைக் கிட்டி அநுபவித்தாற்போலே காட்சியளவிலேயாம்படி அநுபவிப்பிக்க, அநுபவித்து, இப்படி முக்தர்கள் அநுபவிக்கும் இன்பத்தை மனத்தினாலே பெற்று, அதற்குப் பலனான வேறு தேவர்களிடத்தில் வைராக்கியத்தையுடையரான இவ்வாழ்வார்,

ஐச்வர்ய கைவல்யங்களின் சிறுமை, நிலை இன்மை, ஓர் எல்லையோடு கூடியிருத்தல் முதலான குற்றங்களையும், பழிக்கக்கூடிய பொருள்களாலே சிறு தெய்வங்களை வணங்குவதனுடைய தாழ்வினையும், புனைந்துரையாகக் கூறுகின்ற வாக்கியங்களாலே சொல்லப்பட்டுப் பகவானுக்கு உடைமைப்பொருள்களாயிருக்கச்செய்தே அவனோடே முதன்மை கூறலாம்படி அவன் கொடுத்த ஐச்வர்யத்தை

---

1. *வைகுண்டேது பரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:*
ஆஸ்தே விஷ்ணு: அசிந்தியாத்மா பக்தை: பாகவதை: ஸஹ
என்பது, பிரமாணம்.

யுடையராயிருக்கின்ற பிரமன் சிவன் என்னுமிவர்களுடைய அஜ்ஞானம் முதலானவற்றையும், புறச்சமயங்களும் குத்ருஷ்டி சமயங்களும் தமோ குணத்தில் ஊன்றியிருத்தலையும் வெளியிட்டு,

மற்றைத் தெய்வங்களை அடைந்து வணங்கி அதனாலாய பலன்களையும் கைகண்டீர்கோள்; உலகத்தையெல்லாம் உட்கொள்ளல் முதலிய திவ்விய செயல்களாலே சர்வேச்வரனே காப்பவன், மற்றையார் அனைவரும் அவனாலே காக்கப்படுகின்றவர்கள் என்னும் அர்த்தத்தைச் சாஸ்திர முகத்தாலே கண்டுவைத்தும் தேறமாட்டுகிறிலீர்கோள்; இப்படி நீங்கள் தேறாமைக்கு அடி அவன் இட்ட வழக்கான இச்சரீரத்தின் சம்பந்தம்; இந்தச் சரீரத்தை விடுதற்கு வழியும் அவன் திருவடிகளை அடைதல் என்று அறிந்து, அதனைச் செய்து இதனைத் தப்பப் பாருங்கோள்; அவன் திருவடிகளிலே செய்யும் கைங்கரியமே உங்களுக்குச் சீரிய பேறு என்று, வேறு பயன்களையும் வேறு தெய்வங்களையும் விரும்பாமை முன்னாக, பரதெய்வமும், பரமப்பிரயோஜனமும், அவனே, அவன் மாட்டுச் செய்கின்ற கைங்கரியமுமே என்று உபதேசித்துப் பகவானை வணங்கும் வணக்கத்தை இனிமை ஆக்குகிறார் நான்காம் பத்தில்.

[1] ஈசனை ஈசன் ஈசன்பால் என்ன ஏர்கொள் வானத்தும் ஆயே என்கிற வியாப்தி நிறம்பெறத் தனிக்கோல் செலுத்தும் சர்வநியந்தா - ஈசனை - [2] "மறுகல்இல் ஈசனை" என்றும், ஈசன் - [3] "ஈசன் ஞாலம் உண்டு உமிழ்ந்த" என்றும், ஈசன்பால் என்ன - [4] "ஈசன்பால் ஓர் அவம் பறைதல் என்னாவதுஇலிங்கியர்க்கே" என்றும் நியமிக்கிறவன் என்னும் பொருளைக் கொடுக்கும் சொல்லாலே சொல்

---

1. *மேல் பத்தில் எம்பெருமானுடைய வியாபகத்வத்தை அருளிச்செய்தார். இப்பத்தில் அவனுடைய நியாமகத்வத்தை அருளிச்செய்கிறார். நியாமகத்வத்தோடு கூடிய வியாபகத்வத்திற்கே பயன் உண்டாதலின், வியாபகத்வத்திற்குப் பின் நியாமகத்வத்தை அருளிச்செய்கிறார். நியமிக்கின்றவன் என்ற பொருளைக் காட்டுவதே 'ஈசன்' என்ற பெயர். இப்பெயரை இப்பத்தில் பலவிடங்களில் ஆழ்வார் ஆளுதல் இதனைக் காட்டுதற்கே என்க. "வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்ல வீவில் சீர், ஆற்றல் மிக்கு ஆளும் அம்மான்" என்று 'ஈசன்' என்ற பெயரின் பொருளை விளக்கியும் அருளிச்செய்திருத்தல் காண்க. இக்கருத்தையே விவரிக்கிறார் 'ஈசனை' என்று தொடங்கி.*

2. *திருவாய்.* 4. 1: 10. 3. *திருவாய்.* 4. 3: 2.

4. *திருவாய்.* 4. 10: 4.

லும்படி, ஏர்கொள் - [1] "ஏர்கொள் ஏழுலகமும், துன்னி முற்றுமாகி நின்ற சோதி ஞானமூர்த்தியாய்" என்றும், வானத்தும் - [2] வானத்தும் வானத்துள் உம்பரும் மண்ணின்கீழ்த் தானத்தும் எண்திசையும் தவிராது நின்றான்" என்றும், ஆயே என்கிற வியாப்தி - [3] "ஆயே! இவ்வுலகத்து நிற்பனவும் திரிவனவும் நீயே" என்றும் மேல்பத்தில் சொல்லிய வியாப்தி, (எங்கும் பரந்திருத்தல்). நிறம்பெற - ஆகாசத்தின் பரப்புப் போலாகாமல் விளக்கம் பெறும்படியாக, தனிக்கோல் செலுத்தும் சர்வ நியந்தா - [4] "வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல" என்கிறபடியே, லீலாவிபூதியும் நித்தியவிபூதியும் ஆகிற இரண்டு உலகங்களும் தன் நியமனத்திலே ஆம்படி தன்னுடைய ஆணையைச் செலுத்துகின்ற எல்லாப்பொருள்களையும் நியமிக்கின்றவனான சர்வேச்வரனானவன்,

ஒழிவில் காலத்துக்குச் சேர பூர்வ போகங்களை ஓதும் மால் எய்தின சாபலத்துக்குச் சேர சமகாலம் ஆக்கி - ஒழிவில் காலத்துக்குச் சேர - [5] "ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்யவேண்டும்" என்று அடிமைசெய்யப் பாரிக்குமளவில், எல்லா இடங்களிலும் செய்யவேண்டும் எல்லாநிலைகளிலும் செய்ய வேண்டும் என்று விரும்பியதைப் போன்று, எல்லாக் காலங்களிலும் செய்யவேண்டும் என்று, மேலே கழிந்துபோன காலத்தில் செய்யும் அடிமையையும் ஆசைப்பட்டதற்குச் சேரும்படி, பூர்வ போகங்களை ஓதும் மால் எய்தின சாபலத்துக்குச் சேர - [6] "பாலனாய் ஏழ்உலகு உண்டு" என்று தொடங்கி, காலத்தால் தேசத்தால் கைகழிந்து சால அரிதான அவனுடைய பெருஞ்செயல்களை அந்த அந்தத் தேசத்திலும் காலத்திலும் கூடியதாக அநுபவிப்பதற்கு ஆசைப்பட்டு, அந்த ஆசையாலே [7] "ஆதியம் காலத்து அகலிடம் கீண்டவர், பாதங்கள் மேல் அணி பைம் பொன் துழாய் என்றே, ஓதும் மால் எய்தினள்" என்கிறபடியே முன்பு நடந்துபோன இன்பங்களையே வாய் புலற்றும்படி மயக்கத்தை அடைந்த ஆசைக்குத் தகுதியாக, சம

---

1. திருவாய். 4. 3: 8.
2. திருவாய். 4. 5: 9.
3. திருவாய். 4. 9: 7.
4. திருவாய். 4. 5: 1.
5. திருவாய். 3. 3: 1.
6. திருவாய். 4. 2: 1.
7. திருவாய். 4. 2: 6.

ஆக, 'ஒழிவில் காலத்துக்கு' என்ற தொடக்கும் இவ்வாக்கியத்தால் "பாலனாய் ஏழுலகு" என்ற இரண்டாம் திருப்பதிகத்தின் பொருளை அருளிச்செய்தபடி.

காலம் ஆக்கி - காலத்தினுடைய வேற்றுமைக்கு உடலான காரணங்களைக் கழித்து ஒரு போகி ஆக்குகையாலே சமகாலமாக்கி அநுபவிப்பித்து,

[1]போதால் வணங்காமை தீர்த்த பிரணயித்வத்திலே காதல் மையல் ஏறிய பித்தாய் - போதால் வணங்காமை - "பூவை வீயா நீர் தூவிப் போதால் வணங்கேனேலும் நின், பூவை வீயா மேனிக்குப் பூசும் சாந்து என் நெஞ்சமே" என்று தொடங்கி "ஏகமூர்த்திக்கே" "பூத்தண் மாலை கொண்டு உன்னைப் போதால் வணங்கேனேலும் நின், பூத்தண் மாலை நெடுமுடிக்குப் புனையும் கண்ணி எனதுயிரே" என்று, பகைவர்களை அழிக்கின்ற அவ்வக் காலங்களில் உதவி, மலர் முதலிய உபகரணங்களைக் கொண்டு குளிர்ந்த உபசாரத்தைச் செய்திலேனாயினும், சீரிய திருமேனியையுடையனாய்ச் சர்வேச்வரனாயிருக்கிறவன் என்னுடைய முக்கரணங்களின் செயல்கள் முதலானவற்றையே தனக்கு இனிய பொருள்கள் எல்லாமுமாகக் கொள்வதே! என்று இவர்தாமே ஈடுபடும்படி செய்து, அவ்வக் காலங்களில் தனக்கு உதவி அடிமை செய்யப்பெறாத இழவை, தீர்த்த பிரணயித்வத்திலே - அவன் தீர்த்த காதல் குணத்திலே, காதல் மையல் - "காதல் மையல் ஏறினேன்" என்கிறபடியே அன்பு மேலிட்டு அறிவு கலங்கினவாறே வெள்ளக் கேடாக ஒண்ணாது என்று அவன் சிறிது பேர நிற்க,

---

1. *இத்த வாக்கியத்தால் "கோவை வாயாள்" என்ற மூன்றாம் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகின்றது. மலர் முதலிய உபகரணங்களைக் கொண்டு உபசாரம் செய்யப் பெற்றிலேனே என்று குறைபட்ட ஆழ்வாருடைய குறையை எம்பெருமான் தீர்த்தருளினன். இங்ஙனம் ஆழ்வாருடைய குறையை எம்பெருமான் நீக்கியது அவனுடைய காதல் குணத்தாலே யாதலின், அக் காதல் குணத்திலே ஆழ்வார் ஈடுபட்டார். அதனை "உரைக்கவல்லேனல்லேன் உன்உலப்பில் கீர்த்திவெள்ளத்தின், கரைக்கண் என்று செல்வன் நான் காதல் மையல் ஏறினேன்" என்ற திருப்பாசுரத்தால் தாமே வெளியிட்டார். நன்று; ஆழ்வாருடைய குறையை எம்பெருமான் தீர்த்தமையை நாம் அறியுமாறு யாங்ஙனம்? எனின், "போதால் வணங்கேனேலும்" என்றதன்பின் "நின்பூவை வீயா மேனிக்குப் பூசும்சாந்து என் நெஞ்சமே" என்றும், "நின்பூத்தண் மாலை நெடுமுடிக்குப் புனையும் கண்ணி எனதுயிரே" என்றும் தம்முடைய முக்கரணங்களின் செயல்களையே இறைவன் தனக்கு இனியபொருள்கள் எல்லாமுமாகக் கொள்வதே! என்று ஆழ்வார் தாமே ஈடுபட்டுப் பேசியிருத்தலால் அறியலாம்.*

[1] ஏறிய பித்தாய் - அவனை ஒத்த பொருள்களையும் அவனுடைய சம்பந்தமுடைய பொருள்களையும் அவனாகவே கருதிப் பேசும்படியாக "பேய்ச்சி முலைசுவைத்தார்க்கு என்பெண்கொடி ஏறிய பித்தே" என்னும்படி பித்து ஏறி,

தேச தூரத்துக்குக் கூவியும் கொள்ளாய் என்றது தீரக் கண்ட சதிரையும் ஒரு நிலமாகக் காட்ட - [2]தேச தூரத்துக்குக் கூவியும் கொள்ளாய் என்றது தீர - பரமபதத்தில் அநுபவத்தை ஆசைப் பட்டு,தேச தூரத்தை நினைத்துக் "கோல மேனி காண வாராய் கூவியும் கொள்ளாயே" என்கிறபடியே நீ வந்து உன் வடிவழகினை அநுபவிப்பித்தருளுதல் அல்லது என்னை அங்கே அருளப்பாடிடுதல் செய்கின்றிலை என்று கூப்பிட்ட இழவும் தீர,

[3] கண்ட சதிரையும் ஒரு நிலம் ஆகக் காட்ட - "ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்ட சதிர் கண்டொழிந்தேன்" என்கிறபடியே பரமபதத்தில் பெரியபிராட்டியாரும் நீயுமே அநுபவிக்கும் பொருள்களாக அப்பரமபதத்திலுள்ளார் அனைவரும் இன்பம் நுகர்தற்கு உறுப்பாம் கோடியிலேயாம்படி கண்டுவைத்த நேர்பாட்டை நான் கண்டேன் என்னும்படி, மேலே காலத்தின் காரணங்களைக் கழித்துச் சமகாலம் ஆக்கினாற்போலே, அப் பரமபதத்தில் அநுபவத்தையும் இங்கே இருந்தே அநுபவிக்கலாம்படி ஒருபோகியாகப் பிரகாசிப்பிக்க,

வீவில் இன்பம் கூட்டினை என்று முக்த போக மாநச பிராப்தி பலமான தேவதாந்தர ஆத்ம ஆத்மீய லோகயாத்ரா ஐச்வர்ய அசுதரங்களில் வைராக்யம் - வீவில் இன்பம் கூட்டினை என்று - [4] "வீவில் இன்பம் மிக எல்லை நிகழ்ந்தனன் மேவியே" என்றும், [5] "கூட்டரிய திருவடிக்கண் கூட்டினை நான் கண்டேனே" என்றும் கூறுகின்றபடியே அவனைக் கிட்டி அழிவில்லாத ஆனந்தமுடையவனாகப் பெற்

1. 'ஏறியபித்தாய்' என்றமிதனால் "மண்ணையிருந்து துழாவி" என்ற நாலாம் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகின்றது.

2. இதனால் "சீலமில்லாச் சிறியனேலும்" என்ற ஏழாம் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகின்றது.

3. "கண்ணாதார் முறுவலிப்ப" என்ற ஒன்பதாம் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகின்றது இவ்வாக்கியத்தால்.

4. இவ்வாக்கியத்தால் "வீற்றிருந்தேழுலகும்" என்ற ஐந்தாம் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகின்றது.

5. திருவாய். 4. 9: 8.

றேன், எத்தகைய சிலர்க்கும் தந்தாமால் சேர்த்துக்கொள்ள அரிய திருவடிகளை நான் சேரும்படி என்னைச் சேர்த்துக்கொண்டாய், நான் அநுபவிக்கப்பெற்றேன் என்ற அது மனத்தின் அநுபவமாகை யாலே, முக்த போக மானச பிராப்தி பலமான - இப்படி முக்தருடைய இன்பமான அவ்வநுபவத்தில் மானசமாக உண்டான பேற்றிற்குப் பலமான, தேவதாந்தர வைராக்யம் - [1] "உன்னித்து மற்றொரு தெய் வம் தொழாள்" என்கிறபடியே தன் நெஞ்சாலே மதித்து வேறு ஒரு தெய்வத்தைத் தொழுது அறியாள் என்னும்படி வேறு தெய்வங் களில் வைராக்கியத்தையும், ஆத்ம ஆத்மீய வைராக்யம் - [2] "உயிரி னால் குறையிலமே", [3] "உடம்பினால் குறை இலமே" என்னும்படி ஆன்மா, ஆன்மாவோடு சம்பந்தபட்ட பொருள்கள் என்னுமிவற்றில் வைராக்கியத்தையும், லோக யாத்ரா வைராக்யம் - [4] "கொடு உலகம் காட்டேலே" என்னும்படி இவ்வுலக வாழ்வில் வைராக்கியத்தையும், ஐச்வர்ய அக்ஷரங்களில் வைராக்யம் - [5] "வேட்கை எல்லாம் விடுத்து" என்று தொகுதியாகவும் [6] "ஐங்கருவி கண்ட இன்பம் ஒழிந்தேன்", "சிற்றின்பம் ஒழிந்தேன்" என்று பகுத்துத் தனித்தனி யாகவும் சொல்லும்படி செல்வத்திலும் அக்ஷரம் என்ற சொல்லின் பொருளான ஆத்ம அநுபவத்திலும் உண்டான வைராக்கியத்தையு முடையரான இவ்வாழ்வார்,

[7] ஒரு நாயகம் என்று ராஜ்ய ஸ்வர்க்க ஆத்மாநுபவ அல்ப அஸ்திரத்வ சாவதிகத்வ ஆதிகளையும் - ஒரு நாயகம் என்று ராஜ்ய அல்பத்வத்தையும் - [8] "ஒரு நாயகமாய் ஓட உலகு உடன் ஆண்டவர், கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர், பெரு நாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்" என்று தொடங்கி

---

1. திருவாய். 4. 6: 10.
2. திருவாய். 4. 8: 10.
3. திருவாய். 4. 8: 9.
4. திருவாய். 4. 9: 7.
5. திருவாய். 4. 9: 9.
6. திருவாய். 4. 9. 10.

7. இனிப் பரோபதேசம் செய்தபடிகளை அருளிச்செய்கிறார் மேல்: 'ஒருநாயகம்' என்று தொடங்கும் இவ்வாக்கியத்தை, ஒருநாயகம் என்று ராஜ்ய அல்பத்வத்தையும், ஸ்வர்க்கம் என்று அஸ்திரத்வத்தையும், ஆத் மாநுபவம் என்று சாவதிகத்வத்தையும் என்று முறை நிரல்நிறையாகக் கூட்டிக்கொள்க. அஸ்திரத்வம் - நிலையில்லாதது. சாவதிகத்வம் - ஓர் எல்லையுடன் கூடியது.

8. திருவாய். 4. 1: 1.

[1] "இராச்சியம் என்பது மருத்துவம் செய்யமுடியாததும் நாசம் உண்டுபண்ணத் தக்கதுமான ஒரு பெருநோய், அதற்காக அரசர்கள் உடன் பிறந்தவர்களையும் பிள்ளைகளையும் விடுகிறார்கள்" என்கிற அரசச் செல்வத்தின் சிறுமையையும், ஸ்வர்க்க அஸ்திரத்வத்தையும் - [2] "குடி மன்னும் இன்சுவர்க்கம் எய்தியும் மீள்வர்கள்" என்று, [3] "அவர்கள் பரந்த அந்தச் சுவர்க்கலோக இன்பத்தை அநுபவித்துப் புண்ணியம் குறைந்த அளவில் பூலோகத்தை அடைகிறார்கள்" என்கிற சுவர்க்கலோக அநுபவத்தின் நிலைஇன்மையையும், ஆத்மாநுபவ சாவதிகத்வத்தையும் - [4] "இறுகல் இறப்பு" என்று ஆத்மாநுபவத்தினுடைய அளவுடையதாம் தன்மையினையும், 'ஆதி' என்றதனாலே துக்கத்தோடு கூடியிருத்தல், வருந்திப் பெறவேண்டுந் தன்மை, இன்பமின்மை ஆகியவற்றைக் கூறுகின்றது.

[5] ஆடு கள் இறைச்சி கரும் செஞ்சோறு ஆகிற நிந்தியங்களாலே இளம் தைவத்துக்கு இழைத்து ஆடும் நிஹீநதையையும் - [6] "பூசைக்குரியபொருள் உலகத்தாரால் பழிக்கப்படுகின்ற கள் முதலியன, தெய்வமோ மிகத் தாழ்ந்த தெய்வம், சாஸ்திரம் வேதங்கட்குப் புறம்பான காமிகம் முதலான ஆகமங்கள், ஆசிரியர்களோ பூசாரிகள், இப்படிப்பட்டவர்களுடைய முறை மிகவும் பழிக்கத்தக்கது" என்கிற படியே, [7] "அங்கு ஓர் ஆடும் கள்ளும்", [8] "அங்கு ஓர் கள்ளும் இறைச்சியும்", [9] "கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும்" என்கிற கள் இறைச்சி முதலிய பழிக்கத்தக்க பொருள்களைக்கொண்டு [10] "நீர் அணங்கு ஆடும் இளம்தெய்வம்" என்கிற சிறு தெய்வங்களுக்குக்

---

1. *ராஜ்யம் நாம மஹாவ்யாதி ரசிகித்ஸ்யோ விநாசந:
ப்ராதரம்வா ஸுதம்வாபி த்யஜந்திகலு பூமிபா:*

என்பது, பிரமாணம்.

2. *திருவாய்.* 4. 1: 9.

3. *தே தம்புக்த்வா ஸ்வர்க்கலோகம் விசாலம்
க்ஷீணேபுண்யே மர்த்யலோகம் விஸந்தி.*

என்பது, ஸ்ரீகீதை, 9: 21.

4. *திருவாய்.* 4. 1: 10.

5. *'ஆடு கள் இறைச்சி' என்று தொடங்கும் வாக்கியத்தால் "தீர்ப்பாரை" என்ற திருப்பதிகத்தின் பொருள் கூறப்படுகிறது.*

6. *த்ரவ்யம் நிந்த்ய ஸுராதி தைவதமதிக்ஷுத்ரஞ்ச பாஹ்யாகமோ
த்ருஷ்டிர் தேவலகாச்ச தேசிகஜநா நிந்திதிசேஷாம்க்ரமம்.*

என்பது, பிரமாணம்.

7. *திருவாய்.* 4. 6: 7.

8. *திருவாய்.* 4. 6: 3.

9. *திருவாய்.* 4. 6: 4.

10. *திருவாய்.*4. 6: 2.

[1]"களன் இழைத்து" என்கிறபடியே அவ்வத் தெய்வங்கள் வசிக்கும் இடங்களிலே பலிஇட்டு [2]"நீர் அணங்கு ஆடுதல் கீழ்மையே" என்கிறபடியே தெய்வம் ஏறினவர்களாய்க் கொண்டு ஆடுமதனுடைய தண்மையையும்,

[3]பேச நின்ற தேவதா அஞ்ஞாந அசக்தி சாபேக்ஷத்வாதிகளையும்- [4]"பின்பு சீற்றம் கொண்டவனும் சிவந்த கண்களையுடையவனும் இருக்கிற என்னால் இடது கை கட்டவிரலின் நகத்தின் நுனியால் அந்தப் பிரமனுடைய தலையானது கிள்ளப்பட்டது" என்றும், [5]"ஒரு குற்றமும் செய்யாத என்னுடைய தலையானது எந்தக் காரணத்தால் உன்னால் அறுக்கப்பட்டதோ அந்தக் காரணத்தால் நீ சாபத்துடன் கூடினவனாய் மண்டை ஓட்டினைக் கையில் ஏந்தினவனாக ஆவாய்" என்றும், [6]"அங்குப் பிராட்டியோடு கூடின நாராயணன் என்னால் பிச்சை யாசிக்கப்பட்டான்" என்றும், [7]"அழகிய பார்வதியே! திருமாலின் அருளால் அந்த மண்டை ஓடானது ஆயிரம் துண்டுகளாக வெடித்தது, கனவில் கண்ட செல்வம் போன்று பலவகையாகச் சென்றது" என்றும் சொல்லுகிறபடியே பிரமன், சிவனாலே தலை அறுப்புண்டு துன்புற்றவனாய்ச் சிவனைச் சபிக்க, சிவன், குருவான பிரமனுடைய தலையைக் கிள்ளிய காரணத்தால் மாபாவியாய், பிரமனது சாபத்தைத் தன்னால் போக்கிக் கொள்ளப்போகாமையாலே திருமகள்கேள்வனை சர்வேச்வரனை யாசிக்க, அவன் அந்தச் சாபத்தைப் போக்கினானகையாலே [8]"பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே; கபால நன்மோக்கத்துக் கண்டு கொண்மின்" என்றபடியே, வேதத்தில்

1. திருவாய். 4. 6: 4. 2. திருவாய். 4. 6: 8.

3. 'பேசநின்ற' என்றது முதல் "ஒன்றும் தேவும்" என்ற பத்தாம் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகிறது.

4. தத: க்ரோதபரீதேந ஸம்ரக்த நயநேந ச
வாமாங்குஷ்ட நகாக்ரேண சின்னம் தஸ்யசிரோமயா.
என்பது, மாத்சபுராணம்.

5. யஸ்மாதநபராதஸ்ய சிரச்சின்நம் த்வயாமம
தஸ்மாச் சாபஸமாயுக்த: கபாலீத்வம் பவிஷ்யஸி.
என்பது, மாத்சபுராணம்.

6. தத்ரநாராயண: ஸ்ரீமாந்மயாபிக்ஷாம் ப்ரயாசித:
என்பது, மாத்சபுராணம்.

7. விஷ்ணு ப்ரஸாதாத் ஸுச்ரோணி கபாலம்தத் ஸஹஸ்ரதா
ஸ்புடிதம் பஹுதாயாதம் ஸ்வப்நலப்தம் தநம்யதா.
என்பது, மாத்சபுராணம்.

8. திருவாய். 4. 10: 4.

புனைந்துரைக்கின்ற வாக்கியங்களாலும் இராசத தாமத புராணங்களாலும் பரம்பொருளாகப் பேசலாம்படி முட்டுப் பொறுத்து நின்ற பிரமன் சிவன் முதலான தேவர்கள் ஒருவர்க்கொருவர் தங்களுக்கு வருகிற துன்பங்களை அறியாமையும், அந்தத் துன்பங்களைத் தாங்கள் தவிர்த்துக் கொள்ளமாட்டாமையும், அதனைத் தவிர்த்துக் கொடுக்கைக்கு ஈச்வரன் வேண்டுகையும் ஆகிற அறிவின்மையையும், ஆற்றல் இன்மையையும், சர்வேச்வரனை விரும்பியிருத்தலையும், 'ஆதி' என்ற சொல்லால் கர்மங்கட்கு வசப்பட்டிருத்தலையும் கொள்க.

இலிங்கத்து விளம்பும் பாஹ்ய குத்ருஷ்டி மத தமோநிஷ்டதையையும் சொல்லி - [1]"இலிங்கத்திட்ட புராணத்தீரும்", [2]"விளம்பும் ஆறு சமயமும்" என்கிற திருப்பாசுரங்களில் சொல்லுகிற புறச்சமயங்களும் குதிருஷ்டிசமயங்களும் ஆவன: [3]"பராசர முனிவரே! இந்த உலகம் எதனை ஆத்மாவாக உடையது" என்று பொதுவிலே கேட்க, [4]"இந்த உலகங்கள் எல்லாம் மகாவிஷ்ணுவினிடமிருந்து உண்டாயின, அந்த விஷ்ணுவினிடத்திலேயே லயப்பட்டு இருக்கின்றன" என்று கோல்விழுக்காட்டாலே விடையாதல் அன்றிக்கே, எருமையை யானையாகக் கவிபாடித் தரவேண்டும் என்பாரைப் போலே, இலிங்கம் என்ற ஒரு உருவுடைப்பொருளைக் குறித்துக் காட்டி இதற்கு ஏற்றம் சொல்லித் தரவேண்டும் என்று கேட்கிறவனும் தமோ குணத்தால் மூடப்பட்டவனாய்க் கேட்க, சொல்லுகிறவனும் தமோ குணத்தால் மூடப்பட்டவனாய்ச் சொல்ல, இப்படித் தோன்றிப் பரந்த இலிங்கபுராணம் முதலான [5]குதிருஷ்டி ஸ்மிருதிகளும், சிலவற்றைச் சொல்லாநின்றால் தாங்களும் சில தர்க்கங்களைச் சொல்லாநிற்குமத்தனை போக்கிப் பிரமாணத்தை அநுசரித்த தர்க்கம் அல்லாமையாலே கேவலம் சொல்நயமேயாயிருக்கிற புறச்சமயங்கள் ஆறும் என்ற சமணம் பௌத்தம் முதலியவற்றினுடைய ஸ்மிருதிகளும் ஆகையாலே [6]"வேதங்கட்குப் புறம்பான ஸ்மிருதிகள் எவையோ, குதிருஷ்டிகளான மதங்கள் எவையோ, அவைகள்

---

1. திருவாய். 4. 10: 5. 2. திருவாய். 4. 10: 9.

3. "யந்மயம் ச ஜகத்ஸர்வம்" என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 1. 1: 5.

4. "விஷ்ணோஸ் ஸகாசாத்உத்பூதம்" என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 1. 1: 41.

5. குத்ருஷ்டி - வேதவாக்கியங்களுக்கு நேர் பொருள் காணாமல் மாறுபட்ட பொருளைக் காண்கின்றவர்கள்.

6. யாவேதபாஹ்யாஸ் ஸ்ம்ருதய: யாச்ச காச்ச குத்ருஷ்டய:
தாஸ்ஸர்வாநிஷ்பலா: ப்ரேத்ய தமோ நிஷ்டாஹிதா:ஸ்ம்ருதா:
என்பது, மநுஸ்மிருதி, 12: 95.

எல்லாம் மறுமையில் பலன்களைக் கொடுப்பன அல்ல; அவைகள் தாமத நிலைகளாக உள்ளன என்று சொல்லப்பட்டன" என்கிற படியே அவற்றினுடைய தாமதநிலையினையும் சொல்லி,

ஓடிக்கண்டீர் - [1]"ஓடி ஓடிப் பல பிறப்பும் பிறந்து" என்று தொடங்கி "வழி ஏறிக் கண்டீர்" என்று, [2]"சுவர்க்கம் முதலான உலகங்களில் விருப்பமுள்ளவர்கள் போவதையும் வருவதையும் அடைகிறார்கள்" என்கிறபடியே, சுவர்க்க நரகங்களில் போவது, கருப்பத்தேற வருவதாய்க் கொண்டு பலபல பிறவிகளில் பிறந்து, மற்றைத் தெய்வங்களை முக்கரணங்களாலும் பலமுறை அவர்களை அடைகிற முறையைச் சொல்லுகிற சாஸ்திர நெறியாலே அடைந்து, அங்ஙனம் அடைதலாலாய பலன்களையும் கண்டீர்கோள். [3] கண்டும் தெளியகில்லீர் - உலகங்களை உண்ணுதல் முதலிய அவனுடைய தெய்வச் செயல்களைச் சாஸ்திர மூலமாக அறிந்தும் இவனே அடையத்தக்கவன் என்று தெளியமாட்டுகிறிலீர்கோள். [4] அறிந்து அறிந்து ஓடுமின் - உங்களை இங்ஙனே வைத்தது, நல்வினை தீவினைகளைச் செய்கின்ற உயிர்கள் அந்த அந்தக் கர்மங்களுக்குத் தகுதியான பலன்களை அநுபவிக்கக்கடவதான சாஸ்திர மரியாதை அழியும் என்று, அதுதான், [5]"என்னுடைய மாயையானது ஒருவராலும் தாண்டமுடியாதது" என்கிற மாயையினைக்கொண்டு அவன் மயக்கி வைத்தபடி காணுங்கோள். ஆனபின்பு, அது அவன் மாயை என்று அறிந்து, "எவர்கள் என்னையே சரண் அடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையினைத் தாண்டுகிறார்கள்" என்கையாலே இம் மாயையினைத் தாண்டும் உபாயமும் அவன் திருவடிகளைப் பற்றுகை என்று அறிந்து, அவனை அடைந்து இம் மாயையினைத் தப்பப் பாருங்கோள்.

ஆள் செய்வதே உறுவது ஆவது என்று - [6]"நீள்குடக்கூத்தனுக்கு ஆள்செய்வதே உறுவது ஆவது" என்கையாலே, எல்லை இல்லாத இனியதான குடக்கூத்து ஆடுதலாகிற செயலையுடையவனுக்கு அடிமை செய்கையே இவ்வான்மாவுக்குச் சீரியதும் எளிதில் செய்

1. திருவாய். 4. 10: 7.

2. "கதாகதம் காம காமா லபந்தே" என்பது, ஸ்ரீகீதை, 9: 21.

3. திருவாய். 4. 10: 3. 4. திருவாய். 4. 10: 6.

5. "மம மாயா துரத்யயா" என்பது, ஸ்ரீகீதை, 7: 14. மாயை - பிரகிருதி சம்பந்தம்.

6. திருவாய். 4. 10: 10.

யத்தக்கதும் என்று இப்படி உபதேசித்து, விரக்திபூர்வகமாக ஆச்ர யணத்தை ருசிப்பிக்கிறார் நாலாம்பத்தில் - அதாவது, வேறு பயன்களை விரும்பாமை முன்னாக, வேறு தெய்வங்களை விரும்பாமை முன்னாக, புறச்சமயங்களையும் குத்ருஷ்டி சமயங்களையும் விரும்பாமை முன்னாக, உலககாரணனாக இருத்தல் முதலான பிரமாணப் பொருத்தங்களாலே பகவானைப் பற்றுதலின் சுவையை இவ்வுலகமக்களுக்கு உண்டாக்குகின்றார் என்கை. (4)

223

[1]ஆவா என்று தானே தன்னடியார்க்குச் செய்யும் தொல்லருள் என்று, பரத்வாதிகளையுடையவன் 'எவ்விடத்தான்' என்னும் பாவியர்க்கும் இருகரையும் அழிக்கும் கிருபாபிரவாஹமுடையவன், பொய் கூத்து வஞ்சக்களவு தவிர, முற்றவும்தானாய், உன்னைவிட்டு என்னப்பண்ணின விரக்தி பல பரமாத்ம ராகம், பேரமர் பின்னின்று கழியமிக்கு, யானே என்ன வாய்ந்து, ஆற்றகில்லாது நீராய் மெலிய ஊடுபுக்கு வளர, விஷவிருக்ஷ பலங்கள் கைகூடினவர், அடிமைபுக்காரையும் ஆட்செய்வாரையும் காண, லோக த்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களைக் கண்டு காப்பிட்டு, பிரஹ்லாத விபீஷணர் சொற்கேளாத அரக்கர் அசுரர்போல்வரைத் தடவிப் பிடித்து, தேச கால தோஷம் போக எங்கும் இடம் கொண்டவர்களை மேவித் தொழுது உஜ்ஜீவியுங்கோள்; நீங்கள் நிறுத்துகிறவர்களைத் தேவதைகளாக நிறுத்தினவனை மேவிப் பரம்பும் அவரோடு ஒக்கத்தொழில் யுகதோஷம் இல்லையாம் என்று விஷ்ணு பக்திபரராக்கி, கண்ணுக்கு இனியன காட்டலாம்படியானார் கண்ணிலே நோக்கிக்காணும் பக்தி சித்தாஞ்ஜனத்தை இடுகிறார் அஞ்சாம்பத்தில்.

என்பது, சூத்திரம்.

---

1. *சூத்திரத்தில் 'கிருபாபிரவாஹமுடையவன்' என்னும் துணையும் ஒரு பகுதி; இதனால் இறைவன் பேரருட்கடல் என்பதனை வெளியிடுகிறார். அதற்குமேல் 'விஷவிருக்ஷ பலங்கள் கைகூடினவர்' என்னும் துணையும் ஒரு பகுதி; இதனால் இறைவன் செய்த திருவருளால் ஆழ்வார் அடைந்த தன்மையைத் தெரிவிக்கிறார். அத்தன்மையரான ஆழ்வார் செய்த காரியங்களைத் தெரிவிக்கிறார் அதற்குமேலுள்ள பகுதிகளில் எல்லாம்.*

வியாக் :— மேலே போந்த நான்கு பத்துக்களிலும் சொல்லப்பட்ட பரத்துவம், காரணத்துவம், வியாபகத்வம், நியாமகத்வம் ஆகிற குணங்களால் வந்த தன்னுடைய உயர்வற உயர்ந்த உயர்வினையும், தங்கள் தங்களுடைய தாழ்வினையும் நினைந்து அகன்றுபோக நினைக்குமவர்கள் திறத்திலும் மேல் விழுந்து அங்கீகரிக்கும்படி பரமகாருணிகனான சர்வேச்வரன், மேல்பத்தில் இவர்க்குப் பிறப்பித்த விரக்திக்குப் பலமான தன் விஷயமான பக்தியைத் தொடர்ந்து வளரச் செய்ய, அந்தப்பக்தியையும் பாகவதர்களுடைய கூட்டுறவையுமுடையரான இவ்வாழ்வார், தாம் திருத்தத் திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களையும், திருத்தின தம்மையும் காண்கைக்கு வந்த நித்தியசூரிகளையும், சுவேதத்வீபத்தில் வசிக்கின்ற சித்தர்களையும் கண்டு மங்களாசாசனம் செய்து, திருந்தாத அசுர இராக்கதத் தன்மை வாய்ந்தவர்களையும், பகவானுடையவும் பாகவதர்களுடையவுமான வைபவத்தை உபதேசித்துத் திருத்தி, பாகவதர்களுடைய கூட்டுறவைக் காணுதல் இனிதாம்படியான ஞானம் பிறந்தார்க்குப் பேற்றிலே பதற்றத்துக்கு அடியான பக்தியையும் உபதேசித்துத் தலைக்கட்டுகிறார் இந்த ஐந்தாம்பத்தில்.

[1] ஆ ஆ என்று தானே தன் அடியார்க்குச் செய்யும் தொல்லருள் என்று - ஆ ஆ என்று - [2] "ஆஆ என்று அருள் செய்து" என்கிறபடியே, ஐயோ! ஐயோ! என்று என்பக்கலிலே கிருபையைச்செய்து என்றும், தானே- [3] "தானே இன்னருள் செய்து" என்கிறபடியே நான் விரும்பாமலிருக்கத் தானே தன்பேருகத் திருவருளைச்செய்து என்றும், தன் அடியார்க்குச் செய்யும் - [4] "கலியுகம் ஒன்றும்இன்றிக்கே தன்னடியார்க்கு அருள் செய்யும்" என்கிறபடியே தன்பக்கலிலே தங்கள் பாரத்தை வைத்த அடியார்களுக்குக் கலிதோஷங்கள் ஒன்றும் வாராதபடியாகத் திருவருள்செய்யும் என்றும், தொல் அருள் என்று - [5] "பெருமானது தொல்லருளே" என்கிறபடியே சர்வேச்வரனுடைய இயல்பிலே அமைந்த திருவருள் என்றும் சொல்லுகிறபடியே, பரத்வ

---

1. ஐந்தாம் பத்தில் பேசப்பட்ட எம்பெருமானுடைய குணம் கிருபை என்பது. மேலே போந்த நான்கு பத்துக்களாலும் தெரிவிக்கப்பட்ட பரத்துவம், காரணத்வம், வியாபகத்வம், நியாமகத்வம் என்றும் குணங்களைக் கண்டு மக்கள் அஞ்சவேண்டாதபடி இப்பத்தால் அவனுடைய கிருபை என்னும் குணத்தை வெளியிடுகிறார் என்றபடி. அருட்குணத்தை வெளியிடும் திருப்பாசுரப் பகுதிகளைச் சேர்த்து அருளிச்செய்கிறார் 'ஆ ஆ' என்று தொடங்கி.

2. திருவாய். 5. 1: 9. 3. திருவாய். 5. 1: 10.

4. திருவாய். 5. 2: 11. 5. திருவாய். 5. 9: 9.

ஆதிகளையுடையவன் எவ்விடத்தான் என்னும் பாவியர்க்கும் இரு கரையும் அழிக்கும் கிருபாபிரவாஹமுடையவன் - பரத்வ ஆதிகளை யுடையவன் எவ்விடத்தான் என்னும் பாவியர்க்கும் -[1] "அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யான் ஆர், எம் மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர்" என்கிறபடியே கையும் திரு வாழியுமான அழகை நித்தியசூரிகளுக்குக் காட்சிகொடுத்துக் கொண்டு அங்குள்ளாருடனே கலந்திருக்கின்ற சர்வேச்வரன் எவ் வளவிலே! இங்கே பிறப்பு இறப்புக்களிலே உழன்று திரிந்துகொண் டிருப்பவர்களுக்கும் இவ்வருகான நான் எவ்வளவிலே! என்று, மேலே கூறிய தன்னுடைய அறப்பெரியவனாக இருத்தல், உலக காரணனாக இருத்தல், எங்கும் பரந்திருத்தல், எல்லாப்பொருள்களையும் நியமிக் கின்றவனாக இருத்தல் முதலியவற்றால் வந்த உயர்வினையும், தங்களு டைய தாழ்வினையும் நினைந்து அகலும்படி எத்தனையேனும் மாபாவியர் களாக இருந்தாலும் அவர்கள் அளவிலும், [2] இருகரையும் அழிக்கும் கிருபாபிரவாகமுடையவன் - மக்களுடைய கர்மங்கட்குத் தகுந்தபடி நடத்துவதற்கு உடலான தடைஇல்லாத தன்னுடைய சுவாதந்திரிய மாகிற கரையும், இறைவனுடைய திருவருள் தங்கள்பக்கல்வாராதபடி தீவினைகளையே செய்யும் இம்மக்களுடைய செருக்கினாலாய சுவாதந் திரியமாகிற கரையும் அழியும்படி பெருகுகின்ற திருவருள்வெள்ளத் தையுடைய சர்வேச்வரன்,

[3] பொய் கூத்து வஞ்சக்களவு தவிர - "பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமே ஆடி" என்றும், [4] "தேனே! இன்னமுதே! என் றென்றே சில கூத்துச் சொல்ல" என்றும், [5] "வள்ளல்! மணிவண் ணனே! என்றென்றே உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனம் தவிர்ந்தே"

---

1. திருவாய். 5. 1: 7.

2. இருகரையாவது, அவர் அவர்களுடைய நல்வினை தீவினைகட்குத் தக்கவாறு காப்பாற்றுதற்குக் காரணமான எவ்விதமான தடையும் இல் லாத இறைவனுடைய தன்னுடைய சுவாதந்திரியம் ஒரு கரை. இறைவ னுடைய திருவருள் தங்கள்பக்கல் வராதபடி பாவங்களையே செய்யும் இம் மக்களுடைய சுவாதந்திரியம் மற்றொருகரை. ஆக, இவ்விருகரையும் அழி யும்படி பெருகாநிற்கின்ற கிருபாவெள்ளம் என்றபடி.

3. 'பொய்கூத்து' என்றது முதல் 'என்னப் பண்ணின' என்பது முடிய 'கையார் சக்கரம்' என்ற திருப்பதிகத்தின் பொருள் பேசப்படு கிறது. திருவாய். 5. 1: 1.

4. திருவாய். 5. 1: 2. 5. திருவாய். 5. 1: 3.

என்றும் சொல்லுகிறபடியே, மெய்கலவாத பெரும்பொய்யைச் சொல்லி, பக்தியினாலே பரவசப்பட்டவரைப் போலே பாவித்து, மனம் புறப்பொருள்களிலே அன்புற்றிருக்க, வேறுபயனைக் கருதாதாரைப் போலே உன்னுடைய வள்ளன்மையையும் வடிவழகையும் மனத்தோடு பட்டுச் சொல்லுகிறார் என்று தோன்றும்படி பலகாலும் சொல்லிக் கொண்டு, முற்றறிவினனான உன்னையும் பகட்டும் கள்ளமனத்தினைத் தவிர்ந்து என்று, அவற்றை இவர் தவிரும்படி,

முற்றவும் தானாய் - [1]"ஆனான் ஆளுடையான் என்று அஃதே கொண்டு உகந்து வந்து, தானே இன்னருள் செய்து என்னை முற்றவும் தானானான்" என்கிறபடியே இவர்க்கு எல்லாவித இனிய பொருள்களும் தானாய், உன்னைவிட்டு என்னப் பண்ணின - [2]"வெள்ளத்து அணைக் கிடந்தாய் இனி உன்னை விட்டு என்கொள்வனே" என்கிறபடியே நான் விட்ட அன்றும் விடமாட்டாத உன்னை ஒழிய வருந்தி ஆராதிக்கத்தக்கதாய், வருந்தி ஆராதித்தாலும் கிடைக்கும் பயன் ஒன்றில்லாத புறவிஷயங்களைப் பற்றவோ என்று இவர் தாமே பேசும்படி செய்த, விரக்தி பலம் - [3]கண்டசதிர்கண்டு, கண்டுகேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி கண்ட இன்பம், தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்தேன்" என்கிறபடியே அவனுடைய இனிமையாலே சிற்றின்பத்தையும் கைவல்யத்தையும் அடைய வெறுக்கும்படி மேல்பத்தில் பிறந்த விரக்திக்குப் பலமான, பரமாத்ம ராகம் - [4]"எவன் பரம்பொருளிடத்தில் மிக்க பக்தியை யுடையவனாய்" என்கிற பரமாத்ம விஷயத்தில் ஆசையானது,

[5]பேரமர் பின்னின்று கழியமிக்கு யானேஎன்ன வாய்ந்து-பேரமர்- [6]"பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த" என்கிறபடியே அளவிட்டு அறிய முடியாததாய்ப் பொருந்தி, பின்னின்று - [7]"பின்நின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடுமால்" என்கிறபடியே பிடரி பிடித்துநின்று நெஞ்சினை முடிக்கும்படியாய், கழிய மிக்கு - [8]"கழிய மிக்கதோர் காதலள் இவள்" என்கிறபடியே பக்கத்திலுள்ளவர்கள்

1. திருவாய். 5. 1: 10. 2. திருவாய். 5. 1: 3.
3. திருவாய். 4. 9. 10.
4. "பரமாத்மநி யோரக்த:" என்பது, பார்ஹஸ்பத்ய ஸ்மிருதி.
5. 'பேரமர், பின்னின்று, கழியமிக்கு' என்பனவற்றால், 3, 4, 5-ஆம் திருப்பதிகங்களின் கருத்துக் கூறப்படுகிறது.
6. திருவாய். 5. 3: 4. 7. திருவாய். 5. 4: 6.
8. திருவாய். 5. 5: 10.

பேசும்படி மிகவும் கைகழிந்து, யானேஎன்ன வாய்ந்து - [1] "கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்" என்று தொடங்கி "வாய்ந்த வழுதி வளநாடன்" என்று அவனுடைய உலக காரணனாக இருத்தல் முதலிய ஆச்சரியமான செயல்களை நானே செய்தேன் என்று அநுகார முகத்தாலே விஷயத்தைக் கிட்டிப் பேசும்படியாய்,

ஆற்றகில்லாது நீராய் மெலிய ஊடுபுக்கு வளர - ஆற்றகில்லாது - [2] நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் ஆகிலும் இனி உன்னைவிட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன்" என்கிறபடியே அவனை ஒழிய ஒரு கணமும் தரித்திருக்கமாட்டாதபடியாய், [3] நீராய் - "ஆராவமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே நீராய் அலைந்து கரைய" என்கிறபடியே எம்பெருமானுடைய இனிமை மிகுதியால் வந்த அன்பினாலே ஞானத்திற்கு நிலைக்களமான ஆன்மாவாதல், ஞானம் செல்லுதற்கு வழியான மனமாதல் அன்றிக்கே, ஆன்மாவிற்கு நிலைக்களமான சரீரமும் நிலைகுலையும்படியாய், [4] மெலிய - "மானேய் நோக்கு நல்லீர்! வைகலும் வினையேன் மெலிய" என்கிறபடியே சரீரத்தின் அந் நிலைகுலைவுதான் ஒரு காலத்தில் அன்றிக்கே எல்லாக் காலமும் மெலியும்படியாய், ஊடு புக்கு வளர - [5] "நிறந்தனூடு புக்கு எனதாவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற" என்கிறபடியே பகவானுடைய குணங்கள் மார்பிலே புகுந்து ஆன்மாவை இடைவிடாமல் நீர்ப்பண்டமாக்கும்படி வளர,

விஷ விருக்ஷ பலங்கள் கைகூடினவர் - இப்படிப் பகவானிடத்தில் அன்பு வளருகையாலும் பாகவதர்களோடே கூடப் பெறுகையாலும் [6] "இவ் வுலகவாழ்வாகிற நச்சுமரத்திற்கு அமிருதத்திற்கு ஒப்பான இரண்டு கனிகள் உண்டு; அவை எவை? எனில், ஒரே

---

1. 'கடல் ஞாலம்' என்ற ஆரும் திருப்பதிகத்தின் கருத்துக் கூறப்படுகின்றது. திருவாய். 5. 6: 1.

2. "நோற்ற நோன்பிலேன்" என்ற ஏழாம் திருப்பதிகத்தில் சொல்லப்பட்ட பொருளின் கருத்து இந்த வாக்கியம்.

3. இந்த வாக்கியம் "ஆராவமுதே" என்ற எட்டாம் திருப்பதிகத்தில் கூறப்பட்ட பொருளின் கருத்து.

4. 'மெலிய' என்பது, "மானேய் நோக்கு நல்லீர்" என்ற ஒன்பதாம் திருப்பதிகத்தின் கருத்து.

5. இந்த வாக்கியம் "பிறந்தவாறும்" என்ற பத்தாம் திருப்பதிகத்தின் கருத்து.

6. ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்வேபலே ஹ்யம்ருதோபமே
கதாசித் கேசவேபக்தி: தத்பக்தைர்வா ஸமாகம:.

என்பது, பிரமாணம்.

காலத்தில் கேசவனிடத்தில் பக்தியும், அவன் அடியார்களோடே கூடி யிருத்தலுமே ஆம்'' என்கிறபடியே சம்சாரமாகிற விஷமரத்தில், அமிருதத்தோடு ஒத்த கனிகளாகச் சொல்லப்பட்ட பகவானிடத்தில் பக்தியும், பாகவதர்களின்கூட்டுறவும் ஆகிற கனிகள் இரண்டும் கைபுகுந்த இவ்வாழ்வார்,

அடிமைபுக்காரையும் ஆட்செய்வாரையும்-அடிமைபுக்காரையும்- "ஒன்றும் தேவும்'' என்ற திருவாய்மொழியில், "மற்றைத் தெய்வம் *நாடுதிரே*'' *என்றும், "பாடி ஆடிப் பரவிச் சென்மின்கள்'' என்றும்,* "தெய்வம் மற்றில்லை'' என்றும், "பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே'' என்றும், "ஒன்றும் பொய் யில்லை போற்றுமினே'' என்றும், "அறிந்து அறிந்து ஓடுமினே'' என்றும், "ஆதி மூர்த்திக்கு அடிமை புகுவதுவே'' என்றும், "மற்றைத் தெய்வம் விளம்புதிரே'' என்றும், "உளம்கொள் ஞானத்து வைம்மின் உம்மை உய்யக்கொண்டு போகுறிலே'' என்றும், "ஆட்செய் வதே உறுவதாவது'' என்றும் மற்றைத் தெய்வங்கள் நாயகர் அல்லர் என்பது முன்னாகப் பகவானுடைய முதன்மையையும், பகவானை அடைவதற்குரிய வகையையும், பகவானுக்குச் செய்யும் தொண்டே புருஷார்த்தம் என்னுமதனையும் தெளிய உபதேசிக்கக் கேட்டுத் திருந்தி அடிமைபுக்க ஸ்ரீ வைஷ்ணவர்களையும், ஆட்செய்வாரையும் - "ஆட்செய்து ஆழிப்பிரானைச் சேர்ந்தவன்'' என்கிறபடியே இப்படித் திருத்துகையாலே அடிமை செய்தவரான தம்மையும்,

[1] காண லோக த்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களைக் கண்டு காப்பிட்டு - காண - காண்கைக்கு, லோக த்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களை - "வைகுந்தன் பூதங்களேயாய்'' என்றும், "தடம் கடல் பள்ளிப்பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய்'' என்றும், "தேவர்கள் தாமும் புகுந்து'' என்றும் சொல்லுகிறபடியே அவ்வுலகமான ஸ்ரீ வைகுண்டத்திலுள்ளாராயும், வேறு தீவகமான சுவேதத் தீவகத்திலுள்ளாராயும், "நேமிப்பிரான் தமர் போந்தார்'' என்கிறபடியே வந்த நித்தியசூரிகளும் முக்தர்களைப் போன்றவர்களுமான தேவர்களுடைய திரள்களை, கண்டு - "கண்டோம் கண்டோம் கண்டோம்'' என்கிறபடியே கண்களுக்கு இனியதாய்

---

1. *"பொலிக பொலிக'' என்ற திருப்பதிகத்திற் கூறும் பொருளை அருளிச்செய்கிறார் 'காண லோக த்வீபாந்தரங்களில்' என்று தொடங்கி 'விஷ்ணு பக்திபராக்கி' என்பது முடிய.*

இருக்கையாலே கண்டோம் என்று பலகாலும் சொல்லும்படி கண்டு, காப்பிட்டு - "பொலிக பொலிக பொலிக" என்கிறபடியே அத் திரள் மேன்மேலும் வளர்க என்று மங்களாசாசனம் செய்து,

பிரஹ்லாத விபீஷணர் சொல் கேளாத அரக்கர் அசுரர் போல் வாரைத் தடவிப் பிடித்து - [1] "உன்னிடத்திலும் இருக்கிறான், என்னிடத்திலும் இருக்கிறான்" என்று பிரஹ்லாதன் உபதேசிக்கக் கேட்டுத் திருந்தாத அசுரனான இரணியனையும், [2] "ஸ்ரீராமபிரானிடத்தில் சீதாபிராட்டியை ஒப்புவித்திடுக" என்று ஸ்ரீவிபீஷணாழ்வான் உபதேசிக்கக் கேட்டும் திருந்தாத அரக்கனான இராவணனையும்போலே, மேலே தாம் உபதேசித்த உபதேசத்தில் திருந்தாமல் கிடந்த அரக்கர் தன்மை வாய்ந்தவர்களும் அசுரர்தன்மை வாய்ந்தவர்களுமாக உள்ளவர்களை "அரக்கர் அசுரர் பிறந்தீர் உள்ளீரேல்" என்று தேடிப் [3] பிடித்து,

தேச கால தோஷம் போக எங்கும் இடம் கொண்டவர்களை மேவித்தொழுது உஜ்ஜீவியுங்கோள் - தேச தோஷம் போக - "கொன்று உயிர் உண்ணும் விசாதி பகை பசி தீயன எல்லாம், நின்று இவ்வுலகில் கடிவான் நேமிப்பிரான் தமர் போந்தார்" என்கிறபடியே சரீரத்தை முடித்து உயிரைக் கவரக்கூடியதான நோய், அப்படிச் செய்யும் பகை, பசி முதலான தேசத்தின் குற்றங்கள் தங்கள் சஞ்சாரத்தாலே போம்படியும், காலதோஷம் போக - "திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து" என்கிறபடியே பொருள்களின் தன்மைகள் வேறுபடும்படியான கலிபுருஷனால் வருகின்ற காலத்தின் குற்றகங்ள் தங்கள் சஞ்சாரத்தாலே போம்படியாகவும், எங்கும் இடம் கொண்டவர்களை - "இரியப் புகுந்து இசைபாடி எங்கும் இடம் கொண்டன" என்கிறபடியே பகவானை அநுபவிக்கின்ற அநுபவத்தின் பெருமகிழ்ச்சியாலே பெரிய ஆரவாரத்தோடே புகுந்து, பகவத் பக்தி இல்லாதார்க்கு இடம் இல்லாதபடி, எல்லா இடங்களிலும் பரவியிருக்குமவர்களை, மேவித் தொழுது உஜ்ஜீவியுங்கோள் - "மேவித் தொழுது உய்ம்மினீர்கள்" என்கிறபடியே நீங்கள் வேறு பயன்களைக் கருதாதவர்களாய்க்கொண்டு அடைந்து உய்வுபெறுங்கோள் ;

---

1. *"த்வயி அஸ்தி மயி அஸ்திச"* *என்பது, பிரமாணம்.*

2. *"ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ"* *என்பது, ஸ்ரீராமா. யுத்.* 14: 34.

3. *'பிடித்து' என்னும் இவ்வெச்சத்தை, பின்னே வருகின்ற 'விஷ்ணுபராக்கி' என்றதனோடு முடிக்க.*

நீங்கள் நிறுத்துகிறவர்களைத் தேவதைகளாக நிறுத்தினவனை - நீங்கள் நிறுத்துகிறவர்களை - அவ்வளவு போகமாட்டாமல் வேறு தேவர்களிடத்து வைத்த அன்பினாலே பகவானுடைய பெருமையை அறிகைக்குத் தகுதியான ஞானம் இல்லாதவர்கள் ஆகில், "நிறுத்தி நும் உள்ளத்துக் கொள்ளும் தெய்வங்கள்" என்கிறபடியே அவை தமக்கு இயல்பாகவே உயர்வு இல்லாமையாலே போலிவார்த்தைகளாலும் போலியுக்திகளாலும் நீங்கள் சேமம் சாத்தி நிறுத்திப் புறம்பே சிலர் அறியில் பரிகசிப்பர்கள் என்று உங்கள் நெஞ்சுக்குள்ளே நீங்கள் அறிந்ததாக வணங்கும் தெய்வங்களை, தேவதைகளாக நிறுத்தினவனை - "நிறுத்தினான் தெய்வங்களாக அத் தெய்வ நாயகன் தானே" என்கிறபடியே அரசனானவன் ஊர்தோறும் கூறு செய்வார்களை நிறுத்துமாறுபோலே உங்களால் அடையத்தக்கவர்களாக நிறுத்தின சர்வேச்வரனை,

மேவிப் பரம்பும் அவரோடு ஒக்கத் தொழில் யுகதோஷம் இல்லையாம் என்று - "நக்கபிரானோடு அயனும் இந்திரனும் முதலாகத் தொக்க அமரர் குழாங்கள் கண்ணன் - திருமூர்த்தியை - மேவி - மிக்க உலகுகள் தோறும் - எங்கும் பரந்தன - ஒக்கத் தொழகிற்றிராகில் கலியுகம் ஒன்றும் இல்லையே" என்கிறபடியே சிவனோடே பிரமனும் இந்திரனும் முதலாகத் திரண்ட தெய்வங்களின் கூட்டங்கள், கிருஷ்ணனுடைய அவனுக்கே யுரியதான திருமேனியை நன்மைக்கிடமாகப் பற்றி, விரிந்திருக்கின்ற உலகங்கள் எங்கும் ஒக்கப்பரந்து, உலகங்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன; அக்கூட்டங்களைப் போன்று நீங்களும் அவனை அடையப்பெறில் தீமைகளை விளைக்கின்ற கலியுகத்தின் குற்றம் உங்களைத் தட்டாது என்று உபதேசித்து, விஷ்ணு பக்தி பரராக்கி - "விஷ்ணுவிடம் பக்தி உள்ளவன் தெய்வப் பிறவியையுடையவன்" என்கிறபடியே "அரக்கர் அசுரர்" என்னுமதுபோய், தேவர் என்ற சொல்லுக்குரியராம்படி பகவானிடத்தில் பக்தியுடையவராம்படி திருத்தி,

[1] கண்ணுக்கு இனியன காட்டலாம்படிஆனார் கண்ணிலே நோக்கிக்காணும் பக்தி சித்தாஞ்சனத்தை இடுகிறார் ஐந்தாம்பத்தால் - கண்ணுக்கு இனியன காட்டலாம்படியானார் கண்ணிலே - அதாவது,

---

1. 'கண்ணுக்கு இனியன காட்டலாம்படியானார்' என்றது, உபாய அத்யவசாய நிலையிலே நிற்பவர்களை. கண்ணிலே—ஞானத்திலே. அதாவது, உபாயஅத்யவசாயருடைய ஞானத்தின் மேலே என்றபடி. 'நோக்கிக் காணும்பக்தி சித்தாஞ்ஜனம்' என்றது, "என் நெஞ்சினால் நோக்கிக்காணீர் என்னை முனியாதே" என்கிறபடியே, காணக்கூடாத பொருளைச் சித்தாஞ்ஜனம் போலே விளங்கக்காட்டுமதாய்ப் பேற்றின் சிறப்பினை விஷயீகரித்

திருந்தாதாரைத் திருத்தின அளவன்றிக்கே, முன்பே திருந்தி, "கண்ணுக்கு இனியன கண்டோம் தொண்டீர் எல்லீரும் வாரீர்" என்னும்படி பாகவதர்களுடைய கூட்டத்தைக் காணும் காட்சி இனிதாம்படி அவர் மாட்டு ஆசை மிக்குடையராய் உபாயத்திலே துணிவுடைமை என்னும் [1] நிலையிலே நின்று, பேற்றினைப் பெறும் நிலையிலே நிற்கும் தம்மைப் பொடியும்படியானவர்களுடைய உபாயத்தில் துணிவுடைமையாகிற ஞானத்தின் மேலே, நோக்கிக் காணும் பக்தி சித்தாஞ்ஜனத்தை இடுகிறார் - "என் நெஞ்சினால் நோக்கிக் காணீர் என்னை முனியாதே" என்றும், [2] "பக்தியாகிற சித்தாஞ்சனத்தையுடைய மனத்தில் விளங்குகிற யோகக் கண்ணால் வேதாந்தத்தில் மறைந்திருக்கிற நிதிபோன்ற உன்னுடைய பெருமையைப் பார்ப்பவர்கள்" என்றும் சொல்லுகிறபடியே சித்தாஞ்சனம்போலே, மறைந்திருக்கும் உட்பொருளை விளக்குவதாய்ப் பேற்றினுடைய பெருமையை அறியத்தக்கதான பக்தியை உபதேசமூலமாக உண்டாக்குகிறார் ஐந்தாம்பத்தால். (5)

224

[3] என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மின் என்று கருணையாலே 'ஸர்வலோகபூதேப்ய:' என்றவை கடலோசையும் கழுத்துக்குமேலும் ஆகாமல் உபாயத்வம் கல்வெட்டு ஆக்குகிற சரண்யன், அஜ்ஞான அசக்தி யாதாத்மிய ஜ்ஞானங்கள் அளவால் அன்றிக்கே, அங்குற்றேன் என்னுன் புணராய் என்னும்படி மெய்யமர் பக்திபூம பலமாகவும் அநந்ய கதித்துவமுடைய தமக்கு, பாதமே சரண் ஆக்க, அவையே சேமம் கொண்டு ஏகசிந்தையராய்த் திரி

திருக்குமதான பக்தியை. அதனை உபதேசமுகத்தாலே உண்டாக்குகிறார் என்றபடி. மறைந்து கிடக்கிற பொருள்களையும் காண்பிப்பது சித்தாஞ்ஜனமாவது. அதனைக் கண்ணிலே அணிந்துகொண்டு பார்த்தால் மறைந்து உள்ளே கிடக்கும் எத்தகைய பொருள்களையும் எளிதில் காணலாம்.

1. 'நிலையிலே நின்று' என்பதனை, பின்னே வருகின்ற 'பொடியும்படியானவர்கள்' என்றதனோடு கூட்டுக.

2. "மாஸிவிலஸதாக்ஷ்ணா பக்திஸித்தாஞ்ஜநேந"
என்பது, ஸ்ரீகுணரத்நகோசம், 12.

3. இச் சூத்திரத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கோடல் வேண்டும். 'கல்வெட்டாக்குகிற சரண்யன்' என்பது முடிய ஒரு பிரிவு. அதற்குமேல் 'பூர்வ வாக்கியம் அநுசந்தித்தவர்' என்பது முடிய இரண்டாம் பிரிவு. 'அதற்குமேல் காட்டுகிறார் ஆறும் பத்தால்' என்பது முடிய மூன்றும் பிரிவு.

யக்குகளை இட்டு ஸ்வாபிப்பிராயத்தை நிவேதித்து, விளம்பரோஷம் உபாயத்தாலே அழிய, உருகாமல் வரித்ததும் நண்ணிவணங்கப் பலித்தவாறே, சப்ர காரமாகச் சக்ருத்கரணீயம் என்று புராண பௌரா ணிகர் தியாஜ்ய அம்சமாக்கின சித்அசித் பிராப்பிய பிராபக ஆபாசங்களை, கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாது அகன்றும், ஆளீர் மேவீர் ஊதீர் என்று ததீயசேஷம் ஆக்கியும், புறத்திட்டுக் காட்டி என்று பிரசங்கிக்கில் முடியும் படிவிட்டு, தந்தைதாய் உண்ணும் சோறு மாநிதி பூவை யாவையும் ஒன்றேயாக்கி, தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோ என்னும் ஆர்த்தியோடே, திரிவிக்கிரமனைக் குறள்கோலப் பிரானைய் அடியை மூன்றை இரந்த வன்கள்வன் கண் முகப்பே அகல்கொள் 'திசை வையம் விண்ணும் தட வந்த தடம்தாமரைகளை, இணைத்தாமரைகள் காண இமையோரும் வரும்படி சென்று சேர்ந்த உலகத்திலதத்தே கண்டு, அகலகில்லேன் என்று பூர்வ வாக்கியம் அநுசந்தித்தவர், "பிணக்கற" த் தொடங்கி "வேதப்புனித" இறுதி சொன்ன சாத்ய உபாய சிரவண சசோக சஜாதீயர்க்கு, "தந்தனன், மற்றேர் களைகண் இலம், புகுந்தேன்" என்று ஸ்வசித் தோபாயநிஷ்டையை உக்தி அநுஷ்டானங்களாலே காட்டுகிறார் ஆறும்பத்தில்.

என்பது, சூத்திரம்.

வியாக் :- மேல்பத்திலே சொல்லப்பட்ட அவனுடைய குண மான பரம கிருபையாலே, எல்லாரும் வந்து அடையும்படி இருக் கின்ற எல்லாப் பொருள்கட்கும் புகலிடமான சர்வேச்வரன், பக்திக் குப் பரவசப்பட்ட தன்மையாலே வேறு புகலிடம் இல்லாத ஆழ் வார்க்குத் தன் திருவடிகளையே வேறு ஒன்றையும் வேண்டாத உபாயமாகக் காட்டிக் கொடுத்தான்; அங்ஙனம் காட்டிக்கொடுக்கப் பெற்ற ஆழ்வார், அவ்வுபாயத்திலே நிலைபெற்று நடக்கிற சிந்தையை யுடையராய், தம்முடைய அந்த எண்ணத்தைத் தூதுவிடும் முகத் தாலே எம்பெருமானுக்கு அறிவித்தார்; அறிவித்தவுடனே அவன் வந்திலன்; அவன் வரவு தாழ்த்தமையாலே பிரணய ரோஷத்தை யுடையவரானார் ஆழ்வார்; அந்தப் பிரணய ரோஷத்தை இறைவன் வந்து நீக்கினான்; நீக்கியவாறே அவனுடைய பேராற்றலை நினைந்து,

மேலே ஐந்தாவது பத்தில் "பிறந்தவாறும்" என்ற திருவாய்மொழியில் அவனுடைய குணங்களைத் தரித்து நின்று அநுபவிக்க வல்லேனும்படி செய்தருளவேண்டும் என்று பண்ணின பிரபத்தியும் "குரவை ஆய்ச்சியர்" என்ற திருவாய்மொழியிலே பலித்தது: அது பலித்தவாறே பேற்றிற்குப் பிரபத்தி பண்ணுவதாகக் கோலினார்;

பேற்றிற்குப் பிரபத்தி செய்யும்போது மற்றைப் பொருள்களின் பற்றுக்களை எல்லாம் முற்றத் துறந்தே செய்யவேண்டுகையாலே பௌராணிகர் கூற்றின்படி பிரபத்திக்கு விரோதிகளான துறக்கத் தகுவனவற்றை எல்லாம் அவற்றைப் பற்றின வார்த்தைகளையும் கேட்கப் பொறுதவாறு வாசனையோடு துறந்தார்; துறந்தவை எல்லாம் தமக்குப் பற்றுகிற விஷயமேயாக நினைத்துப் பரம ஆர்த்தியோடே, தமக்குத் தஞ்சமாக நினைத்திருக்கும், திருஉலகு அளந்தருளின, எல்லார்க்கும் எளியனவான திருவடிகளை, நித்திய சூரிகளும் வந்து அநுபவிக்கும்படி நிற்கிற திருமலையிலே கண்டுகொண்டு, துவயத்தில் முன் வாக்கியத்தில் கூறியபடி சரணம் புகுந்தார்; அங்ஙனம் சரணம் புகுந்தவர், "பத்துடையடிவர்க்கு" என்ற திருவாய்மொழி தொடங்கி ஐந்தாம்பத்து முடிய உபதேசித்த பக்தி உபாயத்தின் 'செய்தற்கு அருமை' முதலான செயல்களை நினைத்தலாலே சோகம் தோன்றும்படியான நிலை பிறந்தவர்களுக்குத் தம்முடைய பிரபத்தி நிஷ்டையைத் தெளிவுபடுத்துகிறார் இந்த ஆறும்பத்தில்.

[1] என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மின் என்று கருணையாலே சர்வலோக பூதேப்ய: என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலும் ஆகாமல் உபாயத்வம் கல்வெட்டு ஆக்குகிற

---

1. *முதற்பத்தால் இறைவனுடைய பரத்துவத்தையும், (முதன்மை) இரண்டாம் பத்தால் காரணத்வத்தையும், (உலகத்திற்குக் காரணன்) மூன்றாம் பத்தால் வியாபகத்வத்தையும், (எங்கும் பரந்திருத்தல்) நான்காம் பத்தால் நியந்திருத்வத்தையும், (ஏவுதல்) ஐந்தாம் பத்தால் காருணிகத்வத்தையும், (அருளுடைமை) அருளிச்செய்த ஆழ்வார், இந்த ஆறும் பத்தில் அவனுடைய சரண்யத்வத்தை (எல்லாப் பொருள்கட்கும் புகலிடமாக இருத்தல்) அருளிச்செய்கிறார் என்கிறார். அந்தச் சரண்யத்வத்தைக் காட்டுகின்ற திருப்பாசுரப் பகுதிகளை எடுத்து அருளிச்செய்கிறார் 'என்னையும்' என்று தொடங்கி.*

சரண்யன் - என்னையும் - [1] " ஏறு சேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்களே " என்கிறபடியே துன்புறுகின்றவர்களைக் காப்பாற்று வதில் விரதம் பூண்டிருக்குமவனுக்குக் காப்பாற்றத்தக்க பொருள் களிலே யானும் ஒருத்தி உளேன் என்று சொல்லுங்கோள் என்றும், யாவர்க்கும் - [2] " திருவிண்ணகர் சேர்ந்தபிரான் வரம்கொள் பாதம் அல்லால் இல்லை யாவர்க்கும் வன்சரணே " என்கிறபடியே திரு விண்ணகரில் நின்றருளினவன் திருவடிகள் அல்லது எல்லார்க்கும் வலிய புகல் இல்லை என்றும், சுரர்க்கு ஆய் - [3] " வன்சரண் சுரர்க் காய் " என்கிறபடியே தேவர்களுக்கு வலிய இரக்ஷகனாய் என்றும், அடியீர் வாழ்மின் என்று - [4] " அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின் என்று என்று அருள் கொடுக்கும் " என்கிறபடியே நமக்கு அடியவர்களாக உள்ளார் எல்லாரும் நம் அடிகளின் கீழே வேறு பயன் ஒன்றையும் கருதாதவராய்ப் புகுந்து வாழ்மின் என்று தன் அருளைச் செய்யாநிற்கும் என்றும் சொல்லுகிறபடியே, கருணை யாலே - தன்னுடைய பேரருளாலே, [5] சர்வலோக என்றது கடல் ஓசை ஆகாமல் - [6] " எல்லா உலகங்கட்கும் புகலிடமாக உள்ளவரும் மகாத்மாவுமான ஸ்ரீராமபிரான் முன்னிலையில், அருகில் வந்து நிற்கிற விபீஷணனாகிய என்னை விரைவில் சென்று தெரிவியுங்கோள் " என்கிறபடியே வந்து புகல் புகுந்தவனான ஸ்ரீ விபீஷணாழ்வான் 'சர்வலோக சரண்யன் - எல்லா உலகங்கட்கும் புகலிட மானவன்' என்ற வார்த்தை கடல் ஓசைபோன்று பொருள் இல்லாதது ஆகாத படியும், பூதேப்ய: என்றது கழுத்துக்குமேல் ஆகாமல் - [7] " ஒரு முறை பிரபத்தி செய்தவன் பொருட்டும், நான் உனக்காக இருக் கிறேன் என்று யாசிக்கிறவனுக்கும் எல்லா உயிர்களிடமிருந்தும் அச்சம் இன்மையைக் கொடுக்கிறேன், இது என்னுடைய விரதம்,

---

1. திருவாய். 6. 1: 10. 2. திருவாய். 6. 3: 7.
3. திருவாய். 6. 3: 8. 4. திருவாய். 6. 10: 11.

5. 'ஸர்வலோக' என்றது கடலோசையாகாமல், 'பூதேப்ய:' என்றது கழுத்துக்குமேலாகாமல் என்று வாக்கியத்தை மாற்றிக் கூட்டுக.

6. ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே
நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 17: 14.

7. ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே
அபயம் ஸர்வபூதேப்ய: ததாமி ஏதத் வ்ரதம் மம.

என்பது, ஸ்ரீராமா. யுத் 18: 33. பூதேப்ய: - எல்லா உயிர்களாலும் வரு கின்ற அச்சம்.

எந்நிலையிலும் விடக்கூடாதது" என்கிறபடியே, புகல் புகுந்தவர்களைக் காப்பதில் விரதம் பூண்டவனாய், எல்லார்க்கும் புகலிடமான தான் சொன்ன வார்த்தை கழுத்துக்குமேல் ஆகாதபடியாகவும்,

உபாயத்வம் கல்வெட்டு ஆக்குகிற சரண்யன் - [1] "வானவர் கோனொடும் நமன்றெழும் திருவேங்கடம்" என்றும், [2] "எழுவார் விடை கொள்வார் ஈன் துழாயானை, வழுவாவகை நினைந்து வைகல்-தொழுவார், வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடம்" என்றும், [3] "போதறிந்து வானரங்கள்" என்றும், [4] "கண்டு வணங்கும் களிறு" என்றும் சொல்லுகிறபடியே நித்தியசூரிகள், இவ்வுலக மக்கள், ஒரு பயனைப்பெற விரும்புகிறவர்கள், வேறு பயன் ஒன்றையும் விரும்பாதவர்கள், மனிதர்கள், திரியக்குகள் என்கிற வேறுபாடு இல்லாமல் அடைந்து வணங்கும்படி நிற்கையாலே தான் உபாயமாக இருக்கும் தன்மை கல்லில் எழுதிய எழுத்தாகும்படி திருமலையிலே எழுந்தருளி நிற்கிற, சிந்தனைக்கு எட்டாத விசேடங்களையுடையனாய் எல்லா உலகங்கட்கும் புகலிடமான சர்வேச்வரன்,

[5] அஜ்ஞாந அசக்தி யாதாத்மிய ஞானங்கள் அளவாலன்றிக்கே, அங்குற்றேன் என்நான் புணராய் என்னும்படி மெய்யமர் பக்திபூம பலமாகவும் அநந்யகதித்வமுடைய தமக்கு - [5] அஜ்ஞாந அசக்தி யாதாத்மிய ஞானங்கள் அளவால் அன்றிக்கே - [6] "அஞ்ஞானத்தாலாவது, அளவிட்டு அறிய ஒண்ணாதவன் என்ற இறைவன் மாட்டு ஞானத்தாலாவது, தன் பக்தியினுடைய மேன்மையாலாவது, இவ்வுலகில் பகவானைத்தவிர வேறு உபாயம் உண்டு என்று அறியாதவர்களுக்கு இந்தப் பகவான் பேருகவும் பேற்றினை அடைதற்குரிய வழி

1. திருவாய். 3. 3: 7. 2. முதல்திருவந். 26.
3. இரண்டாந்திருவந். 72. 4. மூன்றாந்திருவந். 70.

5. அஞ்ஞானமாவது, இறைவனைத்தவிர வேறு உபாயங்களை அறியத்தக்க ஞானம் இல்லாமை. அசக்தியாவது, அவற்றைச் செய்யத்தக்க சக்தி இல்லாமை. சொரூப யாதாத்மிய ஞானமாவது, எம்பெருமானுக்கே அடிமைப்பட்டிருக்கிற ஆன்மாவிற்கு அவனையே உபாயமாகப் பற்றியிருத்தல் ஒழிய, அவனைத் தவிர்த்து வேறு உபாயங்களைப் பற்றுதல் தகாது என்கிற உண்மையை உணர்கின்ற அறிவு. ஆக, அஞ்ஞானத்தாலேயாதல், அசக்தியாலேயாதல், சொரூபயாதாத்மிய ஞானத்தாலேயாதல் வேறு கதிஇல்லாதவர்களாக இருப்பதொரு முறை உண்டு. அதனைத் தெரிவிக்கிறார் "அஞ்ஞான அசக்தி" என்று தொடங்கி.

6. அவித்யாதோ தேவே பரிப்ருடதயாவாவிதிதயா
ஸ்வபக்தே: பூம்நாவா ஜகதி கதிமந்யாமவிதுஷாம்
கதிர்கம்யச்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ:
ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸகலுபகவாந் சௌநகமுநி:

என்பது, பட்டர் ஸ்ரீஸூக்தி.

யாகவும் ஆகிறுன் என்று, பகவானுகிய சௌநகமகரிஷியானவர் ஜிதந்தை என்ற பெயரையுடைய மந்திரத்தின் உட்பொருளை விரித் துரைத்தார்'' என்கிறபடியே, வேறு உபாயங்களை அறியத்தக்க ஞானம் இல்லாமையாலேயாதல், அதனை அநுஷ்டிக்கத்தக்க ஆற்றல் இல்லா மையாலேயாதல், பகவானுக்கே பரதந்திரப்பட்டிருக்கிற ஆன்மா விற்கு அவன் ஒருவனே உபாயமாக இருத்தல் ஒழிய அவனுக்கு வேறுபட்ட பொருள்களை உபாயமாக நினைத்தல் கூடாது என்று [1]'' உன்னுல் அல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன் '' என்னும்படியான சொரூப யாதாத்மியஞானத்தாலேயாதல் வேறுகதி இல்லாதவராம் அளவு அன்றிக்கே,

[2] அங்குற்றேன் என்நான் புணராய் என்னும்படி - [3]'' அங்குற் றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன் உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து நான், எங்குற்றேனும் அல்லேன் '' என்கிறபடியே ஓர் உபாயத் தைச் செய்து முக்தனைப் போன்றிருக்கிறேன் அல்லேன், சாதனங் களைச் செய்யுமவர்களிலே ஒருவனுயிருக்கிறேன் அல்லேன், மேலும் சாதனத்தைச் செய்ய ஒண்ணுதபடி உன்அழகு முதலியவைகளிலே ஈடுபட்டு உன்னைக் காண வேண்டும் என்னும் ஆசையால் வலி குன்றினவனுய்த் தளர்ந்து இனிச் சாதனங்களைச் செய்யும் ஆற்றலை யுடையேன் அல்லேன் என்றும், [4]'' என் நான் செய்கேன் யாரே களை கண் '' என்கிறபடியே உன்திருவடிகளைப் பெறுகைக்கு என்னுல் செய்யலாவது இல்லை, எனக்கும் செயலுக்கும் என்ன சேர்த்தி உண்டு, முன்பு ஏற்படுத்திய சாதனங்கள் ஒன்றும் என்பக்கல் இல்லை என்றும், [5]'' பூவார்கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராயே '' என்கிறபடியே எல்லை இல்லாத இனியனவான உன் திருவடிகளை நான்கிட்டும் வழி கல்பிக்க வேண்டும் என்றும் சொல்லும்படி, மெய் அமர் பக்திபூம பலமாகவும் - [6]'' மெய்யமர்காதல் '' என்கிறபடியே அவனுடைய சொருபத்தை நினைத்தாதல் குணங்களை நினைத்தலாலே யாதல் தரிக்க ஒண்ணுதபடியாய்த் திருமேனியிலே அணைய வேண் டும்படியான காதல் என்னும்படி மேல்பத்தில் தமக்குப் பிறந்த மிகுந்த பக்தியின் பயனுகவும் வேறு உபாயங்களுக்கு ஆள் அல்லாமல்,

1. திருவாய். 5. 8: 3.

2. மேலே கூறிய மூன்று காரணங்கள் அடியாக வேறுகதி இல் லாமை மாத்திரமன்றிக்கே, வேறு காரணங்களாலும் ஆழ்வார் வேறுகதி இல்லாதவராஞர் என்கிறுர் ' அங்குற்றேன் ' என்று தொடங்கி.

இங்கு, ஸ்ரீவசனபூஷணம், 41-49. சூத். காண்க.

3. திருவாய். 5. 7: 2,
4. திருவாய். 5. 8: 3.
5. திருவாய். 6. 10: 4.
6. திருவாய். 6. 8: 2.

அநந்யகதித்வமுடைய தமக்கு - [1] "களைவாய் துன்பம், களையாதொழி வாய், களைகண்மற்றிலேன் " என்கிறபடியே வேறுகதியையுடைய ரல்லாத தமக்கு,

பாதமே சரண் ஆக்க - [2] "ஆறு எனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் " என்னும்படி தன்திருவடிகளை வேறு சாதனங் களை விரும்பாத சாதனமாகக் காட்டிக்கொடுக்க, அவையே சேமம் கொண்டு ஏக சிந்தையராய் - [3] "கழல்கள் அவையே சரணாகக் கொண்ட " என்றும், [4] " அடிமேல் சேமம்கொள் தென்குருகூர்ச்சட கோபன் " என்றும், [5] "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்று நாடோறும் ஏகசிந்தையனாய் " என்றும் சொல்லுகிற படியே விரோதிகளை அழிக்கும் தன்மையனானவனுடைய திருவடிக ளையே வேறு சாதனங்களை வேண்டாத உபாயமாகக்கொண்டு, மாறு படாத எண்ணத்தையுடையராய், [6] திரியக்குகளை இட்டு ஸ்வஅபிப்பி ராயத்தை நிவேதித்து-[7] "வைகல் பூங்கழிவாய் வந்துமேயும் குருகினங் காள் ! கனிவாய்ப் பெருமானைக்கண்டு வினையாட்டியேன் காதன்மை கைகள் கூப்பிச் சொல்லீர் " என்று தொடங்கி [8] " ஏறு சேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்கள் " என்னுமது அளவாகப் பெற்றன்றித் தரியாத கழிபெருங்காதல் உண்டாயிருக்கவும் தம்மைக் காத்துக் கொள்வதில் தாம் ஈடுபடுதலைப்பொறுக்கமாட்டாத சொருப பாரதந் திரியத்தாலே அவன் ஒருவனாலேயே காக்கப்படவேண்டும் என்னும் துணிவுடைய தமது எண்ணத்தை, [9] "எப்படி இரண்டு சிறகு களாலே பறவைகள ஆகாயத்தில் பறக்கின்றனவோ, அப்படியே, ஞானம் கர்மம் என்னும் இந்த இரண்டாலும் புருடோத்தமனான இறைவன் அடையப்படுகிறான் " என்கிறபடியே ஞானம் அநுஷ் டானம் என்னும் இரண்டு சிறகுகளையுடைமையாலே அடையத் தகுந்த இறைவனை விரைவில் அடைவதற்குத் தகுந்த தகுதியை யுடையரான சேர்ப்பாரை இட்டு அறிவித்து,

---

1. திருவாய். 5. 8: 8.
2. திருவாய். 5. 7: 10.
3. திருவாய். 5. 8: 11.
4. திருவாய். 5. 9: 11.
5. திருவாய். 5. 10: 11.
6. 'திரியக்குகளை இட்டு' என்ற தொடங்கும் வாக்கியத்தால் "வைகல் பூங்கழிவாய்" என்ற முதல் திருப்பதிகத்தின் பொருளைத் தெரிவித்தபடி.
7. திருவாய். 6. 1: 1.
8. திருவாய். 6. 1. 10.
9. "உபாப்யாமேவ பக்ஷாப்யாம்" என்பது, பிரமாணம்.

[1] விளம்ப ரோஷம் உபாயத்தாலே அழிய - இப்படி அறிவித்த அளவிலும் அவன் வரவு தாழ்க்கையால் உண்டான பிரணயரோஷத்தாலே, அவன் வந்து மேல் விழுந்த அளவிலும் "போகு நம்பி" என்றும், "கழகம் ஏறேல் நம்பி" என்றும் உபேக்ஷித்து, அவன் முகம் பாராமல் இருப்போம் என்று சிற்றில்இழைப்பது சிறுசோறு அடுவது ஆக, அவை தன்னுடைய இன்பத்திற்கு விரோதம் ஆகையாலே "அழித்தாய் உன்திருவடியால்" என்கிறபடியே அவன், அந்த ஆதரம்இன்மை, வேறொன்றிலே நோக்குடைத்தா யிருத்தல்களை, தனக்கும் முடிந்த உபாயமான திருவடிகளாலே [2] உபலக்ஷிக்கப்படுகின்ற திருமேனியினுடைய அழகினாலே குலைக்க, அவனோடே பொருந்தி,

உருகாமல் வரித்ததும் - மேல் ஐந்தாம்பத்தில் "பிறந்தவாறும்" என்ற திருவாய்மொழியிலே அவதார அநுபவம் பெறாத இழவாலே பதற, அந்த அவதாரங்களின் குணங்களையும் செயல்களையும் நினைத்தாகிலும் தரிப்போம் என்று இழிந்த அளவில், "நிறம்தன் ஊடுபுக்கு எனதாவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற" என்றும், "பையவே நிலையும் வந்து என்நெஞ்சை உருக்குங்கள்" என்றும், "உள்ளம் உள்குடைந்து என் உயிரை உருக்கி உண்ணும்" என்றும் "ஊடுபுக்கு எனது ஆவியை உருக்கி உண்டிடுகின்ற" என்றும் சொல்லுகிறபடியே அவை மிகவும் நிலைகுலைதற்குக் காரணம் ஆகையாலே தரித்து நின்று அநுபவிக்கவல்லேனும்படி செய்தருளவேண்டும் என்று [3] அவனை உபாயமாக வரித்ததும், நண்ணி வணங்கப் பலித்தவாறே - "குரவையாய்ச்சியர்" என்ற திருவாய்மொழியிலே "என்ன குறை எனக்கு" என்று தொடங்கி, "நண்ணி நான் வணங்கப்பெற்றேன்

---

1. விளம்பரோஷம் - விளம்பம் காரணமாக வந்த பிரணயகோபம். விளம்பம் - காலதாமதம். உபாயம் - திருவடி. கண்டுத் திருவடி என்றது, உபலக்ஷணத்தால் திவ்வியமங்கள விக்கிரகத்தைக் காட்டுகிறது. திவ்விய மங்கள விக்கிரகத்தின் அழகாலே பிரணய கோபத்தை நீக்கினான் என்றபடி. பிரணயகோபம் என்பது, காதல் காரணமாக வருகின்ற ஒதிய கோபம். இந்த வாக்கியத்தால் "மின்னிடை மடவார்" என்ற திருப்பதிகத்தின் பொருளைத் தெரிவித்தபடி.

2. உபலக்ஷிதம் - உபலக்ஷணத்தால் சொல்லப்படுதல்.

3. 'அவனை உபாயமாக வரித்ததும்' என்றது, பிறந்துலகம் காத்தளிக்கும் பேரருட் கண்ணா! உன் சிறந்த குணத்தால் உருகும் சிலத்திறம் தவிர்ந்து சேர்ந்து அநுபவிக்கும் நிலை செய் என்று "பிறந்தவாறும்" என்ற திருப்பதிகத்திலே சரண்புக்கதும் என்றபடி.

இதனால் நான்காம் திருப்பதிகத்தின் பொருளை அருளிச்செய்தபடி.

எனக்கு ஆர் பிறர் நாயகரே" என்று பிரீதிமுன்னாக அவதாரங்களின் குணங்களையும் செயல்களையும் எல்லாக்காலத்திலும் கிட்டி அநுபவிக்கப் பெற்ற எனக்கு நாயகர் யார் தான் என்று செருக்கிப் பேசும்படி பலித்தவாறே,

[1]ஸப்ரகாரமாக ஸக்ருத்கரணீயம் என்று - மற்றை உபாயங்களை விடுகையாகிற முறையோடேகூட,இறைவன்மாட்டுச்சரண்புகுதலைச் செய்தல் "ஒரே முறை" என்கிறபடியே அவனை அடைதற்காகவும் ஒருக்கால் செய்ய வேண்டும் என்று பார்த்து, [2]புராணபௌராணிகர் தியாஜ்ய அம்சம் ஆக்கின - [3] "தந்தையையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் பந்துக்களையும் தோழர்களையும் ஆசிரியர்களையும் இரத்தினங்களையும் செல்வங்களையும் தானியங்களையும் வயல்களையும் வீடுகளையும் எல்லாத்தருமங்களையும் கைவல்யம் உட்பட விரும்பப்படும் எல்லாப்பயன்களையும் முற்றத்துறந்து, ஓ பிரபுவே! உன்னுடைய உலகத்தை அளந்த திருவடிகளைச் சரணமாக அடைந்தேன்" என்கிற வசனம் [4] "ஆக்நேயம் எட்டாவதாகும்; பவிஷ்யத் புராணம் ஒன்பதாவது புராணமாக நினைக்கத்தக்கது" என்கிறபடியே பதினெண் புராணங்களிலும் வைத்துக்கொண்டு ஒன்பதாம் புராணமாகச் சொல்லப்பட்ட பவிஷ்யத் புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது ஆகையாலும், புராணஞானி ஆகையாலே பௌராணிகரான ஸ்ரீபாஷ்யகாரர் கத்யத்திலே இப்புராணவசனத்தைக் கொண்டே விடத்தக்கனவற்றை

---

1. 'ஸப்ரகாரமாக' என்ற இவ்வாக்கியத்தில் உள்ள 'என்று' என்னும் எச்சத்தைப் பின்னே வருகின்ற 'அகலகில்லேன் என்று பூர்வ வாக்கியம் அநுசந்தித்தவர்' என்ற வாக்கியத்திலே உள்ள 'அநுசந்தித்தவர்' என்றதனோடு முடிக்க. "ஸக்ருதேவ" இச்சுலோகத்தை மேலே பக். 578. காண்க. ஸக்ருத்கரணீயம் - ஒருமுறை செய்யவேண்டியது.

2. புராணம் தியாஜ்யாம்சமாக்கின என்றும், பௌராணிகர் தியாஜ்யாம்ச மாக்கின என்றும் கூட்டுக. புராணம் - பௌஷ்யத் புராணம். பௌராணிகர் - இராமாநுசர். தியாஜ்யாம்சமாக்கின - துறக்கவேண்டிய பொருள்களாகக் கூறிய.

3. பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந்
ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணிச க்ருஹாணிச.
ஸர்வதர்மாம்ச்ச ஸம்த்யஜ்ய ஸர்வகாமாம்ச்ச ஸாக்ஷராந்
லோகவிக்ராந்த சரணௌ சரணம் தே வ்ரஜம் விபோ.

என்பது, புராணம்.

4. "ஆக்நேயமஷ்டமஞ்சைவ பவிஷ்யந்நவமம் ஸ்ம்ருதம்"
என்பது, பிரமாணம்.

விடுதல் முன்னாகப் பிரபத்தியைப் பண்ணுகையாலும் '**புராண பௌராணிகர் தியாஜ்யாம்சம் ஆக்கின**' என்கிறார். அங்ஙன் அன்றிக்கே, இப்பொருள் புராணத்தில் சொல்லப்பட்டதாகையாலும், அது தான் பண்டைய பெரியோர்களுடைய அநுஷ்டானமாகச் சொல்லப்படுகையாலும் அங்ஙனம் அருளிச்செய்தார் ஆகவுமாம்.

[1] சித்து அசித்துப் பிராப்ய பிராபக ஆபாசங்களை - ஆக, இப்படிப் புராணமும் பௌராணிகரும் "பிதரம்மாதரம் - தந்தைதாய்" என்று தொடங்கி "ஸாக்ஷராந் - கைவல்யம் உட்பட" என்னுமது அளவாக, "ஸந்த்யஜ்ய - முற்றவிட்டு" என்னுமிதற்குச் செயப்படுபொருள்கள் ஆகையாலே, மேலே கூறப்படுகின்ற பிரபத்தியைச் செய்வதற்கு அங்கமாக விடத்தகுவனவாகச் சொல்லிய அறிவுடைப்பொருள் களும் அறிவில் பொருள்களுமாக உள்ள போலிப்பேறுகளையும் போலி வழிகளையும்,

இதில் [2] "*ஸர்வதர்மாம்ச்ச*" என்ற தொடர்மொழிக்குமேல் உள்ளவை, வேறு உபாயங்களுக்குத் துணையுமாய், தானே பயனாகை யாலே பேறுமாய் இவ்விரண்டற்கும் பொதுவாக உள்ளனவற்றைச் சொல்லுகின்றன. எங்ஙனே? என்னில் [3] "தாயைத் தெய்வமாக உடையை ஆவாய், தந்தையைத் தெய்வமாக உடையை ஆவாய்" என்றுகொண்டு ஈச்வரனுக்குச் செய்யும் தொண்டினைப்போன்று தாய் தந்தையர்களுக்குச் செய்யும் தொண்டினையும் வழிபாட்டிற்கு அங்கமாகச் சாஸ்திரம் விதிக்கையாலே, தாய்தந்தையர்கள், வேறு உபாயங்களுக்குத் துணைவருமாய், அவ்வளவன்றிக்கே இவர்களுடைய பிரிவு பொறுக்கமுடியாததாக இருக்கையாலே தாமே பயனாகவும் இருப்பார்கள். மனைவியும், இல்வாழ்க்கை நடத்துவதற்குத் துணையாக இருக்கையாலே வேறு உபாயங்களுக்குத் துணையுமாய், காதலுக்கு உரியவளாயுமிருக்கையாலே உபேயமாகவும் இருப்பாள். புத்திரனும்

---

1. *ஆக்கின சித்து அசித்துப் பிராப்ய பிராபக ஆபாசங்கள் என்க. சித்து பிராப்ய பிராபக ஆபாசங்களை, அசித்துப் பிராப்ய பிராபக ஆபாசங்களை என்று கூட்டுக. ஆபாசம் - போலிப் பொருள்கள்.*

2. *மேலே கூறிய அறிவுடைப்பொருள்களும் அறிவில்பொருள்களுமாய இரண்டும், போலிப்பேறுகளும் போலிவழிகளும் ஆமாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஸர்வதர்மாம்ச்ச' என்று தொடங்கி.*

3. *"மாத்ரு தேவோ பவ பித்ரு தேவோ பவ" என்பது, தைத்திரீயோபநிடதம்.*

[1]“புத் என்னும் நரகத்தினின்றும் காப்பாற்றுகிறன், ஆதலால் புத்திரன் என்று பெயர்” என்கிறபடியே நரகத்தைக் காணுதற்குக் காரணமான பாவங்கள் நீங்குவதற்குக் காரணமாகுமுகத்தாலே வேறு உபாயங்களுக்குத் துணையுமாய், தன்னுடைய பிரிவு பொறுக்க ஒண்ணுததாய் இருக்கையாலே உபேயமுமாய் இருப்பன்.

உறவினர்கள், இவன், குடிக்குப் பழி உண்டாகுமாறு ஒழுகாத படி இவனை நியமித்து நல்வழியே நடத்துமவர்களாகையாலே வேறு உபாயங்களுக்குத் துணைவர்களுமாய், பெருங்குடிப் பாட்டத்தே பிறந்தோம் என்கிற செருக்காலே உபேயருமாய் இருப்பர்கள். தோழனும், இவனுக்கு நலத்தைச் செய்பவனாய் இவனை நலத்திலேயே ஒழுகச் செய்பவனுமாகையாலே வேறு உபாயங்களுக்குத் துணைவனுமாய், காதலுக்கு உரியவனுமாய் இருககையாலே உபேயமுமாய் இருப்பன். ஆசிரியராகிறார், வேறு உபாயங்களை உபதேசித்துப் போருகையாலே வேறு உபாயங்களுக்குத் துணைவருமாய், உதவியைச் செய்பவர்கள் ஆகையாலே உபேயமுமாய் இருப்பார்கள். இரத்தினங்கள், மற்றைய உபாயங்களைச் செய்வதற்கும் செயல்படுமுறைபற்றிக் காரணமாக இருத்தலாலே துணையாயும், மேலே சொல்லப்பட்டனவற்றை அழிய மாறியாகிலும் கொள்ளப்படுவன ஆகையாலே உபேயமுமாய் இருக்கும். தனமும் தான்யமும் வயல்களும் அப்படியே. வீடுகள் வசிப்பதற்கு இடமாகு முகத்தாலே வேறு உபாயங்களுக்குத் துணையுமாய், மாட மாளிகையாக எடுக்கப்படும்படியான ஆசைக்கு உரிய பொருளாக இருப்பதனாலே உபேயமுமாய் இருக்கும்.

மேல் “சர்வ தர்மாம்ச்ச - எல்லாத் தருமங்களையும்” என்பது போன்றவைகளாலே நேரே வேறு உபாயங்களாய் இருப்பனவற்றையும், வேறு உபேயஙகளாய் இருப்பனவற்றையும் சொல்லுகிறது. அவற்றில் “ஸர்வ தர்மாம்ச்ச” என்பது கர்மயோகம் முதலான உபாயங்களைச் சொல்லுகிறது. “ஸர்வகாமாங்ச - எல்லா விரும்பப்படும் பொருள்களை” என்று இவ்வுலகிலும் மேலுலகிலும் உள்ள செல்வ வேறுபாடுகளைச் சொல்லுகின்றது. “ஸாக்ஷராங் - கைவல்யம் உட்பட” என்பது அக்ஷரம் என்ற சொல்லுக்குப் பொருளான கைவல்யத்தையும் அவற்றைப் போன்றே விடத்தக்கது என்கிறது. ஆக, இப்படி உபாயமாக இருத்தல் உபேயமாக இருத்தல்பற்றி ஒரு நிலை இன்றிக்கே மேற்கூறியபடியே வேறு உபாயங்களுக்குத் துணை

1. *புந்நாம்நோ நரகாத் த்ராயத இதிபுத்ர:* என்பது, பிரமாணம்.

யாகும்தன்மையாலும், விரும்பப்படுதல் முதலிய தன்மைகளாலும் உண்டான உபாய உபேயமாகும் தன்மைகளையுடைய தாய் தந்தையர் முதலானவர்களை, அறிவுடைப்பொருள்களாகிற போலி உபாய உபே யங்கள் என்கிறது. இரத்தினம் தனம் தானியம் முதலானவைகளை அறிவில்பொருள்களாகிற போலி உபாய உபேயங்கள் என்கிறது.

அன்றிக்கே, "ஸர்வதர்மாம்ச்ச" என்பது போன்றவைகளும் சர்வேச்வரனுகிற உபாயத்தையும் உபேயத்தையும் நோக்கும்போது போலிகள் ஆகையாலே அவற்றையும் கூட்டிக் கொண்டு சொல் லவுமாம். "கைவலிந்து" என்பது போன்றவைகளுக்குத் தகுதியாக இவையும் தள்ளவேண்டியவைதாமே. மேற் சொல்லுகிற பிரபத்திக்கு அங்கமான துறவு, உபாயத்திற்கு விரோதிகளான அனைத்தையும் விஷயமாக வுடைத்தாகையாலே 'கைவலிந்து' என்பது போன்றவை களால் சொன்னவை, விடப்படுவனவான அனைத்திற்கும் உபலக்ஷண மாம். இப்படியானுலே அன்றோ 'பிரகாரத்தோடுகூட ஒரு முறை செய்யத்தக்கது பிரபத்தி' என்பதற்குச் சேருவது.

ஆக, இப்படியிருந்துள்ள அறிவுடைப்பொருள்களாகிற உபா யப்போலிகளையும் உபேயப்போலிகளையும், அறிவில் பொருள்களாகிற உபாயப்போலிகளையும் உபேயப்போலிகளையும்,

[1] கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாது அகன்றும் - [2] "அன்னைமீர் அணிமாமயில் சிறுமான் இவள் நம்மைக் கைவலிந்து" என்றும், [3] "இழந்தது சங்கே" என்றும், [4] "இதெல் லாம் கிடக்க இனிப் போய்" என்றும், [5] "எம்மை ஒன்றும் நினைத் திலளே" என்றும், [6] "இன்று எனக்கு உதவாது அகன்ற" என்றும் அறிவுடைப்பொருள் அறிவில்பொருள்களின் கூட்டமான இவற் றைக் கைவிட்டு, உறங்குவான் கைப்பண்டம்போலே பகவானிடத்தில்

---

1. மேலே கூறப்பட்ட போலிப்பொருள்களைத் தாமாகக் கைவிடு வதுமுண்டு; அப்பொருள்கள் தாமே கையொழிந்து போவதுமுண்டு; அப்பொருள்களை ஒன்ருக மதியாமல் உபேக்ஷித்துப்போவதுமுண்டு. இம் மூன்று வகைகளையும் 'கைவலிந்து' என்று தொடங்கி அருளிச்செய்கிருர். இம்மூன்று வகையையும் முறையே "துவளில் மாமணி மாடம்", "மாலுக்கு வையம்", "உண்ணும் சோறு" என்ற மூன்று திருவாய் மொழிகளிலும் காணலாம்.

2. திருவாய். 6. 5: 7.
3. திருவாய். 6. 6: 1.
4. திருவாய். 6. 7: 9.
5. திருவாய். 6. 7: 9.
6. திருவாய். 6. 7: 6.

கொண்ட அன்பின் வசப்பட்டமையாலே தன்னடையே தன்கையில் நின்றும் நெகிழ்ந்துபோகக் கண்டும், [1] "எல்லாப் போகங்களையும் முற்றத் துறந்து" என்கிறபடியே இவற்றை ஒன்றாக நினையாமல் உபேக்ஷித்து அகன்று சென்றும்,

ஆளீர் மேவீர் ஊதீர் என்று ததீயசேஷமாக்கியும் - மேற்கூறிய பொருள்களில் அவன் அடியார்கட்கு இனியனவாகக் கொடுக்கத் தகுவனவற்றை [2] "பொன்னுலகு ஆளீரோ புவனமுழுது ஆளீரோ" என்றும், "நெய்யமர் இன்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ" என்றும், "ஓடிவந்து என்குழல்மேல் ஒளிமாமலர் ஊதீரோ" என்றும் தமக்குப் பேருகவிருக்கின்ற பரமபதத்தோடு ஒக்க, சேர்க்குமவர்க்குப் பரிசிலாகக் கொடுத்தும்,

புறத்திட்டுக் காட்டி என்று பிரசங்கிக்கில் முடியும்படி விட்டு - [3] "என்னைப் புறத்திட்டு இன்னம் கெடுப்பாயோ" என்கிறபடியே உனக்கு வேருகும்படி விஷயங்களிலே என்னைத் தள்ளி இன்னம் கெடுக்கப் பார்க்கிருயோ என்றும், [4] "பல நீ காட்டிப் படுப்பாயோ" என்கிறபடியே உலகத்தார் காணுவிடில் பிழையோம் என்கிற மகளிர் முதலானவர்களைத் தாம் காணில் முடிவன் என்னும்படி நனிபெரிதும் பொறுக்க இயலாதவராய் இருக்கையாலே விஷயங்களைக் காட்டி என்னையும் முடிக்கப்பார்க்கிருயோ என்றும் சொல்லுகையாலே அவற்றைப்பற்றிப் பேசும்போதே ஏங்கி மூச்சு அடங்கும்படி அச்சம் கொணடவராய் அவற்றை விட்டு,

தந்தை தாய் உண்ணும் சோறு மாநிதி பூவை யாவையும் ஒன்றே ஆக்கி - [5] "தேவதேவனே! எனக்கு நீயே தாயும், தந்தையும் நீயே, நீயே உறவும், ஆசாரியனும் நீயே, நீயே கல்வியும், செல்வமும் நீயே,

---

1. *"ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய"*
என்பது, சரணாகதிகத்யம்.

2. *"பொன்னுலகாளீரோ" என்ற திருவாய்மொழியின் பொருள் கூறப்படுகின்றது 'ஆளீர்' என்று தொடங்கும் வாக்கியத்தால். ததீய சேஷமாக்குதல் – அடியார்களுக்கு உரியனவாக்குதல்.*

3. *திருவாய்.* 6. 9: 8. 4. *திருவாய்.* 6. 9: 9.

5. *த்வமேவ மாதா ச பிதா த்வமேவ*
த்வமேவ பந்துஶ்ச குருஸ்த்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவதேவ.
என்பது, கத்யத்ரயம்.

நீயே எல்லாமும்" என்கிறபடியே [1] "தேவபிரானையே தந்தை தாய் என்று அடைந்த" என்று அயர்வறும் அமரர்கள் அதிபதியே தாய் தந்தை முதலான எல்லாவித உறவும் என்றும், [2] "உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்று தாரக போஷக போக்கியங்கள் எல்லாம், அனைவருக்கும் மிக எளியனான கிருஷ்ணனே என்றும், [3] "வைத்த மா நிதியாம் மதுசூதனையே" என்று ஆபத்திற்குச் சேமமாகச் சேமித்து வைத்த அழிவில்லாத நிதியும் அவனே என்றும், [4] "பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால் திருநாமங்களே கூவி எழும்" என்று விளையாட்டுக்குரிய கருவிகளால் பிறக்கும் சுவை எல்லாம் திருமாலினுடைய திருப்பெயர்களைச் சொல்லவே உண்டாகாநிற்கும் என்றும் இப்படி மேலே விட்டவை அனைத்தும் பற்றுகிற பகவத் விஷயம் ஒன்றுமேயாக நினைத்து,

[5] தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோ என்னும் ஆர்த்தியோடே - "கோலத் திருமா மகளோடு உன்னைக் கூடாதே, சாலப் பலநாள் அடியேன் இன்னம் தளர்வேனோ" - உலகத்தைப் பல வகையாலும் காப்பாற்றுகின்றவனாய், [6] "ஸ்ரீவைகுண்டத்தில் பெரிய பிராட்டியாரோடுகூட" என்கிறபடியே பெரியபிராட்டியாரோடு எழுந்தருளியிருக்கின்ற உன்னைக் கிட்டப்பெறுமல் இவ்வுலகத்திலேஇருந்து இன்னம் எத்தனை காலம் இப்படித் துன்புறக் கடவேன் என்றும், "தீயோடு உடன்சேர் மெழுகாய் உலகில் திரிவேனோ" - திரிவிக்கிரம அவதார முகத்தாலே நீயே வந்து எல்லார் தலைகளிலும் திருவடிகளை வைத்த உன்னைக் காண ஆசைப்பட்டுக் கிடையாமையாலே தீயின் சேர்க்கையில் மெழுகுபோலே பிழைக்கவும் பெறுமல் முடியவும் பெறுமல் இவ்வுலகத்தில் இப்படித் திரியக்கடவேனோ என்றும், "கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ" - மிக எளியனவாய் எல்லையில்லாத இனியனவான திருவடிகளிலே என்னை அருளப்பாடு இடும் காலம் இன்னம் அணித்தாகாதோ என்றும், "புணரேய் நின்ற மரம் இரண்டின் நடுவே போன முதல்வாவோ" - விரோதிகளின் கையில் அகப்படாமல் உலகத்துக்கு வேர்ப்பற்றான உன்னை நோக்கித் தந்த

---

1. திருவாய். 6. 5: 11. 2. திருவாய். 6. 7: 1.
3. திருவாய். 6. 7: 11. 4. திருவாய். 6. 7: 3.
5. 'தளர்வேனோ' என்று தொடங்கும் வாக்கியத்தால் "நீராய் நிலனாய்" என்ற திருவாய்மொழியின் பொருள் பேசப்படுகின்றது.
6. "ச்ரியா ஸார்த்தம்" இச் சுலோகத்தை மேலே காண்க.

வனே என்றும் சொல்லுகிறபடியே, மனத்தின் அநுபவம் மாத்திரம் அன்றிக்கே உன் திருவடிகளைக் கண்கூடாகக் கிட்டுவது என்றோ என்கிற [1] ஆசையோடே,

[2] திரிவிக்கிரமனுகக் குறள் கோலப்பிரானுய் அடியை மூன்றை இரந்த வன்கள்வன் கண்முகப்பே அகல்கொள் திசை வையம் விண்ணும் தடவந்த தடம் தாமரைகளை - "லோக விக்ராந்த சரணௌ சரணம் தே வ்ரஜம் விபோ - உலகங்களை அளந்த உன்னுடைய திருவடிகளை இறைவா! சரணமடைந்தேன்" என்கிறபடியே வசிஷ்டன் என்றும் சண்டாளன் என்றும் சொல்லும் வேற்றுமைஅற வரையாதே திருவடிகளை வைக்கையாலே சௌசீல்யமும், உறங்குகிற குழந்தையின் முதுகைக் கட்டிக்கொண்டு கிடக்கும் தாயைப்போலே பக்தி இல்லாதார் தலைகளிலும் திருவடிகளை வைக்கையாலே வாத்சல்யமும், அவதரித்து முன்னே நின்று காரியம் செய்கையாலே சௌலப்யமும், 'தே' என்கையாலே தன்பேறுகச் செய்கைக்கு உறுப்பான ஸ்வாமித்வமும், 'விபோ' என்கையாலே ஞானம் சக்தி முதலிய குணங்களின் நிறைவும் சொல்லுகையாலே, திரிவிக்கிரமன் செயல்களிலே பற்றுவதற்குக் காரணமாகவும் காரியங்களைச் செய்வதற்குத் துணையாகவும் உள்ள குணங்கள் எல்லாம் பிரகாசிக்கையாலே [3] "தெய்வநாயகன் நாரணன் திரிவிக்கிரமன்" என்றும், [4] "மாண்குறள் கோலப்பிரான்" என்றும், [5] "அடியை மூன்றை இரந்தவாறும்" என்றும், [6] "மின் கொள் சேர் புரிநூல் குறளாய் அகல்ஞாலம் கொண்ட வன்கள்வன்" என்றும் சொல்லுகிறபடியே சர்வேச்வரனுய் அடியார்களிடத்தில் அன்புள்ளவனுன தான் மூன்றுஅடிவைத்தலாகிற பெருஞ்செயல்களைச் செய்கைக்காகப் பெருவிலையனுன அழகைச் சிருங்கித்து அநுபவிக்கலாம்படி வாமன வேடத்தை மேற்கொண்டு மஹாபலியி

1. இந்த ஆசையோடே ஆழ்வார் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே பூர்வ வாக்கியத்தை அநுசந்தித்தார் என்று மேலே கூட்டுக.

2. ஆழ்வார் கண்ட தடம்தாமரைகளின் தன்மையை விளக்குகிறுர் 'திரிவிக்கிரமனுக' என்று தொடங்கி. மேலே 'புராண பௌராணிகர் தியாஜ்யாம்சமாக்கின' என்ற இடத்தில் "லோகவிக்ராந்த சரணௌ" என்பது முக்கியமாகச் சொல்லப்பட்ட விஷயமாகையாலே, ஆழ்வாரும் உலகம் அளந்த அந்தத் திருவடிகளிலேயே சரணம் புகுகிறுர் என்று காட்டுவதற்குத் தக்கனவான திருப்பாசுரப் பகுதிகளை எடுத்துச் சேர்க்கிறுர் 'திரிவிக்கிரமனுக' என்று தொடங்கி.

3. திருவாய். 5. 7: 11.
4. திருவாய். 5. 9: 6.
5. திருவாய். 5. 10: 9.
6. திருவாய். 6. 1: 11.

னுடைய வேள்விச் சாலையிலே சென்று [1] "மூன்று அடி" என்று இரந்து, தான் சொன்னபடியே அவன் செய்யும்படி, வணக்கமுள்ளதாய் மனத்தினைக் கவரும்படியான வடிவைக் காட்டி வசீகரித்து நின்ற மஹா வஞ்சகன், [2] "காண்மின்கள் உலகீர் என்று கண்முகப்பே நிமிர்ந்த" என்கிறபடியே நோக்குவித்யை காட்டுவாரைப் போலே இது ஓர் ஆச்சரியம் பாருங்கோள் என்று உலகமக்கள் எல்லாருடைய கண்ணெதிரே [3] "அகல்கொள் வையம் அளந்த மாயன்" என்றும், [4] "திசை ஞாலம் தாவி அளந்ததும்" என்றும், [5] "வையம் அளந்த மணாளன்" என்றும், [6] "மண்ணும் விண்ணும் கொண்ட மாய அம்மான்" என்றும், [7] "ஓரடியால் எல்லா உலகும் தடவந்த" என்றும், [8] "தாவி வையம்கொண்ட தடம் தாமரைகள்" என்றும் சொல்லுகிற படியே விரிவினையுடையதாய்த் திசைகளோடு கூடின பூமியையும் மேல் உலகங்களையும் தென்றல் உலாவியது போன்று இனிமை பயக்கும்படி எங்கும் ஒக்கப் பரப்பி அளந்துகொண்ட மிக எளியனவாய் எல்லை இல்லாத இனியனவான திருவடிகளை,

இணைத்தாமரைகள் காண இமையோரும் வரும்படி சென்று சேர்ந்த உலகத்திலதத்தே கண்டு - இணைத்தாமரைகள் காண இமையோரும் வரும்படி - [9] "எந்நாளே நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்பதற்கு என்று" என்பது போன்று வருகின்றபடியே திரு உலகு அளந்தருளின, மிக எளியனவாய் எல்லை இல்லாத இனியனவாய்ச் சேர்த்தி அழகையுமுடைத்தான திருவடிகளை நாம் காண்பது எப்போதோ என்று நித்தியசூரிகளும் அநுபவிக்க ஆசைப்பட்டு வரும்படி, சென்று சேர்ந்த - [10] "அன்று ஞாலம் அளந்தபிரான் பரன், சென்று சேர் திருவேங்கடமாமலை" என்கிறபடியே திருஉலகு அளந்த செயலாலே பிரகாசிக்கின்ற பரபரனாக இருப்பவன், அந்தச் சிரமம் தீர,

---

1. 2. திருவாய். 6. 3: 11.

3. திருவாய். 6. 4: 6. 4. திருவாய். 6. 5: 3.

5. திருவாய். 6. 6: 1. 6. திருவாய். 6. 9: 2.

7 திருவாய். 6. 9, 6. 8. திருவாய். 6. 9: 9.

9. "எந்நாளே நாம்" என்ற திருப்பாசுரத்தால் திருவேங்கடமுடையான் திருவடிகள் உலகம் அளந்த திருவடிகள் என்பது பெறப்படும்.

10. "அன்று ஞாலம்" என்ற திருப்பாசுரம் ஆறும் பத்தில் இல்லை; மூன்றும் பத்தில் "ஒழிவில் காலமெல்லாம்" என்ற திருவாய்மொழியில் உள்ளதாயினும், அத்திருப்பாசுரத்திலும் உலகம் அளந்த செயலே பேசப் பட்டிருத்தலாலும், அதுவும் திருவேங்கடமுடையான் விஷயமாகவே இருத்தலாலும் அத் திருப்பாசுரமும் பொருந்தும் என்று திருவுள்ளம்பற்றி அதனையும் ஈண்டு சேர்த்து அருளிச்செய்தார் என்க.

விடாயர் மடுவிலே சேருமாறு போலே உகந்து நிற்கின்ற, உலகம் திலதத்தே கண்டு - "திலதம் உலகுக்காய் நின்ற திருவேங்கடம்" என்கிறபடியே உலகத்துக்கு முக்கிய ஆபரணமான திருமலையிலே கண்டு,

அகலகில்லேன் என்று பூர்வ வாக்கியம் அநுசந்தித்தவர் - "அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறைமார்பா" என்கிறபடியே புருஷகாரவடிவையான பெரியபிராட்டியாரை முன்னிட்டு, "நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்! என்னை ஆள்வானே! நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே" என்று [1] வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், சௌசீல்யம், சௌலப்யம் ஆகிற குணங்களை அடைவே சொல்லிக்கொண்டு, "புகல் ஒன்று இல்லா அடியேன்" என்று தம்மிடத்தில் கைம்முதல் இல்லாமையையும் தமக்கு வேறு கதி இல்லாமையையும் முன்னிட்டுக் கொண்டு, "உன்னடிக்கீழ்" என்று "சரணௌ" என்றதன் பொருளான திருவடிகளையும், "அமர்ந்து புகுந்தேன்" என்று "சரணம் பிரபத்யே" என்றதன் பொருளையும் சொல்லுகையாலே துவயத்தில் முன்வாக்கியத்தில் கூறியவாறே பூரண பிரபத்தியைச் செய்த ஆழ்வார்,

பிணக்கறத் தொடங்கி வேதப்புனித இறுதிசொன்ன [2] சாத்ய உபாய சிரவண சசோக சஜாதீயர்க்கு - பிணக்கு அறத் தொடங்கி வேதப்புனித இறுதி சொனன - "பத்துடையடியவர்க்கு" என்ற திருவாய்மொழியிலே "பிணக்கு அற அறுவகைச் சமயமும்" என்கிற திருப்பாசுரத்திலே "வணக்குடைத் தவநெறி வழி நின்று" என்று தொடங்கி [3] "வேதப்புனித இருக்கை நாவில் கொண்டு ஞானவிதி பிழையாமே அச்சுதன் தன்னை மேவித் தொழுது உய்ம்

1. "அகலகில்லேன்" என்ற அத் திருப்பாசுரத்தில் "நிகரில் புகழாய்" என்றதனால் வாத்ஸல்யமும், "உலக மூன்றுடையாய்" என்றதனால் ஸ்வாமித்வமும், "என்னை ஆள்வானே" என்றதனால் சௌசீல்யமும், "திருவேங்கடத்தானே" என்றதனாலே சௌலப்யமும் கூறப்பட்டுள்ளன என அறிக.

2. சாத்ய உபாய சிரவண - பேற்றிற்கு உபாயமான சாதன பக்தியைக் கேட்டதனாலே, சசோக - (அது செய்ய முடியாதது என்றும் சொரூபத்திற்கு விரோதி என்றும் நினைத்தலால் பிறந்த) சோகத்தையுடைய, சஜாதீயர்க்கு - தன்னை ஒத்த அதிகாரிகட்கு.

3. திருவாய். 5. 2: 9.

மினீர்கள்" என்பது முடிய மேல் உபதேசித்த, சாத்யஉபாய சிரவண சசோக சஜாதீயர்க்கு - சாத்ய சாதன பக்தியைக் கேட்டதனாலே, அந்தப் பக்தியைச் செய்தற்கு அருமையையும் அது சொருபத்திற்கு விரோதியாக இருக்கும் தன்மையையும் நினைத்துப் பிறந்த சோகத்தோடே கூடி, அதனாலே [1] "எய்தக் கூவுதல் ஆவதே எனக்கு" [2] "என் நான் செய்கேன்" என்று இருக்கும் தம்மோடு ஒத்தவராம் படியான அதிகாரம் பிறந்தவர்களுக்கு,

[3] தந்தனன் மற்றோர் களைகண்இலம் புகுந்தேன் என்று ஸ்வ சித்தோபாய நிஷ்டையை உக்தி அநுஷ்டானங்களாலே காட்டுகிறார் ஆறும்பத்தில் - "திருவிண்ணகர் சேர்ந்த அப்பன் தன்னொப்பார்இல் அப்பன் தந்தனன் தன தாள் நிழலே", "திருவிண்ணகர் மன்னு பிரான் கழல்கள் அன்றி மற்றோர் களைகண் இலம் காண்மின்களே" என்கிற தம்முடைய வார்த்தைகளாலும், "அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்" என்கிற தம்முடைய அநுஷ்டானத்தாலும் தமக்கு இந்தச் சித்தோபாயத்தில் உண்டான நிஷ்டையைப் பிரகாசிப்பிக்கிறார் ஆறும்பத்தில் என்கை. (6)

225

[4] எண்ணிலாக் குணங்கள் பால துன்ப வேறவன் மாயாப் பல்யோகு செய்தி என்னும் ஆச்சர்ய சக்தி யோகத்தாலே தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் பிராபகத்வம், புற்பா எறும்பு பகைவனுக்கும் ஆக்கவல்ல சர்வசக்தி, பாதம் அகலகில்லாத தம்மை, அகற்றுமவற்றின் நடுவே இருத்தக் கண்டு, நலிவான் சுமடு தந்தாய் ஓ என்று சாதன பலமான ஆக்ரோசத்தோடே பழி இட்டு, கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியைக் கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வி ஆக்கி, தேற்ற ஒண்

---

1. திருவாய். 5. 7: 5. 2. திருவாய். 5. 8: 3.

3. இந்த ஆறும்பத்தில் உபதேசபரமான திருவாய்மொழி "நல்குரவும் செல்வும்" என்ற திருப்பதிகம். அதில், "திருவிண்ணகர்மன்னுபிரான் கழல்கள் அன்றி மற்றோர் களைகணிலம் காண்மின்களே" என்று முன்னிலையாக வினைமுற்று காண்கையாலே அதற்கு உபதேசத்திலே நோக்கு என்பது தெளிதல் தகும். உக்தி - தமது வார்த்தை. அநுஷ்டானம் - தமது செயல்.

4. இச் சூத்திரத்தையும் மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கோடல் வேண்டும். 'ஆக்கவல்ல சர்வசக்தி' என்பது முடிய முதற் பிரிவு. இதனால் இப்பத்தில் கூறப்படுகின்ற இறைவனுடைய குணம் இன்னது என்று தெரிவிக்கப்படுகிறது. பிராபகத்வத்தை ஆக்கவல்ல சர்வசக்தி என்க. அதற்குமேல் 'மறந்தவர்' என்பது முடிய இரண்டாம் பிரிவு. இதனால்,

ஞுதபடி தோற்று, ஒன்றி நிற்கப்பண்ணின பலா தாநம் மற்றும் கற்பார் இழவிலே சுவறி, பழைய தனிமைக்கூப்பீடு தலையெடுத்து, சூழவும் பகைமுகம் செய்ய, எடுப்பும் சாய்ப்புமான கிலேசம் நடக்க, உபாய அதிகாரதோஷம் ஒழிய, மாயங்கள் செய்து வைத்த வைசித்திரியைக் கேட்க, ஐச்சமாக இருத்தி உறக்கொண்ட ஸ்வ பர பிரயோஜனத்தை அருளிச் செய்ய, என்சொல்லி எந்நாள் பார்விண் நீர் இறப்பு எதிர் எதுவும் என்கிற உபகார ஸ்மிருதியோடே, தன் சரிதை கேள்வி ஆகாமல், இன்பம் பயக்க இருந்த நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாகக் காநகோஷ்டியையும் தேவபிரான் அறிய மறந்தவர், சரமோபாயபரராஞர்க்கு நீணகரம் அது; துணித் தான் சரண் அன்றி மற்றொன்றிலம்; உள்ளித் தொழு மின் என்று பிராப்ய சாதந அவதியைப் பிரீதியாலே பிரகாசிப்பிக்கிறார் ஏழாம்பத்தில்.

என்பது, சூத்திரம்.

வியாக் :— உபாயம் ஆகிற செயலுக்கு இன்றியமையாமல் வேண்டப்படுவதான ஆச்சரியமான ஆற்றலையுடைமையாலே, உண்மை ஞானம் பிறந்தவர்களுக்குக் கொடுக்கக் கடவதான பரம

இறைவன் ஆழ்வார்க்குச் செய்த திருவருளும், அத் திருவருளால் ஆழ்வார் அடைந்த தன்மையும் தெரிவிக்கப்படுகின்றன. சர்வசக்தி, தம்மை நலிவு மவற்றின் நடுவே இருத்த, கண்டு, ஆக்ரோசத்தோடே பழியிட்டு, முறை கெட்ட கேள்வியாக்கி, தோற்று, சுவறி, தலையெடுத்து, வைத்த வைசித் திரியைக் கேட்க என்றும், பகைமுகம் செய்யவும், கிலேசம் நடக்கவும் வைத்த வைசித்திரியைக் கேட்க என்றும், உபாய அதிகாரதோஷம் ஒழிய வும் வைத்த வைசித்திரியைக் கேட்க என்றும் தனித்தனியே கூட்டுக. பலா தானம் - நீராய் அலைந்து கரைய உருகாமல், உடலிலே தரித்து நின்று தன்னை நினைப்பதற்கு இறைவனால் கொடுக்கப்பட்ட வலிமை. அதற்கு மேல் உள்ளனவெல்லாம் மூன்றும் பிரிவு. இதனால், அங்ஙனமாய ஆழ்வார் செய்யும் பரோபதேசம் கூறப்படுகின்றது. ஐச்சமாக இருத்தி உறக் கொண்டது, ஸ்வ பர பிரயோஜனத்திற்காக என்று இறைவன் விடை இறுக்க, அதனைக் கேட்டு, எதுவும் என்கிற உபகார ஸ்மிருதியோடே, நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாகக் காநகோஷ்டியையும் மறந்தவர் என்க. ஐச்சம் - இச்சை. ஸ்வபர பிரயோஜனம் - தனக்கும் பிறர்க்கும் உண்டாகும் பயன். காநகோஷ்டி - பரமபதம். மறந்தவர் - ஆழ்வார்.

பதத்தை, தானே உபாயமாய்க் கொடுக்குமிடத்தில் விலங்குகட்கும் புல் பூண்டு முதலிய தாவரங்கட்கும் பகைவர்களுக்கும் உட்படக் கொடுக்கவல்ல சர்வேச்வரன், தன் திருவடிகளைக் கணநேரமும் பிரியமாட்டாமல் அதற்குரிய அங்கத்தோடு பிரபத்தியைச் செய்த தம்மை, விஷயங்களிலே மூட்டித் தன்பக்கல் சேராதபடி அகற்று மவையான இந்திரியங்கள் நடையாடுகிற இவ்வுலக வாழ்விலே வைக்கக் கண்டு வருத்தமுற்றவராய்க் கூப்பிட்டு, தம் நிலை தாம் பேசமாட்டாதபடி தளர்ந்து, பிறரால் மீட்க ஒண்ணாதபடி பறியுண்ட சிந்தையரானார்;

அங்ஙனம் ஆன சிந்தையையுடைய ஆழ்வாரை, அவன், தன்னுடைய வெற்றிச் செயல்களைக் காட்டித் தரிப்பித்தான்; அங்ஙனம் தரிப்பித்த தரிப்பும், இவ்வுலக மக்கள் இழவினை நினைத்தலால் சுவறிப் போய்ப் பழைய துன்பமே தலையெடுத்து, அவனுடைய அவயவங்கள் எல்லாம் நினைவிற்கு விஷயமாகி ஒருமுகம் செய்து நலிய, நோவு பட்டு, இப்படி எடுப்பும் சாய்ப்புமாகத் துன்பம் செல்லச்செய்தே, "உபாயமாக இருக்கிற நீ ஞானத்திலும் சக்தியிலும் குறைவற்றிருக்க, நான் கைம்முதல்இல்லாமையிலும் வேறு கதி இல்லாமையிலும் ஆர்த்தியிலும் குறைவற்றிருக்க, என்னை இவ்வுலக வாழ்விலே வைப்பதற்கு அடி என்?" என்று கேட்க, அவனும் "நமக்கும் நம்முடையார்க்கும் இனிதாகத் திருவாய்மொழி பாடுவிக்க வைத்தோம் காணும்" என்று அருளிச்செய்ய;

வியாசர் முதலான முனிவர்கள், முதலாழ்வார்கள் கவிபாடுகைக்கு உளராயிருக்க, நம்மைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்வதே! என்று அவன் செய்த உபகாரத்தைச் சொல்லி, அதற்குப் பிரதியுபகாரம் தேடிக் காணாமையாலே 'இனி இஃது ஒழியச் செய்யலாவது ஒன்று இல்லை' என்று திருவாறன்விளையிலே பெரிய பிராட்டியாருடனே எழுந்தருளியிருக்கின்ற பேரோலக்கத்திலே திருவாய்மொழி கேட்பித்து அடிமை செய்வதாக நினைத்து, அங்கே தம் திருவுள்ளம் அன்புறுகையாலே, பரமபதத்தில் இருப்பையும் விரும்பாதபடியான ஆழ்வார், மேலே தம்முடைய பிரபத்தி நிஷ்டையை வெளியிடும்படி புகுரநின்றவர்களுக்கு, அடையத்தக்க பேறு, திருவாறன்விளையே; அங்கு எழுந்தருளி நிற்கிறவனே அதனை அடைதற்குரிய வழி என்று தாம் அறுதியிட்ட உபாய உபேயங்களினுடைய முடிவைத் தம் உகப்பாலே வெளியிடுகிறார் இந்த ஏழாம் பத்தில்.

[1] எண்ணிலாக் குணங்கள் பால துன்பம் வேறவன் மாயாப் பல் யோகு செய்தி என்னும் ஆச்சர்ய சக்தி யோகத்தாலே - எண்ணிலா - [2] "எண்ணிலாப் பெருமாயனே" என்று எண்ணிறந்த ஆச்சர்ய மான குணங்களையுடையவனே என்றும், குணங்கள் - [3] "குணங்கள் கொண்ட மூர்த்தி ஓர் மூவராய்ப் படைத்து அளித்துக் கெடுக்கும்" என்று சத்துவம் முதலான குணங்களுக்குத் தகுதியாக மூர்த்தி களைக்கொண்டு படைத்தல் முதலியவற்றைச் செய்யுமவன் என்றும், பாலதுன்பம் - [4] "பாலதுன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்" என்று இடம் அறிந்து இன்பதுன்பங்களைக் கல்பித்தவனே என்றும், வேற வன் - [5] "ஊழிதோறுஊழி உருவும் பேரும் செய்கையும் வேறவன் வையம் காக்கும்" என்று கல்பந்தோறும் திருஉருவம் திருப்பெயர் செயல்கள் என்னும் இவற்றை வேருகவுடையனுய்க்கொண்டு உல கத்தைக் காப்பாற்றும் என்றும், மாயா - [6] "மாயா வாமனனே" என்று ஆச்சர்யமான செயல்களையுடையவனே என்றும், பல்யோகு செய்தி - [7] "உள்ளப் பல்யோகு செய்தி" என்று திருவுள்ளத்திலே பலவகையாகப் பாதுகாக்கும் உபாயங்களைச் சிந்தை செய்யாநிற்றி என்றும், என்னும் ஆச்சர்ய சக்தி யோகத்தாலே - இப்படிப் பலவித மாகச் சொல்லப்பட்ட, உபாயத்தைச் செய்வதற்கு வேண்டத்தக்க தான ஆச்சரியமான சக்தியையுடைமையாலே,

தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் பிரா பகத்வம், புற்பா எறும்பு பகைவனுக்கும் ஆக்கவல்ல சர்வசக்தி - தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் [8] பிராபகத்வம் - [9] "தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு இன்பக்கதி செய்யும்" என்றும், [10] "ஏற்றரும் வைகுந்தத்தை அருளும்" என்றும் சொல்லு கிறபடியே உபாயமும் பலமும் அவனே என்று எண்ணி, பின்பு உல கத்தார் செயல்களைக் கண்டாதல், போலியுக்திகளைக் கொண்டாதல்

---

1. *இப்பத்தில் கூறப்படுகின்ற இறைவனுடைய சக்தி என்னும் குணத்தைத் தெரிவித்தற்குரிய திருப்பாசுரப் பகுதிகளைச் சேர எடுக்கிருர் 'எண்ணிலா' என்று தொடங்கி.*

2. *திருவாய்.* 7. 1: 1
3. *திருவாய்.* 7. 1: 11.
4. *திருவாய்.* 7. 2: 7.
5. *திருவாய்.* 7. 3: 11.
6. *திருவாய்.* 7. 8: 7.
7. *திருவாய்.* 7. 8: 4.
8. *பிராபகத்வம் - உபாயமாக இருக்கும் தன்மை, வழியாக இருக் கும் தன்மை. சர்வசக்தி - இறைவன்.*
9. *திருவாய்.* 7. 5: 11.
10. *திருவாய்.* 7. 6: 10.

பிற்காலியாதே நின்றவர்களுக்கு, தனக்கு மேல் ஒன்று இல்லாத தான ஆனந்தத்தையுடையதாய், ஒருவராலும் தன் முயற்சியால் அடைய ஒண்ணுததாய் இருக்கிற ஸ்ரீ வைகுண்டத்தைத் தன்னருளாலே கொடுக்கிற தன் உபாயமாம் தன்மையை, புற்பா எறும்பு பகைவனுக்கும் ஆக்கவல்ல சர்வசக்தி - [1] "புற்பா முதலாப் புல்லெறும்பு ஆதி ஒன்றின்றியே நற்பாலுக்கு உய்த்தனன்" என்றும், [2] "நாட்டை அளித்து உய்யச்செய்து" என்றும், [3] "சேட்பால் பழம்பகைவன் சிசுபாலன் திருவடி தாட்பால் அடைந்த" என்றும் சொல்லுகிற படியே, ஞானம் சிறிதும் இல்லாத விலங்குகட்கும் பறவைகட்கும் புல்பூண்டு முதலிய தாவரங்களுக்கும் விரோதத்தில் முதிர நின்ற பகைவனுக்குமாம்படி செய்யவல்ல அளவிலா ஆற்றலையுடைய இறைவன்,

பாதம் அகலகில்லாத தம்மை அகற்றுமவற்றின் நடுவே இருத்தக் கண்டு, நலிவான் சுமடு தந்தாய் ஓ என்று சாதனபலமான ஆக்ரோசத்தோடே பழியிட்டு - பாதம் அகலகில்லாத தம்மை - [4] "அடியேன் உனபாதம் அகலகில்லேன் இறையுமே" என்கிறபடியே தன் திருவடிகளைக் கணநேரமும் அகல ஆற்றலையுடையவரன்றிக்கே [5] "அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்கிறபடியே சரணம் புகுந்த தம்மை, அகற்றுமவற்றின் நடுவே இருத்த - [6] "அகற்ற நீ வைத்த மாய வல் ஐம்புலன்களாமவை" என்கிறபடியே தன் திருவடிகளைக் கிட்டாதபடி அகற்றவற்ருன இந்திரியங்களின் நடுவே இவ்வுடம்பிலே இருக்கும்படி வைக்க, கண்டு - பார்த்து, நலிவான் சுமடு தந்தாய் ஓ என்று சாதனபலமான ஆக்ரோசத்தோடே பழிஇட்டு - [7] "நலிவான் இன்னும் எண்ணுகின்ருய்" என்றும், [8] "அன்புருகி நிற்குமது நிற்கச் சுமடு தந்தாய்" என்றும், [9] "விண்ணுளார் பெருமானேயோ" என்றும், [10] "முன்பரவை கடைந்து அமுதம் கொண்ட மூர்த்தியோ" என்றும் சொல்லுகிறபடியே விளம்பத்திற்குக் காரணம் இல்லாத உபாயத்தைப் பற்றினுல் அது பலமாகும்தனையும் கிடந்து கூப்பிடுமித்தனை யல்லது வேறு ஒன்றும் செய்யலாவது இல்லாமையாலே,

---

1. *திருவாய்.* 7. 5: 1.
2. *திருவாய்.* 7. 5: 2.
3. *திருவாய்.* 7. 5: 3.
4. *திருவாய்.* 6. 10: 9.
5. *திருவாய்.* 6. 10: 10.
6. *திருவாய்.* 5. 7: 8.
7. *திருவாய்.* 7. 1: 1.
8. *திருவாய்.* 7. 1: 10.
9. *திருவாய்.* 7. 1: 5.
10. *திருவாய்.* 7. 1: 10.

மேலே தாம் செய்த உபாயத்தின் பலமாக [1] வந்ததாய், கலங்காப் பெருநகரம் கலங்கி அவனுக்கு அங்குக் குடியிருப்பு அரிதாய் வந்து விழவேண்டும்படியான, இவ்வுலக வாழ்வில் அடிக்கொதிப்பாலே வந்த பெரிய கூப்பீட்டோடே கூடிக்கொண்டு, [2] தம் தலையால் வந்த தனையும் அவன் தலையிலே ஏறிடும்படியான சம்பந்தத்தை உணர்ந்தவராகையாலே இந்திரியங்களை இட்டு நலிவிக்கிறாய் நீ என்று அவன் மேலே பழி இட்டு,

[3] கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியைக் கோயில் திருவாசலிலே முறை கெட்ட கேள்வி ஆக்கி - கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியை - இப்படிக் கூப்பிடவும் ஆற்றல் இன்றிக்கே துன்பம் உற்றவராய்க் கொண்டு ஒரு பிராட்டி நிலையை அடைந்து, "கங்குலும் பகலும் கண் துயில் அறியாள்" என்றும், "இட்டகால் இட்ட கைகளாயிருக்கும்" என்றும், "சிந்திக்கும் திசைக்கும்" என்றும் வருகின்ற இன்னோரன்ன திருப்பாசுரங்களின்படியே பகல் இரவு என்னும் வேறுபாடு அற, அழுவது தொழுவது மோஹிப்பது புலம்புவது அடைவுகெடப்பேசுவது நெடுமூச்சுஎறிவது அது தானும் மாட்டாதொழிவது செயலற்றிருப்பது இப்படித் துன்பம் விஞ்சிச் செல்லுகையாலே [4] "ஆசை, சிந்தை, நினைவு, பேசுதல், அழுதல், பித்துப்பிடித்தது போன்றிருத்தல், மயக்கம், மோஹம், வியாதி, சாதல் என்று சொல்லப்படும் இப் பத்தும் காமத்தால் உண்டாகும் விகாரங்கள்" என்றாற்போன்ற நிலை வேறுபாடுகட்கு அடைவு பிடிக்க ஒண்ணாதவாறு நடக்கிற துன்பத்தை, கோயில் திருவாசலிலே [5] முறை கெட்ட கேள்வியாக்கி - பெரியபெருமாள் திருக்கண்வளர்கின்ற

---

1. *வந்ததாய் விழவேண்டும்படியான கூப்பீடு என்க. ஆக்ரோசம் - கூப்பீடு.*

2. *'தம்தலையால்' என்று தொடங்கும் இவ்விடத்தில் 'பிரஜை தெருவிலே இடறித் தாய் முதுகில் குத்துமாறு போலே' என்ற ஸ்ரீவசன பூஷண ஸ்ரீசூக்தி நினைத்தல் தகும்.*

3. *"கங்குலும் பகலும்" என்ற திருப்பதிகத்தின் பொருள் இங்குப் பேசப்படுகின்றது.*

4. *ஆசா சிந்தா ஸ்ம்ருதி: கீர்த்தி: விலாபோந்மாத விப்ரமா:*
மோஹோ வ்யாதிர் ம்ருதிச்சேதி விகாரா: காமஜாதச.

என்பது, பிரமாணம்.

5. *திருவிருத்தத்தில் "இறையோ இரக்கினும்" என்ற திருப்பாசுரமும் தாயார் கூற்று ஆகையாலே, அத் திருப்பாசுரத்தில் "முறையோ அரவணைமேல் பள்ளிகொண்ட முகில்வண்ணனே" என்றதைத் திருவுள்ளம் பற்றி இங்கு 'முறை கெட்ட' என்று அருளிச்செய்கிறார். திருவிருத்தம் நூறு திருப்பாசுரங்களே திருவாய்மொழி நூறு திருப்பதிகள்*

கோயில் திருவாசலிலே பெண் பிள்ளையைப் பொகட்டுத் திருத்தாயார் கூச்சுமுறை தவிர்ந்து, தானே இவள் நிலையை அவர்க்குச் சொல்லி, "திருவரங்கத்தாய் இவள் திறத்து என்செய்கின்றாய்" என்றும், "என்செய்திட்டாய்" என்றும், "என்சிந்தித்தாய்" என்றும், "என் செய்கேன் என் திருமகட்கே" என்றும் அவர் தம்மையே கேட்கும்படி மிகப் பெரிய துன்பத்தை அடைந்து,

'அடைவு அற்ற அரதியை' என்று பாடமானபோது "கங்குலும் பகலும்" என்பது போன்றவைகளில் சொல்லுகிறபடியே பகல் இரவு என்னும் வேறுபாடு அற அழுவது தொழுவது என்பன போன்றவைகளாலே "ஆசா சிந்தா" என்ற சுலோகத்திற் சொல்லுகிறபடியே நிலைகளுக்கு ஓர் அடைவு பிடிக்க ஒண்ணாதபடி நடக்கிற துன்பத்தை என்று பொருள் கூறுக.

தேற்ற ஒண்ணாதபடி தோற்று, ஒன்றி நிற்கப் பண்ணின பலாதாநம் மற்றும் கற்பார் இழவிலே சுவறி - [1]தேற்ற ஒண்ணாதபடி தோற்று - "அன்னையர்காள் என்னைத் தேற்ற வேண்டா" என்றும், "கண்ணபிரானுக்கு என் பெண்மை தோற்றேன்" என்றும் சொல்லுகிறபடியே அண்மையில் உள்ளவர்களாலும் தேற்றித் தரிப்பிக்க ஒண்ணாதபடி நெஞ்சு பறியுண்டு பாரதந்திரியத்தையும் இழக்க, [2]ஒன்றிநிற்கப் பண்ணின பலாதாநம் - இப்படிப் பிரிவுத் துன்பத்தாலே மிகவும் தளர்ந்திருக்கிற இவரைத் தரிப்பிக்கைக்காகத் தன் வெற்றிச் செயல்களைக் காட்டிக் கொடுக்க, கண்டு பிரீதராய், "குன்றம் எடுத்தபிரான் அடியாரொடும் ஒன்றிநின்ற சடகோபன்" என்கிறபடியே தன் வெற்றிச் செயல்களிலே தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களோடே பொருந்தி நிற்கும்படி கொடுத்த வலிமையானது, [3]மற்றும் கற்பார் இழவிலே சுவறி - "கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ" என்கிறபடியே அவதாரத்தால் வந்த எளிமையையுடையனைப் பிரியத்தைச் செய்யுமவனாய் ஹிதத்தைச் செய்யுமவ

னாகப் பரம்பினவாகையாலும் "இறையோ இரக்கினும்" என்ற திருப்பாசுரமே "கங்குலும் பகலும்" என்ற திருப்பதிகமாக விரிந்ததாகையாலும் அங்ஙனம் அருளிச்செய்தார். சூத். 51. பார்க்கவும்.

1. *இங்கு, "வெள்ளைச் சுரிசங்கு" என்ற திருப்பதிகத்தின் பொருள் கூறப்படுகிறது.*

2. *இங்கு "ஆழியெழச் சங்கும்" என்ற திருப்பதிகத்தின் பொருள் கூறப்படுகிறது.*

3. *"கற்பார் இராமபிரானை" என்ற திருப்பதிகத்தின் பொருள் இங்குக் கூறப்படுகின்றது.*

ஞய், தான் அங்கீகரிக்க நினைத்தாரை ஒரு காரணமும் பற்ருமலே ஸ்ரீவைகுண்டமளவாக நடத்துமவனுமாய் இருக்கிற இவனை ஒழிய மற்றும் ஒரு பொருளைக் கற்பரோ! இப்படிச் சுலபனுன இவனை இவ் வுலக மக்கள் இழப்பதே! என்று அவர்கள் இழவை நினைத்தலாலே அவ்வலிமை சுவறி,

பழைய தனிமை கூப்பீடு தலை எடுத்து, சூழவும் பகைமுகம் செய்ய, எடுப்பும் சாய்ப்புமான கிலேசம் நடக்க, உபாய அதிகார தோஷம் ஒழிய, மாயங்கள் செய்துவைத்த வைசித்திரியைக் கேட்க - பழைய தனிமைக் கூப்பீடு தலைஎடுத்து - [1] "பாமரு மூஉலகும் படைத்த பற்பநாபாவோ" என்று தொடங்கி "தனியேன் தனி ஆளாவோ" என்று ஒருதுணையும் இன்றிக்கே இருந்து, 'உலக காரண ஞக இருத்தல்' முதலிய அவனுடைய செயல்களைச் சொல்லிக் கூப் பிடும்படி, முன்புத்தை "உண்ணிலாவிய" என்னும் திருவாய்மொழி யில் கூப்பீடே மீளவும் தலையெடுத்து, [2] சூழவும் பகைமுகம் செய்ய - "சூழவும் தாமரை நாண்மலர் போல் வந்து தோன்றும்" என்றும், "இணைக்கூற்றம் கொலோ அறியேன்" என்றும், "கண்ணன் கோளிழை வாண்முகமாய்க் கொடியேன் உயிர் கொள்கின்றதே" என்றும் சொல்லுகிறபடியே, முன்பு அனுபவித்தவனுடைய முகத்தின் சோபையானது தெளிந்த நினைவிற்கு விஷயமாய்ப் பார்த்த பார்த்த இடம் எங்கும் தோன்றி நலிய, 'எடுப்பும் சாய்ப்புமான கிலேசம் நடக்க' என்றது, வெற்றிச் செயல்களைக் காட்டித் தரிப்பித்தபோது தலை சாய்ந்தும், மீளவும் கூப்பிடும்படி தலை எடுத்தும் இப்படி எடுப்பும் சாய்ப்புமாய்ச் செல்லுகிற துன்பமானது [3] நடவா நிற்கச் செய்தே, என்றபடி.

---

1. "பாமரு மூவுலகும்" என்ற திருப்பதிகத்தின் பொருள் கூறப் படுகின்றது இங்கு.

2. சூழவும் - நான்கு பக்கங்களிலும், பகை - பகைவர்கள், முகம் செய்ய - தோன்றி நலிய. இங்கு "ஏழையராவியுண்ணும்" என்ற திருப் பதிகத்தின் பொருள் பேசப்படுகின்றது. திருமுகமண்டலத்தில் உள்ள உறுப்புக்களான திருக்கண்கள், திருமூக்கு, திருவாய், திருப்புருவம், திருக் காது, திருநெற்றி முதலியவை தோன்றி நலிகிறபடியை "ஏழையராவி" என்ற திருவாய்மொழியில் அருளிச்செய்திருக்கையாலே 'பகை முகம் செய்ய' என்கிருர்.

3. நடவா நிற்கச் செய்தே என்பதனை மேலே வருகின்ற 'வைசித் திரியைக் கேட்க' என்றதனேடு கூட்டுக.

[1] உபாய அதிகார தோஷம் ஒழிய - உபாயமாக இருக்கிற உனக்கு அறியாமை, ஆற்றல் இன்மைகள் ஆகிற குற்றம் இன்றிக்கே இருக்க, உன்னைச் சரணம் பூண்ட எனக்குக் கைம்முதல் இன்மை வேறுகதி இன்மைகளும், ஆர்த்தியும் உண்டாகையாலே அதிகார குற்றம் இன்றிக்கே இருக்க, மாயங்கள் செய்து வைத்த வைசித்திரியைக் கேட்க - "பாசங்கள் நீக்கி என்னை உனக்கே அறக்கொண்டிட்டு நீ - மாயங்கள் செய்து வைத்தி இவை என்ன மயக்குக்களே" என்கிறபடியே அவித்யை கர்மம் வாசனை ருசிகளை வாசனையோடே போக்கி உனக்கே உரிய அடியவனாகக் கொண்ட பின்பு, பிறப்பு இறப்பு முதலிய ஆச்சரியங்களை உண்டாக்கி என்னை இவ்வுலகத்திலே வைத்த ஆச்சரியத்தை அருளிச்செய்யவேண்டும் என்று கேட்க,

[2] ஐச்சமாக இருத்தி உறக்கொண்ட ஸ்வ பர பிரயோஜனத்தை அருளிச்செய்ய - ஐச்சமாக இருத்தி - அவன் 'நமக்கும் நம்முடையார்க்கும் போது போக்காக உம்மைக் கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ள வைத்தோம் காணும்' என்று, கர்மம் காரணமாக அன்றிக்கே தன் இச்சையாலே ஆழ்வாரை இவ்வுலகிலே இருக்கச்செய்து, உறக்கொண்ட - "என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை, உறப்பல இன்கவி சொன்ன" என்கிறபடியே தனக்குத் தகுதியான கவிகளைப் பாடுவித்துக்கொண்ட, ஸ்வ பர பிரயோஜனத்தை அருளிச்செய்ய - தனக்குப் பயனும், பிறர்க்குப் பயனுமான இதனை இவ்வுலகில் வைத்ததற்குக் காரணமாக அருளிச்செய்ய,

---

1. உபாயதோஷம் அதிகாரதோஷம் என்று கூட்டுக. உலகத்தில் ஒருவன் மற்றொருவனிடத்தில் ஒரு காரியத்தை வேண்டினால் அது நிறைவேறாமல் போவதற்கு இரண்டு காரணங்கள் உண்டாகலாம். காரியத்தை முடித்துத் தரவேண்டியவனிடத்தில் அதனை முடித்துத் தருவதற்கு வேண்டிய ஆற்றல் முதலாயின இல்லாமல் இருத்தல் ஒன்று. குறை வேண்டுபவனிடத்தில் யாதாயினும் குறை இருத்தல் மற்றொன்று. அதுபோல், இங்கு 'அடியேனை இக் கொடுவுலகத்தில் வைக்காமல் விரைவில் திருவடி சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்று வேண்டின ஆழ்வாருடைய வேண்டுகோள் நிறைவேறாமைக்கு இறைவனிடத்திலாவது குறை இருக்கவேண்டும்; அல்லது ஆழ்வாரிடத்திலாவது குறை இருக்கவேண்டும்; இவ்விரண்டும் இல்லை என்பதனை இவ்வாக்கியத்தால் தெளிவுபடுத்துகிறார். இவ்வாக்கியம், "மாயவாமனனே" என்ற திருப்பதிகத்தின் பொருள்.

2. மேலே ஆழ்வார் கேட்ட வினாவிற்கு விடை கூறப்படுகிறது இவ்வாக்கியத்தால். ஐச்சமாக - இச்சை காரணமாக. வைத்தது கருமம் காரணமாக அன்று என்றபடி. இதுமுதல் 'உபகார ஸ்மிருதியோடே' என்பது முடிய, "என்றைக்கும் என்னை" என்ற திருப்பதிகத்தில் பேசப்படும் பொருள்.

என்சொல்லி எந்நாள் பார்விண்நீர் இறப்பு எதிர் எதுவும் என்கிற உபகார ஸ்மிருதியோடே - என்சொல்லி எந்நாள் பார்விண் நீர் இறப்பு எதிர்-வியாசர் பராசரர் வால்மீகி முதலிய மகரிஷிகளும், முதலாழ்வார்களும் உளராயிருக்க, தம்மைக்கொண்டு கவி பாடு வித்துக்கொண்ட உபகாரத்தை நினைந்து, "என்சொல்லி நிற்பனோ" என்றும், "எந்நாள் சிந்தித்து ஆர்வனோ" என்றும், "பார்விண்நீர் முற்றும் கலந்து பருகிலும் ஆர்வனோ" என்றும், "இறப்பு எதிர் காலம் பருகிலும் ஆர்வனோ" என்றும் சொல்லுகிறபடியே, அவன் செய்த உபகாரத்தை நினைந்தால் எங்ஙனே நான் தரையில் கால் பாவுவது, அவ்வுபகாரத்தைக் காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் நினைத்தாலும் நிறைவுபெற்றவன் ஆகிறிலேன்; எல்லா இடங்களிலும் உண்டான எல்லா மக்களுடையவும் வாக்கு முதலான உறுப்புக்களை நான் ஒருவனுமே உடையேனுமாய் மூன்று காலங்களி லும் பேசி அநுபவித்தாலும் மனம் நிறைவுபெற்றவன் ஆவனோ! எதுவும் என்கிற உபகார ஸ்மிருதியோடே - "உதவிக் கைம்மாறு" என்று தொடங்கி "எதுவும் ஒன்றும் இல்லை செய்வது இங்கும் அங்கே" என்கிறபடியே, இதற்குக் கைம்மாருக ஆன்மாவினைக் கொடுப்போம் என்னில், அதுவும் அவனுக்கு உடைமை ஆகையாலே, இவ்வுலகம் அவ்வுலகமாகிற உபய விபூதியிலும் செய்யலாவது ஒன்றுஇல்லை என்னும்படியான செய்ந்நன்றியறிதலோடு கூடிக் கொண்டு,

[1] தன் சரிதை கேள்வி ஆகாமல் இன்பம் பயக்க இருந்த நிலத் தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாகக் கானகோஷ்டியையும் தேவபிரான் அறிய மறந்தவர் - தன் சரிதை கேள்வி ஆகாமல் - [2] "மிதிலைச்செல்வி உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள் செம்ப வளத்திரள்வாய் தன்சரிதை கேட்டான்" என்கிறபடியே, பிராட் டியை ஒழியப் பெருமாள் தனியிருந்த இருப்பிலே குசலவர்கள் ஸ்ரீ ராமாயணம் கேட்பித்தாற்போல் அன்றிக்கே, இன்பம் பயக்க இருந்த - "இன்பம் பயக்க எழில் மலர்மாதரும் தானும் இவ்வேழு லகை, இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து" என்கிறபடியே, ஆனந்த மயனை தனக்கும் ஆனந்தத்தை வளர்க்கின்றவளான பிராட்டியும் தானுமான சேர்த்தியிலே உலகமடங்க வாழும்படி உபய விபூதிகட்கும் தலைவனும் தன்மையால் வந்த வேறுபாடு தோற்ற

1. இவ்வாக்கியத்தால் "இன்பம் பயக்க" என்ற பத்தாம் திருப் பதிகத்தின் பொருள் பேசப்படுகின்றது.

2. பெருமாள் திரு. 10: 8.

எழுந்தருளியிருந்த, நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாக - "நிலத்தேவர்குழு வணங்கும் சிந்தைமகிழ் திருவாறன்விளை" என்கிறபடியே, நிலத்தேவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளிலே கைம்மாருகத் திருவாய்மொழி கேட்பித்து அடிமைசெய்யப் பாரித்து, [1] காநகோஷ்டியையும் தேவபிரான் அறிய மறந்தவர் - பரத்துவத்திலும் விருப்பம் செல்லாதபடி திருவாறன்விளையிலே விருப்பம் செல்லுகையாலே "திருவாறன்விளை யுறை தீர்த்தனுக்கு அற்றபின், சிந்தை மற்றொன்றின் திறத்தது அல்லாத் தன்மை தேவபிரான் அறியும்" என்கிறபடியே, பகவானை அநுபவிக்கும் அநுபவத்தால் உண்டாகும் பெருமகிழ்ச்சிக்குப் போக்குவீடாக "ஹாவு ஹாவு ஹாவு" என்று சாமகானம் பண்ணும் பரமபதத்தில் கூட்டத்தையும், இயல்பாகவே முற்றறிவினனாய், நினைவிற்கு வாய்த்தலையிலே இருந்து எல்லாருடைய நினைவுகளையும் அறியும் அயர்வறும் அமரர்கள் அதிபதி அறிய மறந்தவர்,

சரமோபாயபரர் ஆனார்க்கு நீள்நகரமது; துணித்தான்சரண் அன்றி மற்றொன்றிலம்: உள்ளித்தொழுமின் என்று பிராப்ய சாதன அவதியைப் பிரீதியாலே பிரகாசிப்பிக்கிறார் ஏழாம்பத்தில் - சரமோபாயபரர் ஆனார்க்கு - [2] மேல், தாம் அருளிச்செய்யக் கேட்ட பிரபத்தி நெறியிலே ஊன்றியிருக்குமவர்களுக்கு, [3] நீள்நகரம் அது, துணித்தான் சரண் அன்றி மற்றொன்றிலம், உள்ளித் தொழுமின் என்று - "நீணகரமதுவே மலர்ச்சோலைகள் சூழ் திருவாறன்விளை, வாணனை ஆயிரம் தோள் துணித்தான் சரண் அன்றி மற்றொன்றிலம்" என்றும், "உள்ளித்தொழுமின் தொண்டீர்" என்றும் சொல்லுகிறபடியே

1. அடிமை செய்யப் பாரித்த சமயத்தில் எம்பெருமான் ஆழ்வாருடைய திருவுள்ளத்தைச் சோதிக்க விரும்பினான். திருவாய்மொழி கேட்பிப்பதிலேயே இவர் ஊன்றியிருக்கின்றாரோ, அல்லது பரமபதத்திலும் ஆசை வைத்திருக்கின்றாரோ பார்ப்போம் என்று நினைத்து 'ஆழ்வீர்! உமக்குப் பரமபதம் கொடுப்பதாக இருக்கிறோம்' என்ன, அதற்கு விடையாக எழுந்த வாக்கியம் இது.

2. 'மேல்' என்றது, 'அகலகில்லேன் இறையும்' என்னும் திருப்பாசுரத்தை.

3. பிரபத்தி நெறியில் ஊன்றி நிற்கும் அடியார்கட்கு, பேற்றினுடைய எல்லையையும், அதனையடைதற்குரிய வழியின் முடிந்த எல்லையையும் இங்கு அருளிச்செய்கிறார் என்றபடி. எம்பெருமானைக் காட்டிலும் அவனுடைய சம்பந்தம் பெற்ற ததீய விஷயமே பேற்றினுடைய எல்லை நிலமாகையாலே திருவாறன்விளை என்னும் அத்திவ்விய தேசமே பேறு என்றும், அர்ச்சாவதார சுலபனானவனே உபாயத்தினுடைய எல்லையாகையாலே 'துணித்தான் சரண் அன்றி மற்றொன்றிலம் - உள்ளித் தொழுமின் தொண்டீர்' என்று உபாயத்தின் எல்லையையும் வெளியிடுகிறார் என்றபடி.

தனக்குமேல் ஒன்றில்லாத இனிமையையுடையதான திருவாறன் விளையாகிற மகாநகரமே அடையத்தக்க பேறு ; அங்கு எழுந்தருளி நிற்கிற, உஷையையும் அநிருத்தனையும் சேர்த்தவனான கண்ண பிரானே அந்தப் பேற்றினை அடைதற்கு வழியாவான் ; இவ்வர்த் தத்தில் மாறாட்டம் இல்லை ; ஆகையால், இவ்வர்த்தத்தில் சுவை யுடையார் புத்தி பண்ணுங்கோள் என்று, பிராப்யசாதந அவதியை பிரீதியாலே பிரகாசிப்பிக்கிறார் ஏழாம்பத்தில் - பேற்றினுடைய எல்லை நிலம் அவனுடைய சம்பந்தம் பெற்ற பொருள் என்றும், உபாயத் தினுடைய எல்லை நிலம் அர்ச்சாவதார சுலபனானவனே என்றும் இவ்வர்த்தத்தைத் தம்முடைய உகப்பாலே வெளியிட்டருளுகிறார் ஏழாம்பத்தில் என்கை. (7)

226

[1]தேவிமார் பணியா நேர்பட்ட நல்லகோட்பாடு என்னும்படி சக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீ பரிஜந ஆதிகளையுடைய சத்யகாமன், கொண்ட வாக் விருத்தியையும் மறப்பிக்கும் கலக்கமும் சங்கையும் அச்சமும் தீர, தலைச்சிறப்பத் தந்தவதில், கிருதஜ் ஞதா பல பிரதியுபகாரமாக, வேந்தர் தலைவன் கன்யகாதானம் போலே, ஆரத்தழுவி அறவிலை செய்த ஆத்மலாபத்தாலே அதீவ விளங்கிப் பணைத்து, ஜன்மபாசம் விட்டு ஆத்வாரம் ஆளும் ஆளார் என்று பரிந்து அநுரூபனோடே அமர்ந்து

---

1. இச் சூத்திரத்தில் 'சத்யகாமன்' என்பது முடிய ஒரு பிரிவு. இதனால், இப்பத்தில் சொல்லப்படுகின்ற இறைவனுடைய குணம் இன்னது என்று தெரிவிக்கப்படுகிறது. அதற்கு மேல், 'பெருமையைக் காட்ட' என்பது முடிய ஒரு பிரிவு. இப்பிரிவில் இறைவன் ஆழ்வார்க்குச் செய்த உதவி தெரிவிக்கப்படுகிறது. அதற்குமேல் உள்ளனவெல்லாம் ஒரு பிரிவு. இப்பிரிவில் ஆழ்வாருடைய தன்மையும், அவர் செய்த உபதேசமும் கூறப்படுகின்றன.

சத்யகாமன், ஆத்மலாபத்தாலே அதீவ விளங்கி, பணைத்து, பிரீதி வர்த்தித்து, உறைந்து, கண்டுகொண்டிருந்த அமாநுஷ போகம் ஆக்கினான்; (அங்ஙனம் ஆக்கினவனாகி) நோய் மறுவவிடாமல் சிறியேன் என்றதின் பெருமையைக் காட்டினான் ; (காட்டக் கண்டு) அநுசந்தித்த ஆழ்வார், ஸ்வசாதனசாத்யஸ்தர் இருகரையராகாமல் (அவர்களை) பிராப்யைகபரராக்குகிறார் எனச் சூத்திரத்தை முடிக்க.

கொண்ட வாக்கு விருத்தியையும் மறப்பிக்கும் கலக்கமும் சங்கையும் அச்சமும் (ஆழ்வாருக்குத்) தீர, தலைச்சிறப்பத் தனதாள்களை இறைவன் தந்தான் என்க. (தந்ததற்குக்) கிருதஜ்ஞதா பிரதியுபகாரமாக (ஆழ்வார்

பிரிவில் கிருபணதசையாகத் துவரும் சீதா குணங்களாலே பிரீதி வர்த்தித்து, தித்திக்க உள்ளே உறைந்து, கண்டுகொண்டிருந்து அமாநுஷபோகமாக்கினவன், மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவல் இடாமல், 'சிறியேன்' என்றதின் பெருமையைக் காட்ட, தேகாதிகளில் பரமாய், நின்று நினைக்கில் லக்ஷ்மீதுல்யமாய், அவர்க்கே குடிகளாம் பரதந்த்ர ஸ்வரூபத்தை அநுசந்தித்தவர், ஸ்வ சாதன சாத்யஸ்தர் இருகரையர் ஆகாமல், மண்ணவரும் வானவரும் நண்ணுமத்தையே குறிக்கொண்மின் உள்ளத்து என்று பிராப்யைகபரர் ஆக்குகிறார் எட்டாம்பத்தில்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—மேலே கூறிய [1]சர்வசக்தி யோகத்தாலே நித்தியமாகக் கல்பிக்கப்பட்ட போக்யங்கள், போக உபகரணங்கள், போக ஸ்தானங்கள் ஆகிற மூன்றனையுமுடையனுகையாலே சத்தியகாமனுன சர்வேச்வரன், ஆழ்வாரைத் தரிப்பிக்க நினைத்தான்; என்னை? எனின், ஆழ்வார், மேலே தமக்கு உண்டான வாசிகமான அடிமையையும் மறந்து, பகவானுடைய அநுபவம் கிடையாமையாலே கலங்கி, பகவானுடைய குணங்களிலும் அவனுடைய சொரூபத்திலும் ஐயம்கொண்டு, இவ்வுலக வாழ்வினை நினைந்து அஞ்சினுர்

தன் உயிரை) ஆரத்தழுவி அறவிலை செய்தனர் என்க. 'வேந்தர் தலைவன் கன்யகாதானம் போலே' என்பது, ஆழ்வார் அறவிலை செய்ததனை விளக்க வந்த உவமை. வேந்தர் தலைவன் - ஜநகமகாராஜன். தனக்குக் கிடைத்த ஆத்மலாபத்தாலே இறைவன் அதிவ விளங்கி, பணைத்து, பிரீதி வர்த்தித்து, உள்ளே உறைந்து, கண்டுகொண்டிருந்து, அமாநுஷ போகம் ஆக்கினுன் ஆழ்வார்க்கு என்க. இடையிலே உள்ள 'ஜந்மபாசம் விட்டு' என்பது முதல் 'சீதா குணங்களாலே' என்பது முடிய உள்ளவை பிரீதி வர்த்தித்தலுக்குரிய காரணங்கள். இவ்வாக்கியம் பிராட்டியோடு ஆழ்வார்க்குள்ள ஒற்றுமையை விளக்க வந்தது. அமாநுஷ போகம் - தேவ போகம். ஆக்கினவன் பெருமையைக் காட்ட என்க. 'சிறியேன்' என்றதின் பெருமையைக் காட்டுகிறுர், 'தேஹாதிகளில்' என்றது முதல் 'பரதந்த்ர ஸ்வரூபத்தை' என்றது முடிய. பெருமையை அநுசந்தித்தவர் குறிக்கொண்மின் உள்ளத்து என்று பிராப்யைகபரர் ஆக்குகிறுர் என்க.

1. *சர்வசக்தியோகம் - எல்லாவிதமான ஆற்றலையுமுடைமை. நித்தியமாகக் கல்பிக்கப்பட்ட - எப்பொழுதும் இருப்பவைகளாகக் கூறப்படுகின்ற. போக்கியம் - இனிய பொருள்கள். உபகரணம் - கருவிகள். போகஸ்தாகம் - இன்பம் நுகர்தற்குரிய இடம்; பரமபதம். சத்தியகாமன் - எப்பொழுதும் உள்ளனவான பொருள்களையுடையவன்.*

ஆகையாலே அவரைத் தரிப்பிக்க நினைத்தான்; அதற்காக, முன் தான் செய்துபோந்த உபகாரத்தை நினைப்பு ஊட்டினான்; அதனாலே ஆழ்வாரும் செய்ந்நன்றியறிதலையுடையராய் அதற்குப் பலனாக ஆன்மாவினை அவன் திருவடிகளில் சமர்ப்பித்தார்; அதனாலே எம்பெருமான் பெரும்பேறு பெற்றானாய், இவருடைய ஆன்ம குணங்களைக்கண்டு மிகமகிழ்ந்தவனாய், ஆழ்வார் திருவுள்ளத்திலே இருந்து, தனக்கு மேல் ஒன்று இல்லாததான அநுபவத்தை அநுபவிப்பித்து, இனி இவர், தம்மைத் 'தாழ்ந்தவர்' என்று நினைத்து அகலாமைக்காக ஆன்ம சொரூபத்தின் சிறப்பினைப் பிரகாசிப்பித்தான்; அப்போது ஆன்ம சொரூபத்தின் உண்மை நிலையை நினைந்த ஆழ்வார், மேலே தாம் உபதேசித்த பேற்றினையும் அதனை அடைதற்குரிய வழியினையும் கேட்டு உகந்தவர்கள், பலன் ஒன்றும், பலனை அடைதற்குரிய வழி வேறொன்றுமாய் இருகரையராய் அலையாதபடி பலமாகச்சொன்ன விஷயம் ஒன்றிலேயே அவர்களை ஊன்றச் செய்தருளுகிறார் இந்த எட்டாம்பத்தில்.

[1] தேவிமார் பணியா நேர்பட்ட நல்லகோட்பாடு என்னும்படி சக்தியாலே நித்தியமாகக் கல்பித்த பத்நீ பரிஜந ஆதிகளையுடைய சத்யகாமன் - தேவிமார் - [2] "தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்று அமரர் ஆட்செய்வார், மேவிய உலகம் மூன்று அவை ஆட்சி" என்றும், பணியா - [3] "பணியா அமரர் பணிவும் பண்பும் தாமே யாம்" என்றும், நேர்பட்ட - [4] "நேர்பட்ட நிறை மூஉலகுக்கும் நாயகன்" என்றும், நல்லகோட்பாடு என்னும்படி - [5] "நல்ல கோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளும் தான் நிறைந்த" என்றும் சொல்லுகிறபடியே பெரிய பிராட்டியார் முதலான தேவிமார்கட்கு நாயகனாய், ஏவிற்றுச்செய்யும் நித்தியசூரிகளுடைய தொண்டுகளுக்கும் ஞானம் முதலானவற்றிற்கும் தானே விஷயமாய், தன்னோடே பொருந்திப் பூரணமாகக் கட்டளைப்பட்டிருக்கின்ற மூன்று உலகங்கட்கும் நிர்வாஹகனாய் இருக்கும் என்னும்படி, சக்தியாலே - மேலே கூறிய தன்னுடைய ஆற்றலாலே, நித்தியமாகக் கல்பித்த - என்றும் உள்ளனவாகக் கல்பிக்கப்பட்ட, பத்நீ பரிஜந ஆதிகளையுடைய - தேவிமார், அமரர், இடம், இனியபொருள்கள், கருவிகள் ஆகியவற்றை உடையவனாகையாலே, சத்யகாமன் - சத்யகாமனாய் இருக்கிற சர்வேச்வரன்,

1. *ஆழ்வார் இத்தப்பத்தில் அருளிச்செய்கிற எம்பெருமானுடைய சத்தியகாமத்வம் என்ற குணத்தைக் காட்டுகிற திருப்பாசுரப்பகுதிகளைச் சேர அடுக்குகிறார் 'தேவிமார்' என்று தொடங்கி.*

2. *திருவாய்.* 8. 1: 1
3. *திருவாய்.* 8. 3: 6.
4. *திருவாய்.* 8. 9: 11.
5. *திருவாய்.* 8. 10: 11.

கொண்ட வாக்விருத்தியையும் மறப்பிக்கும் கலக்கமும் சங்கையும் அச்சமும் தீர - கொண்ட வாக்விருத்தியையும் மறப்பிக்கும் - "உம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொள்ள வைத்தோம்" என்று தான் இவரைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்ளுதலாகிற சொற்களால் செய்யும்தொண்டு யாதொன்று உண்டு; அதனையும் மறக்கும்படி ஆக்கின, கலக்கமும் - [1] "காணுமாறு அருளாய் என்று என்றே கலங்கி" என்கிறபடியே தன்னைக்கண்டால் கண்டு அநுபவிக்கப் பெருமையால் வந்த கலக்கமும், அவ்வளவன்றியே, சங்கையும் - [2] "உமர் உகந்து உகந்த உருவம் நின்னுருவமாகி உன் தனக்கு அன்பரானார், அவர் உகந்து அமர்ந்த செய்கை உன்மாயை அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்" என்கிறபடியே அவனுடைய அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருத்தலாகிற குணத்திலும், [3] "இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே நிகழ்வதோ நீ இன்னேயானால், சிறந்தநின்தன்மை அது இது உது என்று அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்" என்கிறபடியே எல்லாப் பொருள்களையும் தனக்குச் சரீரமாகக் கொண்டு தான் சரீரியாய் இருக்கும் சொரூபத்திலும் செய்த ஐயமும், அச்சமும் - [4] "நன்றும் அஞ்சுவன் நரகம் நான் அடைதல்" என்கிறபடியே இவ்வுலக வாழ்வை நினைத்தலால் வந்த அச்சமும், தீர - நீங்கும்படியாக,

தலைச்சிறப்பத் தந்த அதில் கிருதஜ்ஞதா பல பிரதியுபகாரமாக - [5] "மலரடிப்போதுகள் என்னெஞ்சத்து எப்பொழுதும் இருத்தி வணங்க, பலர் அடியார் முன்பு அருளிய" என்கிறபடியே பராசரர் முதலான முனிவர்களும் முதலாழ்வார்களும் உளராயிருக்கத் தம்மைக் கொண்டு சொல்தொண்டினைக் கொண்ட முன்செய்த உபகாரத்தை

---

1. திருவாய். 8. 1: 2.
2. திருவாய். 8. 1: 4.
3. திருவாய். 8. 1: 7.
4. திருவாய். 8. 1: 9.

ஆக. எம்பெருமான் அடியார்கட்குப் பரதந்திரன் என்று சொல்லிப் போருவது ஒன்று உண்டு; அடியார்கட்குப் பரதந்திரனாக இருக்கிற அந்தத் தன்மையில் தமக்கு ஐயம் உண்டானதாக "உமர் உகந்து" என்ற திருப்பாசுரத்திலும், எல்லாப் பொருள்களையும் இறைவன் தனக்குச் சரீரமாக வுடையவன் என்று சொல்லிப் போருவதொன்று உண்டு; அங்ஙனம் சரீரமாகக் கொண்டிருக்கும் அத்தன்மையிலும் தமக்கு ஐயம் உண்டானதாக "இறந்ததும் நீயே" என்ற திருப்பாசுரத்திலும், தாம் அடைந்த அச்சத்தை "நன்று நான்" என்ற திருப்பாசுரத்திலும் அருளிச்செய்திருத்தல் காண்க.

5. திருவாய். 7. 10: 5.

நினைப்பிக்க, [1] "தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத் தந்த பேருதவி" என்று அதனை நினைத்து, அப்படி மிகச் சிறக்கும்படி உபகரித்த அதில் தமக்கு உண்டான செய்ந்நன்றியறிதலுக்குப் பலன், தகுதியான கைம்மாறு செலுத்துகை ஆகையாலே அதற்குப் பிரதியுபகாரமாக,

வேந்தர் தலைவன் கன்யகாதானம்போலே ஆரத்தழுவி அற விலைசெய்த ஆத்மலாபத்தாலே - வேந்தர் தலைவன் கன்யகாதானம் போலே - [2] "வேந்தர் தலைவன் சனகராசன்" என்கிறபடியே அரசர்களில் தலைவனாய் ஞானிகளில் சிறந்தவனான சனகராசன், சிவபிரானுடைய வில்லை முறித்த பெருமாளுடைய ஆண்பிள்ளைத் தனத்தைக் கண்ட பெருமகிழ்ச்சியாலே கலங்கி, [3] "விஷ்ணுவைவிட்டு ஒரு போதும் பிரியாதவள்" என்கிறபடியே, அவனைவிட்டுப் பிரிந்து நில்லாதவளாய், [4] "இறைவன் இராமபிரானாக அவதரித்தபோது பிராட்டி சீதையாக அவதரித்தாள்" என்கிறபடியே, அந்த அவதாரத்திற்குத் தகுதியாக அவதரித்த பிராட்டியை [5] "என்னுடைய மகளான இந்தச் சீதை உம்முடன்கூட இருந்து தர்மாநுஷ்டானங்களைச் செய்யத் தகுந்தவள்; இவளை அங்கீகரித்துக் கொள்ளும்; உமக்கு மங்களம் உண்டாகக்கடவது; உம்முடைய கையினால் இவளுடைய கையினைப் பிடித்துக்கொள்ளும்" என்கிறபடியே, "என்னுடைய மகள் இவள்" என்று சொல்லிக் கன்யாதானம் செய்தாற் போலே, ஆரத்தழுவி அறவிலை செய்த ஆத்மலாபத்தாலே - [6] "உதவிக் கைம்மாறு என் உயிர் என்ன உற்று எண்ணில், அதுவும் மற்று ஆங்கவன் தன்னது" என்று, மேலே பிரதியுபகாரமாக ஆன்மாவினைக் கொடுக்கத் தேடி, 'அதுவும் எம்பெருமான் உடைமை அன்றோ' என்ற எண்ணத்தாலே கொடாமலிருந்தமையையும் அறியாதபடி, செய்ந்நன்றியறிதலால் வந்த பெருமகிழ்ச்சியாலே கலங்கி, [7] "பேருதவிக் கைம்மாறு, தோள்களை ஆரத்தழுவி என் உயிரை

---

1. *திருவாய்.* 8. 1: 10.
2. *பெரியாழ்வார் திரு.* 4. 1: 2.
3. *" விஷ்ணோச் ச்ரீரநபாயிநீ "*
என்பது ஸ்ரீ விஷ்ணு பு. 1. 8: 17.
4. *" ராகவத்வேபவத் ஸீதா "*
என்பது, ஸ்ரீ விஷ்ணு பு. 1. 9: 144.
5. *இயம் ஸீதாமமஸுதா ஸஹதர்மசரீ தவ*
ப்ரதீச்ச சைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா.
என்பது, ஸ்ரீராமா. பால. 73: 26.
6. *திருவாய்.* 7. 9: 10.
7. *திருவாய்.* 8. 1: 10.

அறவிலை செய்தனன்" என்கிறபடியே ஆன்மாவானது உருவம் இல்லாததாக இருக்கச்செய்தே, செய்ந்நன்றியறிதலால் வந்த பெரு மகிழ்ச்சியாலே தம்முடைய ஆன்மாவானது தாளும் தோளுமாகப் பணைத்துத்தோன்ற பாவனையின் மிகுதியாலே அதனை அணைத்துக் கொண்டு மிக்க ஆதரத்தோடே அவனுக்கே உரியதாகக் கொடுத்த ஆன்மாவினை அவன் பெறுகையாலே,

அதீவ விளங்கிப் பணைத்து - [1] "இராமன் மிகவும் விளங்கினான்" என்றும், [2] "அந்தச் சீதாபிராட்டி எவருக்கு மனைவியாக இருக்கி றாளோ அவருடைய பராக்கிரமம் அளவிடமுடியாதது" என்றும் சொல்லுகிறபடியே, சனகமகாராசனால் கொடுக்கப்பெற்ற சீதா பிராட்டியைப் பெற்றுப் பெருமாள் மிக விளங்கினாற்போன்று, [3] "சோதி" என்று இவர் பேசும்படி, இவர் தம்மது அல்லாதது ஒன்றைத் தம்மதாக மயங்கிக் கொடுத்தாற்போன்று அவ்வெம் பெருமானும் தன்னது அல்லாதது ஒன்றைப் பெற்றாற்போலே மயங்கிப் பேரொளியையுடையனாய்த் [4] "தோள்கள் ஆயிரத்தாய்! முடிகள் ஆயிரத்தாய்! துணைமலர்க்கண்கள் ஆயிரத்தாய்! தாள்கள் ஆயிரத்தாய்! பேர்கள் ஆயிரத்தாய்!" என்னும்படி நூறு கிளைகளாகப் பணைத்து,

ஜன்மபாசம்விட்டு, ஆத்வாரம் ஆளும் ஆளார் என்று பரிந்து, அநுருபனோடே அமர்ந்து, பிரிவில் கிருபண தசையாகத் துவரும் சீதா குணங்களாலே பிரீதி வர்த்தித்து, தித்திக்க உள்ளே உறைந்து, கண்டுகொண்டிருந்து அமாநுஷபோகமாக்கினவன் - ஜன்ம பாசம் விட்டு - ஸ்ரீ ஜனகராசன்திருமகள் பெருமானைக் கைப்பிடித்த பின்பு அவர்அளவில் அன்பினாலே, பிறப்பிடமான ஸ்ரீமிதிலையை நினையாததுபோன்று, இவரும், [5] "பாதம் அடைவதன் பாசத்தாலே மற்ற வன்பாசங்கள முற்றவிட்டு" என்கிறபடியே திருவடிகளைக் கிட்டுகையில் உண்டான பக்தியினாலே புறம்பு உண்டான வலிய பாசங்களை அடியோடு விட்டு,

---

1. "அதீவ ராம: சுசுபே" என்பது, ஸ்ரீராமா.

2. அப்ரமேயம் ஹிதத்தேஜோ யஸ்யஸா ஜநகாத்மஜா. என்பது, ஸ்ரீராமா. ஆரண். 37: 18.

3. திருவாய். 8. 1: 10. 4. திருவாய். 8. 1: 10

5. திருவாய். 8. 2: 11.

ஆத்வாரம் ஆளும்ஆளார் என்று பரிந்து - [1]"கருத்த திருக் கண்களையுடையவளான பிராட்டி மங்களங்களைச் சொல்லிக் கொண்டு வாசற்படி அளவும் பெருமாளைப் பின் தொடர்ந்து சென்ருள்" என்கிறபடியே அவள் பெருமாளுடைய வடிவழகினைக் கண்டு மங்களாசாசனம் செய்தாற்போலே, இவரும், [2]"ஆளும் ஆளார் ஆழியும் சங்கும் சுமப்பார் தாம்" என்கிறபடியே தம்மிடத்தில் பரிகைக்கு ஓராளும் ஆளுகிறிலர், மலை சுமந்தாற்போலே திருவாழியினையும் ஸ்ரீ பாஞ்சஜன்யத்தையும் தரிப்பார் தாமாய் இராநின்றது என்று அவன் சௌகுமார்யத்தைக் கண்டு பரிந்து,

அநுரூபனோடே அமர்ந்து - பிராட்டி பெருமாளுடைய வீரம் முதலியவற்றை நினைந்து அச்சம் கெட்டு, [3]"தகுந்த சீலத்தையும் வயதினையும் நடத்தையினையும் ஒத்த குலத்தினையும் அரச இலக்கணங்களையும் உடையவளான பிராட்டிக்குப் பெருமாள் தகுந்தவர்; பெருமாளுக்குக் கருத்த கண்களையுடையவளான இந்தப் பிராட்டியும் தகுந்தவள்" என்கிறபடியே பிராட்டி தனக்கு ஒத்தவரான பெருமாளோடே கூடி அநுபவித்தாற்போலே, இவரும், [4]"வார்கடா அருவி யானை" என்று தொடங்கி அவனுடைய வீரம் முதலியவற்றை நினைந்து அச்சம் நீங்கினவராய் "அமர்ந்த மாயோனை முக்கண் அம்மானை நான்முகனை அமர்ந்தேனே" என்கிறபடியே அவனோடே பொருந்தி அநுபவித்து,

பிரிவில் கிருபணதசையாகத் துவரும் - பிரிவு நிலையில் பிராட்டி, [5]"பனியால் தாக்கப் பெற்ற தாமரைப் பொய்கையைப் போன்று அழகினை இழந்தவளாய், மிக்க துக்கத்தாலே பீடிக்கப்பட்டவளாய், துணையைப் பிரிந்த பெண்சக்கரவாகப் பறவையைப்போன்று வருந்தத் தக்க நிலைமையை அடைந்திருக்கிருள்" என்கிறபடியே அருள் இல்

---

1. "ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ"
என்பது, ஸ்ரீராமா. அயோத். 16: 21. ஆத்வாரம் - வாசலளவும்.

2. திருவாய். 8. 3: 3.

3. துல்ய ஶீல வயோ வ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம்
ராகவோர்ஹதி வைதேஹீம் தஞ்சேய மஸிதேக்ஷணா.
என்பது, ஸ்ரீராமா. சுந். 16: 5.

4. திருவாய். 8. 4: 1.

5. ஹிமஹததலிநீவ நஷ்டஶோபா வ்யஸந பரம்பரயாதிபீட்யமாநா
ஸஹசர ரஹிதேவ சக்ரவாகீ ஜநகஸுதா க்ருபணாம்தசாம்
என்பது, ஸ்ரீராமா. சுந். 16: 30. [ப்ரபந்நா.

லாதவரும் இரங்கவேண்டும்படியான நிலையை அடைந்தாற் போலே, இவரும், [1] "காண வாராய் என்று என்று கண்ணும் வாயும் துவர்ந்து" என்கிறபடியே அவனைக் காண ஆசைப்பட்டுத் திசைகள் தோறும் பார்ப்பது கூப்பிடுவதாகையாலே கண்ணும் வாயும் நீர்ப் பசை அறும்படி ஆகையால்,

சீதா குணங்களால் பிரீதி வர்த்தித்து - ஜனககுல சுந்தரியின் குணங்கள் எல்லாம் இவர் பக்கலிலே காண்கையாலே [2] "தன்னுடைய தந்தையாரால் திருமணம் செய்விக்கப்பட்ட மனைவி என்ற காரணத்தால், சீதாபிராட்டி பெருமாளுடைய விருப்பத்திற்கு உரியவள் ஆனுள்; உத்தம குணங்களாலும் திருமேனியின் அழகு நற்குடிப் பிறப்பு இவைகளாலும் அந்த அன்பானது மேலும் மேலும் வளர்ந்தோங்கியது" என்கிறபடியே குணங்களைக் கண்ட காரணத்தாலே பிராட்டி பக்கல் பெருமாளுக்கு அன்பு வளர்ந்தாற் போன்று, இவ்வாழ்வாரளவில் அன்பு வளர்ந்து,

தித்திக்க உள்ளே உறைந்து - [3] "சீதாபிராட்டியின் நெஞ்சில் எப்போதும் தங்கியிருப்பவன் ஸ்ரீராமன்" என்கிறபடியே, பெருமாள் எப்போதும் பிராட்டி நெஞ்சிற்கு இனிதாம்படி இருந்தாற்போலே, [4] "உருவு கரந்து உள்ளுந்தோறும் தித்திப்பான்" என்றும், [5] "ஒருக்கடுத்து உள்ளே உறையும் பிரான் கண்டீர்" என்றும் சொல்லுகிறபடியே நினைக்குந்தோறும் தனக்குமேல் ஒன்று இல்லாத இனிமையையுடையனுய்க்கொண்டு இவர் திருவுள்ளத்திலே நித்தியவாசம் செய்து, கண்டுகொண்டிருந்து - [6] "இருந்தான் கண்டுகொண்டு" என்கிறபடியே வறியவன் நிதிபெற்றால் பார்த்துக்கொண்டிருக்குமாறு போன்று, இவரைப் பெற்ற பிரீதியாலே வைத்த கண் மாறாமல் பார்த்துக்கொண்டிருந்து,

---

1. திருவாய். 8. 5: 2.

2. ப்ரியாது ஸீதா ராமஸ்யதாரா: பித்ருக்ருதா இதி
குணாத்ரூப குணாச்சாபி ப்ரீதி: பூயோப்யவர்த்தத.
என்பது, ஸ்ரீராமா. பால. 77: 25.

3. மநஸ்வீ தத்கதஸ்தஸ்யா நித்யம் ஹ்ருதிஸமர்ப்பித:
என்பது, ஸ்ரீராமா. பால. 77: 25.

4. திருவாய். 8. 6: 3. 5. திருவாய். 8. 6: 2.

6. திருவாய். 8. 7: 2.

அமானுஷ போகம் ஆக்கினவன் - [1] நான் அயோத்யையில் ஸ்ரீ ராமபிரானுடைய திருமாளிகையில் பன்னிரண்டு ஆண்டுகள் முடிய மனிதர்களுக்கு உரித்தல்லாத தேவ போகத்தை அநுபவித்தவளாய் எல்லா விருப்பமும் நிறையப்பெற்றவளாய் இருந்தேன்'' என்கிறபடியே பிரிந்திருக்கும் காலத்தும் நடந்த செயலைச் சொல்லிக் கொண்டு தரிக்கலாம்படி பிராட்டியை மனிதபோகம் அன்றிக்கே திவ்வியமாக இருந்துள்ள தேவ போகங்களை அநுபவிப்பித்தாற் போலே, இவரையும், [2] "தரும் தான் அருள்தான் இனி யான் அறியேனே'' என்றும், [3] "செவ்வாய் முறுவலோடு எனதுள்ளத்திருந்த, அவ்வாய் அன்றி யான் அறியேன் மற்றருளே'' என்றும் ஈடுபட்டுப் பேசும்படி தேவபோகங்களை அநுபவிப்பித்தவன்,

[4] மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினைநோய் மறுவலிடாமல் சிறியேன் என்றதின் பெருமையைக் காட்ட - மூன்று தத்துக்குப் பிழைத்த-''வளவேழ் உலகின்'' என்ற திருவாய்மொழியிலே "களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா! என்பன் அருவினையேன்'', "வணங்கினால் உன்பெருமை மாசூணாதோ'', "அடியேன் காண்பான் அலற்றுவன் இதனின் மிக்கோர் அயர்வுண்டே'' என்றும் "பொரு மா நீள்படை'' என்ற திருவாய்மொழியிலே "சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்'' என்றும், "அந்தாமத்தன்பு'' என்ற திருவாய்மொழியிலே "அல்லாவி உள்கலந்த'', "என்முடிவு காணாதே என்னுள் கலந்தானை'' என்றும் இப்படி மூன்று இடங்களிலே வந்த மூன்று கண்டங்களையும் எம்பெருமான் நீக்க நீங்கிய இவர்க்கு,

---

1. *ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே*
புஞ்ஜாநா அமாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ.

என்பது, *ஸ்ரீராமா. சுந்.* 33: 17.

2. *திருவாய்.* 8. 7: 2.   3. *திருவாய்.* 8. 7: 7.

4. *'மூன்று தத்து' என்றது மூன்று கண்டங்களை என்றபடி. அவை யாவை? எனின், "வளவேழ் உலகின்'' என்ற திருப்பதிகத்திலும், "பொருமா நீள்படை'' என்ற திருப்பதிகத்திலும், "அந்தாமத்தன்பு'' என்ற திருப்பதிகத்திலும் ஆழ்வார் தம்மைத் தாழ்வாக நினைத்து அருளிச் செய்திருப்பவை. இம் மூன்று கண்டங்களேயும் அவ்வப்போது இறைவன் நீக்கி யிருக்கிறான். "வளவேழ்'' என்பது,* 1. 5: 1. *"பொருமா நீள்படை'' என்பது,* 1. 10: 1. *"அந்தாமத்தன்பு'' என்பது,* 2. 5: 1.

அருவினைநோய் மறுவலிடாமல் - [1] "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியிலே "மருள்தான் ஈதோ" என்றும், "பின்னை யார்க்கு அவன் தன்னைக் கொடுக்கும்" என்றும், "அருள்தான் இனி யான் அறியேன் அவன் என்னுள், இருள்தான் அற வீற்றிருந் தான்" என்றும் சொல்லுகிறபடியே உகப்புச் செல்லாநிற்கச் செய்தே "சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகும் தன், நெறியா வயிற்றிற்கொண்டு நின்றொழிந்தார்" என்று இவர்தாம் தம் சிறு மையை நினைந்தவாறே, எம்பெருமான் இவர் தம் சிறுமையை நினைந்து மீண்டும் அகலில் செய்வது என்? என்று அஞ்சி, 'இனி இவர் தாம் அகலுகிறது வந்தேறியான சரீரசம்பந்தத்தையிட்டு இது நமக்குத் தகாதது என்றே அன்றோ ஆதலால், இவ்வான்மாவினு டைய உண்மைத் தன்மையைக் கண்டால் அகலமாட்டார்' என்று பார்த்து 'அச் சிறியேன்' என்ற நோய் மறுவலிடாதபடி,

சிறியேன் என்றதின் பெருமையைக் காட்ட - 'நமக்குக் கௌஸ் துபம் போலவும் ஸ்ரீதனம்போலவும் ஒளியைத் தருவதாய் இனியது மாய் இருக்கும் பிரிக்கமுடியாத விசேஷணமாய்க் காணும் உம் முடைய ஆன்மாவின் தன்மை இருப்பது' என்று, சிறிதாக இவர் நினைந்த ஆன்மாவின் சிறப்பினை [2] "யானும் தானாய் ஒழிந்தான்" என்றும், "தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்து" என்றும் சொல்லுகிறபடியே தன்னைவிட்டுப் பிரிக்கமுடியாத விசே ஷணமாகவும் தனக்கு எல்லை இல்லாத இனிமையையுடைய பொரு ளாகவும் நினைக்கும்படி காட்டிக்கொடுக்க,

[3] தேஹாதிகளில் பரமாய், நின்று நினைக்கில் லக்ஷ்மீதுல்யமாய், அவர்க்கே குடிகளாம் பரதந்த்ர ஸ்வரூபத்தை அநுசந்தித்தவர் - தேஹாதிகளில் பரமாய் - "சென்று சென்று பரம்பரமாய்" என்கிற படியே சரீரம் என்ன, இந்திரியங்கள் என்ன, இவை முதலானவற் றிற்கு வேறுபட்டதாய், ஞான ஆனந்தமயமாய், நின்று நினைக்கில்

---

1. திருவாய். 8. 7: 1. 2. திருவாய். 8. 8: 4.

3. அங்ஙனம் இறைவனால் காட்டப்பட்ட ஆன்மாவின் தன்மையை இவர் நினைந்த முறையை அருளிச்செய்கிறார் 'தேஹாதிகளில்' என்று தொடங்கி. 'தேஹாதிகளில்' என்றது முதல் 'லக்ஷ்மீதுல்யமாய்' என்றது முடிய 'கருமாணிக்கமலைமேல்' என்ற திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகின்றது. பரம் - வேறுபட்டது. துல்யம் - ஒப்பு. அதற்குமேல் 'பரதந்திர சொரூபத்தை' என்றது முடிய "நெடுமாற் கடிமை" என்ற திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகிறது.

லக்ஷ்மீதுல்யமாய் - "நினையும் நீர்மையது அன்று இவட்கு இது நின்று நினைக்கப்புக்கால்" என்றும், "அருமாயன் பேரன்றிப் பேச்சிலள்" என்றும், "மற்றோர் உபாயம் என் இவள் அம் தண் துழாய் கமழ்தல்" என்றும் சொல்லுகிறபடியே உண்மையை நிரூபித்துப் பார்க்கில் பிராட்டியைப்போன்று அவனுக்கே உரியதாய், அவர்க்கே குடிகள் ஆம் பரதந்த்ர ஸ்வரூபத்தை அநுசந்தித்தவர் - அத்துணையுமன்றிக்கே, "மாகாயாம்பூக்கொள்மேனி நான்குதோள் பொன்னாழிக்கை என்னம்மான் நீக்கமில்லா அடியார் தம்மடியார் அடியார் அடியார் எம்கோக்கள் அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்லகோட்பாடே - ஊழிதோறு ஊழி வாய்க்க தமியேற்கு" என்று சொல்லுகிறபடியே தெய்வத்தன்மை வாய்ந்த திருமேனியையுடைய சர்வேச்வரனைப் பிரிவதற்கு இயலாதவரான பாகவதர்களுடைய அடிமையின் எல்லையிலே நிற்கிறவர்கள் எனக்குத் தலைவர்கள்; [1] இருகரையர் அன்றிக்கே என் குடியிலுள்ளாரோடு நான் அவர்களுக்கே உரிய அடியவனாகச் செல்லும் நல்ல கோட்பாடு காலமுள்ளவரையும் எனக்குக் கிடைக்கவேண்டும் என்று, இப்படி அவன் அடியார்கட்கு அடிமை என்னும் எல்லையளவும் செல்ல நிற்கும்படி பரதந்திரப்பட்டிருக்கின்ற சொரூபத்தை நினைத்துப் பேசியவர்,

ஸ்வ ஸாதந ஸாத்யஸ்தர் இருகரையர் ஆகாமல், மண்ணவரும் வானவரும் நண்ணுமத்தையே குறிக்கொண்மின் உள்ளத்து என்று பிராப்யைகபரர் ஆக்குகிறார் எட்டாம்பத்தில் :

ஸ்வ சாதன சாத்யஸ்தர் - ஆழ்வார்க்கு உபாய உபேயங்கள் எவையோ அவையே தங்களுக்கும் என்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள், இருகரையர் ஆகாமல் - பகவானை உபாயமாகவும் அவன் சம்பந்தமுடைய பொருளை உபேயமாகவும் கொண்டு இப்படி [2] இருகரையராய் அலையாதபடி, மண்ணவரும் வானவரும் நண்ணுமத்தையே குறிக்கொண்மின் உள்ளத்து என்று - [3] "திருக்கடித்தானத்தை ஏத்த நில்லா; குறிக்கொண்மின்; இடரே," என்றும், [4] "கோவிந்தன், மண்

---

1. *இறைவனைப்பற்றியும், அவன் அடியார்களைப்பற்றியும் இருப்பவர்கள் 'இருகரையர்' எனப்படுவர். "வடுகநம்பி, ஆழ்வானையும் ஆண்டானையும் இருகரையர் என்பர்" என்பது, ஸ்ரீவசனபூஷணம், சூத்.* 411.

2. *'இருகரையராய் அலையாதபடி' என்றது, உபாயம் வேறு, உபேயம் வேறு என்று இருகரையராகாதபடி. இறைவன் உபாயம், அவனுடைய திவ்வியதேசம் உபேயம் என்று உபாய உபேயங்களை வெவ்வேறாகக் கொள்ளாமல் என்றபடி.*

3. *திருவாய்.* 8. 6: 6. 4. *திருவாய்.* 8. 6: 7.

விண் முழுதும் அளந்த ஒண்தாமரை, மண்ணவர்தாம்தொழ வானவர்தாம் வந்து, நண்ணு திருக்கடித்தான நகரே - இடர்கெட உள்ளத்துக்கொண்மின் '' என்றும் சொல்லுகிறபடியே திருக்கடித்தானத்தைத் துதிசெய்த அளவிலே துக்கங்கள் எல்லாம் நிலைகுலைந்துபோம், இதனைக் குறிக்கொள்ளுங்கோள், சர்வேச்வரனுடைய எல்லார்க்கும் எளிதான திருவடிகளை இரண்டு உலகத்திலுள்ளாரும் வந்து அநுபவிக்கும்படியான திருக்கடித்தானநகரை எல்லாத் துக்கங்களும் போம்படி உங்கள் நெஞ்சிலே கொண்டு நினையுங்கோள் என்று, பிராப்யஏகபரர் ஆக்குகிறார் எட்டாம்பத்தில் - மேல்பத்தில் உபேயமாக உபதேசித்த அர்ச்சாவதாரபூமியே துக்கத்தைப் போக்குவதும் என்கையாலே உபேயமான அப்பொருளே உபாயமுமாகும் என்று கூறி, உபேய விஷயம் ஒன்றிலுமே ஈடுபடும்படி ஆக்குகிறார் எட்டாம்பத்தில் என்கை. (8)

227

[1] எண்திசையும் அகல்ஞாலம் எங்கும் அளிக்கின்ற ஆலின்மேல் என்னும்படி நித்யபோக பாதலீல உபகரணத்தின் லயாதிகளைப் போக்கும் ஆபத்சகன், ஆருயிர் என்னப்படுத்தின ஆத்மதர்சந பல அநுபவ பரம்பரையைக் 'கூவுதல் வருதல்' என்று முடுகவிட்டு, ஏகம் எண்ணி, காணக் கருதி, எழ நண்ணி, நினைதொறும் உருகி, அலற்றி, கவையில் மனம் இன்றி, பதினாலாண்டு பத்துமாசம் ஒருபகல் பொறுத்தவர்கள், ஒருமாச தின சந்த்யையில் படுமது, க்ஷணத்திலேயாக இரங்குகிற த்வரைக்கு ஈடாக, இனிப் 'பத்தில் ஒன்று தசம தசையிலே பேறு' என்று,

1. இச் சூத்திரத்தில் 'ஆபத்சகன்' என்பது முடிய ஒரு பகுதி. அதற்குமேல் 'நாளிடப்பெற்றவர்' என்பது முடிய ஒரு பகுதி. அதற்கு மேல் உள்ளனவெல்லாம் ஒரு பகுதி. முதற்பகுதியில் எம்பெருமானுடைய திருக்குணம் பேசப்படுகிறது. இரண்டாம் பகுதியில் இறைவன் ஆழ்வார்க்குச் செய்த உபகாரம் பேசப்படுகிறது. மூன்றும் பகுதியில் மக்களுக்கு ஆழ்வார் செய்த உபதேசம் பேசப்படுகிறது. ஆபத்சகன், முடுகவிட்டு, துவரைக்கு ஈடாக நாள் இட என்றும், எண்ணி, கருதி, நண்ணி, உருகி, அலற்றி, மனமின்றி, இரங்குகிற துவரைக்கு ஈடாக நாள் இடப் பெற்றார் என்றும் கூட்டுக. முன்னையது இறைவன் செயல். பின்னையது ஆழ்வார் செயல். 'பதினாலாண்டு பத்து மாசம் ஒருபகல் பொறுத்தவர்கள், ஒரு மாச தின சந்த்யையில் படுமது' என்பது, ஆழ்வார் படும் துன்பத்தின் மிகுதியை விளக்க வந்தது. 'இனிப் பத்தில் ஒன்று தசம தசையிலே பேறு

நாட்கடலாகத் தம்பிக்கு இட்டதாகாமல் நாளை வதுவை போலே நாள் இடப் பெற்றவர், இம்மட உலகர் கண்டதோடுபட்ட அபாந்தவ அரக்ஷக அபோக்ய அசுக அநுபாய பிரதிசம்பந்தியைக் காட்டி மற்றொன்று கண்ணன் அல்லால் என்கிற வைகல்வாழ் தலான சித்தோபாயம், அதில் துர்ப்பல புத்திகளுக்கு மாலை நண்ணி காலை மாலை விண்டு தேனை வாடா மலர் இட்டு அன்பராம் சாங்கபக்தி, அதில் அசக் தர்க்குத் தாள் அடையும் பிரபத்தி, அதில் அசக் தர்க்கு உச்சாரண மாத்ரம், சர்வோபாய சூந்யர்க்கு இப் பத்தும்பாடி இடும் தெண்டன் என்று, கீதாசார் யனைப் போலே அதிகார அநுகுணம் நெறி எல்லாம் உரைக்கிறார் ஒன்பதாம் பத்தில்.

என்பது, சூத்திரம்.

வியாக் :—இப்படி விரும்பப்படுவன எல்லாம் நிறைவுபெற்ற வன் ஆகையாலே இத்தலையில் ஒன்றையும் விரும்பாமல், பிரளயம் முதலிய ஆபத்துக்களிலே துணைசெய்து காக்கும் ஆபத்திற்குத் துணைவனான சர்வேச்வரன், மேலே பிரகாசிப்பித்த ஆன்ம சொரு பத்தின் உண்மையைக் கண்டதற்குப் பலன், சொருபத்திற்குத் தக்க தான பேற்றினை அநுபவிக்கை ஆகையாலே, அந்த அநுபவத்தில் உண்டான பதற்றத்தாலே நொடிப்பொழுதும் விளம்பம் பொறுக்க மாட்டாமல் ஆழ்வார் துடிக்க, அவ்வளவிலே எம்பெருமான் ‘இந்தச் சரீரத்தின் முடிவிலே பேறு தப்பாது’ என்று நாள் அவதி இட்டுக் கொடுக்க, அதனைப் பெற்ற ஆழ்வார், மேல் தம் உபதேசத்தால் திருந்தினவர்கள் ஒழிய, அல்லாதாரையும் விடமாட்டாத பேரரு ளாலே அவர் அவர்களுடைய தகுதிகளுக்குத் தகுதியாக எல்லா உபாயங்களையும் அருளிச்செய்கிறார் இவ்வொன்பதாம்பத்தில்.

என்று’ என்பது, இடும் நாளினை விளக்க வந்தது. ‘நாட்கடலாகத் தம்பிக்கு இட்டதாகாமல் நாளை வதுவை போலே’ என்ற வாக்கியம் நாளிடுதலை உவமை முகத்தால் விளக்க வந்தது.

அங்ஙனம் நாளிடப்பெற்ற ஆழ்வார், இம்மடவுலகர்க்குப் பிரதிசம்பந் தியைக் காட்டிச் சித்தோபாயத்தை உணர்த்தி, அதில் துர்ப்பலர்க்குச் சாங்கபக்தியை உணர்த்தி, அதில் அசக்தர்க்குப் பிரபத்தியை உணர்த்தி, அதில் அசக்தர்க்கு உச்சாரணமாத்திரத்தை உணர்த்தி, மேற்கூறிய உபாயங்களில் ஒருவித உபாயமும் இல்லாதவர்க்குப் பாடி தண்டன் இடுவது என்று உணர்த்திக் கீதாசாரியனைப் போல் நெறியெல்லாம் உரைக்கின்றார் என முடிக்க.

[1]எண்திசையும் அகல்ஞாலம் எங்கும் அளிக்கின்ற ஆலின் மேல் என்னும்படி நித்யபோக பாத லீலா உபகரணத்தின் லயாதிகளைப் போக்கும் ஆபத்சகன் - எண்திசையும் - [2]"எண்திசையும் கீழும் மேலும் முற்றவும் உண்ட பிரான்" என்றும், அகல்ஞாலம் - [3]"அவனே அகல்ஞாலம் படைத்து இடந்தான், அவனே அஃது உண்டு உமிழ்ந்தான் அளந்தான்" என்றும், எங்கும் அளிக்கின்ற - [4]"அகலிடம் படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து அளந்து எங்கும் அளிக்கின்ற ஆயன்" என்றும், ஆலின்மேல் என்னும்படி - [5]"ஆலின்மேலால் அமர்ந்தான்" என்றும் சொல்லுகிறபடியே எல்லா உலகங்களையும் பிரளயம் கொள்ளாமல் முன்னரே திருவயிற்றிலே வைத்து நோக்கி, அழிந்தவற்றை மீண்டும் உண்டாக்கியும், இரணியாக்கனாலே தள்ளுண்டு அண்டபித்தியிலே சேர்ந்த பூமியை ஒட்டுவிடுவித்து எடுத்தும், மாவலி தன்வலிமையினாலே ஆளுகிற தசையிலே எல்லை நடந்து மீட்டும், இப்படிப் பிரளயம் முதலான ஆபத்துக்களிலே உதவிக்காத்தவன் என்னும்படி மேலே கூறிய சத்யகாமத்வத்தால் வந்த 'ஒன்றையும் விரும்பாமை' தோற்ற இத்தலையில் விருப்பம்அறப் பிரதியுபகாரம் நினையாமல் வரையாதே தன் பேறாக, நோவுபடுமளவிலே உதவி, நித்யபோக பாத லீலா உபகரணத்தின் லயாதிகளைப் போக்கும் ஆபத்சகன் - [6]"இந்தப்பரம புருடனுக்கு எல்லாச் சராசரங்களும் ஒரு பாதம்; (கால்பாகம்) பரம பதத்தில் நித்யமானது மூன்று பாதம்" (முக்கால் பாகம்) என்கிற படியே அம்ருதம் என்ற சொல்லால் சொல்லும்படி அழிவில்லாத இன்பமான பரமபதத்தை நோக்க, இவ்வுலகம் மிகச் சிறிது ஆகையாலே பாதம் என்ற சொல்லால் சொல்லப்பட்ட, விளையாட்டுக்குக் கருவியான இவ் உலகத்தின் அழிவு முதலானவற்றைப் போக்கும் ஆபத்துக்குத் துணைவனான சர்வேச்வரன்,

---

1. இந்த ஒன்பதாம் பத்தில் இறைவனுடைய ஆபத்சகத்வம் என்ற திருக்குணம் பேசப்படுகிறது. ஆபத்சகத்வம் - ஆபத்திற்குத் துணைவனாக இருத்தல். அதற்குரிய திருப்பாசுரப் பகுதிகளை ஒருசேர அருளிச்செய்கிறார் 'எண்திசையும்' என்று தொடங்கி. நித்யபோகம் - பரமபதம். பாத லீலா உபகரணம்-'பரமபதத்தை நோக்கக்' கால்கூறாக இருக்கின்ற, விளையாட்டுக்கு உபகரணமாக இருக்கின்ற இந்த உலகம். லயஆதிகள் - பிரளயம் முதலானவைகள்.

2. திருவாய். 9. 1: 1.
3. திருவாய். 9. 3: 2.
4. திருவாய். 9. 9: 2.
5. திருவாய். 9. 10: 1.

6. "பாதோஸ்ய விச்வாபூதாநி, த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்பது, புருஷ சூக்தம்.

ஆருயிர் என்னப் படுத்தின ஆத்ம தர்சன பலம் அநுபவ பரம்பரையைக் கூவுதல் வருதல் என்று முடுகவிட்டு - ஆருயிர் என்னப்படுத்தின ஆத்மதர்சன பலம் - [1]“இருத்தும் வியந்து” என்ற திருவாய்மொழியிலே தம்மோடு கலந்த கலவியை நினைப் பூட்டினவளவிலே அதிலே ஈடுபட்டவராய்ப் பேசுகிறவளவில், அவன் தட்டுமாறி நின்று கலந்த சீலகுணத்திலே ஆழங்கால் பட்டு [2]“ஆருயிர்பட்டது எனதுயிர்பட்டது” என் உயிரானது பட்ட தன்மையை நித்தியமாக அநுபவித்துக்கொண்டிருக்கிற நித்தியசூரிகளுடைய உயிர்கள்தாம் பட்டனவோ என்னும்படியாக இறைவன் தான் மேல்விழுந்து அநுபவித்த தம்முடைய ஆன்மாவின் தன்மையை மேல்பத்திலே உள்ளதை உள்ளவாறே காட்டக் கண்டதற்குப் பலம், ஆன்மாவிற்குத் தக்கதான பேற்றினை அநுபவித்தல் ஆகையாலே,

[3]அநுபவ பரம்பரையை - “பண்டைநாளாலே” என்கிற திருவாய்மொழியிலே, “தொண்டரோர்க்கு அருளிச் சோதிவாய் திறந்து உன் தாமரைக்கண்களால் நோக்காய்” என்றும், “பாதபங்கயமே தலைக்கு அணியாய்” என்றும், “உன் தாமரை மங்கையும் நீயும் இடம்கொள் மூவுலகும் தொழ இருந்தருளாய்” என்றும், “கனி வாய் சிவப்ப நீ காணவாராய்” என்றும், “நின் பல் நிலாமுத்தம் தவழ்கதிர் முறுவல் செய்து நின் திருக்கண்தாமரை தயங்க நின்றருளாய்” என்றும் சொல்லுகிறபடியே திருப்பவளத்தைத் திறந்து ஒரு வார்த்தை அருளிச்செய்யவேண்டும், திருக்கண்களாலே குளிர நோக்கியருளவேண்டும், திருவடிகளை என் தலைமேலே வைத்தருளவேண்டும், தேவரும் பிராட்டியும் கூட எழுந்தருளியிருக்கிற இருப்பை எனக்குக் காட்டியருளவேண்டும், என்முன்னே நாலடி உலாவியருளவேண்டும், வேண்டுவாரைக் கண்ட காலத்திலே பிறக்கும் புன் முறுவல் காணவேண்டும் என்று இப்படித் தொடர்ந்து வருகின்ற அநுபவங்களை ஆசைப்பட்டு, ‘காலக்கிரமத்திலே இவையெல்லாம் பெறலாகும்’ என்று ஆறியிருக்கப் பெருமையாலே, கூவுதல் வருதல் என்று முடுகவிட்டு - “வடிவிணை இல்லா மலர்மகள் மற்றை நில மகள் பிடிக்கும் மெல்லடியை, கொடுவினையேனும் பிடிக்க நீ ஒரு நாள் கூவுதல் வருதல் செய்யாயே” என்கிறபடியே தனக்கு மேல்

---

1. *திருவாய்.* 8. 7: 1. 2. *திருவாய்.* 9. 6: 9.

3. *இதிலிருந்து ‘முடுகவிட்டு’ என்றது முடிய ஒன்பதாம் பத்தில் ‘பண்டை நாளாலே’ என்ற இரண்டாம் திருப்பதிகத்தின் பொருள் கூறப்படுகிறது.*

ஒன்றில்லாததான இனிமையையுடைய உன் திருவடிகளிலே நானும் வந்து அடிமை செய்யும்படி என்னை அங்கே அழைத்தல் அல்லது நீ இங்கே வருதல் செய்தருளவேண்டும் என்று இரக்கும்படி வளர விட்டு,

ஏகம் எண்ணிக் காணக்கருதி எழநண்ணி நினைதொறும் உருகி அலற்றிக் கவை இல் மனம் இன்றி - [1] ஏகம் எண்ணி - "மாக வைகுந்தம் காண்பதற்கு என் மனம், ஏகம் எண்ணும் இராப்பகல் இன்றியே" என்று அவன் நித்தியவாசம் செய்யும் பரமபதத்தைக் காண்கையிலே எல்லாக் காலங்களிலும் ஒரே தனமையாக எண்ணி, [2] காணக்கருதி - "காணக் கருதும் என் கண்ணே" என்று பெரிய பிராட்டியாரோடும் திவ்விய ஆயுதங்களோடும் திவ்விய விக்கிரஹத்தோடும் கூடியிருக்கிறவனைக் காணவேண்டும் என்று ஆசைப்பட்டு, [3] எழ நண்ணி - "எழ நண்ணி நாமும் நம் வான நாடனோடு ஒன்றினோம்" என்று எம்பெருமானை நினைப்பூட்டும் பொருள்களைக் காண்கையிலே நோவுபடுகையாலே முடிந்துபோகையிலே ஒருப்பட்டு, [4] நினைதொறும் உருகி - "திருக்காட்கரை மருவிய மாயன்தன் மாயம் நினைதொறும் நெஞ்சம் உருகுமால்" என்று அவன் அநுபவ காலங்களில் செய்த சீலம் முதலியவற்றை நினைக்குந்தோறும் அநுபவத்திற்குக் கருவியான நெஞ்சு சிதிலமாய்க் கரைந்து, [5] அலற்றி - "தமரோடு அங்குறைவார்க்குத் தக்கிலமே கேளீரே" என்று தூது அநுப்பும் முகத்தால் "கிளிமொழியாள் அலற்றிய சொல்" என்று ஆற்றாமையாலே முறைகேடாகக் கூப்பிட்டு, [6] கவையில் மனம் இன்றி - "கவையில் மனம் இன்றிக் கண்ணீர்கள் கலுழ்வன்" என்று இருதலைத்த நெஞ்சு இன்றிக்கே ஒன்றிலேயே நோக்கமான மனத்தினையுடையராய்,

---

1. இது, 'ஓராயிரமாய்' என்ற மூன்றாம் திருப்பதிகத்தின் பொருள்.

2. இது, 'மையார் கருங்கண்ணி' என்ற நான்காம் திருப்பதிகத்தின் பொருள்.

3. இது, 'இன்னுயிர்ச் சேவலும்' என்ற ஐந்தாம் திருப்பதிகத்தின் பொருள்.

4. இது, 'உருகுமால் நெஞ்சம்' என்ற ஆறாம் திருப்பதிகத்தின் பொருள்.

5. இது, 'எங்கானலகங்கழிவாய்' என்ற ஏழாம் திருப்பதிகத்தின் பொருள்.

6. இது, 'அறுக்கும் வினையாயின' என்ற எட்டாம் திருப்பதிகத்தின் பொருள்.

[1] பதினாலாண்டு பத்துமாசம் ஒருபகல் பொறுத்தவர்கள் ஒரு மாச தின சந்த்யையில் படுமது க்ஷணத்திலேயாக இரங்குகிற துவரைக்கு ஈடாக - பதினாலாண்டு பொறுத்தவர் ஒரு தினத்தில் படுமது - பெருமாளைப் பிரிந்து பதினான்கு ஆண்டுகள் பொறுத்திருந்த ஸ்ரீபரதாழ்வான் [2] "பதினான்கு ஆண்டுகள் நிறைந்தபோது" என்ற எல்லை கழிந்த பின்னர் ஒருநாளில் பட்டவருத்தமும், பத்துமாசம் பொறுத்தவர் ஒருமாசத்தில் படுமது - பத்து மாதங்கள் பொறுத்திருந்த பிராட்டி [3] "ஒரு மாதத்திற்கு மேல் நான் பிழைத்திருக்க மாட்டேன்" என்று திருவடியிடம் சொல்லிவிட்ட பின்னர் அவ்வொரு மாதத்தில் பட்ட வருத்தமும், ஒரு பகல் பொறுத்தவர்கள் ஒரு சந்த்யையில் படுமது - கிருஷ்ணன் பசுமேய்க்கப்போக ஒரு பகல் எல்லாம் பொறுத்திருந்த ஸ்ரீ கோபிமார்கள் அவன் பசுக்களின் பிற்குழையிலே வாராநிற்க, முற்கொழுந்தில் காணாமையாலே ஒரு மாலை நேரத்தில் பட்ட வருத்தமும் எல்லாம், க்ஷணத்திலேயாக இரங்குகிற துவரைக்கு ஈடாக - ஒரு நொடிப்பொழுதிலே ஆம்படி "அவனை விட்டு அகல்வதற்கே இரங்கி" என்று ஈடுபடுகிற பதற்றத்துக்குத் தகுதியாக,

[4] இனிப் பத்தில் ஒன்று தசம தசையிலே பேறு என்று நாட்கடலாகத் தம்பிக்கு இட்டது ஆகாமல் நாளை வதுவை போலே நாள்

---

1. *'பதினாலாண்டு' என்றது முதல் 'த்வரைக்குஈடாக' என்றது முடிய 'மல்லிகை கமழ்தென்றல்' என்ற ஒன்பதாம் திருப்பதிகத்தின் பொருள். இந்த வாக்கியத்தை, பதினாலாண்டு பொறுத்தவர் ஒரு தினத்திலே படுமது, பத்துமாசம் பொறுத்தவர் ஒரு மாசம் படுமது, ஒரு பகல் பொறுத்தவர்கள் ஒரு சந்த்யையில் படுமது என்று பிரித்துக்கூட்டுக. பதினாலாண்டு பொறுத்தவர் - ஸ்ரீபரதாழ்வான். பத்துமாசம் பொறுத்தவர் - சீதாபிராட்டியார். ஒரு பகல் பொறுத்தவர்கள் - கோபிமார்கள். க்ஷணத்திலேயாக இரங்கினவர் - ஆழ்வார் நாயகி.*

2. *"பூர்ணே சதுர்தஸே வர்ஷே பஞ்சம்யாம் லக்ஷ்மணாக்ரஜ:"* *என்பது, ஸ்ரீராமா. யுத்* 127: 1.

3. *"மாஸாத் ஊர்த்வம் ந ஜீவிஷ்யே"* *என்பது, ஸ்ரீராமா. சுந்.* 40: 10.

இன்ன மீண்டொரு திங்கள் இருப்பல்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்!
பின்னை ஆவி பிடிக்கின் றிலேனந்த
மன்ன னாணை இதனை மனக்கொள் நீ.

என்பது, கம்பராமாயணம்.

4. *'இனி' என்றது முதல் 'நாளிடப் பெற்றவர்' என்றது முடிய 'சரணமாகும்' என்ற பத்தாம் பதிகத்தின் கருத்து கூறப்படுகிறது.*

இடப்பெற்றவர் - இனிப் பத்தில் ஒன்று தசம தசையிலே பேறு என்று - [1] "முதலில் பார்த்தலால் உண்டாகும் பிரீதி, பின் அதிக நினைவு, அதே நினைவு, உறக்கம் இன்மை, இளைத்தல், மற்றைப் பொருள்களில் வெறுப்பு, நாணமின்மை, பித்துப்பிடித்ததுபோல்இருத்தல், மூர்ச்சை, சாக்காடு என்னுமிவை மன்மதனுடைய பத்து நிலைகள்" என்றும், [2] "முதலில் ஆசை உண்டாகும், இரண்டாவது சிந்தை உண்டாகும், மூன்றுவது அதே நினைவு உண்டாகும், நான்காவது அவள் குணங்களைச் சொல்லுவது, ஐந்தாவது முயற்சி என்று கூறப் படும், ஆறுவது பிதற்றுதல் என்று சொல்லப்படும், ஏழாவது பைத்தியம் என்று அறியப்படும, எட்டாவது நோய் என்று சொல்லப்படும், ஒன்பதாவது செயல்அற்றிருக்கை, அவ்வாறே பத்தாவது சாக்காடு" என்றும் சொல்லுகிறபடியே காமுகர்கட்குப் பத்தாவது தசையிலே மரணமாமாறுபோலே, நம்பக்கல் பரபக்தியையுடைய உமக்கும் நம்மைப் பெருவிடில் முடியும்படியான பரமபக்தி தசை பத்தாம் பத்திலே பிறக்கத் தேடுகிறது, ஆகையால் மேலே கூறிய விளம்பம் இல்லை, இனி உள்ளது பத்து அவஸ்தைகளில் ஒன்றுன இறுதி அவஸ்தையாக உள்ள மரணவஸ்தையிலே பேறு என்று, நாள்

---

1. *நயநப்ரீதி: ப்ரதமம் சித்தாபோக: ததோநுஸங்கல்ப:*
நித்ராச்சேதஸ் தநுதாவிஷய விரக்தி: த்ரபாநாச:
உன்மாதோமூர்ச்சா ம்ருதி ரித்யேதா: ஸ்மரதசா தசைவ ஸ்யு:
என்பது, பிரமாணம்.

2. *ப்ரதமஸ்த்வபிலாஷ: ஸ்யாத் த்விதீயம் சிந்தநம்பவேத்*
அநுஸ்ம்ருதி: த்ருதீயந்து சதுர்த்தம் குணகீர்த்தநம்
உத்யோக: பஞ்சம: ப்ரோக்த: ப்ரலாப: ஷஷ்டஉச்யதே
உந்மாதஸ் ஸப்தமோ ஜ்ஞேய: அஷ்டமோ வ்யாதிருச்யதே
நவமேஜடதாசைவ தசமம் மரணம் ததா.
என்பது, பிரமாணம்.

காட்சி முதலாச் சாக்காடு ஈறுக்
காட்டிய பத்தும் கைவரு மெனினே
மெய்யுறு புணர்ச்சி எய்துதற் குரித்தே.
என்பது, நம்பியகப்பொருள்.

வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல்,
ஆக்கம் செப்பல், நாணுவரை யிறத்தல்,
நோக்குவ வெல்லா மவையே போறல்,
மறத்தல், மயக்கம், சாக்காடு என்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப.
என்பது, தொல்காப்பியம்.

கடலாகத் தம்பிக்கு இட்டது போல் ஆகாமல் - [1] "நாள் கடலைக் கழிமினே" என்கிறபடியே பிரிவுத் துன்பத்தாலே ஒருநாள் ஒரு கடல் போலே தாண்டமுடியாதபடி [2] "பதினான்கு ஆண்டுகள் நிறைவில்" என்று தம்பியான ஸ்ரீ பரதாழ்வானுக்கு நாள் இட்டுக் கொடுத்தாற் போலே ஆகாமல், நாளை வதுவை போலே நாள்இடப்பெற்றவர் - [3] "நாளை வதுவை மணம் என்று நாள் இட்டு" என்று, இன்று என்னில் வெள்ளக்கேடாம், சிலநாள்கள் கழித்து என்னில் வறட் கேடாம் என்று நினைத்து நாளை என்று நாய்ச்சியார்க்கு நாள் இட்டாற் போலே, [4] "மரணமானால்" என்று இந்தச் சரீரத்தின் முடிவிலே பேறாக அவன் தானே நாள் இட்டுக் கொடுக்கப்பெற்று மகிழ்ச்சி கொண்ட ஆழ்வார்,

[5] இம் மடஉலகர் கண்டதோடு பட்ட அபாந்தவ அரக்ஷக அபோக்ய அசுக அநுபாய பிரதிசம்பந்தியைக் காட்டி - சரமோபாயம் சரமோபேயம் வரையிலும் தாம் அருளிச்செய்த நல்லுரைகளைக் கேட்டுத் திருந்தினவர்களை ஒழிய, அல்லாதாரையும் விடமாட்டாத தம்முடைய பரம கிருபையாலே [6] "இம் மடஉலகர்" என்று இவ்வுலக வாழ்விலே அறிவு கேடரானவர்களுக்கு, கண்டதோடு பட்ட அபாந்தவ பிரதிசம்பந்தியைக் காட்டி - "கொண்டபெண்டிர்" என்று தொடங்கி, கண்டபோது அன்புடையவர்களைப் போன்று நடிப்ப தொழியக் காணாதபோது அன்பு என்பது சிறிதுமின்றியே இருக்கிற மனைவி மக்கள் முதலாயினார் உறவினர்கள் அன்று; பிரளய ஆபத்திலே துணையாக இருந்தவனே மேலான உறவினன் என்றும்,

---

1. *திருவாய்.* 1. 6: 7.

2. *"பூர்ணே சதுர்த்தஸே வர்ஷே"* *என்பது, ஸ்ரீராமா. யுத்.* 127: 1.

3. *நாய்ச்சியார் திரு.* 6: 2.

4. *திருவாய்.* 9. 10: 5.

5. *'இம்மடவுலகர்' என்றது முதல் 'சித்தோபாயம்' என்றது முடிய, பரோபதேசமாக அருளிச்செய்கின்ற "கொண்டபெண்டிர்" என்னும் திருப்பதிகத்தின் பொருள் கூறப்படுகின்றது. அபாந்தவம் - உறவினராகாமை. அரக்ஷகம் - இரக்ஷகராகாமை. அபோக்யம் - இனியராகாமை. அசுகம் - சுகமில்லாமை. அநுபாயம் - உபாயமாகாமை. பிரதிகோடி - மறுதலை; எதிர்த்தட்டு. சரமோபாயம் - உபாயங்களில் முடிவான உபாயம்; அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தல். சரமோபேயம் - பேறுகளில் முடிவான பேறு; அர்ச்சாவதாரம்.*

6. *திருவாய்.* 9. 2: 7.

அரக்ஷக பிரதிசம்பந்தியைக் காட்டி - "துணையும் சார்வும்", "பொருள் கைஉண்டாய்", "அரணமாவர்" என்னும் திருப்பாசுரங்களாலே அவனை ஒழிந்தார் உதவி செய்வாரைப் போன்று பயன் உள்ளபோது பந்துக்களாகக் கொண்டாடி, ஆபத்து வந்தவாறே கண்ணற்று வெறுப்பார்கள்; ஆகையால், அவர்கள் காப்பவர் அல்லர்; தன்னுடைய காப்பிலே ஐயம் கொண்டாரையும் ஐயத்தை நீக்கி நம்பச்செய்து காக்குமவனாய் அவதார முகத்தாலே எளியனாய்க் காத்தலுக்குத் தகுதியான குணங்களையுமுடையவனானவனை ஒழியக் காப்பவர் வேறு ஒருவரும் இலர் என்றும், அபோக்கிய பிரதிசம்பந்தியைக் காட்டி - "சதிரம் என்று தம்மைத்தாமே சம்மதித்து" என்று தொடங்கி, தங்களுக்கு இன்பத்தைத் தருமவர்களாகக்கொள்ளப்பட்ட பெண்கள் ஆபத்து வந்தவாறே வெறுப்பார்கள்; ஒரே தன்மையாக அன்புள்ளவன் அவனே; ஆனபின்பு, அவர்கள் இனியர் அல்லர்; அவனே அளவற்ற இனியன் என்றும், அசுக பிரதிசம்பந்தியைக் காட்டி - "இல்லை கண்டீர் இன்பமந்தோ" என்று தொடங்கி, துக்கங்களிலே சிலவற்றை இன்பம் என்று மயங்குவதித்தனை போக்கி, அவனை ஒழிய இன்பரூபமாக இருப்பது ஒன்று இல்லை என்றும், அநுபாய பிரதிசம்பந்தியைக் காட்டி - "யாதும் இல்லை மிக்கதனில்" என்று தொடங்கி, அவனை ஒழியக் காக்கும் பொருளாக வேறொருவனைப் பற்றினவர்கள் பண்டை நிலையும் கெட்டுப் பயன் அற்றுப் போவர்கள்; ஆனபின்பு, அவனை ஒழிய உபாயம் இல்லை என்றும், இப்படி அவனை ஒழிந்தாரனைவரும் பந்துவாகாமையையும் காப்பவர் ஆகாமையையும் இனியராகாமையையும் சுகத்தைத் தருமவராகாமையையும் உபாயமாகாமையையும், அதற்கு எதிர்த்தலையான அவன் பந்துவாதலையும் காப்பவனாதலையும் இனியனாதலையும் சுகத்தைத் தருமவனாதலையும் உபாயமாதலையும் அவர்களுக்குக் காட்டி,

மற்றொன்று கண்ணன் அல்லால் என்கிற வைகல் வாழ்தலான சித்தோபாயம் - மற்றொன்று - "மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத்து எவ்வுயிர்க்கும், சிற்றவேண்டா சிந்திப்பே அமையும் கண்டீர்கள்" என்று, இதற்குமேல் சொல்லலாவது ஒன்றில்லை; இதனைச் சுருங்கச் சொன்னோம்; இப்பெரிய பூவுலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் இதனைப் பெறுதற்குப் பரக்க முயற்சி செய்ய வேண்டா; சிந்திப்பே அமையும் கேளீர்கோள் என்கையாலே, தனக்கு மேல் ஒன்று இல்லாமல் இருப்பதாய், சுருங்க உபதேசிக்கத்தக்கதாய், எல்லாரும் செய்தற்குரியதாய், பற்றுதற்கு எளியதுமாயிருப்பதாயும், கண்ணன் அல்லால் என்கிற - "கண்ணன் அல்லால் இல்லை

கண்டீர் சரண்" என்றும், [1]"என்னையே சரணமாகப் பற்று" என்றும் கிருஷ்ணனை ஒழிய வேறு உபாயம் இல்லை என்கையாலே எப்பொழுதும் உள்ளதாய்ப் பரமசேதனமாய்ச் சர்வசக்தியாய் அபாயம் இல்லாததாய் ஆன்மாவிற்குத் தக்கதாய் வேறு துணை வேண்டாத தாய் இருக்குமதாகவும் சொல்லப்படுமதாய், வைகல் வாழ்தலான சித்தோபாயம் - "வடமதுரைப் பிறந்தான் குற்றம் இல் சீர் கற்று வைகல் வாழ்தல்" என்கிற, உயிர் உள்ளவரையிலும் உளதாகிய குணங்களை அநுபவிப்பதற்கு உறுப்பான சித்தோபாயத்தை உபதேசித்தும்,

[2]அதில் துர்ப்பல புத்திகளுக்கு மாலை நண்ணி காலை மாலை விண்டு தேனை வாடா மலர் இட்டு அன்பராம் சாங்கபக்தி - [3]"இந்தச் சாஸ்திரத்தின் உட்பொருளான பிரபத்தி ஒரு முறையே செய்யத்தக்கதாய், செய்யும் மனிதனை இச் சம்சாரத்தினின்றும் தாண்டச் செய்யும்; மனிதர்களுக்குப் புத்தியில் திடமின்மையாலே இதனையொழிந்த சாதனம் விரும்பப்படுகின்றது" என்கிறபடியே, அந்தச் சித்தோபாயத்தில் மகா விச்வாசம் பிறப்பதற்கு அடியான புண்ணியம் இல்லாமையாலே, மற்றைய உபாயங்களை விடுதல் முன்னாக இதில் இழிகையில் நம்பிக்கை இல்லாமையாகிற சிற்றறிவினையுடையவர்களுக்கு "மாலை நண்ணித் தொழுது தெழுமினோ, காலை மாலை கமல மலர் இட்டு நீர்" என்றும், "விண்டு வாடா மலர் இட்டு நீர் இறைஞ்சுமின்" என்றும், "தேனை வாடா மலரிட்டு நீர் இறைஞ்சுமின்" என்றும் "தனதன்பர்க்கு அன்பாகும்" என்றும் பக்தியையுடையவர்களாய்க் கொண்டு எல்லாக் காலங்களிலும் மலர் முதலான உபகரணங்களாலே அவனை ஆராதித்து அவன் பக்கல் பக்தியிலே நின்றவர்கள் ஆகுங்கோள் என்று அங்கத்துடன் கூடியதான பக்தியை உபதேசித்தும்,

அதில் அசக்தர்க்குத் தாள் அடையும் பிரபத்தி - அதனைச் செய்தற்கு அருமை, அது காலம் தாழ்த்துப் பயன் கொடுத்தலுககு அஞ்சுதல் ஆகிற இவற்றாலே அதனைச் செய்ய ஆற்றல் இல்லாதவர்க்குச் "சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கு எல்லாம், மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்" என்று எல்லாவற்றையும் விடுதலால்

---

1. "மாமேகம் ஶரணம் வ்ரஜ". என்பது, ஸ்ரீகீதை. 18: 66.

2. இதிலிருந்து 'இடும் தெண்டன்' என்றது முடிய, பரோபதேச பரமான 'மாலை நண்ணி' என்ற திருப்பதிகத்தின் பொருள் கூறப்படுகின்றது. 'மாலை நண்ணி' என்பது, பத்தாம் திருப்பதிகம். ஸாங்கபக்தி - அங்கங்களுடன் கூடிய பக்தி.

3. ஸக்ருதேவ ஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந்நரம்
கராணும்புத்தி தௌர்பல்யாத் உபாயாந்தரமிஷ்யதே.
என்பது, பிரமாணம்.

பெறுமது ஆகையாலே செய்தற்கு எளியதாய், எல்லார்க்கும் உரிய தாய், சரீரத்தின் முடிவிலே பலத்தைக் கொடுப்பதான பிரபத்தியை உபதேசித்தும்,

அதில் அசக்தர்க்கு உச்சாரண மாத்ரம் - உபாயம் சிறியதாய், பலன் பெரியதாய், தடைகளும் பலவாய் இருக்கச் செய்தே எங்ஙனே கூடும்படி என்னும் மூன்று வகையான ஐயத்தாலே அந்தப் பிர பத்தியை நம்புதற்கு உடலான அறிவின் ஆற்றல் இல்லாதார்க்குத் "திருக்கண்ணபுரம் சொல்ல நாளும் துயர் பாடு சாராவே" என்று சொல்லைப் பற்றுசாகப் பிடித்து அவன் திருத்திக்கொள்ளும்படியான சொல் மாத்திரத்தை உபதேசித்தும்,

சர்வ உபாய சூந்யர்க்கு இப்பத்தும் பாடி இடும் தெண்டன் என்று - சொல்லுதலுக்கும் தாமாக ஒரு பாசுரம் இட்டுச் சொல்ல ஆற்றல் இன்றிக்கே, மேலே கூறிய உபாயங்கள் எல்லாவற்றிலும் தகுதி இல்லாதார்க்கு "இப்பத்தும் பாடி ஆடிப் பணிமின் அவன் தாள்களே" என்று இத்திருவாய்மொழியை அன்பினாலே தூண்டப் பட்டவராய்க்கொண்டு பாடி அவன் திருவடிகளிலே விழுங்கோள் என்று உபதேசித்தும்,

கீதாசார்யனைப் போலே அதிகார அநுகுணம் நெறியெல்லாம் உரைக்கிறார் ஒன்பதாம்பத்தில் - அதாவது, கீதோபநிடத ஆசாரிய ஞன கண்ணபிரான் தன்னுடைய பரமகிருபையாலே [1] "நெறியெல் லாம் எடுத்துரைத்த" என்கிறபடியே மக்களுடைய ருசிக்குத் தகுதி யாக உபாயங்கள் எல்லாவற்றையும் உபதேசித்தாற்போலே, இவரும், பேறு அணித்தானவாறே இவ்வுலகமக்கள் ஒருவரும் இழக்க ஒண்ணாது என்கிற பரமகிருபையாலே எல்லாம் எடுத்து உரைத்து அவர் அவர்களுடைய அதிகாரத்துக்குத் தகுதியாக உபாயங்கள் எல்லாவற்றையும் உபதேசித்தருளுகிறார் ஒன்பதாம்பத்தில். (9)

228

[2] சுரிகுழல் அஞ்சனம் புனல் மைந்நின்ற பொல் லாப் புனக்காயா என்னும் ஆபத்திற் கொள்ளும் காமருப கந்தருபத்தாலே பிரபந்த ஆர்த்திஹரனை வன், அருள்பெறும்போது அணுகவிட்டதற்குப் பல

---

1. திருவாய். 4. 8: 6.

2. அருள் பெறும்போது அணுகவிட்டதற்குப் பலமான வானேறும் சுதிக்கு, ஆத்தனை வழித்துணையாக்கி, துணைபிரியாமல் போக்கொழித்து, மீண்டின்றதில்லை என்று நிச்சித்திருந்தவர், சஞ்சிதம் காட்டும் தசை ஆன வாறே, முக்தற்ற நெஞ்சுக்குக் கிருத்தியாகிருத்தியங்களை விதித்து,

மான வானேறும் கதிக்கு, அண்டமூவுலகும் முன்னோடிக் கால்விழுந்திடத்தே நிழல் தடங்கள் ஆக்கி, அமுதம் அளித்த தயரதன் பெற்ற கோவலன் ஆகையாலே, வேடன் வேடுவிச்சி பக்ஷி குரங்கு சராசரம் இடைச்சி இடையர் தயிர்த்தாழி கூனி மாலாகாரர் பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர் அவன் மகன் அவன் தம்பி ஆனை அரவம் மறையாளன் பெற்றமைந்தன் ஆகிற பதினெட்டுநாடன் பெருங்கூட்டம் நடத்தும் ஆத்தனை வழித்துணையாக்கி, அறியச்சொன்ன சுப்ரபாதத்தே துணைபிரியாமல் போக்கு ஒழித்து, மீள்கின்றதில்லை என்று நிச்சித்திருந்தவர், சஞ்சிதம் காட்டும் தசையானவாறே முந்துற்ற நெஞ்சுக்குப் 'பணி மறவாது மருள்ஒழி நகு கைவிடேல்' என்று கிருத்யாகிருத்தியங்களை விதித்து, நெஞ்சுபோல்வாரைத் 'தொண்டீர்' என்று அழைத்து 'வலஞ்செய்து எண்ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுதும்' என்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் சுரோதவ்யம் திரஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யம் எல்லாம் வெளியிட்டு, பிணக்கறவைச் சார்வாக நிகமித்து, எண்பெருக்கில் எண்ணும் திருநாமத்தின் சப்தார்த்தங்களைச் சுருக்கி மாதவன் என்று துவயமாக்கி,கரணத்திரய பிரயோகவிருத்தி சம்சாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்து, செஞ்சொற்

நெஞ்சுபோல்வார்க்கு வஸ்தவ்யம் எல்லாம் வெளியிட்டு,சார்வாக நிகமித்து, சம்சாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்து, கன்னவழி காவலிட்டு, சபலனுக்குத் தேஹதோஷம் அறிவித்து, இன்று அஹேதுகமாக ஆதரித்த நீ அநாதி அநாதரஹேது சொல் என்று (இறைவனை) மடியைப் பிடிக்க, (அவன்) நிருத்தரமென்று கவிழ்ந்து நிற்க, (அச்சமயத்தில்) கோலாஹலம் செவிப்பட்டவாறே, தான்களைப் பூண்டு, தடுத்து, திருவாணையிட்டு, (அவ்வாணையை) பெருவாணை அல்லவாக்கின (இவருடைய) பேரவா, குளப்படியாம்படி, பிரபந்ந ஆர்த்திஹரனான இறைவன் (வந்து) கடல் போன்ற ஆதாத்தோடே சூழ்ந்து (தம்முடைய) தாபங்களை அரித்தமையை வெளியிடுகிறார் பத்தாம் பத்தில் என்று எச்சங்களைக் கொண்டு கூட்டி முடிக்க. அர்ச்சிராதி மார்க்கத்திற்கு இறைவன் துணையாகும் தன்மையை விளக்கி, துணையாக விருந்து நடத்தியதை மெய்ப்பிக்கிறார் 'அண்டமூவுலகும்' என்பது முதல் 'பெருங்கூட்டம் நடத்தும்' என்பது முடிய. ஆக்கி நடத்தும் ஆத்தன் என்றும், பதினெட்டு நடனாகிய ஆத்தன் என்றும்

கவிகளுக்குக் கள்ளவழி காவலிட்டு, மனம் திருத்தி வீடு திருத்தப்போய் நாடு திருந்தினவாறே வந்து விண்ணுலகம் தர விரைந்து, அத்தை மறந்து, குடி கொண்டு, தாம் புறப்பட்ட ஆக்கையிலே புக்குத்தான நகர்களை அதிலே வகுத்து, குரவை துவரைகளில் வடிவு கொண்ட சபலனுக்குத் தேசு தோஷம் அறி வித்து, மாயையை மடித்து, வானே தரக்கருதிக் கருத் தின்கண் பெரியனானவனை, 'இன்று அஹேதுகமாக ஆதரித்த நீ அநாதி அநாதர ஹேது சொல்' என்று மடியைப் பிடிக்க, "இந்த்ரிய கிங்கரராய்க் குழிதூர்த் துச் சுவைத்து அகன்றீர் என்னில், அவை யாவரை யும் அகற்ற நீ வைத்தவை என்பர்; அது தேக யோகத்தாலே என்னில், அந்நாள் நீ தந்த சுமடு என்பர்; முன் செய்த முழு வினையாலே என்னில், அது துயரமே உற்ற இருவினை உன் கோவமும் அரு ளும் என்பர்; ஈவிலாத மதியிலேன் என்னும் உம் மதன்றோ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் என்னில், ஆங்காரமாய்ப் புக்குச் செய்கைப்பயன் உண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்த்தா போக்தா என்பர்; யானே எஞ்ஞான்றும் என்றத்தாலே என் னில், அயர்ப்பாய்ச் சமய மதி கொடுத்து உள்ளம் பேதம் செய்கை உன் தொழில் என்பர்; ஜீவப் பிரக் ருதி சைதன்யம் நீங்கும் விரதஹேது, அகமேனியில் அழுக்கு அறுக்கை அபிமாநிகிருத்யம், தான் நல்கும் பந்தம் நிருபாதிகம், சௌகார்த்தம் எஞ்ஞான்றும் நிற்கும், பிணக்கிப் பேதியாத ஞாநாதி வைகல்யம் இல்லை, ஏகமூர்த்தியில் அல்லல் மாய்த்த யத்ந பலித் வங்கள் நம்மது, நாம் தனிநின்ற ஸ்வதந்த்ரர் என்று அவனே அறிந்தனமே என்னும் சர்வஜ்ஞர் இவர்;

கூட்டுக. 'மனம் திருத்தி' என்பது முதல் 'குரவை துவரைகளில் வடிவு கொண்ட' என்பது முடிய உள்ளவை 'சபலனுக்கு' அடைமொழிகள். சபலன் - ஆசையையுடையவன்; இறைவன். 'இந்திரிய கிங்கரராய்' என்பது முதல் 'சர்வஜ்ஞர் இவர்' என்பது முடிய உள்ளவை ஆழ்வார் வினய வினவிற்குக் கூறவேண்டிய விடையை இறைவன் தனக்குள்ளே ஆராய்ந்து நிரூபித்து முடிவுகட்டுதலைக் கூறுகின்றன. இவை பன்னி ரண்டு பிரிவுகளாக அமைந்திருக்கின்றன. முதல் ஐந்து பிரிவுகளும் ஒருவகை. பின்னுள்ள ஏழு பிரிவுகளும் ஒருவகை.

'நெறிகாட்டி, அருகும் சுவடும்' போலே இதுவும் நிருத்தரம்'' என்று கவிழ்ந்து நிற்க; அமந்த்ரஜ்ஞ உத்ஸவ கோஷம் போலே ஏறப்பெறுகிற எழுச்சியைச் சூசிப்பிக்கிற மேக சமுத்ர பேரீ கீத காஹள சங்கு ஆசீஸ் துதி கோலாஹலம் செவிப்பட்டவாறே, சாக்ஷாத்கரித்த பரப்பிராப்திக்குத் தலைமிசையாய் வந்த தாள்களைப் பூண்டு போகாமல் தடுத்துத் திருஆணை இட்டு, கூசம் செய்யாது செய்திப்பிழை, பற்றுக்கொம்பற்ற கதிகேடு, போரவிட்ட பெரும்பழி, புறம் போனால் வரும் இழவு, உண்டிட்ட முற்றீம்பு, அன்பு வளர்ந்த அடி உரம், உயிர்உறவு முதல் அளவு துரக்கைகளாலே பெரு ஆணை அல்ல ஆக்கின பேரவா, குளப்படியாம்படி, கடல் போன்ற ஆதரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிறார் பத்தாம் பத்தில்.

என்பது, சூத்திரம்.

வியாக்:— இப்படி ஆபத்திற்குத் துணைவன் ஆகையாலே அவ் வாபத்துக்களிலே காப்பாற்றுவதற்குத் தகுதியாக மேற்கொள்ளும் வடிவங்கட்கெல்லாம் மூலமாய்த் தனக்குமேல் ஒன்று இல்லாத தான சிறப்பினையுடைய திவ்விய திருமேனியோடே வந்து தோன்றி, தன்மாட்டு இரக்ஷணபரத்தை வைத்த அடியார்கள் இவ்வுலகவாழ்வில் அடிக்கொதிப்பாலும் தன் திருவடிகளைக் கிட்டி அநுபவிக்கப் பெறுமையாலும் படும் துன்பத்தைப் போக்கும் தன்மையனானவன், மேல் பத்திலே தம்முடைய பதற்றத்துக்குத் தகுதியாக நாள் இட்டுக் கொடுத்ததற்குப் பலன், அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமபதத்திற்கு ஏறப்போகை ஆகையாலே, அதற்கு ஆப்ததமனான அவன்தன்னை வழித்துணையாகப் பற்றி, இனிப் பேற்றில் கண்ணழிவில்லை என்று தமக்கு ஏற நிச்சயித்தார்;

அங்ஙனம் நிச்சயித்த ஆழ்வார், இதுகாறும் மறைத்து வைத்த மற்றைய அர்த்த விசேடங்களையும் வெளியிடவேண்டும்படியான நிலையானவாறே, முதல் உபதேசத்திற்குப் பாத்திரமான தம் திருவுள்ளத்திற்குச் செய்வன தவிர்வனவற்றை விதித்தார்;

அங்ஙனம் ஆராய்ந்த இறைவன் தக்கவிடை இறுக்க இயலாதவனாகிக் கவிழ்ந்து நின்றதைத் திருஷ்டாந்த மூலம் விளக்குகிறார் 'நெறி காட்டி' என்று தொடங்கி. பெருவாணை அல்லவாக்கின பேரவா - ஆழ்வாருடையது. ஆழ்வாருடைய அத்தகைய அவாவும் குளப்படியாம்படி கடல் போன்ற ஆதரத்தோடு வந்து சூழ்ந்து தாபங்களை அரித்தான் இறைவன் என்க.

தம் திருவுள்ளம் போன்ற அடக்கமுடையவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குச் செய்யத்தகுவன முதலானவற்றை வெளியிட்டார்;

முதலிலே "பிணக்கற அறுவகைச் சமயமும்" என்ற திருப்பாசுரத்தில் தொடங்கின பக்தியோகத்தைச் "சார்வே தவ நெறி" என்ற திருவாய்மொழியிலே முடித்தார்;

இவ்வுலக மக்களுக்கு எளிதாக இறைவனை அடையும் தன்மையை உபதேசித்தார்;

அநுபவ கைங்கர்யங்களிலே நிற்கிறவர்களுக்குச் சீல குணமாகிற ஆழங்காலையும் காட்டினுர்;

தம் பக்கல் விருப்பத்தாலே தம் திருமேனியில் மிக்க காதலைச் செய்கிற சர்வேச்வரனுக்கு இச்சரீரத்தின் குற்றங்களை உணர்த்தினுர்;

உணர்த்தி, பின்னர், தமக்குப் பரதந்திரனுய்த் தம்மைப் பரமபதத்திற்குக் கொண்டுபோவதாகக் கழிபெருங்காதலை இப்போது செலுத்துகிற அச் சர்வேச்வரனை, அநாதி காலம் இவ்வுலக வாழ்விலே பிறந்து இறந்து உழலும்படி தம்மை விட்டுவைத்து விருப்பம் இன்றியே இருந்ததற்குக் காரணம் என்? என்று கேட்க,

அவனும், இந்திரியங்களுக்கு வசப்பட்டிருத்தல் முதலான பல பல காரணங்களை எண்ணி, அவையும் நம் அதீனம் என்று அறியும் முற்றறிவினரான இவர்க்குப் போக்கடி சொல்லுகை அரிது என்று விடை கூறுதவனுய், அர்ச்சிராதி மார்க்கத்தையும் ஆங்காங்குள்ளார் செய்யும் உபசாரத்தையும் அவ்வழியாலே சென்று பெறும் பேருகிய தன் திருவடித்தாமரைகளை அடைதல் அளவாகக் காட்டிக் கொடுத்தான்.

அதனை நேரே அறிந்து, அது மானச அநுபவ மாத்திரமாய்ப் புறக்கரணங்களாலே பார்க்க முடியாமையாலே அதனை உள்ளவாறே அடையவேண்டும் என்று பதறி, அவனுக்கு மறுக்க ஒண்ணுத திரு ஆணை இட்டுத் தடுத்து, அது பெரு ஆணை அல்லாமைக்குக் காரணங்களையும் சொல்லுகின்ற தம்முடைய பரம பக்தி எல்லாம் குளப்படி ஆம்படியான கழிபெருங்காதலோடே இறைவன் வந்து, தம்முடைய தாபங்களைப் போக்கின வகையை வெளியிடுகிருர் பத்தாம் பத்தில் என்கிருர்.

[1] சுரிகுழல் அஞ்சனம் புனல் மைந்நின்ற பொல்லாப் புனக்காயா என்னும் ஆபத்தில் கொள்ளும் காம ரூப கந்த ரூபத்தாலே பிரபந்ந ஆர்த்தி ஹரனுனவன் - சுரிகுழல் அஞ்சனம் புனல் மைந்நின்ற பொல்லாப் புனக்காயா என்னும் - [2] "சுரிகுழல் கமலக்கண் கனி வாய்" என்றும், [3] "அஞ்சனமேனி" என்றும், [4] "புனல், மைந்நின்ற வரை போலும் திருஉருவம்" என்றும், [5] "பொல்லாக் கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கம்" என்றும், [6] "புனக்காயா நிறத்த புண்டரீகக்கண் செங்கனிவாய்" என்றும் சொல்லப்படுகின்றவாறே ஒன்றற்கொன்று மேன்மையையுடையதாய் மனத்தினைக்கொள்ளை கொள்ளுமதாய் அநுபவிக்கின்றவர்களைத் தனித்தனியே ஆழங்கால் படுத்தவல்ல அவயவ சோபையையும் அதற்குப் [7] பரபாகமாய் மிகப் பேரொளியதாய் விடாயர் முகத்திலே நீர்வெள்ளத்தைத் திறந்துவிட்டாற்போலே எல்லாத் துன்பங்களும் ஆறும்படி இருக்கும் திருநிறத்தையுமுடையதாகச் சொல்லப்படுமதாய், ஆபத்தில் கொள்ளும் காம ரூப கந்த ரூபத்தாலே -[8] "காமரூபம் கொண்டு எழுந்து அளிப்பான்" என்று அடியார்களுடைய ஆபத்தினைப் போக்குதற்குத் தகுதியாக வேண்டினபடி மேற்கொள்ளும் உருவங்கட்கெல்லாம் மூலமாக இருக்கும் திவ்ய திருமேனியைக் கொண்டு, பிரபந்ந ஆர்த்திஹரனுனவன் - பாரத்தை எல்லாம் தன் பக்கல் வைத்த அடியார்களான பிரபந்நர்கள், விருப்பம் இல்லாத இவ்வுலக வாழ்வில் இருப்பாலும் விருப்பமான தன் திருவடிகளைக் கிட்டாமையாலும் படும் துன்பத்தைத் தீர்க்கும் தன்மையனுன சர்வேச்வரன்,

[9] அருள் பெறும்போது அணுகவிட்டதுக்குப் பலமான வான் ஏறும் கதிக்கு - அருள் பெறும்போது - [10] "அவனுடை அருள் பெறும்

---

1. *'சுரிகுழல்' என்று தொடங்கும் இத் தொடரால், இப்பத்தில் வெளியிடப்படுகின்ற இறைவனுடைய ஆபத்சகத்வம் என்ற திருக்குணத்தைக் காட்டுதற்குரிய திருப்பாசுரப் பகுதிகளை வெளியிடுகிருர். காம ரூபம் - விரும்பத்தக்க அழகிய உருவம். கந்தம் - மூலம்; காரணம்.*

2. *திருவாய்.* 10. 1: 1.
3. *திருவாய்.* 10. 3: 3.
4. *திருவாய்.* 10. 6: 8.
5. *திருவாய்.* 10. 10: 1.
6. *திருவாய்.* 10. 10: 6.
7. *பரபாகம் - பல நிறங்கள் கலத்தலால் உண்டாகும் சோபை.*
8. *திருவாய்.* 10. 1: 10.
9. *'அருள் பெறும்போது' என்னும் இதிலிருந்து 'வழித்துணையாக்கி' என்றது முடிய "தாள தாமரை" என்ற முதல் திருப்பதிகத்தின் பொருள் கூறப்படுகின்றது.*
10. *திருவாய்.* 9. 9. 6.

போது அரிதால்" என்றும், [1]"அவன் அருள் பெறுமளவு ஆவி நில்லாது" என்றும் மேல்பத்தில் நொடிப்பொழுதும் விளம்பம் பொருத படி துன்புற்ற தமக்கு, அணுகவிட்டதுக்குப் பலமான - [2]"மரண மானால்" என்று இந்தச் சரீரத்தின் முடிவிலே மோக்ஷம் தருகிறேம் என்று அணித்தாக நாள் இட்டுக் கொடுத்ததற்குப் பலம், வானேறும் கதிக்கு - [3]"வான் ஏற வழிதந்த வாட்டாற்றான்" என்று அடையத் தக்க பூமியான பரமபதத்திலே சென்று புகுருகைக்கு வழியாக அவன் காட்டிக்கொடுத்த அர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று சேர்தல் ஆகையாலே அந்த அர்ச்சிராதிகதிக்கு,

அண்டமூவுலகும் முன்னோடிக் கால்விழுந்திடத்தே நிழல் தடங்கள் [4] ஆக்கி - அண்ட மூவுலகும் முன்னோடி - அரசகுமாரன் வழி போம்போது வழிக்குக் கடவார் முன்னோடி நிலம் சோதித்து நிழலும் தடாகமும் பண்ணிப் பின்னை அரசகுமாரனைக் கொண்டுபோமாறு போலே, [5]"அண்ட மூவுலகு அளந்தவன்" என்கிறபடியே திருவுலகு அளத்தல் என்ற ஒரு வியாஜத்தாலே முன்னோடி நிலம் சோதித்து, கால் விழுந்த இடத்தே நிழல் தடங்கள் ஆக்கி - [6]"அவன் அடிநிழல் தடம்" என்கிறபடியே [7]காளமேகமான தன் கால் விழுந்த இடத்தே நிழலும் தடாகமுமாகச் செய்து,

[8] அமுதம் அளித்த தயரதன் பெற்ற கோவலன் ஆகையாலே - அமுதம் அளித்தவன் ஆகையாலே - திருமோகூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் அமுதம் அளித்த பெருமான் ஆகையாலே

---

1. திருவாய். 9. 9: 6.   2. திருவாய். 9. 10: 5.

3. திருவாய். 10. 6. 5.

4. 'ஆக்கி' என்னும் எச்சத்தை, பின்னே வருகின்ற 'பெருங் கூட்டம் நடத்தும் ஆத்தன்' என்றதிலேயுள்ள 'நடத்தும்' என்னும் எச்சத்தோடு முடிக்க.

5. திருவாய். 10. 1: 5.   6. திருவாய். 10. 1: 2.

7. இவ்வாக்கியத்திலுள்ள பொருள் நயம் கண்டு மகிழ்தல் தகும்.

8. இவ்வாக்கியத்தில் உள்ள 'ஆகையாலே' என்பதனை, அமுதம் அளித்தவன் ஆகையாலே, தயரதன் பெற்றவன் ஆகையாலே, கோவலன் ஆகையாலே என்று மேலே உள்ள சொற்களோடும் கூட்டுக. கூட்டி, 'ஆகையாலே' என்பதனைப் பின்னே வருகின்ற 'நடத்துமாத்தன்' என்பதனோடு முடிக்க.

[1] "தாமரைக்கண்ணன் ஆகிற எம்பெருமானுடைய திருநாம சங்கீர்த்தனமாகிற அமுதம் வழியில் உண்ணும் உணவு" என்கிறபடியே வழியில் உண்ணும் உணவாகத் தன் திவ்ய குணமாகிற அமுதத்தைப் பொழியுமவனாய், தயரதன் பெற்றவன் ஆகையாலே - [2] "தயரதன் பெற்ற மரதகமணித்தடம்" என்கிறபடியே சக்கரவர்த்தித்திருமகனாக வந்து அவதரித்தவன் ஆகையாலே, கோவலன் ஆகையாலே - [3] "கூத்தன் கோவலன்" என்கிறபடியே கிருஷ்ணனாக வந்து அவதரித்தவன் ஆகையாலே,

வேடன், வேடுவிச்சி, பக்ஷி, குரங்கு, சராசரம், இடைச்சி, இடையர், தயிர்த்தாழி, கூனி, மாலாகாரர், பிணவிருநது, வேண்டடிசில் இட்டவர், அவன் மகன், அவன் தம்பி, யானை, அரவம், மறையாளன், பெற்ற மைந்தன் ஆகிற பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் நடத்தும் ஆத்தனை வழித்துணையாக்கி - வேடன் - [4] "தர்மாத்மாவான ஸ்ரீ ராமபிரான், அன்பிற்குரியவனும் வேடர்களுக்குத் தலைவனுமான குகனை அடைந்து" என்னும்படி [5] "மாழைமான் மடநோக்கி உன் தோழி உம்பி எம்பி" என்கிறபடியே பிராட்டியையும் இளைய பெருமாளையும் முன்னிட்டு "உகந்த தோழன் நீ" என்று அங்கீகரிக்கப்பெற்ற ஸ்ரீகுகப்பெருமாள்.

வேடுவிச்சி - [6] "பேரொளியையுடையனான ஸ்ரீ ராமபிரான் அந்தச் சபரியிடம் சென்றார்" என்கிறபடியே தானே சென்று கிட்டி விருந்து உண்டு [7] "ஏ இரகுநந்தனா! தேவரீருடைய அழகிய திருக்கண்களால் தூய்மை செய்யப்பட்டவளாக ஆனேன்" என்னும்படி தன் விசேட கடாக்ஷத்தாலே தூயள் ஆக்கப்பட்ட சபரி,

---

1. "பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்" என்பது, காருடம்.

2. திருவாய். 10. 1: 8. 3. திருவாய். 10. 1: 6.

4. "குஹமாஸாத்ய தர்மாத்மா நிஷாதாதிபதிம் ப்ரியம்." என்பது, ஸ்ரீராமா. பால. 1: 29.

5. பெரியதிரு. 5. 8: 1.

6. ஸோப்யகச்சத் மஹாதேஜா: சபரீம்" என்பது, ஸ்ரீராமா. பால. 1: 58.

7. "சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந" என்பது, ஸ்ரீராமா, ஆரண். 74: 14.

பக்ஷி - கைங்கரியத்தின் பொருட்டுச் சரீரத்தை அழியமாறினவர் என்னும் உகப்பாலே [1] "வேள்வி செய்தலையே தன்மையாக உடையவர்களுக்கு அடையும் உலகம் எதுவோ, பஞ்சாக்கினியின் மத்தியில் நின்று தவம் செய்கிறவர்களுக்கு அடையும் உலகம் எதுவோ, என்னால் கட்டளை இடப்பட்டவனாக நீ மிகச் சிறந்த அந்த உலகத்தை அடைக" என்று அங்கீகரிக்கப்பட்ட ஸ்ரீ ஜடாயு மஹாராஜர்,

குரங்கு - குரங்கு என்ற இது சாதி ஒருமை. [2] "உலகநாதனான ஸ்ரீ ராமபிரான் சுக்கிரீவனை நாதனாக விரும்புகிறார்" என்கிறபடியே அத்தலை இத்தலையாகச் சென்று அங்கீகரிக்கப்பெற்ற மஹாராஜரும் அவரது சேனையான குரங்குக் கூட்டமும்,

சராசரம் - [3] "ஒன்று இன்றியே நற்பாலுக்கு உய்த்தனன்" என்கிறபடியே ஒரு காரணமும் இன்றிக்கே இருக்கச்செய்தே தன்னுடைய சேர்க்கையே சுகமாகவும் தன்னுடைய பிரிவே துக்கமாகவும் ஆம்படியாக அங்கீகரிக்கப்பெற்ற "அயோத்தியில் வாழும் சராசரம்",

இடைச்சி - [4] "பரம்பொருளும் உலககாரணனுமான கண்ணபிரானைத் தியானம் செய்துகொண்டு மூச்சு இல்லாமல் மற்றொரு

---

1. *"யாகதிர்யஜ்ஞ சீலாநாம் ஆஹிதாக்நேர்ச்ச யாகதி:*
அபராவர்த்திநாம் யாச யாசபூமி ப்ரதாயிநாம்."

"மயாத்வம் ஸமநுஜ்ஞாதோ கச்சலோகாந் அநுத்தமாந்."

என்பன, ஸ்ரீராமா. ஆரண். 68: 29, 30.

2. *"ஸுக்ரீவம் நாதம் இச்சதி"*

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 4: 18.

அத்தலை - முப்பரம்பொருளுக்கும் முதல்வனான ஸ்ரீராமபிரான். மஹாராஜர் - சுக்கிரீவன். சுக்கிரீவனை மஹாராஜர் என்பது வைணவமரபு.

3. *திருவாய். 7. 5: 1.*

ஆவும் பயமும் அமுதும் ஒப்பான அரங்கருக்கு
மேவும் புகழ்இன்னும் மேவும் கொலோஅவர் மெய்அருளால்
தாவும் தரங்கத் தடம்சூழ் அயோத்திச் சராசரங்கள்
யாவும் கிளையுடன் வைகுந்த லோகத்தில் ஆர்ந்திட்டவே.

என்பது, திருவரங்கத்துமாலை.

4. *சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்ம ஸ்வரூபிணம்*
நிருச்ச்வாஸதயாமுக்திம் கதாந்யா கோபகந்யகா.

என்பது, ஸ்ரீவிஷ்ணுபு. 5. 10: 22.

"உபேயத்துக்கு இளையபெருமாளையும் பெரியவுடையாரையும் பிள்ளைதிருநறையூர்அரையரையும் சிந்தயந்தியையும் போலே இருக்க

கோப கன்னியானவள் மோக்ஷத்தை அடைந்தாள்" என்கிறபடியே திருமேனியின் அழகு வேறுபாடே உபாயமாக வீடு கொடுக்கப்பெற்ற சிந்தயந்தி,

[1] இடையர் - வெண்ணெய் களவு காணப் புக்கவிடத்தே தொடுப்புண்டு வந்து தம்மகத்தேபுக, படலைத் திருகிவைத்து மோக்ஷம் தாராவிடில் காட்டிக்கொடுப்பேன் என்று மோக்ஷம் பெற்ற ததியாண்டர், தயிர்த்தாழி - பெயர் உருவம் உள்ளவற்றுக்கெல்லாம் உயிர் இருப்பு உண்டாகையாலே இதற்கு மோக்ஷம் கொடுக்க வேண்டும் என்ற ததிபாண்டன் நிர்ப்பந்தத்திற்காக மோக்ஷம் கொடுக்கப்பெற்ற தயிர்த்தாழி,

கூனி - [2] "அழகிய முகமுடையவளே! இது வாசனை கலந்தது, இது அரசனுக்குத் தகுந்தது, இது மனோகரமாக இருப்பது, எங்கள் இருவருடைய சரீரத்துக்குத் தகுதியான சந்தனத்தைக் கொடு" என்று பூசும் சாந்தினை விரும்ப, வேறு ஒரு பயனையும் கருதாமல் கொடுத்த பிரீதியாலே விசேட கடாக்ஷத்திற்கு உரியவளான கூனி,

மாலாகாரர் - [3] "திருவருள் புரிதலையே இயல்பாகவுடைய கிருஷ்ண பலராமர்கள் இருவரும் என் வீட்டிற்கு வந்தார்கள்; ஆதலால் நான் பேறு பெற்றவன் ஆனேன்; கைங்கரிய ரூபமான பூசையைச் செய்யப்போகிறேன்" என்று வேறொரு பயனையும் கருதாமல்

வேணும்", "பெரியவுடையாரும் பிள்ளை திருநறையூர் அரையரும் உடம்பை உபேக்ஷித்தார்கள்; சிந்தயந்திக்கு உடம்பு தன்னடையே போய்த்து." என்பன ஸ்ரீவசனபூஷண ஸ்ரீசூக்திகள். 80, 84.

"'மதியிலேன் வல்வினையே மாளாதோ' என்றதனால் மதியினையுடைய ஒருத்தியின் வல்வினை மாண்டது என்பது உட்கோள். அதாவது, சிந்தயந்தி என்பாள் சதுரப்பாட்டினையுடையளாய் மாமியார் முதலாயினாருடைய முன்னிலையிலேயே இருவினைகளையும் நீக்கி மோக்ஷத்தினை அடைந்தாள் என்பது" என்பது ஈட்டுவாக்கியம். திருவாய். 1. 4: 3.

1. *சிந்திக்க நெஞ்சில்லை; நா இல்லை நாமங்கள்செப்ப; நின்னை*
வந்திக்க மெய்யில்லை வந்திருபோதும்; மொய்ம்மாமலர்ப்பூம்
பந்தித் தடம்புடை சூழ் அரங்கா! ததிபாண்டன் உன்னைச்
சந்தித்த நாள் முக்திபெற்றதென்னோ தயிர்த்தாழியுமே.

என்பது, திருவரங்கத்துமாலை.

2. *ஸுகந்தமேதத் ராஜார்ஹம் ருசிரம் ருசிராநநே*
ஆவயோ: காத்ர ஸத்ருசம் தீயதாமநுலேபநம்.

என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 5. 20: 6.

3. *ப்ரஸாத பரமௌ நாதௌ மமகேஹமுபாகதௌ*
தந்யோஹம் அர்ச்சயிஷ்யாமி இத்யாஹ மால்யோபஜீவந:

என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 5. 19: 21.

பூவினைக் கொடுத்த உகப்பாலே [1]"மங்களம் உள்ளவனே! உன்னுடைய மனம் எல்லாக் காலத்திலும் தர்மத்திலேயே நிலைத்திருக்கப் போகிறது, உன் வம்சத்தில் பிறந்தவர்கள் நீண்ட ஆயுளைப் பெறுவார்கள்" என்று விசேஷ கடாக்ஷம் செய்யப்பெற்ற ஸ்ரீ மாலாகாரர்,

பிண விருந்து - [2]"இது புதிய பிணம், புண்ணியமானது, வேதத்தின் கரை கண்டது, வேள்வி செய்தலையே இயல்பாகவுடைய பெரிய ஞானியான பிராமணன், உத்தமமான பிணம்" என்கிறபடியே [3]"எந்த வுணவை ஒருவன் கொள்ளுகிறானோ அந்த வுணவை அவனுடைய தெய்வங்களும் கொள்ளுகின்றன" என்று கூறிய முறைப்படி பிணத்தை விருந்தாக இட்ட கண்டாகர்ணன்,

வேண்டடிசில் இட்டவர் - [4]"வேண்டடிசில் உண்ணும்போது ஈதென்று, பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பத்த விலோசனத்தில்" பக்தி முன்னாக அடிசில் கொண்டு வந்திட்ட முனிவர் மனைவிகள்,

அவன் மகன் - [5]"மீள அவன் மகனை" என்கிறபடியே இரணியனுடைய புத்திரனாய்வைத்துத் தன் அருளுக்கு விஷயமாம்படி பக்தனான ஸ்ரீ பிரஹ்லாதன்,

அவன் தம்பி - [6]"அவன் தம்பிக்கு" என்னும்படி இராவணனுக்குத் தம்பியாய் [7]"நான் இராவணன் தம்பி, அவனாலே

---

1. தர்மே மநஶ்ச தே பத்ர ஸர்வகாலம் பவிஷ்யதி
யுஷ்மத்ஸந்ததி ஜாதாநாம் தீர்க்கமாயுர்பவிஷ்யதி.
என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 5. 9: 26.

2. நவம் சவமிதம் புண்யம் வேதபாரகமச்யுத
யஜ்ஞசீல மஹாப்ராஜ்ஞ ப்ராஹ்மணம் சவமுத்தமம்.
என்பது, ஹரிவம்சம்.

3. "யதந்ந: புருஷோபவதி"
என்பது, ஸ்ரீராமா. அயோத். 102: 30.

'ஞானக்கண் தா; கனவுஒக்கும் பவம்துடை; நஞ்சிருக்கும்
தானக்கண்டா! கனற்சோதி!' என்றேத்தும் வன்தாலமுடன்
வானக்கண் தா; கனவண்ணா! என்றோது ஒலி வந்தடையா
ஈனக்கண்டாகனற்கு மீந்தான் பரகதி என்னப்பனே.
என்பது, திருவேங்கடத்தந்தாதி.

4. நாய்ச்சியார்திரு. 12: 6.   5. பெரியாழ். 1. 5: 2.

6. பெருமாள். 10. 7

7. அநுஜோ ராவணஸ்யாஹம் தேநசாஸ்மி அவமாநித:
என்பது, ஸ்ரீராமா. யுத். 19: 4.

அவமானப் படுத்தப்பட்டேன்" என்கிறபடியே தன் தாழ்வினை முன்னிட்டுக்கொண்டு [1] "இராகவனைச் சரணமாக அடைந்தேன்" என்று திருவடிகளை அடைந்த ஸ்ரீ விபீஷணாழ்வான்,

ஆனை - [2] "பெரிய ஆபத்தினை அடைந்தவனாய் நாராயணனையே தியானம் செய்துகொண்டிருந்த அந்தக் கஜேந்திராழ்வான் மனத்தால் எம்பெருமானை நினைத்தான்" என்கிறபடியே தன் முயற்சியை விட்டுப் பிரபந்நனாய்த் தன்னால் விரும்பப்பட்ட கைங்கரியத்தைப் பெற்ற ஸ்ரீ கஜேந்திராழ்வான்,

அரவம் - [3] நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம் வெருவி வந்து நின் சரண் என" என்கிறபடியே பெரியதிருவடிக்கு அஞ்சி வந்து திருவடிகளைச் சரணமாக அடைந்த சுமுகன்,

மறையாளன் - [4] "மாக மாநிலம் முழுதும் வந்து இறைஞ்சும் மலரடி கண்ட மாமறையாளன்" என்கிறபடியே கிருஷ்ணாவதாரத்தில் தன்னுடைய இளமைப்பருவத்தில் செய்த திருவிளையாடல்களை நேரே பார்க்கவிரும்பித் தவம் செய்து, அப்படியே காட்டியருளக் கண்டு அநுபவித்த பின்னர், நித்தியமான அநுபவத்தை விரும்பிய கோவிந்தஸ்வாமி,

பெற்ற மைந்தன் - [5] "மாமுனி பெற்ற மைந்தன்" என்கிறபடியே மிருகண்டு புத்திரனாய் மோக்ஷத்தின் பொருட்டுத் தன்னை வந்து அடைந்த மார்க்கண்டேயன்,

ஆகிற [6] பதினெட்டுநாடன் பெருங்கூட்டம் நடத்தும் ஆத்தனை வழித்துணை ஆக்கி - மேற்கூறியவர்கள் ஆகிற பலவகைப்பட்ட சாதித்தன்மைகளாலும், இப்படிப் பதினெட்டாக எண்ணலாம்படி இருக்கையாலும், பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் போலே இருந்துள்ள இத்திரளை அர்ச்சிராதி மார்க்கத்தாலே தானே துணையாய் இருந்து நடத்துமவனாய், [7] "திருமோகூர், ஆத்தன் தாமரை அடி

1. "ராகவம் ஶரணம் கத:"
என்பது, ஸ்ரீராமா. யுத். 17: 14.

2. பரமாபதமாபந்நோ மநஸாசிந்தயத்தரிம்
ஸதுநாகவர: ஸ்ரீமாந் நாராயண பராயண:"
என்பது, விஷ்ணு தர்மம்.

3. பெரியதிருமொழி, 5. 8: 4. 4. பெரியதிருமொழி, 5. 8: 5.

5. பெரியதிருமொழி, 5. 8: 6.

6. 'பதினெட்டு நாடன்' என்றதன் கருத்து நன்கு விளங்கவில்லை.

7. திருவாய். 10. 1: 6.

அன்றி மற்றிலம் அரண்'' என்றும், [1] ''காளமேகத்தை அன்றி மற்றொன்று இலம் கதி'' என்றும் சொல்லுகிறபடியே திருமோகூரிலே நின்றருளின பரமஆப்தனை காளமேகத்தை வழித்துணையாகக் கொண்டு,

[2] அறியச் சொன்ன சுப்ரபாதத்தே துணைபிரியாமல் போக்கு ஒழித்து - அறியச் சொன்ன - [3] ''நாம் உமக்கு அறியச் சொன்ன நாள்களும் நணியவான'' என்றும், [4] ''நாளேல் அறியேன்'' என்றும், [5] ''மரணமானல்'' என்றும் நான் உங்களுக்குச் சொன்ன நாள் அணித்தாயிற்று என்று பிறர்க்கும் பேசும்படியாய், சுப்ரபாதத்தே - [6] ''இரவும் எனக்கு நல்விடிவையுடையதாக ஆகப்போகிறது'' என்றும், [7] ''மதுரையில் வசிக்கும் பெண்களுக்கு இப்போது இரவு நல் விடிவாக ஆகப்போகிறது'' என்றும் சொல்லுகிறபடியே மோக்ஷம் அணித்தானவாறே நல்விடிவான நாளிலே, துணைபிரியாமல் போக்கு ஒழித்து - [8] ''துணை பிரிந்தார் துயரமும் நினைகிலை'' என்றும், [9] ''பசு மேய்க்கப் போகேல்'' என்றும், [10] ''என் கை கழியேல்'' என்றும், [11] ''அவன் பசு நிரை மேய்ப்பு ஒழிப்பான் உரைத்தன'' என்றும் தமக்குத் துணையான அவனைப் பசு மேய்க்கையாகிற அவன் விருப்பத்திற்காகவும் போகாதபடி செய்து,

மீள்கின்றதில்லை என்று நிச்சித்திருந்தவர் - [12] ''மீள்கின்றதில்லைப் பிறவித் துயர் கடிந்தோம்'' என்றும், [13] ''நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேன்'' என்றும் இவ்வுலக வாழ்வாகிற குற்றம் மறுவல்

---

1. திருவாய். 10. 1, 1.

2. இவ்வாக்கியத்தால், ''வேய்மருதோளிணை'' என்ற மூன்றாம் திருப்பதிகத்தின் பொருளை வெளியிடுகிறார். சுப்ரபாதம் - நல்விடிவு.

3. திருவாய். 10. 2: 9. 4. திருவாய். 9. 8: 4.

5. திருவாய். 9. 10: 5.

6. ''ஸுப்ரபாதாச மே நிசா'' என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 5. 17: 3.

7. ''ஸுப்ரபாதாத்ய ரஜநீமதுராவாஸ யோஷிதாம்'' என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 6. 18: 24.

8. திருவாய். 10. 3: 4. 9. திருவாய். 10. 3: 9.

10. திருவாய். 10. 3: 8. 11. திருவாய். 10. 3: 11.

12. திருவாய். 10. 4: 3. 13. திருவாய். 10. 4: 4.

இடாதென்று [1] "ஆனந்தமயமான பரம்பொருளைத் தியானிப்பவன் எங்கும் அச்சம் கொள்ளுகிறான் இல்லை" என்கிறபடியே ஒன்றுக்கும் அஞ்சாதபடி நிச்சயித்திருந்தவர்,

சஞ்சிதம் காட்டும் தசையானவாறே - மரணதசைஆன அள விலே, ஈட்டப்பட்டதாய்ப் புதைத்துக் கிடக்கும் மஹாநிதிகளைப் புத்தி ரன் முதலாயினார்க்குக் காட்டுவாரைப் போலே, தமக்கு மோக்ஷம் அணித்தானவாறே, ஒருவரும் இழக்க ஒண்ணாது, எல்லார்க்கும் நலம் தீங்குகளை அறிவிக்கவேண்டும் என்று பார்த்து, சஞ்சிதம் - முன்னே சேர்த்து வைத்தவை.

முந்துற்ற நெஞ்சுக்குப் பணி மறவாது மருள்ஒழி நகு கை விடேல் என்று [2] கிருத்ய அகிருத்யங்களை விதித்து - முந்துற்ற நெஞ்சுக்கு - [3] "தொழுது எழு என் மனனே" என்று முதன் முதலிலே உபதேசிக்கும்படி [4] "முந்துற்ற நெஞ்சே" என்கிற படியே தம்மிலும் பகவத்விஷயத்திலே முற்பட்டு நிற்கிற தம் திரு வுள்ளத்துக்கு, பணி மறவாது மருள்ஒழி நகு கைவிடேல் என்று - [5] "பணி நெஞ்சே நாளும் பரம பரம்பரனை" என்றும், [6] "வாழி என் நெஞ்சே மறவாது வாழ்கண்டாய்" என்றும், [7] "மருள் ஒழி நீ மட நெஞ்சே" என்றும், [8] "நரகத்தை நகு நெஞ்சே" என்றும், [9] "வாழி மனமே கைவிடேல்" என்றும் நம்முடைய தடைகளை எல்லாம் தானே போக்கி அடிமை கொள்ளும் பரம பரம்பரனை அநுபவிக்கப் பார்; உனக்கு அநுபவித்தலாகிய இவ்வாழ்வு மாறாதே சென்றிடுக; கை புகுந்தது என்னா மற்றைய விஷயங்களில் செய்யுமதனை இவ்விஷயத் திலும் செய்யாதே கொள்; [10] "திருவாறன்விளையதனை, மேவி வலஞ் செய்து கைதொழக் கூடுங்கொல்" என்று அடையத்தக்க பொருள் கிட்டிற்றாகில் இங்கே அடிமை செய்ய அமையாதோ என்று உகந் தருளின நிலங்களில் நசையாலே மயங்குவது ஒன்று உண்டு உனக்கு; அதனைத் தவிரப் பார்; நாம் நினைத்த பொருள் அண்மை யில் இராநின்றது என்று இதனையே பார்க்குமித்தனையோ! நம்மையும்

---

1. "நபிபேதி குதச்சந"
என்பது, தைத்திரீய உபநிடதம்.
2. கிருத்யம் - செய்யத்தகுவன. அகிருத்யம் - தவிரத்தகுவன.
3. திருவாய். 1. 1: 1.
4. பெரியதிருவந். 1.
5. திருவாய். 10. 4: 7.
6. திருவாய். 10. 4: 8.
7. திருவாய். 10. 6: 1.
8. திருவாய். 10. 6: 5.
9. திருவாய். 10. 7: 9.
10. திருவாய். 7. 10: 9.

பார்க்க வேண்டாவோ ! நான் பரமபதத்திற்கு ஏறப்போகாநின்றேன் ; நெடுநாள் நம்மைக் குடிமக்களாக்கி எளிவரவு படுத்தின இவ்வுலக வாழ்வினைப் புரிந்து பார்த்துச் சிரித்துப் போருகிடாய்; நமக்கு இப் பேறு எல்லாம் திருமலையாலே வந்ததாயிற்று; அத்திருமலையைக் கைவிடாதே கொள் என்று, கிருத்ய அகிருத்யங்களை விதித்து - செய் வனவற்றைச் செய்யுமாறும் தவிர்வனவற்றைத் தவிருமாறும் விதித்து,

நெஞ்சுபோல்வாரைத் தொண்டீர் என்று அழைத்து வலம் செய்து எண்ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுதும் என்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் சுரோதவ்யம் திரஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யம் எல்லாம் வெளியிட்டு - நெஞ்சு போல்வாரைத் தொண்டீர் என்று அழைத்து - தம் திருவுள்ளம் போன்று அந்தரங்கரான ஸ்ரீ வைஷ்ணவர்களை [1] "தொண்டீர் வம்மின்" என்று பகவானிடத்தில் ஆசையுடையவர்களே வாருங்கோள் என்று அழைத்து, வலஞ்செய்து என்று கர்த்தவ்யம் - [2] "கொண்ட கோயிலை வலம் செய்து இங்கு ஆடுதும் கூத்தே" என்று அவன் எழுந்தருளியிருக்கிற தேசத்தைக் குறித்து வலம் வந்து மகிழ்ச்சி யுடையராவோம் வாருங்கோள் என்கையாலே கர்த்தவ்யமும், (கர்த் தவ்யம் - செய்யத்தக்கது.) [3] எண்ணுமின் என்று ஸ்மர்த்தவ்யம் - [4] "எண்ணுமின் எந்தைநாமம்" என்று எந்தையினுடைய நாமத்தை எண்ணுங்கோள் என்கையாலே ஸ்மர்த்தவ்யமும், (ஸ்மர்த்தவ்யம் - நினைக்கத்தக்கது). பேசுமின் என்று வக்தவ்யம் - [5] "பேசுமின் கூச மின்றி" என்று உங்கள் தாழ்வினைப் பார்த்துக் கூசாதே திருவனந்த புரத்திலே அன்போடு எழுந்தருளியிருக்கிறவனைப் பேசுங்கோள் என் கையாலே வக்தவ்யமும், (வக்தவ்யம் - பேசத்தக்கது). கேண்மின் என்று சுரோதவ்யம் - [6] "நமர்களோ சொல்லக் கேண்மின்" என்று நம்மோடு சம்பந்தமுடையீர் நாம் சொல்வனவற்றைக் கேளுங்கோள் என்கையாலே சுரோதவ்யமும், (சுரோதவ்யம் - கேட்கத்தக்கது). காண்மின் நடமின் என்று திரஷ்டவ்யம் கந்தவ்யம் - [7] "படமுடை அரவில் பள்ளிபயின்றவன் பாதம் காண நடமினோ" என்று திரு வனந்தபுரத்தில் திருக்கண்வளர்ந்தருளுகிற சர்வேச்வரனுடைய திரு வடிகளைக் காண்பதற்குப் போருங்கோள் என்கையாலே திரஷ்டவ்

1. திருவாய். 10. 1: 4. 2. திருவாய். 10. 1: 5.

3. இதிலிருந்து இரண்டாம் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படு கிறது.

4. திருவாய். 10. 2: 5. 5. திருவாய். 10. 2: 4.

6. திருவாய். 10. 2: 8. 7. திருவாய். 10. 2: 1.

யமும் கந்தவ்யமும், (திரஷ்டவ்யம் - பார்க்கத்தக்கது, கந்தவ்யம் - செல்லத்தக்கது). புகுதும் என்று வஸ்தவ்யம் - "அனந்தபுரநகர் புகுதும் இன்றே" என்று இச்சை பிறந்த இன்றே திருவனந்த புரத்திலே சென்றுபுக வாருங்கோள் என்கையாலே வஸ்தவ்யமும், (வஸ்தவ்யம் - வாசம் பண்ணத்தக்கது). எல்லாம் வெளியிட்டு - ஆகின்றவை எல்லாம் அவர்களுக்கு வெளியிட்டு,

[1] "பிணக்கறவைச் சார்வாக நிகமித்து - முதலில் தொடங்கிய பொருளை ஈற்றில் முடித்தல் சாஸ்திர முறையாகையாலே, [2] "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியிலே "பிணக்கற" என்ற திருப்பாசுரத்திலே "வணக்குடைத் தவநெறி" என்று தொடங்கிய பக்தியோகத்தை, [3] "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்று தன் பேற்றோடே பொருந்தினபடியைச் சொல்லி முடித்து, நன்று; இதன் பட்டோலையான நூலில் [4] "'வீடுமின் முற்றவும்', 'பத்துடையடியவ' ரிலே உபதேசிக்கத் தொடங்கின சாத்ய சித்த ரூபமான சாதந துவயத்தையும் 'தவநெறிக்குப் பரமன் பணித்த' என்று நிகமித்து" என்றவர், இந்நூலில் இப்படி அருளிச்செய்வான் என்? என்னில், அங்கே "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழியைப் பிரபத்திபரமாகவும், "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியைப் பக்திபரமாகவும் முன்னோர்கள் நிர்வஹித்த கட்டளையைப் பின்பற்றி அருளிச்செய்தார். இங்கே, "வீடுமின் முற்றவும்" என்ற

---

1. *இதனால் நான்காம் திருப்பதிகத்தின் பொருள் கூறப்படுகிறது. 'பிணக்கறவை' என்றது, "பிணக்கற அறுவகைச் சமயமும்" என்ற திருப்பாசுரத்தில் கூறிய பக்தியோகத்தை என்றபடி. 'சார்வாக' என்றது "சார்வேதவநெறிக்கு' என்ற திருப்பாசுரத்தில் என்றபடி. நிகமித்து - முடித்துக்காட்டி.*

2. *திருவாய்*. 1. 3: 1 3. *திருவாய்*. 10. 4: 1.

4. *'வீடுமின் முற்றவும் பத்துடையடியவரிலே' என்றது, வீடுமின் முற்றவும், பத்துடையடியவர் என்ற திருப்பதிகங்களிலே என்றபடி. 'சாத்யசித்த ரூபமான சாதந துவயத்தையும்' என்றது, சாத்ய ரூபமான சாதனம், சித்தரூபமான சாதனம் என்றபடி. சாத்யரூபமான சாதனம் - பக்தி. நம்முடைய கர்மத்தாலும் ஞானத்தாலும் சாதித்துக்கொள்ளப் படுவது என்றபடி. சித்தரூபமான சாதனம் - பிரபத்தி. சாதனம் - கருவி; உபாயம். துவயம் - இரண்டு. பக்தி பிரபத்தி ஆகிற இரண்டனையும் குறித்தபடி.*

இங்கு, "வீடுமின்முற்றவும்" என்ற திருப்பாசுரத்திற்கும், "பிணக்கற வறுவகைச் சமயமும்" என்ற திருப்பாசுரத்திற்கும் எழுதியுள்ள ஈடு முப்பத்தாறாயிரப்படி முன்னுரையையும் வியாக்கியானத்தையும் படித்தறிதல் தகும்.

திருவாய்மொழியையும் பக்திபரமாக்கி அருளிச்செய்த எம்பெருமானுர் நிர்வாஹக் கட்டளையைப் பின்பற்றி அருளிச்செய்கிருர். இதுவே அன்ரே எல்லா வியாக்கியானங்களிலும் கூறப்படுவதாய் ஈட்டு வியாக்கியானத்திலும் முதலிலே அருளிச்செய்த பொருளுமாய் இருப்பது. இந்த முறையிலேயே இவர் தாமும் [1] 'முதல் பத்தில் பக்தியை உபதேசிக்கிருர்' என்று அருளிச்செய்ததும்.

ஆகையால் அங்கு [2] முன்னைய பெரியோர்கள் அருளிச்செய்தபடியைப் பின்பற்றி அருளிச்செய்தார்; இங்கு எம்பெருமானுர் அருளிச்செய்ததாய்ப் பின்புள்ளார் எல்லாரும் அருளிச்செய்து கொண்டு போந்த மரியாதையைப் பற்ற அருளிச்செய்தார் என்று கொள்ளுமித்தனை.

நன்று; "வணக்குடைத் தவநெறி" என்கிற இதற்குப் பிரபத்திபரமாகவும் ஒரு பொருள் ஈட்டு வியாக்கியானத்திலே தோன்றியிருக்கையாலே "பிணக்கற" என்கிற திருப்பாசுரத்திலே பக்தி பிரபத்திகள் இரண்டனையும் கூட்டிக்கொண்டு, "சார்வே தவநெறி" என்ற திருவாய்மொழியிலே "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்றதனுல் பக்திநெறியையும், "பண்டே பரமன் பணித்த பணிவகையே, கண்டேன் கமலமலர்ப்பாதம்" என்றதனுல் பிரபத்தி நெறியையும் ஆகிய இரண்டனையும் நிகமிக்கிருர் என்று கொண்டாலோ? என்னில், அதற்கும் பொருந்தாமை சிறுது உண்டு. "பிணக்கற" என்ற திருப்பாசுரத்திலே பிரபத்தி பரமான பொருள் கூறியதுண்டேனும் அப்பொருள் விகல்பமே ஒழியச் சேர்த்துச் சொன்னது இல்லாமையாலே.

ஆகையாலே, எல்லா வியாக்கியானங்களுக்கும் சேர, "பிணக்கற" என்ற திருப்பாசுரத்தில் உபதேசித்த பக்தியை நிகமிக்கிருர் என்ன அமையும்.

ஆனல், பக்தி உபதேசத் தொடக்கம் "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழியிலேயாயிருக்க "பிணக்கற" என்ற திருப்பா

---

1. 'முதல் பத்தில் பக்தியை உபதேசிக்கிருர் என்று அருளிச்செய்ததும்' என்றது, இந்நூலில் 219-ஆம் சூத்திரத்தில் அருளிச்செய்ததனை.

2. 'முன்னைய பெரியோர்கள்' என்றது, முதலியாண்டான், ஸ்ரீ ஆளவந்தார் முதலாயினரை. 'பின்புள்ளார்' என்றது, திருக்குருகைப்பிரான்பிள்ளான், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை முதலாயினரை.

சுரத்தில் என்பான் என்? என்னில், [1]"வீடுமின் என்று தியாஜ்ய உபாதேய தோஷகுண பரித்யாக சமர்ப்பண கிரமத்தைச் சாலம்பந மந்த்ரமாக உபதேசித்து" என்று அத்திருவாய்மொழியையும் இதற்கு உறுப்பாக ஒருங்கவிட்டுக்கொண்டு வந்து "அவன் உரைத்த மார்க்கத்தே நின்று, இருபசை மலமற உணர்வு கொண்டு நலம் செய்வது" என்று தாம் முன்பு அருளிச்செய்த முறையைப் பிடித்து, 'முதல்பத்தில் தொடங்கின பக்தியோகத்தை' என்கிருர் என்றபடி. "பிணக்கற என்று தொடங்கி வேதப்புனித இறுதி சொன்ன" என்றே அன்றே [2]மேலும் அருளிச்செய்தது. ஆக, இப்படி முதல்பத்தில் தொடங்கின பக்தியை முடித்துக்கொண்டு,

எண்பெருக்கில் எண்ணும் திருநாமத்தின் சப்தார்த்தங்களைச் சுருக்கி - எண்பெருக்கில் - [3]"எண்பெருக்கு அந்நலத்து, ஒண் பொருள் ஈறில, வண்புகழ் நாரணன்" என்று முதல்பத்திலே பஜனம் செய்வதற்குப் பற்றுக்கோடாகச் சொல்லப்பட்டதாய், எண்ணும் திரு நாமத்தின் சப்த அர்த்தங்களைச் சுருக்கி - [4]"எண்ணும் திருநாமம்" என்று பஜனம் செய்யுமிடத்தில் சொல்லப்படும் திருநாமமான திரு மந்திரத்தினுடைய சொல்லையும் பொருளையும் "**நாரணம்**" என்றும், [5]"**நாரணன் எம்மான்**" என்பது முதலானவைகளாலும் எளிதில் உணரும்படி சுருங்க உபதேசித்தும், மாதவன் என்று துவயம் ஆக்கி - [6]துவயத்தில் முன்வாக்கியத்திலும் பின்வாக்கியத்திலும் உள்ள "ஸ்ரீமத்" என்ற பதங்களின் பொருள்களைத் திருவுள்ளம்பற்றிக்

1. *'வீடுமின்' என்று தொடங்கும் இவ்வாக்கியம் 219-ஆம் சூத்திரத்தில் உள்ளது ஆகையாலே, இதற்கு விளக்கத்தை அச்சூத்திர வியாக்கியானத்தில் கண்டுகொள்க.*

2. *'மேலும் அருளிச்செய்தது' என்றது 224-ஆம் சூத்திரத்தில்.*

3. *திருவாய். 1. 2: 10.* 4. *திருவாய். 10. 5: 1.*

5. *திருவாய். 10. 5: 2. 'நாரணன்' என்பது சொல்லின் சுருக்கம். 'எம்மான்' என்பது முதலாயின பொருளின் சுருக்கம்.*

6. *ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே*
ஸ்ரீமதே நாராயணாய நம:

என்பது துவயம். இது இரண்டு வாக்கியமாக இருப்பதனால் துவயம் என்று பெயர் பெற்றது.

கொண்டு [1] "மாதவன் என்று என்று ஓதவல்லீரேல்" என்று மேலே கூறிய நாராயணன் என்ற பெயரோடே 'மாதவன்' என்ற இதனை இரண்டு முறை சேர்த்துச் சொல்லவல்லீர்களாகில் என்கையாலே அந்தத் திருமந்திரத்தை [2] அதனைத் தெளிவாகச் சொல்லக்கூடிய தான துவயம் என்னும் மந்திர வடிவமாக வெளியிட்டு,

[3] கரணத் திரயப் பிரயோகவிருத்தி சம்சாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்து - சர்வேச்வரன் தம்மைக் கொண்டு போவதற்கு விரைகின்றபடியாலும் கேட்கிறவர்களுடைய அறிவிற்கு விஷயமாம் படியாகவும் சுருங்கக் கொண்டு, [4] "தாள்வாய் மலர் இட்டு, நாள்வாய் நாடீர்" என்றும், [5] "பாடீர் அவன் நாமம்" என்றும், [6] சுனைநன் மலர் இட்டு, நினைமின் நெடியானே" என்றும் இப்படி முக்கரணங்களாலும் செய்யப்படும் பகவானை அடைதலாகிற செயலை, பரந்த சடங்குகளைச் சுருங்க அநுஷ்டிக்கத்தக்க பொருள்களைக் காண்பிக்கின்ற பிரயோகவிருத்தியாக்கிக் கையோலை செய்து கொடுக்குமாறு போலே இவ்வுலக மக்கட்குக் காட்டி,

---

1. *திருவாய். 10. 5: 7. 'மாதவன்' என்பதும், 'ஸ்ரீமத்' என்பதும் ஒரு பொருளன.*

2. *திருமந்திரத்தில் 'ஓம்' என்னும் பிரணவத்தின் பொருளை விரிப்பது 'நம:' பதமும், 'நாராயண' பதமும். இவற்றின் பொருளைத் தெளிவுற விரிப்பது துவயம் என்னும் மந்திரமாதலின் 'அதனைத் தெளிவாகச் சொல்லக்கூடியதான' என்கிறார்.*

3. *கரணத்திரய பிரயோக விருத்தி - மனம் வாக்குக் காயம் என்னும் முக்கரணங்களைக் கொண்டு செய்யப்படுகின்ற செயல்.*

4. *திருவாய். 10. 5: 4. இதனால் சரீரத்தால் செய்யப்படும் செயலை விதித்தார்.*

5. *திருவாய். 10. 5: 5. இதனால் நாவால் செய்யப்படும் செயலை விதித்தார்.*

6. *திருவாய். 10. 5: 10. இதனால் மனத்தின் தொழில் விதிக்கப்பட்டது.*

ஆக, 'எண்பெருக்கில்' என்றது முதல் 'கையோலை செய்து கொடுத்து' என்பது முடிய "கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்" என்ற ஐந்தாம் திருப்பதிகத்தின் பொருள் விளக்கப்பட்டது.

[1]செஞ்சொற் கவிகளுக்குக் கள்ளவழி காவல் இட்டு - [2]"செஞ் சொற் கவிகாள் உயிர்காத்து ஆட்செய்மின்" என்று, அவனுக்கு அடிமை செய்வீர்! அவனுடைய சீலம் முதலான குணங்களிலே அகப்பட்டு அழுந்திப்போகாமல், உங்கள் உயிரை நோக்கிக்கொண்டு அடிமை செய்யப் பாருங்கோள் என்று உபதேசிக்கையாலே, அநுபவ கைங்கர்யங்களோடே நடக்கிற ஒரு குடிப்பிறந்தவர்களுக்கு, 'அரண் அழியாமல் கள்ளவழி காவல் இடுவாரை'ப் போலே, சீல குணமாகிற ஆழங்காலில் இழியாதே கொள்ளுங்கோள் என்று, வஞ்சக் கள்வன் உள் கலந்து அழிக்கும் வழிக்குக் காவல் இட்டு,

[3]மனம் திருத்தி, வீடு திருத்தப் போய் நாடு திருந்தினவாறே, வந்து, விண்ணுலகம் தர விரைந்து, அத்தை மறந்து, குடி கொண்டு, தாம் புறப்பட்ட ஆக்கையிலே புக்கு, தான நகர்களை அதிலே வகுத்து, குரவை துவரைகளில் வடிவுகொண்ட சபலனுக்குத் தேஹ தோஷம் அறிவித்து - மனம் திருத்தி - [4]"தன்பால் மனம் வைக்கத் திருத்தி" என்கிறபடியே, [5]"வளவேழ் உலகின்" என்ற திருவாய் மொழியிலே 'தாழ்ந்தவர்' என்று அகன்ற தம்மைத் தன் சீல குணத் தைக் காட்டி மனத்தினைத் திருத்திச் சேர்த்துக்கொண்டு, வீடு

---

1. 'செஞ்சொற் கவிகளுக்கு' என்றது முதல் 'தேஹதோஷம் அறிவித்து' என்றது முடிய, "செஞ்சொற் கவிகாள்" என்ற ஏழாந் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகிறது. அநுபவ கைங்கர்யங்களிலே தமக்குத் தோள் தீண்டிகளாகவிருப்பவர்களைச் "செஞ்சொற் கவிகாள்" என்று அழைக்கிறார். கள்ளவழி - வஞ்சக் கள்வன் வந்து உள் கலந்து அழிக்கும் வழி. வஞ்சக்கள்வன் - இறைவன்.

2. திருவாய். 10. 7: 1.

3. மனம் திருத்தி, வீடு திருத்தப்போய் நாடு திருந்தினவாறே வந்து, விரைந்து, மறந்து, குடிகொண்டு புக்கு, வகுத்து, சபலன் ஆனவனுக்கு என எச்சங்களை முடிக்க. மேற்கூறியனவெல்லாம் இறைவன் செயல்கள். அங்ஙனம் சபலனான இறைவனுக்குத் தேஹ தோஷம் அறிவித்து என முடிக்க. அறிவித்தல் ஆழ்வாருடைய செயல். குடிகொண்டு - தன்னுடைய பரிவாரங்களையும் கூடக்கொண்டு; தன்னுடைய பரிவாரங்களோடு என்றபடி. 'தாம்' என்றது, ஆழ்வாரை. 'புறப்பட்ட ஆக்கை' - விரைவுபற்றி நிகழ்காலம் இறந்தகாலம் ஆயிற்று; காலமயக்கம். சபலன் - மனத்தை அடக்கும் ஆற்றல் இல்லாதவன்.

4. திருவாய். 1. 5: 10. 5. திருவாய். 1. 5: 1.

திருத்தப் போய் - 'இன்னமும் இவர் இங்கே இருக்கில் தம்மைத் தாழ்ந்தவராக நினைத்து அகலுவர், அகல ஒண்ணுத பரமபதத்தே கொண்டுபோக வேண்டும்' என்று, [1] "வீடு திருத்துவான்" என்கிற படியே பரமபதத்தைக் கோடிப்பதாகப் போய் அது செய்து மீண்டு வருவதற்கு முன்னே, நாடு திருந்தினவாறே - [2] "ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்ற" என்கிறபடியே தம் உபதேசத்தாலே உலகம் எங்கும் திருந்தி, தான் இங்கே தம்மை வைத்துக்கொள்ள நினைத்த காரியமும் தலைக்கட்டின வாறே, வந்து விண்ணுலகம் தர விரைந்து - [3] "வந்து இன்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்ருன்" என்கிறபடியே மீளவந்து பரம பதத்து ஏறக் கொடு போகையிலே விரைந்து, அத்தை மறந்து - சரம (முடிவான) சரீரமாகையாலே தம்முடைய திருமேனியில் அவனுக்கு உண்டான காதலாலே கொடுபோக நினைத்ததனையும் அவன் மறந்து, குடிகொண்டு, தாம் புறப்பட்ட ஆக்கையிலே புக்கு - [4] "கோவிந்தன் குடி கொண்டான்" என்கிறபடியே பரிவாரங்களோடு கூடியவனாய்க் கொண்டு [5] "என் மாய ஆக்கை இதனுள் புக்கு" என்கிறபடியே 'விடத்தக்கது' என்று குந்தி அடியிட்டுத் தாம் சரக்குக்கட்டிப் புறப்பட்டு நிற்கிற இச்சரீரத்தினுள்ளே தான் புகுந்து,

தானநகர்களை அதிலே வகுத்து - [6] "திருமாலிருஞ்சோலைமலையே" என்கிற திருப்பாசுரத்தின்படியே [7] "தான நகர்கள்" என்று தனக்கு வசிக்கும் இடங்களான திவ்விய நகரங்களில் செய்யும் விருப்பத்தை எல்லாம் இவருடைய திருமேனியின் ஒவ்வோர் உறுப்புக்களில் வைத்து எல்லாம் இதற்குள்ளேயாக வகுத்து, குரவை துவரைகளில் வடிவு கொண்ட சபலனுக்கு - [8] "ஒவ்வொரு பெண்ணிற்கு நடுவே கண்ணன், ஒவ்வொரு கண்ணனுக்கும் நடுவில் ஒவ்வொரு பெண்" என்கிறபடியே திருக்குரவையிலே பெண்களோடே பல பல திருமேனி

1. *திருவாய்.* 1. 5: 10.

2. *திருவாய்.* 6. 7: 2.

3. *திருவாய்.* 10. 6: 3.

4. *திருவாய்.* 10. 6: 7.

5. *திருவாய்.* 10. 7: 3.

6. *திருவாய்.* 10. 7: 8.

7. *திருவாய்.* 8. 6: 8.

8. *"அங்கநா மங்கநா மந்தரே மாதவோ மாதவம் மாதவம் சாந்தரேணாங்கநா"*

என்பது, கர்ணாம்ருதம்.

களைக்கொண்டு அநுபவித்தாற்போலவும், [1] "ஓ முனிவரே! கிருஷ்ணன் ஒரே காலத்தில் வெவ்வேறு வீடுகளில் இருந்துகொண்டு சாஸ்திரங்களில் கூறிய தருமத்தின்படி அவர்களைத் திருமணம் செய்துகொண்டார்" என்றும், [2] "இரவில் அவர்கள் வீடுகளில் கண்ணன் பல சரீரங்களை எடுத்துக்கொண்டு வசித்தார்" என்றும்சொல்லுகிறபடியே ஸ்ரீமத்துவாரகையில் தேவிமாருடனே பதினாறாயிரம் திருமேனி கொண்டு அநுபவித்தாற்போலவும், பல திருமேனிகளைக் கொண்டு தம்முடைய அவயவங்கள்தோறும் அநுபவிக்கும்படி தம் திருமேனியிலே மிக்க காதல் கொண்ட இறைவனுக்கு, தேஹதோஷம் அறிவித்து - [3] "பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம் இங்கு இவ்வுயிர் ஏய்பிரகிருதி மான் ஆங்கார மனங்களான உன் மாமாயை மங்க ஒட்டு" என்று தம்முடைய திருமேனியின் குற்றத்தை அறிவித்து, இதனை விடுவிக்க வேண்டும் என்று அவனைக் கால் கட்டி,

[4] மாயையை மடித்து வானே தரக் கருதிக் கருத்தின்கண் பெரியஞானவனை - மாயையை மடித்து - அவனும் இதனை விடுவிப்பதாக உடன்பட, இவரும் விரும்பினவராய் [5] "மடித்தேன் மனை வாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை" என்கிறபடியே இவ்வுலக வாழ்க்கையிலே நிற்கைக்கு அடியான மாயை உண்டு மூலப்பிரகிருதி; அதனைத் திரிய விடுவித்தேன் என்று செருக்கி, வானே தரக் கருதி -

---

1. *ஏகஸ்மிந்நேவ கோவிந்த: காலேதாஸாம் மஹாமுநே*
ஜக்ராஹ விதிவத் பாணீந் ப்ருதக்கேஹேஷு தர்மத:

என்பது, *ஸ்ரீவிஷ்ணுபு*. 5. 31: 17.

2. *"உவாஸ விப்ரஸர்வாஸம் விஸ்வரூபதரோஹரி:"*

என்பது, *ஸ்ரீவிஷ்ணுபு*. 3. 31: 20.

3. *திருவாய்*. 10. 8: 10.

4. *'மாயையை மடித்து' என்றது முதல் 'மடியைப் பிடிக்க' என்றது முடிய, "திருமாலிருஞ் சோலைமலை" என்ற எட்டாம் திருப்பதிகத்தின் பொருள் விளக்கப்படுகின்றது. மடித்து, சொல்லென்று மடியைப் பிடிக்க என்று முடிக்க. 'தேஹ தோஷம் அறிவித்து, மடித்து, மடியைப் பிடிக்க' என்று கூட்டுக. மடித்தல் - ஆழ்வார் வினை. இனி, 'மடித்து' என்பதனை இறைவன் வினையாக்கலும் ஒன்று. அப்பொழுது மடித்துத் தரக்கருதிப் பெரியன் ஆனவன் என்க. அஹேதுகம்-காரணம் இல்லாமல். அநாதி அநாதர ஹேது - இதற்கு முன்னர் எல்லாம் என்னை ஆதரிக்காததற்குக் காரணம்.*

5. *திருவாய்*. 10. 8: 3.

[1] "வானே தருவான் எனக்காய்" என்கிறபடியே தமக்குப் பரமபதத்தைத் தருவானாக ஒருப்பட்டு, கருத்தின்கண் பெரியனானவனை - [2] "கருத்தின் கண் பெரியன்" என்கிறபடியே லீலாவிபூதி, நித்திய விபூதி என்னும் இரண்டு உலகங்கள் காரணமாக வருகின்ற மற்றைய எண்ணங்கள் எல்லாம் தீர்ந்து, தம்மை அவ்வருகே கொடுபோகையிலும் [3] ஆதிவாஹிகரை நியமிக்கையிலும் தான் முற்பாடனாய்க் கொண்டு பெருக்க எண்ணுகின்றவனை; அன்றிக்கே, "மாயையை மடித்து" என்பதனை [4] மேலதனோடு சேர்த்து "மனை வாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை மடித்தேன்" என்று தாம் பேசும்படி இந்தச் சரீர சம்பந்தத்தை அறுத்து, "வானே தருவான்" என்கிறபடியே தமக்குப் பரமபதத்தைத் தருவானாக எண்ணிய "கருத்தின்கட் பெரியன்" என்று தம்மால் எண்ணி முடிக்க ஒண்ணாதபடி தம் காரியத்தில் விரைகின்றவனை என்று கூறலுமாம். ஆக, இப்படித் தாம் சொன்னபடி செய்யக் கடவனாய், தம்மைக் கொண்டுபோகையிலே மிகவும் பாரிக்கின்றவனை என்றபடி.

இன்று அஹேதுகமாக ஆதரித்த நீ அநாதி அநாதர ஹேது சொல் என்று மடியைப் பிடிக்க - [5] "இன்று என்னைப் பொருள் ஆக்கி" என்று தொடங்கி, இன்று இப்படிக் காரணம் இல்லாமலே அடியேனை அடிமை கொண்ட நீ இத்துணைக் காலம் என்னை அடிமை கொள்ளாதிருந்ததற்குக் காரணத்தை அருளிச்செய்ய வேண்டும் என்று மடியைப் பிடித்துக் கேட்க,

இதற்குச் சொல்லலாம் விடை என்? என்று இறைவன் தனக்குள்ளே ஆராய்ந்து நிரூபித்துப் பார்த்தும் தக்க விடை ஒன்றும் கூற முடியாதவனாய், அவன் நின்றமையை விரித்தருளிச்செய்கிறார் "இந்த்ரிய கிங்கரராய்" என்றது முதல், "நிருத்தரம் என்று கவிழ்ந்து நிற்க" என்றது முடிய. சர்வேச்வரன் தனக்குள்ளே ஆராய்ந்த முறைதான் இருக்கும்படி :—

---

1. *திருவாய்.* 10. 8: 5. 2. *திருவாய்.* 10. 8: 8.

3. *ஆதிவாஹிகர் - இவ்வுடலை விட்டுப் பரமபதத்திற்குச் செல்லும் ஆன்மாவினை அழைத்துக்கொண்டு செல்லுமவர்கள்.*

4. *'மேலதனோடு' என்றது, மேல் வருகின்றதனோடு என்றபடி. அதாவது, மடித்து, கருதி, பெரியன் ஆனவன் என்று யாற்றொழுக்காகப் பொருள் கோடலைக் குறித்தபடி.*

5. *திருவாய்.* 10. 8: 9.

[1] இந்த்ரிய கிங்கரராய்க் குழி தூர்த்துச் சுவைத்து அகன்றீர் என்னில் - [2] "நீங்கள் இந்திரியங்களுக்கு வேலை செய்கின்றவர்கள்" என்கிறபடியே தொன்று தொட்டு இந்திரியங்களுக்கு வசப்பட்டவராய், [3] "தூராக்குழி தூர்த்து எனைநாள் அகன்றிருப்பன்" என்றும், [4] "அற்ப சாரங்கள் அவை சுவைத்து அகன்றொழிந்தேன்" என்றும் சொல்லுகிறபடியே 'தூர்க்க முடியாத இந்திரியங்களுக்கு இரை இட்டு எத்தனை காலம் உன்னை அகன்று இருக்கக் கடவேன்; அல்ப ரசங்களாய்ப் பலவிதமாய் இருக்கிற ஐம்புல இன்பங்களைப் பசை உண்டாக மயங்கி எதிர்ப்பசை கொடுத்துப் புசித்துச் சர்வசக்தியான உனக்கும் எட்டாதபடி இவ்வுலக வாழ்விலே கைகழியப் போனேன் என்று நீர் தாமே பேசும்படியான ஐம்புல இன்பங்களின் ஆசை அன்றோ நீர் தொன்று தொட்டு இவ்வுலக வாழ்விலே உழன்று திரிவதற்குக் காரணம்' என்னில், [5] "அவை யாவரையும் அகற்ற நீ வைத்தவை என்பர் - [6] "ஓர் ஐவர் யாவரையும் மயக்க நீ வைத்த" என்றும், [7] "அகற்ற நீ வைத்த மாய வல் ஐம்புலன்கள்" என்றும் சொல்லுகிறபடியே பொருள்களும் அவற்றில் ஆசைக்குக் காரணமான இந்திரியங்களும், எத்துணையேனும் அளவுடையாரேயாகிலும் கலங்கச்செய்து, வேண்டாதாரை அகற்றுதற்கு நீ வைத்தவை அன்றோ என்பர்.

அது தேஹயோகத்தாலே என்னில், அந்நாள் நீ தந்த சுமடு என்பர் - அந்த இந்திரியங்களுக்கு வசப்பட்டிருத்தற்குக் காரணம், மூன்று குணங்களோடு கூடின சரீர சம்பந்தம் அன்றோ என்னில், [8] "அந்நாள் நீ தந்த ஆக்கை" என்றும், [9] "அது நிற்கச் சுமடு தந்தாய்" என்றும் சொல்லுகிறபடியே அதுவும் நீ தந்ததன்றோ என்பர்.

முன் செய்த முழுவினையாலே என்னில், அது துயரமே உற்ற இருவினை உன் கோவமும் அருளும் என்பர் - அந்தச் சரீர சம்பந்தத்

---

1. *இது, இறைவன் தானே தனக்குள்ளேயே கேட்டுக்கொள்ளும் வினா.*

2. *"யூயம் இந்த்ரிய கிங்கரா:" என்பது, வில்லிபுத்தூர்பகவர் வார்த்தை.*

3. *திருவாய்.* 5. 8: 6. 4. *திருவாய்.* 3. 2: 6.

5. *இது, மேலே கூறிய வினாவிற்கு, ஆழ்வார் இங்ஙனம் விடை கூறுவர் என்பதாக இறைவன் தானே தனக்குள் கூறிக்கொள்ளும் விடை. மேலே வரும் வினாவிடைகளையும் இங்ஙனமே கொள்க.*

6. *திருவாய்.* 7. 1: 8. 7. *திருவாய்.* 5. 7: 8.

8. *திருவாய்.* 3. 2: 1. 9. *திருவாய்.* 7. 1: 10.

துக்குக் காரணம், [1] "முன் செய்த முழுவினை" என்று நீர் சொன்ன, தொன்று தொட்டு ஈட்டப்பெற்ற நல்வினை தீவினைகள் அன்றோ என்று சொல்லுவோமாகில், [2] "துயரமே தரு துன்ப இன்ப வினைகளாய்" என்றும், [3] "உற்ற இருவினையாய்" என்றும் சொல்லுகிறபடியே அறிவில்லாதவைகளாய் ஆற்றல் இல்லாதவைகளாய் அழிந்துபோமவையாய் இருந்துள்ள நல்வினை தீவினைகளான கர்மங்கள், உன்னுடைய சீற்ற வடிவமாகவும் அருள் வடிவமாகவும் பலிக்குமவை ஆகையாலே கருமங்களும் நீ இட்ட வழக்கு என்பர்.

ஈவிலாத மதியிலேன் என்னும் உம்மதன்றோ [4] கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் என்னில், ஆங்காரமாய்ப் புக்குச் செய்கைப்பயன் உண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்த்தா போக்தா என்பர் - [5] "ஈவிலாத தீவினைகள் எத்தனை செய்தனன்கொல்" என்று முடிவில்லாமல் இருக்கிற கொடிய பாவங்களிலே எத்தனை செய்தேன் என்றும், [6] "மதியிலேன் வல்வினையே மாளாதோ" என்று நான் செய்த பாவமேயோ அநுபவித்தாலும் மாளாதது என்றும் நீரே சொல்லுகையாலே நல்வினை தீவினைகளைச் செய்தலும் அவற்றின் பயனை அநுபவித்தலும் உம்மதன்றோ என்று சொல்லுவோமாயின், [7] "தான் ஆங்காரமாய்ப் புக்குத் தானே தானே ஆனுன்" என்று தானே அபிமானியாய்ப் புக்கு ஆன்மாவிலும் ஆன்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களிலும் எனக்கு உண்டான அபிமானத்தைத் தவிர்த்துத் தானே அபிமானியானுன் என்றும், நம்முடைய படியை அநுகரித்துச் சொல்லுகிற "கடல் ஞாலம் செய்தேனும்" என்ற திருவாய்மொழியில் [8] "செய்கைப் பயன் உண்பேனும் யானே" என்று எல்லாக் கருமங்களினுடைய பலன்களை உண்பேனும் யானே என்றும், [9] "கருமமும் கரும பலனுமாகிய" என்று நல்வினை தீவினைகளான கருமங்கட்கும் அவற்றின் பலன்கட்கும் தலைவனுய் என்றும் சொன்னவராகையாலே, கருமங்களைச் செய்கின்றவனும் அவற்றின் பலன்களை உண்பவனும் நீ இட்ட வழக்கு ஆகையாலே, கருமங்களைச் செய்கின்றவனும் அவற்றின் பலன்களை உண்பவனும் நீயே என்பர். "கருமமும் கரும பலனுமாகிய" என்கிற இதனுல், கருமங்களைச்

---

1. *திருவாய்.* 1. 4: 2. 2. *திருவாய்.* 3. 6: 8.
3. *திருவாய்.* 10. 10: 8.
4. *கர்த்ருத்வம் - கருத்தாவாக இருக்கும் தன்மை. போக்த்ருத்வம் - அனுபவிக்கின்றவனுக இருக்கும் தன்மை.*
5. *திருவாய்.* 4. 7: 3. 6. *திருவாய்.* 1. 4: 3.
7. *திருவாய்.* 10. 7: 11. 8. *திருவாய்.* 5. 6: 4.
9. *திருவாய்.* 3. 5: 10.

செய்தலும் அவற்றின் பலன்களை அநுபவித்தலும் அவன் அதீநம் என்பது சொல்லப்பட்டதாகையாலே ஆயிற்று, இவ்விடத்திலே இவர் இத்திருப்பாசுரப் பகுதியை எடுத்தது.

யானே எஞ்ஞான்றும் என்றத்தாலே என்னில், அயர்ப்பாய்ச் சமய மதி கொடுத்து உள்ளம் பேதம் செய்கை உன் தொழில் என்பர் - [1]"யானே என்னை அறியகிலாதே, யானே என் தனதே என்றிருந்தேன்" என்றும், [2]"எஞ்ஞான்றும் நாம்" என்று தொடங்கி "மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி" என்றும் நீர் சொன்ன அஞ்ஞானம் [3]அந்யதாஞானம் முதலியவைகளாலே காணும் உமக்கு மேற்கூறிய அந்த இரண்டு தன்மைகளும் உண்டாயின என்று சொன்னோமாகில், [4]"அயர்ப்பாய்த் தேற்றமுமாய்" என்றும், [5]"மாட்டாத பல சமயமதி கொடுத்தாய்" என்றும், [6]"உள்ளம் பேதம் செய்திட்டு உயிர் உண்ட உபாயங்களும்" என்றும் சொல்லுகிறபடியே ஞானமும் அஞ்ஞானமும் நீ இட்ட வழக்கு ஆகையாலே அஞ்ஞான அந்யதாஞானங்கள் முதலியன விளைக்கையும் உன் தொழில் என்பர்.

[7]ஜீவபிரகிருதி சைதந்யம் நீங்கும் விரதஹேது என்னும் சர்வஜ்ஞ

---

1. *திருவாய். 2. 9: 9.* 2. *திருவாய். 3. 2: 7.*

3. *அந்யதாஞானம் - திருமாலுக்கே அடிமையான இவ்வுயிரை **வேறு** தெய்வங்களுக்கும் அடிமை என்று நினைக்கும் அறிவு.*

4. *திருவாய். 7. 8: 6.* 5. *திருவாய். 3. 1: 4.*

6. *திருவாய். 5. 10: 4.*

7. *மேலே கூறியவாறன்றி வேறு சில விஷயங்களையும் இறைவன் தானே தன் திருவுள்ளத்தில் நினைக்கலானன். அவ்வாறு நினைத்த விஷயங்களை அருளிச்செய்கிருர் 'ஜீவபிரகிருதி' என்றது முதல் 'ஸர்வஜ்ஞர் இவர்' என்றது முடிய. இதனல், ஆழ்வார் பல உண்மைகளையும் உள்ளவாறே அறிந்த மெய்ஞ்ஞானக்கனி ஆவர். ஆதலால், ஏதோ சில சமாதானங்களைச் சொல்லி, இவரை வஞ்சிக்க முடியாது என்று நினைத்தான் என்பதனைத் தெரிவித்தபடி.*

இந்த வாக்கியத்தின் ஈற்றிலே உள்ள 'சர்வஜ்ஞர்' என்னும் சொல்லை 'ஜீவபிரகிருதிசைதந்யம் நீங்கும் விரதஹேது' என்பது முதலானவற்ருேடும் தனித்தனியே கூட்டுக. சர்வஜ்ஞர் - முற்றும் உணர்ந்த முனிவர்.

ஜீவப்பிரகிருதி-விரதஹேது-அசித்து என்றும், ஜீவன் என்றும் கூறப்படுகின்ற இரண்டும் இறைவனுக்குச் சரீரங்கள். இவற்றுள் ஜீவனுகிற சரீரத்தில் கிடக்கின்ற அறிவானது, "யாதானும் பற்றி நீங்கும் விரதம்" என்கிறபடியே இவ்வுலகப்பொருள்களுள் யாதாயினும் ஒன்றனைப் பற்றிக்கொண்டு இறைவனுகிய நம்மை விட்டு நீங்குவதற்குக் காரணமாக இருக்குமே யன்றி, நம்மைப்பற்றி உய்வதற்கு உறுப்பாகாதது என்ற உண்மையை அறிந்தவர் இவர் என்பது இவ்வாக்கியத்தின் கருத்து.

ஞர் இவர் - [1]"யாதானும் ஓர் ஆக்கையில் புக்கு அங்கு ஆப் புண்டும் ஆப்பு அவிழ்ந்தும், மூதாவியில் தடுமாறும் உயிர் முன்னமே" என்கிறபடியே சூக்கும சரீரத்தையுடையதாய்க்கொண்டு தனது நல் வினை தீவினைகட்குத் தகுதியாகப் பலவிதமான சரீரங்களிலே ஒன்று விட்டு ஒன்றைப்பற்றித் தடுமாறித் திரியும் உயிருக்கு, உடல் வடிவாகவும் ஐம்பொறிகள் வடிவமாகவும் நுகரப்படும் பொருளாக இருக்கின்ற சரீரத்தைப் பற்றிக் கிடக்கிற அறிவானது, [2]"யாதானும் பற்றி நீங்கும் விரதம்" என்கிறபடியே இவ்வுலகப் பொருள்களுள் யாதேனும் ஒன்றனைப் பற்றிக்கொண்டு நம்மை விட்டு நீங்கும் விரதத்திற்குக் காரணமாக இருப்பது ஒன்று என்று நன்கு அறிந்தவர் இவர்.

[3] அகமேனியில் அழுக்கு அறுக்கை அபிமானி கிருத்யம் என்னும் சர்வஜ்ஞர் இவர் - [4]"அகமேனி ஒழியாமே" என்கிறபடியே நமக்கு அந்தரங்க சரீரமான இவ்வான்மாவினைப் பற்றிக் கிடக்கிற சரீர சம்பந்தத்தாலாய குற்றத்தைப் போக்குதல் இவ்வான்மாவிடத்தில் அபிமானத்தையுடைய இறைவனுகிய நம்முடைய செயல் என்று நன்கு அறிந்தவர் இவர்.

இனி, ஜீவப்பிரகிருதி சைதந்யம் நீங்கும் விரதஹேது, அகமேனியில் அழுக்கு அறுக்கை அபிமாநி கிருத்யம் என்பதற்கு, [5]"என்னுடைய உயிர்களின் உருவமான சரீரமானது சிறந்தது என்று அறிந்துகொள்" என்கிறபடியே ஜீவனுகிற சரீரத்தில் கிடக்கிற அறிவு, "யாதானும் பற்றி நீங்கும் விரதம்" என்கிறபடியே உலகப் பொருள்களுள் யாதேனும் ஒன்றனைப் பற்றிக்கொண்டு நம்மை விட்டு அகலும் விரதத்திற்குக் காரணம்; அசித்து நமக்குச் சரீரமாக இருக்கச்செய்தே அப்படி அன்றிக்கே "அகமேனி" என்கிறபடியே நமக்கு அந்தரங்க சரீரமாக இருக்கிற இவ்வான்மாவில் கிடக்கிற சரீர சம்பந்தமான குற்றத்தைப் போக்குகை இதனிடத்தில் அபி

1. *திருவிருத்தம்*, 95. 2. *திருவிருத்தம்*, 95.

3. *அகமேனி - ஆன்மா ; இறைவனுக்கு அந்தரங்க சரீரமாக இருப்பது என்பது பொருள். அபிமாநி - அபிமானத்தையுடைய இறைவன். கிருத்யம் - செயல்.*

4. *திருவாய்*. 9. 7: 10.

5. *"இதஸ்த்வந்யாம் ப்ரகிருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம்" என்பது, ஸ்ரீ கீதை*, 7 : 5.

மானத்தையுடைய நம்முடைய செயலாக இருந்தது என்று நன்கு அறிந்தவர் இவர் என்று பொருள் கூறலுமாம்.

[1] "தான் நல்கும் பந்தம் நிருபாதிகம் என்னும் சர்வஜ்ஞர் இவர் - [2] "நல்கித் தான் காத்து அளிக்கும் பொழிலேழும் வினையேற்கே, நல்கத்தான் ஆகாதோ நாரணனைக் கண்டக்கால்" என்னும்படி நாம் அன்பு முன்னாகக் காப்பதற்கு அடியான நாராயணனாக இருக்கும் தன்மையால் வந்த சம்பந்தம், ஒரு காரணம் பற்றி வந்ததன்று, இயல் பாகவே அமைந்தது என்று நன்கு அறிந்தவர் இவர்.

[3] சௌஹார்த்தம் எஞ்ஞான்றும் நிற்கும் என்னும் சர்வஜ்ஞர் இவர் - [4] "தனி மாப் புகழே எஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த் தான் தோன்றி" என்கிறபடியே "பெயர் உருவங்களை இழந்து தமம் என்னும் நிலையினை அடைந்துள்ள சமயத்திலே இவற்றை உண்டாக்க நினைத்த ஒப்பற்றதான மகாகுணம் என்கிற சௌகார்த்தம், 'ஒருவன் செய்யும் உபகாரமே இது' என்று அதனையே நினைக்கின்றவர்களுடைய மனத்திலே காலம் என்னும் ஒரு பொருள் உள்ளவரையிலும் நிற்கும் படியாக" என்கையாலே அந்தச் சம்பந்தம் அடியாக எல்லார்க்கும் நன்மையை விரும்புகைக்கு அடியான சௌகார்த்த குணத்திலும் கண்ணழிவு சொல்லப்போகாது என்று நன்கு அறிந்தவர் இவர்.

[5] பிணக்கிப் பேதியாத ஞானாதி வைகல்யம் இல்லை என்னும் சர்வஜ்ஞர் இவர் - [6] "பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாததோர், கணக்கில் கீர்த்தி வெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினாய்" என்னும்படி 'அழியும் சமயத்திலே அறிவுடைப் பொருள்களையும் அறிவில்பொருள்களையும் பெயரினையுடையதாதல் உருவத்தினையுடையதாதல் என்னும் வேறுபாடு இல்லாமலிருக்கும் படி கலசி, படைப்புக் காலத்திலே ஒருவர் செய்த நல்வினை தீவினைகள்

---

1. *நல்கும் - பாதுகாக்கும். பந்தம் - சம்பந்தம். நிருபாதிகம் - காரணம் இல்லாதது.*

2. *திருவாய்.* 1. 4: 5.

3. *சௌஹார்த்தம் - சிநேகம்.*

4. *திருவாய்.* 8. 10: 7.

5. *பிணக்கி - கலந்து. பேதியாத - மாறுபடாத. வைகல்யம - வேறுபாடு.*

6. *திருவாய்.* 6. 2: 8.

மற்றொருவர்க்குத் தட்டாதபடி பிரித்துப் படைத்தும், தனக்கு ஒரு வேறுபாடு இன்றிக்கே இருக்கும் ஞானம் என்ன, சக்தி என்ன ஆகிய வற்றின் நிறைவினையுடையவன்' என்று பேசினவராகையாலே, நமக்கு ஞான சக்திகளில் குறைவு சொல்ல இடம் இல்லாதபடி நம்முடைய ஞான சக்திகளின் நிறைவினை நன்கு அறிந்துகொண்டவர் இவர்.

[1] ஏகமூர்த்தியில் அல்லல் மாய்த்த யத்ந பலித்வங்கள் நம்மது என்னும் சர்வஜ்ஞர் இவர் - [2] "ஏகமூர்த்தி இருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தி, யாகி ஐந்து பூதமாய் இரண்டு சுடர்கள் அருவாகி, நாக மேறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே! உன், ஆகமுற்று மகத் தடக்கி ஆவி யல்லல் மாய்த்ததே" என்ற திருப்பாசுரத்திலே 'கார ணங்களோடு காரியங்களோடு வாசிஅற எல்லாப் பொருள்களையும் படைத்து, அப்பொருள்கள் தரித்திருப்பதற்காக அந்தராத்மாவாய், படைக்கப்பட்ட பொருளைக் காப்பாற்றுவதற்காகத் திருப்பாற் கடலிலே யோக நித்திரை செய்து, இப்படி எல்லாக் காலமும் ஒரு படிப்படத் திருவருள் புரிதலையே இயல்பாகவுடையவனாகைக்கு அடியான சம்பந்தத்தையுடையவனான நீ, உன் திருமேனிக்கு வேண் டும் போகத்திற்கு வேண்டிய கருவிகள் எல்லாம் [3] 'பூசும் சாந்து என் நெஞ்சமே' என்ற திருப்பாசுரத்திற் கூறியபடியே என் பக்கலிலே உண்டாக்கி உன் துக்கம் தீரப்பெற்றவன்ஆனாயே' என்று இவர் பேசினபடியே, இவரைப் பெறுகைக்கு முயற்சி செய்கையும் பெற்றால் உகக்கும் பயனும் நமக்கே உள்ளது என்று நன்கு அறிந்து கொண்ட வர் இவர்.

நாம் தனிநின்ற ஸ்வதந்த்ரர் என்று அவனே அறிந்தனமே என்னும் சர்வஜ்ஞர் இவர் - [4] "தனிநின்ற சார்விலாமூர்த்தி" என்கிற படியே, இவ்வுலகமெல்லாம் அழிந்த அன்று "சத்" என்னும் சொல் லுக்குரிய பொருளாய் நின்று, [5] 'தேவர்கள் சிவனை அடைகிறார்கள்; சிவன் பிரமனை அடைகிறான்; பிரமன் என்னை அடைகிறான்; நான் ஒருவரையும் அடைவதில்லை' என்கிறபடியே 'உனக்கு வேறோர் பற

1. *அல்லல் - துன்பம். மாய்த்த - போக்கிய. யத்நம் - முயற்சி. பலித்வம் - பயன்பெற்ற தன்மை.*

2. *திருவாய்.* 4. 3: 3. 3. *திருவாய்.* 4. 3: 2.

4. *திருவாய்.*

5. *ருத்ரம் ஸ்மாஶ்ரிதாதேவா: ருத்ரோப்ரஹ்மாண மாஶ்ரித: ப்ரஹ்மா மமாஶ்ரிதோ ராஜந் நாஹம் கஞ்சிதுபாஶ்ரித:* என்பது, பாரதம்ஆச். 118: 37.

றுக்கொம்பு இல்லாதபடி இருக்கிறவனே!' என்கையாலே நாம் வேண்டிற்றுச் செய்யும் தடை இல்லாத சுவதந்திரத்தையுடையோம் என்று அறுதியிட்டு, [1]'அவனே அகல்ஞாலம் படைத்து இடந்தான்' என்று தொடங்கி 'அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே' என்கிறபடியே எல்லாக் காரியங்களிலும் துணை வேண்டாதவனாய் அறிவுடைப்பொருள் அறிவில்பொருள்கள் எல்லாவற்றினுடைய சொரூபம், நிலைபேறு என்னும் இவைகள் தனக்கு உரிமைப்பட்டவைகளாக இருக்குமவன் என்று அறிந்தோம்' என்று சொல்லும்படியான முற்றறிவினையுடையராய் இருப்பார் ஒருவர் இவர்.

நெறிகாட்டி அருகும் சுவடும் போலே இதுவும் நிருத்தரம் என்று கவிழ்ந்து நிற்க - நெறிகாட்டி அருகும் சுவடும் போலே - [2]"நெறி காட்டி நீக்குதியோ" என்ற திருப்பாசுரத்தில் வேறு உபாயங்களைக் காட்டி அகற்றப் பார்க்கிறாயோ? உன்னுடைய மிகச் சிறந்த திருமேனியை நீயே காட்டி அநுபவிப்பிக்கிறாயோ? தொன்றுதொட்டு அறிவில்லாதவனாய்ப் போருகிற என்னை என் செய்ய நினைத்தாய்? இதனை அருளிச்செய்யவேண்டும் என்றும், [3]"அருகும் சுவடும் தெரிவுணரோம்" என்ற திருப்பாசுரத்தில் உம்முடைய அருகு வருதல் உம்முடைய சுவடு அறிதல் செய்யாதிருக்க, உம்மளவிலே அன்பானது அற மிக்குவாராநின்றது, இதற்கு அடி அருளிச்செய்யவேண்டும் என்றும் இவர் முன்பு கேட்டவற்றிற்கு விடை கூறுததைப்போன்று, இதுவும் நிருத்தரம் என்று கவிழ்ந்து நிற்க - இப்பொழுது கேட்ட இதற்கும் விடை கூற இயலாது என்று நிலத்தினைக் கீறிக் கவிழ்ந்து நிற்க,

---

1. திருவாய். 9. 3: 2.

2. நெறிகாட்டி நீக்குதியோ? நின்பால் கருமா
முறிமேனி காட்டுதியோ? மேல்நாள் - அறியோமை
என்செய்வான் எண்ணினாய்? கண்ணனே! ஈதுரையாய்;
என்செய்தால் என்படோம் யாம்?

என்பது, பெரிய திருவந்தாதி, 6.

3. அருகும் சுவடும் தெரிவுணரோம்; அன்பே
பெருகும்மிக; இதுஎன்? பேசீர் - பருகலாம்
பண்புடையீர்! பாரளந்தீர்! பாவியேம்கண் காண்பரிய
நுண்புடையீர்! நும்மை நுமக்கு.

என்பது, பெரிய திருவந்தாதி, 8.

சுவடு - இனிமை. நிருத்தரம் - விடை இல்லாதது; விடை கூற முடியாதது என்றபடி.

[1] அமந்த்ரஜ்ஞ உத்சவ கோஷம்போலே ஏறப்பெறுகிற எழுச்சியைச் சூசிப்பிக்கிற மேக சமுத்ர பேரீ கீத காஹள சங்கா ஆசீஸ் ஸ்துதி கோலாஹலம் செவிப்பட்டவாறே சாக்ஷாத்கரித்த பரப்பிராப்திக்கு - அமந்த்ரஜ்ஞ உத்சவகோஷம் போலே - திருமணம் முதலிய விசேட காலங்களில் சடங்குகளைச்செய்யும் உபாத்தியாயர் மந்திரம் தோன்ருவிட்டால் கொட்டச்சொல்லி வாத்திய ஒலியால் அதனை மறைத்துவிடுமாறு போலே,

ஏறப்பெறுகிற எழுச்சியைச் சூசிப்பிக்கிற - இறைவனுகிய தான் விடை கூறமாட்டாது நின்றமை தோற்றுதபடி மறைப்பதற்காக, இவனுலே செய்விக்கப்பட்டதாய் [2] "நான் ஏறப்பெறுகின்றேன்" என்று தாம் மேற் சொன்னபடியே பரமபதத்திற்கு ஏறப்பெறுகிற எழுச்சியைக் குறித்துக் காட்டுகின்ற,

மேக சமுத்ர பேரீ - [3] "சூழ்விசும்பு அணிமுகில் தூரியம் முழக்கின, ஆழ்கடல் அலைதிரை கையெடுத்து ஆடின" என்கிறபடியே, அரசகுமாரர்கள் போகும்போது முரசொலி முதலான மங்களவொலிகளைச் செய்வாரைப் போலே, பரமபதத்துக்குப் போமவர்களைக் கண்ட பிரீதியாலே முழங்குவது ஒலிப்பதாகாநிற்கும் மேகமும் சமுத்திரமுமாகிற வாத்தியங்களுடையவும், கீத - [4] "கீதங்கள் பாடினர் கிந்நரர் கருடர்கள்" என்கிற கீதங்களினுடையவும், காஹள சங்க - [5] "காளங்கள் வலம்புரி கலந்து எங்கும் இசைத்தனர்" என்கிற காளங்கள் சங்கங்களினுடையவும், ஆசீ: - [6] "வாள் ஒண்கண் மடந்தையர் வாழ்த்தினர்" என்கிற வாழ்த்தினுடையவும், ஸ்துதி - [7] "தொடர்ந்து எங்கும் தோத்திரம் சொல்லினர்" என்கிற தோத்திரங்களினுடையவும், கோலாஹலம் செவிப்பட்டவாறே - கலந்து எங்கும் எழுகின்ற ஒலியாகிற கோலாஹலம் செவிப்பட்டவாறே,

---

1. *'அமந்த்ரஜ்ஞ' என்று தொடங்கும் இந்த வாக்கியத்தில் "சூழ்விசும் பணிமுகில்" என்ற ஒன்பதாம் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகின்றது. அமந்த்ரஜ்ஞ - மந்திரம் தெரியாதவனுடைய. கோஷம் - ஒலி. எழுச்சி - எழுதல்; புறப்படுதல். சூசிப்பிக்கிற - குறித்துக்காட்டுகிற. பேரீ - முரசம். காஹளம் - எக்காளம்; ஊது கொம்பு. ஆசி - வாழ்த்து. ஸ்துதி - தோத்திரம்.*

2. *திருவாய்.* 10. 6: 5.
3. *திருவாய்.* 10. 9: 1.
4. *திருவாய்.* 10. 9: 5.
5. *திருவாய்.* 10. 9: 6.
6. *திருவாய்.* 10. 9: 6.
7. *திருவாய்.* 10. 9: 7.

[1] சாக்ஷாத்கரித்த பரப்பிராப்திக்கு - அர்ச்சிராதி நெறியையும் ஆதிவாஹிகர் செய்யும் உபசாரத்தையும் பரமபதத்தை அடைதலும் அங்குள்ளாருடைய பஹுமானத்தையும் ஆனந்தமயமான திருமா மணி மண்டபத்தில் இருப்பையும் அவனுடைய திருவடித்தாமரைகளை அடைதலையும் பெற்றாராகப் பேசும்படி ஞானக்கண்ணால் அறிந்த பரனை அடைதலுக்கு,

[2] தலைமிசையாய் வந்த தாள்களைப் பூண்டு போகாமல் தடுத்துத் திரு ஆணை இட்டு - தலைமிசையாய் வந்த தாள்களைப் பூண்டு - அப்படிக் கண்டதான பரனை அடைதலானது மனத்தினுடைய அநுபவ மாத்திரமாய்ப் புறத்திலே கண்டு அநுபவிப்பதற்கு உரிமையின்மையாலே அதனைப் பெறுகைக்காக, [3] "தலைமிசையாய் வந்திட்டு இனி நான் போகலொட்டேன்" என்று, [4] "தலைமேல் புனைந்தேன் சரணங்கள்," [5] "தலைமேல தாளிணைகள்" என்கிறபடியே மனத்தினுடைய அநுபவத்தின் தெளிவாலே தம் தலைமேல் ஆகும்படி வந்த திருவடிகளைக் கட்டிக்கொண்டு, போகாமல் தடுத்து - போகாமல் தடுத்து, திரு ஆணை இட்டு - [6] "திருவாணை நின் ஆணை கண்டாய்" என்று அவனுக்கு மறுக்க ஒண்ணாத ஆணை இட்டு,

இப்படி இவர் ஆணை இட்டவாறே, அடியவரான நீர், உம்மை அடிமை கொண்ட நாம் செய்தபடி கண்டிருக்குமத்தனை ஒழிய, நம்மை ஆணை இட்டுத் தடுத்தல் உம்முடைய தன்மைக்கு மாறுபட்டதாகையாலே இது பெரு ஆணைகாணும் என்று எம்பெருமான் கூற,

[7] கூசம் செய்யாது செய்திப் பிழை "நேசம் செய்து உன்னோடு என்னை உயிர் வேறின்றி ஒன்றாகவே கூசம் செய்யாது கொண்டாய்"

---

1. சாக்ஷாத்கரித்தல் - (ஞானக்கண்ணால்) அறிதல். பரப்பிராப்திக்கு - பரம்பொருளை அடைதற்கு.

2. 'தலைமிசையாய்' என்னும் இதிலிருந்து முடிவுவரையில் "முனியே நான்முகனே" என்ற பத்தாம் திருப்பதிகத்தின் பொருள் பேசப்படுகிறது.

3. திருவாய். 10. 10: 1.
4. திருவாய். 10. 4: 4.
5. திருவாய். 10. 6: 6.
6. திருவாய். 10. 10: 2.

7. ஆழ்வார், தாம் கூறிய ஆணை 'பெரு ஆணை அன்று' என்பதனைச் சாதிக்கிறார் 'கூசம் செய்யாது' என்று தொடங்கி. சாதிக்கும் முறையை இத்திருப்பதிகத்தில் 2 முதல் 9 முடிய உள்ள திருப்பாசுரங்களைக்கொண்டு வெளியிடுகிறார். என் தாழ்வினை நோக்கி என்னை நீக்கவேண்டியிருக்க, அங்ஙனம் நீக்காது, நேசம் செய்து உன்னோடு என்னை உயிர் வேறின்றி உயிர் ஒன்றாகவே கூசம் செய்யாது கொண்டாய். அங்ஙனம் கொண்டது உன்பிழையன்றோ? என்கிறார். இதனால், கூசம் செய்யாது செய்திப்பிழை என்க.

என்கிறபடியே முற்றறிவினனான நீ என்னுடைய முன்னைய செயல்களால் வந்த தாழ்வினைப் பார்த்துக் கூசி வேற்றுமை வையாமல் உன்னோடு ஆன்ம பேதம் இல்லாமல் என்னை அங்கீகரித்தாய்; ஆன பின்பு, காரியத்தின் குற்றம் உன்னதன்றோ என்றும்,

[1] பற்றுக்கொம்பு அற்ற கதிகேடு - "ஆவிக்கு ஓர் பற்றுக் கொம்பு நின்னலால் அறிகின்றிலேன் நான்" என்கிறபடியே, கொடி, கொள்கொம்பு ஒழியத் தரிக்கமாட்டாதது போன்று, என் ஆன்மா வாழ்வதற்குக் காரணமாக இருப்பது ஒரு பொருள் உன்னை ஒழிய வேறு காண்கின்றிலேன்; ஆதலால், நான் வேறுகதி இல்லாதவன் என்றும்,

போரவிட்ட பெரும்பழி - "எம்பரம் சாதிக்கலுற்று என்னைப் போரவிட்டிட்டாயே" என்கிறபடியே, என் காரியம் நீ செய்வதாக ஏறிட்டுக்கொண்டு, உன் பக்கல் நின்றும் பிரித்து, உன்குணங்கள் நடையாடாத இவ்வுலகத்திலே தள்ளி உபேக்ஷித்தாய்; இது உனக்கு நீக்க ஒண்ணாத பெரும் பழி அன்றோ என்றும்,

புறம்போனால் வரும் இழவு - "போரவிட்டிட்டு என்னை நீ புறம் போக்கலுற்றால் பின்னை யான் ஆரைக்கொண்டு எத்தை அந்தோ எனது என்பது என்? யான் என்பது என்?" என்கிறபடியே வேறு புகல் இல்லாத என்னை உன்பக்கல் நின்றும் பிரித்து, படைப்புக் காலமே தொடங்கி இவ்வளவும் புகுர நிறுத்தின நீ, என் காரியம் நான் செய்வேனாகப் பார்த்து என்னை உபேக்ஷித்தால், சர்வசக்தியான நீ வெறுத்த பின்பு, சக்தி இல்லாதவனான நான் எந்த உபாயத்தைக் கொண்டு என்ன பேற்றினைச் சாதிப்பது, எனக்கு உதவியாக இருப்பது ஒன்று உண்டு என்பதோர் பொருள் உண்டோ? வேறுபட்டு இருத்தலுக்குத் தகுதியாக இருப்பதொரு நான் உண்டோ? ஐயோ! என்னை என்கையிலே காட்டித் தந்தால் இழவே அன்றோ உள்ளது என்றும்,

உண்டிட்ட முன் தீம்பு - "எனது ஆவியை இன்னுயிரை மனக்கு ஆராமை மன்னி உண்டிட்டாய் இனி உண்டொழியாய்" என்கிறபடியே, என்னுடைய தாழ்ந்த சரீரத்தையும் ஆன்மாவையும் மனத்திற்கு நிறைவு பிறவாமல் எப்பொழுதும் உண்ட நீ, தொடங்கின காரியத்தைக் குறை கிடக்கவிடாமல் கைக்கொண்டு விடாய், உண்ட உணவில் குறைவைத்த உன்னதன்றோ முதல் குற்றம் என்றும்,

1. *இதனால், தம்முடைய அநந்யகதித்வத்தைத் தெரிவித்தபடி.*

[1] அன்பு வளர்ந்த அடி உரம் - கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ " என்கிறபடியே, பெரியபிராட்டியார் பக்கல் வைத்த அன்பின் மிகுதியாலே அவள் பரிகரமான என்பக்கல் கழி பேரன்பினன் ஆனவனே ! நான் அந்தப்புரபரிகரம் அன்றோ ! என் பக்கல் உனக்கு உண்டான அன்பிற்கு அடி இல்லையோ! ஆகையாலே, அவள் பரிகரம் என்கிற அடி உரம் என்றும்,

[2] உயிர் உறவு - "பெற்று இனிப் போக்குவனோ உன்னை என் தனிப் பேருயிரை " என்கிறபடியே மிக்க வேற்று இனத்தானாய் இருந்து வைத்து, எனக்கு உயிரான உன்னைப் பெற்று வைத்து இனி விடுவேனோ! உயிரை விட்டு உடல் தரிக்கவற்றோ! என்கிற சரீர சரீரி பாவசம்பந்தம் என்றும்,

[3] முதல் அளவு துரக்கைகளாலே பெரு ஆணை அல்ல ஆக்கின - இப்படி "முதல் தனிவித்தேயோ " என்ற திருப்பாசுரம் இறுதியாக, அப்பெருமானுக்கு மறுவாய் திறக்க ஒண்ணாதபடி துரக்கைகளாலே தாம் இட்ட ஆணை பெரு ஆணை அல்லாமையைச் சாதித்த, [4] பேரவா குளப்படியாம்படி - "அதனில் பெரிய என் அவா" என்கிறபடியே தத்வத் திரயத்தையும் விளாக்குலைகொண்டு அவை குளப்படியாம்படி பெரிதான தம்முடைய பரமபக்தி குளப்படியாம்படி, [5] கடல் போன்ற ஆதரத்தோடே சூழ்ந்து தாபங்களை அரித்தமையை வெளியிடுகிறார் பத்தாம் பத்தில் - அதாவது, "என் அவா அறச் சூழ்ந்தாயே" என்று மேலே கூறிய அளவிடமுடியாத தம்முடைய காதற் பெருக்கையும் அவனுடைய காதற்பெருக்கையும் பார்த்தால் இது ஒரு குளப்படியும், அது ஒரு கடலும் என்னும்படியான காதலோடே

---

1. அடியுரம் - மூல பலம். உரம் - வலிமை. பரிகரம் - பரிவாரம்.

2. இதனால், இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள சரீர சரீரிபாவத்தைக் காட்டினாராயிற்று. சரீரி - ஆன்மா.

3. துரக்கை - கக்ஷி; கொள்கை.

4. பேரவா - பெரிய ஆசை; ஆழ்வாருடைய ஆசை. குளம்பு அடி - குளப்படி. சிறியது என்பது பொருள். தத்வத்திரயம் - சித்து, அசித்து, ஈச்வரன் என்னும் மூன்று தத்துவங்கள். "அதனில் பெரிய என்னவா" என்றது, திருவாய். 10. 10: 10.

5. கடல் போன்ற ஆதரம் - இறைவனுடைய ஆசை. சித்து அசித்து ஈச்வரன் என்னும் மூன்று தத்துவங்களைக் காட்டிலும் பெரியதான ஆழ்வாருடைய ஆசையும் குளப்படி என்னும் படி - சிறியது என்னும்படி கடல் போன்ற பரந்த பேராசையோடு இறைவன் வந்து ஆழ்வாருடைய தாபத்தை நீக்கினான் என்றபடி.

வந்து கலந்து, [1] "சந்தோஷம் அடைந்த பெருமாள் பரதாழ்வானைத் தம்முடைய மடியின்மேல் வைத்துக்கொண்டு தழுவினார்" என்று, மீண்டு எழுந்தருளி ஸ்ரீபரதாழ்வானை மடியிலே வைத்து அணைத்து உச்சிமோந்து உகந்தாற்போலே, தம்முடைய விடாய் கெடும்படி அநுபவிப்பித்து, தன்னைப்பெறாத காரணமாக வந்த இழவோடே கூப்பிட்ட திருவாயாலே "அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச்சடகோபன்" என்று பேசும்படி "அவா அறச் சூழ் அரியை" என்று [2] ஹரி என்ற திருப்பெயருக்குத் தகுதியாகத் தம்முடைய எல்லாத் தாபங்களையும் அழித்தமையை எல்லாரும் அறியும்படி பிரகாசிப்பிக்கிறார் பத்தாம் பத்தில் என்கை. (10)

229

"உருமை" யோடே "உற்றேன்" ஆக்காதொழிந்தது நாடு திருந்த, நச்சுப்பொய்கை ஆகாமைக்கு, பிரபந்தம் தலைக்கட்ட, வேர்சூடுவார் மண்பற்றுப் போலே என்னுமவற்றிலும், "இனி, இனி" என்று இருபதின்கால் கூப்பிடும் ஆர்த்தி அதிகார பூர்த்திக்கு என்னுமது முக்யம். [3]

என்பது, சூத்திரம்.

வியாக் :—இனி, மேல், இவர் முதன்முதலிலே திருவிருத்தத்திலே [4] "இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை" என்று துன்புற்றவராய்ச் சரணம் புக்கபோதே விரோதிகளாய் உள்ளனவற்றை நீக்கித் தன்னை அடைவித்தலைச் செய்யாமல் இவ்வளவாக இவரை இவ்வுலகில் வைத்திருந்ததற்குக் காரணம் யாது? என்னும் வினாவிற்கு, வைத்திருந்ததற்குக் காரணங்கள் பலவும் உண்டு என்னுமதனையும், அக்காரணங்கள் பலவற்றுள்ளும் தலையாய காரணம் இன்னது என்னுமதனையும் அருளிச்செய்கிறார் இச் சூத்திரத்தால்.

உருமையோடே உற்றேன் ஆக்காதொழிந்தது - "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இனி

1. *"அங்கே பரதமாரோப்ய முதித: பரிஷஸ்வஜே" என்பது, ஸ்ரீராமா. யுத். 134: 39.*

2. *அரி - பாவங்களைப் போக்குகிறவன்.*

3. *ஆர்த்தியதிகாரபூர்த்திக்கு என்றது, ஆர்த்தியால்வரும் அதிகார பூர்த்திக்கு என்றபடி. பரம ஆர்த்தியாலே அன்றோ பிரபத்தியதிகாரம் நிறைவுபெறுவது. ஆர்த்தி - துன்பம்.*

4. *திருவிருத்தம், 1.*

யாம் உருமை" என்று தன்னைப் பெறுதற்குத் தடைகளான அறிவின்மை கர்மம்வாசனை ருசி என்னும் இப்பிரகிருதிசம்பந்தங்களை விடுவிக்கவேண்டும் என்று துன்புற்றவராய்த் திருவடிகளிலே விழுந்து விரும்பியபோதே அவற்றைப் போக்கி, [1]"உற்றேன் உகந்து பணி செய்து உனபாதம் பெற்றேன்" என்கிறபடியே திருவடிகளைக் கிட்டி அன்பு முன்னாக அடிமை செய்யப்பெற்றேன் என்னும்படி ஆக்காமல் இவரை இங்கே வைத்தது, நாடு திருந்த - தன்னுடைய படைப்பினாலும் அவதாரங்கள் முதலியவற்றாலும் திருந்தாத இவ்வுலகம் இவருடைய உபதேசத்தாலே [2]"ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய, பேரும் தார்களுமே பிதற்ற" என்னும்படி திருந்துகைக்காகவும்,

நச்சுப் பொய்கை ஆகாமைக்கு - பிரபத்தி செய்த உடனே முக்தராம்படி செய்யில் பிரபத்தியை நச்சுப்பொய்கையைப் போன்று நினைத்து அஞ்சினவர்களாய் இதில் இழிவார்இலர் என்று, அது அப்படி ஆகாமைக்காகவும்,

பிரபந்தம் தலைக்கட்ட - தானும் தன் உலகமும் வாழும்படி இவரைக் கொண்டு கவிபாடுவிக்கத் தொடங்கின பிரபந்தம் முடிவு பெறுதற்காகவும்,

[3] வேர் சூடுவார் மண்பற்றுப் போலே - வேர்சூடுமவர்கள் அதன் வாசனையில் உள்ள விருப்பத்தாலே மண்பற்றுக் கழற்றாதது போலே, ஞானிகளைச் சரமசரீரத்தோடேவைத்து அநுபவிக்குமவனாகையாலே, இவருடைய ஞானம் பக்தி என்னும் வாசனை எல்லாம் தோற்றும்படி இருக்கிற திருமேனியில் தனக்கு உண்டான விருப்பத்தாலேயும், என்னுமவற்றிலும் - என்று சொல்லுமவற்றைக்காட்டிலும்,

---

1. *திருவாய்.* 10. 8 : 10.   2. *திருவாய்.* 6. 7: 2.

3. *"வேர் சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாப்போலே ஜ்ஞானியை விக்ரகத்தோடே ஆதரிக்கும். பரமார்த்தனான இவனுடைய சரீரஸ்திதிக்கு ஹேது, கேவலபகவதிச்சையிறே. 'திருமாலிருஞ்சோலைமலையே' என்கிறபடியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய சரீரைகதேசத்திலே பண்ணும். அங்குத்தை வாசம் சாதனம்; இங்குத்தைவாசம் சாத்யம்." என்னும் ஸ்ரீவசநபூஷண ஸ்ரீசூக்திகள் இங்கு நினைத்தல் தகும். "வஞ்சக்கள்வன்", "மங்கவொட்டு" என்று தொடங்கும் திருவாய்மொழிப் பாசுரங்களின் வியாக்கியானத்தையும் இங்குப் படித்தறிதல் தகும்.*

இனி இனி என்று இருபதின்கால் கூப்பிடும் ஆர்த்தி அதிகார பூர்த்திக்கு என்னுமது முக்கியம் - [1] "இனி யாம் உறுமை" என்றும், [2] "இனி வளைகாப்பார் ஆர்" என்றும், [3] "இனி உன் திருவருளால் அன்றிக் காப்பரிதால்" என்றும், [4] "இனி அவர்கண் தங்காது" என்றும், [5] "இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே" என்றும், [6] "இனி எம்மைச் சோரேலே" என்றும், [7] "எந்நாள் யான் உன்னை இனி வந்து கூடுவனே" என்றும், [8] "எங்கு இனித் தலைப்பெய்வனே" என்றும், [9] "இனி என் ஆரமுதே கூயருளாயே" என்றும், [10] "ஆவி காப்பார் இனி யார்" என்றும், [11] "நெஞ்சு இடர்தீர்ப்பார் இனி யார்" என்றும், [12] "இனி உன்னை விட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன்" என்றும், [13] "தரியேன் இனி" என்றும், [14] "இனி யாரைக் கொண்டு என் உசாகோ" என்றும், [15] "அத்தனையாம் இனி என் உயிர் அவன் கையதே" என்றும், [16] "நாரைக் குழாங்கள்காள் பயின்று என் இனி" என்றும், [17] "இனி இருந்து என் உயிர்காக்குமாறு என்" என்றும், [18] "இனி நான் போகலொட்டேன்" என்றும், [19] "உண்டிட்டாய் இனி உண்டொழியாய்" என்றும், [20] "உன்னைப்பெற்று இனிப்போக்குவனோ" என்றும் இப்படி இருபதின்கால் கூப்பிடும்படியான தொடர்ந்து வரும் துன்பத்தை விளைத்துப் பரமபக்தி பர்யந்தமான அதிகார பூர்த்தியை உண்டாக்குகைக்கு என்னுமதுவே தலையாய காரணம் என்கை.

கழிபெரும் துன்பத்தாலேயன்றோ பிரபத்தி அதிகாரம் நிறைவு பெறுவது. ஆகையாலே, மற்றைய காரணங்கள் எல்லாம் அத்துணைச் சிறப்புடைக்காரணங்கள் ஆகமாட்டா. இவரை இவ்வுலகில் வைத்ததற்குத் தலையாய காரணம் இது என்றதாயிற்று. (11)

---

1. *திருவிருத்தம்*, 1.
2. *திருவிருத்தம்*, 13.
3. *திருவிருத்தம்*, 62.
4. *திருவாய்*. 1. 4: 4.
5. *திருவாய்*. 1. 4: 8.
6. *திருவாய்*. 2. 1: 10.
7. *திருவாய்*. 3. 2: 1.
8. *திருவாய்*. 3. 2: 9.
9. *திருவாய்*. 4. 9: 6.
10. *திருவாய்*. 5. 4: 2.
11. *திருவாய்*. 5. 4: 9.
12. *திருவாய்*. 5. 7: 1.
13. *திருவாய்*. 5. 8: 7.
14. *திருவாய்*. 7. 3: 4.
15. *திருவாய்*. 9. 5: 2.
16. *திருவாய்*. 9. 5: 10.
17. *திருவாய்*. 9. 9: 2.
18. *திருவாய்*. 10. 10: 1.
19. *திருவாய்*. 10. 10: 6.
20. *திருவாய்*. 10. 10: 7.

230

" கமலக்கண்ணன் " என்று தொடங்கிக் "கண்ணுள் நின்று" இறுதி "கண்டேன்" என்ற பத்தும் உட்கண்ணுலேயாய், "காண்பான் அவாவுதல்" அதில் இரட்டி ஆகையாலே, "கண்டு களிப்ப" அளவும் பரஜ்ஞான கர்ப்ப பரபக்தி.[1]

என்பது, சூத்திரம்.

வியாக் :— இத்துன்பத்துக்கு அடியான பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளின் நிலைகள் எந்த எந்தத் திருவாய்மொழிகளிலே விளங்குகின்றன என்னும் வினாவிற்கு, மேலே மூன்று சூத்திரங்களால் விடை அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அவற்றுள் பரபத்தியின் நிலை விளங்கும் திருப்பாசுரங்களை அருளிச்செய்கிறார் இச்சூத்திரத்தால்.

கமலக்கண்ணன் என்று தொடங்கி - [2] " கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான் " என்று தாமரைக்கண்ணனானவன் என் கண்ணுக்குப் புலப்படலானான் என்று தொடங்கி, கண்ணுள் நின்று இறுதி- [3] "கண்ணுள் நின்று அகலான்" என்று என் கண்வட்டத்தில் நின்றும் கால்வாங்குகிறிலன் என்னுமது அளவாக, கண்டேன் என்ற பத்தும்- [4] " என் கண்ணனை நான் கண்டேனே " என்றும், [5] " கலைப் பல் ஞானத்து என் கண்ணனைக் கண்டு கொண்டு " என்றும், [6] " நறும் துழாய்க் கண்ணி அம்மா! நான் உன்னைக் கண்டு கொண்டே" என்றும், [7] " கைதொழ இருந்தாய் அது நானும் கண்டேனே " என்றும், [8] " ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன் எம்மானே" என்றும், [9] " திருவிண்ணகர்க் கண்டேனே " என்றும், [10] " தேவர்கட்கு எல்லாம் கருவாகிய கண்ணனைக் கண்டு கொண்டேனே " என்றும், [11] " கண்டேன் கமலமலர்ப்பாதம் " என்றும் சொல்லப்பட்ட இப் பத்துத்

---

1. *உட்கண் - மனமாகிய கண்; ஞானக்கண் என்றபடி. பரஜ்ஞாந கர்ப்ப பரபக்தி - பரஞானத்தை உள்ளே கொண்டிருக்கிற பரபக்தி. என்றது, மனத்திலே அநுபவம் நடவாநிற்க, பெற்றல்லது தரியாத வெளி அநுபவத்திலே விருப்பம் செல்லுகையாலே பரஞானகர்ப்ப பரபக்தி என்கிறார் என்றபடி.*

2. *திருவாய்.* 1. 9: 9.
3. *திருவாய்.* 10. 8: 8.
4. *திருவாய்.* 2. 8: 10.
5. *திருவாய்.* 3. 2: 10.
6. *திருவாய்.* 4. 7: 7.
7. *திருவாய்.* 5. 7: 5.
8. *திருவாய்.* 5. 8: 1.
9. *திருவாய்.* 6. 3: 1.
10. *திருவாய்.* 9. 4: 8.
11. *திருவாய்.* 10. 4: 9.

திருப்பாசுரங்களிலும் கூறிய காணுதல் [1] "நெஞ்சு என்னும் உட்கண்" என்கிற அகக்கண்ணுன மனத்தாலே உண்டானதாய்,

காண்பான் அவாவுதல் அதில் இரட்டி ஆகையாலே-[2] "கைய பொன்னாழி வெண்சங்கொடு காண்பான் அவாவுவன் நான்" என்றும், [3] "அடியேன் காண்பான் அலற்றுவன்" என்றும், [4] "உம்மைக் காணும் ஆசையுள் நலிகின்ருள்" என்றும், [5] "கூவுகின்றேன் காண பான்" என்றும், [6] "மெய் கொள்ளக் காண விரும்பும் என் கண்களே" என்றும், [7] "கூவியும் காணப் பெறேன் உன கோலமே" என்றும், [8] "உன்னை எந் நாள் கண்டு கொள்வனே" என்றும், [9] "கோலமேனி காணவாராய்" என்றும், [10] "தடவுகின்றேன் எங்குக் காண்பன்" என்றும், [11] "பாவியேன் காண்கின்றிலேன்" என்றும், [12] "உன்னைக் காண பான் நான் அலப்பாய்" என்றும், [13] "உலகம் பரவக் கிடந்தாய் காண வாராயே" என்றும், [14] "என்று கொல் கண்கள் காண்பதுவே" என்றும், [15] "விளங்க ஒரு நாள் காணவாராய்" என்றும், [16] "உன்னைக் காண்பான் வருந்தி எனை நாளும்" என்றும், [17] "அலைகடல் கடைந்த அப்பனே காணுமாறு அருளாய்" என்றும், [18] "ஒருநாள் காண வாராய்" என்றும், [19] "தொண்டனேன் உன் கழல் காண ஒரு நாள் வந்து தோன்ருயே" என்றும், [20] "உன்னை எங்கே காண்கேனே" என்றும், [21] "உன்னைக் காணக் கருதும் என் கண்ணே" என்றும் புறக் கண்களாலே அவனைக் காண ஆசைப்பட்டுக் கூப்பிட்ட திருப்பாசுரங்கள் இருபது உண்டு ஆகையாலே,

கண்டு களிப்ப வளவும் - [22] "கண்டு களிப்பக் கண்ணுள் நின்று அகலான்" என்கிற திருமாலிருஞ்சோலைமலை அளவாக, பரஜ்ஞான கர்ப்ப பரபக்தி-உள் அநுபவம் செல்லாநிற்க, பெற்றன்றித் தரியாத வெளி அநுபவத்திலே விருப்பம் நடக்கையாலே பரஞானத்தை உள்ளே கொண்டிருக்கிற பரபக்தி என்கை. (12)

---

1. பெரியதிருவந். 28. 2. திருவிருத்தம், 84.
3. திருவாய். 1. 5: 7. 4. திருவாய். 2. 4: 2.
5. திருவாய். 3. 2: 8. 6. திருவாய். 3. 8: 4.
7. திருவாய். 3. 8: 7. 8. திருவாய். 3. 8: 8.
9. திருவாய். 4. 7: 1. 10. திருவாய். 4. 7: 9.
11. திருவாய். 4. 7: 10. 12. திருவாய். 5. 8: 4.
13. திருவாய். 5. 8: 9. 14. திருவாய். 5. 9: 5.
15. திருவாய். 6. 9: 4. 16. திருவாய். 6. 9: 6.
17. திருவாய். 8. 1: 1. 18. திருவாய். 8. 5: 1.
19. திருவாய். 8. 5: 6. 20. திருவாய். 8. 5. 10.
21. திருவாய். 9. 4: 1. 22. திருவாய். 10. 8: 7.

231

"இருந்தமை" என்றது பூர்ண பரஜ்ஞானம்.

என்பது, சூத்திரம்.

வியாக்:- அதன்பின் பரஞானநிலையினைத் தெரிவிப்பதான திருப்பாசுரம் இன்னது என்கிறார் இச்சூத்திரத்தால்.

[1] "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவது என்று கொலோ" என்று ஆசைப்பட்டபடியே [2] "அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை" என்று அர்ச்சிராதி நெறியாலே பரமபதத்திற்குச் சென்று பகவானுடைய சொரூபம் முதலியவற்றைப் பரிபூர்ண அநுபவம் பண்ணுகிற நித்தியசூரிகள் திரளிலே கூடியிருந்தாராகக் கண்டு பேசின [3] "சூழ்விசும்பு அணிமுகில்" என்ற திருப்பதிகம் பூரண மான பரஞானம் என்கை. (13)

232

"முடிந்த அவா" என்றது பரமபக்தி.

என்பது, சூத்திரம்.

வியாக்:- அதன்பின் பரமபக்தியின் நிலையினைத் தெரிவிப்பதான திருவாய்மொழி இன்னது என்கிறார் இச்சூத்திரத்தால்.

அதாவது, "அந்த மில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை" யாகக் கண்ட அது தான் மனத்தின் அநுபவமாய் வெளியில் அநுபவிக்கும் அநுபவத்திற்குத் தக்கதாகஇன்மையாலே பெருவிடாய் பிறந்து கூப்பிட்டுத் தரிக்கமாட்டாமல் [4] திரு ஆணை இட்டுத் தடுத்துப் பெரு ஆணை அல்லாமையைச் சாதித்துப் பேற்றேடே தலைக் கட்டின [5] "முடிந்த அவாவில் அந்தாதி இப்பத்து" என்கிற [6] "முனியே நான்முகனே" என்ற திருவாய்மொழி, பக்தியினுடைய முடிந்த நிலமான பரமபக்தி என்கை. (14)

233

இவை ஜ்ஞாந தர்சந ப்ராப்தி அவஸ்தைகள்.

என்பது, சூத்திரம்.

வியாக்:- பரபக்தி முதலியவற்றின் தன்மையைப் பகவானுடைய வார்த்தையாலே விளக்குகிறார் இச்சூத்திரத்தால்.

---

1. *திருவாய்*. 2. 3: 10.
2. *திருவாய்*. 10. 9: 11.
3. *திருவாய்*. 10. 9: 1.
4. *திருவாய்*. 10. 10: 2.
5. *திருவாய்*. 10. 10: 11.
6. *திருவாய்*. 10. 10: 1.

இந்தப் பரபக்தி பரஞான பரமபக்திகள், [1] "அருச்சுனு! இந்த உலகமே உருவமாக இருக்கிற நான் என்னிடத்திலேயே வைக்கப் பட்ட பக்தியினுலேயே உண்மையாக அறிகிறதற்கும் பார்ப்பதற்கும் என்னை அடைவதற்கும் தகுந்தவனுக இருக்கிறேன்" என்று அருச சுனனைக் குறித்துத் திருத்தேர்த்தட்டிலும், [2] "பரபக்தி பரஞான பரமபக்தி என்னும் இவைகளையே நான் மேற்கொண்டிருக்கும்படி என்னைச் செய்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்ட ஸ்ரீ பாஷ்யகாரரைக் குறித்து [3] "என் விஷயமான ஞானம், என்னைப் பார்ப்பது, என்னை அடைவது என்னும் இவைகளில் ஒரு ஐயமும் இல்லாமல் சுகமாக இரு" என்று சேரபாண்டியன் என்னும் சீரிய சிங்காசனத்திலிருந்தும் அவன் அருளிச்செய்த ஞானதர்சன பிராப்தி அவஸ்தைகள் என்கை.

இதனுல், எம்பெருமானைக் கூடுதலும் பிரிதலுமே இன்பதுன்பங் களாம்படியான பரபக்தியானது ஞானஅவஸ்தையாகவும், எம்பெரு மானுடைய சொரூப ரூப குண விபூதிகளை மிகத்தெளிவாக அறிகிற பரஞானமானது தரிசனஅவஸ்தையாகவும், அப்படிஅறிந்த பொருளை அப்போதே கிட்டி அநுபவிக்கப் பெருவிடில் முடிந்து போம்படியான பரமபக்தியானது பிராப்தி அவஸ்தையாகவும் சொல்லப்படும் என்றபடி. (15)

234

[4] அவித்யா நிவர்த்தக ஜ்ஞாந பூர்த்தி ப்ரத பக வத்பிரசாதாத் மோக்ஷ லாபம் என்கை, "மயர்வற, வீடுபெற்ற" என்ற பிரபந்த ஐகார்த்யம்.

என்பது, சூத்திரம்.

---

1. *பக்த்யா த்வநந்யயாசக்ய: அஹமேவம் விதோர்ஜுந, ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப.*

என்பது, ஸ்ரீகீதை, 11: 54.

2. *"பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி ஏக ஸ்வபாவம் மாம் குருஷ்வ"*

என்பது, கத்யத்ரயம்.

3. *"மத்ஜ்ஞாந தர்சந ப்ராப்திஷு நிஸ்ஸம்சய: ஸுகமாஸ்வ"*

என்பது, கத்யத்ரயம்.

4. *அவித்யா - அஞ்ஞானம்; அறிவின்மை. நிவர்த்தகம் - போக்க வல்லதான. ஞானபூர்த்தி - தத்துவ ஞானத்தின் நிறைவு. ப்ரத - கொடுத்த; அருளின. பகவத் பிரசாதாத் - பகவானுடைய கிருபையினுலே. மோக்ஷ லாபம் - மோக்ஷத்தினுடைய பேறு. ஐகார்த்தியம் - ஒரே பொருளாக விருக்கும் தன்மை.*

வியாக்:— [1] மேல் “நூறே சொன்ன, பத்து நூறு, ஓராயிரம் என்றதும் சாபிப்பிராயம்” என்றதில் “நூறே சொன்ன, பத்து நூறு” என்றதன் கருத்தைப் [2] பத்தின் முடிவிலே விரிவாகக் கூறி முடித்து, [3] இடைப்பிறவரலாய் அருளிச்செய்யவேண்டுவனவற்றையும் அருளிச்செய்தாராய் நின்றார் இதுகாறும். இனி, கூறப்படாமல் நின்ற “ஓராயிரம்” என்றதன் கருத்தை விளக்காநின்றுகொண்டு பிரபந்தத்தை முடித்தருளுகிறார் இச்சூத்திரத்தால்.

அதாவது, அவித்தியா நிவர்த்தக ஞாநபூர்த்தி பிரத பகவத் பிரசாதாத் மோக்ஷலாபம் என்கை - பிறப்பு இறப்புகட்குக் காரணமான அஞ்ஞானத்தைப் போக்குவதான ஞானத்தின் நிறைவினைக் கொடுத்த, ஞானம் முதலான குணங்கள் நிறைந்தவனான பகவானாலே, ஒரு காரணமும் இல்லாமலே புரிந்த திருவருளாலே, இவ்வுலக வாழ்வினை நீக்குதல் முன்னாகப் பகவானை அடைதலாகிற மோக்ஷத்தினுடைய இலாபம் என்று சொல்லுதல், மயர்வற வீடு பெற்ற என்ற பிரபந்த ஐகார்த்தியம் - “மயர்வற மதிநலம் அருளினன்” என்று தொடங்கி “அவாவற்று வீடு பெற்ற” என்று தலைக்கட்டின இப்பிரபந்தத்துக்கு ஒன்றான கருத்துப் பொருள் என்கை.

இதனால், ஞானத்தைக் கொடுத்த பகவானுடைய திருவருளே, மோக்ஷத்தையும் கொடுக்கும் என்னும் இது, இப்பிரபந்தத்துக்குக் கருத்துப்பொருள் என்றாராயிற்று. (16)

ஆக, இப்பிரபந்தத்தால், சர்வேச்வரன் தன் பேரருளாலே, அறிவில்லாத மக்கள் உண்மை ஞானத்தையுடையராய் நல்லதும் தீயதும் பகுத்து அறிதற்குச் சாஸ்திரங்களைக் கொடுத்தபடியையும், அந்தச் சாஸ்திரங்களால் உண்மைஞானம் பிறப்பதில் உளவாகும் அருமையை நினைத்துச் சாஸ்திரங்களின் கருத்துப் பொருளான திருமந்திரத்தைத் தன் பேரருளாலே வெளியிட்டபடியையும், அந்தச் சாஸ்திரங்களிலும் சாஸ்திரங்களின் கருத்துப் பொருளான திருமந்திரத்திலும் சொல்லப்பட்ட விஷயங்களின் வேறுபாடு முதலியவற்றையும், அந்தச் சாஸ்திரங்களிலும் திருமந்திரத்திலும் ஊன்றினவர்களான அதிகாரிகளுடைய தன்மைகளையும், அந்தக் காரணத்தாலே சொல்லவேண்டி வந்த திருவாய்மொழியினுடைய பெருமை

1. ‘மேல்’ என்றது, 215ஆம் சூத்திரத்தை.

2 ‘பத்தின் முடிவிலே விரிவாகக் கூறி முடித்து’ என்றது, 218ஆம் சூத்திர முதல் 228ஆம் சூத்திர முடிய கூறியுள்ளனவற்றை.

3. ‘இடைப்பிறவரலாய் அருளிச்செய்யவேண்டுவனவற்றையும்’ என்றது, 229ஆம் சூத்திர முதல் 233ஆம் சூத்திரமுடிய உள்ளனவற்றை.

யினையும், அதனை அருளிச்செய்த ஆழ்வாருடைய பெருமையினையும், அந்தப் பெருமைக்கு மூலமான பகவானுடைய திருவருளையும், அத் திருவருள் காரணமாக இவர்க்கு உண்டான ஞானத்தையும் பக்தியையும், அந்த ஞான பக்தி நிலைகளில் இவர் பேசும் பேச்சுக்களையும், அவற்றுள் பக்தி நிலையில் பகவானுடைய அடியார் எல்லாரோடும் இவர்க்கு உண்டான ஒப்புமையினையும், பக்தி நிலையில் பேசும் அந்யாபதேசங்களுக்குச் சுவாபதேசங்களையும், அந்தப்பக்திக்கு நிலைக்களமான திவ்ய தேசங்களில் நிற்கிற சர்வேச்வரனுடைய குணவிசேடங்களையும், அந்தக் குணங்களையுடைய எம்பெருமானிடத்தில் உண்டான அநுபவங்களால் தோன்றின அன்பினாலே தூண்டப்பட்டு இப் பிரபந்தங்கள் அவதரித்தபடியையும், சொல்லப்படுகின்ற பொருளின் ஒப்புமையாலே ஸ்ரீகீதையோடு திருவாய்மொழிக்கு உண்டான ஒப்புமையையும், அதனைக் காட்டிலும் இதற்கு உண்டான சிறப்பினையும், இத்திருவாய்மொழியில் இவர் உபதேசிக்கிற விஷயபேதத்தையும், அந்த அந்த விஷயங்கள்தோறும் உபதேசிக்கிற அர்த்த விசேடங்களையும், அந்தக் காரணத்தாலே உபதேசத்திற்கு உரியவனான மாணக்கன் இலக்கணத்தையும், மாணக்கர் ஆதற்குரிய இலக்கணம் இல்லாதார்க்கும் இவர் உபதேசிப்பதற்குரிய காரணங்களையும், புகழ் பொருள் முதலியவற்றில் விருப்பம் இன்றிப் பகவானுக்குச் செய்யும் தொண்டு என்ற எண்ணத்தால் உபதேசிக்கையாலே உபதேசம் பயன் பெற்ற படியையும், உபதேசிக்கிற இப் பிரபந்தங்கள்தாம் இரஹஸ்யத்திரயத்தின் பொருள் என்னுமதனையும், அந்த இரஹஸ்யத்திரயத்தில் சொல்லப்படுகின்ற ஐம்பொருள்களும் இப்பிரபந்தங்களிலே சுருக்கமாகவும் விரிவாகவும் சொல்லப்படுகின்ற வகையினையும், நூலின் தொடக்கத்தில் சொல்லப்படவேண்டிய வாழ்த்து வணக்கம் வருபொருள்உரைத்தல் என்னும் இவைகள் இப் பிரபந்தத்தின் முதலிலே அமைந்துள்ள படியையும், நல்லார்கள்தம்மை நலம்புரிந்து காத்தல் முதலியவைகளாலே உலகத்தைக் காக்கும் பொருட்டு எடுத்த சர்வேச்வரனுடைய அவதாரங்கள்போலே இப்பிரபந்தத்தினுடைய அவதாரம் என்னுமதனையும், இத்திருவாய்மொழியில் பத்துப் பத்துக்களாலும் சொல்லப்பட்ட சர்வேச்வரனுடைய பரத்துவம் முதலான குணங்களையும், இப்பத்துக் குணங்களோடும் கூடின சர்வேச்வரன் இப் பத்துப் பத்துக்களாலும் இவ்வாழ்வார்க்குத் தத்துவஞானம் முதலாக மோக்ஷம் அளவாகப் பிறப்பித்த நிலை விசேடங்களையும், பத்துத்தோறும் இவர் தாம் பிறர்க்கு உபதேசித்த வகைகளையும், இவர்க்கு முதன்முதலிலேயே இவ்வுலக வாழ்வில் துன்பம் பிறந்திருக்கச்செய்தே சர்வேச்வரன் இவரை இவ்வுலகில்

வைத்திருந்ததற்குச் சிறந்த காரணம் இன்னது சிறப்பில்லாத காரணங்கள் இன்னவை என்னுமதனையும், இவர்க்குப் பிறப்பித்த பரபக்தி பரஞான பரமபக்திகளாகிற நிலை வேறுபாடுகளைக் காட்டும் திருவாய்மொழிகள் இன்னவை இன்னது என்னுமதனையும், அஞ்ஞானத்தைப் போக்குவதான நிறைந்த ஞானத்தைக் கொடுத்த பகவானுடைய பேரருளே விருப்பம் இல்லாத இவ்வுலக வாழ்வினை அறுத்து விரும்பப் படுவதான மோக்ஷலாபத்தை உண்டாக்கும் என்பது இப்பிரபந்தத்துக்கு ஒன்றான கருத்துப் பொருள் என்னுமதனையும், ஆஸ்திகர்களாய் ஆழ்வார் அபிமானத்திலே ஒதுங்கி அவருடைய திவ்ய சூக்திகளில் அன்புடையவர்களாய் வேறொன்றனையும் கருதாதவர்களாய் இருப்பவர்கள் எல்லாரும் சொல்லி வாழும்படி மிகத் தெளிவாக அருளிச் செய்து தலைக்கட்டினார்.

ஆசார்யஹ்ருதய மூலமும், அதன் வியாக்கியானத்தின் த்மிழாக்கமும்

முற்றுப்பெற்றன.

அழகியமணவாளப் பெருமாள் நாயனார்
திருவடிகளே அரண்.

மணவாளமாமுனிகள் மலரடி வாழ்க.
மாறன் மலரடி வாழ்க.

தந்தருள வேண்டும் தவத்தோர் தவப்பயனாய்
வந்த முடும்பை மணவாளா — சிந்தையினால்
நீயுரைத்த மாறன் நினைவின் பொருளனைத்தென்
வாயுரைத்து வாழும் வகை.

ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல்வாழி
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி — ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம்வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

அடியார்கள் வாழ அரங்கன் நகர்வாழச்
சடகோபன் தண்தமிழ்நூல் வாழக் — கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஆசாரிய ஹ்ருதய ஸூத்திரங்களின்

முதற்குறிப்பு அகராதி

ஸூத்.		பக். எண்.
1.	அங்கீகரிக்க	442
2.	அங்குரம்பி சரண்	462
3.	அச்சேத்யம்	341
4.	அஜ்ஞர்பிரமிக்கிற	195
5.	அடிதொழுது	509
6.	அடியோம்	290
7.	அணையவூர	199
8.	அதவாவேத	151
9.	அதாவது மயர்வற	230
10.	அதில் ஸித்ததர்ம	463
11.	அது ஐவரை	461
12.	அதுக்கு மூலம் விதயச்ச	143
13.	அதுதத்வோபதேசம்	459
14.	அதுதானும்	28
15.	அத்யயன ஜ்ஞாந	73
16.	அத்ரிஜமதக்நி	212
17.	அநந்தக்கிலேச	16
18.	அந்தணர்	70
19.	அபிலாஷா	357
20.	அருள்முடிய	61
21.	அவகாஹித்தாரை	431
22.	அவர்களுக்கு	132
23.	அவன் முனிந்தார்க்கு	468
24.	அவித்யாநிவர்த்தக	664
25.	அழுநீர் துளும்ப	133
26.	அழும் தொழும்	316
27.	அளிப்பன் அடியேன்	492
28.	அறியாதார்க்கு	467
29.	அன்றிக்கே	109
30.	ஆசறுதூவி	399
31.	ஆதித்யராம	178
32.	ஆப்திக்கு இவர்	143
33.	ஆவாவென்று	567
34.	ஆற்றில் துறையில்	173
35.	இடகிலேன் நோன்பு	254
36.	இதற்கு மூலம்	215
37.	இதற்கு ஹேது	221
38.	இதில் சம்ஸ்கிருதம்	76
39.	இதின் ஔபாதிகத்வம்	204
40.	இது உபயமும்	250
41.	இந்தவுட்பொருள்	74
42.	இந்தவுதாத் தரிப்பு	25
43.	இப்பிறப்பே	255
44.	இயற்பா மூன்றும்	91
45.	இராமனெனில்	311
46.	இருத்தும்	477
47.	இருந்தமை	663
48.	இருள்துயக்கு	231
49.	இவர்கள் தேடி	305
50.	இவற்றால் வரும்	286
51.	இவற்றாலே	62
52.	இவற்றில்	442
53.	இவற்றுக்கு எல்லை	15
54.	இவற்றுக்குக் காரணம்	18
55.	இவற்றுக்கு மந்திரவிதி	491
56.	இவற்றுக்கு மூலம்	20
57.	இவற்றுக்கு விதி	60
58.	இவன் நடுவே	279
59.	இவை கிட்டமும்	22
60.	இவை ஞாநதர்சந	663
61.	இவை ஸ்வரூபத்தை	43
62.	இறுகல் இறப்பு	368
63.	இன்பும் அன்பும்	298
64.	ஈசனை ஈசன்	555
65.	உண்ணாது	300
66.	உதாத்தாதி	146
67.	உபயபிரதாந	416
68.	உயிர் மாய்தல்	475

சூத்.		பக். எண்.
69.	உறக்கம்தலை	87
70.	உருமையோடே	658
71.	ஊரார் நாட்டார்	368
72.	எண்டிசையும்	658
73.	எண்ணிலா	592
74.	எண்ணிலும் வரும்	274
75.	எவ்வுலகத்து	76
76.	எழுவதோர் உரு	338
77.	எற்றைக்கும்	333
78.	என் பெறுதி	390
79.	என்னதுன்னது	476
80.	என்னையும்	575
81.	ஏதந்நிமித்தம்	21
82.	ஐந்தினோடு	513
83.	ஒருதலையில்	70
84.	ஒன்று கூடினதாய்	24
85.	கடித கடக	423
86.	கண்வலைப்படாதே	395
87.	கதிர்ஞானமூர்த்தி	474
88.	கமலக்கண்ணன்	661
89.	கருவுள் வேறலாமை	123
90.	கர்மகிருபாபீஜம்	20
91.	கர்ம கைங்கர்யங்கள்	59
92.	கலைவளை	372
93.	கல்பாதியில்	117
94.	களைகணற்றாரை	420
95.	காருணிகனை	9
96.	கியாதிலாப	487
97.	கிருஷ்ண கிருஷ்ண	169
98.	கீழைமேலை	367
99.	குருசிஷ்ய	139
100.	குழவில் நெஞ்சும்	332
101.	கைம்முதல்	424
102.	கோசல கோகுல	267
103.	கோவிருத்திக்கு	228
104.	சகலவித்யா	80
105.	சகிவெறிவிலக்கி	348
106.	சசைந்ய	438
107.	சதுர்விதமான	30
108.	சத்வாசத்வ	19
109.	சந்தோகன்	93
110.	சந்மாந்தர	234
111.	சம்பந்தோபாய	345
112.	சரண்யமுகுந்தத்வம்	436
113.	சனகதசரத	176
114.	சாதந சாத்ய	67
115.	சாதந சாத்யஸ்த	470
116.	சாதரரைப்பரிசு	427
117.	சாதி ஆச்ரம	63
118.	சாதுசனம்	510
119.	சாத்யஹ்ருதிஸ்தன்	430
120.	சாஸ்திரிகள்	41
121.	சிரமணீவிதுர	226
122.	சிரம மனம்	428
123.	சிறுசீரார்	369
124.	சுரிகுழல்	624
125.	சுவாத்யாய	129
126.	சுவீகிருத	249
127.	சூழ்ச்சி	361
128.	செந்திறத்த	77
129.	செய்த நன்றி	274
130.	சென்று சேர்	425
131.	சேர்ப்பாரை	385
132.	சேஷத்வ பஹிர்பூத	202
133.	சேஷத்வ போக்த்ருத்வம்	45
134.	சொல்லப்பட்ட	82
135.	சோராதமூவா	533
136.	ஞானசதுர்த்தி	48
137.	ஞானத்தில் தம்	289
138.	தமருகந்த	411
139.	தமிழ்மாமுனி	209
140.	தம்பிழையும்	405
141.	தர்மவீர்ய	126
142.	தாயாரேதலர்	364
143.	தாய்க்கு மகனுக்கும்	484
144.	தியாஜ்யதேஹ	441
145.	தியாஜ்யோபாதேயம்	14
146.	துவயார்த்தம்	496

சூத்.		பக்.எண்.
147.	தேவத்வமும்	174
148.	தேவிமார்	603
149.	தேறும் கலங்கி	289
150.	தோல்புரையே	40
151.	தோழிமார்	356
152.	நண்ணுதார்	480
153.	நலமருளினன்	283
154.	நாவயலார்	366
155.	நாலில் ஒன்று	56
156.	நால்வேதம்	83
157.	நிலாமுற்றம்	371
158.	நீர் பால் நெய்	445
159.	பகலோலக்கம்	408
160.	பகவத்பக்த	516
161.	பகவன்ஞானவிதி	464
162.	படைத்தான் கவி	86
163.	பட்டத்துக்கு	270
164.	பட்டம் சூடகம்	373
165.	பந்துகழல்	374
166.	பரத்வகாரணத்வ	517
167.	பரபரனாய்	523
168.	பரமசத்வம்	122
169.	பலசாதனம்	134
170.	பாட்டுக்கு	514
171.	பாரத கீதைகளின்	145
172.	பாஷ்யகாரர்	142
173.	பிரவணசித்தம்	426
174.	பிரஹ்மநிஷ்டரும்	489
175.	பிரிந்த	435
176.	பிரியில்	316
177.	புணர்தொறும்	284
178.	புண்ணியம் பாவம்	287
179.	புரவியேழ்	98
180.	பூண்டநாள்	402
181.	பெருக்காறு	340
182.	பெரும்பாழின்	257
183.	பெரும்புறக்கடலும்	161
184.	பெற்றும் பேறிழந்தும்	170
185.	பேச்சுப்பார்க்கில்	167
186.	போகத்தில்	433
187.	போக்யபாகத்வரை	432
188.	மண்டினாரும்	60
189.	மண்ணாடின	156
190.	மண்ணோர்	414
191.	மதியால்	275
192.	மயில்பிறை	358
193.	மனம்செய் எல்லை	446
194.	மஹாத்மாக்கள்	434
195.	மஹாமதிகள்	429
196.	மாதவன்மலை	276
197.	மார்க்கபந்து	437
198.	மாலைகங்குல்	370
199.	மாவுருவில்	205
200.	மிருத்கடம்	160
201.	மிலேச்சனும்	182
202.	மீனநவநீதங்கள்	172
203.	முடிந்த அவா	663
204.	முந்நீர்	271
205.	முழுதுமாய்	543
206.	முளைத்தெழுந்த	53
207.	முனிவரை	39
208.	முற்பாடர்க்கு	56
209.	மூன்றில்	501
210.	மெய்ந்நின்று	491
211.	மெலிவினும்	421
212.	மேகம் பருகின	158
213.	மோக்ஷதானத்தில்	440
214.	ரஹஸ்யத்துக்கு	506
215.	ராமாயணம்	136
216.	ருக்குசாமத்தாலே	92
217.	ருசிவிவசர்க்கு	419
218.	வடமொழி மறை	78
219.	வத்சலையானமாதா	27
220.	வம்சபூமிகளை	180
221.	வரவாறில்லை	281
222.	வன்பெருவானகம்	412
223.	வித்யைதாயாக	290
224.	விப்ரர்க்கு	71
225.	வியவசாயஜ்ஞர்	421
226.	விவேகபலம்	14
227.	விவேகமுகராய்	387
228.	விளம்பவிரோதம்	422
229.	வீட்டின்பம்	164
230.	வேதசதுஷ்டய	78
231.	வேதநூல்	81
232.	வேதவித்துக்களும்	68
233.	வேதவேத்ய	465
234.	வைஷ்ணவ	417

ஸ்ரீ:

பிழை திருத்தம்

பக்.	வரி	பிழை	திருத்தம்
15	21	5	4
16	11	அஜ்ஞாநங்நள் -	அஜ்ஞாநங்கள்
17	23	என்கிறயடியே -	என்கிறபடியே
17	27	பெரிய திருவர் -	பெரிய திருவந்.
18	5	உள்னன -	உள்ளன.
28	24	—	" ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத" என்பது பிரமாணம்.
35	6	4	—
59	1	இருக்குத் -	இருக்குந்
65	24	எவல் -	ஏவல்
80	15	3	2
101	1	ஒளிபின் -	ஒளியின்
102	21	திருபாசுரத்தில் -	திருப்பாசுரத்தில்
112	11	பிரளயத்தை -	பிரளயத்தைச்
117	23	கூநுவன -	கூறுவன
122	24	—	5. திருவாய். 5. 8: 11.
145	33	வில்வி -	வில்லி
161	31	அர்ச்சாவதாத்தை -	அர்ச்சாவதாரத்தை
168	31	கொள்ளாமல -	கொள்ளாமல்
180	36	நிநுத்தல் -	நிறுத்தல்
202	22	முதலிவற்றின் -	முதலியவற்றின்
213	7	ஸ்ரீநந்தகோபாக்கும் -	ஸ்ரீநந்தகோபர்க்கும்
217	29	நித்தயசூரி -	நித்தியசூரி
233	30	திரூவாய் -	திருவாய்
249	28	அபெடவதற்கு -	அடைவதற்கு
250	26	தீக்காற்று -	தீகாற்று
257	33	பெரும்செய -	பெரும்செய்
266	32	பரமாத்விற்கு -	பரமாத்மாவிற்கு
281	32	அதனெ -	அதனை
320	23	எள்கிறபடியே -	என்கிறபடியே
334	32	முதலாகவுஸடய -	முதலாகவுடைய
359	30	ஆன்பசொரூபம் -	ஆன்மசொரூபம்

பக்.	வரி	பிழை	திருத்தம்
388	24	எள்னும்படி -	என்னும்படி
389	12	24	8
390	13	உள்ளுத்துள் -	உள்ளத்துள்
390	21	கரியாய -	கரியான
391	27	மற்றுென்றனை -	மற்றுென்றனை
392	21	தலைகொள்ள	தலைக்கொள்ள
392	25	யாழிளிசை -	யாழினிசை
392	28	எம்மானை -	எம்மானைச்
393	14	நிள்று -	நின்று
394	1	இனிமையை -	இனிமையைத்
394	7	புள்ளுடை -	புள்ளுடைத்
395	33	திகுவாய் -	திருவாய்
398	24	நண்டவாறே -	கண்டவாறே
400	18	மென்படை -	மென்பெடை
400	23	ஸ்ரீபாதவதம் -	ஸ்ரீபாகவதம்
401	30	எள்பது	என்பது
402	3	விசேஷடம் -	விசேடம்
402	7	தன்னிறம் -	நன்னிறம்
402	31	—	பெரியதிரு. 7. 3: 1.
403	13	மனத்திலுன்ள -	மனத்திலுள்ள
403	18	மாமுத்து –	மாமுத்தம்
409	36	ஸ்ரீயாஸார்த்தம் –	ச்ரியாஸார்த்தம்
411	12	அடியேமுகலே -	அடியோமுக்கே
412	6	திருக்கண்சுள் -	திருக்கண்கள்
412	9	சௌகார்த்தப் -	சௌகார்த்தம்
413	15	கடகிலீ -	கட்கிலீ
414	18	யஅநுபவமும் -	யநுபவமும்
424	17	பட்டலு -	பட்டது
425	36	பேரேயில் -	பேரெயில்
451	15	உயரல் -	உயிரல்
471	35	தீருவாய் -	திருவாய்
518	16	குணங்கனைக் -	குணங்களைக்
538	31	திருபதிகத் -	திருப்பதிகத்
560	21	இத்த -	இந்த
573	23	குற்றகங்கள் -	குற்றங்கள்
579	18	5	—
640	20	சிறுது -	சிறிது